
# 1985 அவ்யக்த முரளி



## பொருளடக்கம் - 44

**02.01.1985 மிக உன்னத அன்பு, சம்மந்தம் மற்றும் சேவை!**

**07.01.1985 புது வருடத்திற்கான விசேச எண்ணம் -மாஸ்டர் அளிப்பவர் ஆகுங்கள்!**

**09.01.1985 சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களின் ஆன்மீக தனிச்சிறப்பு!**

**14.01.1985 நற்சிந்தனையாளர் ஆவதற்கான ஆதாரம் சுய சிந்தனை மற்றும் நற்சிந்தனை!**

**16.01.1985 பாக்கியம் நிறைந்த யுகத்தில் பகவான் மூலமாக ஆஸ்தி மற்றும் வரதானங்களின் பிராப்தி!**

**18.01.1985 உறுதி மொழி மூலமாக பிரத்யக்ஷம்!**

**21.01.1985 ஈஸ்வரிய பிறந்த நாளின் பொன்னான பரிசு -தெய்வீக புத்தி!**

**23.01.1985 தெய்வீக ஜென்மத்தின் பரிசு -தெய்வீகக் கண்கள்!**

**28.01.1985 உலக சேவைக்கான சகஜ சாதனம் மனசா சேவை!**

**30.01.1985 மாயாவை வென்றவர் மற்றும் இயற்கையை வென்றவர் தான் சுயராஜ்ய அதிகாரி!**

**16.02.1985 ஒவ்வொரு மூச்சிலும் குஷியின் இசை ஒலிப்பது தான் இந்த சிரேஷ்ட ஜென்மத்தின் பரிசு!**

**18.02.1985 சங்கமயுகம் உடல், மனம், பொருள் மற்றும் நேரத்தை பயனுள்ளதாக ஆக்குவதற்கான யுகம்!**

**21.02.1985 சீதளத்தன்மையின் (குளிர்ச்சி) சக்தி!**

**24.02.1985 சங்கமயுகம் -சர்வசிரேஷ்ட பிராப்திகளுக்கான யுகம்!**

**27.02.1985 சிவசக்தி பாண்டவ சேனையின் சிறப்புகள்!**

**02.03.1985 தற்போதைய ஈஸ்வரிய பிறவி மிகவும் மதிப்புள்ள பிறவியாகும்!**

**06.03.1985 சங்கமயுகம் உற்சவத்திற்கான யுகம், பிராமண வாழ்க்கை உற்சாகத்தின் வாழ்க்கை!**

**09.03.1985 தந்தை மற்றும் சேவை மீது அன்பு -இது தான் பிராமண வாழ்க்கையின் உயிர் தானமாகும்!**

**12.03.1985 சத்தியத்தின் சக்தி!**

**15.03.1985 கடின உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான சுலபமான வழி -நிராகார சொரூபத்தில் நிலைத்திருப்பது!**

**18.03.1985 திருப்தி!**

**21.03.1985 சுயதரிசன சக்கரத்தின் மூலம் வெற்றிச் சக்கரத்தின் பிராப்தி!**

**24.03.1985 இப்பொழுது இல்லை என்றால் ஒரு போதும் இல்லை!**

**27.03.1985 கர்மாதீத் நிலை!**

**30.03.1985 மூன்று மூன்று விஷயங்களின் பாடம்!**

**09.04.1985 உண்மையான சேவாதாரியின் அடையாளம்!**

**11.04.1985 நன்மை செய்வது தான் ஆதார சொரூப சபையின் விசேஷம்!**

02.09.1985 ஒவ்வொரு காரியத்திலும் வெற்றிக்கான சுலபமான வழி -அன்பு!

11.11.1985 தீபாவளியின் மகத்துவம்!

13.11.1985 சங்கல்பம், சம்ஸ்காரம், சம்பந்தம், பேச்சு மற்றும் கர்மத்தில் புதுமையைக் கொண்டு வாருங்கள்!

18.11.1985 பகவானின் பாக்கியம் நிறைந்த குழந்தைகளின் இலட்சணம்!

20.11.1985 சங்கம யுகத்து பிராமணர்களின் வேறுபட்ட, அன்பான சிரேஷ்ட உலகம்!

25.11.1985 நிச்சயபுத்தி உடைய வெற்றி இரத்தினங்களின் அடையாளங்கள்!

27.11.1985 ஆன்மீக போதை!

02.12.1985 பந்தனங்களிலிருந்து (தடைகளிலிருந்து) விடுபடுவதற்கான யுக்தி -ஆன்மீக சக்தி!

04.12.1985 சங்கல்பத்தின் (எண்ணத்தின்) பாஷை -மிக உயர்ந்த பாஷை!

09.12.1985 குழந்தையிலிருந்து எஜமானன் ஆகுபவர்!

**11.12.1985 உண்மையான சேவாதாரியின் அடையாளம்!**

**14.12.1985 தற்சமயத்தின் இந்த வாழ்க்கை தான் எதிர்காலத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி (மதுபன் நிவாசிகளுடன் சந்திப்பு)!**

**16.12.1985 வலது கரமாக எப்படி ஆவது?**

**19.12.1985 தந்தையைப் பின்பற்றி நடப்பது!**

**23.12.1985 காமஜீத் -அனைத்து எல்லைக்குட்பட்ட ஆசைகளிலிருந்தும் கடந்த நிலை!**

**25.12.1985 இனிமைத்தன்மை மூலம் கசப்பான நிலத்தை இனிமையாக ஆக்குங்கள்!**

**30.12.1985 விசால புத்தியின் அடையாளம்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 02.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மிக உன்னத அன்பு, சம்மந்தம் மற்றும் சேவை!

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளின் அன்பு நிரம்பிய பரிசுகளை பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தையின் அன்பு நிரம்பிய நினைவு பரிசு பல விதமானதாக இருந்தது. ஒரு பாப்தாதாவிற்கு, அநேக குழந்தைகளின் பரிசுகள், அநேக எண்ணிக்கையில் கிடைத்திருக்கிறது. அந்தமாதிரி பரிசுகள், மேலும் இத்தனை எண்ணிக்கையில் பரிசுகள் உலகத்தில் வேறு யாருக்குமே கிடைக்க முடியாது. இது திலாராமிற்காக இதயப் பூர்வமான பரிசுகளாக இருந்தன. பிற அனைத்து மனித ஆத்மாக்களும் ஸ்தூல பரிசுகள் கொடுப்பார்கள் ஆனால் சங்கமயுகத்தில் இது விசித்திர தந்தை மற்றும் விசித்திரமான பரிசுகள். அந்த மாதிரி பாப்தாதா அனைவரின் அன்புப் பரிசுகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டு இருந்தார். இவருடைய பரிசு வந்து சேரவில்லை என்று அந்தமாதிரி ஒரு குழந்தையும் இருக்கவில்லை ஆனால் பலவிதமான மதிப்பிற்குரியதாக அவசியம் இருந்தது. சிலருடையது அதிக மதிப்புடையதாக இருந்தது. சிலருடையது குறைவானதாக இருந்தது. எந்தளவு இடைவிடாத மற்றும் அனைத்து சம்மந்தத்தின் அன்பு இருந்ததோ, அந்தளவு மதிப்புள்ள பரிசாக இருந்தது. வரிசைக்கிரமான அன்பு மற்றும் சம்மந்தத்தின் ஆதாரத்தில் இதயத்தின் பரிசாக இருந்தது. இரண்டு தந்தைகளும் பரிசுகளிலிருந்து வரிசைக்கிரமான மதிப்புள்ள மாலையைப் கோர்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும் மாலையை பார்த்து, மதிப்பில் வித்தியாசம் விஷயமாக எந்த விஷயத்தில் இருந்தது என்று சோதனை செய்து கொண்டிருந்தார்கள். என்ன பார்த்தார்கள்? அனைவருக்கும் அன்பு இருக்கிறது, சம்மந்தமும் அனை வருக்கும் இருக்கிறது, அனைவரின் சேவையும் இருக்கிறது, ஆனால் அன்பில் தொடக்கத்தில் இருந்து, இது வரையிலும் எண்ணம் மூலமாக மற்றும் கனவிலும் கூட வேறு எந்த நபர் அல்லது பொருளின் பக்கம் புத்தி கவர்ந்திழுக்கப் படாததாக இருந்ததா? ஒரு தந்தையின் ஒரே சீரான

# 1985 அவ்யக்த முரளி

இடைவிடாத அன்பில், எப்பொழுதும் மூழ்கியிருப்பவராக இருந்ததரா? எப்பொழுதும் அன்பின் அனுபவங்களின் கடலில் அந்தமாதிரி முழ்கியிருந்து, அதன் மூலம் அந்த உலகத்தைத் தவிர வேறு எந்த நபரும், பொருளும் தென்படாத நிலை. எல்லைக்கு அப்பாற் பட்ட அன்பின் ஆகாயம் மற்றும் எல்லைக்கு அப்பாற்பட்ட அனுபவங்களின் கடல். இந்த ஆகாயம் மற்றும் கடலைத் தவிர, வேறு எந்தக் கவர்ச்சியும் இல்லாமல் இருப்பது. அந்தமாதிரி இடைவிடாத அன்பின் பரிசுகள் வரிசைக்கிரமான மதிப்புள்ளவைகளாக இருந்தன. எத்தனை வருடங்கள் கடந்து விட்டனவோ, அத்தனை வருடங்களின் அன்பின் மதிப்பு இயல்பாகவே சேமிப்பாகிக் கொண்டேயிருக்கிறது. மேலும் அந்தளவு மதிப்புள்ள பரிசு பாப்தாதாவின் எதிரில் பிரத்யக்ஷம் ஆனது. விசேஷமாக அனைவரின் மூன்று விஷயங்களைப் பார்த்தோம்.

1. அன்பு இடைவிடாத துண்டிக்கப்படாததாக இருந்ததா? உள்ளபூர்வமான அன்பு இருக்கிறதா? அல்லது நேரத்திற்கு ஏற்றாற்போல் அவசியத்தின் காரணமாக, தன்னுடைய விஷயங்களை நிரூப்பிக்கும் காரணமாக இருந்ததா -அந்த மாதிரியான அன்போ இல்லையே? எப்பொழுதும் அன்பு சொரூபம் வெளிப்படும் ரூபத்தில் இருக்கிறதா மற்றும் தேவையான நேரத்தில் வெளிப்படுகிறது, மற்ற நேரங்களில் உள்ளடங்கியிருக்கிறதா, மனதை குஷிப்படுத்துவதற்கான அன்பா அல்லது மிகவும் உள்ளப்பூர்வமான, உணர்வுப் பூர்வமான அன்பா? அந்தமாதிரி அன்பில் இந்த அனைத்து விஷயங்களையும் சோதனை செய்தோம்.

2. சம்மந்தத்தில் -முதல் விஷயம் அனைத்து சம்மந்தங்களும் இருக்கிறதா? அல்லது ஏதாவது விசேஷ சம்மந்தம் இருக்கிறதா? ஒரு சம்மந்ததின் அனுபவம் ஒருவேளை குறைவாக இருக்கிறதென்றால், சம்பன்ன நிலையில் குறையிருக்கிறது. மேலும் அவ்வப்பொழுது அந்த மிச்சமிருக்கும் ஒரு சம்மந்தம் கூட தன் பக்கம் கவர்ந்திழுத்து விடும். எப்படி தந்தை, ஆசிரியர், சத்குரு என்ற விசேஷ சம்மந்தத்தையோ இணைத்து விட்டீர்கள் ஆனால் மிகச் சிறிய சம்மந்தம், பேரன், கொள்ளு பேரனாகவோ ஆக்க வில்லையென்றால், அந்த சம்மந்தமும் தன் பக்கம் இழுத்து விடும். எனவே சம்மந்தத்தில் அனைத்து சம்மந்தங்களும் இருக்கிறதா?

இன்னொரு விஷயம் -தந்தையுடன் ஒவ்வொரு சம்மந்தமும் 100-சதவிகிதம் இருக்கிறதா அல்லது ஏதாவது சம்மந்தம் 100சதவிகிதம், சில சம்மந்தம் 50-சதவிகிதம், மற்றும் வரிசைக்கிரமாக இருக்கிறதா? சதவீதத்திலும் முழுமையாக இருக்கிறதா அல்லது கொஞ்சம் அலௌகீகம், கொஞ்சம் லௌகீகம் அப்படி இரண்டிலும் சதவிகதம் பகிரப்பட்டிருக்கிறதா?

மூன்றாவது -அனைத்து சம்மந்தங்களின் அனுபவத்தின் ஆன்மீக இரசணையை எப்பொழுதும் அனுபவம் செய்கிறாரா அல்லது எப்பொழுது அவசியம் ஏற்படுகிறதோ, அப்பொழுது அனுபவம் செய்கிறாரா? எப்பொழுதும் அனைத்து சம்மந்தங்களிலும் இரசனையை எடுத்துக் கொள்பவரா அல்லது எப்பொழுதாவது எடுப்பவரா?

3. சேவையில் -சேவையில் விசேஷமாக என்ன சோதனை செய்திருந்திருப்போம்? முதல் விஷயம் -மேலான ரூபத்தில் சோதிக்கப்பட்டது -எண்ணம், சொல், செயல் மற்றும் உடல், மனம், பணம், செல்வம், அனைத்து விதமான சேவையின் கணக்கு சேமிப்பாகியிருக்கிறதா? இன்னொரு விஷயம் -உடல், மனம், பொருள், எண்ணம், சொல், செயல் இந்த ஆறு விஷயங்களில் எந்தளவு செய்ய முடியுமோ, அந்தளவு செய்திருக்கிறாரா அல்லது எந்தளவு செய்ய முடியுமோ, அந்தளவு செய்யாமல் சக்திகேற்றப்படி தன்னுடைய நிலைகேற்றப்படி செய்தாரா? இன்று மனநிலை நன்றாக இருக்கிறதென்றால், சேவை செய்ததின் சதவிகிதமும் நன்றாக இருந்தது, நாளை ஏதாவது காரணத்தினால் மனநிலை பலஹீனமாக இருக்கிறது என்றால், சேவை செய்ததின் சதவிகிதமும் பலஹீனமாக இருந்தது. எந்தளவு இருக்க வேண்டுமோ, அந்தளவு இருக்கவில்லை. இந்தக் காரணத்தினால் சக்திகேற்றபடி வரிசைக்கிரமாக ஆகி விடுகிறார்.

மூன்றாவது விஷயம் -பாப்தாதா மூலமாக ஞானத்தின் பொக்கிஷம், சக்திகளின் பொக்கிஷம், குணங்களின் பொக்கிஷம், குஷியின் பொக்கிஷம், சிரேஷ்ட நேரத்தின் பொக்கிஷம், சுத்த எண்ணங்களின் பொக்கிஷம் என்று என்ன கிடைத்திருக்கிறதோ, அந்த அனைத்து பொக்கிஷங்களின் மூலமாக சேவை செய்தாரா? அல்லது ஏதாவது சில பொக்கிஷம் மூலமாக சேவை செய்தாரா? ஒருவேளை ஒரு

பொக்கிஷத்தின் சேவை செய்வதில் குறையிருக்கிறது அல்லது பரந்த மனதுடன் பொக்கிஷத்தை காரியத்தில் ஈடுபடுத்தவில்லை, கொஞ்சம் கொஞ்சம் செய்து விட்டார், அதாவது கஞ்சத்தனத்தை காண்பித்தார் என்றால், ரிஸல்ட்டில் வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறது,

நான்காவது விஷயம் -உள்ளப்பூர்வமாக செய்தாரா, அல்லது கடமை என்று செய்தாரா, சேவையில் எப்பொழுதும் பெருக்கெடுத்தோடும் கங்கையாக இருந்தாரா, அல்லது சேவையில் சில நேரம் சாக்குபோக்கு, சில நேரம் செய்யாமல் இருப்பது என்று இருந்தாரா? மூட் (மனநிலை) இருந்தால் சேவை செய்தார், மூட் இல்லையென்றால் செய்யவில்லை, ஒரு இடத்தில் தங்கி நிற்கும் குளமாக இருக்கவில்லையே.

அந்த மாதிரி மூன்று விதமான சோதனையின் பிரகாரம் ஒவ்வொருவரின் மதிப்பை சோதனை செய்தோம். எனவே அந்த மாதிரி விதிப் பூர்வமாக ஒவ்வொருவரும் தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். மேலும் இந்த புதிய வருடத்தில் குறைகளை நிரந்தரமாக முடிவு செய்து, சம்பன்னம் ஆகி நம்பர் ஒன் மதிப்புள்ள பரிசை தந்தையின் எதிரில் வைப்போம் என்ற உறுதியான எண்ணத்தை வையுங்கள். சோதனை செய்வது, மேலும் பிறகு மாற்றம் செய்யத் தெரியும் இல்லையா? ரிஸல்டிற்கு ஏற்றபடி பெரும்பான்மையோர் இப்பொழுது ஏதாவது ஒரு விஷயத்தில் அவர்களுடைய சக்திக்கு ஏற்றபடி இருக்கிறார்கள். சம்பன்ன சக்தி சொரூபமாக இருக்கவில்லை, எனவே இப்பொழுது கடந்ததை கடந்ததாக்கி, நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை சம்பன்னம் (நிறைவு) மற்றும் சக்திசாலி ஆக்குங்கள்.

உங்களிடம் பரிசுப் பொருட்கள் ஒன்றாக சேர்ந்து விட்டது என்றால், எது எது மதிப்புள்ளதென்று சோதனை செய்கிறீர்கள் இல்லையா? பாப்தாதாவும் குழந்தைகளுடன் இந்தக் காரியத்தைத் தான் செய்து கொண்டிருந்தார். பரிசுகளோ அளவற்று இருந்தது. ஒவ்வொருவரும் தனக்கு ஏற்றபடி நல்லதிலும் நல்ல ஊக்கம் உற்சாகம் நிரம்பிய எண்ணத்தை, சக்திசாலியான எண்ணத்தை தந்தையின் எதிரில் வைத்தார்கள். இப்பொழுது சக்திக்கேற்றபடி என்பதற்குப் பதிலாக, எப்பொழுதும் சக்திசாலியானவர் என்று மட்டும் பரிவரித்தனை (மாற்றம்) செய்ய வேண்டும். புரிந்ததா. நல்லது.

# 1985 அவ்யக்த முரளி

அனைத்து நிரந்தர அன்பான, உள்ளப் பூர்வமாக அன்பான, அனைத்து உறவுகளின் அன்பான, ஆன்மீக இரசனையின் அனுபவி ஆத்மாக்களுக்கு, அனைத்து பொக்கிஷங்கள் மூலமாக சக்திசாலியாகி நிரந்தர சேவாதாரி, அனைத்து விஷயங்களில் சக்திகேற்றபடி என்பதை எப்பொழுதும் சக்திசாலியானவர் என்பதில் பரிவர்த்தனை செய்யக் கூடிய, விசேஷ அன்பிற்குரிய மற்றும் நெருங்கிய சம்மந்தத்திலுள்ள ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நம்ஸ்காரம்.

**தாதி ஜானகி அவர்களுடன் சந்திப்பு:** மதுபனின் அலங்காரம் மதுபனில் வந்து சேர்ந்து விட்டது. வாருங்கள், வாருங்கள்.. வரவேற்கிறோம். நீங்கள் பாப்தாதா மற்றும் மதுபனின் விசேஷ அலங்காரம், விசேஷ அலங்காரம் மூலம் என்ன நடக்கும்? பிரகாசமோ ஏற்றபட்டுவிட்டது அல்லவா? பாப்தாதா மற்றும் மதுபன் விசேஷ அலங்காரத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். விசேஷமாக சேவையில் தந்தையின் அன்பு மற்றும் சம்மந்தத்தை பிரத்யக்ஷம் செய்தீர்கள், இந்த விசேஷ சேவை அனைவரின் இதயத்தை அருகில் கொண்டு வரக்கூடியது. எப்பொழுதுமே ரிஸல்ட் நன்றாகத் தான் இருக்கிறது. இருந்தும் அந்த நேரத்திற்கு அதனுடைய விசேஷத்தின் ரிஸல்ட் இருக்கும். அப்படி தந்தையின் அன்பை தன்னுடைய அன்பு நிறைந்த முகம் மூலம் கண்கள் மூலம் பிரத்யக்ஷம் செய்தீர்கள். இந்த விசேஷ சேவை செய்தீர்கள். கேட்பவர்களாக ஆக்குவது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை, ஆனால் அன்பானவராக ஆக்குவது. இது தான் விசேஷ சேவையாகும். அது எப்பொழுதும் நடந்து கொண்டேயிருக்கும். எத்தனை விட்டில் பூச்சிகள் பார்த்தீர்கள், விளக்கு ஒளி மேல் பலியாகும் இச்சை வைத்திருக்கும் விட்டில் பூச்சிகள் எத்தனை பார்த்தீர்கள்? இப்பொழுது கண்களின் பார்வை மூலம் விட்டில் பூச்சிகளை விளக்கு ஒளி பக்கம் செல் என்று சமிக்ஜை செய்வதற்கான விசேஷ நேரம். சமிக்ஜை கிடைத்தது, மேலும் சென்று கொண்டேயிருப்பார்கள். பறந்து பறந்து வந்து சேர்ந்து விடுவார்கள். இந்த விசேஷ சேவை அவசியமானதும் தான், மேலும் நீங்கள் செய்யவும் செய்தீர்கள். அந்த மாதிரி ரிஸல்ட் தான் இல்லையா? நல்லது. ஒவ்வொரு அடியிலும் அநேக ஆத்மாக்களின் சேவை நிரம்பியிருக்கிறது, எத்தனை அடி எடுத்து வைத்தீர்கள்? எத்தனை வைத்தீர்களோ, அந்தளவு ஆத்மாக்களின் சேவை நடந்தது. நன்றாகச் சுற்றி வந்திருக்கிறீர்கள். அவர்களுக்கும் இப்பொழுது ஊக்கம்,

உற்சாகத்தின் சீசன். என்ன நடக்கிறதோ, அது நல்லதிலும் நல்லதாக நடக்கிறது. பாப்தாதாவின் நெருக்கமான குழந்தைகளின் ஒவ்வொரு கர்மத்தின் ரேகை மூலம் அநேகர்களின் கர்மங்களின் ரேகை மாறுகிறது. அப்படி ஒவ்வொரு காரியத்தின் ரேகை மூலம் அநேகரது அதிர்ஷ்ட ரேகையும் போட்டு இருக்கிறீர்கள். செல்வது என்றால் அதிர்ஷ்ட ரேகை கீறுவது. அப்படி எங்கெங்கு செல்கிறீர்கள், தன்னுடைய கர்மங்கள் என்ற எழுதுகோல் மூலம் அநேகர்களின் அதிர்ஷ்டத்தின் ரேகை போட்டுக் கொண்டேயிருக்கிறீர்கள். எனவே அடி அதாவது காரியம் தான் நெருக்கமான குழந்தைகளின் அதிர்ஷ்டத்தின் ரேகையைப் போடுவதற்கான சேவையின் பொறுப்பாளர் ஆக்கியது. எனவே இப்பொழுது இன்னும் மிச்சமிருக்கும் இறுதி ஒசை -இதுவே தான், இதுவே தான் யாரைத் தேடிக் கொண்டிருந்தோமோ, அவர்கள் இவர்களே என்று வெளியாக வேண்டும். இப்பொழுது இதுவா அல்லது அதுவா என்று யோசிக்கிறார்கள் ஆனால் அநேகரிடமிருந்து இதுவே தான் என்று ஓசை மட்டும் வெளியாக வேண்டும். இப்பொழுது அந்த நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது, அதிர்ஷ்டத்தின் ரேகை நீளமாக ஆகி, அதுவும் புத்தியில் இருக்கும் சிறிதளவு பூட்டைத் திறக்க வேண்டியிருக்கிறது, அதுவும் திறந்து விடும். சாவியையோ போட்டு இருக்கிறீர்கள், திறக்கவும் செய்திருக்கிறீர்கள், ஆனால் இப்பொழுது கொஞ்சம் மாட்டிக் கொண்டிருக்கிறது, அந்த நாளும் வந்து விடும்.

**டீச்சர் சகோதரிகளுடன் சந்திப்பு:** டீச்சர்கள் என்றால் எப்பொழுதும் நிரம்பியவர்கள், நீங்கள் நிரம்பிய நிலையை அனுபவம் செய்பவர்கள் தான் இல்லையா. எப்பொழுது நீங்களே அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியிருக்கிறீர்களோ, அப்பொழுது மற்றவர்களுக்கு சேவை செய்ய முடியும். தன்னிடம் நிரம்பிய நிலையில்லை என்றால், மற்றவர்களுக்கு என்ன கொடுப்பீர்கள்? சேவாதாரி என்பதின் அர்த்தமே அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவர். எப்பொழுதும் நிரம்பிய நிலையின் போதை மற்றும் குஷி இருப்பது. எந்தவொரு பொக்கிஷத்தின் குறையில்லாத நிலை. சக்தி இருக்கிறது, குணம் இல்லை.. மேலும் குணம் இருக்கிறது, சக்தி இல்லை. என்று அப்படி இருக்க வேண்டாம். அனைத்து பொக்கிஷங்களினால், நிரம்பியிருக்க வேண்டும். எந்த சக்தியை, எந்த நேரம் வரவழைக்கிறீர்களோ, அந்த சக்தியின் சொரூபம் ஆகி விட வேண்டும் -இதைத் தான் நிரம்பிய நிலை என்று கூறுவது. நீங்கள்

அந்தமாதிரி இருக்கிறீர்களா? யார் நினைவு மற்றும் சேவையில் சமநிலையில் இருக்கிறார்களோ, சில நேரம் நினைவு அதிகமாக இருக்கிறது, சில நேரம் சேவை அதிகமாக இருக்கிறது என்று அப்படி இருக்க வேண்டாம். இரண்டும் சமமாக சமநிலையில் இருப்பவராக இருக்க வேண்டும். அவர் தான் நிரம்பிய நிலையின் ஆசிர்வாதத்திற்கு உரியவர் ஆகுகிறார். நீங்கள் அந்தமாதிரியான சேவாதாரியா, என்ன இலட்சியம் வைத்திருக்கிறீர்கள்? அனைத்து பொக்கிஷங்களின் நிரம்பிய நிலை, ஒரு குணத்தில் குறை இருக்கிறது என்றால் கூட நிரம்பி இருக்க வில்லை. ஒரு சக்தி குறைவாக இருக்கிறது என்றால் கூட நிரம்பியவர் என்று கூற முடியாது. எப்பொழுதும் நிரம்பிய நிலை, அனைத்திலும் நிரம்பிய நிலை, அப்படி இரண்டிலுமே இருக்க வேண்டும். அந்த மாதிரியானவரைத் தான் தகுதியான சேவாதாரி என்று கூறுவோம். புரிந்ததா? ஒவ்வொரு அடியிலும் நிரம்பிய நிலை. அந்த மாதிரி அனுபவி ஆத்மா, அனுபவத்தின் அதிகாரியாக இருப்பார். எப்பொழுதும் தந்தையின் துணையின் அனுபவம் இருக்கட்டும்.

**குமாரிகளுடன் சந்திப்பு:** எப்பொழுதுமே அதிர்ஷ்டம் நிறைந்த குமாரிகள் தான் இல்லையா? எப்பொழுதும் தன்னுடைய நெற்றியில் பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? நெற்றியில் பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறதா அல்லது இனிமேல் தான் மின்னப் போகிறதா? தந்தையின் குழந்தையாவது என்றால், நட்சத்திரம் மின்னுவது. அப்படியானால், ஆகி விட்டீர்களா? அல்லது இப்பொழுது முடிவு செய்வதற்காக யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் யோசிப்பவர்களா? அல்லது செய்பவர்களா? வேறு யாராவது இந்த ஒப்பந்தத்தை முறிக்க விரும்பினால், முறிக்க முடியுமா? தந்தையுடன் ஒப்பந்தம் செய்து விட்டு, இன்னொரு ஒப்பந்தம் செய்தால் என்னவாகும்? பிறகு பாக்கியத்தை பார்க்க வேண்டியதாக இருக்கும். யாரும் இலட்சாதிபதியினுடைவராக ஆன பிறகு ஏழையினுடையவர் ஆவதில்லை. ஏழை செல்வந்தர்களாக ஆவார்கள்., செல்வம் உள்ளவர்கள் ஏழையாக ஆகமாட்டார்கள். தந்தையினுடையவராக ஆன பிறகு வேறு எங்கும் எண்ணம் கூட செல்ல முடியாது -நீங்கள் அந்தமாதிரி உறுதியானவர்களா? எந்தளவு தந்தையின் தொடர்பில் இருப்பீர்களோ, அந்தளவு அவருடைய பிரபாவம் உறுதியாக இருக்கும். தொடர்பு பிஞ்சாக

இருக்கிறது என்றால், பிரபாவமும் பிஞ்சாக இருக்கும்,. எனவே படிப்பு மற்றும் சேவை இரண்டின் ஈடுபாடு இருக்க வேண்டும். பிறகு சதா காலத்திற்காக உறுதியான அசையாதவராக இருப்பீர்கள். மேலும் மேலே கீழே செல்லும் குழப்பத்தில் வர மாட்டீர்கள். உறுதியான பிரபாவம் ஏற்பட்டுவிட்டது என்றால், இத்தனை கரங்கள் மூலம், இத்தனை செண்டர்கள் திறக்க முடியும். ஏனென்றால் குமாரிகள் பந்தனமற்றவர்கள். மற்றவர்களின் பந்தனத்தையும் அழிப்பீர்கள் இல்லையா? எப்பொழுதும் தந்தையுடன் உறுதியான ஒப்பந்தம் செய்பவர்கள். தைரியம் இருக்கிறது என்றால், தந்தையின் உதவியும் கிடைக்கும். தைரியம் குறைவாக இருக்கிறது என்றால், உதவியும் குறைவாக இருக்கும். நல்லது. ஓம்சாந்தி

**வரதானம்: பரமாத்மாவின் அன்பை பிராப்தி செய்யக் (அடையக்) கூடிய இப்பொழுதும் மற்றும் எதிர்காலத்திலும் இராஜ குழந்தைகள் ஆகுக!**

சங்கமயுகத்தில் பாக்கியவான் குழந்தைகள் நீங்கள் தான் திலாராம் தந்தையின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள். இந்த பரமாத்ம அன்பு கோடியில் சில ஆத்மாக்களுக்குத் தான் பிராப்தி ஆகிறது. இந்த தெய்வீக அன்பு மூலமாக இராஜ குழந்தைகள் ஆகி விடுகிறீர்கள். இராஜ குழந்தைகள் என்றால் இப்பொழுதும் இராஜா மேலும் எதிர்காலத்திலும் இராஜா. எதிர்காலத்தையும் விட முன்பாக இப்பொழுது சுயராஜ்யா அதிகாரி ஆகி விட்டீர்கள். எப்படி எதிர்கால இராஜ்யத்தின் மகிமையாக ஒரு இராஜ்யம், ஒரு தர்மம், என்று இருக்கிறது., அதே போல் இப்பொழுது அனைத்து கர்மேந்திரியங்களின் மீது ஆத்மாவின் ஒரே ஒரு இராஜ்யம்.

**சுலோகன்: தன்னுடைய முகம் மூலம் தந்தையின் காரியத்தை காண்பிக்கக் கூடியவர் தான் பரமாத்மாவின் அன்பிற்குரியவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புது வருடத்திற்கான விசேச எண்ணம் -மாஸ்டர் அளிப்பவர் ஆகுங்கள்!

இன்று அளிப்பவர் தந்தை தன்னுடைய குழந்தைகள் மாஸ்டர் அளிப்பவர்களை சந்திப்பதற்காக வந்திருக்கிறார், அளிப்பவர் தந்தை ஒவ்வொரு குழந்தையின் சார்ட்டை பார்த்துக் கொண்டிருக்கிறார். அளிப்பவர் மூலமாக கிடைத்திருக்கும் பொக்கி^ங்களில் எந்தளவு அளிப்பவருக்குச் சமமாக மாஸ்டர் அளிப்பவர் ஆகியிருக்கிறார்கள்? ஞானத்தின் அளிப்பவரா? நினைவின் சக்திகளின் அளிப்பவரா? நேரத்திற்கு ஏற்றபடி ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சகயோகத்தின் அளிப்பவராகி ஆகியிருக்கிறாரா? பலமற்றவர்களுக்கு தன்னுடைய சிரேஷ்ட தொடர்பின் அளிப்பவராக ஆகியிருக்கிறாரா? பிராப்தியில்லாத ஆத்மாக்களை திருப்தியான ஆத்மாக்களாக ஆகுவதின் ஊக்கம், உற்சாகத்தின் அளிப்பவராக ஆகியிருக்கிறாரா? ஒவ்வொரு மாஸ்டர் அளிப்பவரின் இந்த சார்ட்டை பார்த்துக் கொண்டிருந்தோம்.

அளிப்பவர் என்றால், ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு எண்ணம் மூலம் கொடுப்பவர். அளிப்பவர் என்றால், பரந்த மனமுடையவர். கடலுக்குச் சமமாகக் கொடுப்பதில் பரந்த மனமுடையவர். அளிப்பவர் என்றால் ஒரு தந்தையைத் தவிர வேறு எந்த ஆத்மாவிடமிருந்தும் எதையும் வாங்கும் பாவனை வைக்காதவர். எப்பொழுதும் கொடுப்பவர் ஒருவேளை யாராவது ஆன்மீக அன்பு, சகயோகம் கொடுத்தாலும் கூட ஒன்றிற்குப் பதிலாக பல மடங்கு கொடுப்பவர். எப்படி தந்தை எதையும் யாரிடமிருந்தும் பெற்றுக் கொள்வதில்லை, கொடுக்கிறார். ஒருவேளை ஏதோ ஒரு குழந்தை தன்னுடைய பழைய குப்பைக்குச் சமமானவைகளைக் கொடுத்தாலும் கூட, அதற்குப் பதிலாக அந்தளவு கொடுக்கிறார். அதனால் பெறுவது கொடுப்பதில் மாறிவிடுகிறது. அப்படி மாஸ்டர் அளிப்பவர் என்றால் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு அடியிலும் கொடுப்பவர், மஹான் வள்ளல் என்றால், விதாதா அதாவது வழங்குபவர்.

எப்பொழுதும் கொடுப்பவராக இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் சுயநலமற்றவராக இருப்பார். தன்னுடைய நலனிலிருந்து விலகிய மற்றும் தந்தைக்குச் சமமாக அனைவரின் அன்பானவராக இருப்பார். அளிக்கும் ஆத்மாவிற்காக இயல்பாகவே அனைவரின் மரியாதை இருக்கும். அளிப்பவர் இயல்பாகவே அனைவரின் பார்வையில் வள்ளலாக அதாவது மஹானாக இருப்பார். அந்தமாதிரி யான உருவாக்குபவராக எந்தளவு ஆகியிருக்கிறீர்கள்? அளிப்பவர் என்றால், இராஜவம்சி. அளிப்பவர் என்றால், வளர்ப்பவர். தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் அன்பு மற்றும் சகயோகத்தினால் வளர்ப்பவர். அளிப்பவர் என்றால், எப்பொழுதும் நிரம்பியவர். எனவே நான் பெறுபவனா அல்லது கொடுக்கும் மாஸ்டர் வள்ளலா என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள்.

இப்பொழுது நேரத்திற்குத் தகுந்தாற்போல் பங்கை செய்ய வேண்டும். நேரம் அருகில் வந்து கொண்டி ருக்கிறது. அதாவது தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும். இது வரையிலும் கூட தனக்காகப் பெற வேண்டும் என்ற பாவனை உள்ளவராக இருந்தீர்கள் என்றால், கொடுப்பவராக எப்பொழுது ஆவீர்கள்? இப்பொழுது கொடுப்பது தான் பெறுவதாகும். எந்தளவு கொடுப்பீர்களோ, அந்தளவு இயல்பாகவே அதிகரித்துக் கொண்டேயிருக்கும். எந்த விதமான எல்லைக்குட்பட்ட விஷயங்களில் பெறுபவராக ஆகாதீர்கள். இதுவரையிலும் தன்னுடைய எல்லைக்குட்பட்ட ஆசைகளை நிறைவேற்றுவதற்கான ஆசை இருக்கிறது என்றால், உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களின் ஆசைகளை எப்படி நிறைவேற்றுவீர்கள். கொஞ்சம் பெயர் கிடைக்க வேண்டும், அன்பு கிடைக்க வேண்டும், மதிப்பு கிடைக்க வேண்டும், மரியாதை வேண்டும், அன்பு வேண்டும், சக்தி வேண்டும், இதுவரையிலும் தனக்காக இந்த ஆசை இருக்கிறது என்றால், என்னவென்று தெரியாத நிலையை எப்பொழுது அனுபவம் செய்வீர்கள்? இந்த எல்லைக்குட்பட்ட ஆசைகள் ஒருபோதும் நல்லவராக ஆகவிடாது. இந்த ஆசையும் கூட ராயல் யாசிக்கும் தன்மையின் அம்சம். அதிகாரி என்ற தன்மைக்குப் பின்னால் இந்த அனைத்து விசயங்களும் தானாகவே முன்னுக்கு வரும். வேண்டும், வேண்டும் என்ற பாடலைப் பாடாதீர்கள். கிடைத்து விட்டது, ஆகி விட்டேன் என்ற இந்தப் பாடலைப் பாடுங்கள். எல்லைக்கு அப்பாற்பட்ட வள்ளலுக்காக இந்த எல்லைக்குட்பட்ட எதிர்பார்ப்புகள் மற்றும் ஆசைகள்

அவைகளே நிழலுக்கு சமமாக பின்னால் வரும். எப்பொழுது என்ன அடைய வேண்டுமோ, அதை அடைந்து விட்டோம் என்ற பாடலைப் பாடுகிறீர்கள் என்றால், பிறகு இந்த எல்லைக்குட்பட்ட பெயர், மதிப்பு, மரியாதையைப் பெற வேண்டும் என்பது எப்படி இன்னும் மிச்சம் இருக்கிறது? இல்லையென்றால், பாடலை மாற்றி விடுங்கள். எப்பொழுது 5-தத்துவங்களும், அளிப்பவர் உங்கள் முன்பு தாசி ஆகி விடுகின்றன, இயற்கையை வென்றவர், மாயாவை வென்றவர் ஆகி விடுகிறீர்கள். அவற்றின் எதிரில் இந்த எல்லைக்குட்பட்ட ஆசைகள் சூரியனின் எதிரில் ஒரு அகல் விளக்கு மாதிரி. எப்பொழுது சூரியன் ஆகி விட்டீர்கள் என்றால், இந்த தீபங்களுக்கு என்ன அவசியம்? வேண்டும் என்பதே திருப்தி படுத்துவதற்கான ஆதாரம். என்ன வேண்டுமோ, அதை அதிகமாகக் கொடுத்துக் கொண்டேயிருங்கள். மதிப்பை (பிறருக்கு) கொடுங்கள், வேண்டும் என்று கேட்காதீர்கள், மரியாதையைக் கொடுங்கள். மரியாதை வேண்டுமென்று எதிர்பார்க்காதீர்கள், பெயர் வேண்டுமென்றால், தந்தையின் பெயரை தானம் செய்யுங்கள். பிறகு உங்களுக்கு தானாகவே பெயர் கிடைத்து விடும். கொடுப்பது தான் பெறுவதற்கான ஆதாரம். எப்படி பக்தி மார்க்கத்தில் கூட, இந்தப் பழக்கம் தான் இருந்து வந்திருக்கிறது. ஏதாவது ஒரு பொருளின் குறையிருக்கிறது என்றால், அதன் பிராப்திக்காக அதே பொருளை தானம் செய்விப்பார்கள். அப்படி அந்த கொடுப்பது தான் பெறுவதாக ஆகி விட்டது. அந்தமாதிரி நீங்களும் வள்ளலின் குழந்தைகள் கொடுக்கக் கூடிய தேவதை ஆகுபவர்கள். உங்கள் அனைவரின் மகிமையாக, வழங்கும் வள்ளலே! சாந்தி தேவா!, செல்வத்தைக் கொடுப்பவரே! என்று கூறுகிறார்கள். பெறுபவர் என்று கூறி மகிமை செய்வதில்லை, அப்படி இந்த சார்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தோம். தேவதை (கொடுப்பவர்) ஆகுபவர்கள் எத்தனை பேர், மேலும் பெறுபவர்கள் எத்தனை பேர். உலகீய ஆசைகள், இச்சைகள் முடிவடைந்து விட்டன. இப்பொழுது ஆன்மீக வாழ்க்கையின் எல்லைக்கு அப்பாற்பட்ட இச்சைகளை ஞானத்தின் விசயங்கள் என்று புரிந்து கொள்கிறீர்கள் தான் இல்லையா? இதுவோ இருக்கத்தான் வேண்டும் ஆனால் எந்தவொரு எல்லைக்குட்பட்ட விருப்பம் வைத்திருப்பவர், மாயாவை எதிர்நோக்க முடியாது. கேட்பதால் கிடைக்கக் கூடிய பொருள் அல்ல அது!. யாரிடமாவது எனக்கு மரியாதை கொடுங்கள் அல்லது கொடுக்க வையுங்கள் என்று கூறுகிறார். கேட்டுக் கிடைப்பது என்ற இந்த நோக்கமே தவறானது. பிறகு இலட்சியம் எங்கிருந்து

கிடைக்கும், எனவே வழங்கும் வள்ளல் ஆகுங்கள். பிறகு இயல்பாகவே அனைவரும் உங்களுக்கு கொடுப்பதற்கு வருவார்கள்? மதிப்பை வேண்டுமென்று கேட்பவர் மதிப்பிழந்து போகிறார். எனவே மாஸ்டர் அளிப்பவர் என்ற மதிப்புடன் இருங்கள். என்னுடையது, என்னுடையது என்று கூறாதீர்கள்.. அனைத்தும் உங்களுடையது, நீங்கள் உங்களுடையது என்று கூறினீர்கள் என்றால், அனைவரும் உன்னுடையது, உன்னுடையது என்று கூறுவார்கள். என்னுடையது -என்னுடையது என்று கூறுவதினால் என்ன வருகிறதோ அதையும் இழந்து விடுவீர்கள். ஏனென்றால் எங்கு திருப்தி இல்லையோ, அங்கு பிராப்தியும், பிராப்தியின்மைக்குச் சமமானது. எங்கு திருப்தி இருக்கிறதோ, அங்கு கொஞ்சம் இருந்தாலும் அனைத்தும் இருப்பதற்குச் சமமானது. எனவே உன்னுடையது, உன்னுடையது என்று கூறுவதினால், பிராப்தி சொரூபம் ஆகி விடுவீர்கள். எப்படி குவிந்த கூரை உள்ள மண்டபத்தினுள் ஏதாவது சப்தத்தை எழுப்பினீர்கள் என்றால், அதே சப்தம் திரும்பி வரும். அதேபோல் இந்த எல்லைக்கு அப்பாற்பட்ட மண்டபத்தினுள், ஒருவேளை நீங்கள் மனதால் என்னுடையது என்று கூறினீர்கள் என்றால், அனைவரின் பக்கத்திலிருந்தும் அதே என்னுடையது என்ற ஓசையைத் தான் கேட்பீர்கள்.

நீங்கள் என்னுடையது என்று கூறுவீர்கள், அவரும் என்னுடையது என்று கூறுவார், எனவே எந்தளவு மனதார அன்புடன் (ஏதாவது தேவைக்காக இல்லை) உன்னுடையது என்று கூறுவீர்களோ, அந்தளவே மனதார அன்புடன் எதிரில் இருப்பவரும் உங்களிடம் உன்னுடையது என்று கூறுவார். இந்த விதி மூலம் என்னுடையது, என்னுடையது என்பதின் எல்லைக்குட்பட்டது. எல்லைக்கு அப்பாற்பட்டதில் மாற்றம் ஆகி விடும். மேலும் பெறுபவருக்குப் பதிலாக மாஸ்டர் அள்ப்பவர் ஆகி விடுவார். எனவே இந்த வருடம் எப்பொழுதும் நான் மாஸ்டர் அளிப்பவன் என்ற இந்த விசேஷ எண்ணத்தை வையுங்கள். புரிந்ததா?

மஹாராஷ்டிரா மண்டலம் வந்திருக்கிறது. எனவே மஹான் ஆக வேண்டும் இல்லையா? மஹாராஷ்டிரா என்றாலே, எப்பொழுதும் மஹான் ஆகி, அனைவருக்கும் வழங்குபவராக ஆவது. மஹாராஷ்ட்ரா என்றால், எப்பொழுதும் நிரம்பிய இராஜ்யம், தேசம் சம்பன்னமாக இருக்கிறதோ, அல்லது இல்லையோ, ஆனால் மஹான் ஆத்மாக்கள் நீங்களோ

சம்பன்னமாக இருக்கிறீர்கள், எனவே மஹாராஷ்டிரா என்றால் மஹாதானி ஆத்மாக்கள்.

இன்னொன்று உ.பி.யைச் சேர்ந்தவர்கள், உ.பி.யில் பதீத பாவனி கங்கையின் மகத்துவம் இருக்கிறது. எனவே எப்பொழுதும் பிராப்தி சொரூபமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் பதீத பாவனியாக ஆக முடியும். அப்படி உ.பி.யைச் சேர்ந்தவர்களும் தூய்மையின் களஞ்சியமாக இருக்கிறார்கள். எப்பொழுதும் அனைவருக்கும் தூய்மையின் ஆசீர்வாதம் கொடுக்கும் மாஸ்டர் அளிப்பவர், அப்படி இரண்டும் மஹான் ஆனது இல்லையா? பாப்தாதாவும் அனைத்து மஹான் ஆத்மாக்களையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்.

இரட்டை வெளிநாட்டினரோ, இரட்டை போதையில் தான் இருக்கிறார்கள். ஒன்று நினைவின் போதை, இன்னொன்று சேவையின் போதை. பெரும் பான்மையோர் இந்த இரட்டை போதையில் எப்பொழுதும் இருப்பவர்கள். மேலும் இந்த இரட்டை போதை தான் அனேக போதைகளிலிருந்து காப்பாற்றக் கூடியது. இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளும் இரண்டு விசயங்களின் பந்தயத்தில் வரிசை எண் நல்லதாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பாபா மற்றும் சேவையின் பாடலை கனவிலும் பாடிக் கொண்டே இருக்கிறார்கள். அப்படி மூன்று நதிகளின் சங்கமம் -கங்கை, யமுனை, சரஸ்வதி மூன்று ஆகி விட்டது இல்லையா? உண்மையான அல்லாவின் வளமாக்கப்பட்ட ஸ்தானமோ இந்த மதுபன் தான் இல்லையா? இதே அல்லாவின் வளமாக்கப்பட்ட ஸ்தானத்தில் மூன்று நதிகளின் சங்கமம். நல்லது.

அனைத்து எப்பொழுதும் மாஸ்டர் அளிப்பவர்களுக்கு, எப்பொழுதும் அனைவருக்கும் கொடுக்கும் பாவனையில் இருப்பவர்களுக்கு, தேவதை ஆகும், எப்பொழுதும் உன்னுடையது, உன்னுடையது என்ற பாடலைப் பாடுகின்ற, எப்பொழுதும் பிராப்தியில்லாத ஆத்மாக்களை திருப்திப் படுத்தக் கூடிய சம்பன்ன ஆத்மாக்களுக்கு, வழங்குபவர், வரமளிக்கும் வள்ளல் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** சேவாதாரி சேவை செய்வதினால் அவர்களும் சக்திசாலியாகுகிறார், மேலும் மற்றவர்களிலும் சக்தி நிரப்புவதற்கு

பொறுப்பாளர் ஆகிறார். உண்மையான ஆன்மீக சேவை எப்பொழுதும் சுயமுன்னேற்றம் மற்றும் மற்றவர்களின் முன்னேற்றத்திற்குப் பொறுப்பாளர் ஆக்குகிறது. மற்றவர்களுக்கு சேவை செய்வதற்கு முன்பு தன்னுடைய சேவை செய்ய வேண்டியதாக இருக்கிறது. மற்றவர்களுக்கு கூறுவது என்றால், முதலில் அவர் கேட்பது, முதலில் தன்னுடைய காதுகளில் செல்லும் இல்லையா? சொல்வது என்பது இருக்காது. கேட்பது என்பது இருக்கும். அப்படி சேவை மூலம் தனக்கும் மற்றவர்களுக்கும் இரட்டை லாபம் ஆகிறது. சேவையில் பிஸியாக இருப்பது என்றால் சுலபமாக மாயாவை வென்றவர் ஆவது. பிஸியாக இருப்பதில்லை, அப்பொழுது தான் மாயா வருகிறது. சேவாதாரி என்றால், பிஸியாக இருப்பவர். சேவாதாரிகளுக்கு ஒருபொழுதும் ஒய்வான நேரமே இல்லையென்றால், மாயா எப்படி வரும்?. சேவாதாரி ஆவது என்றால், சுலபமாக வெற்றியடைபவர் ஆவது. சேவாதாரி சுலபமாக மாலையில் வர முடியும்.. ஏனென்றால், சுலபமாக வெற்றியடைபவர். வெற்றியடைபவர் வெற்றி மாலையில் வருவார். சேவாதாரியின் அர்த்தம் அப்பொழுது எடுக்கப்பட்ட வெண்ணெய் அருந்துபவர். அப்பொழுது பறிக்கப்பட்ட பழத்தை அருந்துபவர் ஆரோக்கியமாக இருப்பார். டாக்டர்களும் புதிய பழங்களும், புதிய காய்கறிகளையும் சாப்பிடுங்கள் என்று கூறுவார்கள். அப்படி சேவை செய்வது என்றால் உயிர்சத்து (வைட்டமின்) கிடைப்பது. நீங்கள் அந்தமாதிரி சேவாதாரி தான் இல்லையா? சேவைக்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது. அந்தமாதிரி சேவையின் அனுபவம் ஆகிக் கொண்டிருக்கிறதா என்று இந்த விசயத்தைத் தான் சோதனை செய்ய வேண்டும். எவ்வளவு தான் ஒருவர் குழப்பத்தில் இருந்தாலும் சேவை குஷியில் நடனமாட வைக்கக் கூடியது. எவ்வளவு தான் ஒருவர் நோயுற்று இருந்தாலும் சேவை ஆரோக்கியமாக ஆக்கக்கூடியது, சேவை செய்து, செய்து தான் நோயாளி ஆகி விட்டேன். என்று அந்தமாதிரி கிடையாது. நோயாளியை ஆரோக்கியமானவராக ஆக்கக் கூடியது சேவை. அந்தமாதிரி அனுபவம் இருக்கட்டும். நீங்கள் அந்தமாதிரி விசேச சேவாதாரி விசேச ஆத்மாக்கள். பாப்தாதா சேவாதாரிகளை எப்பொழுதும் சிரேஷ்ட சம்பந்தத்தில் பார்க்கிறார். ஏனென்றால், சேவைக்காக தியாகி, தபஸ்வியாகவோ ஆகியிருக்கிறார்கள் இல்லையா? தியாகம் மற்றும் தபஸ்யாவைப் பார்த்து பாப்தாதா எப்பொழுதும் குஷியடைகிறார்.

2. சேவாதாரி என்றால் எப்பொழுதும் சேவைக்குப் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள். எப்பொழுதும் தன்னை ஒரு கருவி என்று நினைத்து சேவையில் முன்னேறிக் கொண்டே இருங்கள். நான் சேவாதாரி என்ற இந்த நான் என்ற உணர்வு வருவதில்லையே? தந்தை செய்விப்பவர், நான் ஒரு கருவி, செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார், நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கிறார் என்ற இந்த சிரேஷ்ட பாவனை மூலம் எப்பொழுதும் விலகியிருப்பவராகவும் மற்றும் அன்பானவராகவும் இருப்பீர்கள். ஒருவேளை நான் செய்கிறேன் என்பது இருக்கிறது என்றால், விலகியிருப்பவராகவும், அன்பானவராகவும் இல்லை. எனவே எப்பொழுதும் விலகியிருந்து மேலும் எப்பொழுதும் அன்பானவராக ஆவதற்கான வழி, செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்ற நினைவில் இருப்பது. இதன் மூலம் வெற்றியும் அதிகம் மேலும் சேவையும் சுலபமாக இருக்கும் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்காது. ஒருபொழுதும் நான் என்ற மனப்பிராந்தியில் வருபவன் இல்லை, ஒவ்வொரு விஷயத்திலும் பாபா, பாபா என்று கூறினால் வெற்றி இருக்கும். அந்தமாதிரி சேவாதாரி எப்பொழுதும் முன்னேறிக் கொண்டும் இருப்பார். மற்றவர்களையும் முன்னேற்றுவார். இல்லையென்றால், அவரே சில நேரம் பறக்கும் கலை, சில நேரம் ஏறும் கலை, சில நேரம் நடக்கும் கலையில் இருப்பார். மாற்றிக் கொண்டே இருப்பார். மேலும் மற்றவர்களையும் சக்திசாலி ஆக்க முடியாது. எப்பொழுதும் பாபா -பாபா என்று சொல்பவர் மட்டும் இல்லை, ஆனால் செய்து காண்பிப்பவர். அந்தமாதிரி சேவாதாரி எப்பொழுதும் பாப்தாதாவின் நெருக்கத்தில் இருப்பார். எப்பொழுதும் தடைகளை அழிப்பவராக இருப்பார். நல்லது.

**வரதானம்: தைரியம் மற்றும் ஊக்கம் உற்சாகத்தின் இறக்கைகள் மூலம் பறக்கும் கலையில் பறக்கக் கூடிய தீவிர முயற்சி செய்பவர் ஆகுக!**

பறக்கும் கலைக்கு இரண்டு இறக்கைகள் இருக்கின்றன -தைரியம் மற்றும் ஊக்கம் உற்சாகம் என்பது! எந்த ஒரு காரியத்திலும் வெற்றியை அடைவதற்கு தைரியம் மற்றும் ஊக்கம் -உற்சாகம் இல்லையோ அங்கு களைப்பு ஏற்படும், மேலும் களைப்படைந்தவர் ஒருபொழுதும் வெற்றியடைவதில்லை. தற்சமயத்திற்கு ஏற்றபடி பறக்கும் கலையின்றி

இலட்சியத்தை சென்றடைய முடியாது. ஏனென்றால், முயற்சி செய்வது ஒரு பிறவியில் மட்டுமே! ஆனால் பிராப்தி 21-ஜென்மங்களுக்காக மட்டுமின்றி முழு கல்பத்திற்கானது. எப்பொழுதும் நேரத்தை உணர்ந்திருப்பது நினைவில் இருக்கிறது என்றால் முயற்சி செய்வது இயல்பாகவே அதிவேகமுடையதாகி விடுகிறது.

**சுலோகன்: அனைவரின் மனவிருப்பங்களை நிறைவேற்றுபவர் தான் காமதேனு!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களின் ஆன்மீக தனிச்சிறப்பு!

இன்று பாக்கியத்தை வழங்கும் தந்தை தன்னுடைய சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த குழந்தைகளை, ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தின் ரேகை எவ்வளவு சிரேஷ்டமாக மற்றும் அழியாததாக இருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தைகளுமே பாக்கியம் நிறைந்தவர்கள் தான், ஏனென்றால், பாக்கியத்தை வழங்குபவரின் குழந்தைகளாக ஆகியிருக்கிறார்கள். எனவே பாக்கியம் பிறப்புரிமையாக இருக்கிறது. பிறப்புரிமையின் அதிகாரத்தின் ரூபத்தில் அனைவருக்கும் இயல்பாகவே கிடைத்திருக்கிறது. அதிகாரமோ அனைவருக்கும் இருக்கிறது, ஆனால் அந்த அதிகாரத்தை தனக்காக மற்றும் மற்றவர்களுக்காக வாழ்க்கையில் அனுபவம் செய்வது மற்றும் செய்விப்பதில் வித்தியாசம் இருக்கிறது. இந்த பாக்கியத்தின் அதிகாரத்தை, அதிகாரி ஆகி அந்த குஷியில் மற்றும் போதையில் இருக்க வேண்டும். மேலும் மற்றவர்களையும் பாக்கியத்தை வழங்குபவர் மூலமாக பாக்கியம் நிறைந்தவராக ஆக்க வேண்டும். இது தான் அதிகாரத் தன்மையின் போதையில் இருப்பது. எப்படி பௌதீக செல்வந்தனின் நடத்தை மற்றும் முகத்தின் மூலம் செல்வத்தின் அற்ப கால போதை தென்படுகிறதோ, அதே போல் பாக்கியத்தை வழங்குபவர் மூலமாக அழியாத சிரேஷ்ட பாக்கியத்தின் செல்வத்தின் போதை நடத்தை மற்றும் முகம் மூலம் இயல்பாகவே தென்படுகிறது. சிரேஷ்ட பாக்கியத்தின் செல்வத்தின் பிராப்தி சொரூபம் உலகியல் அல்லாதது மற்றும் ஆன்மீகமானது. சிரேஷ்ட பாக்கியத்தின் ஜொலிப்பு மற்றும் ஆன்மீகப் பொலிவு உலகில் மற்ற அனைத்து ஆத்மாக்களிலிருந்து சிரேஷ்டமான வித்தியாசனமானது மற்றும் அன்பானது. சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மா எப்பொழுதும் நிரம்பிய வராக, பெருமிதத்தில் இருப்பவராக அனுபவம் ஆவார்கள். தூரத்தில் இருந்து சிரேஷ்ட பாக்கியத்தின் கிரணங்கள் மின்னிக் கொண்டிருப்பதாக அனுபவம்

ஆகும். பாக்கியம் நிறைந்தவரின் பாக்கியத்தின் செல்வத்தின் தனிச்சிறப்பு தூரத்திலிருந்தே அனுபவம் ஆகும். சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த பார்வை மூலம் அனைவருக்கும் எப்பொழுதும் ஆன்மீக இராஜ அம்சம் அனுபவம் ஆகும். உலகத்தில் எத்தனை தான் பெரிய பெரிய இராஜ அம்சம் மற்றும் தனிச்சிறப்பு உள்ளவர்கள் இருந்தாலும், சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாவின் எதிரில், அழியும் தனிச்சிறப்புள்ளவர்கள், இந்த ஆன்மீகத் தனிச்சிறப்பு உள்ளவர்கள் மிக உயர்ந்த புதுமையானவர்கள் என்று அவர்களே அனுபவம் செய்வார்கள். இந்த சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள் வேறுபட்ட ஆன்மீக உலகத்தைச் சேர்ந்தவர்கள் என்று அனுபவம் செய்வார்கள். முற்றிலும் வித்தியாசமானவர்கள், அவர்களைத் தான் அல்லாவின் (இறைவனின்) மனிதர்கள் என்று கூறுவது. எப்படி ஏதாவது ஒரு புதிய பொருள் இருக்கிறது என்றால், அனைவரும் மிகவும் அன்புடன் பார்த்துக் கொண்டே இருந்து விடுவார்கள். அதே போல் சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களைப் பார்த்து, பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களின் சிரேஷ்ட உள்ளுணர்வு மூலமாக வாயுமண்டலம் அந்தமாதிரி ஆகி விடுகிறது. அதனால் மற்றவர்களும் கொஞ்சம் பிராப்தி ஆகிறது என்று அனுபவம் செய்கிறார்கள், அதாவது பிராப்தியின் சூழ்நிலையை அனுபவம் செய்கிறார்கள். கொஞ்சம் அடைந்து கொண்டிருக்கிறோம், கிடைத்துக் கொண்டிருக்கிறது என்ற இந்த அனுபவத்திலேயே தன்னை மறந்து விடுவார்கள். சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாவைப் பார்த்து, எப்படி தாகமுள்ளவர் எதிரில், கிணறே நடந்து வந்தது போல் அனுபவம் செய்வார்கள். அதே போல் பிராப்தி இல்லாத ஆத்மா, பிராப்தி என்ற கிடைக்கும் நம்பிக்கையை அனுபவம் செய்கிறார்கள். நாலாபுறங்களின் நம்பிக்கை இழந்த இருளின் நடுவில் நல்ல நம்பிக்கை என்ற தீபம் எரிந்துக் கொண்டிருப்பதாக அனுபவம் செய்வார்கள். மனமுடைந்து போன ஆத்மாக்களுக்கு மனதின் குஷியின் அனுபவம் ஆகும். நீங்கள் அந்தமாதிரி சிரேஷ்ட பாக்கியம் நிறைந்தவர்களாக ஆகியிருக்கிறீர்களா? தன்னுடைய இந்த ஆன்மீக சிறப்புகளை தெரிந்திருக்கிறீர்களா? நம்புகிறீர்களா? அனுபவம் செய்கிறீர்களா? அல்லது யோசிக்கவும் மற்றும் கேட்க மட்டும் செய்கிறீர்களா? நடைமுறையில் காரியம் செய்து கொண்டே, இந்த சாதாரண ரூபத்தில் மறைந்திருக்கும், விலை மதிக்க முடியாத வைரமான சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாவை

எப்பொழுதாவது நீங்களே மறந்து விடுவ தில்லையே? தன்னை சாதாரண ஆத்மா என்றோ நினைக்க வில்லையே? உடல் பழையது, சாதாரணமானது, ஆனால் ஆத்மா மகான் மற்றும் விசேஷமானது. முழு உலகத்தில் உள்ளவர்களின் ஜாதகத்தில் அவர்களுடைய பாக்கியத்தைப் பாருங்கள், உங்களை மாதிரி சிரேஷ்ட பாக்கியத்தின் ரேகை யாருக்குமே இருக்க முடியாது. எவ்வளவு தான் செல்வத்தினால் நிரம்பிய ஆத்மாவாக இருந்தாலும், சாஸ்திரங்களின் ஞானப் பொக்கிஷங் களினால் நிரம்பிய ஆத்மாவாக இருந்தாலும், அறிவியல் ஞானத்தில் நிரம்பிய ஆத்மாவாக இருந்தாலும், உங்கள் அனைவரின் பாக்கியத்தின் நிரம்பிய நிலையின் எதிரில் அவர்கள் என்னவாக அனுபவம் ஆவார்கள்? அவர்களே இப்பொழுது நாங்கள் வெளிமுகமாக நிரம்பி இருக்கிறோம், ஆனால் உள்ளே காலியாக இருக்கிறோம் என்று இப்பொழுது அனுபவம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். மேலும் நீங்கள் உள்ளே நிரம்பி இருக்கிறீர்கள், வெளியே சாதரணமாக இருக்கிறீர்கள் என்று நினைக்கிறார்கள். எனவே தன்னுடைய சிரேஷ்ட பாக்கியத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே, சக்தி நிறைந்த நிலையின் ஆன்மீக போதையில் இருங்கள். வெளிமுகமாக சாதரணமாகத் தென்பட்டாலும் சரி, ஆனால் சாதாரணத் தன்மையில் மகான் தன்மை தென்பட வேண்டும், எனவே ஒவ்வொரு காரியத்தில் சாதரணத் தன்மையில் மகான் தன்மை அனுபவம் ஆகிறதா என்று சோதனை செய்யுங்கள்? எப்பொழுது நீங்களே உங்களை அந்தமாதிரி அனுபவம் செய்வீர்களோ, அப்பொழுது தான் மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விப்பீர்கள். எப்படி மற்ற மனிதர்கள் காரியம் செய்கிறார்கள், அந்த மாதிரியே நீங்களும், உலகியல் காரியம் விவகாரம் தான் செய்கிறீர்களா, அல்லது உலகியல் அற்ற அல்லா மனிதர்கள் ஆகி, காரியம் செய்கிறீர்களா? போனாலும், வந்தாலும் அனைவரின் தொடர்பில் வந்து கொண்டே, இவர்களுடைய பார்வையில், முகத்தில் புதுமைத் தன்மை இருக்கிறது என்று அவசியம் அனுபவம் செய்வியுங்கள். மேலும் பார்த்ததும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், ஆனால் இது என்ன? இவர்கள் யார்? என்ற கேள்வி அவசியம் எழட்டும். இந்தக் கேள்வி என்ற அம்பு அவசியம் தந்தையின் அருகில் கொண்டே வந்து விடும். புரிந்ததா? நீங்கள் அந்தமாதிரி சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள். பாப்தாதா சில நேரம் குழந்தைகளின் வெகுளித் தன்மையை பார்த்து புன்சிரிக்கிறார். பகவானின் குழந்தையாகி இருக்கிறார்கள், ஆனால் தன்னுடைய பாக்கியத்தையே

மறந்து விடும் அளவிற்கு வெகுளியாகி விடுகிறார்கள். எந்த விஷயத்தை யாருமே மறப்பது இல்லையோ, அதை வெகுளியான குழந்தைகள் மறந்து விடுகிறார்கள். தன்னைத் தானே யாராவது மறப்பார்களா? தந்தையை யாராவது மறப்பார்களா/ எந்தளவு வெகுளியாகி விட்டீர்கள். 63-ஜென்மங்களாக தவறான பாடத்தை அந்தளவு உறுதியாக ஆக்கியிருக்கிறீர்கள். அதை மறந்து விடுங்கள் என்று பகவான் கூறினாலும், மறப்பதில்லை. மேலும் சிரேஷ்ட விஷயங்களை மறந்து விடுகிறீர்கள். அந்தமாதிரி எந்தளவு வெகுளியாக இருக்கிறீர்கள். தந்தையும் நாடகத்தில் இந்த வெகுளியானவருடன் தான் தன்னுடைய பங்கு இருக்கிறது என்று கூறுகிறார். நீண்ட காலம் வெகுளியாக ஆகியிருக்கிறீகள், இப்பொழுது தந்தைக்கு சமமாக மாஸ்டர் ஞானம் நிறைந்தவர், மாஸ்டர் சக்தி நிறைந்தவர் ஆகுங்கள். புரிந்ததா? நல்லது.

எப்பொழுதும் சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த, அனைவருக்கும் தன்னுடைய சிரேஷ்ட பாக்கியம் மூலமாக பாக்கியம் நிறைந்தவர் ஆவதற்கான சக்தி கொடுப்பவர்களுக்கு, சாதரணத் தன்மையில் மகான் தன்மையை அனுபவம் செய்விப்பவர்களுக்கு, வெகுளியாக இருப்பவரிலிருந்து பாக்கியம் நிறைந்தவர் ஆகுபவர்களுக்கு, எப்பொழுதும் பாக்கியத்தின் அதிகாரத்தில் மற்றும் குஷியில் இருப்பவர்களுக்கு, உலகத்தில் பாக்கியத்தின் நட்சத்திரமாகி மின்னிக் கொண்டிருப்பவர்களுக்கு, அந்தமாதிரி சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, பாக்கியத்தை வழங்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**மதுபன் நிவாசி சகோதர, சகோதரிகளுடன் சந்திப்பு:** மதுபன் நிவாசி என்றால் எப்பொழுதும் தன்னுடைய மதுரத் தன்மை (இனிமைத் தன்மை) மூலமாக அனைவரையும் மதுரமாக (இனிமையாக) ஆக்குபவர்கள் மற்றும் எப்பொழுதும் தன்னுடைய எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளுணர்வு மூலமாக எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியத்தை மற்றவர்களில் கொண்டு வருபவர்கள். இது தான் மதுபன் நிவாசிகளின் விசேஷம். மதுரத் தன்மையும் அளவற்றது, மேலும் வைராக்கிய உள்ளுணர்வும் அளவற்றது. அந்தமாதிரி சமநிலை வைப்பவர்கள், எப்பொழுதுமே சகஜமாக மற்றும் இயல்பாக முன்னேறிக் கொண்டிருப்பதை அனுபவம் செய்வார்கள். மதுபன்னின் இந்த இரண்டு விசேஷங்களின் பிரபாவம் உலகத்தின் மேல் ஏற்படுகிறது. அஞ்ஞானி

ஆத்மாக்களாக இருந்தாலும் கூட மதுபன் லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ். அப்படி லைட் ஹவுஸின் வெளிச்சம் ஒருவர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அனைவர் மீதும் விழும். எந்தளவு இந்த இடத்தின் வைப்ரேஷன் இருக்குமோ, அந்தளவு இது ஒரு வித்தியாசமானது என்று புரிந்து கொள்வார்கள். பிரச்சனையின் காரணமாக இருந்தாலும், சூழ்நிலையின் காரணமாக இருந்தாலும், பிராப்தி யின்மையின் காரணமாக இருந்தாலும், அற்ப காலத்தின் வைராக்கிய உள்ளுணர்வின் பிரபாவம் கூட அவசியம் ஏற்படும். எப்பொழுது நீங்கள் இங்கே சக்திசாலியாகிறீர்கள் என்றால், அங்கேயும் சக்திசாலியான ஏதாவது விசேஷமான விஷயம் நடக்கும். இங்கே உள்ள அலை பிராமணர்களையும் சேர்த்து உலகத்தினரின் மேலும் விழுகிறது. ஒருவேளை விசேஷமாக பொறுப்பாளர் ஆகியிருப்பவர்கள் கொஞ்சம் ஊக்கத்தில் வருகிறார்கள், பிறகு சாதரணமாக ஆகி விடுகிறார்கள் என்றால், அங்கேயும் ஊக்கத்தில் வந்து பிறகு சாதரணமாகி விடுவார்கள். அப்படி மதுபன் ஒரு விசேஷமான மேடை. எப்படி வெளியுலகத்திலுள்ள மேடையில் ஒருவர் சொற்பொழிவு நிகழ்த்துபவர் அல்லது நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் இருக்கிறார் என்றால், மேடையின் கவனம் இருக்கும் இல்லையா. அல்லது இதுவோ சொற்பொழிவு நிகழ்த்துபவர்களுக்கு மட்டும் என்று புரிந்து கொள்வார்களா. யாரோ ஒருவர் சிறிய பாடல் பாடுபவராக இருந்தாலும் பூச்சென்டு கொடுப்பவராக இருந்தாலும், எந்த நேரம் அவர் மேடையில் வருவாரோ, அப்பொழுது அதே விசேஷத்துடன், கவனத்துடன் வருவார். அப்படி மதுபன்னில் எந்த சேவையில் இருந்தாலும், தன்னை சிறியவர் என்று புரிந்து கொண்டாலும், அல்லது பெரியவர் என்று புரிந்து கொண்டாலும், ஆனால் அவர் மதுபன்னின் விசேஷ மேடையில் இருக்கிறார். மதுபன் என்றாலே மகான் மேடை. அப்படி மகான் மேடையில் பாத்திரம் ஏற்று நடிப்பவர் மகான் ஆகிறார் இல்லையா? அனைவரும் உங்களை உயர்ந்த பார்வையோடு பார்க்கிறார்கள் இல்லையா, ஏனென்றால் மதுபன்னின் மகிமை என்றால், மதுபன் நிவாசிகளின் மகிமை.

மதுபனைச் சேர்ந்தவர்களின் ஒவ்வொரு வார்த்தையும், வார்தை இல்லை, அது முத்து ஆகும். எப்படி முத்துகளின் மழை பொழிந்து கொண்டிருக்கிறது, பேசிக் கொண்டிருக்கவில்லை, ஆனால் முத்துகளின் மலை பொழிந்து கொண்டிருக்கிறது. இதைத் தான் மதுரத் தன்மை என்று

கூறுவது. அந்தமாதிரியான வார்த்தைகளை பேச வேண்டும், கேட்பவரும் நானும் இந்த மாதிரியான வார்த்தைகளைப் பேச வேண்டும் என்று யோசிக்க வேண்டும். கேட்டு அனைவரும் கற்றுக் கொள்ளவேண்டும், இவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற பிரேரணனை கிடைக்க வேண்டும். என்ன வார்த்தை வெளியாகிறதோ, அது அந்தமாதிரி இருக்க வேண்டும், யாராவது அதை பதிவு செய்து மீண்டும் மீண்டும் கேட்க்கும் அளவிற்கு. நல்ல விஷயமாக இருப்பதினால் தானே பதிவு செய்கிறார்கள், மேலும் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். உங்களுடைய வார்த்தை அந்த மாதிரி மதுரத் தன்மையாக இருக்க வேண்டும். அந்த மாதிரியான இனிமையான வார்த்தையின் எண்ண அலைகள் உலகில் இயல்பாக பரவும். இந்த வாயுமண்டலம் எண்ண அலைகளை இயல்பாகவே இழுக்கும். எனவே உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் மகானாக இருக்க வேண்டும். ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு ஆத்மாவிற்காக இனிமையானதாக, மகானாக இருக்கட்டும். மேலும் இன்னொரு விஷயம் மதுபனில் எந்தளவு களஞ்சியம் நிரம்பியிருக்கிறதோ, அந்தளவு எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவர்களது, பிராப்தியும் அளவற்றது, மேலும் வைராக்கிய உள்ளுணர்வும் அந்தளவே தான், அப்பொழுது தான் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு என்று கூறுவோம். ஒன்றுமே இல்லைவே இல்லை என்றால், வைராக்கிய உள்ளுணர்வு எப்படி. இருக்க வேண்டும், மேலும் இருந்த போதிலும் வைராக்கிய உள்ளுணர்வு இருக்கவேண்டும், இதைத் தான் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு என்று கூறுவது. அந்த மாதிரி யார் எந்தளவு செய்கிறாரோ, அந்தளவு தற்சமயமும் பலன் அடைகிறார், எதிர்காலத்திலோ கண்டிப்பாக கிடைக்கும். தற்சமயத்தில் உண்மையான அன்பு மற்றும் உள்ளப்பூர்வமான ஆசிர்வாதமும் இப்பொழுது பிராப்தி ஆகிறது, மேலும் இந்த பிராப்தி சொர்க்கத்தின் இராஜ்ய பாக்கியத்தை விடவும் அதிகமானது. அனைவரின் அன்பு மற்றும் அசீர்வாதம் இதயத்தை எந்தளவு முன்னேறச் செய்கிறது என்று இப்பொழுது தெரிகிறது, அந்த அனைவரின் உள்ளப்பூர்வமான ஆசீர்வாதத்தின் குஷி மற்றும் சுகத்தின் அனுபவம் ஒரு விசித்திரமானது. யாரோ சகஜமாக கைகளால் தூக்கி சென்று கொண்டிருக்கிறார் என்று அனுபவம் செய்வீர்கள். இந்த அனைவரின் அன்பு, மேலும் அனைவரின் ஆசீர்வாதம், இந்தளவு அனுபவம் செய்விப்பதாகும். நல்லது.

இந்த புது வருடத்தில் அனைவரும் புதிய ஊக்கம், உற்சாகம் நிரம்பிய எண்ணத்தை வைத்தீர்கள் தான் இல்லையா? அதில் திடத் தன்மை இருக்கிறது இல்லையா? ஒருவேளை ஏதாவது ஒரு எண்ணத்தை தினசரி நினைவு செய்து கொண்டேயிருந்தீர்கள் என்றால், எப்படி ஒரு பொருளை உறுதியாக்கிக் கொண்டேயிருந்தீர்கள் என்றால் உறுதியாகி விடுகிறது. எனவே என்ன எண்ணம் வைத்தீர்களோ, அதை விட்டு விடாதீர்கள், தினசரி அந்த எண்ணத்தை மீண்டும் நினைவு செய்து, உறுதி ஆக்கினீர்கள் என்றால், பிறகு இதே திடத்தன்மை எப்பொழுதும் காரியத்தில் வரும். எப்பொழுதாவது என்ன எண்ணம் வைத்தேன் என யோசிக்கிறீர்கள், அல்லது நடைமுறையில் எண்ணமே மறந்து விட்டது என்றால், என்ன செய்தாலும் அதில் பலஹீனம் வருகிறது. தினசரி நினைவு செய்யுங்கள், தினசரி தந்தையின் எதிரில் மீண்டும் நினைவு செய்தீர்கள் என்றால், உறுதியாகிக் கொண்டே யிருக்கும், மேலும் வெற்றியும் சுலபமாகக் கிடைக்கும். அனைவரும் எந்த அன்புடன் மதுபன்னில் ஒவ்வொரு ஆத்மாவையும் பார்க்கிறார்கள் என்பதை தந்தை தெரிந்திருக்கிறார். மதுபன் நிவாசி ஆத்மாக்களின் விசேஷங் களுக்கு குறைந்த மகத்துவம் கிடையாது. ஒருவேளை ஏதோ ஒரு சிறிய விசேஷ காரியமும் செய்கிறீர்கள் என்றால், ஒரு ஸ்தானத்தில் அந்தக் காரியம் நடக்கும், மேலும் அனைவருக்கும் பிரேரணை கிடைக்கிறது, பிறகு அந்த அனைத்து விசேஷத்தின் லாபங்களின் பங்கு அந்த ஆத்மாவிற்கு கிடைத்து விடுகிறது. அந்தமாதிரி மதுபன்னைச் சேர்ந்தவர்கள், எந்தவொரு சிரேஷ்ட எண்ணம் வைக்கிறார்கள், திட்டம் போடுகிறார்கள், காரியம் செய்கிறார்கள் என்றால், அதை அனைவருக்கும் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற உற்சாகம் எழுகிறது. அந்த மாதிரி அனைவரின் உற்சாகத்தை அதிகபடுத்தும் ஆத்மாவிற்கு எவ்வளவு இலாபம் இருக்கும். உங்கள் அனைவருக்கும் இந்தளவு மகத்துவம் இருக்கிறது. ஒரு மூலையில் செய்கிறீர்கள், மேலும் அனைத்து இடங்களிலும் பரவுகிறது. நல்லது.

**இந்த வருடத்திற்கான புதிய திட்டம்:** இந்த வருடம் அந்தமாதிரி ஏதாவது குரூப்பை உருவாக்குங்கள், அந்த குரூப்பின் விசேஷங்களை நடைமுறையில் பார்த்து, மற்றவர்களுக்கும் பிரேரணை கிடைக்கட்டும், மேலும் வைப்ரேஷன் பரவட்டும். எப்படி அரசாங்கமும் நீங்கள் ஏதாவது

ஸ்தானத்தை எடுத்து, ஒரு கிராமத்தை தூக்கி விட்டு, அந்தமாதிரி உதாரணத்தைக் காண்பியுங்கள். அதன் மூலம் நீங்கள் நடைமுறையில் செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று புரிந்து கொண்டார்கள் என்றால், அதன் பிரபாவம் பரவும் என்று கூறுகிறது. அந்தமாதிரியே ஏதாவது ஒரு குரூப் உருவாகட்டும், அதன் மூலம் மற்றவர்களுக்கும் பிரேரணை கிடைக்கட்டும். யாராவது குணம் என்றால் என்ன? சக்தி என்றால் என்ன, ஞானம் என்றால் என்ன, நினைவு என்றால் என்ன என்று பார்க்க விரும்பினார் என்றால், அவருக்கு நடைமுறையில் அதன் சொரூபம் தென்படட்டும். அந்தமாதிரி ஒருவேளை சின்ன சின்ன குரூப் நடைமுறையில் எடுத்துகாட்டாக ஆகி விட்டார்கள் என்றால், அந்த சிரேஷ்ட வைப்ரேஷன், வாயுமண்டலத்தில் இயல்பாகவே பரவும். இன்றைய நாட்களில் அனைவரும் கேட்க விரும்புவது இல்லை, நடைமுறையில் பார்க்க விரும்புகிறார்கள், நடைமுறையின் பிரபாவம் மிக விரைவாக சென்றடையும். எனவே அந்தமாதிரி ஏதாவது தீவிர ஊக்கம், உற்சாகத்தின் நடைமுறை ரூபம் இருக்கட்டும், குரூப் இருக்கட்டும், அதை அனைவரும் சுலபமாகப் பார்த்து, பிரேரணை எடுத்துக் கொள்ளட்டும், மேலும் நாலா பக்கங்களிலும் இந்த பிரேரணை சென்ற டையட்டும். அப்படி ஒன்றிலிருந்து இரண்டு, இரண்டிலிருந்து மூன்று என்று பரவிக் கொண்டேயிருக்கும். எனவே அந்த மாதிரி ஏதாவது விசேஷத்தை செய்து காண்பியுங்கள். எப்படி விசேஷமாக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களைப் பற்றி இவர் நிரூபணம் என்று அனைவரும் நினைக்கிறார்கள், மேலும் பிரேரணை கிடைக்கிறது, அந்தமாதிரி இன்னும் நிரூபணத்தை உருவாக்குங்கள். அவரைப் பார்த்து ஆமாம், நடைமுறையில் ஞானத்தின் சொரூபம், அனுபவம் ஆகிறது என்று அனைவரும் கூறவேண்டும். இந்த நல்ல சிரேஷ்ட காரியம், சிரேஷ்ட எண்ணத்தின் உள்ளுணர்வு மூலம், வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். அந்தமாதிரி ஏதாவது செய்து காண்பியுங்கள். இன்றைய நாட்களில் மனதின் எண்ணத்தின் பிரபாவம் எந்தளவு ஏற்படுகிறதோ, அந்தளவு வாய் மொழியின் பிரபாவம் ஏற்படுவதில்லை. வாய் மொழியின் ஒரு வார்த்தை பேசுங்கள். வைப்ரேஷனில் 100 வார்த்தைகளை பரப்புங்கள். அப்பொழுது தான் பாதிப்பு ஏற்படுகிறது. வார்த்தைகளோ பொதுவானதாக ஆகி விட்டது, ஆனால் வார்த்தைகளுடன் சக்திசாலியான வைப்ரேஷன் என்ன இருக்கிறதோ, அது வேறு எங்கும் இருப்பதில்லை, அது இங்கு மட்டும் தான் இருக்கிறது. இந்த விசேஷத்தை செய்து

காண்பியுங்கள். மற்றப்படி மாநாடு நடத்துவீர்கள், இளைஞர்களுக்கான நிகழ்ச்சி செய்வீர்கள், இதுவோ நடந்து கொண்டேயிருக்கும். மேலும் நடக்கவும் நடக்கும். இதன் மூலம் ஊக்கம் உற்சாகம் அதிகரிக்கிறது ஆனால் இப்பொழுது ஆத்மீக சக்தியின் அவசியம் இருக்கிறது. இது தான் உள்ளுணர்வு மூலம் வைப்ரேஷனைப் பரப்புவது. அது சக்திசாலியானது. நல்லது.

**வரதானம்: சகித்துக் கொள்ளும் சக்தியின் தாரணை மூலமாக சத்தியத்தைக் கடைப்பிடிக்கக் கூடிய எப்பொழுதும் வெற்றியடைபவர் ஆகுக!**

இன்றைய நாட்களில் உண்மையாக இருப்பவர்கள், வாழ்வதே கடினம், பொய் பேச வேண்டியிருக்கிறது என்று உலகத்தினர் கூறுகிறார்கள். சில பிராமண ஆத்மாக்களும் சிற்சில நேரங்களில் மிகவும் சாதுர்யமாக இப்படி அப்படி நடந்து கொள்ளத் தான் வேண்டியதிருக்கிறது என்று நினைக்கிறார்கள் ஆனால் பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள், சத்தியம் மற்றும் தூய்மைக்காக எவ்வளவு எதிரிப்பு வந்தது, இருந்தும் பயப்பட வில்லை. சத்தியமாக இருப்பதற்காக சகித்துக் கொள்ளும் சக்தி அவசியமாக இருக்கிறது,. சகித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது, தலைவணங்க வேண்டியதாக இருக்கிறது, தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது, ஆனால் அது தோல்வி இல்லை, எப்பொழுதுக்குமான வெற்றி.

**சுலோகன்: மகிழ்ச்சியாக இருப்பது மேலும் மகிழ்ச்சிப்படுத்துவது -இது தான் ஆசீர்வாதங்கள் கொடுப்பது மற்றும் ஆசீர்வாதம் பெறுவது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 14.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நற்சிந்தனையாளர் ஆவதற்கான ஆதாரம் சுய சிந்தனை மற்றும் நற்சிந்தனை!

இன்று பாப்தாதா நாலாபுறங்களின் விசேஷ குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எந்தவிதமான விசேஷ குழந்தைகள், யார் எப்பொழுதும் சுய சிந்தனை மற்றும் நற்சிந்தனையில் இருக்கும் காரணத்தினால் அனைவரின் நற்சிந்தனையாளராக இருக்கிறார். யார் எப்பொழுதுமே நல்ல சிந்தனையிலேயே இருக்கிறாரோ, அவர் இயல்பாகவே நற்சிந்தனையாளர் ஆகி விடுகிறார். நற்சிந்தனையின் ஆதாரம் நற்சிந்தனையாளர் ஆவதற்கானது. முதல் அடி சுய சிந்தனை. சுயசிந்தனை என்றால், பாப்தாதா நான் யார் என்ற கேள்விக்கு பதில் கூறியிருக்கிறார். அதை எப்பொழுதும் நினைவு சொரூபத்தில் வைப்பது. எப்படி தந்தை மற்றும் தாதா (பிரம்மாபாபா) என்னவாக இருக்கிறார்கள், எப்படி இருக்கிறார்கள், அப்படி அவர்களை தெரிந்து கொள்வது தான், யதார்த்தமாகத் தெரிந்து கொள்ளவது, மேலும் இருவரையும் தெரிந்து கொள்வது தான் தெரிந்து கொள்வது. அதேபோல் தன்னையும் என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன், அதாவது எது என்னுடைய ஆதி, அனாதி சிரேஷ்ட சொரூபமாக இருக்கிறதோ, அந்த ரூபத்தில் தன்னைத் தானே தெரிந்து கொள்வது, மேலும் அதே சுயசிந்தனையில் இருப்பது, எனபதைத் தான் சுயசிந்தனை என்று கூறுவது. நான் பலஹீனமானவன், முயற்சி செய்பவன், ஆனால் வெற்றி சொரூபமாக இல்லை, மாயாவை வென்றவனாக இல்லை என்று யோசிப்பது சுயசிந்தனை இல்லை, ஏனென்றால் சங்கமயுகத்தின் முயற்சி பிராமண ஆத்மா என்றால், சக்திசாலியான ஆத்மா. இந்த பலஹீனம் மற்றும் முயற்சி செய்யாமை அல்லது மந்தமாக முயற்சி செய்வது ஆகியவை தேக அபிமானத்தின் படைப்பு. சுயம் என்றால் ஆத்ம அபிமானி, இந்த நிலையில் பலஹீனத்தின் விஷயங்கள் வரமுடியாது. அந்தமாதிரி இந்த தேக அபிமானத்தின்

படைப்பை சிந்தனை செய்வதும் சுய சிந்தனை இல்லை. சுய சிந்தனை என்றால், எப்படி தந்தையோ, அப்படி நான் சிரேஷ்ட ஆத்மா. அந்தமாதிரி சுய சிந்தனை செய்பவர், நற்சிந்தனை செய்ய முடியும். நற்சிந்தனை என்றால், ஞான இரத்தினங்களை சிந்தனை செய்வது. படைப்பவர் மற்றும் படைப்பின் ஆழமான இரமணீகரமான இரகசியங்களின் சிந்தனை செய்வது. ஒன்று அப்படியே சொல்வது மட்டும், இன்னொன்று ஞானக் கடலின் அலைகளில் நீந்துவது, அதாவது ஞான பொக்கிஷத்தின் எஜமானத் தன்மையின் போதையில் இருந்து எப்பொழுதும் ஞான இரத்தினங்களுடன் விளையாடிக் கொண்டிருப்பது. ஞானத்தின் ஒவ்வொரு விலைமதிக்க முடியாத வார்த்தைகளை அனுபவத்தில் கொண்டு வருவது என்றால், தன்னை விலைமதிக்க முடியாத இரத்தினங்களால் எப்பொழுதும் மகான் ஆக்குவது. அந்தமாதிரி ஞானத்தை சிந்தனை செய்பவர் தான், நற்சிந்தனை செய்பவர். அந்த மாதிரி நற்சிந்தனை செய்பவர், இயல்பாகவே வீணான சிந்தனை மற்றும் மற்ற சிந்தனைகளிலிருந்து, விலகியிருக்கிறார். சுய சிந்தனை, நற்சிந்தனை செய்யக்கூடிய ஆத்மா ஒவ்வொரு விநாடியும் தன்னுடைய நற்சிந்தனையில் அந்தளவு பிஸியாக இருக்கிறார், அவருக்கு வேறு சிந்தனை செய்வதற்காக ஒரு வினாடி மற்றும் சுவாசத்திற்கும் நேரம் இருப்பதில்லை. எனவே எப்பொழுதுமே மற்ற சிந்தனை மற்றும் வீணான சிந்தனையிலிருந்து சுலபமாகவே பாதுகாப்பாக இருக்கிறார். புத்தியிலும் இடம் இல்லை, நேரமுமில்லை. நேரமும் நற்சிந்தனையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது, புத்தி எப்பொழுதும் ஞான இரத்தினங்களால் அதாவது நல்ல எண்ணங்களினால் நிரம்பியிருக்கிறது. மற்ற எந்த எண்ணமும் வருவதற்கு வாய்பே இல்லை. இவரைத் தான் நற்சிந்தனை செய்பவர் என்று கூறுவது. ஒவ்வொரு ஞானத்தின் வார்த்தையின் இரகசியத்தில் செல்பவர், இசையின் மகிழ்ச்சியில் மட்டும் இருப்பவர் இல்லை. இசை என்றால் சொன்ன வார்த்தைகளின் இரகசியத்தில் செல்பவர். எப்படி ஸ்தூலமான இசையைக் கேட்பதற்கும் மிகவும் விருப்பம் இருக்கிறது. அதேபோல் ஞான முரளி இசையும் மிக நன்றாக இருக்கிறது ஆனால் இசையின் கூடவே இரகசியத்தைப் புரிந்து கொள்பவர், ஞான பொக்கிஷத்தின் அதிபதியாகி சிந்தனை செய்வதில் மூழ்கியிருக்கிறார். மூழ்கிய நிலையில் இருப்பவரின் எதிரில் எந்த தடையும் வரமுடியாது. அந்தமாதிரி சுய சிந்தனை செய்பவர் இயல்பாகவே அனைவரின் தொடர்பில் நற்சிந்தனையாளர் ஆகி விடுகிறார்.

சியசிந்தனை பிறகு நற்சிந்தனை, அந்தமாதிரியான ஆத்மா நற்சிந்தனையாளர் ஆகி விடுகிறார், ஏனென்றால் யார் இரவு பகலாக நற்சிந்தனையில் இருக்கிறாரோ, அவர் மற்றவர்களுக்காக ஒருபொழுதும் தீயதை யோசிப்பதுமில்லை, பார்ப்பதுமில்லை. அவருடைய இயற்கையான சம்ஸ்காரம் மற்றும் சுபாவம் நல்லதாக இருக்கும் காரணத்தினால் உள்ளுணர்வு, பார்வை அனைத்திலும் நல்லதையே பார்ப்பது மற்றும் நல்லதையே நினைப்பது என்ற பழக்கம் இயல்பாகவே உருவாகி விடுகிறது. எனவே அவர் ஒவ்வொருவருக்காகவும் நற்சிந்தனையாளராக இருக்கிறார். எந்தவொரு ஆத்மாவின் பலஹீனமான சம்ஸ்காரத்தையும் பார்த்து, அந்த ஆத்மாவிற்காக இவர் அந்தமாதிரியானவர் என்று தீயதை மற்றும் வீணானதை யோசிக்க மாட்டார் ஆனால் அந்தமாதிரி பலஹீனமான ஆத்மாவிற்கு எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தின் இறக்கைக் கொடுத்து சக்திசாலியாக ஆக்கி, உயரே பறக்க வைப்பார். எப்பொழுதும் அந்த ஆத்மாவிற்காக சுப பாவனை, சுப விருப்பங்கள் மூலமாக சகயோகியாக ஆவார். நற்சிந்தனையாளர் என்றால் நம்பிக்கை இழந்தவரையும், நம்பிக்கை உள்ளவராக ஆக்குபவர். நற்சிந்தனையின் பொக்கிஷத்திலிருந்து பலஹீனமான வரையும் நிரப்பி முன்னேற வைப்பார். இவரிடமோ, ஞானமே இல்லையே என்று நினைக்க மாட்டார். இவர் ஞானத்திற்குப் பாத்திரமானவர் இல்லை, இவர் ஞானத்தில் செல்ல முடியாது என்று நினைக்கமாட்டார். நற்சிந்தனையாளர் பாப்தாதா மூலமாக பெற்றிருக்கும் ஆதரவு என்ற கால் கொடுத்து, முடமானவரையும் நடக்க வைப்பதற்கு பொறுப்பாளர் ஆகி விடுவார். நற்சிந்தனையாளர் ஆத்மா தன்னுடைய நற்சிந்தனை நிலை மூலமாக மனமுடைந்து போன ஆத்மாவையும் கூட குஷிப் படுத்தும் இனிப்பு மூலமாக அவரை ஆரோக்கியமானவராக ஆக்கி விடுவார். நீங்களும் தில்குஷ் மிட்டாய் (டோலி) அருந்துகிறீர்கள் இல்லையா? அப்படியானால் மற்றவர் களுக்கு கொடுக்கவும் தெரியும் இல்லையா? நற்சிந்தனையாளர் ஆத்மா யாருடைய பலஹீனத்தைத் தெரிந்து கொண்டும், அந்த ஆத்மாவின் பலஹீனத்தை மறந்து தன்னுடைய விசேஷ சக்தியின் பலத்தைக் கொடுத்து, அவரையும் சக்திசாலி ஆக்கி விடுவார். யார் மீதும் வெறுப்பு நிறைந்த பார்வை இருக்காது. எப்பொழுதும் கீழே விழுந்த ஆத்மாவை மேலே தூக்கி விட வேண்டும் என்ற பார்வை இருக்கும். தான் மட்டும் நற்சிந்தனையில் இருப்பது மற்றும் சக்திசாலியான ஆத்மா ஆவது, இதுவும் முதல் நிலை

இல்லை. இதையும் நற்சிந்தனையாளர் என்று கூறமாட்டோம். நற்சிந்தனையாளர் என்றால் தன்னுடைய பொக்கிஷங்களை எண்ணம் மூலமாக, வாய் மொழி மூலமாக தன்னுடைய ஆன்மீக உறவு தொடர்பு மூலமாக மற்ற ஆத்மாக்களுக்காக சேவையில் ஈடுபடுத்துவது. நற்சிந்தனையாளர் ஆத்மாக்கள் நம்பர் ஒன் சேவாதாரிகள், உண்மையான சேவாதாரிகள். நீங்கள் அந்தமாதிரி நிற்சிந்தனையாளர் ஆகியிருக்கிறீர்களா? எப்பொழுதும் நல்ல உள்ளுணர்வு, பார்வை இருக்க வேண்டும். பிறகு உலகமும் சிரேஷ்ட பிராமணர்களுக்கு நல்லதாகத் தென்படும். பொதுவாகவே சாதாரண ரூபத்தில் நல்லதை பேசு என்று கூறுவார்கள். பிராமண ஆத்மாக்களோ நல்ல ஜென்மம் எடுத்தவர்கள். நல்ல நேரத்தில் பிறந்திருக்கிறீர்கள். பிராமணர்களின் ஜென்மத்தின் நேரம் அதாவது வேளை நல்லது தான் இல்லையா? பாக்கியத்தின் திசையும் நல்லது. சம்மந்தமும் நல்லது, எனவே பிராமண ஆத்மாக்களுக்கு நடைமுறையில் மட்டுமின்றி கனவில் கூட தீயதின் பெயர் அடையாளம் கூட வராது. நீங்கள் அந்தமாதிரியான நற்சிந்தனையாளர் ஆத்மாக்கள் இல்லையா. நீங்கள் விசேஷமாக நினைவு தினத்திற்காக வந்திருக்கிறீர்கள் -நினைவு தினம் என்றால் சக்தி நிறைந்த தினம். அப்படி நீங்கள் விசேஷமாக சக்திசாலியான ஆத்மாக்கள் இல்லையா. பாப்தாதாவும் எப்பொழுதும் சக்திசாலியான ஆத்மாக்கள் சக்தி தினத்தைக் கொண்டாடுவதற்காக வருக! வருக என்று கூறுகிறார். சக்திசாலியான பாப்தாதா சக்திசாலியான குழந்தைகளை எப்பொழுதும் வரவேற்கிறார். புரிந்ததா? நல்லது.

எப்பொழுதும் சுய சிந்தனையின் ஆன்மீக போதையில் இருக்கும், நற்சிந்தனையின் பொக்கிஷத்தில் நிரம்பியிருக்கக் கூடிய நற்சிந்தனையாளர் ஆகி, அனைத்து ஆத்மாக்களையும் பறக்க வைக்கும், எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக வள்ளல் மற்றும் வரமளிக்கும் வள்ளல் ஆகி, அனைவரையும் சக்திசாலியாக ஆக்கும், சக்திசாலியான சமமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: மாதர்களின் குரூப்:** மாதர்கள் நீங்கள் எப்பொழுதும் தன்னுடைய சிரேஷ்ட பாக்கியத்தை பார்த்து மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் இல்லையா? காலடியில் பணிவிடை செய்பவரிலிருந்து தலையின் கீரிடம் ஆகி விட்டீர்கள். இந்தக் குஷி எப்பொழுதும்

இருக்கிறதா? எப்பொழுதாவது குஷியின் பொக்கிஷம் திருட்டு போய்விடுவதில்லையே? மாயா திருடுவதில் மிகவும் திறமை வாய்ந்தது. ஒருவேளை எப்பொழுதும் வீரம் நிறைந்தவராக புத்திசாலியாக இருந்தீர்கள் என்றால், மாயா ஒன்றும் செய்ய முடியாது. இன்னும் அது உங்களின் தாசியாகி விடும். எதிரியிலிருந்து சேவாதாரி ஆகி விடும். அந்தமாதிரி மாயாவை வென்றவராக நீங்கள் ஆகியிருக்கிறீர்களா? தந்தையின் நினைவு இருக்கிறது என்றால், எப்பொழுதும் அவருடன் இருப்பவர்கள். ஆன்மீக பிரபாவம் ஏற்பட்டுவிட்டது. தந்தையின் தொடர்பு இல்லையென்றால், ஆன்மீக பிரபாவம் இல்லை. அப்படி நீங்கள் அனைவரும் தந்தையின் தொடர்பு என்ற வண்ணத்தில் வண்ணமயமாக்கபட்டு பற்றுதலை வென்றவராக ஆகியிருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் மோகம் அதாவது பற்றுதல் இருக்கிறதா? தன்னுடைய குழந்தைகள் மேல் இருக்காது, ஆனால் பேரன் பேத்திகள் மீது இருக்கும், குழந்தைகளின் சேவை முடிந்தது. மற்றவர்களின் சேவை தொடங்கியது. குறைவ தில்லை. ஒன்றன் பின் ஒன்றாக வரிசை ஏற்பட்டுவிடும். இந்த அனைத்து பந்தனத்தில் இருந்தும், விடுபட்டு இருக்கிறீர்களா? மாதர்களுக்கு எவ்வளவு சிரேஷ்ட பிராப்தி ஆகி விட்டது. யார் முற்றிலும் கை காலியானவர் ஆகியிருந்தாரோ, அவர் இப்பொழுது அனைத்தும் நிறைந்தவர் ஆகி விட்டார், அனைத்தும் இழந்து விட்டார், இப்பொழுதும் மீண்டும் தந்தை மூலமாக அனைத்து பொக்கிஷங்களையும் பிராப்தி செய்து விட்டீர்கள் என்றால், மாதர்கள் என்னவாக இருந்தவர்கள், என்னவாக ஆகி விட்டீர்கள்? நான்கு சுவர்களுக்குள் இருந்தவர்கள், உலகத்தின் அதிபதி ஆகி விட்டீர்கள். தந்தை என்னை அவருடைய குழந்தையாக ஆக்கி விட்டார் என்றால், எனக்கு எவ்வளவு பாக்கியம் என்ற இந்த போதை இருக்கிறது தான் இல்லையா? பகவான் வந்து, தன்னுடைய குழந்தையாக ஆக்குவது மாதிரி சிரேஷ்ட பாக்கியம் ஒருபொழுதும் இருக்க முடியாது. எனவே தன்னுடைய பாக்கியத்தைப் பார்த்து எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? ஒருபொழுதும் இந்த பொக்கிஷத்தை மாயா திருடி விடக் கூடாது.

அனைவரும் புண்ணிய ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்களா? அனைத்தையும் விட மிகப் பெரிய புண்ணியம் மற்றவர்களுக்கு சக்தி கொடுப்பது. எனவே எப்பொழுதும் அனைத்து ஆத்மாக்களுக்காக

புண்ணிய ஆத்மா அதாவது தனக்கு கிடைத்திருக்கும் பொக்கிஷங்களின் பெரும் வள்ளல் ஆகுங்கள். அந்தமாதிரி தானம் செய்பவர்கள், எந்தளவு மற்றவர்களுக்கு கொடுக்கிறார்களோ, அந்தளவு பலமடங்கு அதிகரிக்கிறது. அப்படி இந்த கொடுப்பது என்பது பெறுவதாகி விடுகிறது. அந்தமாதிரி ஊக்கம் இருக்கிறதா? இந்த ஊக்கத்தின் நடைமுறை சொரூபம் சேவையில் எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள். எந்தளவு உடல், மனம், பணம், செல்வத்தை சேவையில் ஈடுபடுத்துகிறீர்களோ, அந்தளவு தற்சமயமும் பெரிய வள்ளல் புண்ணிய ஆத்மா ஆகிறீர்கள். மேலும் எதிர்காலத்திலும் சதா காலத்திற்காக சேமிப்பு செய்கிறீர்கள். தன்னுடைய அனைத்தையும் சேமிப்பு செய்வதற்கான வாய்ப்பு கிடைப்பதும் நாடகத்தில் பாக்கியம் இருக்கிறது. அப்படி நீங்கள் இந்த பொன்னான வாய்ப்பை எடுத்துக் கொள்பவர்கள் தான் இல்லையா? யோசித்து செய்தீர்கள் என்றால், வெள்ளி வாய்ப்பு! பரந்த மனமுடையராகி செய்தீர்கள் என்றால், பொன்னான வாய்ப்பு! எனவே அனைவரும் நம்பர் ஒன் வாய்ப்பை எடுப்பவர்களாக ஆகுங்கள்.

**இரட்டை வெளிநாட்டு குழந்தைகளுடன் சந்திப்பு:** பாப்தாதா தினசரி அன்பான குழந்தைகளுக்கு அன்பிற்கான பிரதிபலனைக் கொடுக்கிறார், தந்தைக்கு குழந்தைகள் மீது அந்தளவு அன்பு இருக்கிறது. குழந்தைகள் எண்ணம் தான் வைக்கிறார்கள், வார்த்தைகள் வரையிலும் கூட வரவில்லை, மேலும் தந்தை அதற்கான பிரதிபலனை முன்பாகவே கொடுத்து விடுகிறார். சங்கமயுகத்தில் முழுக் கல்பத்திற்கான அன்பு நினைவுகளைக் கொடுத்து விடுகிறார். அந்தளவு அன்பு மற்றும் நினைவைக் கொடுக்கிறார், அது பல ஜென்மங்களுக்கு அன்பு நினைவினால் பை நிரம்பியதாக இருக்கும். பாப்தாதா அன்பான குழந்தைகளுக்கு எப்பொழுதும் சகயோகம் கொடுத்து, முன்னேற வைத்துக் கொண்டேயிருக்கிறார். தந்தை என்ன அன்பு கொடுத்திருக்கிறாரோ, அந்த அன்பின் சொரூபம் ஆகி யாரையாவது அன்பானவர்களாக ஆக்கினீர்கள் என்றால், அவர் தந்தையின் குழந்தை ஆகி விடுவார். அன்பானவர் தான் அனைவரையும் ஆகர்ஷணம் செய்பவர். அனைத்து குழந்தைகளின் அன்பு தந்தையிடம் வந்து சேர்ந்து கொண்டேயிருக்கிறது. நல்லது.

# 1985 அவ்யக்த முரளி

**மொரீசியஸ் பார்ட்டிகளுடன் சந்திப்பு:** அனைவரும் அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் தான் இல்லையா? எவ்வளவு பாக்கியத்தை பிராப்தி செய்து விட்டீர்கள். இது மாதிரியான பெரிய பாக்கியம், யாருக்கும் கிடைக்க முடியாது. ஏனென்றால், பாக்கியத்தை வழங்கும் தந்தையே உங்களுடையவர் ஆகி விட்டார். நீங்கள் அவருடைய குழந்தை ஆகி விட்டீர்கள், எப்பொழுது பாக்கியத்தை வழங்குபவர் தன்னுடையவர் ஆகி விட்டார் என்றால், இதை விட சிரேஷ்ட பாக்கியம் என்ன இருக்கும். நீங்கள் அந்தமாதிரி சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள். மேலும் நீங்கள் அனைவரையும் பாக்கியம் நிறைந்தவர்களாக ஆக்குபவர்கள். ஏனென்றால், யாருக்கு ஏதாவது நல்ல பொருள் கிடைக்கிறது என்றால், அதை மற்றவர்களுக்கு கொடுக்காமல் இருக்க முடியாது. எப்படி தந்தையின் நினைவு இல்லாமல் இருக்க முடியாது, அதே போல் சேவை இல்லாமலும் இருக்க முடியாது. ஒவ்வொரு குழந்தையும் அநேகரின் தீபத்தை ஏற்றி, தீப ஒளியாக ஆக்குபவர்கள். தீபாவளி இராஜ திலகத்தின் அடையாளம், அப்படி தீபங்களின் மாலை செய்பவர்களுக்கு இராஜ திலகம் கிடைத்து விடுகிறது, சேவை செய்வது என்றால், இராஜ திலகம் இட்டவர் ஆவது. சேவையின் ஊக்க உற்சாகத்தில் இருப்பவர், மற்றவர்களுக்கும் ஊக்க உற்சாகத்தின் இறக்கை கொடுக்க முடியும்.

**கேள்வி: எந்த முக்கிய ஆதாரத்தில் சித்தியை (வெற்றியை) சகஜமாக பிராப்தி செய்ய முடியும்?**

பதில்: தன்னை பணிவு நிறைந்தவராக, மேலும் ஒவ்வொரு விஷயத்திலும் தன்னைத் தானே குணத்தை கிரஹிப்பவராக ஆக்கி விட்டீர்கள் என்றால், சுலபமாக வெற்றியை அடைந்து விடுவீர்கள். யார் தன்னை நல்லவராக நிரூபிப்பதிலேயே, முனைந்திருப்பாரோ, அவர் பிடிவாதம் செய்கிறாரோ, அவர் ஒருபொழுதும் பிரசித்தி ஆகமுடியாது. பிடிவாதம் செய்பவர் ஒருபொழுதும் வெற்றியை அடைய முடியாது. அவர் பிரசித்தி ஆவதற்கு பதிலாக இன்னும் தூரமாகி விடுவார்.

**கேள்வி: உலகத்தின் மற்றும் ஈஸ்வரிய பரிவாரத்தின் பாராட்டுகளுக்கு உரியவராக எப்பொழுது ஆவீர்கள்?**

பதில்: எப்பொழுது தனக்காகவும், மேலும் மற்றவர்களுக்காகவும் அனைத்து கேள்விகளையும் முடித்து விடுகிறதோ, அப்பொழுது தான்.

எப்படி தன்னை மற்றவருடன் குறைந்தவர் என்று நினைப்பதில்லை, நினைப்பதில் தன்னை அதிகாரி என்று நினைக்கிறீர்கள், அதே போல் புரிந்து கொள்வது மற்றும் செய்வது என்ற இரண்டிலும் உரிமையுள்ளவர் ஆகுங்கள். அப்பொழுது தான் உலகின் மற்றும் ஈஸ்வரிய பரிவாரத்தின் பாராட்டுகளுக்கு உரியவர் ஆவீர்கள். எந்தவொரு விஷயத்திலும் யாசிப்பவராக ஆகாதீர்கள், வள்ளலாக ஆகுங்கள். ஓம்சாந்தி

**வரதானம்: ஸ்ரீமத் பிரகாரம் சேவையில் திருப்தியின் விசேஷத்தை அனுபவம் செய்யும் வெற்றி அடைபவர் ஆகுக!**

எந்தவொரு சேவையும் செய்யுங்கள், ஏதாவது புது மாணவர்கள் வந்தாலும், வராவிட்டாலும், ஆனால் நீங்கள் உங்கள் மேல் திருப்தியாக இருங்கள். ஒருவேளை நான் திருப்தியாக இருக்கிறேன் என்றால், இந்த செய்தி அவசியம் வேலை செய்யும் என்ற நிச்சயத்தை வையுங்கள். இதில் சோர்வு அடையாதீர்கள். மாணவர்கள் அதிகரிக்க வில்லை என்றால், ஒன்றும் பாதகம் இல்லை. உங்களுடைய கணக்கிலோ சேமிப்பு ஆகி விட்டது, மேலும் அவர்களுக்கு கிடைத்து விட்டது. ஒருவேளை நீங்கள் திருப்தியாக இருந்தீர்கள் என்றால், செலவு பயனுள்ளதாக ஆனது. ஸ்ரீமத் பிரகாரம் காரியம் செய்தீர்கள் என்றால், ஸ்ரீமத்தை நம்பி நடப்பது கூட வெற்றியடைபவர் ஆவது.

**சுலோகன்: சக்தியற்ற ஆத்மாக்களுக்கு சக்தி கொடுத்தீர்கள் என்றால், அவர்களுடைய ஆசீர்வாதம் கிடைக்கும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 16.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாக்கியம் நிறைந்த யுகத்தில் பகவான் மூலமாக ஆஸ்தி மற்றும் வரதானங்களின் பிராப்தி!

இன்று படைப்பு என்ற மரத்தின் விதை ரூபமான தந்தை மரத்தின் அஸ்திவாரமாக இருக்கும், தன்னுடைய குழந்தைகளை பார்த்து கொண்டிருக்கிறார். அந்த அஸ்திவாரம் மூலமாக முழு மரத்தின் வளர்ச்சி ஏற்படுகிறது. வளரச் செய்யும் சார சொரூபமாக இருக்கும் ஆத்மாக்களை பார்த்து கொண்டிருக்கிறோம். அதாவது மரத்தின் ஆதாரமாக இருக்கும் ஆத்மாக்களை பார்த்து கொண்டிருக்கிறோம். நேரடியாக விதை ரூபம் மூலமாக பிராப்தி செய்திருக்கும், அனைத்து சக்திகளை தாரணை செய்யக் கூடிய விசேஷ ஆத்மாக்களை பார்த்து கொண்டிருக் கிறோம், முழு உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களிலிருந்து மிக உயர்ந்த ஆத்மாக்களுக்குத் தான் இந்த விசேஷ பங்கு கிடைத்திருக்கிறது.. எவ்வளவு குறைந்த ஆத்மாக்கள். அவர்களுக்கு விதையுடன் இருக்கும் சம்மந்தம் மூலமாக சிரேஷ்ட பிராப்தியின் பங்கு கிடைத்திருக்கிறது.

அந்த மாதிரி சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த குழந்தைகளின் பாக்கியத்தை, இன்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். குழந்தைகளுக்கு பகவான் மற்றும் பாக்கியம் என்ற இந்த இரண்டு வார்த்தைகள் மட்டும் நினைவு இருக்கட்டும். அவர்கள் செய்யும் காரியத்தின் கணக்குப் படி பாக்கியம் அனைவருக்கும் கிடைக்கிறது. துவாபர் யுகத்திலிருந்து, ஆத்மாக்கள் நீங்களும் காரியம் மற்றும் பாக்கியம் என்ற கணக்கு வழக்கில் வர வேண்டியதிருக்கிறது, ஆனால் தற்சமயம் பாக்கியம் நிறைந்த யுகத்தில், பகவான் பாக்கியம் கொடுக்கிறார். பாக்கியத்தின் சிரேஷ்ட ரேகையை போடுவதற்கான விதி -சிரேஷ்ட காரியம் (கர்மம்) என்ற எழுதுகோலை குழந்தைகளாகிய உங்களுக்கு கொடுத்து விடுகிறார். அதன் மூலம் எவ்வளவு சிரேஷ்ட, தெளிவான, பல

# 1985 அவ்யக்த முரளி

ஜென்மங்களின் பாக்கியத்தின் ரேகையை போட விரும்புகிறீர்களோ, அந்தளவு போட முடியும். வேறு எந்த காலத்திற்கும் இந்த வரதானம் கிடையாது. இந்த நேரத்தின் வரதானம் தான் என்ன விரும்புகிறீர்களோ, எவ்வளவு விரும்புகிறீர்களோ, அந்தளவு அடைய முடியும். ஏன்? பகவான் பாக்கியத்தின் களஞ்சியத்தை குழந்தைகளுக்காக, பரந்த மனதுடன், எந்தக் கடின உழைப்பும் இல்லாமல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். திறந்த களஞ்சியம், அதில் எந்தப் பூட்டும் சாவியும் கிடையாது. மேலும் அந்தளவு நிரம்பியது, குறைவற்றது, யார் எவ்வளவு விரும்புகிறார்கரோ, அந்தளவு எடுத்துக் கொள்ள முடியும். எல்லைக்கு அப்பாற்பட்ட நிரம்பிய களஞ்சியம். பாப்தாதாவும் அனைத்து குழந்தை களுக்கு எந்தளவு எடுத்துக் கொள்ள விரும்புகிறீர்களோ, அந்தளவு எடுத்துக் கொள்ளுங்கள் என்ற இதைத் தான் தினசரி நினைவூட்டிக் கொண்டிருக்கிறார். சக்திக்கு ஏற்றபடி இல்லை, பெரிய மனதுடன் எடுத்துக் கொள்ளுங்கள் ஆனால் திறந்த களஞ்சியத்திலிருந்து, நிரம்பிய களஞ்சியத்திலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்., ஒருவேளை யாராவது அவருடைய சக்திக்கு ஏற்றபடி எடுக்கிறார் என்றால், தந்தை என்ன கூறுவார். தந்தையும் சாட்சியாகி பார்த்துப் பார்த்து எப்படி வெகுளியான குழந்தைகள், சிறிதளவிலேயே குஷியாகி விடுகிறார் என்று புண்சிரிப்பு செய்து கொண்டேயிருக்கிறார். ஏன்? 63-ஜென்மங்களின் பக்த தன்மையின் சம்ஸ்காரம் சிறிதளவிலேயே குஷி அடைந்து விடும் காரணத்தினால், இப்பொழுது கூட நிரம்பிய பிராப்திக்கு பதிலாக, சிறிதளவிலேயே அதிகம் என்று புரிந்து, அதிலேயே திருப்தியாகி விடுகிறார்கள்.

இந்த நேரம் அழியாத தந்தையிடமிருந்து, அனைத்து பிராப்தியை அடைய வேண்டிய நேரம் என்பதை மறந்து விடுகிறார்கள். இருந்தாலும் சக்தி நிறைந்தவர்களாக ஆகுங்கள் என்று குழந்தைகளுக்கு, பாப்தாதா நினைவூட்டு கிறார். இப்பொழுது கூட மிகுந்த கால தாமதம் ஆகவில்லை. காலம் கடந்து வந்திருக்கிறீர்கள், ஆனால் மிகுந்த கால தாமத்திற்கான நேரம் இன்னும் ஆகவில்லை, எனவே இப்பொழுது கூட இரண்டு ரூபத்தினால் தந்தையின் ரூபத்தின் மூலம் ஆஸ்தி, சத்குருவின் ரூபத்தில் வரதானம் கிடைப்பதற்கான நேரம். எனவே வரதானம் மற்றும் ஆஸ்தியின் ரூபத்தில் சகஜமாக சிரேஷ்ட பாக்கியத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். பிறகு பாக்கியத்தை வளங்குபவர், அனைவருக்கும் பாக்கியத்தை கொடுத்தார், ஆனால் நானோ, இந்தளவு தான் எடுத்துக் கொண்டேன்

என்று யோசிக்க வேண்டியதிருக்காது. அனைத்து சக்திகள் நிறைந்த தந்தையின் குழந்தைகள், அவரவரின் சக்திக்கு ஏற்றபடி செய்பவர்களாக இருக்க முடியாது. எந்தளவு விரும்புகிறீர்களோ, அதை தந்தையின் பொக்கிஷத்திலிருந்து, அதிகார ரூபத்தில் எடுத்துக் கொள்ள முடியும் என்பது, இந்த நேரத்திற்கான வரதானம். பலஹீனமானவராக இருந்தாலும் கூட, தந்தையின் உதவியின் மூலமாக, தைரியமுள்ள குழந்தைகளுக்கு உதவி செய்பவர் தந்தை என்ற காரணத்தினால், தற்சமயத்தையும் மேலும் எதிர்காலத்தையும் சிரேஷ்டமாக ஆக்க முடியும். மற்றபடி தந்தையின் சகயோகம், மேலும் பாக்கியத்தின் திறந்த களஞ்சியம் கிடைப்பதற்கு இன்னும் மிகக் குறைந்த காலம் தான் இருக்கிறது.

இப்பொழுது அன்பின் காரணமாக தந்தையின் ரூபத்தில் ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் துணைவனாக இருக்கிறார், ஆனால் இன்னும் கொஞ்சம் காலத்திற்கு பிறகு, துணைவனுக்கு பதிலாக, பார்வை யாளர் ஆகி பார்ப்பதற்கான பாகம் இருக்கும். விரும்பினால் அனைத்து சக்திகள் நிரம்பியவராக ஆகுங்கள், அல்லது விரும்பினால் சக்திகேற்றபடியானவராக ஆகுங்கள் -இருவர்களையும் பார்வையாளராகி பார்ப்போம், எனவே இந்த சிரேஷ்ட நேரத்தில் பாப்தாதா மூலமாக ஆஸ்தி, வரதானம், சகயோகம், துணை என்ற இந்த பாக்கியத்தின் என்ன பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறதோ, அதை பிராப்தி செய்து விடுங்கள். பிராப்தி அடைவதில் ஒருபொழுதும் அலட்சியமானவராக ஆகாதீர்கள். இப்பொழுது இன்னும் இத்தனை வருடங்கள் இருக்கின்றன என்று உலக மாற்றத்தின் காலத்தையும் மற்றும் பிராப்தியின் காலத்தையும் ஒன்றாக கலக்காதீர்கள். இந்த அலட்சியத் தன்மையின் எண்ணத்தினால் யோசித்துக் கொண்டேயிருந்து விடாதீர்கள். எப்பொழுதும் பிராமண வாழ்க்கையில் அனைத்தையும் பிராப்தி செய்வதற்கும், நீண்ட காலத்திற்கான பிராப்தி செய்வதற்கும் இப்பொழுது இல்லையேல், ஒருபொழுதும் இல்லை என்ற வாக்கியத்தை நினைவில் வையுங்கள். எனவே தான் பகவான் மற்றும் பாக்கியம் என்ற இரண்டு வார்த்தைகளை மட்டுமாவது நினைவில் வையுங்கள் என்று கூறினோம். பிறகு சதா காலத்திற்கும் பலமடங்கு பாக்கியம் நிறைந்தவராக இருப்பீர்கள். பாப்தாதா அவர்கள் இருவருக்குள்ளும் குழந்தைகள் ஏன் அந்த மாதிரி பழைய பழக்கத்தின் வசமாகி விடுகிறார்கள் என்று ஆன்மீக உரையாடல்

செய்கிறார்கள். தந்தை உறுதியானவராக ஆக்குகிறார், இருந்தும் குழந்தைகள் பழைய பழக்கத்திற்கு வசமாகி விடுகிறார்கள். தைரியம் என்ற கால்களையும் கொடுக்கிறார், இறக்கைகளையும் கொடுக்கிறார், கூடவே பறக்கவும் வைக்கிறார் இருந்தும் மேலே கீழே, மேலே கீழே ஏன் ஆகுகிறீர்கள்? மகிழ்ச்சி நிறைந்து இருக்கும் யுகத்தில் கூட குழப்பம் அடைந்து கொண்டேயிருக்கிறார்கள், இதைத் தான் பழைய பழக்கத்திலிருந்து விடுபட முடியாதவர்கள் என்று கூறுவது. நீங்கள் உறுதியானவர்களா? அல்லது வசப்பட்டு இருப்பவர்களா? தந்தை டபுல் லைட் ஆக்குகிறார், அனைத்து சுமையையும் அவரே தூக்குவதற்கு துணையையும் கொடுக்கிறார், இருந்தும் சுமையை தூக்கும் பழக்கம் இருப்பதினால், அவர்களே சுமையை தூக்கி விடுகிறார்கள். பிறகு என்ன பாடல் பாடு கிறார்கள் என்று தெரிந்திருக்கிறீர்களா? ஏன், என்ன, எப்படி என்ற ஏ , ஏ என்ற பாடல் பாடுகிறார்கள். இன்னொரு பாடலும் லாம் லாம் என்ற பாடல் பாடுகிறார்கள். இதுவோ பக்தியின் பாடல். அதிகாரத்தன்மையின் பாடல். அடைந்து விட்டேன். அப்படியானால் நீங்கள் என்ன பாடல் பாடுகிறீர்கள். முழு நாளும் நான் என்ன பாடல் பாடிக் கொண்டிருந்தேன் என்று சோதனை செய்யுங்கள். பாப்தாதாவிற்கு குழந்தைகள் மேல் அன்பு இருக்கிறது, எனவே அன்பின் காரணமாக ஒவ்வொரு குழந்தையும் எப்பொழுதும் சம்பன்னமானவராக, சக்திசாலியானவராக இருக்கட்டும் என்பதைத் தான் யோசிக்கிறார். நீங்கள் சதா காலத்திற்கும் பல மடங்கு பாக்கியம் நிறைந்தவர்கள். புரிந்ததா. நல்லது.

எப்பொழுதும் நேரத்திற்கு தகுந்தாற் போல் ஆஸ்தி மற்றும் வரதானத்தின் அதிகாரியாகும், எப்பொழுதும் பாக்கியத்தின் திறந்த களஞ்சியம் மூலம் சம்பூரண பாக்கியத்தை உருவாக்குபவர்களுக்கு, சக்திகேற்றபடி என்பதை அனைத்து சக்திகளில் பரிவர்த்தனை செய்யக் கூடிய, சிரேஷ்ட காரியங்கள் என்ற எழுதுகோல் மூலமாக முழுமையான அதிர்ஷ்டத்தின் ரேகையை போடக் கூடிய, நேரத்தின் மகத்துவத்தை தெரிந்த, அனைத்து பிராப்தி சொரூப சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் சம்பன்னம் ஆக்குவதற்கான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: 1. எப்பொழுதும் தன்னுடைய ஆன்மீக ஜென்மம், ஆன்மீக வாழ்க்கை, ஆன்மீக**

**தந்தை, ஆன்மீக ஆஸ்தி நினைவு இருக்கிறதா?** எப்படி தந்தை உலகியல் அல்லாத ஆன்மீக தந்தையாக இருக்கிறார் என்றால், ஆஸ்தியும் ஆன்மீகமானது. உலகத்தில் இருக்கும் தந்தை எல்லைக்குட்பட்ட ஆஸ்தி கொடுக்கிறார், ஆன்மீக தந்தை எல்லைக்கு அப்பாற்பட்ட ஆஸ்தி கொடுக்கிறார். எனவே எப்பொழுதும் ஆன்மீக தந்தை மற்றும் ஆஸ்தியும் நினைவு இருக்கட்டும். எப்பொழுதாவது உலகத்தின் வாழ்க்கையின் நினைவிலேயோ சென்று விடுவதில்லையே, உடலிலிருந்து இறந்து, மறுபிறவி வாழ்க்கை வாழ்பவராக ஆகி விட்டீர்கள் இல்லையா. எப்படி உடலால் இறப்பவர்களுக்கு ஒருபொழுதும் முந்தைய ஜென்மத்தின் நினைவு இருக்காது, அதேபோல் ஆன்மீக வாழ்க்கையில் இருப்பவர்களும், ஜென்மம் எடுப்பவர்களும், வெளியுலகத்து ஜென்மத்தை நினைவு செய்ய முடியாது. இப்பொழுதோ யுகமே மாறிவிட்டது. உலகம் கலியுகத்தில் இருக்கிறது, நீங்கள் சங்கமயுகத்தில் இருக்கிறீர்கள். அனைத்தும் மாறிவிட்டது. எப்போழுதாவது கலியுகத்திலோ சென்று விடுவதில்லையே? இதுவும் எல்லை தான். எல்லையை தாண்டினீர்கள் மற்றும் எதிரியின் வசமாகி விட்டீர்கள். நீங்கள் எல்லையை தாண்டுவது இல்லையே. எப்பொழுதும் நான் சங்கமயுகத்தின் ஆன்மீக வாழ்க்கையில் உள்ள சிரேஷ்ட ஆத்மா என்ற இதே நினைவில் இருங்கள். இப்பொழுது என்ன செய்வீர்கள்? மிகப் பெரிய வியாபாரி ஆகுங்கள். ஒவ்வொரு அடியிலும் பற்பல மடங்கு வருமானம் செய்யும் வியாபாரி ஆகுங்கள். எப்பொழுதும் நான் எல்லோருக்கும் தந்தையானவரின் குழந்தை என்றால், எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையில், எல்லைக்கு அப்பாற்பட்ட ஊக்கம், உற்சாகத்தில் எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள்.

**2. எப்பொழுதும் டபுல் லைட் நிலையை அனுபவம் செய்கிறீர்களா?** டபுல் லைட்டின் அடையாளம் எப்பொழுதும் பறக்கும் கலையில் இருப்பது. பறக்கும் கலையில் இருப்பவர், ஒருபொழுதும் மாயாவின் கவர்ச்சியில் வரமுடியாது. நீங்கள் பறக்கும் கலையுள்ள எப்பொழுதும் வெற்றியடைபவர்களா? பறக்கும் கலை உள்ளவர், எப்பொழுதும் நிச்சய புத்தியுடைய கவலையற்றவராக இருப்பார். பறக்கும் கலை என்றால் என்ன? பறக்கும் கலை என்றால், உயர்ந்ததிலும் உயர்ந்த நிலையில் இருப்பது. பறக்கிறார்கள் என்றாலும், உயரே செல்கிறார்கள் இல்லையா. உயர்ந்ததிலும் உயர்ந்த நிலையிலி நிலைத்திருக்கும் உயர்ந்த ஆத்மா

என்று புரிந்து முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள். பறக்கும் கலையுள்ளவர் என்றால், புத்தி என்ற கால்கள் பூமியில் இருக்காது. பூமி என்றால் தேக உணர்வு, அதிலிருந்து விலகி மேலே இருப்பவர். யார் தேக உணர்விலிருந்து விலகி மேலே யிருக்கிறாரோ, அவர் எப்பொழுதும் ஃபரிஸ்தா, அவருக்கு இந்த பூமியில் எந்த ரிஸ்தாவும் (உறவும்) இல்லை. நீங்கள் தேக உணர்வையும் தெரிந்து கொண்டீர்கள், ஆத்ம அபிமானி நிலையையும் தெரிந்து கொண்டீர்கள். எப்பொழுது இரண்டின் வித்தியாசத்தை தெரிந்து விட்டீர்கள் என்றால், தேக அபிமானத்தில் வரமுடியாது. எது நன்றாக இருக்கிறதோ, அதைத் தான் செய்வார்கள் இல்லையா, எனவே நான் ஃபரிஸ்தா என்ற இதே நினைவில் எப்பொழுதும் இருங்கள். ஃபரிஸ்தாவின் நினைவு மூலம் எப்பொழுதும் பறந்துக் கொண்டே யிருப்பீர்கள். பறக்கும் கலையில் சென்றுவிட்டீர்கள் என்றால், கீழே இந்த பூமி ஈர்க்க முடியாது, எப்படி விண்வெளியில் செல்கிறார்கள் என்றால், அவர்களை பூமி ஈர்ப்பதில்லை, அதே போல் நீங்கள் ஃபரிஸ்தா ஆகி விட்டீர்கள் என்றால், உடல் என்ற பூமி ஈர்க்க முடியாது.

**3. எப்பொழுதும் சகயோகி, கர்மயோகி, இயல்பான யோகி, நிரந்தர யோகி என்ற நிலையின் அனுபவம் செய்கிறீர்களா?** எங்கு சகஜமாக இருக்குமோ, அங்கு நிரந்தரமாக இருக்கும். சகஜமாக இல்லையென்றால், நிரந்தரமும் இல்லை. அப்படியானால் நீங்கள் நிரந்தரயோகியா? அல்லது வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறதா? யோகி என்றால் எப்பொழுதும் நினைவில் முழ்கியிருப்பவர். இப்பொழுது அனைத்து சம்மந்தங்களும் ஒரு தந்தையுடன் ஆகி விட்டது என்றால், எங்கு அனைத்து சம்மந்தங்களும் இருக்கிறதோ, அங்கு நினைவு இயல்பாகவே இருக்கும். மேலும் அனைத்து சம்மந்தங்கள் இருக்கிறது என்றால், ஒருவரின் நினைவு மட்டும் தான் இருக்கும். இருப்பதே ஒருவர் என்றால், எப்பொழுதுமே நினைவு இருக்கும் இல்லையா. எனவே எப்பொழுதும் அனைத்து சம்மந்தங்களினால் ஒரு தந்தையைத் தவிர, வேறு யாருமில்லை. அனைத்து சம்மந்தங் களினால் ஒரு தந்தையைத் தவிர, வேறு யாருமில்லை என்பது தான் நிரந்தர யோகி ஆவதற்கான சுலபமான விதி. எப்பொழுது இன்னொரு சம்மந்தமே இல்லையென்றால், நினைவு எங்கே செல்லும். நான் அனைத்து சம்மந்தங்களினால் சகஜயோகி ஆத்மா என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள்.

எப்பொழுதும் தந்தைக்கு சமமாக ஒவ்வொரு அடியிலும் அன்பு மற்றும் சக்தி இரண்டின் சமநிலை வைப்பதினால் வெற்றி தானாகவே எதிரில் வரும். வெற்றி பிறப்புரிமையாகும். பிஸியாக இருப்பதற்காக வேலையோ செய்யத் தான் வேண்டும், ஆனால் ஒன்று கடினமாக செய்யும் வேலை, இன்னொன்று விளையாட்டாக செய்வது. எப்பொழுது தந்தை மூலமாக சக்திகளின் வரதானம் கிடைத்திருக்கிறது என்றால், எங்கு சக்தி இருக்கிறதோ, அங்கு அனைத்தும் சகஜமாகும். பரிவாரம் மற்றும் தந்தையின் சமநிலை மட்டும் இருக்கிறது என்றால், இயல்பாகவே ஆசிர்வாதம் பிராப்தி ஆகி விடும். எங்கு ஆசிர்வாதம் இருக்கிறதோ, அங்கு பறக்கும் கலை இருக்கும். விரும்பாவிட்டாலும் சகஜமான வெற்றி கிடைக்கும்.

**4. எப்பொழுதும் தந்தை மற்றும் ஆஸ்தி இரண்டின் நினைவு இருக்கிறதா?** தந்தை யார், மற்றும் ஆஸ்தி என்ன கிடைத்திருக்கிறது என்ற இந்த நினைவு இயல்பாகவே சக்திசாலி ஆக்கி விடும். அந்தமாதிரி அழியாத ஆஸ்தி எது, ஒரு ஜென்மத்தில் அநேக ஜென்மங்களின் பிராப்தியை உருவாக்குவது, அந்த மாதிரியான ஆஸ்தி எப்பொழுதாவது கிடைத்திருக்கிறதா? இப்பொழுது கிடைத்திருக்கிறது, முழுக் கல்பத்திலும் கிடைக்காது. எனவே எப்பொழுதும் தந்தை மற்றும் ஆஸ்தி இதே நினைவின் மூலம் முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள். ஆஸ்தியை நினைவு செய்வதினால் எப்பொழுதும் குஷியிருக்கும், மேலும் தந்தையை நினைவு செய்வதினால், எப்பொழுதும் சக்திசாலியாக இருப்பீர்கள். சக்திசாலியான ஆத்மா, எப்பொழுதும் மாயாவை வென்றவராக இருப்பார். மேலும் குஷி இருக்கிறது என்றால், வாழ்க்கை இருக்கிறது. ஒருவேளை குஷி இல்லையென்றால், அது என்ன வாழ்க்கை? வாழ்க்கையிருந்தும் இல்லாததற்கு சமம். உயிரோடு இருந்து கொண்டும் மரணத்திற்கு சமம். எந்தளவு ஆஸ்தி நினைவு இருக்குமோ, அந்தளவு குஷியிருக்கும். அப்படியானால் உங்களுக்கு எப்பொழுதும் குஷியிருக்கிறதா? அந்தமாதிரியான ஆஸ்தி கோடியில் சிலருக்கு கிடைக்கிறது, மேலும் எனக்கும் கிடைத்திருக் கிறது. இந்த நினைவை ஒருபொழுதும் மறக்க கூடாது. எந்தளவு நினைவோ, அந்தளவு பிராப்தி. எப்பொழுதும் நினைவு இருக்கிறது என்றால், எப்பொழுதும் பிராப்தியின் குஷி இருக்கும்.

## 1985 அவ்யக்த முரளி

**குமாரர்களுடன் சந்திப்பு:** குமாரர்களுடைய வாழ்க்கை சக்திசாலியான வாழ்க்கை. எனவே பிரம்மா குமார் என்றால், ஆன்மீக சக்திசாலியானவர், உடலால் சக்திசாலியானவர் என்பது அல்ல. குமாரர் வாழ்க்கையில் என்ன விரும்புகிறீர்களோ, அதைச் செய்ய முடியும். அப்படியானால், நீங்கள் அனைத்து குமாரர்களும், உங்களுடைய இந்த குமாரர் வாழ்க்கையில் உங்களுடைய நிகழ்காலம், மற்றும் எதிர்காலத்தை உருவாக்கி விட்டீர்களா, என்னவாக உருவாக்கியிருக்கிறீர்கள். ஆன்மீகமானதாக ஆக்கியிருக்கிறீர்கள். ஈஸ்வரிய வாழ்க்கையுள்ள பிரம்மா குமார் ஆகியிருக்கிறீர்கள் என்றால், எவ்வளவு சிரேஷ்ட வாழ்க்கையுள்ளவர்களாக ஆகி விட்டீர்கள். அந்தமாதிரி சிரேஷ்ட வாழ்க்கை உருவாகி விட்டது, அதில் சதா காலத்திற்காக துக்கத்திலிருந்து, ஏமாற்றம் அடைவதிலிருந்து, அலைந்து திரிவதிலிருந்து விலகி வந்து விட்டீர்கள். இல்லையென்றால், உடலால் சக்தி நிறைந்த குமாரர்கள் அலைந்து கொண்டு தான் இருக்கிறார்கள், சண்டையிடுவது, துக்கம் கொடுப்பது, ஏமாற்றுவது, இதைத் தான் செய்கிறார்கள் இல்லையா. அப்படி நீங்கள் எத்தனை வி˜யங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறீர்கள். எப்படி நீங்கள் பாதுகாப்பாகி விட்டீர்கள், அதைபோல் மற்றவர்களையும் பாதுகாப்பதற்கான ஊக்கம் வருகிறது. எப்பொழுதும் நீங்கள் தன்னை போன்றவர்களை காப்பாற்றக் கூடியவர்கள். என்ன சக்திகள் கிடைத்திருக்கிறதோ, அதை மற்றவர்களுக்கும் கொடுங்கள். அளவற்ற சக்திகள் கிடைத்திருக்கிறது தான் இல்லையா. எனவே அனைவரையும் சக்திசாலி ஆக்குங்கள். நான் ஒரு கருவி என்று புரிந்து கொண்டு சேவை செய்யுங்கள். நான் சேவாதாரி என்று அல்ல. பாபா செய்விக்கிறார், நான் ஒரு கருவி. நான் என்ற தன்மையுள்ளவன் இல்லை. யாரிடம் நான் என்பது இல்லையோ, அவர் தான் உண்மையான சேவாதாரி.

**தம்பதிகளுடன் சந்திப்பு:** நீங்கள் எப்பொழுதும் சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்களா? சுயத்தின் இராஜ்யம் என்றால், எப்பொழுதும் அதிகாரி. அதிகாரி ஒருபொழுதும் அடிமையாக முடியாது. அடிமைத் தனம் இருக்கிறது என்றால், அதிகாரம் இல்லை. எப்படி இரவு இருக்கிறது என்றால், பகல் இல்லை, பகல் இருக்கிறது என்றால், இரவு இல்லை. அந்த மாதிரியான அதிகாரி ஆத்மாக்கள், எந்தவொரு கர்மேந்திரியத்தின், நபரின், வைபவத்தின் அடிமையாக முடியாது. நீங்கள் அந்தமாதிரியான

அதிகாரியா? எப்பொழுது மாஸ்டர் சர்வசக்திவான் ஆகி விட்டீர்கள் என்றால், என்ன ஆகியிருக்கிறீர்கள்? அதிகாரி. அந்தமாதிரி நான் எப்பொழுதும் சுயராஜ்ய அதிகாரி ஆத்மா என்ற இந்த சக்திசாலி நினைவு மூலம் எப்பொழுதும் சுலபமாக வெற்றி அடைபவராக ஆகிக் கொண்டேயிருக்கிறீர்கள். கனவில் கூட தோல்வி எண்ணம் மாத்திரம் கூட இருக்க வேண்டாம்.. இதைத் தான் நிரந்தர வெற்றியாளர் என்று கூறுவது. மாயா ஓடிவிட்டதா அல்லது விரட்டிக் கொண்டிருக்கிறீர்களா. அது திரும்பி வரமுடியாதா அளவிற்கு விரட்டி விட்டீர்களா. யாரை திரும்பி அழைத்து வரவேண்டியதிலிருக்காதோ, அவரை தொலை தூரத்தில் விட்டுவிட்டு வருவார்கள். அப்படி நீங்களும் வெகு துரத்திற்கு விரட்டி விட்டீர்களா. நல்லது.

**வரதானம்: பிராமண வாழ்க்கையில் ஒரு தந்தையை தன்னுடைய உலகமாக்கக் கூடிய இயல்பான மற்றும் சகஜயோகி ஆகுக!**

பிராமண வாழ்க்கையில் ஒரு தந்தையை தவிர வேறு யாருமில்லை என்பது அனைத்து குழந்தைகளின் உறுதிமொழி. எப்பொழுது உலகமே தந்தை தான், வேறு யாருமில்லை என்றால், இயல்பான மற்றும் சகஜயோகி நிலை எப்பொழுதும் இருக்கும். ஒருவேளை வேறுயாராவது இருக்கிறார் என்றால், இங்கு புத்தி செல்ல வேண்டாம், அங்கு செல்ல வேண்டுமென்று கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கும் ஆனால் ஒரு தந்தை தான் அனைத்துமே என்றால் புத்தி எங்கும் செல்ல முடியாது. அந்தமாதிரியானவர்கள், சகஜயோகி, சகஜ சுயராஜ்ய அதிகாரி ஆகி விடுகிறார்கள். அவருடைய முகத்தில் ஆன்மீகத்தின் பிரகாசம் ஒரே சீராக ஒரே மாதிரி இருக்கும்.

**சுலோகன்: தந்தைக்கு சமமாக அவ்யக்தம் மற்றும் உடலற்ற நிலையில் இருப்பது தான் அவ்யக்த பாலனையின் வெளிப்படையான நிரூபணம்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 18.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உறுதி மொழி மூலமாக பிரத்யக்ஷம்!

இன்று சக்திசாலியான தினத்தன்று சக்திசாலியான தந்தை தன்னுடைய சக்திசாலியான குழந்தைகளை பார்த்து கொண்டிருக்கிறார். இன்றைய தினம் விசேஷமாக பிரம்மாபாபா மூலமாக குழந்தைகளுக்கு சக்திசாலியின் வரதானத்தை அர்ப்பிக்கும் தினமாகும். இன்றைய தினம் பாப்தாதா, தன்னுடைய சக்தி சேனையை உலக மேடையில் கொண்டு வருகிறார் -எனவே சாகார சொரூபத்தில் சிவசக்திகளுக்கு பிரத்யக்ஷ ரூபத்தில், தனது பங்கை செய்வதற்கான தினம். சக்திகள் மூலமாக சிவ தந்தை பிரத்யக்ஷம் ஆகவேண்டும், அவர் குப்த ரூபத்தில் தனது பங்கை செய்து கொண்டேயிருக்கிறார். சக்திகளை பிரத்யக்ஷ ரூபத்தில் உலகின் எதிரில் வெற்றி அடைந்தவர்கள் என்று பிரத்யக்ஷம் செய்கிறார். இன்றைய தினம் குழந்தைகளுக்கு பாப்தாதா மூலமாக சமமாக ஆகுங்கள் என்ற வரதானத்திற்கான தினமாகும். இன்றைய தினம் விசேஷமாக அன்பிற்குரிய குழந்தை களை, கண்களில் அன்பு சொரூபத்தில் நிரப்புவதற்கான தினம். இன்றைய தினம் பாப்தாதா விசேஷமாக சக்திசாலியான மற்றும் அன்பிற்குரிய குழந்தைகளுக்கு, இனிமையான சந்திப்பின் மூலமாக அழியாத சந்திப்பிற்கான வரதானம் கொடுக்கிறார். இன்றைய தினம் அமிர்தவேளையிலிருந்து, நாலாபுறங்களிலுமுள்ள அனைத்து குழந்தைகளின் இதயத்தில் முதல் எண்ணமாக இனிமையான சந்திப்பை செய்ய வேண்டும், இதயத்திலிருந்து வரும் இனிமையிலும் இனிமையான மகிமையின் பாடலை பாட வேண்டும், மற்றும் விசேஷ அன்பின் அலையை பரப்புவதற்கான தினம். இன்றைய தினம் அமிர்தவேளையில் அநேக குழந்தைகளின் அன்பின் முத்துக்களின் மாலைகளில், ஒவ்வொரு முத்திற்கும் இடையில் பாபா, இனிமையான பாபா என்ற வார்த்தை மின்னிக் கொண்டி ருப்பதைப் பார்த்தோம். எத்தனை மாலைகள் இருக்கும், இந்த பழைய உலகத்தில் நவரத்தினத்தின் மாலை என்று கூறுகிறார்கள், ஆனால் பாப்தாதாவிடம் அநேக ஆன்மீக விநோதமான,

விலைமதிக்க முடியாத இரத்தினங் களின் மாலைகள் இருந்தன. அந்த மாதிரியான மாலைகளை சத்யுகத்தில் கூட அணிவதில்லை. இந்த மாலைகளை பாப்தாதா மட்டும் தான் இந்த நேரம் குழந்தைகள் மூலமாக அணிந்து கொள்கிறார். இன்றைய தினம் அநேக பந்தனத்தில் இருக்கும், கோபிகளின் பிரிந்திருக்கும் உணர்வு மற்றும் தந்தை மேல் அன்பு நிறைந்த உள்ளப் பூர்வமான, இனிமையான பாடலை கேட்பதற்கான தினம். பாப்தாதா அந்தமாதிரி அன்பில் முழ்கியிருக்கும் அன்பான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட ஆத்மாக்களுக்கு, பிரதிபலனாக இப்பொழுது பிரத்யக்ஷத்தின் முரசு ஒலிக்க போகிறது. ஹே சகஜயோகி மேலும் சந்திப்பிலிருந்து விலகியிருக்கும் குழந்தைகளே, இந்த சில நாட்கள் விரைவில் முடிவடைந்து விடும். சாகார இனிமையான இல்லத்தில், இனிமையான சந்திப்பு நடந்தே விடும். அந்த நல்ல நாள் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்ற குஷி நிறைந்த செய்தியை கூறுகிறார்.

இன்றைய தினம் ஒவ்வொரு குழந்தையும் உள்ளப்பூர்வமான திட எண்ணம் வைப்பதினால் சகஜமாக வெற்றியின் பிரத்யக்ஷ பலனை அடைவதற்கான தினம். இன்றைய தினம் எவ்வளவு மகான் என்று கேட்டீர்களா. அந்த மாதிரி மகான் தினத்தன்று அனைத்து குழந்தைகளும் எங்கு இருந்தாலும், தூரத்தில் இருந்தாலும், இதயத்தின் அருகில் இருக்கிறார்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தைக்கும் அன்பு மற்றும் பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்வதற்கான சேவையின் ஊக்கம் உற்சாகத்திற்கு பிரதிபலனாக, அன்பு நிறைந்த வாழ்த்துக்களை கூறுகிறார், ஏனென்றால் பெருபான்மையான குழந்தைகளின் ஆன்மீக உரையாடலில் அன்பு மற்றும் சேவையின் ஊக்கத்தின் அலைகள் தான் விசேஷமாக இருந்தது. உறுதிமொழி மற்றும் பிரத்யக்ஷம் விசேஷமாக இரண்டு விஷயங்களும் இருந்தது. கேட்டுக் கொண்டே பாப்தாதா என்ன செய்கிறார்? சொல்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள், ஆனால் இதயத்தின் ஓசையை திலாராம் தந்தை ஒரே நேரத்தில் அநேகர்கள் கேட்க சொல்வதை முடியும். உறுதிமொழி செய்பவர்களுக்கு பாப்தாதா வாழ்த்துக்கள் கூறுகிறார் ஆனால் இந்த உறுதிமொழியை அமிர்தவேளையில் எப்பொழுதும் மீண்டும் மீண்டும் நினைவு செய்யுங்கள். உறுதிமொழி செய்து விட்டு, அதை விட்டு விடாதீர்கள். செய்யத்தான் வேண்டும், ஆகத்தான் வேண்டும் என்று இந்த ஊக்கம், உற்சாகத்தை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ள வேண்டும். கூடவே

காரியங்கள் செய்து கொண்டே எப்படி ட்ராஃபிக் கண்ட்ரோல் விதியின் மூலமாக, நினைவு நிறைந்த நிலை தொடர்ந்து இருப்பதில் வெற்றியை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். அதேபோல் காரியங்கள் செய்து கொண்டே தனக்காக, தன்னைத் தானே சோதனை செய்வதற்கான நேரத்தையும் நிச்சயம் செய்யுங்கள். பிறகு குறிப்பிட்ட நேரத்தில் உறுதிமொழியை வெற்றி சொரூபமாக ஆக்கிக் கொண்டேயிருப்பீர்கள்.

பிரத்யக்ஷத்தின் ஊக்கம் உற்சாகம் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா தன்னுடைய வலது கரத்தினால் அன்பின் கைக்குலுக்கல் செய்கிறார். எப்பொழுதும் நெருக்கமான குழந்தையாக இருப்பதிலிருந்து, தந்தைக்கு சமமானவர் ஆகி, ஊக்கத்தின் தைரியம் மூலம் பலமடங்கு பாப்தாதாவின் உதவிக்கு பாத்திரமானவராக இருக்கவே இருக்கிறார். சுபாத்திரம் என்றால் பாத்திரமானவர்.

மூன்றாவது விதமான குழந்தைகள் -இரவு பகலாக அன்பில் மூழ்கியிருப்பவர்கள். அன்பைத் தான் சேவை என்று நினைக்கிறார்கள். சேவைக் களத்தில் வருவதில்லை, ஆனால் என்னுடைய பாபா, என்னுடைய பாபா என்ற இந்தப் பாடலை அவசியம் பாடுகிறார்கள். தந்தையையும் இனிமையான ரூபத்தில் சந்தோஷபடுத்திக் கொண்டே யிருக்கிறார்கள். என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன், உங்களுடையவர் தான். அந்தமாதிரியும் விசேஷ அன்பான ஆத்மாக்கள் இருக்கிறார்கள். அந்தமாதிரியான அன்பான குழந்தைகளுக்கு, பாப்தாதா அன்பின் பிரதிபலனாக, அன்போ அவசியம் கொடுக்கிறார், ஆனால் இராஜ்ய அதிகாரி ஆக வேண்டும் என்ற தைரியமும் ஊட்டுகிறார். இராஜ்யத்தில் வருபவராக ஆக வேண்டும், பிறகு அன்பானவராக இருந்தாலும் சரிதான். இராஜ்ய அதிகாரி ஆகவேண்டுமென்றால், அன்புடன் சேர்த்து படிப்பின் சக்தி, அதாவது ஞானத்தின் சக்தி, சேவையின் சக்தியும் அவசியமாக இருக்கிறது. எனவே தைரியம் வையுங்கள். உதவி செய்பவராக தந்தை இருக்கவே இருக்கிறார். அன்பின் பலனாக சகயோகம் கண்டிப்பாக கிடைக்கும், கொஞ்சம் தைரியம் வைத்தால், கவனம் வைத்தால், இராஜ்ய அதிகாரி ஆக முடியும். கேட்டீர்களா, இன்றைய ஆன்மீக உரையாடலுக்கான பதிலை பாரதம் மற்றும் வெளிநாட்டின் நாலாபுறமுள்ள குழந்தைகளின் ரம்மியமான வருகையை சூட்சமவதனத்தில் பார்த்தோம். வெளிநாட்டு குழந்தைகளும்,

கடைசியில் வந்தும் வேகமாக சென்று, முதலில் வருவதற்கான ஊக்கம், உற்சாகத்தில் நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்தளவு வெளிநாடு என்ற கணக்கில் தூரமாக இருக்கிறோமோ, அந்தளவு இதயத்தின் அருகாமையில் இருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். இன்று கூட நல்ல நல்ல ஊக்கம், உற்சாகத்தின் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். சில குழந்தைகள் மிக இனிமை யானவர்கள், இனிமையிலும் இனிமையான விஷயங்களை கூறி தந்தையையும் சம்மதிக்க வைக்கிறார்கள். சொல்வதோ மிக வெகுளியான ரூபத்தில் இருக்கும், ஆனால் சாதுர்யமானவர்கள். நீங்கள் உறுதிமொழி கூறுங்கள் என்று சொல்வார்கள். அந்தமாதிரி சம்மதிக்க வைப்பார்கள். தந்தை என்ன கூறுவார்? குஷியாக இரு, நன்றாக இரு, முன்னேறிக் கொண்டேயிரு. விசயங்களோ மிகவும் அதிகமானவை, எவ்வளவு கூறுவது ஆனால் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு, அனைத்து விஷயங்களையும் கூறுகிறார்கள். நல்லது.

எப்பொழுதும் அன்பு மற்றும் சேவையின் ஊக்க உற்சாகத்தில் இருக்கக் கூடிய, எப்பொழுதும் தகுதி வாயந்திவராகி அனைத்து பிராப்திகளின் பாத்திரமாகக் கூடிய, எப்பொழுதும் தன்னுடைய காரியங்கள் மூலமாக, பாப்தாதாவின் சிரேஷ்ட தெய்வீக காரியத்தை, பிரத்யக்ஷம் செய்யக் கூடிய, தன்னுடைய தெய்வீக வாழ்க்கை மூலமாக பிரம்மாபாபாவின் வாழ்க்கை கதையை தெளிவாக வெளிப்படுத்தக் கூடிய, அந்த மாதிரியான அனைத்து பாப்தாதாவின் நிரந்தரமாக துணைவர்களாக இருக்கக் கூடிய குழந்தைகளுக்கு, சக்திசாலியான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நம்ஸ்காரம்.

தாதி அவர்கள் மற்றும் ஜானகி தாதி அவர்களும் பாப்தாதாவின் எதிரில் அமர்ந்து இருக்கிறார்கள். இன்று உங்களுடைய தோழி (தீதி) யும், பிரத்தேயகமாக அன்பு நினைவு கொடுத்தார். இன்று அவரும் வதனத்தில் வெளிப்பட்டார். எனவே அவருக்கும் அனைவரின் நினைவு இருக்கிறது. அவரும் (அட்வான்ஸ் பார்ட்டியில்) தன்னுடைய குழுவை உறுதியாக்கிக் கொண்டிருக்கிறார். அவர்களுடைய காரியமும் உங்கள் அனைவருடன் சேர்ந்து பிரத்யக்ஷம் ஆகிக் கொண்டேயிருக்கும். இப்பொழுதோ சம்மந்தம் மற்றும் தேசத்தின் அருகில் இருக்கிறார்கள். எனவே சின்னஞ்சிறு குரூப்களிலும் ஏதோ காரணத்தினால், அவர்களை

தெரியாத போதிலும், சந்தித்துக் கொண்டேயிருக்கிறார்கள். இந்த முழுமையான நினைவு இருக்கவில்லை ஆனால் நாம் இணைந்து ஏதாவது புதிய காரியம் செய்ய வேண்டும் என்று புத்தியில் உணர்த்துதல் ஏற்படுகிறது. உலகத்தின் நிலைமை என்னவாக இருக்கிறது, அதற்கேற்றபடி, எந்தக் காரியத்தை யாராலேயும் செய்ய முடியாதோ, அதை நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து செய்ய வேண்டும் என்ற இந்த உணர்த்துதல் மூலம் அவர்களுக்குள் அவசியம் சந்திக்கிறார்கள் ஆனால் இப்பொழுது சிலர் சிறியவர்களாகவும், சிலர் பெரியவர்களாகவும் அந்தமாதிரியான குரூப்பாக இருக்கிறார்கள் ஆனால் அனைத்து விதமானவர்களும் சென்று இருக்கிறார்கள். உடலால் காரியம் செய்பவர்களும் சென்று இருக்கிறார்கள். இராஜ்ய ஸ்தாபனை செய்வதற்கு, திட்டமிடும் புத்தியுள்ளவர்களும் சென்று இருக்கிறார்கள். கூடவே தைரியம் மற்றும் உற்சாகத்தை அதிகரிப்பவர்களும் சென்றிருக்கிறார்கள். இன்று முழு குரூப்பிலும் இந்த மூன்று விதமான குழந்தைகளை பார்த்தோம், மேலும் மூவருமே அவசியமாக இருக்கிறார்கள். சிலர் திட்டமிடுபவர்கள், சிலர் காரியத்தில் கொண்டு வருபவர்கள், மேலும் சிலர் தைரியத்தை அதிகரிப்பவர்கள். குரூப்போ நன்றாக உருவாகிக் கொண்டிருக்கிறது, ஆனால் இரண்டு குரூப்புகளும் சேர்ந்தே பிரத்யக்ஷம் ஆகும். இப்பொழுது பிரத்யக்ஷத்தின் விசேஷம் மேகங்களுக்கு உள்ளேயிருக்கிறது. மேகம் கலைந்துக் கொண்டிருக்கிறது, ஆனால் அகலவில்லை. எந்தளவு சக்திசாலியான மாஸ்டர் ஞான சூரியனின் நிலை வரை வந்து சேர்ந்து விடுவீர்களோ, அதேபோல் இந்த மேகங்கள் கலைந்து கொண்டிருப்பது அகன்றுவிட்டது என்றால், ஒரு நொடியில் வெற்றி முரசு கொட்டிவிடும். இப்பொழுது கலைந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய பார்ட்டியும் அவர்களுடைய ஏற்பாடுகளை அதிகமாக செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படி நீங்கள் இளைஞர்களின் பேரணிக்காக திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா. அவர்களும் இப்பொழுது இளைஞர்கள். அவர்களும் அவர்களுக்குள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி இப்பொழுது பாரதத்தில் அநேக பார்ட்டிகளின் என்ன விசேஷம் இருந்ததோ, அது குறைந்து விட்டது, இருந்தும் ஒரு பார்ட்டி முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது இல்லையா, அப்படி வெளியுலகத்தின் ஒற்றுமையிலும் இரகசியம் இருக்கிறது. பல வழிகளில் நடப்பது அதிகமாகிக் கொண்டிருக்கிறது,

மேலும் ஒருவர் சக்திசாலி ஆகிக் கொண்டிருக்கிறார். இந்த ஸ்தாபனையின் இரகசியத்தில் சகயோகத்தின் பங்கு இருக்கிறது. மனதால் சந்தித்தவர்களாக இல்லை, கட்டாயத்தில் சந்தித்திருக்கிறார்கள், ஆனால் கட்டாயத்தில் சந்தித்ததிலும் இரகசியம் இருக்கிறது. இப்பொழுது ஸ்தாபனையின் நுண்ணிய முறைகள், பழக்கங்கள், தெளிவாக ஆவதற்கான நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. பிறகு உங்களுக்கும், அட்வான்ஸ் பார்ட்டி என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், மேலும் நான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று தெரிய வந்து விடும். இப்பொழுது நீங்களும் அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி கேட்கிறீர்கள், அவர்களும் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேள்வி கேட்கிறார்கள் ஆனால் இருவருமே நாடகத்தின் அனுசாரம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

ஜெகதம்பாவோ பௌர்ணமி நிலவாக இருக்கவே இருக்கிறார். பௌர்ணமி நிலவு ஜெகதம்பாவுடன் தீதிக்கு தொடக்கத்தில் இருந்தே விசேஷ பங்கு இருந்தது. காரியம் செய்வதில் உடன் இருந்து செய்யும் பங்கு இருந்தது. முழு நிலவு சீதளமானவர் மேலும் இவர் தீவிரமானவர். இருவர்களும் இணைந்து இருத்தல் இருந்தது. இப்பொழுது அவர் கொஞ்சம் பெரியவர் ஆகவிடுங்கள், ஜெகத்தம்பாவோ இப்பொழுது கூட அவருக்கு சீதளத்தின் சக்தி கொடுத்துக் கொண்டிருக்கிறார் ஆனால் திட்டம் போடுவது, முன்னுக்கு வருவதில் துணையும் வேண்டுமல்லவா. புஸ்பா சாந்தா மற்றும் தீதி தொடக்கத்தில் இவர்களுக்கு இடையிலும் கணக்கு இருந்தது. இங்கேயும் இருவர்களின் கணக்கு அவர்களுக்குள் அருகில் இருப்பதற்கானது. பாவு (விஷ்வ கிஷோர்) சகோதரரோ, முதுகெலும்பாக இருந்தார். இதிலேயும் பாண்டவர்கள் பின்னுக்கு முதுகெலும்பாக இருக்கிறார்கள். சக்திகள் முன்னுக்கு இருக்கிறார்கள். அவர்களும் ஊக்கம், உற்சாகத்தில் கொண்டு வரக்கூடிய குரூப். இப்பொழுது திட்டம் போடுபவர்கள் கொஞ்சம் மைதானத்தில் வந்து விட்டார்கள் என்றால், பிரத்யக்ஷம் ஆகி விடும். நல்லது.

**வெளிநாட்டு சகோதர, சகோதரிகளுடன் சந்திப்பு:** நீங்கள் அனைவரும் கடைசியில் வந்தாலும், வேகமாக செல்லக் கூடிய மேலும் முதல் நம்பரில் வருவதற்கான ஊக்கம், உற்சாகம் உள்ளவர்கள் தான்

இல்லையா. உங்களில் யாரும் இரண்டாம் நம்பரில் வருபவர்களோ இல்லையே, இலட்சியம் சக்திசாலியாக இருக்கிறது என்றால், இலட்சணமும் இயல்பாகவே சக்திசாலியாக இருக்கும். நீங்கள் அனைவரும் முன்னேறிச் செல்வதில் ஊக்கம், உற்சாகம் உள்ளவர்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தைக்கும் எப்பொழுதும் டபுள் லைட்டாகி பறக்கும் கலை மூலம் நம்பர் ஒன்னாக வரத்தான் வேண்டும் என்பதைத் தான் கூறுகிறார். எப்படி தந்தை உயர்ந்ததிலும் உயர்ந்தவராக இருக்கிறார், அதேபோல் ஒவ்வொரு குழந்தையும் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்கள்.

எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தின் இறக்கைகளால் பறப்பவர் தான், பறக்கும் கலையை அனுபவம் செய்கிறார். இந்த நிலையில் நிலைத்திருபதற்கான சகஜமான வழி -என்ன சேவை செய்தாலும், அதை தந்தை செய்பவர் செய்விப்பவர், நான் கருவியாக இருக்கிறேன், செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார், நடத்து வித்துக் கொண்டியிருக்கிறார், இந்த நினைவின் மூலம் எப்பொழுதும் லேசாகி பறந்துக் கொண்டே ருப்பீர்கள். இன்னும் வரும் நாட்களில் இதே நிலையை அதிகரித்துக் கொண்டேயிருங்கள்.

**விடைபெறும் நேரத்தில் கூறிய மகாவாக்கியம்:** இந்த சக்திசாலியான தினம் எப்பொழுதும் சக்திசாலியாக ஆக்கிக் கொண்டேயிருக்கும். இந்த சக்திசாலியான தினத்தன்று யாரெல்லாம் வந்துள்ளீர்களோ, அவர்கள் விசேஷமாக சக்திசாலி ஆகுக என்ற வரதானத்தை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ளுங்கள். ஏதாவது அந்த மாதிரி விஷயம் வந்தது என்றால், இந்த தினத்தை மற்றும் இந்த வரதானத்தை நினைவு செய்யுங்கள். இந்த நினைவு சக்தியை கொண்டு வரும். ஒரு வினாடியில் புத்தி என்ற விமானம் மூலம் மதுபன்னில் வந்து சேர்ந்து விடுங்கள். என்னவாக இருந்தது, எப்படி இருந்தது, மேலும் என்ன வரதானம் கிடைத்தது. அப்படி ஒரு வினாடியில் மதுபன் நிவாசி ஆவதினால், சக்தி வந்து விடும். மதுபன்னை வந்து சேர்வதோ, தெரியும் இல்லையா. இதுவோ சகஜம் தான், இந்த கண்களால் பார்த்திருக்கிறீர்கள். பரந்தாமத்திற்கு செல்வது கடினமாக அனுபவம் ஆகலாம், மதுபன் வந்து சேர்வது கடினமில்லை. எனவே ஒரு வினாடியில் டிக்கெட் இல்லாமல், செலவில்லாமல் மதுபன் நிவாசி ஆகி விடுங்கள்.

மதுபன் எப்பொழுதுமே தைரியம் மற்றும் உற்சாகத்தை கொடுத்துக் கொண்டேயிருக்கும். எப்படி இங்கே அனைவரும் தைரியம் உற்சாகத்தில் இருக்கிறார்கள், யாரிடமும் பலஹீனம் இல்லை தான் இல்லையா. இதே நினைவு பிறகு சக்திசாலியானவர் ஆக்கி விடும். நல்லது.

**வரதானம்: பரமாத்ம காரியத்தில் சகயோகி ஆகி அனைவரின் சகயோகத்தை பிராப்தி செய்யக் கூடிய வெற்றி சொரூபமானவர் ஆகுக!**

எங்கு அனைவரின் ஊக்கம், உற்சாகம் இருக்கிறதோ, அங்கு வெற்றி அதுவே அருகில் வந்து கழுத்தின் மாலை ஆகி விடும். எந்தவொரு விசால காரியத்திலும் ஒவ்வொருவரின் சகயோகத்தின் விரல் தேவையாக இருக்கிறது. சேவை செய்வதற்கான வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கிறது, யாருமே என்னால் செய்ய முடியாது, நேரமில்லை என்ற சாக்குபோக்கு சொல்ல முடியாது. காரியங்கள் செய்து கொண்டே, எழுந்தாலும், அமர்ந்தாலும் 10-10 நிமிடங்களாவது சேவை செய்யுங்கள். உடல் நிலை சரியில்லையென்றால், வீட்டில் அமர்ந்து செய்யுங்கள். மன சக்தி மூலம், சுகம் நிறைந்த உள்ளுணர்வின் மூலம் சுகம் நிறைந்த மனநிலையின் மூலம் சுகம் நிறைந்த உலகை உருவாக்குங்கள், பரமாத்மா காரியத்தில் சகயோகியாக ஆனீர்கள் என்றால், அனைவரின் சகயோகம் கிடைக்கும்.

**சுலோகன்: இயற்கையின் தலைவன் என்ற ஆசனத்தில் அமர்ந்திருந்தீர்கள் என்றால் எந்த சூழ்நிலைகளிலும் நிலை குலைந்து போக மாட்டீர்கள்!**

✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹

# 21.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஈஸ்வரிய பிறந்த நாளின் பொன்னான பரிசு -தெய்வீக புத்தி!

இன்று உலகைப் படைக்கும் தந்தை தன்னுடைய உலகின் கண்களான, கண்ணின் மணிகளான குழந்தை களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள், உலகின் கண்கள் அதாவது உலகின் ஒளியாக இருக்கிறீர்கள். எப்படி ஸ்தூல கண்கள் இல்லையென்றால், உலகம் இல்லை. ஏனென்றால் கண்கள் அதாவது பிரகாசம். பிரகாசம் இல்லையென்றால், இருளின் காரணமாக உலகம் இல்லை. அந்த மாதிரி கண்கள் நீங்கள் இல்லையென்றால் உலகில் பிரகாசம் இல்லை. நீங்கள் இருக்கிறீர்கள் என்றால், பிரகாசத்தின் காரணமாக உலகம் இருக்கிறது. பாப்தாதா அந்த மாதிரியான உலகின் கண்களாக இருக்கும் குழந்தைகளைப் பார்த்து கொண்டிருக்கிறார். அந்தமாதிரி குழந்தைகளின் மகிமை எப்பொழுதும் பாடப்படுகிறது மற்றும் பூஜிக்கப்படு கிறது. அந்த குழந்தைகள் தான் உலக இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரிகளாக ஆகிறார்கள். பாப்தாதா ஒவ்வொரு பிரமாண குழந்தைக்கும் பிறந்த உடனேயே விசேஷமாக தெய்வீக பிறந்த நாளின் இரண்டு தெய்வீக பரிசுகளைக் கொடுக்கிறார். உலகத்தில் ஒரு மனித ஆத்மா இன்னொரு மனித ஆத்மாவிற்கு பரிசு கொடுப்பார் ஆனால் பிராமண குழந்தைகளுக்கு தந்தை, அவரே தெய்வீக பரிசை இந்த சங்கமயுகத்தில் கொடுக்கிறார். என்ன கொடுக்கிறார்? ஒன்று தெய்வீக புத்தி, மற்றும் இன்னொன்று தெய்வீக கண்கள், அதாவது ஆத்மீக கண். இந்த இரண்டு பரிசுகளும் ஒவ்வொரு பிராமண குழந்தைக்கும், பிறந்தநாளின் பரிசாகும். இந்த இரண்டு பரிசுகளையுமே, எப்பொழுதும் தன்னுடன் வைத்துக் கொண்டே, இவை மூலமாக எப்பொழுதும் வெற்றி சொரூபமாக இருக்கிறீர்கள். தெய்வீக புத்தி தான், ஒவ்வொரு குழந்தையையும் தெய்வீக ஞானம், தெய்வீக நினைவு மற்றும் தெய்வீக தாரணை சொரூபமாக ஆக்குகிறது. தெய்வீக புத்தி தான் தாரணை செய்வதற்கான விசேஷ பரிசு. எனவே எப்பொழுதுமே தெய்வீக புத்தி

இருக்கிறதென்றால், தாரணை சொரூபமாக இருக்கிறார். தெய்வீக புத்தியில் அதாவது மிகத் தூய்மையான, பொன்னான புத்தியில் சிறிதளவு கூட இரஜோ, தமோ அதாவது தாழ்ந்த நிலையின் பிரபாவம் ஏற்படுகிறதென்றால், தாரணை சொரூபத்திற்குப் பதிலாக மாயாவின் பிரபாவத்தில் வந்து விடுகிறார். எனவே ஒவ்வொரு சுலபமான விஷயத்தையும் கடினமாக அனுபவம் செய்கிறார்கள். சுலபமாக பரிசின் ரூபத்தில் கிடைத்திருக்கும், தெய்வீக புத்தி பலஹீனமாக இருக்கும் காரணத்தினால், கடும் உழைப்பை அனுபவம் செய்கிறார்கள். எப்பொழுதெல்லாம் கடினம் மற்றும் கடின உழைப்பை அனுபவம் செய்கிறீர்கள் என்றால், கண்டிப்பாக தெய்வீக புத்தி ஏதோ மாயாவின் ரூபத்தில் பிரபாவப்பட்டு இருக்கிறது. அப்பொழுது தான் அந்த மாதிரி அனுபவம் ஆகிறது. தெய்வீக புத்தி மூலமாக ஒரு நொடியில் பாப்தாதாவின் ஸ்ரீமத்தை தாரணை செய்து, எப்பொழுதும் சக்திசாலியான ஆடாத அசையாத மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையை அனுபவம் செய்கிறார்கள். ஸ்ரீமத் என்றால், சிரேஷ்டமாக ஆக்கக் கூடிய வழி. அது ஒருபொழுதும் கடினத்தை அனுபவம் செய்விக்க முடியாது. ஸ்ரீமத் எப்பொழுதும் சகஜமாக பறக்க வைக்கக் கூடிய வழி ஆனால் தாரணை செய்யக் கூடிய தெய்வீக புத்தி அவசியம் வேண்டும். எனவே தன்னுடைய பிறந்த நாள் பரிசு எப்பொழுதும் உடன் இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். எப்பொழுதாவது மாயா தன்னுடையவராக்கி தெய்வீக புத்தியின் பரிசை அபகரித்து விடுவ தில்லையே? எப்பொழுதாவது மாயாவின் பிரபாவத்தினால் மிகவும் வெகுளியாகி அதன் காரணமாக பரமாத்மா வின் பரிசையும் தொலைத்து விடுகிறீர்கள். மாயாவிற்கும் ஈஸ்வரிய பரிசை தன்னுடையதாக ஆக்குவதற்கான சாதுரியம் தெரியும். அது சாதுரியமாக ஆகி விடுகிறது. மேலும் உங்களை வெகுளியானவர் ஆக்கி விடுகிறது. எனவே போலாநாத் தந்தையின் வெகுளியான குழந்தைகளாக நன்றாக ஆகுங்கள் ஆனால் மாயாவைப் பற்றி தெரியாதவராக ஆகாதீர்கள். மாயாவை அறியாதவர் ஆவது என்றால், மறப்பவர் ஆவது. ஈஸ்வரிய தெய்வீக புத்தி என்ற பரிசு நிரந்தர பாதுகாப்பு குடைநிழல், மேலும் மாயா அதில் தன்னுடைய நிழலைப் போட்டு விடுகிறது. அதனால் பாதுகாப்பு அகன்றுவிடுகிறது, நிழல் இருந்து விடுகிறது. எனவே தந்தையின் பரிசு, எப்பொழுதும் என்னுடன் நிலைத்திருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். தெய்வீக புத்தியின் அடையாளம், கிஃப்ட் (பரிசு), லிஃப்ட்டின் காரியம் செய்கிறது. சிரேஷ்ட

எண்ணம் என்ற பொத்தானை அழுத்தினீர்கள், ஒரு நொடியில் அந்த நிலையில் நிலைத்து விடுவீர்கள். ஒருவேளை தெய்வீக புத்தியின் இடையே மாயாவின் நிழல் இருக்கிறது என்றால், இந்த கிஃப்ட்டின் லிஃப்ட் வேலை செய்யாது. எப்படி ஸ்தூல லிஃப்ட்டும் பழுதடைந்து விடுகிறது என்றால், என்ன நிலைமை ஏற்பட்டு விடுகிறது? மேலேயும் செல்லாது, கீழேயும் செல்லாது, இடையில் மாட்டிக் கொள்கிறார்கள். அதேபோல் இங்கு மதிப்புடன் இருப்பதற்குப் பதிலாக மதிப்பிழந்தவர்கள் ஆகி விடுகிறார்கள். எவ்வளவு தான் பொத்தானை அழுத்தினாலும், இலட்சியத்தை சென்றடையும் பிராப்தி செய்ய முடியாது. எனவே இந்த கிஃப்ட்டின் லிஃப்ட்டை பழுதாக்கி விடுகிறீர்கள், எனவே கடும் உழைப்பு என்ற படிகளில் ஏற வேண்டியதாக இருக்கிறது. பிறகு என்ன கூறுகிறீர்கள்? தைரியம் என்ற கால்களுக்கு நடக்க இயலவில்லை. அப்படி சகஜமானதை கடினமானதாக யார் ஆக்கினார், மேலும் எப்படி ஆக்கினார்? தன்னைத் தானே அலட்சியமானவராக ஆக்கினார். மாயாவின் நிழலின் வந்து விட்டார், எனவே ஒரு நொடியின் சகஜமான விஷயத்திற்கும், நீண்ட காலத்தின் கடும் உழைப்பை அனுபவம் செய்கிறார்கள். தெய்வீக புத்தியின் பரிசு, ஆன்மீக விமானம், அந்த தெய்வீக விமானம் மூலமாக ஒரு நொடியில் பொத்தானை அழுத்துவதினால், எங்கு சென்றடைய விரும்பு கிறீர்களோ, அங்கு சென்றடைய முடியும். எண்ணம் என்பது தான் பொத்தான் அறிவியலை சேர்ந்தவர்களோ, ஒரு உலகை சுற்றி வரச் செய்ய முடியும். நீங்கள் மூன்று உலகங்களையும் சுற்றி வர முடியும். ஒரு நொடியில் உலகிற்கு நன்மை செய்யும் சொரூபமானவர் ஆகி, முழு உலகிற்கும், லைட் (ஒளி) மற்றும் மைட் (சக்தி) கொடுக்க முடியும். தெய்வீக புத்தி என்ற விமானம் மூலமாக மட்டும் உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து விடுங்கள். எப்படி அவர்கள் விமானம் மூலமாக இமயமலையின் மேலே சாம்பலை தூவினார்கள், நதியில் சாம்பலை போட்டார்கள். எதற்காக? நாலாபுறங்களிலும் பரப்புவதற்காகத் தான் இல்லையா. அவர்களோ, சாம்பலை போட்டார்கள், நீங்கள் தெய்வீக விமானம் மூலமாக மிக உயர்ந்த சிகரம் என்ற நிலையில் நிலைத்திருந்து, உலகிலுள்ள அனைத்து ஆத்மாக் களுக்காக, லைட் மற்றும் மைட்டின் சுபபாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பங்களின் சகயோகத்தின் அலையைப் பரப்புங்கள். விமானமோ சக்திசாலியாக இருக்கிறது தான் இல்லையா? உபயோகிக்க மட்டும் தெரிய வேண்டும்.

பாப்தாதாவின் மிகவும் சுத்திகரிக்கப்பட்ட சிரேஷ்ட வழி என்ற சாதனம் தேவையாக இருக்கிறது. எப்படி இன்றைய நாட்களில் சுத்திகரிக்கப்பட்டது என்பதையும் கடந்து இரட்டை சுத்திகரிக்கப்பட்டது என்பது இருக்கிறது இல்லையா? அந்தமாதிரி இது பாப்தாதாவின் இரட்டை சுத்திகரிக்கப்பட்ட சாதனம். சிறிதளவாவது மனம் சொல்லும் வழி, மற்றவர்கள் சொல்லும் வழியின் குப்பைகள் இருக்கிறது என்றால், என்னவாகும்? மேலே செல்வீர்களா? எனவே தெய்வீக புத்தி என்ற விமானத்தில் எப்பொழுதும் இரட்டை சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் இருக்கிறதா என்று சோதனைச் செய்யுங்கள். இடையில் ஏதாவது குப்பையோ வந்து விடுவ தில்லையே, இல்லை யென்றால் இந்த விமானம் எப்பொழுதும் சுகம் அளிப்பது. எப்படி சத்யுகத்தில் ஒருபொழுதும் எந்த விபத்தும் ஏற்படாது, ஏனென்றால் உங்களுடைய சிரேஷ்ட காரியத்தின் சிரேஷ்ட பிராப்தி யாகும். அந்தமாதிரி எந்த ஒரு காரியமும் நடப்பதில்லை, அந்த காரியத்தின் விளைவுகளின் துக்கத்தை அனுபவிக்க வேண்டியளவிற்கு, அந்தமாதிரி சங்கமயுகத்தின் இறை பரிசு தெய்வீக புத்தி, எப்பொழுதும் அனைத்து விதமான துக்கம் மற்றும் ஏமாற்றங்களிலிருந்து விடுபட்டு இருப்பது. தெய்வீக புத்தி உள்ளவர் ஒருபொழுதும் ஏமாற்றத்தில் வரமுடியாது. துக்கத்தின் அனுபவம் செய்ய முடியாது. அவர் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பார். ஆபத்து களில் இருந்து விடுபட்டு இருக்கிறார், எனவே இந்த இறை பரிசின் மகத்துவத்தைத் தெரிந்து, இந்தப் பரிசை எப்பொழுதும் உங்கள் உடன் வைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பரிசின் மகத்துவம் புரிந்ததா? பரிசு அனைவருக்கும் கிடைத்திருக்கிறதா அல்லது யாருக்காவது இன்னும் கிடைக்க வில்லையா? அனைவருக்கும் கிடைத்திருக்கிறது தான் இல்லையா, அதை பாதுகாக்க மட்டும் தெரியுமா அல்லது தெரியாதா என்பது உங்களிடம் இருக்கிறது. எப்பொழுதும் அமிர்தவேளையில் சிறிதளவு குறை இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள்? பிறகு அமிர்தவேளை யோகாவை சரியாக செய்வதினால் முழு நாளும் சக்திசாலியாக இருக்கும். ஒருவேளை, தானே சரியாக செய்ய முடியவில்லையென்றால், மற்றவர்கள் மூலம் சரியாக செய்வித்துக் கொள்ளுங்கள் ஆனால் அமிர்தவேளையிலேயே சரி செய்து விடுங்கள். நல்லது. -தெய்வீக பார்வையின் விஷயத்தைப் பின்பு கூறுவோம். தெய்வீகப் பார்வை என்று கூறினாலும், தெய்வீகக் கண் என்று கூறினாலும், ஆன்மீக கண் என்று கூறினாலும் விஷயம் ஒன்று தான்.

## 1985 அவ்யக்த முரளி

இந்த நேரமோ தெய்வீக புத்தி என்ற இந்தப் பரிசு, அனைவரிடமும் இருக்கிறது தான் இல்லையா? நீங்கள் அனைவரும் தங்கப் பாத்திரம் தான் இல்லையா. இது தான் தெய்வீக புத்தி. மதுபன்னிற்கு நீங்கள் அனைவரும் தெய்வீக புத்தி என்ற முழுமையான தங்க பாத்திரத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? உண்மையான தங்கத்தில் வெள்ளி மற்றும் செம்பின் கலப்படமோ இல்லை தானே! சதோபிரதானம் என்றால், சம்பூரண தங்கம், இதைத் தான் தெய்வீக புத்தி என்று கூறுவது. நல்லது. நீங்கள் எந்தப் பக்கத்தில் இருந்து வந்திருந்தாலும், அனைத்து பக்கங்களிலிருந்தும் ஞான நதிகள் வந்து, கடலில் கலந்து விட்டன. நதி மற்றும் கடலின் சந்திப்பு மகான் சந்திப்பை கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா?. பாப்தாதாவும் அனைத்து ஞான நதிகளைப் பார்த்து, எப்படி ஊக்கம் உற்சாகத்துடன், எங்கு எங்கிருந்தாலும் இந்த சந்திப்பு விழாவில் வந்து சேர்ந்து விட்டீர்கள். நல்லது.

எப்பொழுதும் தெய்வீக புத்தி என்ற பொன்னான பரிசை காரியத்தில் கொண்டு வரக்கூடிய, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக மிக சாதுர்யமானவர் ஆகி, மாயாவின் சாதுர்யத்தை தெரிந்திருக்கும், எப்பொழுதும் தந்தையின் குடை நிழலுக்கு கீழ் இருந்து மாயாவின் நிழலிலிருந்து தூரமாக இருக்கக் கூடிய, எப்பொழுதும் ஞானக் கடலுடன் இனிமையான சந்திப்பைச் செய்யக் கூடிய., ஒவ்வொரு கடினத்தையும் சுலபமாக ஆக்கக் கூடிய,, உலகிற்கு நன்மை செய்யும், உயர்ந்த நிலையில் நிலைத்திருக்க கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தனிப்பட்ட சந்திப்பு:** 1. பார்வை மாறியதினால், உலகம் மாறிவிட்டது இல்லையா? பார்வை சிரேஷ்டமாக ஆகி விட்டது என்றால், உலகமும் சிரேஷ்டமாக ஆகி விட்டது. இப்பொழுது உலகமே தந்தை தான். தந்தையில் உலகம் நிரம்பியிருக்கிறது. அந்தமாதிரியே அனுபவம் ஆகிறது தான் இல்லையா? எங்கே பார்த்தாலும், கேட்டாலும், தந்தையின் துணை தான் அனுபவம் ஆகிறது இல்லையா? அந்த மாதிரியான அன்பானவர் யார் ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு எண்ணத்திலும், துணைவனாக இருப்பவர் அந்தமாதிரி முழு உலகத்திலும் வேறு யாருமே இருக்க முடியாது.. குடும்பத்தில் கூட யாராவது எவ்வளவு தான்

அன்பானவராக இருந்தாலும் கூட அவரும் எப்பொழுதுமே அவருடைய துணையைக் கொடுக்க முடியாது. இவரோ கனவில் கூட, அவருடைய துணையைக் கொடுக்கிறார். அந்தமாதிரி துணை வைத்து நடந்து கொள்ளும் துணைவன் கிடைத்திருக்கிறார், எனவே உலகம் மாறிவிட்டது. இப்பொழுது குடும்ப வாழ்க்கையில் கூட ஆன்மீகத்தை அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? குடும்பத்தில் என்னென்ன சம்மந்தத்தை பார்க்கிறீர்களோ, அப்பொழுது உண்மையான சம்மந்தம் இயல்பாகவே நினைவில் வருகிறது. இதன் மூலம் அந்த ஆத்மாக்களுக்கும் சக்தி கிடைத்து விடுகிறது. எப்பொழுது தந்தை உங்கள் கூடவே இருக்கிறார் எனறால் நீங்கள் கவலை இல்லாத இராஜாவாக இருக்கிறீர்கள். சரியாக நடக்குமா அல்லது நடக்காதா என்று இதை யோசிப்பதற்கும் அவசியம் இருக்காது. உடன் இருக்கிறார் என்றால், அனைத்துமே சரியே சரிதான்! எனவே துணையை அனுபவம் செய்து கொண்டே, கடந்து சென்று கொண்டேயிருங்கள். யோசிப்பதும் தந்தையினுடைய வேலை, நம்முடைய வேலை அவருடைய துணையில் முழ்கியிருப்பது. எனவே பலஹீனமான யோசனைகளும் முடிந்துவடைந்து விட்டது. எப்பொழுதும் கவலையில்லாத இராஜாவாக இருங்கள், இப்பொழுதும் இராஜா, எப்பொழுதும் இராஜா!

2. எப்பொழுதும் தன்னை வெற்றியின் நட்சத்திரம் என்று நினையுங்கள். மேலும் மற்ற ஆத்மாக்களுக்கும் வெற்றியின் சாவியைக் கொடுத்துக் கொண்டேயிருங்கள். இந்த சேவையின் மூலம் அனைத்து ஆத்மாக்களும் குஷியடைந்து உங்களுக்கு உள்ளப்பூர்வமாக ஆசிர்வாதம் கொடுப்பார்கள். தந்தை மற்றும் அனைவரின் ஆசிர்வாதங்கள் தான் முன்னேறச் செய்விக்கிறது..

**வரதானம்: அன்பு மற்றும் புதுமையின் அதிகாரத்தின் மூலம் சமர்ப்பணம் செய்விக்கக் கூடிய மகான் ஆத்மா ஆகுக!**

யார் தொடர்பில் வந்தாலும், அவர்களை அந்தமாதிரி சம்மந்ததில் கொண்டு வாருங்கள், அதாவது, அவர் சம்மந்தத்தில் வந்து, வந்து சமர்பண புத்தியாக ஆகி விட வேண்டும். மேலும் பாபா என்ன கூறுகிறாரோ, அது தான் சத்தியம் என்று கூற வேண்டும். இதைத் தான் சமர்ப்பண புத்தி என்று கூறுவது. பிறகு அவருடைய கேள்விகள்

முடிவடைந்து விடும். இவர்களுக்கு ஞானம் நன்றாக இருக்கிறது என்று மட்டும் சொல்ல வேண்டாம், ஆனால் இது புதிய ஞானம், புது உலகத்தைக் கொண்டு வருவது என்ற இந்த வார்த்தைகள் வெளி வந்தால் தான் கும்பகர்ணர்கள் விழித்தெழுவார்கள். எனவே புதுமையின் மகான் தன்மை மூலமாக அன்பு மற்றும் அதிகாரத்தின் சமநிலை மூலம், அந்த மாதிரி சமர்பணம் செய்வியுங்கள். அப்பொழுது தான் மைக் தயார் ஆகி விட்டது என்று கூறுவோம்.

**சுலோகன்: ஒரு பரமாத்மாவின் அன்பிற்குரியவர் ஆனீர்கள் என்றால் உலகின் அன்பிற்குரியவர் ஆகி விடுவீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தெய்வீக ஜென்மத்தின் பரிசு -தெய்வீகக் கண்கள்!

இன்று மூன்று காலங்களையும் அறிந்த தந்தை, தன்னுடைய மூன்று காலங்களையும் தெரிந்த, மூன்று கண்களுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தெய்வீக புத்தி மற்றும் தெய்வீகக் கண்கள், எதை மூன்றாவது என்று கூறுகிறோமோ, அந்தக் கண் எந்தளவு தெளிவாகவும், மற்றும் சக்திசாலியாகவும் இருக்கிறது என்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் தெய்வீகக் கண்ணின் சக்தியின் சதவிகிதத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா அனைவருக்கும், 100-சதவிகிதம் சக்திசாலியான தெய்வீகக் கண்களை ஜென்மத்தின் பரிசாகக் கொடுத்திருக்கிறார். பாப்தாதா வரிசைக்கிரமமான சக்தி நிறைந்த கண்களை கொடுக்கவில்லை, ஆனால் இந்த தெய்வீகக் கண்களை, ஒவ்வொரு குழந்தையும் அவரவர்களின் நியமத்தின் பிரகாரம், பத்தியத்தின் பிரகாரம், கவனம் கொடுப்பதின் பிரகாரம், நடைமுறையில் காரியத்தில் ஈடுபடுத்தி யிருக்கிறார்கள். எனவே தெய்வீகக் கண்களின் சக்தி, சிலருடையது. சம்பூரண சக்திசாலியாகவும், சிலருடைய சக்தியில் சதவிகிதமும் இருந்து விட்டது. பாப்தாதா மூலமாகக் கிடைத்திருக்கும் இந்த மூன்றாவது கண், தெய்வீகக் கண், இன்றைய நாட்களில் அறிவியல் சாதனமான தொலை நோக்கு கண்ணாடி (டெலஸ்கோப்) இருக்கிறது, அது தூரத்தில் இருக்கும் பொருளை அருகிலும் மற்றும் தெளிவாகவும் அனுபவம் செய்விக்கும். அதேபோல் இந்த தெய்வீகக் கண்களும் தெய்வீக தொலைநோக்கு கண்ணாடியின் காரியம் செய்யும். ஒரு நொடியில் பரந்தாமம், அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது. அது எத்தனை மைல் தூரத்தில் இருக்கிறது என்று கணக்கிட முடியாது. பரந்தாமம் தொலை தூரத்து தேசம் எவ்வளவு அருகிலும் மற்றும் தெளிவாகவும் தென்படுகிறது. அறிவியலின் சாதனம், இந்த பௌதீக உலகத்தின் சூரியன். சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் வரை பார்க்க முடியும் ஆனால் இந்த தெய்வீகக்

கண்கள் மூன்று உலகங்களையும், மூன்று காலங்களையும் பார்க்க முடியும். இந்த தெய்வீகக் கண்களை அனுபவத்தின் கண்கள் என்றும் கூறுகிறார்கள். அனுபவத்தின் கண், அந்தக் கண் மூலமாக 5 ஆயிரம் ஆண்டின் விஷயத்தை நேற்று நடந்ததை போன்று அந்தளவு தெளிவாகப் பார்க்கிறீர்கள். எங்கு 5 ஆயிரம் வருடம், எங்கு நேற்றைய விஷயம். அப்படி தூரமான விஷயத்தை அருகிலும், மற்றும் தெளிவாகவும் பார்க்கிறீர்கள் இல்லையா? நான் நேற்று பூஜைக்குரிய தேவ ஆத்மாவாக இருந்தேன், மேலும் நாளை மீண்டும் ஆவேன் என்று அனுபவம் செய்கிறீர்கள். இன்று பிராமணன், நாளை தேவதை. அப்படி இன்று மற்றும் நாளையின் விஷயம் சுலபமாகி விட்டது இல்லையா? சக்திசாலியான கண்கள் உடைய குழந்தைகள் மது இரட்டை கீரிடம் அணிந்த அலங்கரிக்கப்பட்ட சொரூபத்தை எப்பொழுதும் எதிரில் தெளிவாகப் பார்த்துக் கொண்டே யிருக்கிறார்கள். எப்படி ஸ்தூலமான ஆடை அலங்கரிக்கப்பட்டு, எதிரில் தென்படுகிறது. மேலும் இப்பொழுதே அதை அணிந்து விடுவேன் என்று நினைக்கிறீர்கள். அதேபோல் இந்த தேவதைகள் உடல் என்ற ஆடையை எதிரில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? நாளை அதை அணிய வேண்டும். தென்படுகிறது இல்லையா? இப்பொழுது தயாராகிக் கொண்டியிருக்கிறதா, அல்லது தயாரானது எதிரில் தென்படுகிறதா? எப்படி பிரம்மாபாபாவைப் பார்த்திருக்கிறீர்கள், அவருக்கு தன்னுடைய எதிர்கால ஆடை, ஸ்ரீ கிருஷ்ணரின் சொரூபம் எப்பொழுதும் எதிரில் தெளிவாக இருந்தது. அதேபோல் உங்கள் அனைவருக்கும் சக்திசாலியான கண்கள் மூலமாகத் தெளிவாக, மற்றும் எதிரில் தென்படுகிறதா? இந்த நேரம் ஃபரிஸ்தா, அடுத்த நேரம் ஃபரிஸ்தாவாக ஆகி, பிறகு தேவதை. போதையும் இருக்கிறது, மேலும் சாட்சாத் தேவதை ஆவதற்கான, சாட்சாத்காரத்தையும், தெய்வீகக் கண்கள் மூலமாக பார்த்திருக்கிறீர்கள். அந்தமாதிரி சக்திசாலியான கண்கள் இருக்கின்றனவா? அல்லது சிலவற்றைப் பார்க்கும் சக்தி குறைந்து விட்டதா? எப்படி ஸ்தூல கண்களின் சக்தி குறைந்து விடுகிறது என்றால், மிகத் தெளிவான பொருள் கூட திரைச்சீலைக்குப் பின்னால் இருப்பது போலவும், மேகங்களின் இடையே இருப்பது போலவும் தென்படும். அந்தமாதிரி நீங்களும் தேவதையாக ஆக வேண்டும், ஆகியிருந்திருக்கிறீர்கள், ஆனால் என்னவாக இருந்தீர்கள், எப்படி இருந்தீர்கள் என்பது இந்த இருந்தீர்கள்- என்பது திறைச்சீலைக்கு உள்ளே தென்படவில்லையே! தெளிவாக இருக்கிறதா? நிச்சயம் என்ற

திரைச்சீலை மேலும் நினைவு என்ற மணிகள் இரண்டும் சக்திசாலியாக இருக்கிறது இல்லையா? அல்லது மணிகள் சரியாக இருக்கிறது, ஆனால் திரைச்சீலை பலஹீனமாக இருக்கிறதா? ஒன்று பலஹீனமாக இருந்தாலும், தெளிவாக இருக்காது. எனவே கண்களின் சக்தி குறைந்து விடவில்லையே என்று சோதனை செய்யுங்கள். மற்றும் சோதனை செய்யவையுங்கள். ஒருவேளை பிறந்ததிலிருந்தே ஸ்ரீமத் என்ற பத்தியத்தை கடைப்பிடித்து வந்திருக்கிறீர்கள் என்றால், கண்கள் எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கும். ஸ்ரீமத்தின் பத்தியத்தில் குறையிருக்கும் பொழுது தான், சக்தியும் குறைந்து விடுகிறது. மீண்டும் ஸ்ரீமத்தின் ஆசீர்வாதம் என்று கூறினாலும், மருந்து என்று கூறினாலும், பத்தியம் என்று கூறினாலும் அதைக் கடைப்பிடித்தீர்கள் என்றால், மீண்டும் சக்திசாலியாக ஆகி விடுவீர்கள். அப்படி இந்தக் கண்கள் தெய்வீக, தொலைநோக்கு கண்ணாடியாகும்.

இந்தக் கண்கள் சக்திசாலியான இயந்திரமும் ஆகும். இதன் மூலமாக யார் எப்படி இருக்கிறார் என்று, ஆத்மீக ரூபத்தில், ஆத்மாவின் விசேஷத்தை சுலபமாக மற்றும் தெளிவாகப் பார்க்க முடியும். உடலின் உள்ளே அமர்ந்திருக்கும் குப்தமான (மறைவான) ஆத்மாவை எப்படி ஸ்தூல கண்கள் மூலமாக, ஸ்தூல உடலைப் பார்க்கிறீர்கள். அந்தமாதிரி பார்க்க முடியும். அந்தமாதிரி தெளிவாக ஆத்மா தென்படுகிறது தான் இல்லையா? அல்லது உடல் தென்படுகிறதா? தெய்வீகக் கண்கள் மூலமாக, தெய்வீக சூட்சும ஆத்மா தான் தென்படும். மேலும் ஒவ்வொரு ஆத்மாவின் விசேஷம் தான் தென்படும். எப்படி கண்கள் தெய்வீகமாக இருக்கிறது என்றால், விசேஷம் அதாவது குணமும், தெய்வீகமானதாக இருக்கும். அவகுணமும் ஒரு பலஹீனம். பலஹீனமான கண்களே பலஹீனத்தைப் பார்க்கும். எப்படி ஸ்தூல கண்கள் பலஹீனமாகிறது என்றால், கருப்பு கருப்பான புள்ளி தென்படும். அதேபோல் பலஹீனமான கண்கள் அவகுணத்தின் கருப்பைத் தான் பார்க்கும். பாப்தாதா பலஹீனமான கண்களைக் கொடுக்க வில்லை. அவர்களே பலஹீனமானதாக ஆக்கினார்கள். உண்மையில் இந்த சக்திசாலியான இயந்திரம் என்ற கண்கள், நடைமுறையில் இயற்கையான ரூபத்தில், எப்பொழுதும் ஆத்மீக ரூபத்தைப் பார்க்கும். இது உடலா அல்லது ஆத்மாவா என்று கடும் முயற்சி செய்ய வேண்டியதாக இருக்காது. இதுவா அல்லது அதுவா என்றால், இது பலஹீனமான கண்களின் அடையாளம்.

எப்படி அறிவியலைச் சேர்ந்தவர்கள், சக்திசாலியான கண்ணாடி மூலமாக அனைத்து கிரிமிகளையும் தெளிவாகப் பார்க்க முடிகிறது. இந்த சக்திசாலியான கண்கள் மூலம் மாயாவின் மிக சூட்சம சொரூபத்தைத் தெளிவாகப் பார்க்க முடியும். எனவே கிரிமிகளை வளரவிடுவதில்லை, உடனே அழித்து விடுகிறார்கள். யாருடைய மாயாவின் நோயையும் முன்பாகத் தெரிந்து கொண்டு அழித்து விட்டு, எப்பொழுதும் நோயற்றவராக இருப்பார்கள்.

இந்த தெய்வீகக் கண்கள் அந்த மாதிரி சக்திசாலியானது. இந்த தெய்வீகக் கண்கள் தெய்வீகத் தொலைக் காட்சி பெட்டியும் தான். இன்றைய நாட்களில் தொலைக்காட்சி பெட்டி, அனைவருக்கும் விருப்பமானதாக இருக்கிறது இல்லையா? இதை டி.வி என்று கூறினாலும் தூர்தர்ஷன் என்று கூறினாலும், இதில் தன்னுடைய சொர்க்கத்தின் அனைத்து ஜென்மங்களை அதாவது தன்னுடைய 21 ஜென்மங்களின் தெய்வீகத் திரைப்படத்தைப் பார்க்க முடியும். தன்னுடைய இராஜ்யத்தின் அழகான காட்சிகளைப் பார்க்க முடியும். ஆத்மாவின் ஒவ்வொரு ஜென்மத்தின் கதையைப் பார்க்க முடியும். தன்னுடைய கீரிடம், சிம்மாசனம், இராஜ்ய பாக்கியத்தைப் பார்க்க முடியும். தெய்வீக தரிசனம் என்று கூறினாலும், அல்லது தூர்தர்ஷன் என்று கூறினாலும் ஒன்று தான். தெய்வீக தர்சனத்தின் கண்கள் சக்திசாலியாக இருக்கிறது இல்லையா? எப்பொழுது நீங்கள் ஓய்வாக இருக்கிறீர்களோ, அப்பொழுது இந்த திரைப்படத்தைப் பாருங்கள், இன்றைய நாட்களின் நடனத்தைப் பார்க்காதீர்கள், அது ஆபத்தான நடனம். ஃபரிஸ்தாக்களின் நடனம், தேவதைகளின் நடனத்தை பாருங்கள். நினைவு என்ற பொத்தான் சரியாக வேலை செய்கிறது தான் இல்லையா? ஒருவேளை பொத்தான் சரியாக இல்லையென்றால் இயக்கினாலும், ஒன்றும் தென்படாது. இந்தக் கண்கள் எவ்வளவு சிரேஷ்டமானது என்று புரிந்து கொண்டீர்களா? இன்றைய நாட்களில் ஏதாவது ஒரு பொருளைக் கண்டுபிடிக்கிறார்கள் என்றால், இந்தப் பொருள் பலவிதமான காரியத்தில் உபயோகத்தில் வரவேண்டும் என்று பெரும்பான்மையோர் இலட்சியம் வைக்கிறார்கள். அதேபோல் இந்த தெய்வீகக் கண்கள், அநேக காரியத்தை நிரூபிக்கக் கூடியது. பாப்தாதா குழந்தைகளின் பலஹீனத்தின் புகார்களை அவ்வப்பொழுது கேட்டு, தெய்வீக புத்தி கிடைத்திருக்கிறது, தெய்வீகக் கண்கள் கிடைத்திருக்கிறது, இதை விதிப் பூர்வமாக எப்பொழுதும்

உபயோகித்து கொண்டேயிருந்தீர்கள் என்றால், யோசிப்பதற்கும் நேரம் இருக்காது, பார்ப்பதற்கும் நேரம் இருக்காது. வேறு எதையும் யோசிக்க மாட்டீர்கள், பார்க்க மாட்டீர்கள். பிறகு எந்தவிதமான புகாரும் இருக்க முடியாது. யோசிப்பது மற்றும் பார்ப்பது, இந்த இரண்டும் தான் முழுமையாக ஆவதற்கும் மற்றும் புகார் செய்வதற்குமான ஆதாரமாகும். பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் எப்பொழுது,ம் தெய்வீகமாக யோசியுங்கள், எப்படி யோசிப்பீர்களோ, அப்படி செய்வதாக இருக்கும், எனவே இந்த இரண்டு தெய்வீக பிராப்திகளை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ளுங்கள். சுலபம் தான் இல்லையா? நீங்கள் சக்தி சாலியானவர்கள்தான், ஆனால் என்னவாக ஆகி விடுகிறீர்கள், எப்பொழுது ஸ்தாபனை ஆனதோ, அப்பொழுது சின்னஞ்சிறிய குழந்தைகள் போலாபாய் (வெகுளியான சகோதரன்) வசனம் பேசுவார்கள். அப்படி நீங்களோ சக்திசாலியானவர், ஆனால் போலாபாய் ஆகி விடுகிறீர்கள். எனவே போலாபாயாக ஆகாதீர்கள். எப்பொழுதும் சக்திசாலியானவராக ஆகுங்கள். மேலும் மற்றவர்களையும் சக்திசாலியாக ஆக்குங்கள். புரிந்ததா? நல்லது.

எப்பொழுதும் தெய்வீக புத்தி மற்றும் தெய்வீகக் கண்களை காரியத்தில் ஈடுபடுத்தக் கூடிய, எப்பொழுதும் தெய்வீக புத்தி மூலமாக சிரேஷ்ட சிந்தனை, தெய்வீகக் கண்கள் மூலமாக தெய்வீக காட்சியை பார்ப்பதில் மூழ்கியிருக்கக் கூடிய, எப்பொழுதும் தன்னுடைய எதிர்கால தேவதை சொரூபத்தை தெளிவாக அனுபவம் செய்யக் கூடிய, எப்பொழுதும் இன்று மற்றும் நாளையை அந்தளவு அருகாமையில் அனுபவம் செய்யக் கூடிய, அந்தமாதிரியான சக்திசாலியான, தெய்வீக கண்கள் உள்ள திரிநேத்திரி, திரிகாலதரிசி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தனிப்பட்ட சந்திப்பு:** 1. சகஜயோகி ஆவதற்கான விதி: நீங்கள் அனைவரும் சகஜயோகி ஆத்மாக்கள் இல்லையா. எப்பொழுதும் தந்தையின் அனைத்து சம்மந்தங்களின் அன்பில் மூழ்கியிருப்பவர்கள். அனைத்து சம்மந்தங்களின் அன்பு தான் சகஜமாக்கி விடுகிறது. எங்கு அன்பு நிறைந்த சம்மந்தம் இருக்குமோ, அங்கு சுலபமாக இருக்கும். மேலும் எது சகஜமாக இருக்குமோ, அது நிரந்தரமாக இருக்கும். நீங்கள் அந்தமாதிரி சகஜ யோகி ஆத்மாக்கள், தந்தையின் அனைத்து அன்பு

நிறைந்த உறவுகளையும் அனுபவம் செய்கிறீர்களா? உதவ் -க்கு சமமானவர்களாக, அல்லது கோபிகளுக்கு சமமானவர்களா? உதவ் ஞானத்தை வர்ணனை மட்டும் செய்து கொண்டேயிருந்தார். கோபர்கள், கோபிகள் பிரபுவின் அன்பை அனுபவம் செய்பவர்கள். அப்படி அனைத்து சம்மந்தங்களின் அனுபவம் என்பது தான் விசேஷம். இந்த சங்கமயுகத்தில் இந்த விசேஷ அனுபவம் செய்வது தான் வரதானத்தை பிராப்தி செய்வது. ஞானம் கேட்பது, கூறுவது வேறு விஷயம். சம்மந்தத்தை வைத்து நடந்து கொள்வது, சம்மந்ததின் சக்தி மூலம் நிரந்தர ஈடுபாட்டில் முழ்கியிருப்பது வேறு விஷயம். எனவே எப்பொழுதும் அனைத்து சம்மந்தங்களின் ஆதாரத்தினால், சகயோகி ஆகுக. இந்த அனுபவத்தை அதிகப்படுத்திக் கொண்டேயிருங்கள். இம்மாதிரி முழ்கியிருக்கும் நிலை, கோப -கோபியர்களின் விசேஷமாகும். அன்பு வைப்பது வேறு விஷயம், அன்பில் முழ்கியிருப்பது, இது தான் சிரேஷ்ட அனுபவம்.

2. உயர்ந்த நிலை தடைகளின் பிராபவத்திலிருந்து விலகியிருப்பது: -எப்பொழுதாவது, ஏதாவது தடையின் பிரபாவத்தில் வருவதில்லையே? உயர்ந்த நிலை இருக்கிறது என்றால், உயர்ந்த நிலையில் இருப்பவர்கள், தடைகளின் பிரபாவத்திலிருந்து விலகி இருந்து விடுவார்கள். எப்படி விண்வெளியில் செல்கிறார்கள் என்றால், உயர்வாகச் செல்கிறார்கள், பூமியின் பிரபாவத்திலிருந்து விலகிச் சென்றுவிடுகிறார்கள். அதேபோல் இவர்கள் எந்தவொரு தடைகளின் பிரபாவத்திலிருந்தும் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பார்கள். யார் அன்பில் இருப்பதில்லையோ, அவர்கள் ஏதாவது விதமான கடின உழைப்பின் அனுபவம் செய்ய வேண்டியதாக இருக்கும். எனவே அனைத்து சம்மந்தங்களின் அன்பின் அனுபவத்தில் இருங்கள். அன்பு இருக்கிறது, ஆனால் அதை வெளிப்படும் ரூபத்தில் வையுங்கள், அமிர்தவேளை மட்டும் நினைவு செய்தீர்கள், பிறகு காரியத்தில் பிஸியாக விட்டீர்கள் என்றால், உள்ளடங்கி இருந்து விடும். வெளிப்படும் ரூபத்தில் வைத்தீர்கள் என்றால், எப்பொழுதும் சக்திசாலியாக இருப்பீர்கள்.

**வரதானம்: நிலம், நாடி மற்றும் நேரத்தைப் பார்த்து சத்திய ஞானத்தை பிரத்யக்ஷம் செய்யக் கூடிய ஞானம் நிறைந்தவர் ஆகுக!**

தந்தையின் இது புதிய ஞானம், சத்திய ஞானம். இந்த ஞானத்தின் மூலம் தான் புதிய உலகம் ஸ்தாபனை ஆகிறது. இது அதிகாரம் மற்றும் போதை சொரூபத்தில் வெளிப்படும் வகையில் இருக்கட்டும் ஆனால் யாராவது வந்தவுடனேயே, புது ஞானத்தின் புதுப்புது விசயங்களைக் கூறி குழப்பமடைய வைப்பது என்று அர்த்தமில்லை. நிலம், நாடி மற்றும் நேரம் அனைத்தையும் பார்த்து, ஞானம் சொல்ல வேண்டும். இது ஞானம் நிறைந்தவரின் அடையாளம். ஆத்மாவின் விருப்பத்தைப் பாருங்கள், நாடி பாருங்கள், நிலத்தை உருவாக்குங்கள், ஆனால் உள்ளே சத்தியத்தின் பயமின்மையின் சக்தியும் அவசியம் இருக்க வேண்டும், அப்பொழுது தான் சத்திய ஞானத்தை பிரத்யக்ஷம் (வெளிப்படுத்துதல்) செய்ய முடியும்.

**சுலோகன்: என்னுடையது என்று கூறுவது என்றால், சிறிய விசயத்தைப் பெரியதாக்குவது, உன்னுடையது என்று கூறுவது என்றால், மலை போன்ற விசயத்தையும் பஞ்சாக ஆக்கி விடுவது!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 28.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலக சேவைக்கான சகஜ சாதனம் மனசா சேவை!

இன்று சர்வசக்திவான் தந்தை, தம்முடைய சக்தி சேனை, பாண்டவ சேனை, ஆன்மிக சேனையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சேனையின் மகாவீர் தமது ஆன்மிக சக்தி மூலம் எது வரை வெற்றியாளராக ஆகியிருக்கிறார்? விசேஷமாக மூன்று சக்திகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு மகாவீர் ஆத்மாவின் மனசா சக்தி எது வரை சுய மாற்றத்திற்காகவும் சேவைக்காகவும் தாரணை ஆகியிருக்கிறது? அதே போல் வார்த்தையின் சக்தி, கர்மணா சக்தி, அதாவது சிரேஷ்ட கர்மத்தின் சக்தி எது வரை சேமிப்பாகி இருக்கிறது? வெற்றி ரத்தினம் ஆவதற்கு இந்த மூன்று சக்திகளும் அவசியமாகும். மூன்று சக்திகளில் ஒன்று குறைவாக இருந்தாலும் நிகழ்காலப் பிராப்தி மற்றும் பிராலப்தம் குறைவாகி விடும். வெற்றி ரத்தினம் என்றால் மூன்று சக்திகளும் நிரம்பியவர். உலக சேவாதாரி யிலிருந்து உலக ராஜ்ய அதிகாரி ஆவதற்கான ஆதாரம் இந்த மூன்று சக்திகளும் நிரம்பிய நிலையாகும். சேவாதாரி ஆவது மற்றும் உலக சேவாதாரி ஆவது, உலக ராஜன் ஆவது அல்லது சத்யுக ராஜன் ஆவது இதற்கிடையிலும் வேறுபாடு உள்ளது. சேவாதாரிகள் அநேகர் உள்ளனர், உலக சேவாதாரிகள் ஒரு சிலர் மட்டுமே. சேவாதாரி என்றால் மூன்று சக்திகளையும் தங்களின் சக்திக்கேற்றவாறு தாரணை செய்தவர்கள். உலக சேவாதாரி என்றால் மூன்று சக்திகளும் நிரம்பப் பெற்றவர். இன்று ஒவ்வொருவரிடமும் மூன்று சக்திகளும் சதவிகிதத்தில் இருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சர்வ சிரேஷ்ட மனசா சக்தி மூலம் யாராவது ஆத்மா எதிரில் இருந்தாலும், அருகில் இருந்தாலும், அல்லது எவ்வளவு தான் தூரத்தில் இருந்தாலும் -- ஒரு விநாடியில் அந்த ஆத்மாவுக்குப் பிராப்தியின் சக்தியை அனுபவம் செய்விக்க முடியும். மனதின் சக்தியானது, எந்த ஓர் ஆத்மாவின்

மனக்குழப்பம் நிறைந்த ஸ்திதியையும் கூட ஆடாது உறுதியாக ஆக்க முடியும். மனதின் சக்தி, அதாவது சுபபாவனை, சிரேஷ்ட விருப்பம் – இந்த சிரேஷ்ட பாவனை மூலம் எந்த ஓர் ஆத்மாவையும், சந்தேக புத்தி உள்ளவர்களை, பாவனையுடன் கூடிய புத்தி உள்ளவர்களாக ஆக்க முடியும். சிரேஷ்ட பாவனை மூலம் எந்த ஓர் ஆத்மாவின் வீணான பாவனையையும் மாற்றி, சக்திசாலி பாவனையாக ஆக்க முடியும். சிரேஷ்ட பாவனை மூலம் எந்த ஓர் ஆத்மாவின் சுபாவத்தையும் கூட மாற்ற முடியும். சிரேஷ்ட பாவனையின் சக்தி மூலம் ஆத்மாவுக்கு பாவனையின் பலனை அனுபவம் செய்விக்க முடியும். சிரேஷ்ட பாவனை மூலம் பகவானுக்கு சமீபமாகக் கொண்டுவர முடியும். சிரேஷ்ட பாவனை எந்த ஓர் ஆத்மாவின் பாக்கியத்தின் ரேகையையும் மாற்ற முடியும். சிரேஷ்ட பாவனை தைரியமற்ற ஆத்மாவை தைரியவானாக ஆக்கி விடுகிறது. இதே சிரேஷ்ட பாவனையின் விதிப்படி மனசா சேவையை எந்த ஓர் ஆத்மாவுக்கும் செய்ய முடியும். மனசா சேவை என்பது இப்போதைய சமயத்தின் பிரமாணம் மிக அவசியமாகும் ஆனால் யாருக்கு தன்னுடைய மனம், அதாவது சங்கல்பம் சதா அனைவருக்காகவும் சிரேஷ்டமானதாக இருக்கிறதோ, சுயநலமற்றதாக உள்ளதோ, சதா பரோபகார பாவனை உள்ளதோ, அவர்கள் தாம் மனசா சேவை செய்ய முடியும். மேலும் அவர்களிடம் அபகாரிக்கும் கூட உபகாரம் செய்யும் சிரேஷ்ட பாவனை இருக்க வேண்டும். சதா கொடுக்கும் வள்ளலின் பாவனை இருக்க வேண்டும். சதா சுய மாற்றம், தனது சிரேஷ்ட கர்மத்தின் மூலம் மற்றவர்களுக்கு சிரேஷ்ட கர்மம் செய்வதற்கான தூண்டுதல் தருபவராக இருக்க வேண்டும். இவர்களும் செய்யட்டும், அப்போது நானும் செய்கிறேன், இவர் கொஞ்சம் செய்யட்டும், நானும் கொஞ்சம் செய்கிறேன், சிறிது இவரும் செய்யட்டும் என்ற இந்த பாவனையிலிருந்து அப்பாற் பட்டவராக இருக்க வேண்டும். யாராவது செய்ய இயலாமல் இருந்தாலும், பிறகும் கூட இரக்கத்தின் பாவனை, சதா சகயோகத்தின் பாவனை, அவர்களின் தைரியத்தை அதிகரிப்பதற்கான பாவனை இருக்க வேண்டும். அத்தகையவர் தாம் மனசா சேவாதாரி எனச் சொல்லப் படுவார். மனசா சேவையை, ஓரிடத்தில் நிலைத்திருந்தவாறே கூட நாலாபுறத்துக்கான சேவை செய்ய முடியும். வாய்மொழி மூலமாகச் செய்யும் சேவை மற்றும் கர்மத்திற்காகவோ சென்று தான் ஆக வேண்டும். மனசா சேவையை எங்கு வேண்டுமானாலும் அமர்ந்து கொண்டு செய்ய முடியும்.

மனசா சேவை என்பது ஆன்மிக வயர்லெஸ் செட்டாகும். அதன் மூலம் தூரத்தின் சம்மந்தத்தை சமீபமாக ஆக்க முடியும். தூரத்தில் அமர்ந்தவாறே எந்த ஓர் ஆத்மா வையும் பாபாவுடையவராக ஆவதற்கான ஊக்கம்-உற்சாகத்தை உருவாக்கு வதற்கான செய்தியைக் கொடுக்க முடியும். அப்போது யாரோ மகான் சக்தி என்னை அழைத்துக் கொண்டிருக்கிறது, சில விலைமதிக்க முடியாத பிரேரணை களை எனக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதாக அந்த ஆத்மாவுக்கு அனுபவமாகும். எப்படி யாருக்காவது முன் செய்தி கொடுத்து ஊக்கம்-உற்சாகத் தில் கொண்டு வருகிறீர்களோ, அது போல. மனசா சக்தி மூலமாகவும் கூட அந்த ஆத்மா இது போலத்தான் அனுபவம் செய்வார் -- யாரோ எதிரில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதாக. தூரத்திலிருந்த போதும் முன்னால் அமர்ந்திருப்பதாக அனுபவம் ஆகும். உலக சேவாதாரி ஆவதற்கான சகஜ சாதனமே மனசா சேவை தான். எப்படி விஞ்ஞானிகள் இந்த சாகார சிருஷ்டியிலிருந்து, பூமியிலிருந்து மேலே விண்வெளி வாகனத்தின் மூலம் தங்களின் காரியத்தை சக்திசாலி ஆக்கு வதற்கான முயற்சி செய்து கொண்டுள்ளனர். ஸ்தூலத்திலிருந்து சூட்சுமத்தில் சென்று கொண்டிருக்கின்றனர். ஏன்? சூட்சுமம் சக்திசாலியாக உள்ளது. மனசா சக்தி கூட உள் நோக்குமுக வாகனமாகும். அதன் மூலம் எங்கே விரும்பினாலும் எவ்வளவு விரைவாகச் செல்ல விரும்பினாலும் சென்று சேர முடியும். எப்படி விஞ்ஞானத்தின் மூலம் பூமியின் ஈர்ப்பு சக்தியில் இருந்து அப்பால் செல்பவர்கள் தாமாகவே லேசாக ஆகி விடுகின்றனர். அது போல் மனசா சக்திசாலி ஆத்மா தானாகவே டபுள் லைட் சொரூபமாக சதா அனுபவம் செய்கிறார். எப்படி விண்வெளி வாகனத்தில் செல்பவர் உயரத்தில் இருக்கும் காரணத்தால் பூமி முழுவதன் சித்திரத்தை வரைய விரும்பினாலும் வரைய முடியும். அது போல் அமைதியின் சக்தி மூலம் உள்முகநோக்கின் வாகனம் மூலம் மனசா சக்தி மூலம் எந்த ஓர் ஆத்மாவையும் சரித்திரவான் ஆக்குவதற்கான, சிரேஷ்ட ஆத்மா ஆக்குவதற்கான பிரேரணை கொடுக்க முடியும். விஞ்ஞானிகளோ ஒவ்வொரு பொருள் மீதும் சமயம் மற்றும் செல்வத்தை நன்கு ஈடுபடுத்துகின்றனர் ஆனால் நீங்கள் செலவே இல்லாமல் குறைவான சமயத்தில் அதிக சேவை செய்ய முடியும். எப்படி தற்சமயம் எங்கெங்கோ பறக்கும் தட்டைப் பார்க்கின்றனர். செய்திகளைக் கேட்கிறீர்கள் இல்லையா? அதுவும் ஒளி மட்டுமே காணப் படுகிறது. அது

போல் மனசா சேவாதாரி ஆத்மாக்கள் உங்களுக்கு முன்பாகச் சென்று அனுபவம் செய்வார்கள் --ஏதோ ஒளிப் புள்ளி வந்தது, விசித்திர அனுபவம் செய்வித்துச் சென்றது. இவர்கள் யாராக இருக்கும்? எங்கிருந்து வந்தனர்? என்ன கொடுத்து விட்டுச் சென்றனர்? இந்த விவாதம் அதிகரித்துக் கொண்டே செல்லும். எப்படி ஆகாயத்தின் நட்சத்திரங்கள் பக்கம் அனைவரின் பார்வை செல்கிறது, அது போல் பூமியின் நட்சத்திரங்களின் தெய்விக ஜோதியை நாலாபுறமும் அனுபவம் செய்வார்கள். மனசா சேவாதாரிகளின் சக்தி அத்தகையது. புரிந்ததா? மகான் தன்மை என்பதோ இன்னும் அதிகம் ஆனால் இன்று இவ்வளவு மட்டுமே சொல்கிறேன். மனசா சேவையை இப்போது தீவிரப் படுத்துங்கள், அப்போது 9 லட்சம் தயாராவார்கள். இப்போது பொன்விழா சமயம் வரை இவ்வளவு எண்ணிக்கை வந்துள்ளதா? சத்யுகத்தின் வைரவிழா வரை 9 லட்சமோ வேண்டும் இல்லையா? இல்லையென்றால் உலக ராஜன் யார் மீது ராஜ்யம் செய்வார்? 9 லட்சம் நட்சத்திரங்கள் பாடப் பட்டுள்ளனர் இல்லையா? நட்சத்திர ரூப ஆத்மாவின் அனுபவம் செய்வீர்களானால் அப்போது 9 லட்சம் நட்சத்திரங்கள் பாடப் படுவார்கள். ஆகவே இப்போது நட்சத்திரங்களின் அனுபவம் செய்வியுங்கள். நல்லது --நாலாபுறமும் இருந்து வந்துள்ள குழந்தைகளுக்கு மதுபன் நிவாசி ஆவதற்கான வாழ்த்துகள் மற்றும் சந்திப்பின் விழாவுக்கான வாழ்த்துகள்! இதே அவிநாசி அனுபவத்தின் வாழ்த்துகளை சதா கூடவே வைத்திருங்கள். புரிந்ததா?

சதா மகாவீர் ஆகி, மனசா சக்தியின் மகான் தன்மை மூலம் சிரேஷ்ட சேவை செய்யக்கூடிய, சதா சிரேஷ்ட பாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பத்தின் விதி மூலம் எல்லையற்ற சேவையின் சித்தி பெறக்கூடிய, தனது உயர்ந்த ஸ்திதி மூலம் நாலாபுறமும் உள்ள ஆத்மாக்களுக்கு சிரேஷ்ட பிரேரணை கொடுக்கும் உலக சேவாதாரிகள், சதா தங்களின் சுப பாவனை மூலம் மற்ற ஆத்மாக்களுக்கும் கூட பாவனையின் பலனைக் கொடுக்கக் கூடிய, அத்தகைய விஷ்வ கல்யாண்காரி, பரோபகாரி, உலக சேவாதாரி குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

**குமார்களுக்காக பாப்தாதாவின் விசேஷ மதுர மகாவாக்கியங்கள்:**

குமார், பிரம்மா குமாராகவோ ஆகி விட்டீர்கள் ஆனால் பிரம்மாகுமார் ஆன பிறகு என்னவாக ஆக வேண்டும்? சக்திசாலி குமார். எது வரை

சக்திசாலி ஆக வில்லையோ, அது வரை வெற்றியாளராக ஆக முடியாது. சக்திசாலி குமார் எப்போதுமே ஞானம் நிறைந்த, சக்தி நிறைந்த ஆத்மாவாக இருப்பார். ஞானம் நிறைந்தவர் என்றால் படைப்பவர் பற்றியும் அறிந்திருப்பவர், படைப்பு பற்றியும் அறிந்திருப்பவர் மற்றும் மாயாவின் பலவித ரூபங்களையும் அறிந்திருப்பவர். அத்தகைய ஞானம் நிறைந்த, சக்தி நிறைந்தவர் சதா வெற்றியாளராக இருப்பார். ஞானத்தை வாழ்க்கையில் தாரணை செய்வது என்றால் ஞானத்தை ஆயுதமாக (சஸ்திரம்) ஆக்குவது. ஆக, சஸ்திரதாரி சக்திசாலியாக இருப்பார் இல்லையா? இன்று இராணுவத்தினர் எந்த ஆதாரத்தில் சக்திசாலியாக உள்ளனர்? ஆயுதங்கள் உள்ளன, வெடிமருந்துகள் உள்ளன, அதனால் பயமற்றவராக ஆகி விடுகின்றனர். ஆக, யார் ஞானம் நிறைந்தவராக இருப்பாரோ, அவர் சக்திசாலியாக அவசியம் இருப்பார். ஆகவே மாயா பற்றியும் முழு ஞானம் உள்ளது. என்னவாகும், எப்படியாகும், தெரியாது, மாயா எப்படி வந்தது என்றால் ஞானம் நிறைந்தவர் இல்லை என்றாகிறது. ஞானம் நிறைந்த ஆத்மா முன்கூட்டியே அறிந்து கொள்வார். எப்படி புத்திசாலியாக இருப்பவர்கள், நோயை முன்பாகவே அறிந்து கொள்கின்றனர். காய்ச்சல் வரப் போகிறது என்றால் ஏதோ ஆகிக் கொண்டிருக்கிறதே என்று முன்கூட்டியே தெரிந்து கொண்டு, முதலிலேயே மருந்து எடுத்துக் கொண்டு அதைச் சரி செய்து, குணமாக்கிக் கொள்வார்கள். புத்தியற்றவர்களுக்குக் காய்ச்சல் வந்தாலும் கூட சுற்றிக் கொண்டே இருப்பார்கள். காய்ச்சலும் அதிகமாகிக் கொண்டே போகும். அப்படியே மாயாவும் வருகிறது, ஆனால் வருவதற்கு முன் புரிந்து கொண்டு, அதை தூரத்திலிருந்தே விரட்டிவிட வேண்டும். ஆக, அப்படிப்பட்ட புத்திசாலி குமார்கள் இல்லையா, நீங்கள்? அல்லது உங்களிடம் கூட மாயா வருமானால் அதை விரட்டுவதில் நேரம் பிடிக்கிறதா? சக்தியைப் பார்த்து, தூரத்திலிருந்தே விரோதி ஓடிப்போய் விடுகிறான். வந்த பிறகு அதை விரட்டுகிறீர்கள் என்றால் நேரமே வீணாகிறது மற்றும் பலவீனமான பழக்கமாக ஆகி விடும். யாராவது அடிக்கடி நோய்வாய்ப் படுவாரானால் பலவீனமாகி விடுகிறார் இல்லையா? அல்லது அடிக்கடி படிப்பில் ஃபெயிலாகிப் போனால் இவர் படிப்பில் பலவீனமாக உள்ளார் எனச் சொல்வார்கள் இல்லையா? அது போல் மாயா அடிக்கடி வருகிறது, போராடிக் கொண்டே இருக்கிறது என்றால் தோல்வியடைவதே பழக்கமாகி விடும் மற்றும் அடிக்கடி தோல்வியடைவதால் பலவீனமாகி விடுவீர்கள். அதனால் சக்திசாலி

ஆகுங்கள். அத்தகைய சக்திசாலி ஆத்மா சதா பிராப்தியின் அனுபவம் செய்வார்கள். யுத்தத்தில் தங்கள் நேரத்தை வீணாக்க மாட்டார்கள். வெற்றியின் குஷியைக் கொண்டாடுவார்கள். ஆகவே ஒரு போதும் எந்த ஒரு விஷயத்திலும் பலவீனமாக ஆகாதீர்கள். குமார் என்றாலே புத்தி நிறைந்தவர்கள். அதர்குமார் ஆவதால் புத்தி பங்கிடப் பட்டு விடுகிறது. குமார் களுக்கு ஒரே வேலை தான் உள்ளது, அது தங்களுடைய வாழ்க்கை. அவர்களுக்கோ எவ்வளவு பொறுப்புகள் உள்ளன! நீங்கள் பொறுப்புகளில் இருந்து விடுபட்டு, சுதந்திரமாக இருக்கிறீர்கள். யார் சுதந்திரமாக இருக்கிறார்களோ, அவர்கள் முன்னேறிச் செல்வார்கள். சுமை உள்ளவர்கள் மெது-மெதுவாகத் தான் செல்வார்கள். சுதந்திரமாக, லேசாக இருந்தால் அவர்கள் வேகமாகச் செல்வார்கள். ஆக, நீங்கள் மிக வேகமாகச் செல்பவர்களா, ஒரே சமநிலையில் (ஏக்ரஸ்) இருக்கிறீர் களா? சதா தீவிரம் என்றால் ஒரே சமநிலை. ஆறு மாதம் முடிந்த பிறகும் முதலில் எப்படி இருந்தார்களோ, அப்படியே சென்று கொண்டிருக்கிறார்கள் என்றும் இருக்கக் கூடாது. இதையும் தீவிர வேகம் எனச் சொல்ல மாட்டார்கள். இன்று தீவிர வேகத்தில் செல்பவர்கள், நாளை அதை விட அதிகமாக முன்னால், நாளை மறுநாள் அதை விடவும் முன்னால் செல்வார்களானால் அவர்கள் தீவிர வேகத்தில் செல்பவர்கள் எனச் சொல்லப் படுவார்கள். ஆகவே சதா தன்னை சக்திசாலி குமார் என உணருங்கள். பிரம்மா குமார் ஆகி விட்டோம் என்ற இதே குஷியில் மட்டுமே இருந்து விட்டீர்கள், சக்திசாலி ஆகவில்லை என்றால் வெற்றியாளர் ஆக முடியாது. பிரம்மாகுமார் ஆவது என்பது மிகவும் நல்லது தான், ஆனால் சக்திசாலி பிரம்மா குமார் சதா சமீபத்தில் இருக்கிறார்கள். இப்போது சமீபத்தில் இருப்பவர்கள், இராஜ்யத்திலும் கூட சமீபத்தில் இருப்பார்கள். இப்போதைய ஸ்திதியில் சமீபம் இல்லை என்றால் இராஜ்யத்திலும் சமீப நிலை என்பது இருக்காது. இப்போதைய பிராப்தி, சதா காலத்தின் பிராப்தியை உருவாக்கி விடுகிறது, ஆகவே சக்திசாலி. அத்தகைய சக்தி சாலி தான் விஷ்வ கல்யாண்காரி ஆக முடியும். குமார்களிடம் சக்தியோ இருக்கவே செய்கிறது -- சரீரத்தின் சக்தியாக இருந்தாலும் சரி, ஆத்மாவின் சக்தியாக இருந்தாலும் சரி ஆனால் உலக நன்மைக்காக சக்தி உள்ளதா, அல்லது உலக விநாசத்திற்கான காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான சக்தி உள்ளதா? சங்கல்பத்தில் கூட சதா அனைவருக்காகவும் நன்மையின் பாவனை இருக்கட்டும். கனவில் கூட நன்மையின் பாவனை இருக்கட்டும். அவர் தாம் சிரேஷ்ட சக்திசாலி எனச்

சொல்லப் படுவார். குமார் சக்தி மூலம் என்ன நினைக்கின்றனரோ, அதைச் செய்ய முடியும். அந்த சங்கல்பம் மற்றும் கர்மம் இரண்டும் ஒன்றாக இருக்க வேண்டும். இன்று சங்கல்பம் செய்வதும் பின்னால் கர்மம் செய்வதும் கூடாது. சங்கல்பம் மற்றும் கர்மம் இரண்டும் ஒன்றாகவும் இருக்க வேண்டும் சேர்ந்தாற்போலவும் இருக்க வேண்டும். அத்தகைய சக்தி இருக்க வேண்டும். அத்தகைய சக்தி உள்ளவர்கள் தாம் அநேக ஆத்மாக்களுக்கு நன்மை செய்ய முடியும். ஆக, நீங்கள் சதா வெற்றி பெறக் கூடியவர்களா அல்லது பிரச்சினை செய்யக் கூடியவர்களா? மனதில், கர்மத்தில், தங்களுக்குள் அனைத்திலும் சரி. எதிலும் பிரச்சினை கூடாது. சதா தன்னை விஷ்வ கல்யாண்காரி குமார் என உணர்ந்து கொள்வீர்களானால் என்னென்ன கர்மம் செய்வீர்களோ, அதில் நன்மையின் பாவனை நிறைந்திருக்கும். நல்லது.

**விடைபெறும் சமயம், அமிர்த வேளையில் குழந்தைகள் அனைவருக்கும் அன்பு நினைவுகளைக் கொடுத்தார்!** ஒவ்வொரு காரியமும் மங்களகரமானதாக இருக்கட்டும். ஒவ்வொரு கர்மமும் சதா வெற்றி தருவதாக இருக்கட்டும். அதற்காகக் குழந்தைகள் அனைவருக்கும் வாழ்த்துகள்! அப்படியே ஒவ்வொரு நாளும் சங்கம யுகத்தின் சுபம் தான், சிரேஷ்டமானது தான், ஊக்கம்-உற்சாகம் தருவது. ஆகவே ஒவ்வொரு நாளின் மகத்துவம் அதனதனுடையதாகும். இன்றைய நாள் ஒவ்வொரு சங்கல்பமும் கூட மங்கள மயமானதாக இருக்கட்டும். அதாவது சுப சிந்தனை ரூபம் உள்ளதாக இருக்கட்டும். ஆக, இன்றைய நாளின் இந்த மகத்துவத்தை சங்கல்பம், பேச்சு மற்றும் கர்மம் மூன்றிலும் விசேஷ நினைவில் வைக்க வேண்டும். மேலும் இந்த நினைவு வைப்பது தான் ஒவ்வொரு விநாடியும் பாப்தாதாவின் அன்பு நினைவை ஸ்வீகாரம் செய்வதாகும். ஆகவே வெறுமனே இப்போது அன்பு நினைவை மட்டும் கொடுத்துக் கொண்டிருக்கவில்லை, ஆனால் நடைமுறைப் படுத்த வேண்டும், அதாவது அன்பு நினைவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இன்று நாள் முழுவதும் அன்பு நினைவைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அதாவது நினைவில் இருந்து ஒவ்வொரு சங்கல்பம், பேச்சு மூலம் அன்பின் அலையில் ஆடிக் கொண்டே இருக்க வேண்டும். நல்லது. அனைவருக்கும் விசேஷ நினைவு, காலை வணக்கம்.

மாநாட்டுக்காக பாப்தாதாவின் விசேஷ செய்தி: பாப்தாதா சொன்னார், குழந்தைகள் மாநாடு நடத்திக் கொண்டுள்ளனர். மாநாடு (சம்மேளன்) என்பதன் பொருள் சமமான சந்திப்பு (சம்-மிலன்). ஆக, மாநாட்டுக்கு வருபவர்கள் பாப்-சமான் இல்லை என்றாலும் தனக்குச் சமமாக நிச்சய புத்தி உள்ளவராக அவசியம் ஆக்க வேண்டும். யாரெல்லாம் வருகின்றனரோ, ஏதாவது ஆகிச் செல்ல வேண்டும். வெறுமனே பேசி விட்டுச் செல்லக் கூடாது. இது வள்ளலின் வீடு. ஆகவே வருகிறவர்கள் இதைப் புரிந்து கொள்ளக் கூடாது -- அதாவது இவர்களுக்கு உதவி செய்ய வந்துள்ளோமா அல்லது இவர்களுக்கு சகயோகம் கொடுக்க வந்துள்ளோமா என்று ஆனால் இதைப் புரிந்து கொள்ள வேண்டும் -- அதாவது இந்த இடம் பெற்றுக் கொள்வதற்கான இடம், கொடுப்பதற்கானதல்ல என்று. இங்கே ஒவ்வொருவரும் சிறியவர்-பெரியவர் யாரைச் சந்தித்தாலும் அச்சமயம் யார் இங்கே இருக்கின்றனரோ, அவர்கள் இந்த சங்கல்பம் செய்ய வேண்டும் -- திருஷ்டி மூலம், வாயுமண்டலம் மூலம் சம்மந்தம்-தொடர்பின் மூலம் மாஸ்டர் வள்ளல் ஆகி இருக்க வேண்டும். அனைவருக்கும் ஏதேனும் கொடுத்துத் தான் அனுப்ப வேண்டும். இது ஒவ்வொரு வருக்கும் லட்சியமாக இருக்க வேண்டும். வருகிறவர்களுக்கு மதிப்போ கொடுக்கத் தான் வேண்டும் ஆனால் அனைவரின் மதிப்பையும் ஒரு தந்தை மீது அமர்த்த வேண்டும். பாபா சொல்லிக் கொண்டிருந்தார் -- என்னுடைய இத்தனை லைட் ஹவுஸ் குழந்தைகள் அனைவரும் நாலாபுறத்திலிருந்தும் மனசா சேவை மூலம் ஒளி கொடுப்பார்களானால் வெற்றி கிடைத்தே விட்டது. அந்த ஒரு லைட் ஹவுஸ் எத்தனைப் பேருக்கு வழி காட்டுகிறது! -- லைட் ஹவுஸ் -- மைட் ஹவுஸ் குழந்தைகள் நீங்களோ அதிகமான அற்புதத்தைச் செய்ய முடியும். நல்லது.

**வரதானம்: ஈஸ்வரிய சேவையின் பந்தனத்தின் மூலம் சமீப சம்மந்தத்தில் வரக்கூடிய ராயல் பரிவாரத்தின் அதிகாரி ஆகுக!**

ஈஸ்வரிய சேவையின் பந்தனம் சமீப சம்மந்தத்தில் கொண்டு வருவதாகும். எவ்வளவு ஒருவர் சேவை செய்கிறாரோ, அவ்வளவு சேவையின் பலன் சமீப சம்மந்தத்தில் வருகிறது. இங்குள்ள சேவாதாரி அங்குள்ள ராயல் பரிவாரத்தின் அதிகாரி ஆவார்கள். எவ்வளவு இங்கே கடினமான சேவை செய்கின்றனரோ, அவ்வளவு அங்கே ஓய்வாக

சிம்மாசனத்தில் அமர்வார்கள். மற்றும் இங்கே யார் ஒய்வாக இருக்கின்றனரோ, அவர்கள் அங்கே வேலை செய்வார்கள். ஒவ்வொரு விநாடியின், ஒவ்வொரு காரியத்தின் கணக்கு-வழக்கு பாபாவிடம் உள்ளது.

**சுலோகன்: சுய மாற்றத்தின் மூலம் உலக மாற்றத்தின் வைப்ரேஷன்களைத் (அதிர்வலைகள்) தீவிர வேகத்தில் பரவச் செய்யுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 30.01.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாயாவை வென்றவர் மற்றும் இயற்கையை வென்றவர் தான் சுயராஜ்ய அதிகாரி!

இன்று நாலாபுறங்கலுமுள்ள இராஜ்ய அதிகாரி குழந்தைகளின் இராஜய தர்பாரை, பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாலாபுறங்களிலும் தேடிக் கண்டெடுக்கப்பட்ட, அன்பிற்குரிய எல்லைக்கு அப்பாற்பட்ட சேவாதாரி நெருக்கமான குழந்தைகளாக இருக்கிறார்கள் அந்த மாதிரியான குழந்தைகள், இப்பொழுது கூட சுயராஜய அதிகாரி இராஜய தர்பாரில் அமர்ந்திருக்கிறார்கள், பாப்தாதா அந்தமாதிரி தகுதியான குழந்தகளை, நிரந்தர யோகி குழந்தை களை மிகவும் பணிவாக, உயர்ந்த சுய கௌவரவத்தில் இருக்கும் குழந்தைகளைப் பார்த்து, மகிழ்ச்சியடைகிறார். சுயராஜ்ய தர்பார் முழுக் கல்பத்திலும் ஆன்மீகமானது, மற்ற தர்பார்களை விட வேறுபட்டது, மேலும் மிகவும் பிரிய மானது. ஒவ்வொரு சுயராஜ்ய அதிகாரி, உலக இராஜ்யத்தின் அஸ்திவாரம், புது உலகைப் படைப்பவர். ஒவ்வொரு சுயராஜ்ய அதிகாரி மின்னிக் கொண்டிருக்கும், தெய்வீகத் திலகமிட்டவர், அனைத்து விசேஷங்களினால் மின்னிக் கொண்டிருக்கும், விலைமதிக்க முடியாத மணிகளால் அலகரிக்கப்பட்ட கீரிடம் அணிந்தவர். அனைத்து தெய்வீக குணங்கள் என்ற மாலையை அணிந்து கொண்டு, சம்பூரண தூய்மையின் ஒளி வடிவான கீரிடத்தை அணிந்து கொண்டு, சிரேஷ்ட நிலை என்ற சுய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அந்தமாதிரி அலங்கரிக்கப்பட்டு இராஜ்ய அதிகாரி தர்பாரில் அமர்ந்திருக்கிறார்கள். அந்தமாதிரியான இராஜ்ய தர்பார் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறது. ஒவ்வொரு சுயராஜ்ய அதிகாரியின் எதிரில் எத்தனை தாசன், தாசிகள் இருக்கிறார்கள்? இயற்கையை வென்றவர்கள், மற்றும் விகாரங்களை வென்றவர்கள். விகாரம் கூட 5-இருக்கிறது, இயற்கையின் தத்துவமும் 5-இருக்கிறது. அப்படி இயற்கையே தாசியாகி விட்டது இல்லையா? எதிரி

சேவகானாகி விட்டான். அந்தமாதிரி ஆன்மீகப் பெருமிதத்தில் இருக்கக் கூடியவர்கள், விகாரங்களையும் மாற்றம் செய்து, காம விகாரத்தை சுப விருப்பங்களாக மாற்றி. உயர்ந்த விருப்பங்களின் சொரூபத்தில் மாற்றி சேவையில் ஈடுபடுத்துபவர்கள். அந்தமாதிரி எதிரியை சேவாதாரியாக ஆக்கக்கூடிய, இயற்கையின் எந்தவொரு தத்துவத்தின் பக்கம் வசமாகி விடுவதில்லை ஆனால் ஒவ்வொரு தத்துவத்தையும் கீழ்த்தரமான ரூபத்தில் இருந்து, உயர்ந்த தூய்மையான சொரூபமாக மாற்றி விடுகிறார். கலியுகத்தில் இந்த தத்துவங்கள் ஏமாற்றம் மற்றும் துக்கத்தை கொடுப்பவை. சங்கமயுகத்தில் பரிவர்த்தைனை ஆகிறது. ரூபமும் மாறுகிறது. சத்தியுகத்தில் இந்த 5-தத்துவங்கள் தேவதைகளுக்கு, சுகத்தின் சாதனமாக ஆகி விடுகின்றன. இந்த சூரியன் உங்களுடைய உணவை தயார் செய்யும் என்றால், சமையல்காரனாக ஆகி விடும் இல்லையா? இந்தக் காற்று உங்களுடைய இயற்கையான விசிறி ஆகி விடும். உங்களுடைய பொழுது போக்கின் சாதனம் ஆகி விடும். காற்றடிக்கும், இந்த மரங்கள் அசையும், மேலும் இந்த கிளைகள் அந்தமாதிரி ஆடும். அவைகள் அசைவதினால், விதவிதமான இசை இயல்பாகவே ஒலித்துக் கொண்டேருக்கும். எனவே பொழுதுபோக்கிற்கான சாதனமாகி விட்டது இல்லையா? இந்த ஆகாயம் உங்கள் அனைவருக்காக, இராஜ மார்க்கம் ஆகி விடும். இந்த விமானங்களை எங்கே ஒட்டுவீர்கள்? இந்த ஆகாயமே உங்களுடைய பாதை ஆகி விடும். இந்தளவு பெரிய நெடுஞ்சாலை வேறு எங்காவது இருக்கிறதா? வெளிநாட்டில் இருக்கிறதா, எத்தனை மைல்கள் சாலை அமைத்தாலும் கூட, ஆனால் ஆகாய பாதையை விட சிறியதாக இருக்கும் இல்லையா? இவ்வளவு பெரிய பாதை வேறு எங்காவது இருக்கிறதா? அமெரிக்காவில் இருக்கிறதா? மேலும் விபத்தே நடக்காத பாதையாக இருக்குமா? 8-வயதான குழந்தை ஓட்டினாலும் விழமாட்டார். புரிந்ததா! இந்த நீர் வாசனை திரவியத்தின் காரியம் செய்யும். எப்படி மூலிகைகளின் காரணமாக, கங்கை நீர் இப்பொழுதும் கூட மற்ற நீரை விட தூய்மையாக இருக்கிறது. அந்தமாதிரி நறுமணம் நிறைந்த மூலிகைகள் இருக்கும் காரணத்தினால், நீரும் இயற்கையாகவே நறுமணம் நிறைந்தாக இருக்கும். எப்படி இங்கே பால் சக்தி கொடுக்கிறது, அதேபோல் அங்கேயுள்ள நீரும் சக்திசாலியாக இருக்கும், தூய்மையாக இருக்கும். எனவே பாலாறு ஓடுகிறது என்று கூறுகிறார்கள். நீங்கள் அனைவரும் இப்பொழுதே குஷியாகி விட்டீர்கள் இல்லையா?

அதேபோலவே இந்த நிலம், அந்தமாதிரி உயர்ந்த பழங்களை கொடுக்கும், எப்படிப்பட்ட சுவையை விரும்பு கிறீர்களோ, அந்த சுவை நிறைந்த பழங்கள் உங்கள் எதிரில் வந்து நிற்கும். அங்கே இந்த உப்பும் இருக்காது, சீனியும் இருக்காது. எப்படி இப்பொழுது தக்காளி இருக்கிறது என்றால், அந்த புளிப்பு வந்து விடுகிறது தான் இல்லையா? அதேபோல் உங்களுக்கு சுவைக்கு ஏற்றபடி அங்கே பழங்கள் இருக்கும். நீங்கள் சாற்றை பிழிந்தீர்கள் என்றால், விரும்பிய சுவை உங்களுக்கு கிடைக்கும். அப்படி இந்த நிலமும் ஒன்றோ சிரேஷ்ட பழம் மற்றும் சிரேஷ்ட அன்னம் கொடுக்கும் சேவை செய்யும். இன்னொன்று இயற்கையான காட்சிகள் அதைத் தான் இயற்கை என்று கூறுகிறோம். எனவே இயற்கையான காட்சிகளும், மலையும் இருக்கும். இந்தமாதிரியான செங்குத்தான மலை இருக்காது, இயற்கையான அழகு நிரம்பிய, விதவிதமான ரூபத்தில் மலை இருக்கும். சில பறவைகளின் ரூபத்திலும், மேலும் சில மலர்களின் ரூபத்திலும் இருக்கும். அப்படி இயற்கையான அழகு நிறைந்ததாக இருக்கும். கொஞ்சம் கை மட்டும் வைக்க வேண்டும். அப்படி இந்த 5-தத்துவங்களும் சேவாதாரி ஆகி விடும் ஆனால் யாருடைய சேவாதாரியாக ஆகும். சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்களின் சேவாதாரியாக ஆகும். எனவே இப்பொழுது உங்களைப் பாருங்கள். 5-விகாரங்களும் எதிரி என்பதிலிருந்து மாறி சேவாதாரியாக ஆகி விட்டனவா? அப்பொழுது தான் சுயராஜ்ய அதிகாரி என்று கூறுவோம். கோப அக்னி, யோக அக்னியாக மாறிவிட வேண்டும். அதேபோல் பேராசை என்ற விகாரம், பேராசை என்றால் விரும்புவது, எல்லைக்குட்பட்ட விருப்பங்கள் மாறி, நான் எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணத்தினால், வார்த்தைகளினால், செய்யும் காரியத்தினால், சுயநலமற்ற, எல்லைக்கு அப்பாற்பட்ட சேவாதாரி ஆகி விட வேண்டும் என்ற சுப விருப்பங்களாக மாறி விட வேண்டும். நான் தந்தைக்குச் சமமாக மாறிவிட வேண்டும் -அந்த மாதிரியான சுபவிருப்பங்கள் அதாவது பேராசையின் பரிவர்த்தனை சொரூபம். எதிரிக்குப் பதிலாக சேவையின் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். பற்றுதலும் உங்கள் அனைவருக்கும் அதிகமாக இருக்கிறது இல்லையா? பாப்தாதாவிடமோ பற்றுதல் இருக்கிறது இல்லையா? ஒரு வினாடி கூட பிரிந்திருக்க முடியாது என்ற இது பற்றுதல் தான் இல்லையா? ஆனால் இந்த பற்றுதல் சேவை செய்விக்கும். யார் உங்களுடைய கண்களைப் பார்த்தாலும், கண்களில் நிரம்பியிருக்கும் தந்தையைப் பார்க்கட்டும். வாய் மூலம் என்ன பேசினாலும் தந்தையின்

விலை மதிக்க முடியாத ஞானத்தைக் கூறுங்கள். அப்படி இந்த பற்றுதல் என்ற விகாரமும் சேவையில் ஈடுபட்டுவிட்டது இல்லையா? மாறிவிட்டது தான் இல்லையா? அதேபோல் அகங்காரமும் கூட தேக அபிமானத்தில் இருப்பவரிலிருந்து, ஆத்ம அபிமானியாக ஆகி விடுகிறார்கள். நல்ல அகங்காரம் அதாவது நான் ஆத்மா விசேஷ ஆத்மாவாக ஆகி விட்டேன், பலகோடி மடங்கு ஆகி விட்டேன், கவலையற்ற இராஜா ஆகி விட்டேன். இந்த நல்ல அகங்காரம் ஈஸ்வரிய போதை சேவைக்கான காரணம் ஆகி விடுகிறது. அந்தமாதிரி 5-விகாரங்களும் மாறி சேவையின் சாதனம் ஆகி விட்டது என்றால், எதிரி தன்மையிலிருந்து சேவாதாரியாக ஆகி விட்டன இல்லையா? எனவே மாயாவை வென்றவராக இயற்கையை வென்றவராக எந்தளவு ஆகியிருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள். இராஜாவாக எப்பொழுது ஆகி விடுவீர்கள் என்றால், எப்பொழுது முதலில் தாசன் -தாசிகள் தயார் ஆகி விட வேண்டும். யார் அவரே தாசன் -தாசிகளின் அடிமையாக இருப்பாரோ, அவர் இராஜ அதிகாரியாக எப்படி ஆவார்!

இன்று பாரதத்தின் குழந்தைகளின் சந்திக்கும் நிகழ்ச்சியின் பிரகாரம், கடைசி நாள். அப்படி இன்று மேளாவின் கடைசியாக முங்கி எழுவது. இதற்கும் மகத்துவம் இருக்கிறது. இந்த மகத்துவத்தின் நாளில் எப்படி அந்த மேளாவில் செல்கிறார்கள் என்றால், என்னென்ன பாவங்கள் இருக்கிறதோ, அதை பஸ்மம் செய்து, அழித்து விட்டு செல்கிறோம் என்று நினைப்பார்கள். அப்படி அனைவரும் 5 விகாரங்களை நிரந்தரமாக அழிப்பதற்கான எண்ணம் வைப்பது, இது தான் கடைசியாக முங்கி எழுவதின் மகத்துவம். அப்படி நீங்கள் அனைவருமே பரிவர்த்தனை செய்வதற்கான திட எண்ணத்தை வைத்தீர்களா? விட்டு விடக் கூடாது, ஆனால் மாற வேண்டும். ஒருவேளை எதிரியானவர் உங்களுடைய சேவாதாரியாக ஆகி விட்டார் என்றால், எதிரி விருப்பமா அல்லது சேவாதாரி விருப்பமா? எனவே இன்றைய தினத்தில் சோதனை செய்யுங்கள் மற்றும் மாற்றத்தைக் கொண்டு வாருங்கள். அப்பொழுது தான் சந்திப்பு விழாவிற்கு மகத்துவம் இருக்கிறது. என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நான்கும் சரியாகத் தான் இருக்கிறது, மற்றபடி ஒன்று சரியில்லை என்றாலும், பாதகமில்லை என்று அப்படி நினைக்காதீர்கள் ஆனால் அந்த ஒன்று நான்கையும் திருப்பி அழைத்துச் சென்று விடும். இவைகளுக்குள்ளும் அவர்களிடையே ஒற்றுமை

இருக்கிறது. எனவே இராவணனின் தலையை சேர்த்தே காண்பிக்கிறார்கள். எனவே தசாரா கொண்டாடி விட்டு செல்லுங்கள். 5-இயற்கை தத்துவங்களின் மேல் வெற்றி, 5-விகாரங்களின் மீது வெற்றி. அப்படி 10-ஆகி விட்டது இல்லையா? எனவே விஜயதசமி கொண்டாடி விட்டுச் செல்லுங்கள். அழித்து விட்டு, எரித்து விட்டு சாம்பலை உடன் எடுத்துச் செல்லாதீர்கள். சாம்பலை எடுத்துச் சென்றாலும் கூட அது மீண்டும் வந்து விடும், பூதமாக மாறி வந்து விடும், எனவே அதையும் ஞானக் கடலில் போட்டு கரைத்து விட்டுச் செல்லுங்கள். நல்லது.

எப்பொழுதும் சுயராஜ்ய அதிகாரி, ஆன்மீக திலகமிட்டிருக்கும், கீரிடம் அணிந்திருக்கும், இயற்கையை தாசியாக ஆக்கக் கூடியவர்களுக்கு, 5 எதிரிகளையும் சேவாதாரியாக்கக் கூடியவர்களுக்கு, எப்பொழுதும் கவலையில்லா இராஜா என்பதின் ஆன்மீக பெருமிதத்தில் இருக்கக் கூடியவர்களுக்கு, தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் வெற்றியடையும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**குமாரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** அனைவரும் தன்னை சிரேஷ்ட குமாரிகள் என்று அனுபவம் செய்கிறீர்களா? சாதாரண குமாரிகளோ, ஒன்று வேலை என்ற கூடையைத் தூக்குகிறார்கள், அல்லது தாசியாகி விடுகிறார்கள் ஆனால் சிரேஷ்ட குமாரிகள் உலகிற்கு நன்மை செய்பவர்கள் ஆகி விடுகிறார்கள். நீங்கள் அந்தமாதிரி சிரேஷ்ட குமாரிகள் தான் இல்லையா! உங்களுடைய வாழ்க்கையின் சிரேஷ்ட இலட்சியமாக என்ன இருக்கிறது? தீய சேர்க்கை அல்லது சம்மந்தத்தின் பந்தனத்திலிருந்து விடுபடுவது என்ற இது தான் இலட்சியம் இல்லையா. பந்தனத்தில் மாட்டிக் கொள்பவர்கள் இல்லை. என்ன செய்வது பந்தனம், என்ன செய்வது வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது என்ற இதைத் தான் பந்தனத்தில் இருப்பவர் என்று கூறுவது. அப்படி உங்களுக்கு சம்மந்தத்தின் பந்தனமும் இல்லை, வேலை என்ற கூடையை தூக்கும் பந்தனமும் இல்லை. யார் இந்த இரண்டு பந்தனத்திலிருந்து விடுபட்டு இருக்கிறார்களோ, அவர்கள் தான் தந்தையின் பிரியமானவர்களாக ஆகிறார், நீங்கள் அந்த மாதிரி பந்தனமற்றவரா? இரண்டு வாழ்க்கையுமே எதிரில் இருக்கிறது. சாதாரண குமாரிகளின் எதிர்காலம், மேலும் விசேஷ குமாரிகளின் எதிர்காலம் இரண்டுமே எதிரில் இருக்கிறது. இரண்டையும் பார்த்து, நீங்களே முடிவு செய்ய முடியும். எப்படி (பெற்றோர்கள் ஆகியோர்)

சொல்வார்களோ, அப்படி செய்வேன் என்று இருக்கக் கூடாது. தன்னுடைய முடிவை தானே தீர்மானித்து எடுக்க வேண்டும். பாபாவின் ஸ்ரீமத்தோ, உலகிற்கு நன்மை செய்பவராக ஆகு என்று இருக்கிறது. அதுவோ சரிதான், ஆனால் ஸ்ரீமத்தின் கூடவே தன்னுடைய மனதின் ஊக்கத்தினால் யார் முன்னேறிச் செல்கிறார்களோ, அவர் எப்பொழுதும் சுலபமாக முன்னேறிச் சென்று கொண்டேயிருப்பார். ஒருவேளை யாராவது கூறியதினால், அல்லது மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்ற வெட்கத்தின் காரணத்தினால் அல்லது நான் அப்படி ஆகவில்லையென்றால், எல்லோரும் என்னை வேறு மாதிரி பார்ப்பார்கள் என்ற இது பலஹீனமாகும். ஒருவேளை யாராவது யாருடைய வற்புறுத்தலினால் ஆகிறார் என்றால் கூட சோதனைகளில் வெற்றி பெறுவதற்கு கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கும். மேலும் தன்னுடைய ஆர்வம், ஊக்கத்தினால் ஆனவர், எவ்வளவு தான் பெரிய பரீட்சை வந்தாலும், அதை சுலபமாக அனுபவம் செய்வார், ஏனென்றால் மனதில் ஊக்கம் இருக்கிறது இல்லையா! தன்னுடைய ஊக்கம், உற்சாகம் இறக்கை ஆகி விடுகிறது. எவ்வளவு தான் பெரிய மலையாக இருந்தாலும், பறக்கும் பறவை சுலபமாக கடந்து சென்றுவிடும். மேலும் நடந்து செல்பவர் அல்லது ஏறிச் செல்பவர் எவ்வளவு கடினத்துடன், எவ்வளவு நேரம் கழித்து கடந்து செல்ல முடியும். அப்படி மனதின் ஊக்கம் சிறகுகள் ஆகும். இந்த இறக்கைகள் மூலம் பறப்பவர்களுக்கு எப்பொழுதும் சுலபமாக இருக்கும். புரிந்ததா? அப்படி சிரேஷ்ட வழி உலகிற்கு நன்மை செய்பவராக ஆகு என்பது, ஆனால் நீங்களே உங்களுடைய நீதிபதி ஆகி, தன்னுடைய வாழ்க்கையை முடிவு செய்யுங்கள். தந்தையோ முடிவு கூறிவிட்டார், அது புதிய விசயமில்லை. இப்பொழுது நீங்கள் முடிவு செய்யுங்கள். பிறகு எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருப்பீர்கள். யார் யோசித்து, புரிந்து ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்கிறாரோ, அவர் விவேகம் நிறைந்தவர். யோசித்துக் கொண்டே இருந்து விடக் கூடாது ஆனால் யோசித்தீர்கள், புரிந்து கொண்டீர்கள் மற்றும் செய்தீர்கள் இதைத் தான் அறிவாளி அல்லது விவேகம் நிறைந்தவர் என்று கூறுவது. சங்கமயுகத்தில் குமாரி ஆவது என்பதே முதல் பாக்கியம். இந்த பாக்கியமோ நாடகப்படி கிடைத்திருக்கிறது. இப்பொழுது பாக்கியத்தின் மேல் பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டே செல்லுங்கள். இதே பாக்கியத்தை காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டேயிருந்தீர்கள் என்றால் பாக்கியம் அதிகரித்துக்

கொண்டேயிருக்கும். மேலும் இதே முதல் பாக்கியத்தை இழந்தீர்கள் என்றால், நிரந்தரமாக அனைத்து பாக்கியத்தையும் இழந்து விடுவீர்கள், எனவே நீங்கள் பாக்கியம் நிறைந்தவர்கள். பாக்கியம் நிறைந்தவராகி இப்பொழுது இன்னும் சேவாதாரியின் பாக்கியத்தை உருவாக்குங்கள். புரிந்ததா?

**சேவாதாரி (டீச்சர் சகோதரிகளுடன்) சந்திப்பு:** சேவாதாரி என்றால், எப்பொழுதும் சேவையின் மகிழ்ச்சியில் இருப்பவர், எப்பொழுதும் தன்னை மகிழ்ச்சி நிறைந்த வாழ்கையில் இருப்பதாக அனுபவம் செய்பவர். சேவாதாரி வாழ்க்கை என்றாலே, மகிழ்ச்சிகள் நிறைந்த வாழ்க்கை. நீங்கள் அந்தமாதிரி எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையின் மகிழ்ச்சியில் இருப்பவர்கள் தான் இல்லையா? நினைவின் மகிழ்ச்சியும் இருக்கிறது, மற்றும் சேவையின் மகிழ்ச்சியும் இருக்கிறது. வாழ்க்கையும் மகிழ்ச்சிகள் நிறைந்தது, மற்றும் யுகமும் மகிழ்ச்சிகளுக்குக்கானது. யார் எப்பொழுதும் மகிழ்ச்சியில் இருப்பாரோ, அவரைப் பார்த்து, மற்றவர்களும் தன்னுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியை அனுபவம் செய்வார்கள். யார் எவ்வளவு தான், குழப்பத்தில் வந்தாலும், இவர் மகிழ்ச்சியில் இருந்து மற்றவர்களையும் குழப்பத்திலிருந்து விடுவித்து மகிழ்ச்சியில் கொண்டு வந்து விடுவார். அந்தமாதிரி சேவாதாரி யார் மகிழ்ச்சியில் இருப்பாரோ, அவர் எப்பொழுதும் உடலால், மனதால் ஆரோக்கியமாக இருப்பார். மகிழ்ச்சியில் இருப்பவர் எப்பொழுதும் பறந்து கொண்டே இருப்பார். ஏனென்றால் குஷியிருக்கிறது. பொதுவாகவே இவரோ குஷியில் ஆடிக் கொண்டேயிருக்கிறார் என்று கூறுவார்கள். நடந்து கொண்டிருக்கிறார் என்று சொல்ல மாட்டார்கள், நடனமாடிக் கொண்டிருக்கிறார் என்று சொல்வார்கள். நடனமாடுவது என்றால், மிக உயர்ந்து பறப்பது. உயர்ந்த கால்கள் இருந்தால் தானே நடனமாடுவார். அப்படி மகிழ்ச்சியில் இருப்பவர் என்றால், குஷி நிறைந்து இருப்பவர். சேவாதாரி ஆவது என்றால், வரமளிக்கும் வள்ளலிடமிருந்து விசேஷ வரதானத்தைப் பெறுவது. சேவாதாரிக்கு விசேஷ வரதானம் இருக்கிறது. ஒன்று தன்னுடைய கவனம், இன்னொன்று வரதானம், இரட்டை லிஃப்ட் இருக்கிறது. சேவாதாரி ஆவது என்றால், எப்பொழுதும் முக்த் (விடுபட்ட) ஆத்மா ஆவது, ஜீவன் முக்தியை அனுபவம் செய்வது.

நீங்கள் எப்பொழுதும் வெற்றி சொரூப சேவாதாரியாக இருக்கிறீர்களா? வெற்றி என்பது பிறப்புரிமை. உரிமை எப்பொழுதும் சகஜமாக கிடைக்கும், கடின முயற்சி செய்ய வேண்டியது இருக்காது. அப்படி நீங்கள் உரிமையின் ரூபத்தில் வெற்றியை அனுபவம் செய்பவர்கள். வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது என்ற நிச்சயம் மற்றும் போதை எப்பொழுதும் இருக்கட்டும். வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்ற எண்ணமோ இருப்பதில்லையே? எப்பொழுது அதிகாரம் இருக்கிறது என்றால். அதிகாரிக்கு, அதிகாரம் கிடைக்க வில்லை என்பது இருக்கவே முடியாது. நிச்சயம் இருக்கிறது என்றால், வெற்றியும் நிச்சயிக்கப்பட்டது. இது தான் சேவாதாரிக்கான விளக்கம். எது விளக்கமாக இருக்கிறதோ, அதுவே நடைமுறையாக இருக்கிறது. சேவாதாரி என்றால் சுலபமாக வெற்றியை அனுபவம் செய்பவர்.

**விடைபெறும் நேரத்தில்:** (அனைவரும் இப்பொழுது எங்களை விட்டுச் செல்லாதீர்கள் என்ற பாடலை பாடினார்கள்) பாப்தாதா எந்தளவு அன்பின் கடலாக இருக்கிறாரோ, அந்தளவு விலகியும் இருக்கிறார். அன்பு நிறைந்த வார்த்தைகளைக் கூறினார், இதுவோ சங்கமயுகத்தின் மகிழ்ச்சிகள். மகிழ்ச்சியை நன்றாகக் கொண்டாடுங்கள், சாப்பிடுங்கள், குடியுங்கள், ஆடுங்கள், ஆனால் நிரந்தரமாக செய்யுங்கள். எப்படி இப்பொழுது அன்பில் மூழ்கியிருந்தீர்களோ, அந்தமாதிரி மூழ்கியிருங்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்தின் பாடலை கேட்டுக் கொண்டே இருக்கிறார், இன்று வாய் மூலம் பாடிய பாடலையும் கேட்டு விட்டார். பாப்தாதா வார்த்தைகளை பார்ப்பதில்லை, இசையைப் பார்ப்பதில்லை, இதயத்தின் ஓசையைக் கேட்கிறார். இப்பொழுதோ நிரந்தரமாக கூடவே இருக்கிறீர்கள், ஸ்தூலமாக இருந்தாலும், அவ்யக்த ரூபத்திலும் எப்பொழுதும் கூடவே இருக்கிறீர்கள். இப்பொழுது பிரிந்திருக்கும் நாட்கள் முடிவடைந்து விட்டது. இப்பொழுது சங்கமயுக முழுமையிலுமே சந்திப்புக் கொண்டாட்டம் தான். சந்திப்பில் பல விதமான காட்சிகள் மட்டும் மாறிக் கொண்டேயிருக்கிறது. சில நேரம் நேர் எதிரில், சில நேரம் அவ்யக்தத்தில். நல்லது. -காலை வணக்கம்.

**வரதானம்: ஆத்மீக சக்தியின் ஆதாரத்தில் உடலின் சக்தியை அனுபவம் செய்யக் கூடிய, எப்பொழுதும் ஆரோக்கியமானவர் ஆகுக!**

இந்த ஆன்மீக வாழ்க்கையில் ஆத்மா மற்றும் இயற்கை (உடல்) இரண்டின் ஆரோக்கியம் அவசியமானது. எப்பொழுது ஆத்மா ஆரோக்கியமாக இருக்கிறது என்றால், உடலின் கணக்கு வழக்கு மற்றும் உடலின் நோய் ஈட்டியிலிருந்து முள்ளாகி விடும் காரணத்தினால், சுய நிலையின் காரணமாக ஆரோக்கியத்தை அனுபவம் செய்கிறார்கள். அவருடைய வாயில், முகத்தில் நோய் கஷ்டத்தின் அடையாளம் இருக்காது. கர்மத்தின் விளைவை அனுபவிப்பதை வர்ணனை செய்வதற்குப் பதிலாக, கர்ம யோகாவின் நிலையை வர்ணனை செய்வார். அவர் பரிவர்த்தனையின் சக்தி மூலமாக கஷ்டத்தை திருப்தியில் பரிவர்த்தனை செய்து திருப்தியாக இருப்பார். மற்றும் திருப்தியின் அலையைப் பரப்புவார்.

**சுலோகன்: உள்ளத்தால், உடலால், உங்களிடையே அன்பாக இருந்து சேவை செய்தீர்கள் என்றால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 16.02.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒவ்வொரு மூச்சிலும் குஷியின் இசை ஒலிப்பது தான் இந்த சிரேஷ்ட ஜென்மத்தின் பரிசு!

இன்று போலாநாத் (கள்ளம் கபடமற்ற) தந்தை,கள்ளம் கபடமற்ற பண்டாரி களஞ்சியத்தின் தலைவன் தன்னுடைய மிக அன்பிற்குரிய, நிரந்தர சகயோகி, சகஜயோகி அனைத்து பொக்கிஷங் களின் அதிபதி, குழந்தைளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இப்பொழுதும் அதிபதி, எதிர்காலத் திலும் அதிபதி. இப்பொழுது உலகத்தைப் படைக்கும் தந்தையின் குழந்தையாக இருப்பதினால் அதிபதி, எதிர்காலத்தில் உலகத்தின் அதிபதியாக ஆகிறீர்கள். பாப்தாதா தன்னுடைய அந்தமாதிரி அதிபதி குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். குழந்தையாக இருப்பதினால் அதிபதி ஆவது என்பது ஆன்மீக போதை மற்றும் ஆன்மீக குஷி. அந்தமாதிரி எப்பொழுதும் குஷி நிறைந்த, எப்பொழுதும் சம்பன்ன சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள்! இன்று அனைத்து குழந்தைகளும் தந்தையின் அவதாரத்தின் ஜெயந்தியைக் கொண்டுவதற்காக ஊக்கம் உற்சாகத்தில் மகிழ்ச்சி யடைந்து கொண்டிருக்கிறார்கள். தந்தையின் ஜெயந்தியாக இருப்பது தான், குழந்தைகளினுடைய ஜெயந்தியும் தான், எனவே இது அதிசயமான ஜெயந்தி என்று பாப்தாதா கூறுகிறார். பொதுவாக தந்தை மற்றும் குழந்தைகளுக்கு ஒரே நாளில் ஜெயந்தி இருக்காது. இருக்குமா? தந்தையின் ஜென்மத்தின் நாளும் அதுதான், குழந்தைகளின் பிறந்த நாளும் அது தான் என்று எப்பொழுதாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இது தான் ஆன்மீக ஜெயந்தி. எந்த நேரம் தந்தை, குழந்தை பிரம்மாவில் அவதரித்தரோ, அதே நாள், அதே நேரம், பிரம்மாவிற்கும் ஆன்மீகப் பிறவியாக ஆனது. என்பது சேர்ந்தே ஜென்மம் ஆகி விட்டது இல்லையா! மேலும் பிரம்மாவுடன் சேர்ந்து, நெருக்கமான பிராமணர்களுக்கும் ஆனது. எனவே தெய்வீக ஜென்மத்தின் நாள், நேரம், ரேகை, பிரம்மாவின் மற்றும் சிவபாபாவின் அவதாரத்தின் ஒன்றாகவே

இருக்கும் காரணத்தினால், சிவ தந்தை மற்றும் பிரம்மா குழந்தை பரமாத்மா மற்றும் மகான் ஆத்மாவாக இருந்த போதிலும், பிரம்மா தந்தைக்குச் சமமானவர் ஆனார். சமநிலை காரணமாக இணைந்த ரூபம் ஆகி விட்டார்கள். பாப்தாதா, பாப்தாதா என்று எப்பொழுதும் சேர்த்தே கூறுகிறீகள், பிரித்துக் கூறுவதில்லை. அதேபோல் நெருக்கமான பிராமணர்கள், பாப்தாதாவுடன் சேர்ந்தே பிரம்மா குமார், பிரம்மா குமாரியின் ரூபத்தில் அவதரித்தார்கள்.

அப்படி பிரம்மா மற்றும் குமார், குமாரி இதுவும் இணைந்த தந்தை மற்றும் குழந்தைகளின் நினைவிற்கான பெயர். அப்படி பாப்தாதா குழந்தைகளின் பிராமண வாழ்க்கையின் அவதார ஜெயந்தியைக் கொண்டாட வந்திருக்கிறார். நீங்கள் அனைவரும் அவதாரம் தான் இல்லையா? அவதாரம் என்றால், சிரேஷ்ட நினைவு -நான் தெய்வீக ஜென்மம் எடுத்த பிராமண ஆத்மா இது புதிய ஜென்மம் ஆனது இல்லையா! உயர்ந்த நினைவினால் இந்த ஸ்தூல சரீரத்தில் அவதரித்து, உலக நன்மைக் காரியத்திற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். எனவே அவதாரம் தான் இல்லையா?. எப்படி தந்தை அவதரித்திருக்கிறார், அதேபோல் நீங்கள் அனைவரும் உலக மாற்றத்திற்காக அவதரித்திருக்கிறீர்கள். பரிவர்த்தனை ஆவது தான், அவதாரம் ஆவது. இது அவதாரங்களின் சபை. தந்தையின் கூடவே, பிராமண குழந்தைகளின் ஆன்மீகப் பிறந்த நாளும் தான். அப்படியானால், குழந்தைகள் தந்தையின் ஜெயந்தியை கொண்டாடுகிறீர்களா அல்லது தந்தையும் குழந்தைகளின் ஜெயந்தியைக் கொண்டாடுவாரா? அல்லது அனைவரும் சேர்ந்து ஒருவரின் ஜெயந்தியைக் கொண்டாடுவீர்களா? பக்தர்களோ, நினைவாக மட்டும் கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். மேலும் நீங்கள் நேர் எதிரில், தந்தையுடன் சேர்ந்து கொண்டாடுகிறீர்கள். அந்தமாதிரியான சிரேஷ்ட பாக்கியம், ஒவ்வொரு கல்பத்திற்கான பாக்கியத்தின் ரேகை அழியாததாக போடப்பட்டு விட்டது. எனக்கு பகவானுடன் சேர்ந்து பாக்கியம் இருக்கிறது என்ற இந்த நினைவில் எப்பொழுதும் இருங்கள். நேரடியாக பாக்கியத்தை வழங்குபவருடன் சேர்ந்து, பாக்கியத்தை பிராப்தி செய்வதற்கான (அடையும்) பங்கு எனக்கு இருக்கிறது. அந்தமாதிரி இரட்டை கதாநாயகன், கதாநாயக பாத்திரம் ஏற்று செய்பவர்கள் மற்றும் வைரத்திற்குச் சமமான வாழ்க்கையுள்ளவர்களும் தான். அப்படி இரட்டை கதாநாயகன் ஆகி

விட்டீர்கள் இல்லையா? முழு உலகத்தின் பார்வை, கதாநாயகன் ஆத்மா உங்கள் பக்கம் இருக்கிறது. பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள் உங்களுக்கு, இன்று கடைசி ஜென்மத்திலும், கல்பத்திலும் கடைசி காலத்திலும் கூட எவ்வளவு நினைவு, சின்னத்தின் ரூபத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. தந்தையின் மற்றும் பிராமணர்களின் வார்த்தைகள் நினைவுச் சின்ன ரூபத்தில் சாஸ்திரம் ஆகி விட்டது. இப்பொழுது கூட அதனுடைய இரண்டு வார்த்தைகள் கேட்பதற் காக தாகம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இரண்டு வார்த்தைகள் கேட்பதினால், அமைதியின், சுகத்தின் அனுபவம் செய்யத் தொடங்கி விடுகிறார்கள்.

பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள், உங்களுடைய சிரேஷ்ட காரியம் சரித்திரத்தின் ரூபத்தில், இதுவரையிலும் மகிமை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களாகிய உங்களுடைய சிரேஷ்ட பாவனை, சிரேஷ்ட விருப்பங்களின் சிரேஷ்ட எண்ணம், ஆசிர்வாதத்தின் ரூபத்தில், மகிமை செய்யப் படுகிறது. எந்தவொரு தேவதையின் எதிரிலும் ஆசிர்வாதம் கேட்கச் செல்வார்கள். பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள் உங்களுடைய சிரேஷ்ட நினைவு, ஜெபிக்கும் ரூபத்தில் இன்று வரையிலும் நினைவுச் சின்னமாக இருக்கிறது. ஜெபிப்பதை எவ்வளவு மகிமை செய்கிறார்கள். பெயரைக் கூறி ஜெபித்தலோ, அல்லது மாலையின் ரூபத்திலோ ஜெபிக்கிறார்கள். இது நினைவின் நினைவுச் சின்னமாக ஜெபிக்கும் ரூபத்தில் இருக்கிறது. அந்தமாதிரி, பாக்கியம் நிறைந்தவராக எப்படி ஆனீர்கள்! ஏனென்றால், பாக்கியத்தை வழங்குபவருடன் சேர்ந்து, பாக்கியம் நிறைந்தவர்களாக ஆகியிருக்கிறீர்கள். எனவே இது அந்தளவு பாக்கியம் நிறைந்த தெய்வீக ஜென்மம் என்று நினைக்கிறீர்களா? அந்த மாதிரி தெய்வீக ஜென்மத்திற்கு பாப்தாதா பகவான், பாக்கியம் நிறைந்த குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் கூறுகிறார். எப்பொழுதும் வாழ்த்துக்களே, வாழ்த்துக்கள்! இது ஒரு நாளுக்கான வாழ்த்துக்கள் மட்டுமில்லை, இந்த பாக்கியம் நிறைந்த பிறவி, ஒவ்வொரு வினாடி, ஒவ்வொரு நேரமும் வாழ்த்துக்களால் நிரம்பியிருக்கிறது. தன்னுடைய இந்த சிரேஷ்ட ஜென்மத்தைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? ஒவ்வொரு மூச்சிலும் குஷியின் இசை ஒலித்துக் கொண்டிருக்கிறது. மூச்சு ஓடிக் கொண்டிருக்கவில்லை, ஆனால் குஷியின் இசை ஓடிக்

கொண்டிருக்கிறது. இசையைக் கேட்க முடிகிறது தான் இல்லையா? இயற்கையான இசை எவ்வளவு சிரேஷ்டமானது. இந்த தெய்வீக ஜென்மத்தின், இந்த குஷியின் இசை அதாவது மூச்சு தெய்வீக ஜென்மத்தின் உயர்ந்த பரிசு. பிராமண ஜென்மம் ஏற்பட்ட உடனேயே, இந்த குஷியின் இசை பரிசாக கிடைத்து விட்டது இல்லையா? இசையை இசைக்கும் பொழுதும், விரல்களை மேலே கீழே கொண்டு செல்வீர்கள் இல்லையா? அதேபோல் மூச்சும் மேலே கிழே செல்கிறது. அப்படி மூச்சு ஓடுவது என்றால், இசை ஒலிப்பது. மூச்சு நிற்க முடியாது. எனவே இந்த விஷயம் நிற்க முடியாது. உங்கள் அனைவரின் குஷியின் இசை, சரியாக ஒலித்துக் கொண்டிருக்கிறது தான் இல்லையா? இரட்டை வெளிநாட்டினர் என்ன நினைக்கிறீர்கள்?கள்ளம் கபடமற்ற களஞ்சியத்தின் அதிபதியிடமிருந்து, அனைத்து பொக்கிஷங்களையும் பெற்று, தன்னுடைய களஞ்சியத்தை நிரப்பி விட்டீர்கள் இல்லையா? அதனால் 21 ஜென்மங்கள் களஞ்சியம் நிரம்பியதாக இருக்கும். நிரப்புவதற் காக உழைக்க வேண்டியதாக இருக்காது. சுலபமாக பிராப்தி ஆகிக் கொண்டே யிருக்கும். இப்பொழுது செய்யும் முயற்சி 21-ஜென்மங்களுக்குப் பலனாக இருக்கும். 21-ஜென்மங்கள் எப்பொழுதும் நிரம்பிய சொரூபத்தில் இருப்பீர்கள். அப்படியானால், முயற்சி என்று என்ன செய்தீர்கள்? கடினமாக இருந்ததா? முயற்சி என்றால், தன்னை இந்த இரதத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். இதைத் தான் முயற்சி செய்வது என்று கூறுவது. இந்த முயற்சி செய்தீர்கள் இல்லையா? இந்த முயற்சி செய்ததின் பலன் சொரூபமாக 21-பிறவிகள் எப்பொழுதும் குஷியாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பீர்கள். இப்பொழுது கூட சங்கமயுகம் மகிழ்ச்சிகள் நிறைந்த யுகம். குழப்பம் அடைவதற்கானது அல்ல, மகிழ்ச்சிகள் நிறைந்த யுகம். ஒருவேளை ஏதாவது ஒரு விஷயத்தில் குழப்பம் அடைகிறீர்கள் என்றால், சங்கமயுகத்திலிருந்து உங்களுடைய காலை கொஞ்சம் கலியுகம் பக்கம் எடுத்து செல்கிறீர்கள், எனவே குழப்பம் அடைகிறீர்கள். எண்ணம் மற்றும் புத்தி என்ற கால்கள் சங்கமயுகத்தில் இருக்கிறது என்றால், எப்பொழுதும் மகிழ்ச்சியில் இருப்பீர்கள். சங்கமயுகம் என்றால், இரண்டின் சந்திப்பைக் கொண்டாடும் யுகம். அப்படி தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பை கொண்டாடுவதற்கான சங்கமயுகம். எங்கு சந்திப்பு இருக்கிறதோ, அங்கு மகிழ்ச்சியிருக்கும். இது மகிழ்ச்சியை கொண்டாடுவதற்கான பிறவி. தான் இல்லையா? குழப்பம் அடைவதற்கான பெயர், அடையாளம்

இல்லை. மகிழ்ச்சிகள் நிறைந்த நேரத்தில், அளவற்ற ஆன்மீக மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள். இரட்டை வெளிநாட்டினரோ, இரட்டை மகிழ்ச்சியில் இருப்பவர் தான் இல்லையா. அந்தமாதிரி மகிழ்ச்சிகள் நிறைந்த ஜென்மத்திற்காக வாழ்த்துக்கள். குழப்பம் அடைவதற்காக உலகில் அநேக ஆத்மாக்கள் இருக்கிறார்கள், அது நீங்கள் இல்லை. முன்பாகவே அவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். மேலும் மகிழ்ச்சியை கொண்டாடுபவர்களாகிய நீங்கள் எதில் குறைந்தவர்கள். உங்களுடைய இந்த சிரேஷ்ட ஜெயந்தியை (பிறந்த நாளை) புரிந்து கொண்டீர்களா? பொதுவாகவே இன்றைய நாட்களில் ஜோதிடம் தெரிந்தவர்கள், நாள், கிழமை, நேரத்தின் ஆதாரத்தில் பாக்கியத்தை கூறுவார்கள். உங்களின் அனைவரின் நேரம் எது, கிழமை எது? தந்தையின் கூடவே பிராமணர்களுக்கும் ஜென்மம் ஏற்பட்டது இல்லையா? எனவே பகவானின் நாள், கிழமை எதுவோ, அதுவே உங்களுடையதும் தான்.

பகவானின் அவதாரம் அதாவது தெய்வீக ஜென்மத்தின் நேரமாக எது இருக்கிறதோ, அதுவே உங்களுடைய நேரமாக ஆகி விட்டது. எவ்வளவு உயர்ந்த நேரம். எவ்வளவு உயர்ந்த ரேகை, அதைத் தான் திசை என்று கூறுவார்கள். எனவே தந்தையுடன் சேர்ந்து, என்னுடைய ஜென்மம் (பிறவி) ஏற்பட்டது என்று எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்திலேயே இருங்கள். பிரம்மா, பிராமணர்களின்றி ஒன்றும் செய்ய முடியாது. தந்தை சிவபாபாவும், பிரம்மாவின்றி ஒன்றும் செய்ய முடியாது. அப்படி சேர்ந்தே ஏற்பட்டது தான் இல்லையா? எனவே ஜென்மத்தின் கிழமை மற்றும் நேரத்தின் மகத்துவத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எந்த கிழமையில் பகவான் கீழே இறங்கினாரோ, அந்த கிழமையில் தான் ஆத்மாக்கள் நாமும் அவதரித்திருக்கிறோம். பெயர், இராசியைக் கூட பாருங்கள் -பிரம்மா -பிராமணன். பிரம்மா குமார், பிரம்மா குமாரி. பெயர் இராசியும் அதே சிரேஷ்டமானது. அந்தமாதிரி சிரேஷ்ட ஜென்மம் மற்றும் வாழ்க்கையுள்ள குழந்தைகளைப் பார்த்து, தந்தை எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறார். குழந்தைகள் ஆஹா பாபா, ஆஹா பாபா! என்று கூறுகிறார்கள், மேலும் தந்தை ஆஹா குழந்தைகளே! என்று கூறுகிறார். அந்த மாதிரி குழந்தைகளும் யாருக்கும் கிடைக்க மாட்டார்கள்.

இன்றைய இந்த தெய்வீக தினத்தின் விசேஷ பரிசாக பாப்தாதா அனைத்து அன்பிற்குரிய குழந்தைகளுக்கும், இரண்டு பொன்னான

வார்த்தைகள் கூறுகிறார். ஒன்று நான் தந்தையின் கண்ணின் மணி,. என்று எப்பொழுதும் தன்னை உணர்ந்து கொள்ளுங்கள். கண்ணின் மணி என்றால், எப்பொழுதும் கண்களில் நிரம்பியிருப்பவர். கண்களில் நிரம்பி இருப்பதின் சொரூபம் கண்மணி ஆகும். கண்களில் கண்மணி தான் அதிசயம். அப்படி கண்ணின் மணி என்றால், பிந்து தந்தையின் நிரம்பியிருக்கிறேன். அன்பில் மூழ்கியிருக்கிறேன். அந்தமாதிரி ஒன்று இந்த கண்ணின் மணி என்ற பொன்னான வார்த்தையை நினைவில் வையுங்கள். இன்னொன்று எப்பொழுதும் தந்தையின் துணை மற்றும் கரம் என் மேல் இருக்கிறது துணையும் இருக்கிறது, மேலும் கரமும் இருக்கிறது. எப்பொழுதும் ஆசீர்வாதத்தின் கரம், மேலும் சகயோகத்தின் துணை. அந்தமாதிரி, எப்பொழுதும் தந்தையின் துணை மற்றும் கை கண்டிப்பாக இருக்கிறது. துணை கொடுப்பது கை வைப்பது என்று அல்ல, இருக்கவே இருக்கிறது. எப்பொழுதும் கை, மற்றும் எப்பொழுதும் துணை என்பது இரண்டாவது பொன்னான வார்த்தை. இது இன்றைய தெய்வீக ஜென்மத்திற்கான பரிசு. நல்லது.

அந்த மாதிரி நாலாபுறங்களிலும் உள்ள எப்பொழுதும் சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு சுவாசத்தையும் குஷியின் இசையாக அனுபவம் செய்யக்கூடிய குழந்தைகளுக்கு, இரட்டை கதாநாயக குழந்தைகளுக்கு, எப்பொழுதும் பகவான் மற்றும் பாக்கியம் என்பதின் நினைவு சொரூப குழந்தைகளுக்கு, எப்பொழுதும் அனைத்து பொக்கி'ங்களினால் நிரம்பிய களஞ்சியம் உள்ள குழந்தைகளுக்கு, போலாநாத், அமர்நாத், வரமளிக்கும் வள்ளல், தெய்வீக ஜென்மத்திற்கான தந்தையின் மிகுந்த வாழ்த்துக்களுடன் சேர்ந்து அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிகளுடன் சந்திப்பு:** எல்லையற்ற தந்தையின் அன்பு புஜங்கள் மிகப் பெரியது, அந்த அன்பின் புஜங்களில் மற்றும் அரவணைப்பில் நீங்கள் அனைவரும் நிரம்பியிருக்கிறீர்கள். எப்பொழுதுமே அனைத்து குழந்தைகளும் தந்தையின் புஜங்களின் உள்ளே, புஜங்களின் மாலையின் உள்ளே இருந்தால் தான், மாயாவை வென்றவராக இருப்பீர்கள். பிரம்மாவுடன் சேர்ந்து ஜென்மம் எடுக்கக் கூடிய, சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் இல்லையா? தேதியில் கொஞ்சம் கூட வித்தியாசம் இல்லை, எனவே பிரம்மாவிற்கு அதிக முகங்கள்

காண்பித்திருக்கிறார்கள். பிரம்மா விற்குச் தான் 5 முகங்கள் மற்றும் 3 முகங்கள் காண்பிக்கிறார்கள். ஏனென்றால், பிரம்மாவுடன் சேர்ந்து பிராமணர்கள் இருக்கிறார்கள். அப்படியானால் நீங்கள் 3 முகத்தைச் சேர்ந்தவர்களா அல்லது 5-முகத்தைச் சேர்ந்தவர்களா? முகமும் சகயோகியாக இருக்கும் இல்லையா? தந்தைக்கும் போதை இருக்கிறது, எந்த போதை இருக்கிறது? முழு உலகத்தில் எந்தவொரு தந்தை இந்த மாதிரி குழந்தைகளைத் தேடிக் கண்டுபிடித்தால், கிடைப்பார்களா. (இல்லை) தந்தை கூறுகிறார் -இந்த மாதிரி குழந்தைகள் கிடைக்கமாட்டார்கள், குழந்தைகள் கூறுகிறார்கள் -இந்த தந்தை மாதிரி கிடைக்கமாட்டார். நல்லது -குழந்தைகள் தான் வீட்டின் அழகாகவும், கலகலப்பாகவும் இருப்பார்கள். தனியாக தந்தை மூலம் வீட்டின் அழகு (கலகலப்பு) இருக்காது. எனவே குழந்தைகள் இந்த உலகம் என்ற வீட்டின் அழகு. இத்தனை முழு பிராமணர்களின் கலகலப்பு ஏற்படுவதற்கு யார் பொறுப்பாளர் ஆனார்? குழந்தைகள் தான் ஆனார்கள் இல்லையா. தந்தையும் குழந்தைகளும் கலகலப்பை பார்த்து, குஷியடைகிறார். தந்தைக்கு உங்களை விட அதிகமாக மாலைகளை ஜெபிக்க வேண்டியதாக இருக்கிறது. உங்களுக்கோ ஒரே ஒரு தந்தையே நினைவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. மேலும் தந்தைக்கோ எத்தனை மாலைகளை நினைக்க வேண்டியதாக இருக்கிறது. பக்தி மார்க்கத்தில் எத்தனை மாலைகள் போட்டீர்களோ, அத்தனை மாலைகளை தந்தைக்கு இப்பொழுது நினைக்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு குழந்தையின் மாலையை கூட தந்தை ஒரு நாளாவது நினைவு செய்யவில்லை என்று இருக்க முடியாது. அப்படி தந்தையும் நௌதா (இடைவிடாத) பக்தனாக அகி விட்டார் இல்லையா? ஒவ்வொரு குழந்தையும் விசேஷங்களின், குணங்களின் மாலையை தந்தை நினைவு செய்கிறார். மேலும் எத்தனை முறை நினைவு செய்கிறாரோ, அந்தளவு அந்த குணங்கள் விசேஷங்கள் இன்னும் புத்துணர்வு ஆகிக் கொண்டே யிருக்கிறது. தந்தை மாலையை நினைவு செய்கிறார், ஆனால் மாலையின் பலனை குழந்தைகளுக்கு கொடுக்கிறார், அவர் எடுத்துக் கொள்வதில்லை. நல்லது. -பாப்தாதாவோ எப்பொழுதும் குழந்தைகளின் கூடவே தான் இருக்கிறார், ஒரு வினாடி கூட குழந்தைகளை விட்டு, பிரிந்திருக்க முடியாது. பிரிந்திருக்க விரும்பினாலும், இருக்க முடியாது. ஏன்? எந்தளவு குழந்தைகள் நினைவு செய்கிறார்களோ, அதற்கான பிரதிபலனோ கொடுப்போம் இல்லையா? நினைவு செய்வதற்கான பலன் கொடுக்க வேண்டுமல்லவா. அந்தமாதிரி

ஒரு வினாடி கூட குழந்தைகளின்றி இருக்க முடியாது. எப்பொழுதும் கூடவே இருக்கிறார் என்ற அதிசயத்தையும் எங்கும் பார்த்திருக்க முடியாது. தந்தை, குழந்தைகளை விட்டுப் பிரிந்தே இருக்க முடியாது என்ற தந்தை மற்றும் குழந்தைகளின் ஜோடியை ஒருபொழுதும் பார்த்திருக்க முடியாது. மிக நல்ல, பூந்தோட்டம் உருவாகியிருக்கிறது. உங்கள் அனைவருக்கும் கூட இந்த பூந்தோட்டம் பிடித்தமானதாக இருக்கிறது இல்லையா. ஒவ்வொன்றின் நறுமணம் வித்தியாசமானது மற்றும் மிகவும் விரும்பமானது. எனவே அல்லாவின் பூந்தோட்டம் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் ஆதிரத்தினங்கள், ஒவ்வொரு இரத்தினத்தின் மதிப்பு, எவ்வளவு இருக்கிறது, மேலும் ஒவ்வொரு இரத்தினத்தின் அவசியமும், ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு காரியத்திலும் தேவையாக இருக்கிறது. அந்தமாதிரி நீங்கள் அனைவருமே சிரேஷ்ட இரத்தினங்கள். உங்களுக்கு இப்பொழுது கூட இரத்தினங்களின் ரூபத்தில் பூஜை நடைபெறுகிறது. இப்பொழுது அநேக ஆத்மாக்களின் விக்னவினாசக் (தடைகளை அழிப்பவர்) ஆகும் சேவை செய்கிறீர்கள். அதனால் தான் நினைவு ரூபத்தில் ஒவ்வொரு இரத்தினத் திற்கும் மதிப்பு இருக்கிறது. ஒவ்வொரு இரத்தினத்தின் விசேஷம் இருக்கிறது. சில தடைகளை அழிக்கும் இரத்தினங்களாக இருக்கும், சில இரத்தினங்கள் வேறுமாதிரியாக இருக்கும். இப்பொழுது இறுதிவரையிலும் ஸ்தூலமாக நினைவு சின்ன ரூபத்தில் சேவை செய்து கொண்டிருக்கிறது. நீங்கள் அந்தமாதிரியான சேவாதாரியாகி இருக்கிறீகள். புரிந்ததா.

**மகாநாட்டிற்கு வந்திருக்கும் வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் அவ்யக்த் பாப்தாதாவின் சந்திப்பு:** அனைவரும் எங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள்? தந்தையின் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள், அந்தமாதிரி அனுபவம் செய்கிறீர்களா? தந்தையின் வீட்டிற்கு விருந்தினர்கள் வருவார்களா அல்லது குழந்தைகள் வருவார்களா? நீங்கள் குழந்தைகளா, உரிமையுள்ளவர்களா, அல்லது விருந்தினர்களா? தந்தையின் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள், தந்தையின் வீட்டிற்கு எப்பொழுதும் உரிமையுள்ள குழந்தைகள் தான் வருவார்கள். இப்பொழுதிலிருந்து தன்னை விருந்தினராக நினைக்காமல் தந்தையின் குழந்தை மகான் ஆத்மா என்று உணர்ந்து கொண்டு முன்னேறிச் செல்லுங்கள். நீங்கள் பாக்கியசாலியாக இருக்கிறீர்கள், அதனால் தான்

இந்த ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தீர்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? இங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இதுவோ பாக்கியமாகும் ஆனது, ஆனால் மேலே என்ன செய்ய வேண்டும். இப்பொழுது எப்பொழுதுமே கூடவே இருங்கள், நினைவில் இருப்பது தான் கூடவே இருப்பது. தனியாக என்று சொல்லாதீர்கள், இணைந்தவர்கள் ஆகி, எங்கே சென்றாலும், என்ன காரியம் செய்தாலும், அதை இணைந்த ரூபத்தில் செய்வதினால், எப்பொழுதும் சகஜமானதாகவும் வெற்றியையும் அனுபவம் செய்வீர்கள். எப்பொழுதும் நான் தந்தையின் கூடவே இருப்பேன் என்ற எண்ணத்தை அவசியம் வைத்து செல்லுங்கள். பார்க்கலாம், முயற்சி செய்யலாம் என்று அப்படி இருக்க வேண்டாம். கண்டிப்பாக செய்ய வேண்டும், ஏனென்றால் திடத் தன்மை தான் வெற்றியின் சாவி. எனவே இந்த சாவியை எப்பொழுதும் உங்கள் கூடவே வைத்துக் கொள்ளுங்கள். இது அந்தமாதிரியான சாவி, என்ன பொக்கிஷம் வேண்டுமோ, அதை நினைபீர்கள், உடனே அது வந்து சேர்ந்து விடும். இது அப்படிப்பட்ட சாவி. இந்த சாவியை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்வது என்றால், எப்பொழுதும் வெற்றியை அடைவது! இப்பொழுது நீங்கள் விருந்தினர் இல்லை, உரிமையுள்ள ஆத்மாக்கள். பாப்தாதாவும் அந்தமாதிரியான அதிகாரி குழந்தைகளைப் பார்த்து, மகிழ்ச்சியடைகிறார். என்ன அனுபவம் செய்தீர்களோ, அந்த அனுபவத்தின் பொக்கிஷத்தை எப்பொழுதும் மற்றவர்களுக்கு வழங்கிக் கொண்டேயிருங்கள். எந்தளவு கொடுப்பீர்களோ, அந்தளவு அதிகரித்துக் கொண்டே இருக்கும். பெரும் வள்ளலாக ஆகுங்கள், தன்னிடம் மட்டும் வைத்துக் கொள்ளாதீர்கள். நல்லது.

**விடைபெறும் நேரம் காலை 3.30-மணிக்கு:** அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்த்துகளுடன் சேர்த்து, காலை வணக்கம். எப்படி இன்றைய இரவு மங்களமான சந்திப்பின் மகிழ்ச்சியில் கழிந்தது. அதேபோல் எப்பொழுதும் இரவும் பகலும் தந்தையின் சந்திப்பின் மகிழ்ச்சியை கொண்டாடிக் கொண்டேயிருங்கள். முழு சங்கமயுகமே எப்பொழுதும் தந்தையிடமிருந்து, வாழ்த்துக்களைக் பெற்றுக் கொண்டே வளர்ச்சியடைந்து கொண்டே, முன்னேறிச் சென்று கொண்டே பிறரையும் முன்னேற்றிக் கொண்டே இருங்கள். எப்பொழுதும் பெரும் வள்ளல், வரமளிகும் வள்ளலாகி, அநேக ஆத்மாக்களுக்கு தானமும் கொடுங்கள், வரதானமும் கொடுங்கள்.

நல்லது. அந்த மாதிரியான எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்யும், எப்பொழுதும் இரக்க மனமுடைய எப்பொழுதும் அனைவருக்காகவும் சுபபாவனை வைக்கக் கூடிய, குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.

**வரதானம்: உணரும் சக்தி மூலமாக சுய பரிவர்த்தனை செய்யக்கூடிய தீவிர முயற்சியாளர் ஆகுக!**

எந்தவொரு பரிவர்த்தனைக்கான சுலபமான ஆதாரம் உணரும் சக்தி. எதுவரையிலும் உணரும் சக்தி வருவதில்லையோ, அதுவரை அனுபவம் ஆகாது. மேலும் எதுவரையிலும் அனுபவம் இல்லையோ, அதுவரையிலும் பிராமண வாழ்க்கையில் விசேஷங்களின் அஸ்திவாரம் உறுதியாக இருக்காது. ஊக்கம் உற்சாகம் நிறைந்த நடத்தை இருக்காது. எப்பொழுது உணரும் சக்தி ஒவ்வொரு விஷயத்தின் அனுபவியாக ஆக்குகிறது, அப்பொழுது தான் தீவிரமாக முயற்சி செய்பவர் ஆகி விடுகிறார். உணரும் சக்தி சதா காலத்திற்காக சகஜ பரிவர்த்தனை செய்து விடுகிறது.

**சுலோகன்: அன்பின் சொரூபத்தை நடைமுறையில் வெளிப்படுத்தி பிரம்மாபாபாவிற்கு சமமானவர்கள் ஆகுக!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 18.02.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகம் உடல், மனம், பொருள் மற்றும் நேரத்தை பயனுள்ளதாக ஆக்குவதற்கான யுகம்!

இன்று உலகிற்கு நன்மை செய்யும் தந்தை, தன்னுடைய சகயோகி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கான ஆர்வம் மற்றும் ஈடுபாடு நிரம்பியிருக்கிறது. அனைவருக்கும் இந்த ஒரே ஒரு சிரேஷ்ட எண்ணம் தான் இருக்கிறது, மேலும் அனைவரும் இதே காரியத்தில் ஊக்கம், உற்சாகத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தந்தை மீது அன்பு இருக்கும் காரணத்தினால், சேவை மீதும் அன்பு ஏற்பட்டு விட்டது. இரவு பகலாக நடைமுறையில் காரியம் செய்வதிலும், மற்றும் கனவில் கூட தந்தை மற்றும் சேவை தான் தென்படுகிறது. தந்தைக்கு சேவை மீது அன்பு உள்ளது. எனவே அன்பிற்குரிய சகயோகி குழந்தைகளுக்கும், சேவை மேல் அன்பு நன்றாக இருக்கிறது. இது அன்பிற்கான நிரூபணம் அதாவது எடுத்துகாட்டாகும். அந்தமாதிரியான சகயோகி குழந்தை களைப் பார்த்து, பாப்தாதாவும் மகிழ்ச்சியடைகிறார். தன்னுடைய உடல், மனம், செல்வம் மற்றும் நேரத்தை எவ்வளவு அன்புடன் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். பாவக் கணக்கில் இருந்து மாறி புண்ணியத்தின் கணக்கில் தற்சமயத்திற்காகவும், மேலும் சிரேஷ்ட எதிர்காலத்திற் காகவும், சேமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். சங்கமயுகமே ஒன்றிற்கு பலமடங்கு சேமிப்பு செய்வதற்கான யுகம். உடலை சேவையில் ஈடுபடுத்துங்கள், மற்றும் 21-ஜென்மங்களுக்காக முழுமையாக நோயற்ற உடலைப் பெறுங்கள்.. எப்படிப்பட்ட பலஹீனமான உடலாக இருந்தாலும், நோயுற்றதாக இருந்தாலும், வாய் மொழி சேவை மற்றும் உடலால் சேவை செய்ய முடியவில்லை யென்றாலும் மன சேவையை இறுதி நேரம் வரை செய்ய முடியும். தன்னுடைய அதீந்திரிய சுகம், சாந்தியின் சக்தியை முகம் மூலம், கண்களின் மூலம் காண்பிக்க

முடியும். உங்கள் தொடர்பில் வருபவர்கள், இவரோ அதிசயமான நோயாளி என்று கூற வேண்டும். டாக்டர்களும் நோயாளியைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து விட வேண்டும். பொதுவாக டாக்டர்கள் நோயாளிகளுக்கு குஷி கொடுப் பார்கள், ஆனால் அவர் கொடுப்பதற்குப் பதிலாக பெறுவதின் அனுபவம் செய்யட்டும். எப்படிப்பட்ட நோயாக இருந்தாலும், ஒருவேளை தெய்வீக புத்தி நன்றாக இருக்கிறது என்றால், இறுதி நேரம் வரையிலும் சேவை செய்ய முடியும். ஏனென்றால், இந்த உடலின் சேவையின் பலனாக 21 ஜென்மங்கள் அமர்ந்து நன்றாக சாப்பிட்டுக் கொண்டிருப்போம் என்று தெரிந்திருக்கிறீர்கள். அந்தமாதிரி உடலால், மனதால், நீங்களே மனதின் அமைதி சொரூபமாகி, எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணத்தில் சக்திசாலியாகி, சுபபாவனை, சுப விருப்பங்கள் மூலமாக வள்ளலாகி, சுகம், சாந்தியின்கிரணங்களை வாயுமண்டலத்தில் பரப்பிக் கொண்டேயிருங்கள். எப்பொழுது உங்களுடைய படைப்பாகிய சூரியன், நாலாபுறக்களிலும் பிரகாசிக்கும் கிரணங்களைப் பரப்பிக் கொண்டேயிருக்கிறது என்றால், நீங்கள் மாஸ்டர் படைப்பவர், மாஸ்டர் சர்வசக்திவான், பாக்கியத்தை வழங்குபவர், வரமளிக்கும் வள்ளல், பாக்கியவான், பிராப்திகளின் கிரணங்களைப் பரப்ப முடியாதா? எண்ணத்தின் சக்தி அதாவது மனம் மூலமாக, ஒரு இடத்தில் இருந்து கொண்டும் கூட நாலாபுறாங்களிலும் வைப்ரேஷன் மூலமாக வாயுமண்டலத்தை உருவாக்க முடியும். கொஞ்ச காலத்திற்காக இந்த ஜென்மத்தில் மனம் மூலமாக சேவை செய்வதினால், 21 ஜென்மங்கள் மனம் எப்பொழுதும் சுகம் மற்றும் சாந்தியின் மகிழ்ச்சியில் இருக்கும். பிறகு அரைக் கல்பம் பக்தியில், விக்ரஹங்கள், படங்கள் மூலமாக மனதின் சாந்தியைக் கொடுப்பதற்காக பொறுப்பாளராக ஆவீர்கள். விக்ரஹமும் அந்தளவு சாந்தியை மற்றும் சக்தியை கொடுக்கக் கூடியதாக ஆகும். அப்படி ஒரு ஜென்மத்தின் மன சேவை, முழுக் கல்பத்தில் சைத்தன்ய சொருபம் மூலம் மற்றும் படங்கள் மூலம் அமைதியின் சொரூபமானவர் ஆவீர்கள்.

அதேபோல் பணம், செல்வம் மூலமாக சேவைக்கு பொறுப்பாளர் ஆகுபவர்கள், 21-ஜென்மங்களுக்கு எண்ண முடியாத செல்வத்தின் அதிபதி ஆகி விடுவார்கள். கூடவே தூவாபர் யுகத்திலிருந்து, இதுவரையிலும் கூட அந்த ஆத்மாக்கள் ஒருபொழுதும் செல்வத்திற்காக யாசிப்பவராக ஆக மாட்டார்கள். மிகவும் மகிழ்ச்சியுடன் இரண்டு பிடி

சாதம் அருந்துபவர்களாக இருப்பார்கள். ஒருபொழுதும் உணவிற்காக யாசிப்பவராக ஆக மாட்டார்கள். அப்படி ஒரு ஜென்மம் வள்ளலின் காரியத்திற்காக பணம், செல்வத்தை ஈடுபடுத்துவதினால், வள்ளலும் என்ன செய்வார்? சேவையில் ஈடுபடுத்துவார். நீங்களோ தந்தையின் உண்டிலில் போடுகிறீர்கள் இல்லையா? மேலும் தந்தை பிறகு அதை சேவையில் ஈடுபடுத்துகிறார், அந்தமாதிரி சேவைக்காக மற்றும் வள்ளலின் காரியத்திற்காக செல்வத்தை ஈடுபடுத்துவது என்றால், முழுக் கல்பமும் யாசிப்பதிலிருந்து விடுபடுவது. எந்தளவு ஈடுபடுத்து வீர்களோ, அந்தளவு தூவாபர் யுகத்திலிருந்து கலியுகம் வரையிலும் சௌகரியமாக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டேயிருப்பீர்கள். எனவே உடல், மனம், செல்வம், மற்றும் நேரத்தை பயனுள்ளதாக ஆக்க வேண்டும்.

நேரத்தை ஈடுபடுத்துபவர்கள் ஒன்றோ படைப்புச் சக்கரத்தின் அனைத்தையும் விட சிரேஷ்ட காலம் சத்யுகத்தில் வருவார்கள். மிகத் தூய்மையான உயர்ந்த யுகத்தில் வருவார்கள். அந்தக்காலத்தின் மகிமையை பக்தர்கள் இப்பொழுது வரையிலும் பாடிக் கொண்டிருக்கிறார்கள். சொர்க்கத்தை மகிமை செய்கிறார்கள் தான் இல்லையா? அப்படி மிக உயர்ந்த காலத்தில் கூட 1-1-1 என்ற தொடக்க காலத்தில், அதாவது சத்யுகத்தின் முதல் ஜென்மத்தில், அந்த மாதிரி சிரேஷ்ட காலத்தின் அதிகாரத்தை அடையக் கூடிய, முதல் நம்பரில் இருக்கும் ஆத்மாவுடன் தனது வாழ்க்கை காலத்தைக் கழிப்பவராக இருப்பார். அவருடன் சேர்ந்து படிப்பவராக, விளையாடுபவராக, அங்குமிங்கும் சுற்றி வருபவராக இருப்பார். எனவே யார் சங்கமயுகத்தில் தனது நேரத்தை பயனுள்ளதாக ஆக்குகிறார்களோ, அதன் சிரேஷ்ட பலனாக சம்பூரண அனைத்தும் நிறைந்த சிரேஷ்ட காலத்தின் அதிகாரம் அவர்களுக்கு பிராப்தியாக கிடைக்கிறது. ஒருவேளை நேரத்தை ஈடுத்துவதில் அலட்சியமாக இருக்கிறார் என்றால், முதல் நம்பரில் உள்ள ஆத்மா ஸ்ரீ கிருஷ்ணர் சொரூபத்தில், சொர்க்கத்தில் முதல் வருடத்தில் வராமல் பிற்காலத்தில் வரிசைக்கிரமமாக வருவார். இது தான் நேரத்தை கொடுப்பதின் மகத்துவம். என்ன கொடுக்கிறீர்கள், மேலும் என்ன பெற்றுக் கொள்கிறீர்கள்? எனவே உடல், மனம், பணம், நேரம், நான்கையுமே எந்தளவு ஈடுபடுத்த முடியுமோ, அந்தளவு ஈடுபடுத்துகிறேனா என்று சோதனை செய்யுங்கள். எவ்வளவு ஈடுபடுத்த முடியுமோ, அந்தளவு ஈடுபடுத்துவதில்லை என்று இல்லையே?

சக்திகேற்றப்படி ஈடுபடுத்தினால் பிராப்தியும் சக்திக்கேற்றபடி இருக்கும், சம்பூரணமாக இருக்காது. பிராமண ஆத்மாக்கள் நீங்கள், செய்தியாக அனைவருக்கும் என்ன கூறுகிறீர்கள்? சம்பூரண சுகம், சாந்தி உங்களுடைய பிறப்புரிமை என்று தான் கூறுகிறீர்கள்.. சக்திக்கேற்றப்படி உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்றோ கூறுவதில்லை. சம்பூரண என்று கூறுகிறீர்கள் தான் இல்லையா. எப்பொழுது சம்பூரணம் அதிகாரம் இருக்கிறது என்றால், சம்பூரண பிராப்தி செய்வது தான் பிராமண வாழ்க்கை. அரை குரையாக இருக்கிறது என்றால், சத்திரியன். சந்திர வம்சத்தினர் பாதியில் வருகிறார்கள் இல்லையா. எனவே சக்திக் கேற்றப்படி என்றால், அரைகுறையான நிலை மற்றும் பிராமண வாழ்க்கை என்றால், ஒவ்வொரு விஷயத்திலும் சம்பூரணம். புரிந்ததா? பாப்தாதா குழந்தைகளின் சகயோகம் கொடுப்பதற்கான சார்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். அனைவருமே சகயோகிகள் தான். எப்பொழுது சகயோகி ஆகியிருக்கிறீர்களோ, அப்பொழுது தான் சகஜயோகியாகவும் ஆனீர்கள். நீங்கள் அனைவரும் சகயோகி, சகஜயோகி, சிரேஷ்ட ஆத்மாக்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் சம்பூரண அதிகாரமுள்ள ஆத்மாவாக ஆக்குகிறார். பிறகு சக்திக்கேற்றவராக ஏன் ஆகிறீர்கள்? அல்லது வேறு யாராவது ஆவார்கள் என்று நினைக்கவில்லையே? அந்தமாதிரி ஆகுபவர்கள் அதிகம் இருக்கிறார்கள். அதில் நீங்கள் இல்லையா? இப்பொழுது கூட சம்பூரண அதிகாரத்தை அடைவதற்கான நேரம். இப்பொழுது மிகவும் காலதாமதம் ஆகி விட்டது. என்ற அறிவிப்பு பலகையை மாட்டவில்லை. தாமதமாக அதாவது பின்னால் வருபவர்கள் முன்னேறிச் செல்ல முடியும், எனவே இப்பொழுது கூட பொன்னான வாய்ப்பு இருக்கிறது. எப்பொழுது மிகவும் காலதாமதம் என்ற அறிவிப்பு பலகை மாட்டப்பட்டு விட்டது என்றால், பிறகு பொன்னான வாய்ப்பிற்குப் பதிலாக, வெள்ளி வாய்ப்பு ஆகி விடும். அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் பொன்னான வாய்ப்பை எடுத்துக் கொள்பவர் தான் இல்லையா? பொற்காலத்தில் வரவில்லையென்றால், பிராமணன் ஆகி என்ன செய்தீர்கள்? எனவே பாப்தாதா அன்பிற்குரிய குழந்தைகளுக்கு இருந்தும் நினைவூட்டுகிறார், இப்பொழுது தந்தையின் அன்பின் காரணமாக ஒன்றிற்கு பலமடங்கு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது எந்தளவோ, அந்தளவு என்பதில்லை. ஒன்றிற்கு பலமடங்கு. பிறகு கணக்கு வழக்கு எவ்வளவோ, அந்தளவிற்கு இருக்கும் ஆனால்

இப்பொழுதுகள்ளம் கபடமற்றவரின் நிரம்பிய களஞ்சியம் திறக்கப்பட்டிருக்கிறது. எந்தளவு விரும்புகிறீர்களோ, அந்தளவு எடுத்துக் கொள்ள முடியும். பிறகு சத்யுகத்தின் நம்பர் ஒன் ஆசனம் காலி இல்லை என்று கூறுவீர்கள், எனவே தந்தைக்குச் சமமாக சம்பூரணம் ஆகுங்கள். மகத்துவத்தைத் தெரிந்து மகான் ஆகுங்கள். இரட்டை வெளிநாட்டினர் பொன்னான வாய்ப்பை எடுத்துக் கொள்பவர்கள் தான் இல்லையா? எப்பொழுது இவ்வளவு ஆர்வத்துடன் படித்துக் கொண்டிருக்கிறீர்கள், அன்பானவராக, சகயோகியாக இருக்கிறீர்கள் என்றால், ஒவ்வொரு விஷயத்திலும் சம்பூரணம் ஆக வேண்டும் என்ற இலட்சியம் மூலமாக சம்பூரணத்தின் இலட்சணத்தைக் கடைப்பிடியுங்கள். ஆர்வமில்லை என்றால் இங்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள், எப்படி பறந்து வந்து சேர்ந்திருக்கிறீர்களோ, அதேபோலவே எப்பொழுதும் பறக்கும் கலையில் பறந்து கொண்டேயிருங்கள். உடலால் பறப்பதற்கும் பயிற்சி உள்ளவர்களாக இருக்கிறீர்கள். ஆத்மாவும் எப்பொழுதும் பறந்து கொண்டேயிருக்கட்டும். இது தான் பாப்தாதாவின் அன்பு. நல்லது.

எப்பொழுதும் வெற்றி சொரூபமாகி, எண்ணம், நேரத்தை பயனுள்ளதாக ஆக்கக் கூடிய, ஒவ்வொரு காரியத்திலும் சேவையின் ஊக்கம், உற்சாகம் வைக்கக் கூடிய, எப்பொழுதும் தன்னை சம்பன்னம் ஆக்கி,, சம்பூரண அதிகாரத்தை பெறக் கூடிய, கிடைத்திருக்கும் பொன்னான வாய்ப்பை இப்பொழுதும் எடுத்துக் கொள்ளக் கூடிய, தந்தையைப் பின்பற்றி நடக்கும் உணமையான குழந்தைகளுக்கு, நம்பர் ஒன் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**காத்மண்டு (நேபாளம்) மற்றும் வெளிநாட்டு சகோதர, சகோதரிகளின் குரூப்புடன் பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு:** அனைவரும் எப்பொழுதும் தங்களை விசேஷ ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? முழு உலகத்திலும் அந்த மாதிரியான விசேஷ ஆத்மாக்கள் எத்தனை பேர் இருப்பார்கள்? கோடியில் சிலர் என்ற மகிமை செய்யப் படுகிறதே, அவர்கள் யார்? நீங்கள் தான் இல்லையா. எனவே தன்னை எப்பொழுதும் கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலரான சிரேஷ்ட ஆத்மா என்று நினைக்கிறீர்களா? இந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாவாக ஆவேன் என்று ஒருபொழுதும் கனவில் கூட நினைத்திருக்க மாட்டீர்கள், ஆனால் நடைமுறை ரூபத்தில் அனுபவம் செய்கிறீர்கள்.

அப்படியானால், தன்னுடைய இந்த சிரேஷ்ட பாக்கியம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? ஆஹா! என்னுடைய சிரேஷ்ட பாக்கியம்! பகவான் அவரே, உங்களுடைய இந்த பாக்கியத்தை உருவாக்கியிருக்கிறார். நேரடியாக பகவான் பாக்கியத்தின் ரேகையைப் போட்டிருக்கிறார், அந்தமாதிரி சிரேஷ்ட பாக்கியம். எப்பொழுது இந்த சிரேஷ்ட பாக்கியம் நினைவில் இருக்கிறது என்றால், குஷியில் புத்தி என்ற கால்கள் இந்த பூமியில் இருப்பதில்லை. அந்தமாதிரி நினைக்கிறீர்கள் தான் இல்லையா? பொதுவாகவே ஃபரிஸ்தாக்களின் கால்கள் பூமியில் இருப்பதில்லை. எப்பொழுதுமே மேலே இருப்பார்கள். உங்களுடைய புத்தி என்ற கால் எப்பொழுதும் எங்கே இருக்கிறது.? கீழே தரையில் இல்லை. தேக அபிமானம் கூட தரை தான். தேக அபிமானம் என்ற தரையிலிருந்து, மேலே இருப்பவர்கள். இவர்களைத் தான் ஃபரிஸ்தாக்கள் என்று கூறுவது. அப்படி உங்களுக்கு எத்தனை பட்டங்கள். -பாக்கியவான், ஃபரிஸ்தா, தேடிக் கண்டெடுக்கப்பட்டவர்கள், -என்னவெல்லாம் சிரேஷ்ட பட்டங்கள் இருக்கின்றனவோ, அவை அனைத்தும் உங்களுடையதாகும். எனவே இந்த குஷியில் நடனமாடிக் கொண்டேயிருங்கள். செல்லக் குழந்தைகள் ஒருபொழுதும் தரையில் கால்களை வைக்க மாட்டார்கள். எப்பொழுதும் ஊஞ்சலில் இருப்பார்கள். ஏனென்றால், கீழே தரையில் இருப்பதற்கான பழக்கம் உள்ளவர்களாக 63 ஜென்மங்கள் இருந்தீர்கள். அதை அனுபவம் செய்து பார்த்து விட்டீர்கள். தரையில், மண்ணில் இருந்ததினால், அழுக்காகி விட்டீர்கள். மேலும் இப்பொழுது செல்லக் குழந்தைகள் ஆகி விட்டீர்கள் என்றால், எப்பொழுதும் பூமிக்கு மேலே இருங்கள். அழுக்கு ஆகாமல், எப்பொழுதும் சுத்தமாக இருங்கள். உண்மையான உள்ளம், சுத்தமான உள்ளமுள்ள குழந்தைகள், எப்பொழுதும் தந்தையுடன் இருக்கிறார்கள், ஏனென்றால், தந்தையும் எப்பொழுதும் சுத்தமாக இருக்கிறார் இல்லையா? அந்தமாதிரி தந்தையுடன் இருப்பவர் களும், எப்பொழுதும் சுத்தமானவர்கள் தான். மிகவும் நல்லது, சந்திப்பு விழாவிற்கு வந்து சேர்ந்து விட்டீர்கள், ஆர்வமானது சந்திப்பதற்காக இங்கே கொண்டு வந்து சேர்த்தே விட்டது. பாப்தாதா குழந்தைகளை பார்த்து, குஷியடைகிறார். ஏனென்றால், குழந்தைகள் இல்லையென்றால், தந்தையும் தனியாக என்ன செய்வார். உங்களுடைய வீட்டிற்கு வருக! வருக! என்று வரவேற்கிறோம். பக்தர்கள் தீர்த்த யாத்திரையில் செல்கிறார்கள். எவ்வளவு கடினமான பாதையை

கடந்து செல்கிறார்கள், நீங்களோ, காத்மண்டுவிலிருந்து பேருந்தில் வந்துள்ளீர்கள். மிகவும் மகிழ்ச்சியோடு வந்து சேர்ந்து விட்டீர்கள். நல்லது.

**லண்டன் குரூப்போடு சந்திப்பு:** அனைவரும் அன்பு என்ற கயிறில் கோர்க்கப் பட்டிருக்கும், ஒரு தந்தையின் மாலையின் மணிகள் தான் இல்லையா? மாலைக்கு இந்தளவு மகத்துவம் ஏன் உருவானது. ஏனென்றால் அன்பு என்ற கயிறு அனைத்தையும் விட சிரேஷ்ட கயிறாகும். அப்படி அன்பின் கயிறு மூலம் நீங்கள் அனைவரும் ஒரு தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறீரகள், இதனுடைய நினைவு சின்னம் தான் மாலையாகும் யாருக்கு ஒரு தந்தையைத தவிர வேறு யாருமே இல்லையோ, அவர் தான் அந்த ஒருவரின் அன்பு என்ற கயிற்றில் மாலையின் மணியாகி உருளுவார்கள். கயிறு ஒன்று தான், மணிகள் அநேகம். அப்படி இது ஒரு தந்தையின் அன்பின் அடையாளம். அந்தமாதிரி தன்னை மாலையின் மணி என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா, அல்லது 108-லோ மிகக் குறைந்தவர்கள் தான் வருவார்கள் என்று நினைக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? இந்த 108 -என்ற எண்ணிக்கையோ ஒரு காரணமாக மட்டும் தான் இருக்கிறது. யாரெல்லாம் தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கிறார்களோ, அவர்கள் கழுத்தின் மாலையின் முத்துக்களாக நிச்சயம் இருக்கிறார்கள். யார் அந்தமாதிரி ஒருவரின் அன்பிலேயே மூழ்கியிருக்கிறார்களோ, அந்த மூழ்கியிருக்கும் நிலை தடையற்றவராக ஆக்கி விடுகிறது. மேலும் தடையற்ற ஆத்மாக்களுக்குத் தான் பூஜையும் மகிமையும் செய்யபடுகிறது. மிக அதிகமாக மகிமையை யார் செய்கிறார்? ஒருவேளை, ஒரு குழந்தையையாவது மகிமை செய்ய வில்லையென்றால், அவர் கோபப் படுவார், எனவே பாபா ஒவ்வொரு குழந்தையையும் மகிமை செய்கிறார், ஏனென்றால், ஒவ்வொரு குழந்தையும் தனது அதிகாரம் என்று நினைக்கிறார். அதிகாரத்தின் காரணமாக ஒவ்வொருவரும் தன்னுடைய உரிமை என்று நினைக்கிறார். தந்தையின் வேகம் அந்தமாதிரியானது, அந்தமாதிரியான வேகம், வேறு யாருக்கும் இருக்க முடியாது. ஒரு வினாடியில் அநேகர்களை திருப்திப் படுத்த முடியும், அப்படி தந்தை குழந்தைகளோடு பிஸியாக இருக்கிறார், மேலும் குழந்தைகள் தந்தையுடன் பிஸியாக இருக்கிறார்கள். தந்தையின் தொழிலே குழந்தைகளுக்காகத் தான்.

# 1985 அவ்யக்த முரளி

அழியாத இரத்தினமாக ஆகியிருக்கிறீர்கள், அதற்கான வாழ்த்துக்கள். 10-வருடம் அல்லது 15-வருடங்களாக மாயாவை வென்றவராக இருக்கிறீர்கள் -அதற்கான வாழ்த்துக்கள்! இன்னும் வரும் நாட்களிலும் முழு சங்கமயுகமே வென்றவராகவே இருங்கள். நீங்கள் அனைவருமே உறுதியானவர்கள். எனவே பாப்தாதா அந்தமாதிரியான உறுதியான, அசையாத குழந்தைகளை பார்த்து குஷியடைகிறார். ஒவ்வொரு குழந்தையின் விசேஷத் தன்மை, அவரை தந்தையின் குழந்தையாக ஆக்கியது. யாரிடம் விசேஷத் தன்மையே இல்லை என்று அந்தமாதிரி ஒரு குழந்தை கூட கிடையாது.. எனவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விசேஷத் தன்மையைப் பார்த்து, எப்பொழுதும் குஷியடைகிறார். இல்லையென்றால், கோடியில் சிலராக, அந்த சிலரிலும் சிலராக, நீங்கள் மட்டும் ஏன் ஆகியிருக்கிறீர்கள்., அவசியம் ஏதோ விசேஷம் இருக்கிறது. சிலர் ஒருவிதமான இரத்தினங்கள், சிலர் வேறுவிதமான இரத்தினங்கள், பலவிதமான விசேஷங்களில் நவரத்தினங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. விசேஷமாக ஒவ்வொரு இரத்தினமும் விக்ன விநாசக் ஆக இருக்கும், அந்தமாதிரி நீங்கள் அனைவருமே விக்ன விநாசக்.

வெளிநாட்டு சகோதர, சகோதரிகளின் அன்பு நினைவு மற்றும் கடிதங்களுக்கான பதில் கூறிக் கொண்டே: அனைத்து அன்பான குழந்தைகளின் அன்பைப் பெற்றுக் கொண்டோம். அனைவரது உள்ளத்தின் ஊக்கம் மற்றும் உற்சாகம் தந்தையிடம் வந்து சேருகிறது. மேலும் எப்படி ஊக்கம் மற்றும் உற்சாகத்தோடு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் -எப்பொழுதும் முன்னேறிக் கொண்டி ருக்கும் குழந்தைகளின் மீது பாப்தாதாவின் மற்றும் குடும்பத்தின் விசேஷ ஆசிர்வாதங்கள் இருக்கிறது. இதே ஆசீர்வாதங்கள் மூலமாக முன்னேறிக் கொண்டேயிருப்பார்கள். மேலும் மற்றவர்களையும் முன்னேற்றிக் கொண்டேயிருப்பார்கள். சேவையில் நன்றாக பந்தயம் செய்து கொண்டு இருக்கிறீர்கள். எப்படி ஊக்கம் மற்றும் உற்சாகத்தில் பந்தயம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதேபோல் அழியாத முன்னேற்றத்தையும் அடைந்து கொண்டேயிருங்கள். பிறகு நல்ல வரிசை எண்ணையும் வரும் நாட்களில் பெற்றுவிடுவீர்கள். அனைவரும் தன்னுடைய பெயர், விசேஷத்தோடு நினைவை ஏற்றுக் கொள்ளுங்கள். இப்பொழுதும் கூட அனைத்து குழந்தைகளும் அவரவர்களின் விசேஷத்தோடு

பாப்தாதாவின் எதிரில் இருக்கிறார்கள். எனவே பல கோடி மடங்கு அன்பு நினைவுகள்.

**தாதி சந்திரமணி அவர்கள் பஞ்சாப் செல்வதற்காக விடைபெறுகிறார்கள்:** அனைத்து குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகள் கொடுங்கள். மேலும் பறக்கும் கலையில் செல்ல வேண்டுமென்ற விசேஷ செய்தியையும் கூறுங்கள். மற்றவர்களைப் பறக்க வைப்பதற்காக சக்திசாலியான நிலையையும் கடைப்பிடியுங்கள். எப்படிபட்ட சூழ்நிலையிலும் பறக்கும் கலை மூலமாக ஆன்மீக ஆத்மாக்களைப் பறக்க வைக்கும் அனுபவத்தை செய்விக்க முடியும். எனவே அனைவருக்கும் நினைவு மற்றும் சேவை எப்பொழுதும் சேர்ந்தே இருக்கட்டும். விசேஷமாக இந்த நினைவை ஊட்டுங்கள். மற்றபடி அனைவருமே செல்லக் குழந்தைகள். நல்ல விசேஷம் நிறைந்த ஆத்மாக்கள். அனைவரும் அவரவர்களின் விசேஷத்தோடு அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். நல்லது. இரட்டை பங்கை செய்து கொண்டிருக்கிறீர்கள். எல்லைக்கு அப்பாற்பட்ட ஆத்மாக்களின் அடையாளமே இது தான் -எந்த நேரம், எங்கு அவசியமாக இருக்கிறதோ, அங்கு சென்று அடைவது. நல்லது.

**வரதானம்: சேவையின் தடைகளை முன்னேற்றத்திற்கான படி என்று நினைத்து முன்னேறிச் செல்லக் கூடிய தடையற்ற உண்மையான சேவாதாரி ஆகுக!**

சேவை என்பது பிராமண வாழ்க்கையை எப்பொழுதும் தடையற்றதாக ஆக்குவதற்கான சாதனமும் தான். மேலும் சேவையில் தான் தடைகளின் கேள்விக்குறி அதிகமாக வருகிறது. தடையற்ற சேவாதாரியை உண்மையான சேவாதாரி என்று கூறுவோம். தடை வருவதும் கூட நாடகத்தில் அடங்கியிருக்கிறது. கண்டிப்பாக வரும், மேலும் வந்து கொண்டேயிருக்கும். ஏனென்றால் இந்த தடை மற்றும் பரீட்சை தான் அனுபவி ஆக்குகிறது. இதை தடையென்று புரிந்து கொள்ளாமல், அனுபவத்தின் முன்னேற்றம் ஆகிக் கொண்டிருக்கிறது என்ற பாவனையோடு பார்த்தீர்கள் என்றால், முன்னேற்றத்தின் படி அனுபவம் ஆகும், மேலும் முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள்.

**சுலோகன்: விக்ன ரூபமாக ஆகாமல் விக்ன விநாசக் ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.02.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சீதளத்தன்மையின் (குளிர்ச்சி) சக்தி!

இன்று ஞான சூரியன், ஞான சந்திரன் தனது அதிர்ஷ்ட மற்றும் அன்பான நட்சத்திரங்களைப் பார்த்து கொண்டிருக்கின்றனர். இந்த ஆன்மீக நட்சத்திர மண்டலத்தை முழு கல்பத்தில் யாரும் பார்க்க முடியாது. ஆன்மீக நட்சத்திரங்களாகிய நீங்கள் மற்றும் ஞான சூரியன், ஞான சந்திரன் இந்த மிகவும் விடுபட்ட மற்றும் அன்பான நட்சத்திர மண்டலத்தைப் பார்க்கின்றீர்கள். இந்த ஆன்மீக நட்சத்திர மண்டலத்தை அறிவியலின் சக்தியால் பார்க்க முடியாது. அமைதியின் சக்தியுடையவர்கள், இந்த நட்சத்திர மண்டலத்தைப் பார்க்க முடிகிறது, தெரிந்து கொள்ள முடிகிறது, எனவே இன்று நட்சத்திர மண்டலத்தை சுற்றி வந்து விதவிதமான நட்சத்திரங்களைப் பார்த்து பாப்தாதா புன்முறுவல் செய்து கொண்டிருக்கிறார். எவ்வாறு ஒவ்வொரு நட்சத்திரமும் ஞான சூரியன் மூலமாக சத்தியத்தின் ஒளியையும், சக்தியையும் பெற்று தந்தையைப் போல சத்தியத்தின் சக்தி நிறைந்த, சத்திய சொரூபம் ஆகின்றனர். மேலும் ஞான சந்திரன் மூலமாக குளிர்ச்சியின் சக்தியை தாரணை செய்து சந்திரனைப் போல குளிர்ச்சி சொரூபம் ஆகின்றனர். சத்தியம் மற்றும் குளிர்ச்சி என்ற இரண்டு சக்திகளும் எப்பொழுதும் எளிதாக வெற்றியை பிராப்தி செய்விக்கிறது. ஒரு பக்கம் சத்தியத்தின் சக்தி என்ற உயர்ந்த போதை, மற்றொரு பக்கம் எவ்வளவு உயர்ந்த போதையோ, அந்தளவே குளிர்ச்சியின் ஆதாரத்தினால் எப்படிப்பட்ட தவறான போதை மற்றும் கோபமான ஆத்மாக் களையும் குளிர்ச்சியாக்கக் கூடியவர்கள். எப்பேர்ப்பட்ட அகங்காரத்தின் போதையில் நான், நான் செய்து காட்டுவேன், ஆனால் குளிர்ச்சியின் சக்தியினால் நான், நான் என்பதற்கு பதிலாக பாபா -பாபா என்று சொல்ல முற்பட்டுவிடுவர். சத்தியத்தை கூட குளிர்ச்சியின் சக்தியினால் நிரூபணம் செய்வதன் மூலம் சித்தி (உழைப்பின்றி வெற்றி) ஆகி விடும்.இல்லை யென்றால், குளிர்ச்சியின் சக்தியைத் தவிர, சத்தியத்தை நிரூபிப்பதற்கான இலட்சியத்துடன் நிரூபிக் கின்றனர் ஆனால் அஞ்ஞானிகள் சித்தியை பிடிவாதம் என்று

புரிந்து கொள்கின்றனர். எனவே சத்தியம் மற்றும் குளிர்ச்சி என்ற இரண்டு சக்திகளும் சமமாகவும், சேர்ந்தும் இருக்க வேண்டும். ஏனெனில் இன்றைய உலகத்தின் ஒவ்வொரு மனிதனும் ஏதேனும் ஒரு அக்னியில் எரிந்து கொண்டிருக்கின்றனர். அவ்வாறு அக்னியில் எரிந்துக் கொண்டிருக்கும்ஆத்மாக்களை முதலில் குளிர்ச்சியின் சக்தியினால் நெருப்பை அணையுங்கள். அப்பொழுது குளிர்ச்சியின் ஆதாரத்தினால் சத்தியத்தைத் தெரிந்து கொள்வார்கள்.

குளிர்ச்சியின் சக்தி என்றாலே ஆன்மீக அன்பின் சக்தி. சந்திரன் (பிரம்மா) என்ற அம்மா, அன்பு என்ற குளிர்ச்சியின் சக்தியினால் எப்படிப்பட்ட சீர்கெட்ட குழந்தைகளையும் திருத்தி விடுகிறார். எனவே அன்பு அதாவது குளிர்ச்சியின் சக்தி எந்தவொரு அக்னியில் எரிந்து கொண்டிருக்கும் ஆத்மாவையும் குளிர்ச்சி ஆக்கி, சத்தியத்தை தாரனை செய்விப்பதற்கான தகுதியை உருவாகி விடுகிறது. முதலில் சந்திரனின் குளிர்ச்சியினால் தகுதியுடைவர் ஆகிய பிறகு, ஞான சூரியனின் சத்தியத்தின் சக்தியால் யோகி ஆகி விடுகின்றனர்! ஆதலால் ஞான சந்திரனின் குளிர்ச்சியின் சக்தியானது பாபாவின் முன்னால் செல்வதற்கு தகுதியை உருவாக்கி விடுகிறது. தகுதியில்லை யெனில் யோகியாகவும் ஆக முடியாது. அதனால் சத்தியத்தைத் தெரிந்து கொள்வதற்கு முன்பு குளிர்ச்சியானவர் ஆகுங்கள். சத்தியத்தை கடைப்பிடிப்பதற்கான சக்தி வேண்டும். எனவே குளிர்ச்சியின் சக்தியுள்ள ஆத்மா தானும் எண்ணங்களின் வேகத்தில், வார்த்தையில், தொடர்பில், ஒவ்வொரு சூழ்நிலையிலும் குளிர்ச்சியாக இருக்கும். எண்ணத்தின் வேகம் அதிகமாக இருக்கும் காரணத்தினால், வீணானதும் அதிகமாகிறது. மேலும் கட்டுப்படுத்துவதிலும் நேரம் வீணாகிறது. எப்பொழுது வேண்டுமோ, அப்பொழுது கட்டுப்படுத்த வேண்டும், அல்லது மாற்றம் செய்ய வேண்டும். இதில் நேரமும் சக்தியும் அதிகமாக செலவு செய்ய வேண்டி வருகிறது. சரியான வேகத்துடன் செல்பவர்கள் அதாவது குளிர்ச்சியின் சக்தி சொரூபத்தில் இருக்கக் கூடியவர்கள், வீணானவைகளிலிருந்து தப்பித்து விடுகின்றனர். விபத் திலிருந்து தப்பித்து விடுகின்றனர். இந்த ஏன், என்ன, அப்படியல்ல இப்படி என்ற இந்த வீணானவைகளின் அதி வேகத்திலிருந்து விடுபடு கின்றனர். எவ்வாறு மரத்தின் நிழல் எந்தவொரு வழிப் போக்கருக்கும் ஒய்வைத் தருகிறது, உதவி செய்கிறது. அவ்வாறே குளிர்ச்சியின் சக்தியுள்ளவர்கள்

மற்ற ஆத்மாக் களுக்குக் கூட தனது குளிர்ச்சியின் நிழலால் எப்பொழுதும் உதவி என்ற ஓய்வை கொடுக்கின்றனர். இந்த ஆத்மாக்களிடன் சென்றால், இரண்டு நொடியில் கூட குளிர்ச்சியின் நிழலில், குளிர்ச்சியின் சுகம், ஆனந்ததைப் பெறலாம் என்று ஒவ்வொருவருக்கும் கவர்ச்சி ஏற்படும். எவ்வாறு நாலாபுறமும் மிக அதிக வெயில் இருக்கிறது என்றால், நிழலான இடத்தைத் தேடுவார்கள் அல்லவா! அவ்வாறு ஆத்மாக்களின் பார்வை மற்றும் ஈர்ப்பு அப்பேற்பட்ட ஆத்மாக்களின் பக்கம் செல்லும். இப்பொழுது உலகத்தில் இன்னும் அதிகமாக விகாரங்களின் அக்னி வேகமாக எரியப் போகிறது -எவ்வாறு தீ பட்டால் மனிதர்கள் கதறுகின்றனர் அல்லவா! குளிர்ச்சியின் (தண்ணீர்) உதவியைத் தேடுகின்றனர். அவ்வாறு இந்த மனித ஆத்மாக்கள் குளிர்ச்சியான ஆத்மாக்கள் உங்களிடம் துடிதுடித்துக் கொண்டு வருவார்கள். சிறிதளவேனும் குளிர்ச்சியான நீர் துளிகளைத் தெளியுங்கள் என்று கதறுவார்கள். ஒரு பக்கம் விநாசத்தின் நெருப்பு, மற்றொன்று விகாரங்களின் நெருப்பு; மூன்றாவது பக்கம் தேகம் மற்றும் தேக சம்மந்தம், பொருட்களின் மீதுள்ள பற்றுதல் என்ற நெருப்பு; நான்காவது பட்சாதாபம் என்ற நெருப்பு. நாலாபுறமும் நெருப்பே நெருப்பு தென்படும். ஆகவே அப்பேற்பட்ட சமயத்தில் குளிர்ச்சியின் சக்தியுள்ள உங்களிடம் ஓடோடி வருவார்கள் -ஒரு விநாடியாவது எங்களைக் குளிர்ச்சி யாக்குங்கள்! அப்படிபட்ட நேரத்தில் நாலாபுறமுள்ள நெருப்பின் அனல் தன்னை பாதிக்காத அளவிற்கு குளிர்ச்சியின் சக்தியை தனக்குள் சேமித்து வைத்திருங்கள். நாலாபுறமுள்ள நெருப்பை அணைக்கக் கூடியவர்களாகவும், குளிர்ச்சியின் வரதானத்தை அளிக்கக்கூடிய குளிர்ச்சியின் தேவி ஆகுங்கள். ஒருவேளை சிறிதளவேனும் நான்கு விதமான நெருப்பில் ஏதாவதொரு நெருப்பு உங்களிடம் இருந்து விட்டதென்றால், நாலாபுறமுள்ள நெருப்பு துளியளவே உள்ள நெருப்பை பிடித்துக் கொள்ளும். எப்படி நெருப்பு நெருப்பை பற்றிக் கொள்கிறது அல்லவா! எனவே இதை சோதனை செய்யுங்கள்.

விநாச ஜுவாலையின் அக்னியிலிருந்து காத்துக் கொள்வதற்கான சாதனம் -தைரியத்தின் சக்தி. தைரியமானது, விநாச ஜுவாலையின் தாக்கத்தினால் மனநிலை மேலும் கீழும் ஆகாமல் பார்த்து கொள்ளும். குழப்பத்தில் கொண்டு வராது. தைரியத்தின் ஆதாரத்தினால் விநாச ஜுவாலையின் பயத்திலுள்ள ஆத்மாக்களுக்கு குளிர்ச்சியின் சக்தியைக்

கொடுக்கும். ஆத்மா பயம் என்ற அக்னியிலிருந்து தப்பித்து குளிர்ச்சியின் காரணத்தினால் குஷியில் நடனமாடும். விநாசத்தைப் பார்த்தாலும் ஸ்தாபனையின் காட்சியைப் பார்ப்பார்கள். அவர்களது கண்களில் ஒரு கண்ணில் முக்தி -ஸ்வீட் ஹோம், மற்றொரு கண்ணில் ஜீவன் முக்தி அதாவது சொர்க்கம் அடங்கி இருக்கும். அவர்களுக்கு தனது வீடு மற்றும் தனது இராஜ்யமே தென்படும். உலகினர் ஐயோ! போய்விட்டனரே, ஐயோ! இறந்து விட்டனரே என்று கதறுவார்கள். மேலும் நீங்கள் தனது இனிமையான வீட்டிற்கு, தனது இனிமையான இராஜ்யத்திற்கு சென்று விட்டோம் என்று சொல்வீர்கள். எதுவும் புதியதல்ல என்ற சலங்கையை அணிந்தீர்கள் என்றால், நமது வீடு, நமது இராஜ்யம் என்ற குஷியில் ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும் சேர்ந்து செல்வீர்கள். அவர்கள் கதறுவார்கள், நீங்கள் உடன் செல்வீர்கள். இப்பொழுது கேட்கும் பொழுதே அனைவருக்கும் குஷி ஏற்படுகிறது என்றால், அந்த சமயத்தில் எவ்வளவு குஷியில் இருப்பீர்கள்! ஆகையால் நான்கு வித நெருப்பிலிருந்து குளிர்ச்சியாகி விட்டீர்கள் அல்லவா. விநாச ஜுவாலையிலிருந்து காத்துக் கொள்வதற்கான சாதனம் பயமின்மை என்பதைக் கேட்டீர்கள் தானே! அவ்வாறே விகாரங்கள் என்ற நெருப்பின் துளியளவிலிருந்து(அம்சம்) தன்னை காத்துக் கொள்வதற்கான சாதனம் -தனது ஆதி, அனாதி வம்சத்தை நினைவு செய்யுங்கள். அனாதி தந்தையின் வம்சம் -சம்பூரண சதோபிரதான ஆத்மா நான்! ஆதி வம்சம் -தேவ ஆத்மா நான்! தேவ ஆத்மா 16 கலைகள் நிறைந்த, சம்பூரண நிர்விகாரிகள். எனவே அநாதி, ஆதி வம்சத்தை நினைவு செய்தீர்கள் என்றால், விகாரங்களின் அம்சமும் அழிந்து விடும்.

அவ்வாறே மூன்றாவதாக தேகம், தேகத்தின் சம்மந்தம் மற்றும் பொருட்களின் மீதுள்ள பற்று என்ற நெருப்பு. இந்த நெருப்பிலிருந்து தப்பிப்பதற்கான சாதனம் -பாபாவை தனது உலகமாக்கிக் கொள்ளுங்கள். பாபா தான் உலகம் எனும் பொழுது மற்ற அனைத்தும் சாரமற்றதாகி விடும் ஆனால் செய்வது என்ன? அதை மற்றொரு நாள் சொல்வேன். பாபா தான் உலகம் என்ற நினைவு இருந்தால், தேகத்தின், சம்மந்தத்தின், பொருட்களின் நினைவு இருக்காது. அனைத்தும் முடிந்தது.

நான்காவது விஷயம் -பட்சாதாபத்தின் நெருப்பு. இதற்கான எளிய சாதனம் சர்வபிராப்தி சொரூபம் ஆவது. அப்பிராப்தி (கிடைக்க வில்லை

என்ற உணர்வு) பட்சாதாபத்தை ஏற்படுத்துகிறது. பிராப்தி பட்சாதாபத்தை அழிக்கிறது. இப்பொழுது ஒவ்வொரு பிராப்தியையும் முன்னால் வைத்து சோதனை செய்யுங்கள் -ஏதாவதொரு பிராப்தியை அனுபவம் செய்வதில் குறைவு இருந்து விட வில்லை தானே! பிராப்திகளின் பட்டியல் (லிஸ்ட்) இருக்கிறது தானே! இல்லை என்பது முடிந்தது அதாவது பட்சாதாபதம் முடிந்தது. இப்பொழுது இந்த நான்கு வி ̂யங்களை சோதனை செய்யுங்கள், அப்பொழுது தான் குளிர்ச்சியின் சொரூபம் ஆகி விடுவீர்கள். மற்றவர்களின் வெப்பத்தைத் தணிக்கக் கூடிய சீதள யோகி, சீதளா தேவி ஆகி விடுவீர்கள். ஆகவே குளிர்ச்சியின் சக்தி என்னவென்று புரிந்ததா! சத்தியத்தின் சக்தியைப் பற்றியும் சொல்லி ஆகி விட்டது. இன்னும் கூட சொல்வோம்! அதனால் கேட்டீர்களா! வாயுமண்டலத்தில் என்ன பார்த்தோம் என்று? விரிவாக பிறகு சொல்வோம். நல்லது.

அவ்வாறு எப்பொழுதும் சந்திரனுக்கு சமமாக குளிர்ச்சியின் சக்தி சொரூப ஆத்மாக்களுக்கு, சத்தியத்தின் சக்தியினால் சத்யுகத்தைக் கொண்டு வரக்கூடிய குழந்தைகளுக்கு, சதா குளிர்ச்சி என்ற நிழலினால் அனைவரின் உள்ளத்திற்கு ஓய்வளிக்கும் குழந்தைகளுக்கு, சதா நாலாபுறமுள்ள அக்னியிலிருந்து பாதுகாப்பாக இருக்கக் கூடிய சீதள யோகி, சீதளா தேவி குழந்தைகளுக்கு, ஞான சூரியன் மற்றும் ஞான சந்திரனின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம் உரித்தாகுக.

**வெளிநாட்டு டீச்சர்ஸ் சகோதர, சகோதரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** இது எந்த குரூப்? (ரைட் ஹேண்ட் சேவாதாரிகளுடையது) இன்று பாப்தாதா தனது நண்பர்களை சந்திக்க வந்திருக்கிறார். நண்பர்கள் என்ற உறவு குதூகலம் அளிக்கக் கூடியது. எவ்வாறு பாபா எப்பொழுதும் உங்களுடைய அன்பில் மூழ்கியிருக்கிறாரோ, அவ்வாறே குழந்தைகளும் பாபாவின் அன்பில் மூழ்கியிருக்கிறார்கள். எனவே இது அன்பில் மூழ்கியிருக்கக் கூடிய குரூப்பாகும். சாப்பிட்டாலும், அருந்தினாலும், நடந்தாலும் எங்கு மூழ்கியிருக்கின்றீர்கள்? அன்பில் தான் மூழ்கியிருக்கின்றீர்கள் அல்லவா! இந்த அன்பில் மூழ்கியிருக்கக் கூடிய ஸ்திதி சதா ஒவ்வொரு விசயத்திலும் எளிதாகவே தந்தையைப் போல ஆக்கி விடுகிறது. ஏனெனில் பாபாவின் அன்பில் மூழ்கியிருக்கின்ற காரணத் தினால் தொடர்பின் நிறம் படியும் அல்லவா! உழைப்பு மற்றும் கஷ்டத்திலிருந்து

விடுபடுவதற்கான எளிய சாதனம் அன்பில் மூழ்கியிருப்பது. இந்த அன்பில் மூழ்கியிருக்கக் கூடிய மனநிலை அதிர்ஷ்டமானது, இதற்குள் மாயை வர முடியாது. ஆகவே பாப்தாதாவின் மிக அன்பான, நெருக்கமான, சமமான குரூப்பாகும். உங்களுடைய எண்ணத்திலும், பாபாவின் எண்ணத்திலும் வித்தியாசம் இல்லை. அம்மாதிரி நெருக்கமானவர்கள் இல்லையா? அப்பொழுது தான் தந்தையைப் போல உலகத்திற்கு நன்மை செய்பவர் ஆக முடியும். எது தந்தையினுடைய எண்ணமோ, அது குழந்தைகளுடையது. எது தந்தையினுடைய வார்த்தையோ, அது குழந்தைகளுடையது. அப்படி யென்றால், உங்களுடைய ஒவ்வொரு செயலும் என்னவாகி விடும்? (கண்ணாடி) எனவே ஒவ்வொரு செயலும் அம்மாதிரி கண்ணாடியாக இருக்க வேண்டும், அதில் பாபா தென்பட வேண்டும். அந்த மாதிரி குரூப் தானே! எவ்வாறு நிறைய கண்ணாடிகள் இருக்கின்றன, அதாவது அந்த கண்ணாடியில் பெரிய உருவம் சிறியதாகவும், சிறியது பெரியதாகவும் தென்படுமளவிற்கு உலகில் கண்ணாடி களை உருவாக்குகிறார்கள். ஆகவே உங்களுடைய ஒவ்வொரு செயல் என்ற கண்ணாடியில் என்ன தென்படும்? இரட்டையர் தென்பட வேண்டும் -நீங்களும் தந்தையும். உங்களுக்குள் பாபா தென்பட வேண்டும், நீங்கள் பாபாவுடன் தென்பட வேண்டும். எவ்வாறு பிரம்மாபாபாவிற்குள் இரட்டையர் (பாப்தாதா) தென்பட்டிருந்தனர் அல்லவா! அவ்வாறே உங்கள் ஒவ்வொருவரிடத்திலும் சதா பாபா தென்பட்டார் என்றால், இரட்டையர் தென்பட்டதாகி விட்டது அல்லவா! அப்படிபட்ட கண்ணாடிகள் தானே நீங்கள்? சேவாதாரிகள் விசேஷமாக எந்த சேவைக்கு நிமித்தமாகி இருக்கிறீர்கள்! பாபாவை வெளிபடுத்துவது தான் விசேஷ சேவையாகும். அதனால் தனது ஒவ்வொரு எண்ணம், சொல், செயல் மூலமாக பாபாவைக் காட்ட வேண்டும். இந்த காரியத்தில் எப்பொழுதும் இருக்கின்றீர்கள் அல்லவா! எப்போதேனும் ஏதாவதொரு ஆத்மா, இவர்கள் மிகவும் நன்றாக பேசுகிறார்கள், இவர்கள் மிகவும் நன்றாக சேவை செய்கிறார்கள், இவர்கள் மிகவும் நன்றாக திருஷ்டி கொடுக்கிறார்கள் என்று கூறினால், இதுவும் பாபாவை பார்க்கவில்லை, ஆத்மாவை தான் பார்த்தார்கள். இதுவும் தவறாகி விடுகிறது. உங்களைப் பார்த்து வாயிலிருந்து பாபா என்பது வெளிவர வேண்டும். அப்பொழுது தான் சக்திசாலியான கண்ணாடி என்று சொல்வோம். தனியாக ஆத்மா மட்டும் தென்படக் கூடாது, பாபாவுன் தென்பட வேண்டும். இதற்கு இயல்பான சேவாதாரி

என்று சொல்லப்படுகிறது. புரிந்ததா! எவ்வளவு உங்களுடைய ஒவ்வொரு எண்ணத்திலும், சொல்லிலும் பாபா, பாபா என்பது இருக்குமோ, அவ்வளவு மற்றவர்களுக்கும் உங்களுடன் சேர்ந்து பாபா தென்படுவார். எவ்வாறு தற்காலத்து அறிவியலின் சாதனங்களினால் முன்பாக எந்தப் பொருளை காட்டுகின்றனரோ, அது மறைந்து விடுகின்றது. மேலும் அடுத்தது தென்படுகிறது. அவ்வாறு உங்களது அமைதியின் சக்தியானது உங்களை பார்த்தாலும் நீங்கள் மறைந்து விட வேண்டும், பாபா வெளிப்பட வேண்டும். அவ்வாறு சக்திசாலி சேவையாக இருக்க வேண்டும். தந்தையுடன் சம்மந்தத்தை இணைப்பதினால் ஆத்மாக்கள் எப்பொழுதும் சக்திசாலியாகி விடுகின்றன. ஒருவேளை ஆத்மாவுடன் சம்மந்தம் இணைக்கப் படுகிறது என்றால், எப்பொழுதும் சக்திசாலியாக ஆக முடியாது. சேவாதாரிகளுடைய விசேஷ சேவை என்னவென்று புரிந்ததா? தன் மூலமாக தந்தையைக் காட்ட வேண்டும். உங்களைப் பார்த்ததும் பாபா பாபா என்ற பாடலை பாட ஆரம்பித்து விட வேண்டும். அப்படிப்பட்ட சேவை செய்கின்றீர்கள் அல்லவா! நல்லது.

அனைவரும் அமிர்தவேளையில் தில்குஷ் மிட்டாய் (உள்ளத்தை குஷிப்படுத்தும் இனிப்பு) சாப்பிடுகிறீர்களா? சேவாதாரி ஆத்மாக்கள் தினமும் தில்குஷ் மிட்டாய் சாப்பிட்டீர்கள் என்றால், பிறருக்கும் வழங்குவீர்கள். பிறகு உங்களிடம் மனமுடைந்து போவதற்கான வி'யம் வராது, மாணவர்களும் இது போன்ற விˆயங்களை எடுத்துக் கொண்டு வரமாட்டார்கள். இல்லையென்றால் இதற்கும் கூட நேரத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிறது அல்லவா! பிறகு இந்த நேரம் சேமிப்பாகி விடும். மேலும் இந்த நேரத்தில் பலருக்கு தில் குஷ் மிட்டாய் வழங்கிக் கொண்டே யிருப்பீர்கள். நல்லது.

உங்களது அனைவருடைய உள்ளமும் சதா குஷியாக இருக்கிறதா? ஒருபொழுதும் எந்த சேவாதாரியும் அழுவதில்லை தானே? கண்களினால் அழுவது மட்டும் அழுகையல்ல, மனதில் அழுவது கூட அழுகை தான், எனவே அழக்கூடியவர்களோ இல்லை தானே! நல்லது. புகார் செய்பவர் களா? பாபாவின் முன்பு புகார் செய்கின்றீர்களா? என் மூலமாக ஏன் அவ்வாறு நிகழ்கிறது! எனக்கும் மட்டும் ஏன் அந்த மாதிரியான நடிப்பு (பார்ட்)! என்னுடைய சம்ஸ்காரம் மட்டும் ஏன் இப்படி இருக்கிறது! எனக்கு மட்டும் ஏன் இம்மாதிரியான மாணவர்கள் கிடைக்கின்றனர் அல்லது

எனக்கு மட்டும் ஏன் இம்மாதிரியான நாடு கிடைத்திருக்கிறது! இது போன்ற புகார் செய்யக்கூடியவர்களோ இல்லை தானே? புகார் சொல்வது என்றால் பக்தியின் அம்சம். எப்படிப்பட்டவர்களாகவும் இருக்கலாம், ஆனால் மாற்றம் செய்வது சேவாதரிகளுடைய விசேஷ காரியமாகும். நாடாக இருக்கலாம், மாணவர்களாக இருக்கலாம், தனது சம்ஸ்காரமாக இருக்கலாம், உடன் இருப்பவர் களாக இருக்கலாம், புகார் சொல்வதற்கு பதிலாக மாற்றம் செய்யக் கூடிய காரியத்தில் ஈடுபடுங்கள். சேவாதாரிகளாகிய நீங்கள் ஒருபொழுதும் பிறரது பலஹீனங்களை பார்க்காதீர்கள். ஒருவேளை பிறரது பலஹீனங்களை பார்த்தீர்கள் என்றால் தானும் பலஹீனம் ஆகி விடுவீர்கள். ஆகையால் எப்பொழுதும் ஒவ்வொருவருடைய விசேஷத்தையே பாருங்கள். விசேஷத் தன்மையை தாரணை செய்யுங்கள். விசேஷத் தன்மையையே வர்ணனை செய்யுங்கள். இதுவே சேவாதாரிகளின் விசேஷ பறக்கும் கலையின் சாதனமாகும். புரிந்ததா! சேவாதாரிகள் வேறு என்ன செய்கின்றனர்? மிகவும் நல்ல திட்டங்கள் உருவாக்குகின்றனர், ஊக்கம் மற்றும் உற்சாகமும் மிக நன்றாக இருக்கிறது. பாபா மற்றும் சேவையின் மீதும் அன்பு நன்றாக இருக்கிறது. இப்பொழுது இனி என்ன செய்ய வேண்டும்?

இப்பொழுது உலகில் விசேஷஷமாக இரண்டு அதிகாரங்கள் இருக்கின்றன. (1). இராஜ்ய அதிகாரம், (அரசியல்) (2) தர்ம அதிகாரம், (மதம்). தர்ம தலைவர்கள் மற்றும் இராஜ்ய தலைவர்கள். மேலும் தொழில் செய்பவர்களும் கூட தனித் தனியாக இருக்கின்றனர், ஆனால் அதிகாரம் இந்த இருவரிடத்தில் தான் இருக்கிறது. எனவே இப்பொழுது இந்த இரண்டு அதிகாரங்களுக்கும் அவ்வாறு தெளிவாக அனுபவம் ஆக வேண்டும், அதாவது தர்ம அதிகாரமும் இப்பொழுதும் அதிகாரமில்லாமல் ஆகி விட்டது. மேலும் இராஜ்ய அதிகாரம் உள்ளவர்களும் அனுபவம் செய்ய வேண்டும் அதாவது நம்மிடத்தில் பெயருக்கு தான் இராஜ்ய அதிகாரம் இருக்கிறதே தவிர உண்மையில் அதிகாரம் இல்லை. அதற்கான சாதனம் என்ன என்பதை எவ்வாறு அனுபவம் செய்விப்பீர்கள்? யாரெல்லாம் இராஜ்ய தலைவர்கள் மற்றும் தர்ம தலைவர்கள் இருக்கின்றனரோ, அவர்களுக்கு தூய்மை மற்றும் ஒற்றுமையின் அனுபவத்தை செய்வியுங்கள் இந்த குறைவின் காரணத்தினால் இரண்டு அதிகாரங் களும் பலஹீனமாக உள்ளன. எனவே தூய்மை என்றால் என்ன, ஒற்றுமை என்றால் என்ன என்பதைப் பற்றி அவர்களுக்கு

தெளிவான புரிதல் கிடைப்பதின் மூலம் அவர்கள் நாம் பலஹீனமாக இருக்கிறோம் என்பதையும், இவர்கள் (பிரம்மா குமாரிகள்) சக்திசாலியாக இருக்கின்றனர் என்பதையும் தாமே புரிந்து கொள்வார்கள். இதற்காக விசேஷமாக சிந்தனை செய்யுங்கள். ஆன்மீக அதிகாரமுடையவர்களை தங்களுக்கு ஆன்மீக அதிகாரம் உண்மையில் இல்லை என்பதைப் புரிந்து கொள்வதற்கான விசேஷ வழிமுறை -தூய்மையை நிரூபிக்க வேண்டும். மேலும் இராஜ்ய அதிகார முடையவர் களுக்கு முன்னால் ஒற்றுமையை நிரூபிக்க வேண்டும். இந்தத் தலைப்பைப் பற்றி சிந்தனை செய்யுங்கள். திட்டத்தை உருவாக்கி, அவர்களுக்கு சென்றடையும் படி செய்யுங்கள். இந்த இரண்டு சக்திகளையுமே நிரூபித்து விட்டீர்கள் என்றால், இறை சக்தியின் (அதிகாரம்) கொடி மிகவும் எளிதாக பறக்கும். இப்பொழுதும் இந்த இரண்டின் பக்கமும் விசேஷ கவனம் செலுத்துங்கள். உள்ளுக்குள் புரிந்திருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது வெளிப்படையாக அபிமானம் உள்ளது. எப்படியெல்லாம் தூய்மை மற்றும் ஒற்றுமையின் சக்தியினால் இவர்களை நெருக்கமான தொடர்பில் கொண்டு வருவீர்களோ, அப்படியெல்லாம் அவர்கள் தானாகவே தனது வர்ணனையை செய்ய முற்பட்டு விடுவார்கள். புரிந்ததா! எப்பொழுது இரண்டு அதிகாரங்களின் பலஹீனத்தை நிரூபிக்கின்றீர்களோ, அப்பொழுது பிரத்யக்ˆம் ஆகி விடும். நல்லது!

மற்றபடியோ சேவாதாரிகளின் குரூப் எப்பொழுதும் திருப்தியாக இருக்கவே இருக்கிறார்கள். தன் மீது, உடன் இருப்பவர்கள் மீது, சேவையின் மீது, இவ்வாறு அனைத்தின் மீதும் திருப்தியான யோகி. இந்த திருப்தியின் சான்றிதழ் பெற்று இருக்கிறீர்கள் தானே! பாப்தாதா, நிமித்தமான தாதிகள், தீதிகள், அனைவரும் உங்களுக்கு இவர்கள் திருப்தியான யோகி என்ற சான்றிதழ் கொடுக்க வேண்டும். நடந்தாலும், சுற்றினாலும் சான்றிதழ் கிடைக்கிறது. நல்லது. ஒருபொழுதும் மனம் சரியில்லாமல் போவதில்லை (மூட் ஆஃப்) தானே. எப்பொழுதேனும் சேவையால் களைப்படைந்து மூட் ஆஃப் ஆவதில்லை தானே! என்ன செய்வது, இவ்வளவு செய்ய வேண்டும் என்ற அவசியம் என்ன இருக்கிறது? -அப்படியில்லை தானே!

ஆகவே இப்பொழுது இந்த அனைத்து விˆயங்களிலும் தன்னை சோதனை செய்ய வேண்டும். ஒருவேளை ஏதேனும் இருந்தது என்றால்,

மாற்றம் செய்து கொள்ள வேண்டும், ஏனெனில் சேவாதாரி என்றாலே மேடை மீது ஒவ்வொரு காரியமும் செய்யக் கூடியவர்கள். மேடை மீது எப்பொழுதும் சிரேஷ்டமாகவும், யுக்தி நிறைந்தும் ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்க வேண்டியிருக்கிறது. நான் இந்த நாட்டில் சேவை நிலையத்தில் அமர்ந்திருக் கிறேன் என்று ஒரு பொழுதும் நினைத்துக் கொள்ள கூடாது, ஆனால் உலகம் என்ற மேடை மீது அமர்ந்திருக்கிறேன் என்ற நினைவு இருப்பதினால் ஒவ்வொரு செயலும் தானாகவே சிரேஷ்டமாக இருக்கும். உங்களைப் பின்பற்றக் கூடியவர்களும் நிறைய பேர் இருக்கிறார்கள், அதனால் எப்பொழுதும் நீங்கள் தந்தையைப் பின்பற்றினீர்கள் என்றால், உங்களைப் பின்பற்றுவர்களும் தந்தையைப் பின்பற்றுவார்கள். எனவே மறைமுகமாக தந்தையைப் பின்பற்றுதல் ஆகி விடும். ஏனெனில் உங்களது ஒவ்வொரு காரியமும் தந்தையை பின்பற்றி இருக்கிறது. அதனால் இந்த நினைவு எப்பொழுதும் இருக்க வேண்டும். நல்லது -நேசத்தின் (காதல்) காரணத்தால் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு இருப்பீர்கள்.

**வரதானம்: ஒரு பாபாவை துணைவனாக ஆக்கி அந்தத் துணையிலேயே இருக்கக் கூடிய முழுமையாக தூய்மையான ஆத்மா ஆகுக!**

யாருடைய எண்ணம் மற்றும் கனவில் கூட பிரம்மசர்யத்தின் தாரணை இருக்கிறதோ, யார் ஒவ்வொரு அடியிலும் பிரம்மாபாபாவின் ஆச்சாரங்கள்படி நடக்கின்றனரோ, அவர் தான் சம்பூரண பவித்திர ஆத்மா. தூய்மை என்பதன் பொருள் -எப்பொழுதும் பாபாவை துணைவனாக்குவது மற்றும் பாபாவின் துணையிலேயே இருப்பது. குழுவின் துணை, குடும்பத்தின் அன்பின் மரியாதை என்பது தனிபட்ட விஷயம், ஆனால் பாபாவின் காரணத்தினால் தான் இந்த குழுவின் அன்பின் துணை உள்ளது, பாபா இல்லையென்றால் குடும்பம் எங்கிருந்து வந்தது? பாபா விதையாவார். விதையை ஒருபொழுதும் மறக்கக் கூடாது.

**சுலோகன்: யாருடைய பிரவாத்திலும் வரக் கூடியவர்களாக அல்ல, ஆனால் ஞானத்தின் பிரபாவத்தை (தாக்கம்) ஏற்படுத்தக் கூடியவர்களாக ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.02.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகம் -சர்வசிரேஷ்ட பிராப்திகளுக்கான யுகம்!

இன்று பாப்தாதா நாலாபுறங்களினுடைய பிராப்தி சொரூப விசேஷ ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். ஒருபுறம் அல்பகால பிராப்தி அடையும் அனேக ஆத்மாக்கள் உள்ளனர், அதில் பிராப்தியின் கூடவே அப்பிராப்தியும் உள்ளது. இன்று பிராப்தி கிடைக்கின்றது, நாளை அப்பிராப்தி ஆகி விடுகிறது. ஒருபுறம் அனேக பிராப்திகளின் கூடவே அப்பிராப்தி சொரூபமாகவும் உள்ளனர். மற்றொருபுறம் சதாகாலத்தின் பிராப்தி சொரூப விசேஷ ஆத்மாக்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் உள்ளனர். இரண்டிற்கும் உள்ள மகான் வித்தியாசத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். பாப்தாதா பிராப்தி சொரூப குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருந்தார்கள். பிராப்தி சொரூப குழந்தைகளாகிய நீங்கள் எவ்வளவு பத்மாபதம் பாக்கிய சாலிகள்! விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுடைய ஒவ்வொரு அடியிலும் பலகோடி மடங்கு பிராப்தி கிடைக்குமளவு அவ்வளவு பிராப்தியை அடைந்து விட்டீர்கள். லௌகீகத்தில் பிராப்தி சொரூப வாழ்வில் விசேஷமாக நான்கு விசயங்களின் பிராப்தி அவசியமாகும். 1) சுகமயமான சம்பந்தம். 2) சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் சதா சீதளமாக (குளிர்ந்ததன்மை உடையதாக) மற்றும் சிநேகம் நிறைந்ததாக இருப்பது. 3) உண்மையான வருமானத்தின் சிரேஷ்ட செல்வம். 4) சிரேஷ்ட கர்மம், சிரேஷ்ட தொடர்பு. ஒருவேளை, இந்த நான்கு விசயங்களும் பிராப்தியாக உள்ளன எனில், லௌகீக வாழ்வில் கூட வெற்றி மற்றும் குஷி இருக்கும் ஆனால், லௌகீக வாழ்வின் பிராப்திகள் அல்பகால பிராப்திகள் ஆகும். இன்று சுகமயமான சம்பந்தம் உள்ளது, நாளை அதே சம்பந்தம் துக்கமய மானதாக ஆகி விடுகின்றது. இன்று வெற்றி கிடைக்கின்றது, மறுநாள் கிடைப்பதில்லை. இதற்கு மாறாக பிராப்தி சொரூப சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களுக்கு இந்த அலௌகீக சிரேஷ்ட வாழ்வில் நான்கு விசயங்களும் சதா பிராப்தமாகக்

கிடைத்துள்ளன. ஏனெனில், சுகத்தை வழங்கும் வள்ளல், சர்வபிராப்திகளின் வள்ளலுடன் நேரடியான அழிவற்ற சம்பந்தம் உள்ளது. இந்த அழிவற்ற சம்பந்தமானது ஒருபொழுதும் துக்கமோ அல்லது ஏமாற்றமோ கொடுக்கக் கூடியது அல்ல. அழியக்கூடிய சம்பந்தங்களில் நிகழ்கால சமயத்தில் துக்கமும் உள்ளது மற்றும் ஏமாற்றமும் உள்ளது. அழிவற்ற சம்பந்தத்தில் உண்மையான அன்பு உள்ளது, சுகம் உள்ளது. எனவே, சதா அன்பு மற்றும் சுகத்தினுடைய சர்வசம்பந்தங்கள் தந்தையிடமிருந்து பிராப்தியாகக் கிடைத்துள்ளன. ஒரு சம்பந்தத்தின் குறை கூட கிடையாது. எந்த சம்பந்தத்தை விரும்புகிறீர்களோ, அந்த சம்பந்தத்தின் மூலம் பிராப்தியின் அனுபவம் செய்ய முடியும். எந்த ஆத்மாவிற்கு எந்த சம்பந்தம் அன்பானதாக உள்ளதோ, அந்த சம்பந்தத்தில் பகவான் அன்பைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கின்றார். பகவானை சர்வ சம்பந்தத்திலும் கொண்டு வந்து விட்டீர்கள். அத்தகைய சிரேஷ்ட சம்பந்தம் முழு கல்பத்திலும் பிராப்தியாகக் கிடைக்க முடியாது. எனவே, சம்பந்தமும் பிராப்தியாகக் கிடைத்துள்ளது, கூடவே இந்த அலௌகீக தெய்வீக பிறப்பில் சதா சிரேஷ்ட சுபாவம், ஈஸ்வரிய சம்ஸ்காரம் இருக்கின்ற காரணத்தினால் சுபாவம், சம்ஸ்காரம் ஒருபோதும் துக்கம் தருவதில்லை. பாப்தாதாவின் சம்ஸ்காரம் எதுவோ, அதுவே குழந்தைகளின் சம்ஸ்காரம் ஆகும். பாப்தாதாவின் சுபாவம் எதுவோ, அதுவே குழந்தைகளின் சுபாவம் ஆகும். சுய பாவம் (உணர்வு) என்றால் சதா ஒவ்வொருவரையும் சுயம் அதாவது ஆத்ம உணர்வோடு பார்ப்பது. சுயம் என்று சிரேஷ்டமானதையும் கூறப்படுகின்றது. சுயத்தின் பாவம் (உணர்வு) அல்லது சிரேஷ்டமான உணர்வே சுபாவம் ஆகும். சதா மகாதானி, கருணை உள்ளம், விஷ்வகல்யாணகாரி ஆகிய இந்த தந்தையின் சம்ஸ்காரமே உங்களின் சம்ஸ்காரம் ஆகும். ஆகையினால், சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் சதா குஷியின் பிராப்தியை செய்விக்கின்றது. இவ்வாறே உண்மையான வருமானத்தின் சுகமயமான செல்வம் கிடைத்துள்ளது. அழிவற்ற பொக்கிஷங்கள் எத்தனை கிடைத்துள்ளன? நீங்கள் ஒவ்வொரு பொக்கிஷத்தினுடைய சுரங்கங்களின் எஜமானர்கள் ஆவீர்கள். வெறும் பொக்கிஷம் மட்டும் அல்ல, குறையாத, எண்ணிலடங்காத பொக்கிஷங்கள் கிடைத்துள்ளன. அதை செலவு செய்யுங்கள் மற்றும் அதிகரித்துக் கொண்டே இருங்கள். எவ்வளவு செலவு செய்கின்றீர்களோ, அவ்வளவு அதிகரிக் கின்றது. இதன் அனுபவி ஆவீர்கள் அல்லவா! ஸ்தூல செல்வத்தை எதற்காக

சம்பாதிக்கின்றனர்? உணவை (கஷ்டமில்லாது சம்பாதித்தது) சுகமாக உண்பதற்காக, குடும்பம் சுகமாக இருப்பதற்காக, உலகத்தில் நல்ல பெயர் கிடைப்பதற்காக சம்பாதிக்கின்றனர். நீங்கள் தன்னைப் பாருங்கள். எவ்வளவு சுகம் மற்றும் குஷியின் உணவு கிடைத்துக் கொண்டு இருக்கின்றது. உணவு உண்ணுங்கள் (எளிமையான உணவு), பகவான் மகிமை பாடுங்கள் என்று மகிமை கூட உள்ளது. இவ்வாறு மகிமை பாடப்பட்ட உணவை சாப்பிட்டுக் கொண்டே இருக்கின்றீர்கள். பிராமண குழந்தை உண்ண உணவு கூட இல்லாது வஞ்சிக்கப்பட்டவர் ஆகமுடியாது என்பது பிராமண குழந்தைகளுக்கு பாப்தாதா அளித்துள்ள உத்திரவாதம் ஆகும். விருப்பம் கொண்ட உணவு கிடைக்காது, ஆனால், உணவு அவசியம் கிடைக்கும். சாதம், ரசம் உள்ளது. குடும்பமும் சரியாக (நன்றாக) உள்ளது மற்றும் பெயரும் எவ்வளவு புகழ்வாய்ந்ததாக உள்ளது! அவ்வளவு உங்களுடைய பெயர் புகழ் அடைந்துள்ளது. இன்று இந்த கடைசி பிறவி வரை நீங்கள் வந்தடைந்து விட்டீர்கள், ஆனால், உங்களுடைய ஜடசித்திரங் களின் (சிலைகள்) பெயரைக் கொண்டே அனேக ஆத்மாக்கள் தங்களுடைய காரியத்தில் வெற்றி அடைந்து கொண்டிருக்கின்றார்கள். தேவி, தேவதைகளாகிய உங்களுடைய பெயரையே கூறுகின்றார்கள், தன்னுடைய வேலையை வெற்றி அடையச்செய்கின்றனர். அந்தளவு பெயர், புகழுடையதாக உள்ளது. ஒரு பிறவியில் மட்டும் பெயர், புகழடையவில்லை. முழு கல்பமும் உங்களுடைய பெயர் புகழுடையதாக உள்ளது. எனவே, சுகமாயமான, உண்மையான செல்வந்தரும் ஆவீர்கள். தந்தையினுடைய தொடர்பில் வந்ததினால் உங்களுடைய தொடர்பும் சிரேஷ்டமான தொடர்பாக ஆகி விட்டது. உங்களுடைய தொடர்பு அத்தகைய சிரேஷ்ட தொடர்பாகும், உங்களுடைய ஜடசித்திரங்களுடைய ஒரு வினாடி தொடர்புக்காக தாகத்துடன் காத்திருக்கின்றனர். தரிசனத்தின் தொடர்புக்காக மட்டும் எவ்வளவு தாகத்துடன் உள்ளனர்! எத்தனையோ இரவுகள் விழித்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு வினாடி தரிசனத்தின் தொடர்புக்காக அழைத்துக் கொண்டு இருக்கின்றனர். கூச்சலிட்டுக் கொண்டு இருக்கின்றனர் மற்றும் முன்னால் செல்வதற்காக மட்டும் எவ்வளவு பொறுத்துக்கொள்கின்றனர்! வெறும் சித்திரம் தான் மற்றும் அத்தகைய சித்திரம் வீட்டிலும் உள்ளது, ஒரு வினாடி முன்னால் சென்று தரிசிப்பதற்காக (தொடர்புக்காக) எவ்வளவு தாகத்துடன் உள்ளனர்! ஒரு எல்லையற்ற தந்தையினுடையவர் ஆன காரணத்தினால் முழு உலகின்

ஆத்மாக்களுடன் தொடர்பு ஏற்பட்டு விட்டது. எல்லையற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆகி விட்டீர்கள்.உலகின் அனைத்து ஆத்மாக் களுடன் தொடர்பு உருவாகி விட்டது. எனவே, நான்கு விசயங்களும் அழிவற்ற பிராப்தியாகக் கிடைத்துள்ளன. ஆகையினால், வாழ்க்கை சதா சுகமான வாழ்க்கையாக உள்ளது. பிராப்தி சொரூப வாழ்க்கையாக உள்ளது. பிராமணர்களின் வாழ்வில் அப்பிராப்தியான எந்தப் பொருளும் கிடையாது. இதுவே உங்களுடைய பாடலாகும். அத்தகைய பிராப்தி சொரூபமானவர்கள் அல்லவா நீங்கள்! அல்லது ஆக வேண்டுமா? இன்று பிராப்தி சொரூப குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள் என்று கூறப்பட்டது அல்லவா? இந்த சிரேஷ்ட வாழ்க்கைக்காக உலகத்தினர் எவ்வளவு உழைக்கின்றனர், ஆனால், நீங்கள் என்ன செய்திருக் கின்றீர்கள்? உழைத்தீர்களா? அல்லது அன்பு செலுத்தினீர்களா? அன்பிலேயே தந்தையைத் தன்னுடையவர் ஆக்கி விட்டீர்கள். உலகத்தினர் உழைக்கின்றனர் மற்றும் நீங்கள் அன்பினால் அடைந்து விட்டீர்கள். பாபா என்று கூறினீர்கள் மற்றும் பொக்கிஷத்தின் சாவி கிடைத்து விட்டது. உலகத்தினரிடம் கேட்டீர்கள் என்றால் என்ன கூறுவார்கள்? வருமானம் செய்வது மிகவும் கடினமாகும், இந்த உலகத்தில் வாழ்வது மிகவும் கடினமானது என்று கூறுவார்கள். மேலும், நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? ஒரு அடியில் பலகோடி மடங்கு வருமானம் உள்ளது மேலும் வாழ்வது எவ்வளவு சுலபமாக உள்ளது! பறக்கும் கலையாகும். ஆதலால், நடப்பதிலிருந்தும் தப்பித்து விட்டீர்கள். நடப்பதென்ன, பறக்க வேண்டும் என்று நீங்கள் கூறுவீர்கள், எவ்வளவு வேறுபாடு உள்ளது! பாப்தாதா இன்று விஷ்வத்தின் அனைத்துக் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அனைவரும் அவரவர் பிராப்தியின் ஈடுபாட்டில் ஈடுபட்டு இருக்கின்றனர், ஆனால், முடிவு என்ன? அனைவரும் தேடுவதிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். விஞ்ஞானிகளைப் பாருங்கள், தன்னுடைய தேடுதலில் (கண்டுபிடிப்பில்) அவ்வளவு மூழ்கி உள்ளனர். வேறு எதுவும் நினைவில் வருவதே இல்லை. மகான் ஆத்மாக்களைப் பாருங்கள், பிரபுவை அடையும் தேடலில் ஈடுபட்டு இருக்கின்றனர். சிறிய சந்தேகத்தின் காரணத்தினால் பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டுள்ளனர். ஆத்மா தான் பரமாத்மாவா? அல்லது பரமாத்மா சர்வவியாபியா? என்ற இந்த சந்தேகத்தின் காரணத்தினால் தேடுதலிலேயே இருக்கின்றனர். பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டிருக்கின்றனர். விஞ்ஞானிகள் கூட இப்பொழுது இன்னும்

முன்னேற வேண்டும், இன்னும் முன்னேற வேண்டும் என்று முயற்சி செய்து, செய்து சந்திரனில், நட்சத்திரங்களில் உலகை உருவாக்குவோம் என்று தேடித் தேடி அதிலேயே மூழ்கி விட்டனர். சாஸ்திரவாதிகளைப் பாருங்கள், சாஸ்திரங்களின் அர்த்தம் காணுவதின் விஸ்தாரத்தில் மூழ்கி இருக்கின்றனர். சாஸ்திரங்களுக்கு அர்த்தம் காணும் இலட்சியம் வைத்து, அதிலிருந்து வஞ்சிக்கப்பட்டவர் ஆகி விட்டனர். அரசியல் தலைவர்களைப் பாருங்கள், நாற்காலிக்காக ஓடுவதில் மூழ்கி இருக்கின்றனர். மேலும், உலகத்தின் அறியாமையில் இருக்கும் ஆத்மாக்களைப் பாருங்கள், அழியக்கூடிய பிராப்தியின் துரும்பின் ஆதாரத்தினை உண்மையான ஆதாரம் என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள். மேலும், நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? அவர்கள் தேடுவதிலேயே மூழ்கி இருக்கின்றனர் மற்றும் நீங்கள் அடைந்து விட்டீர்கள், சந்தேகத்தை நீக்கி விட்டீர்கள், எனவே, பிராப்தி சொரூபம் ஆகி விட்டீர்கள். ஆகையினால், நீங்கள் பிராப்தி சொரூப சிரேஷ்ட ஆத்மா ஆவீர்கள்.

பாப்தாதா விசேஷமாக இரட்டை அயல்நாட்டு குழந்தைகளுக்கு வாழ்த்துக்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். விஷ்வத்தின் அனேக ஆத்மாக்களுக்கு மத்தியில் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களுடைய கண்டறியும் நேத்திரம் சக்திசாலியாக இருந்தது. அதனால், கண்டறிந்தீர்கள் மற்றும் அடைந்து விட்டீர்கள். எனவே, பாப்தாதா இரட்டை அயல்நாட்டு குழந்தை களின் கண்டறியும் நேத்திரத்தைப் பார்த்து குழந்தைகளின் மகிமை பாடிக் கொண்டு இருக்கின்றார்கள்- ஆஹா! குழந்தைகளே ஆஹா! தூர தேசத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், வெவ்வேறு தர்மத்தினராக இருந்தபோதிலும், வெவ்வேறு பழக்க வழக்கம் கொண்டவராக இருந்தபோதிலும், தங்களுடைய உண்மையான தந்தை தொலைவில் இருந்தபோதிலும் அருகாமையில் கண்டறிந்து விட்டீர்கள். நெருக்கமான சம்பந்தத்தில் வந்து விட்டீர்கள். பிராமண வாழ்க்கையின் பழக்க வழக்கத் தினை தங்களது ஆதி பழக்க வழக்கம் என புரிந்து சகஜமாக தனது வாழ்வில் நடைமுறைப் படுத்தியிருக்கின்றீர்கள். இத்தகையவர்களே, விசேஷமான, அன்பான மற்றும் அதிர்ஷ்டசாலிக் குழந்தைகள் என்று கூறப்படுகின்றது. எவ்வாறு குழந்தைகளுக்கு விசேஷ குஷி உள்ளதோ, அவ்வாறே பாப்தாதாவிற்கு விசேஷ குஷி உள்ளது. பிராமண பரிவாரத்தின் ஆத்மாக்கள் உலகத்தின் பல மூலைகளுக்கும் சென்றுவிட்டிருந்தனர், ஆனால், பல மூலையிலிருந்தும்

பிரிந்து போன சிரேஷ்ட ஆத்மாக்கள் மீண்டும் தன்னுடைய பரிவாரத்தை வந்தடைந்து விட்டனர். பாபா தேடினார். நீங்கள் கண்டறிந்து விட்டீர்கள். ஆகையினால், பிராப்தியின் அதிகாரி ஆகி விட்டீர்கள். நல்லது.

இத்தகைய அழிவற்ற பிராப்தி சொரூப குழந்தைகளுக்கு, சதா சர்வ சம்பந்தங்களின் அனுபவம் செய்யக்கூடிய குழந்தைகளுக்கு, சதா அழிவற்ற செல்வந்தக் குழந்தைகளுக்கு, சதா தந்தைக்கு சமமாக சிரேஷ்ட சம்ஸ்காரம் மற்றும் சுயத்தின் உணர்வில் இருக்கக்கூடிய சர்வ பிராப்திகளின் களஞ்சியம், சர்வ பிராப்திகளை மகான் தானம் செய்யும் வள்ளல் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**யுகல் (கணவன்-மனைவி) குழந்தைகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** இல்லறத்தில் இருந்தாலும் அனைத்து பந்தனங்களில் இருந்தும் விடுபட்டவர்களாக மற்றும் தந்தைக்கு அன்பானவர்களாக இருக்கிறீர்கள் அல்லவா? மாட்டிக் கொண்டு இருக்கவில்லைதானே? கூண்டுப்பறவையல்லாமல் பறக்கும் பறவை ஆவீர்கள் அல்லவா! சிறிதளவு பந்தனம் கூட மாட்டி விடுகிறது. பந்தன்முக்த் ஆக இருந்தால் சதா பறந்துகொண்டே இருப்பீர்கள். எனவே, எந்தவிதமான பந்தனமும் கூடாது. தேகத்தினுடைய, சம்பந்தத்தினுடைய, இல்லறத்தினுடைய, பொருட்களுடைய எந்தவொரு பந்தனமும் இருக்கக்கூடாது. இதையே பற்றற்ற மற்றும் அன்பான நிலை என்று கூறப்படுகிறது. சுதந்திரமானவர்கள் சதா பறக்கும் கலையில் பறப்பார்கள் மற்றும் மாட்டிக் கொண்டிருப்பவர்கள் கொஞ்சம் பறக்கவும் செய்வார்கள், பிறகு, பந்தனம் அவர்களை இழுத்து கீழே கொண்டுவந்து விடும். எனவே, சில சமயம் கீழே, சிலசமயம் மேலே, இவ்வாறு நேரம் கடந்து விடும். சதா ஏக்ரஸ் பறக்கும் கலையின் நிலை மற்றும் அவ்வப்போது கீழே, அவ்வப்போது மேலே என்ற நிலை, இவ்விரண்டிற்கும் இரவுக்கும் பகலுக்குமான வேறுபாடு உள்ளது. நீங்கள் எந்த நிலை உடையவர்கள்? சதா பந்தனமற்றவரா, சதா சுதந்திரப் பறவையா? சதா தந்தையுடன் இருப்பவர் களா? எந்தவொரு கவர்ச்சியிலும் கவர்ச்சிக்கப்பட்டவர்கள் இல்லையே? இத்தகைய வாழ்க்கையே அன்பான வாழ்க்கையாகும். யார் தந்தையின் அன்பானவர் ஆகிறார்களோ, அவர்களுடைய வாழ்க்கை சதா அன்பானதாக ஆகிறது. பிரச்சனையான

வாழ்க்கையாக இருக்காது. இன்று இது நடந்தது, நேற்று இது நடந்தது, என்பது இருக்காது ஆனால், சதா தந்தையுடன் இருக்கக்கூடியவர்கள் ஏக்ரஸ் ஸ்திதியில் இருக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். இதுவே ஆனந்தமான வாழ்க்கையாகும். ஆனந்தத்தில் இல்லை எனில், அவசியம் குழப்பம் ஏற்படும். இன்று இந்தப் பிரச்சனை வந்து விட்டது, நேற்று வேறு பிரச்சனை வந்து விட்டது, இந்த துக்கதாமத்தின் விசயங்கள் துக்கதாமத்தில் வரத்தான் செய்யும் ஆனால், சங்கமயுக பிராமணர்கள் என்றால், துக்கம் கீழே தங்கி விடும். துக்கதாமத்தில் இருந்து ஒதுங்கி விட்டீர்கள் எனில், துக்கம் தென்பட்டாலும் கூட உங்களைத் தீண்டாது. கலியுகத்தை விட்டு விட்டீர்கள். ஆதாரத்தை விட்டுவிட்டீர்கள், இப்பொழுது சங்கமயுகத்திற்கு வந்து விட்டீர்கள். சங்கமயுகத்தை சதா மேலே காண்பிக்கின்றனர். சங்கமயுக ஆத்மாக்கள் சதா உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் அல்ல! எப்பொழுது தந்தை பறக்கவைக்க வந்திருக்கின்றாரோ, அப்பொழுது பறக்கும் கலையிலிருந்து கீழே வருவதே எதற்காக? கீழே வருவது என்றால் மாட்டிக்கொள்வதாகும். இப்பொழுது இறக்கைகள் கிடைத்திருக்கின்றன எனில், பறந்துகொண்டே இருங்கள், கீழே வரவே வராதீர்கள். நல்லது.

**அதர்குமாரர்களுடன்:** அனைவரும் ஒருவருடைய அன்பில் மூழ்கியிருக்கக் கூடியவர்கள் அல்லவா? ஒன்று பாபா, இரண்டாவது நான், மூன்றாவது எவரும் இல்லை. இவர்களையே அன்பில் மூழ்கியிருக்கக் கூடியவர்கள் என்று கூறப்படுகின்றது. நான் மற்றும் என்னுடைய பாபா. இதைத் தவிர வேறு ஏதாவது எனது என்பது உள்ளதா? என்னுடைய குழந்தை, என்னுடைய பேரன்... இவ்வாறு இல்லை தானே? எனது என்பதில் பற்று உள்ளது. எனது என்பது சமாப்தி (முடிந்து போவது) ஆகுவது என்றால் பற்று சமாப்தி ஆகுவதாகும். முழு பற்று அதாவது மோகம் தந்தையிடம் ஏற்பட்டுவிட்டது எனில், மாறிவிட்டது, சுத்தமான மோகம் ஆகி விட்டது. தந்தை சதா சுத்தமானவர். எனவே, மோகம் மாற்றமடைந்து அன்பாக ஆகி விட்டது. ஒரே என்னுடைய பாபா, இந்த ஒரு என்னுடையதின் மூலம் அனைத்தும் முடிவடைந்து விடுகிறது. மேலும், ஒருவருடைய நினைவு சகஜமாகி விடுகிறது. ஆகையினால், சகஜயோகியாக ஆகி விடுகின்றீர்கள். நான் சிரேஷ்ட ஆத்மா மற்றும் என்னுடைய பாபா, அவ்வளவு தான். சிரேஷ்ட ஆத்மா என உணர்வதன்

மூலம் கர்மா (செயல்) தானாகவே சிரேஷ்ட மாகி விடும். சிரேஷ்ட ஆத்மாவிற்கு முன் மாயை வர முடியாது.

**தாய்மார்களுடன்:** தாய்மார்கள் சதா தந்தையுடன் குஷியின் ஊஞ்சலில் ஆடக்கூடியவர்கள் தானே! கோப, கோபியர்கள் சதா குஷியில் நடனமாடக் கூடியவர்கள் அல்லது ஊஞ்சலில் ஆடக்கூடியவர்கள் ஆவார்கள். எனவே, சதா தந்தையுடன் இருக்கக்கூடியவர்கள் குஷியில் நடனமாடுகிறார்கள். தந்தை உடன் இருக்கின்றார் எனில், சர்வசக்திகளும் உடன் இருக்கும். தந்தையின் துணை சக்திசாலி ஆக்கி விடுகின்றது. தந்தையுடன் இருப்பவர்கள் சதா மோகமற்றவர்களாக இருப்பார்கள், அவர்களை யாருடைய மோகமும் தொல்லை செய்யாது. எனவே, மோகத்தை வென்றவர்கள் ஆவீர்கள் தானே? எத்தகைய சூழ்நிலை வந்தாலும் சரி, ஆனால், ஒவ்வொரு சூழ்நிலையிலும் நஷ்டமோஹா (மோகத்தை வென்ற நிலை). எந்தளவு மோகத்தை வென்றவர்களாக இருக்கின்றார்களோ, அந்தளவு நினைவு மற்றும் சேவையில் முன்னேறிக் கொண்டே இருப்பார்கள்.

**மதுவனத்திற்கு வந்திருக்கும் சேவாதாரிகளுடன்:** சேவையின் கணக்கு சேமிப்பு ஆகி விட்டதல்லவா? இப்பொழுது கூட மதுவனத்தின் வாயுமண்டலத்தில் சக்திசாலி ஸ்திதியை உருவாக்கு வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது மற்றும் எதிர்காலத்திற்காகவும் கூட சேமிப்பு செய்திருக் கின்றீர்கள் எனில் இரட்டை பிராப்தி ஆகி விட்டது. யக்ஞ சேவை என்றால் சிரேஷ்டமான சேவையில் சிரேஷ்டமான ஸ்திதியில் இருந்து செய்வதினால் பலகோடி மடங்கு பலன் கிடைத்து விடுகின்றது. எந்தவொரு சேவை வேண்டுமானாலும் செய்யுங்கள், ஆனால், அதற்கு முன்பாக சக்திசாலி ஸ்திதியில் நிலைத்திருந்து சேவாதாரியாகி சேவை செய்து கொண்டிருக்கின்றேனா? என்பதைப் பாருங்கள். சாதாரண சேவாதாரி அல்ல. ஆன்மிக சேவாதாரி ஆவீர்கள். ஆன்மிக சேவாதாரியின் ஆன்மிக ஜொலிப்பு, ஆன்மிகப் பெருமை சதா வெளிப்பட்ட நிலையில் இருக்க வேண்டும். சப்பர்த்தி செய்யும்பொழுது கூட சுயதரிசன சக்கரம் சுழன்று கொண்டே இருக்க வேண்டும். லௌகீக ஸ்தூல காரியம் நிமித்தமாகிச் செய்ய வேண்டும், ஆனால், ஸ்தூலம், சூட்சுமம் இரண்டும் இணைந்திருக்க வேண்டும். கைகளால் ஸ்தூல காரியம் செய்யுங்கள் மற்றும் புத்தியால் மனசா சேவா செய்யுங்கள்.

அப்பொழுது இரண்டு சேவை ஆகி விடும். கை மூலம் காரியம் செய்து கொண்டிருக்கும்பொழுதும் நினைவின் சக்தி மூலம் ஒரு இடத்தில் இருந்தபடியே அதிக சேவை செய்ய முடியும். மதுவனமோ லைட்ஹவுஸ் (கலங்கரை விளக்கு) ஆகும். லைட்ஹவுஸ் ஒரு இடத்தில் நின்றுகொண்டு நாலாபுறமும் சேவை செய்கின்றது. அத்தகைய சேவாதாரி தனக்கும் மற்றும் பிறருக்கும் மிகவும் சிரேஷ்டமான பிராப்தியை உருவாக்க முடியும். நல்லது. ஓம் சாந்தி.

**இன்று பாப்தாதா முழு இரவும் அனைத்துக் குழந்தைகளுடன் சந்திப்பைக் கொண்டாடினார் மற்றும் காலை-7 மணிக்கு அன்பு நினைவுகள் கொடுத்து விட்டு விடை பெறுகின்றார். காலை வகுப்பை பாப்தாதாவே எடுத்து விட்டார்.** தினமும் பாப்தாதா மூலம் மகாவாக்கியத்தை கேட்டுக் கேட்டு மகான் ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள். இன்றைய தினத்தின் மகாவாக்கியத்தினை கேட்பதினால் மகான் ஆகி விட்டோம் என்ற இந்த சாரத்தை மனதின் இசையுடன் கேட்க வேண்டும். மகானிலும் மகான் ஆன காரியம் செய்வதற் காக சதா நிமித்தமானவர்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் மனதின் மூலம், பேச்சின் மூலம், தொடர்பின் மூலம் மகாதானம் செய்யும் ஆத்மாக்கள் மற்றும் மகான் யுகத்தை வரவேற்கக் கூடிய அதிகாரி ஆத்மாக்கள். இதையே நினைவில் வைக்க வேண்டும். சதா அத்தகைய மகான் நினைவில் இருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். வருங்கால மற்றும் நிகழ்கால சக்கரவர்த்திகளுக்கு தந்தையின் நமஸ்காரம். நல்லது.

**வரதானம்: சுத்தமான மற்றும் சக்திசாலியான எண்ணங்களின் சக்தி மூலம் வீணான அதிர்வலைகளை சமாப்தி (முடிவு) செய்யக்கூடிய உண்மையான சேவாதாரி ஆகுக!**

சங்கல்பம் கூட சிருஷ்டியை உருவாக்கி விடுகின்றது என்று கூறப்படுகின்றது. எப்பொழுது பலவீனமான மற்றும் வீணான சங்கல்பம் செய்கின்றீர்களோ, அப்பொழுது வீணான வாயுமண்டலத் தின் சிருஷ்டி உருவாகி விடுகின்றது. யார் தன்னுடைய சுத்தமான, சக்திசாலியான எண்ணங்கள் மூலம் பழைய அதிர்வலை களையும் சமாப்தி செய்து

விடுகின்றார்களோ, அவர்களே உண்மையான சேவாதாரி ஆவார்கள். எவ்வாறு விஞ்ஞானிகள் ஆயுதத்தின் மூலம் ஆயுதத்தை அழிக்கின்றனர். ஒரு விமானத்தின் மூலம் இன்னொரு விமானத்தை விழ வைக்கின்றனர். அவ்வாறே உங்களுடைய சுத்தமான, சக்திசாலியான எண்ணங்களின் அதிர்வலைகள் வீணான அதிர்வலைகளை சமாப்தி செய்து விட வேண்டும். இப்பொழுது அத்தகைய சேவை செய்யுங்கள்.

**சுலோகன்: தடை என்ற சூட்சுமமான தங்க கயிறுகளிலிருந்து முக்தி அடையுங்கள் (விடுபடுங்கள்), முக்தி வருடத்தினைக் கொண்டாடுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 27.02.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிவசக்தி பாண்டவ சேனையின் சிறப்புகள்!

இன்று பாப்தாதா அமிர்தவேளையில் இருந்து விசேஷமாக முன்னிலையில் வந்துள்ள தூரதேசத்தில் வசிக்கின்ற, மனதால் அருகில் இருக்கக் கூடிய இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். பாப் (சிவபாபா) மற்றும் தாதா (பிரம்மாபாபா)வுக்கிடையில் இன்று இனிமையான ஆன்மிக உரையாடல் நடந்து கொண்டிருந்தது. எந்த விஷயத்தைப் பற்றி? பிரம்மா தந்தை, விசேஷமாக இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளைப் பார்த்துப் புன்சிரிப்புடன் கூறினார், குழந்தை களின் அற்புதம் இது, அதாவது இவ்வளவு தூர தேசங்களில் வசிப்பவர்களாக இருந்தாலும் சதா அன்பின் ஒரே ஈடுபாட்டில் இருக்கின்றனர், அதாவது அனைவருக்கும் எந்த விதத்திலாவது பாப்தாதா வின் செய்தியை அவசியம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்காக அநேக குழந்தைகள் இரட்டைக் காரியம் செய்து கொண்டே, லௌகிக் மற்றும் அலௌகிக் இரண்டிலும் பிஸியாக இருந்தாலும் தங்களின் ஓய்வைக் கூடப் பார்க்காமல் இரவும் பகலும் அதே ஈடுபாட்டில் மூழ்கியுள்ளனர். தங்களின் உணவு-பானத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் சேவையின் ஈடுபாட்டில் மூழ்கியுள்ளனர். எந்தத் தூய்மையின் விஷயத்தை இயற்கைக்கு விரோதமான வாழ்க்கை எனப் புரிந்து கொண்டிருந்தனரோ, அதே தூய்மையைத் தனதாக்குவதற்காக, தூய்மையின்மையைத் தியாகம் செய்வதற்காக தைரியமாக, திட சங்கல்பத்துடன், பாபாவின் அன்பினால், நினைவு யாத்திரை மூலம் சாந்தியின் பிராப்தியினுடைய ஆதாரத்தில், படிப்பு மற்றும் சங்கத்தின் ஆதாரத்தில் தங்களது வாழ்க்கையில் தாரணை செய்துள்ளனர். எதைக் கஷ்டம் எனப் புரிந்து கொண்டிருந்தனரோ, அதை சுலபமாக ஆக்கி விட்டுள்ளனர். பிரம்மாபாபா விசேஷமாகப் பாண்டவ சேனையைப் பார்த்துக் குழந்தைகளின் மகிமையைப் பாடிக் கொண்டிருந்தார். எந்த விஷயத்தைப் பற்றி? ஒவ்வொருவரின் மனதில் உள்ளது -- அதாவது

# 1985 அவ்யக்த முரளி

பவித்திரதா (தூய்மை) தான் யோகி ஆவதற்கான முதலாவது சாதனம். பவித்திரதா தான் பாபாவின் அன்பை அனுபவம் செய்வதற்கான சாதனம். பவித்திரதா தான் சேவையில் வெற்றிக்கான ஆதாரம். இந்த சுப சங்கல்பம் ஒவ்வொருவரின் மனதில் பக்காவாக (உறுதி) உள்ளது. மேலும் பாண்டவரின் அற்புதம் இது – அவர்கள் சக்திகளை முன்னால் வைத்தாலும் கூட, தங்களை முன்னேற்றத்தில் கொண்டு செல்வதற்கான ஊக்கம்-உற்சாகத்தில் சென்று கொண்டுள்ளனர். பாண்டவர்களின் தீவிர புருஷார்த்தம் செய்வதற்கான வேகம், நல்ல முன்னேற்றத்தை அடையக் கூடியதாகக் காணப் படுகிறது. பெரும்பான்மையானவர்கள் இதே வேகத்தில் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கின்றனர்.

சிவதந்தை கூறினார் – பாண்டவர்கள் தங்களின் விசேஷ மரியாதை கொடுப்பதற்கான ரிக்கார்டை நன்கு காட்டியுள்ளனர். அதோடு கூடவே இதைப் பற்றிய விஷயத்தையும் கூறினார் – இடையிடையே சம்ஸ்காரங்களின் விளையாட்டையும் ஆடி விடுகின்றனர் ஆனால் பிறகும் கூட முன்னேற்றத் திற்கான ஊக்கத்தின் காரணத்தால் பாபாவிடம் அதிக அன்பு இருக்கும் காரணத்தால், அன்பிற்குப் பின்னால் இந்த மாற்றம் தான் பாபாவுக்குப் பிரியமானது என்று புரிந்து கொண்டிருப்பதால் சமர்ப்பணமாகி விடுகின்றனர். பாபா எதைச் சொல்கிறாரோ, எதை விரும்புகிறாரோ, அதையே செய்வோம் என்ற இந்த சங்கல்பத்தினால் தங்களைத் தாங்களே மாற்றிக் கொண்டு விடுகின்றனர். அன்பு இருப்பதால் முயற்சி என்பது முயற்சியாகவே தோன்றாது. அன்பு இருப்பதால் சகித்துக் கொள்வது என்பதும் சகித்துக் கொள்வதாகவே தோன்றாது. எனவே பிறகும் கூட பாபா-பாபா என்று சொல்லிக் கொண்டே முன்னேறிச் சென்று கொண்டே இருக்கின்றனர். இந்தப் பிறவியின் சரீரம் சார்ந்த சம்ஸ்கார புருஷத்துவம், அதாவது எல்லைக்குட்பட்ட படைப்பு சார்ந்தவராக இருந்த போதிலும் தங்களை நல்லபடியாக மாற்றிக் கொண்டுள்ளனர். படைப்பவர் தந்தையை முன்னால் வைக்கிற காரணத்தால் நிரகங்காரி மற்றும் பணிவு பாவனை, இந்த தாரணையின் லட்சியம் மற்றும் லட்சணத்தை நன்கு தாரணை செய்துள்ளனர் மற்றும் செய்து கொண்டுள்ளனர். உலகத்தின் சூழ்நிலைக்கு நடுவே தொடர்பில் வந்தாலும், பிறகும் கூட நினைவின் ஈடுபாட்டினுடைய குடைநிழல் இருக்கும் காரணத்தால் பாதுகாப்பாக இருப்பதற்கான நிரூபணத்தை நன்கு கொடுத்துக் கொண்டுள்ளனர். பாண்டவர்களின் விஷயத்தைக்

கேட்டீர்கள் இல்லையா? பாப்தாதா இன்று பிரியதர்ஷனுக்குப் பதிலாகப் பிரியதர்ஷினி ஆகி விட்டுள்ளனர். அதனால் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனர். இருவருக்குமே குழந்தைகளிடம் விசேஷ அன்போ உள்ளது இல்லையா? ஆக, இன்று அமிர்தவேளையிலிருந்து குழந்தைகளின் சிறப்புகள் மற்றும் குணங்களின் மாலையை நினைவு செய்தார். நீங்கள் 63 பிறவிகளாக மாலைகளை உருட்டினீர்கள். இப்போது பாபா அதற்குப் பிரதிபலனாக மாலையை நினைவு செய்து பதிலளிக்கிறார்.

நல்லது, சக்திகளின் எந்த மாலையை நினைவு செய்தார்? சக்தி சேனையின் மிக அதிக விசேஷதா இது தான் -- அன்போடு, ஒவ்வொரு நேரமும் ஒரு தந்தையின் அன்பில் மூழ்கி இருந்து, சர்வ சம்மந்தங்களின் அனுபவங்களில் நல்ல ஈடுபாட்டோடு இருந்து, முன்னேறிக் கொண்டுள்ளனர். ஒரு கண்ணில் பாபா, இன்னொரு கண்ணில் சேவை, இரண்டு கண்களிலும் சதா இது தான் நிறைந்துள்ளது. விசேஷம் மாற்றம் இது தான் -- தனது கவனக்குறைவு, மென்மைத் தன்மையைத் தியாகம் செய்துள்ளனர். தைரியம் உள்ள சக்தி சொரூபம் ஆகியுள்ளனர். பாப்தாதா இன்று விசேஷமாக சின்னச்சின்ன வயதுள்ள சக்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த இளமைப் பருவத்தில் அநேக விதமான அல்பகாலக் கவர்ச்சிகளை விட்டு, ஒரு தந்தையின் கவர்ச்சியில் நல்ல ஊக்கம்-உற்சாகத்தில் சென்று கொண்டுள்ளனர். உலகத்தை சாரமற்ற உலகமாக அனுபவம் செய்து, பாபாவையே உலகமாக ஆக்கி விட்டுள்ளனர். தன்னுடைய உடல்-மனம்-செல்வத்தை, தந்தை மற்றும் சேவையில் ஈடுபடுத்துவதால் பிராப்தியை அனுபவம் செய்து, முன்னால் பறக்கும் கலையில் சென்று கொண்டுள்ளனர். சேவையின் பொறுப்பு என்ற கிரீடத்தை நன்கு தாரணை செய்துள்ளனர். களைப்பை அவ்வப்போது அனுபவம் செய்தாலும், புத்தியில் அவ்வப்போது சுமையை அனுபவம் செய்தாலும் கூட, பாபாவைப் பின்பற்றியே தீர வேண்டும், பாபாவைப் பிரத்தியட்சம் (வெளிப்படுத்த) செய்தேயாக வேண்டும் என்ற இந்த உறுதியின் மூலம் இந்த அனைத்து விஷயங்களையும் முடித்து விட்டு, பிறகும் வெற்றியை அடைந்து கொண்டிருக்கின்றனர். எனவே பாப்தாதா எப்போது குழந்தைகளின் அன்பைப் பார்க்கிறாரோ, அப்போது அடிக்கடி இதே வரதானத்தைத் தான் தருகிறார் -- தைரியம் வைத்தால் தந்தை உதவி செய்வார். வெற்றி உங்களது பிறப்புரிமையே தான்.

## 1985 அவ்யக்த முரளி

பாபாவின் துணை இருப்பதால் ஒவ்வொரு பரஸ்திதியையும் வெண்ணெயிலிருந்து முடியை எடுப்பது போல் கடந்து சென்று விடுகின்றனர். வெற்றி என்பது குழந்தைகளின் கழுத்து மாலையாகவே உள்ளது. வெற்றி மாலை குழந்தைகளாகிய உங்களை வரவேற்பதாக உள்ளது. ஆக, குழந்தைகளின் தியாகம், தபஸ்யா மற்றும் சேவை மீது பாப்தாதாவும் சமர்ப்பணமாகி விடுகிறார். அன்பின் காரணத்தால் எந்த ஒரு கடினமும் அனுபவம் செய்வதில்லை. அப்படித் தான் இல்லையா? எங்கே அன்பு உள்ளதோ, அன்பின் உலகத்தில் அல்லது பாபாவின் உலகத்தில் பாபாவின் மொழியில் கடினம் என்ற சொல்லே கிடையாது. சக்திசேனையின் விசேஷதா, கடினம் என்பதை சுலபமாக்கி விடுவதாகும். ஒவ்வொரு வரின் மனதிலும் இதே ஊக்கம் உள்ளது -- அனைவரை விடவும் அதிகமாக மற்றும் வெகு சீக்கிரமாக செய்தி கொடுப்பதற்கு நிமித்தமாகி, பாபா முன்னிலையில் ரோஜாப் பூச்செண்டைக் கொண்டுவர வேண்டும். எப்படி பாபா நம்மை ஆக்கியிருக்கிறாரோ, அது போல் நாம் மற்றவர்களை உருவாக்கி பாபாவுக்கு முன்னால் கொண்டுவர வேண்டும். சக்திசேனை ஒருவர் மற்றவரின் சகயோகத்தினால் குழு ரூபத்தில் பாரதத்திலிருந்தும் ஏதேனும் விசேஷத்தை வெளிநாடுகளில் செய்வதற்கான சுப ஊக்கத்தில் உள்ளனர். எங்கே சங்கல்பம் உள்ளதோ, அங்கே வெற்றி அவசியம் இருக்கும். சக்திசேனையில் ஒவ்வொருவரும் தங்களின் வெவ்வேறு இடங்களில் விருத்தி மற்றும் சித்தியை அடைவதில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள், பெற்றுக் கொண்டே இருப்பார்கள். ஆக, இருவரின் அன்பைப் பார்த்து, சேவையின் ஊக்கத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் குணங்களை எவ்வளவு பாடுவது, ஆனால் வதனத்தில் ஒவ்வொரு குழந்தையின் குணங்களை பாப்தாதா வர்ணனை செய்து கொண்டிருந்தார். பாரத தேசத்தினர் யோசித்து-யோசித்து அநேகர் இருந்து விடுவார்கள் ஆனால் வெளிநாட்டினர் தெரிந்து கொண்டு அதிகாரி ஆகி விட்டுள்ளனர். அவர்கள் பார்த்துக் கொண்டே இருந்து விடுவார்கள். நீங்கள் பாபாவுடன் கூட வீட்டுக்குச் சென்று சேர்ந்து விடுவீர்கள். அவர்கள் கதறுவார்கள் ஆனால் நீங்கள் வரதானங்களின் திருஷ்டி மூலம் பிறகும் ஏதாவது அஞ்சலி (தேற்றுதல்) கொடுத்துக் கொண்டே இருப்பீர்கள்.

ஆக, இன்று பாப்தாதா விசேஷமாக என்ன செய்தார் என்பதைப் பார்த்தீர்களா? குழு முழுவதையும் பார்த்து பாப்தாதா குழந்தைகள் தங்களின் பாக்கியத்தை உருவாக்கிக் கொள்ளும் மகிமையைப் பாடிக் கொண்டிருந்தார். தூரத்திலிருந்தவர்கள் நெருக்கத்தில் வந்து விட்டனர் மற்றும் அருகில் அபுவில் இருப்பவர்கள் எவ்வளவு தூரமாகி விட்டனர்! அருகில் இருந்த போதிலும் தூரத்தில் உள்ளனர் ஆனால் நீங்கள் தூரத்தில் இருந்த போதும் அருகில் இருக்கிறீர்கள். அவர்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பவர்கள், நீங்கள் மன சிம்மாசனத்தில் சதா இருப்பவர்கள். எவ்வளவு அன்போடு மதுபன் வருவதற்கான சாதனங்களைத் தயார் செய்கிறீர்கள்! ஒவ்வொரு மாதமும் இதே பாடலைப் பாடுகிறீர்கள் -- பாபாவோடு சந்திக்க வேண்டும், போக வேண்டும். சேமித்துக் கொள்ள வேண்டும். ஆக, இந்த ஈடுபாடும் கூட மாயாஜீத் ஆவதற்கான சாதனம் ஆகி விடுகிறது. சுலபமாக டிக்கெட் கிடைத்து விடுமானால் இவ்வளவு ஈடுபாட்டில் அதிக விக்னம் ஆகி விடும் ஆனால் துளித்துளியாக குளத்தை நிரப்புகிறீர்கள். ஆகவே துளித்துளியாக சேமிப்பதில் பாபாவின் நினைவு நிறைந்துள்ளது. ஆக, இதுவும் டிராமாவில் நடப்பது நன்மைக்காகத் தான். அதிகம் பைசா கிடைத்து விடுமானால் பிறகு மாயா வந்து விடும். பிறகு சேவை மறந்து போகும். எனவே செல்வந்தர்கள் பாபாவின் அதிகாரி குழந்தைகளாக ஆவதில்லை. சம்பாதித்தீர்கள். சேமித்தீர்கள். தனது உண்மையான வருமானத்தை சேமிப்பதில் தான் பலம் உள்ளது. உண்மையான வருமானத்தின் செல்வம் பாபாவின் காரியத்தில் பயனுள்ளதாகிறது. சும்மா அப்படியே பணம் வந்து விட்டால் உடல் ஈடுபடாது. உடல் ஈடுபடா விட்டால் மனமும் மேலே-கீழே ஆகி விடும். அதனால் உடல்-மனம்-செல்வம் மூன்றும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே சங்கம யுகத்தில் சம்பாதித்தீர்கள், ஈஸ்வரிய பேங்க்கில் சேமித்தீர்கள். இந்த வாழ்க்கை தான் நம்பர் ஒன் வாழ்க்கை! சம்பாதித்தீர்கள் மற்றும் லௌகிக் விநாசி பேங்க்குகளில் சேமித்தீர்கள் என்றால் அது பயனுள்ளதாக ஆவதில்லை. சம்பாதித்தீர்கள் மற்றும் அவிநாசி பேங்க்கில் சேமித்தீர்கள் என்றால் ஒன்று பல மடங்காக ஆகிறது. 21-பிறவிகளுக்காக சேமிப்பாகி விடுகிறது. மனப்பூர்வமாக செய்யப் பட்டது திலாராமின் அருகில் வந்து சேர்கிறது. யாராவது மற்றவர்களுக்குக் காண்பிப்பதற்காகச் செய்கிறார்கள் என்றால் காண்பிப்பதிலேயே முடிந்து போகும். திலாராம் வரை வந்து சேராது. ஆகவே நீங்கள் மனதார செய்யக்கூடிய நல்லவர்கள். மனதார

இரண்டு செய்பவர்கள் கூட பல கோடிக்கு அதிபதி ஆகி விடுகின்றனர். மனதின் வருமானம், அன்பின் வருமானம் உண்மையான வருமானம். சம்பாதிப்பது எதற்காக? சேவைக்காக, தனது ஓய்வுக்காக இல்லை. ஆக, இது உண்மையான மனதின் வருமானம். அது ஒன்று என்றாலும் பல மடங்காக ஆகி விடுகிறது. தனது ஓய்வுக்காக சம்பாதிக் கிறீர்கள் அல்லது சேமிக்கிறீர்கள் என்றால் இங்கே ஓய்வெடுப்பீர்கள் ஆனால் அங்கே மற்றவர்களுக்கு ஓய்வு கொடுப்பதற்கு நிமித்தமாகி விடுவீர்கள். தாச-தாசிகள் என்ன செய்வார்கள்? இராஜ குடும்பத்திற்கு ஓய்வு கொடுப்பதற்காக இருப்பார்கள் இல்லையா? இங்கே உள்ள ஓய்வினால் அங்கே ஓய்வளிப்பதற்கு நிமித்தமாக வேண்டியதிருக்கும். ஆகவே எதை அன்போடு, உண்மையான உள்ளத் தோடு சம்பாதிக்கிறீர்கள் மற்றும் சேவையில் ஈடுபடுத்துகிறீர்களோ, அதைத் தான் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அநேக ஆத்மாக்களின் ஆசிர்வாதங்களை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். யாருக்கு நிமித்தமாகிறீர்களோ, அவர்கள் தாம் பிறகு உங்களுக்கு பக்தர்களாகி உங்களுக்குப் பூஜை செய்வார்கள். ஏனென்றால் நீங்கள் அந்த ஆத்மாக்களுக்காக சேவை செய்தீர்கள் என்றால் சேவைக்கான பிரதிபலனாக அவர்கள் உங்கள் ஜட சித்திரங்களுக்கு சேவை செய்வார்கள்! பூஜை செய்வார்கள்! 63-பிறவிகளுக்கு சேவையின் பிரதிபலனை உங்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். பாபாவிடமிருந்தோ கிடைக்கத் தான் செய்யும் ஆனால் அந்த ஆத்மாக்களிடமிருந்தும் கிடைக்கும். யாருக்கு செய்தி கொடுக்கிறீர்களோ, அவர்கள் அதிகாரி ஆகவில்லை என்றால் பிறகு அவர்கள் இந்த ரூபத்தில் பிரதிபலனைக் கொடுப்பார்கள். யார் அதிகாரி ஆகிறார்களோ, அவர்களோ உங்கள் சம்மந்தங்களில் வந்து விடுவார்கள். சிலர் சம்மந்தத்தில் வந்து விடுவார்கள். சிலர் பக்தராகி விடுவார்கள். சிலர் பிரஜை ஆகி விடுவார்கள். பலவிதமான முடிவுகள் வெளிப்படுகின்றன. புரிந்ததா? மனிதர்களும் கேட்கிறார்கள் இல்லையா -- நீங்கள் சேவைக்குப் பின்னாலேயே ஏன் போகிறீர்கள்? சாப்பிடுங்கள், அருந்துங்கள், மகிழ்ச்சி கொண்டாடுங்கள். என்ன கிடைக்கிறதோ, அதை இரவும் பகலும் சேவையிலேயே ஈடுபடுத்துகிறீர்களே? பிறகு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எங்களுக்கு என்ன கிடைத்துள்ளதோ, அதை அனுபவம் செய்து பாருங்கள். அனுபவி தான் இந்த சுகத்தைப் பற்றி அறிவார்கள். இந்தப் பாடலைப் பாடுகிறீர்கள் இல்லையா? நல்லது.

சதா அன்பில் மூழ்கி இருக்கக் கூடிய, சதா தியாகத்தை பாக்கியமாக அனுபவம் செய்யக்கூடிய, சதா ஒன்றைப் பல மடங்காக ஆக்கக் கூடிய, சதா பாப்தாதாவைப் பின்பற்றக் கூடிய, பாபாவை உலகம் என அனுபவம் செய்யக் கூடிய அத்தகைய மனசிம்மாசனதாரிக் குழந்தைகளுக்கு திலாராம் தந்தை யின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே!

**வெளிநாட்டு சகோதர-சகோதரிகளுடன் தனிப்பட்ட உரையாடல்:**

1) தங்களை பாக்கியவான் ஆத்மா எனப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா? இவ்வளவு பாக்கியத் தையோ உருவாக்கியிருக்கிறீர்கள் -- பாக்யவிதாதாவின் இருப்பிடம் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இது எத்தகைய இருப்பிடம் எனப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா? சாந்தியின் இருப்பிடத்தில் வந்து சேர்வதும் கூட பாக்கியம் தான். இந்த பாக்கியத்தை அடைவதற்கான வழி திறந்து வைக்கப்பட்டுள்ளது. டிராமாவின் அனுசாரம் பாக்கியத்தை அடைவதற்கான இருப்பிடத்தில் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். பாக்கியத்தின் ரேகை இங்கே தான் வரையப்படுகிறது. ஆக, தங்களின் சிரேஷ்ட பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டீர்கள்.

இப்போது கொஞ்சம் சமயம் கொடுங்கள். சமயமும் உள்ளது. மேலும் துணையிலும் (சங்கத்தில்) சேர முடியும். வேறு கஷ்டமான விஷயமோ கிடையாது. எது கஷ்டமாக உள்ளதோ, அதற்காகக் கொஞ்சம் யோசிக்கப் படுகிறது. சுலபம் என்றால் செய்யுங்கள். இதனால் வாழ்க்கையில் என்னவெல்லாம் அல்பகால ஆசைகள் அல்லது இச்சைகள் உள்ளனவோ, அவை அனைத்தும் அவிநாசி பிராப்தியில் நிறைவேறி விடும். இந்த அல்பகால இச்சைகளுக்குப் பின்னால் போவது என்பது தனது நிழலின் பின்னால் செல்வதாகும். எவ்வளவு நிழலின் பின்னால் செல்கிறீர்களோ, அவ்வளவு அது முன்னால் சென்று கொண்டே இருக்கும். அதை அடைய முடியாது ஆனால் நீங்கள் முன்னேறிச் சென்று கொண்டே இருப்பீர்களானால் அது தானாகவே உங்களுக்குப் பின்னால்-பின்னால் வந்து கொண்டிருக்கும். ஆக, அத்தகைய அவிநாசி பிராப்தியின் பக்கம் செல்கிறவர் பின்னால் விநாசி விஷயங்கள் அனைத்தும் பூர்த்தியாகி விடும். புரிந்ததா? சர்வ பிராப்திகளுக்கான சாதனம் இது தான். கொஞ்ச சமயத்தின் தியாகம் சதா காலத்திற்கான பாக்கியத்தை உருவாக்குகிறது. ஆகவே சதா இதே லட்சியத்தைப் புரிந்து கொண்டு, முன்னேறிச் சென்று

கொண்டே இருங்கள். இதனால் அதிக குஷியின் கஜானா கிடைக்கும். வாழ்க்கையில் அனைத்திலும் பெரியதிலும் பெரிய கஜானா குஷியாகும். ஆக, அவிநாசி குஷியின் கஜானாவை நீங்கள் அடைய முடியும்.

2) பாப்தாதா குழந்தைகளின் சதா முன்னேறிச் செல்வதற்கான ஊக்கம்-உற்சாகத்தைப் பார்க்கிறார். குழந்தைகளின் ஊக்கம் பாப்தாதாவிடம் வந்து சேர்கிறது. குழந்தைகளுக்கு உள்ளுக்குள் உள்ளது -- உலகத்தின் வி.வி.ஐ.பி.யை பாப்தாதாவுக்கு முன்னிலையில் கொண்டு வருவேன். இந்த ஊக்கமும் கூட நனவாகிக் கொண்டே போகும். ஏனென்றால் சுயநலமற்ற சேவையின் பலன் அவசியம் கிடைக்கிறது. சேவை தான் சுயத்தின் ஸ்டேஜை உருவாக்குகிறது. ஆகவே இது போல் ஒரு போதும் யோசிக்காதீர்கள் -- சேவை இவ்வளவு பெரியதாக உள்ளது, என்னுடைய ஸ்டேஜோ (ஸ்திதி) அது போல் இல்லை என்பதாக ஆனால் சேவை உங்களது ஸ்டேஜை உருவாக்கி விடும். மற்றவர்களுக்குச் செய்யும் சேவை தான் சுய முன்னேற்றத்திற்கான சாதனமாகும். சேவை தானாகவே சக்திசாலி அவஸ்தாவை (நிலை) அமைத்துக் கொண்டே இருக்கும். பாபாவின் உதவி கிடைக்கிறது இல்லையா? பாபாவின் உதவி கிடைத்துக் கொண்டே அந்த சக்தி அதிகரித்துக் கொண்டே அந்த ஸ்டேஜும் அமைந்து விடும். புரிந்ததா? ஆகவே இதை ஒரு போதும் யோசிக்காதீர்கள் -- இவ்வளவு சேவையை நான் எப்படி செய்வேன்? என்னுடைய ஸ்டேஜ் அந்த மாதிரி உள்ளது. அப்படி இல்லை. செய்து கொண்டே செல்லுங்கள். பாப்தாதாவின் வரதானம் -- முன்னேறிச் சென்றேயாக வேண்டும். சேவையின் இனிய பந்தனமும் கூட முன்னேறுவதற்கான சாதனமாகும். யார் மனப்பூர்வமாக மற்றும் அனுபவத்தின் அத்தாரிட்டியுடன் பேசுகிறார்களோ, அவர்களின் குரல் மனம் வரை சென்றடையும். அனுபவத்தின் அத்தாரிட்டியின் பேச்சு மற்றவர்களுக்கு அனுபவம் செய்வதற்கான பிரேரணை (தூண்டுதல்) தருகிறது. சேவையில் முன்னேறிக் கொண்டே செல்லும் போது என்ன பரீட்சைப் பேப்பர் வருகிறதோ, அதுவும் முன்னேறச் செய்வதற்கான சாதனமாகும். ஏனென்றால் புத்தி வேலை செய்கிறது, நினைவில் இருப்பதற்கான கவனம் உள்ளது. ஆக, இதுவும் கூட விசேஷ லிஃப்ட் ஆகி விடுகிறது. நாம் சூழ்நிலையை எப்படி சக்திசாலி ஆக்குவது என்ற சிந்தனை சதா புத்தியில் உள்ளது. எத்தகைய பெரிய வடிவத்தை எடுத்து விக்னம் (தடைகள்) வந்தாலும் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுக்கு அதில்

நன்மையே உள்ளது. அந்தப் பெரிய ரூபம் கூட நினைவின் சக்தியால் சிறியதாகி விடும். அது பேப்பரில் செய்த சிங்கம் போல. நல்லது.

**வரதானம்: தீபாவளி அன்று யதார்த்த விதி மூலம் தனது தெய்விகப் பதவியை வரவழைக்கக் கூடிய பூஜைக்குரிய ஆத்மா ஆகுக!**

தீபாவளிக்கு முன்பெல்லாம் மக்கள் விதிப்பூர்வமாக தீபங்களை ஏற்றி வைத்தனர். தீபங்கள் அணையாமல் இருப்பதற்காக நெய் விட்டனர். விதிப்பூர்வமாக வரவழைக்கும் அப்பியாசத்தில் இருந்தனர். இப்போதோ தீபத்திற்குப் பதில் மின்சார பல்பை எரிய விடுகின்றனர். தீபாவளி கொண்டாடுவதில்லை. இப்போதோ வெறும் மனமகிழ்ச்சியின் கொண்டாட்டமாக ஆகி விட்டது. வரவழைக்கும் விதி, அதாவது சாதனை முடிந்து போய் விட்டது. அன்பு முடிந்துபோய் வெறுமனே சுயநலம் மட்டுமே மிஞ்சியுள்ளது. எனவே யதார்த்த வள்ளல் ரூபதாரி லட்சுமி யாரிடமும் வருவதில்லை ஆனால் அனைவரும் யதார்த்த விதி மூலம் தங்களின் தெய்வீகப் பதவியை வரவழைக்கிறீர்கள். அதனால் சுயம் பூஜைக்குரிய தேவி-தேவதை ஆகி விடுகிறீர்கள்.

**சுலோகன்: சதா எல்லையற்ற விருத்தி (உள்ளுணர்வு), திருஷ்டி மற்றும் ஸ்திதி இருக்குமானால் உலக நன்மையின் காரியம் நிறைவேறி விடும்!**

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 02.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தற்போதைய ஈஸ்வரிய பிறவி மிகவும் மதிப்புள்ள பிறவியாகும்!

இன்று இரத்தினத்தை வழங்கும் தந்தை தன்னுடைய மிகவும் மதிப்புள்ள இரத்தினங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இது மிகவும் மதிப்புள்ள இரத்தினங்களின் ஆன்மீக சபை. ஒவ்வொரு இரத்தினமும் மிகவும் மதிப்புள்ளது. தற்சபோதைய உலகத்தின் முழு சொத்துக்களையும் மற்றும் உலகத்தின் அனைத்து பொக்கிஷங்களையும் ஒன்றாக சேர்த்தாலும் அதனை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு ஈஸ்வரிய இரத்தினமும் பல மடங்கு மதிப்புள்ளது. ஒரு இரத்தினம் உங்களின்ன் உலகத்தின் முழு பொக்கிஷங்களும் ஒன்றுமே இல்லை. நீங்கள் அந்தளவு மதிப்புள்ள இரத்தினங்கள். இந்த மதிப்புள்ள இரத்தினம் இந்த சங்கமயுகத்தைத் தவிர முழுகல்பத்திலும் கிடைக்க முடியாது. சத்யுகத்தில் தேவதையாகுவதற்கான பங்கு இந்த சங்கமயுக தேவதையாவதற் கான பங்கின் எதிரில் இரண்டாம் எண்ணில் வந்து விடுகிறது. நீங்கள் இப்பொழுது ஈஸ்வரனின் குழந்தைகள். சத்யுகத்தில் தேவதைகளின் குழந்தைகளாக இருப்பீர்கள். எப்படி ஈஸ்வரனுக்கு அனைவரையும் விட பெயர் இருக்கிறது, மகிமை இருக்கிறது, பிறவி இருக்கிறது, காரியங்கள் இருக்கிறது, அதே போல் ஈஸ்வரிய இரத்தினங்களின் மற்றும் ஈஸ்வரிய குழந்தைகளின் ஆத்மாவின் மதிப்பும் மிகவும் உயர்ந்தது. இந்த சிரேஷ்ட மகிமை மற்றும் சிரேஷ்ட நினைவின் நினைவுச் சின்னமாக இன்று வரையிலும் நவ இரத்தினங்களின் ரூபத்தில் மகிமை செய்யப்படுகிறது. மேலும் பூப்ஜ செய்யப்படுகிறது. நவ இரத்தினங்களை பல தடைகளை அழிக்கும் இரத்தினங்கள் என்று வர்ணிக்கப்படுகிறது. எப்படிப்பட்ட தடையோ அதே விசேஷம் உள்ள இரத்தினத்தை மோதிரம் செய்து அணிகிறார்கள் மற்றும் லாக்கெட்டில் போட்டுக் கொள்கிறார்கள். ஏதாவது ரூபத்தில் அந்த இரத்தினத்தை வீட்டில் வைத்துக் கொள்வார்கள். இப்பொழுது கடைசி ப்ஜன்மம் வரையிலும் விக்ன விநாசக் (தடைகளை அழிப்பவர்) ரூபத்தில்

தன்னுடைய நினைவுச் சின்னத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். வரிசைக்கிரமமாகவோ அவசியம் இருக்கிறீர்கள். வரிசைக்கிரமமாக இருந்தபோதிலும் நீங்கள் அனைவருமே மிகவும் மதிப்புள்ளவர்கள் மற்றும் தடைகளை அழிப்பவர்கள். இன்று கூட சிரேஷ்ட சொரூபத்தில் உலகில் உள்ள ஆத்மாக்கள் இரத்தினங்கள் உங்களுக்கு, உங்கள் மீது சுய மரியாதை வைக்கிறார்கள். மிகவும் அன்புடன், தூய்மையுடன் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்கிறார்கள். ஏனென்றால் நீங்கள் அனைவரும் எப்படியாக இருந்தாலும் தன்னை இந்தளவு தகுதியானவர்; இல்லை என்று நினைத்தாலும் ஆனால் தந்தையோ ஆத்மாக்கள் நீங்கள் தகுதியானவர்; என்று புரிந்து, தன்னுடைய குழந்தையாக ஆக்கி இருக்கிறார் நீ என்னுடையவன் நான் உன்னுடையவன் என்று ஏற்றுக் கொண்டுவிட்டார்.. எந்த ஆத்மாவின் மீது தந்தையின் பார்வை விழுந்ததோ, அந்த பிரபுவின் பார்வையின் காரணமாக அந்த ஆத்மா மதிப்புள்ளவராக ஆகியே விடுகிறார். பரமாத்மாவின் திருஷ்டியின் காரணமாக ஈஸ்வரிய படைப்பின், ஈஸ்வரிய உலகத்தின் சிரேஷ்ட ஆத்மாவாக ஆகியே விடுகிறார். பாரஸ்நாத்தின் சம்மந்தத்தில் வருகிறார் என்றால், பாரஸ் அதாவது தங்கத்தின் பிரபாவம் ஏற்பட்டுவிடுகிறது. எனவே, பரமாத்மா அன்பின் பார்வை கிடைப்பதினால் முழு கல்பத்திலும் சைதன்ய தேவதைகளின் ரூபத்திலோ, அரை கல்பம் ஐட விக்கரகங்களின் ரூபத்திலோ, மற்றும் பல விதமான நினைவுச் சின்னங்களின் ரூபத்தில் எப்படி இரத்தினங்கள் ரூபத்திலும் உங்களின் நினைவு சின்னம் இருக்கின்றதோ, நட்சத்திரங்களின் ரூபத்திலும் உங்களின் நினைவு சின்னம் இருக்கிறது. எந்த ரூபத்திலும் நினைவு சின்னம் இருந்தாலும் முழு கல்பத்திலும் அனைவரின் பிரியமானவர்களாக இருந்திருக்கிறீர்கள். ஏனென்றால் அழியாத அன்புக் கடலின் அன்பின் பார்வையானது முழு கல்பத்திற்கும் அன்பிற்குரியவராக ஆக்கி விடுகிறது. எனவே, பக்த மனிதர்கள் ஒரு விநாடி, அரை விநாடி பார்வைக்காகவும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய பார்வையால் நான் நன்மை அடைந்து விட வேண்டும். என்ற துடிப்பில் இருக்கின்றார்கள். எனவே இந்த நேரத்தில் அன்பின் பார்வை அழியாத அன்பிற்கு உரியவராக ஆக்கி விடுகிறது. அழியாத பிராப்தி இயல்பாகவே ஏற்பட்டுவிடுகிறது. அன்போடு நினைவு செய்கிறார்கள். அன்போடு தன்னுடன் வைத்துக் கொள்கிறார்கள். அன்போடு பார்க்கிறார்கள்.

இன்னொரு விசயம், சுத்தம் என்றால் தூய்மை. நீங்கள் இந்த நேரம் தந்தையின் மூலமாக தூய்மையின் பிறப்பு உரிமையின் அதிகாரத்தை அடைகிறீர்கள். தூய்மை மற்றும் சுத்தம் தன்னுடைய இயற்கையான குணம் என்று தெரிந்திருக்கிறீர்கள். எனவே, தூய்மையைக் கடை பிடிக்கும் காரணத்தினால் எங்கு உங்கள் நினைவு சின்னம் இருக்குமோ அங்கு தூய்மை மற்றும் சுத்தம் இப்பொழுது கூட நினைவுச் சின்னத்தின் ரூபத்தில் கடைபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அரை கல்பமோ தூய்மையான பாலனை மற்றும் தூய்மையான உலகம் இருக்கவே இருக்கிறது. அரை கல்பம் தூய்மையான ஜன்மம் எடுக்கிறீர்கள், தூய்மையாக வளர்க்கப் படுகிறீர்கள் மற்றும் அரை கல்பம் தூய்மையுடன் பூஜை செய்யப்படுகிறீர்கள்.

மூன்றாவது விசயம் மிகவும் உள்ளப்பூர்வமாக, உயர்ந்த விவேகத்துடன், மிகவும் மதிப்புள்ளது என்று புரிந்து பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறார்கள். ஏனென்றால் இந்த நேரம் சுயம் பகவான் தாய் தந்தையின் ருபத்தில் குழந்தைகள் உங்களை பாதுகாக்கிறார் அதாவது பாலனை செய்கின்றார். எனவே அழியாத பாலனை இருக்கும் காரணத்தினால், அழியாத அன்போடு பாதுகாக்கும் காரணத்தினால் முழு கல்பத்திலும் மிக இராயலாக, அன்புடன், மரியாதையுடன் பாதுகாக்கப்படுகிறீர்கள். அந்த மாதிரி அன்பு, சுத்தம், துôய்மை அன்புடன் பாதுகாக்கப்படுவதற்கான அழியாத பாத்திரம் ஆனவர் ஆகி விடுகிறீர்கள். நீங்கள் எந்தளவு மதிப்புள்ளவர்கள் என்று புரிந்து கொண்டுள்ளீர்களா? ஒவ்வொரு இரத்தினத்திற்கும் எந்தளவு மதிப்பிருக்கிறது. அப்படி இன்று இரத்ததினங்களை வழங்கும் தந்தை ஒவ்வொரு இரத்தினத்தின் மதிப்பை பார்த்துக் கொண்டிருந் தார். முழு உலகத்தின் எண்ணில் அடங்கா ஆத்மாக்கள் ஒரு பக்கம் இருக்கிறார்கள் ஆனால் 5 பாண்டவர்கள் நீங்கள் அந்த எண்ணிலடங்காதவர்களை விட சக்திசாலியானவர்கள்! அந்த எண்ணிலடங்காதவர்கள் உங்கள் எதிரில் ஒருவருக்குக் கூட சமமானவர்களாக இல்லை நீங்கள் அந்தளவு சக்திசாலியானவர்கள்! அப்படி நீங்கள் எந்தளவு மதிப்புள்ளவர்களாக ஆகி விட்டீர்கள். தனக்கு இத்ததனை மதிப்பிருக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்களா? அல்லது தன்னைத்தானே மறந்து விடுகிறீர்களா. எப்பொழுது தன்னைத் தானே மறந்து விடுகிறீர்களோ அப்பொழுது

# 1985 அவ்யக்த முரளி

மிகவும் நொந்து போகிறீர்கள்.தன்னைத் தானே மறக்காதீர்கள். எப்பொழுதும் தன்னை மிகவும் மதிப்புள்ளவர் என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். ஆகவே சின்னஞ்சிறிய தவறு கூட செய்யாதீர்கள். மிகவும் மதிப்புள்ளவர்கள் தான் ஆனால் தந்தையின் துணை இருக்கும் காரணத்தினால் மதிப்புள்ளவர்கள், தந்தையை மறந்து விட்டு தன்னை மட்டும் அப்படி நினைத்தருந்தாலும் தவறாகி விடும். உங்களை அந்த மாô்திரி ஆக்குபவரை மறக்காதீர்கள். ஆகி விட்டீர்கள் ஆனால் ஆக்குபவரின் துணையோடு ஆகியிருக்கிறீர்கள். இது தான் புரிந்து கொள்வதற்கான விதி. ஒருவேளை விதியை மறந்து விடுகிறீர்கள் என்றால் புரிந்து கொண்டது புரியாததாக மாறிவிடுகிறது. பிறகு நான் எனது என்பது வந்து விடுகிறது. விதியை மறப்பதினால் சித்தியை அதாவது வெற்றியை அனுபவம் செய்ய முடிவதில்லை, எனவே விதிப்பூர்வமாக தன்னை மதிப்புள்ளவன் என்று தெரிந்து உலகத்தின் மூதாதையராக ஆகி விடுங்கள். நானோ ஒன்றுமே இல்லை என்று நொந்து போகாதீர்கள். நான் ஒன்றுமே இல்லை என்று நினைக்கக் கூட செய்யாதீர்கள். அதேபோல் நான் தான் எல்லாமே என்றும் நினைக்காதீர்தகள்! இரண்டுமே தவறானவை. நான் அப்படி இருக்கிறேன் என்றால், என்னை அந்த மாதிரி ஆக்கியவர் ஆக்கினார். தந்தையை அகற்றி விடுகிறீர்கள் என்றால், பாவம் ஆகி விடும். தந்தை இருக்கிறார் என்றால் பாவம் இருக்காது. எங்கு தந்தையின் பெயர் இருக்கிறதோ அங்கு பாவத்தின் பெயர் அடையாளம் இருக்காது. எங்கு பாவம் இருக்கிறதோ அங்கு தந்தையின் பெயர் அடையாளம் இருக்காது. அப்படி தன்னுடைய மதிப்பை புரிந்து கொண்டீர்களா?

பகவானின் திருஷ்டிக்கு பாத்திரம் ஆனவர்கள் ஆகியிருக்கிறீர்கள்! பாலனைக்.கு (வளர்ப்பு) பாததிரம் ஆகியிருக்கிறீர்கள்! இது ஒன்றும் சாதாரண விசயம் இல்லை. அழியாத பிறப்புரிமையின் அதிகாரத்தின் அதிகாரி ஆகியிருக்கிறீர்கள், எனவே பிறப்பு உரிமை ஒருபொழுதும் கடினமாக இருக்காது. சகஜமாக பிராப்தியாகும். அதே போலவே யார் அதிகாரி குழந்தைகளாக இருக்கிறார் களோ அவர்களுக்கு தூய்மையைக் கடைப்.பிடிப்பது கடினமாக இராது. கடினம் இருககக்காது என்ற அனுபவம் நிறைந்தவர்கள் நீங்கள்! யாருக்கு தய்மையைக் கடைப்பிடிப்பது கடினமாக இருக்கிறதோ அவர் தன்னுடைய நிலையில் அதிகமாக மேலே கீழே ஆடிக் கொண்டிருப்பார். தூய்மை இயற்கையான

குணம், பிறப்புரிமை என்றால் எப்பொழுதுமே சகஜமாக இருக்கும். வெளி உலகத்தில் இருப்பவர்கள் கூட ஏன் துர்ரமாக ஓடி விடுகிறார்கள்? என்ன காரணத்திற்காக? ஏனென்றால் தூய்மையைப் கடைப்பிடிப்பதை கடினமாக அனுபவம் செய்கிறார்கள், யார் அதிகாரி ஆத்மாக்களாக இல்லையோ அவர்களுக்கு கண்டிப்பாக கடினமாகத்தான் இருக்கும். அதிகாரி ஆத்மாக்கள் வந்த உடனேயே தூய்மை தந்தையின் அதிகாரம், எனவே நான் கண்டிப்பாக துய்மை ஆக வேண்டும் என்ற திட எண்ணத்தை வைப்பார்கள். உள்ளத்தைத தூய்மை கவர்ந்திழுத்துக் கொண்டே இருக்கும். ஒருவேளை இந்த வாழ்க்கையில் நடைமுறையில் இருந்துக் கொண்டே எங்காவது மாயா சோதனை செய்வதற்காக எண்ணங்களின் மூலம், கனவின் ரூபத்தில் வருகிறது என்றாலும் கூட அதிகாரி ஆத்மா ஞானம் நிறைந்தவராக இருக்கும் காரணத்தினால் பயப்பட மாட்டார்கள் ஆனால் ஞானத்தின் சக்தி மூலம் எண்ணத்தை பரிவர்த்தனை செய்து விடுவார்கள். ஒரு எண்ணத்தின் பின்னால் அநேக எண்ணத்தை உருவாக்க மாட்டார்கள். அம்சத்தை வம்சத்தின் ரூபத்தில் கொண்டு வரமாட்டார்கள். என்ன ஆனது, இது ஆனது இது தான் வம்சம். ஏன் என்பதிலிருந்து வரிசையை (க்யூ) உருவாகி விடுகிறது. ஏற்கனவே கூறி இருந்தோம் இல்லையா அது வம்சத்தை உருவாக்கி விடுகிறது. வந்தது மேலும் சதா காலத்திற்காக சென்று விட்டது. சோதிப்பதற்காக வந்தது, நீங்கள் தேர்ச்சி அடைந்து விட்டீர்கள், விசயம் முடிவடைந்தது.

மாயா ஏன் வந்தது? எங்கிருந்து வந்தது? அங்கிருந்து வந்தது! வரக் கூடாது ஏன் வந்து விட்டது? என்ற இந்த வம்சம் இருக்கக் கூடாது. நல்லது வந்து விட்டால் கூட அதனை உட்கார வைக்காதீர்கள் விரட்டிவிடுங்கள். ஏன் வந்தது என்று அப்படி யோசித்தீர்கள் என்றால் அது வந்து அமர்ந்து விடும். உங்களை முன்னேற்றம் அடையச் செய்வதற்காக, சோதனை செய்வதற்காக வந்தது. வகுப்பில் அடுத்த வகுப்பிற்கு செல்வதற்கான அனுபவி ஆக்குவதற்காக வந்தது. ஏன் வந்தது அந்த மாதிரி வந்தது இந்த மாதிரி வந்தது என்று இப்படி யோசிக்காதீ்கள். பிறகு மாயா அந்த மாதிரியான ரூபம் உடையதாக இருக்குமா என்று யோசிக்கிறார்கள். சிகப்பாக இருக்குமா, பச்சையாக இருக்குமா, மஞ்சளாக இருக்குமா என்ற விஸ்தாரத்தில் சென்று விடுகிறார்கள். ஏன் பயப்படுகிறீர்கள். கடந்து சென்று விடுங்கள். மதிப்புடன் தோர்ச்சி அடைந்தவர் ஆகி விடுங்கள். ஞானத்தின் சக்தி தான் ஆயுதம்! நீங்கள் மாஸ்டர் சர்வசக்திவான்,

# 1985 அவ்யக்த முரளி

திரிகால தரிசி, திரி நேத்திரி உங்களுக்கு என்ன குறை இருக்கிறது. உடனே பயப்படாதீர்கள் எறும்பு வந்தால் கூட பயந்து விடுகிறீர்கள். அதிகமாக யோசிக்கிறீர்கள் யோசிப்பது என்றால் மாயாவை விருந்து உபச்சாரம் செய்வது பிறகு அது உங்களிடமே அமர்ந்து விடும். எப்படி வழியில் சென்று கொண்டிருக்கும் போது ஏதாவது அசுத்தமான பொருள் தென்படுகிறது என்றால், என்ன செய்வீர்கள் அங்கு நின்று கொண்டு இது யார் வீசியது ஏன் ஆனது இப்படி ஆகக் கூடாது என்று யோசிப்பீர்களா? அல்லது ஒதுங்கி ஓரமாக சென்று விடுவீர்களா.? அதிகமாக வீணான எண்ணங்களின் வம்சத்தை உருவாக விடாதீர்கள். அம்சத்தின் ரூபத்திலேயே அதை அழித்து விடுங்கள். முதலில் ஒரு வினாடிக்கான விசயமாக இருக்கும், பிறகு அதை பல மணி நேரங்களில், நாட்களாக, மாதங்களாக அதிகரித்து விடுகிறீர்கள். மேலும் ஒருவேளை ஒரு மாதத்திற்குப் பிறகு என்ன ஆனது என்று கேட்டால், அந்த விசயமோ ஒரு வினாடிக்கானதாக இருக்கும். எனவே பயப்படாதீர்கள். ஆழத்தில் செல்லுங்கள், ஞானத்தின் ஆழத்தில் செல்லுங்கள் விசயத்தின் ஆழத்தில் செல்லாதீர்கள். இந்தளவு உயர்ந்த மதிப்புள்ள இரத்தினங்களை சின்ன சின்ன மணித்துளிகளோடு விளையாடுவதை பாப்தாதா பார்க்கிறார் என்றால், இவர்கள் இரத்தினங்கள் இரத்தினங்களோடு விளையாடுபவர்கள் மண்ணின் தூசிகளோடு விளையாடுகிறார்கள் என்று யோசிப்பார். நீங்கள் இரத்தினங்கள் இரத்தினங்களோடு விளையாடுங்கள்.

பாப்தாதா உங்களை எந்தளவு செல்லமாக அன்புடன் வளர்த்திருக்கிறார். பிறகு நீங்கள் மண்ணின் துகள்களை எப்படிப் பார்க்க முடியும்? பிறகு அழுக்காக்கி விட்டு இப்பொழுது சுத்தப்படுத்துங்கள் சுத்தப்படுத்துங்கள் என்று கூறுகிறீர்கள், பயந்தும் விடுகிறீர்கள் இப்பொழுது நான் என்ன செய்வேன் எப்படி செய்வேன் என்று பயப்படுகிறீர்கள். மண்ணோடு ஏன் விளையாடுகிறீர்கள். அதுவும் மண்ணின் தூசிகள் தரையில் கிடப்பவை. எனவே, எப்பொழுதும் தன்னுடைய மதிப்பை தெரிந்து கொள்ளுங்கள்.

அந்த மாதிரி முழு கல்பத்தின் மதிப்புள்ள ஆத்மாக்களுக்கு, பிரபுவின் அன்புக்கு பாத்திரமான ஆத்மாவிற்கு, பிரபுவின் பாலனைக்கு பாத்திரமான ஆத்மாக்களுக்கு, தூய்மையின் பிறப்புரிமை அதிகாரத்தின் அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தை மற்றும் நான் என்ற இந்த

விதியோடு வெற்றியை அடையக் கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் விலைமதிக்கமுடியாத இரத்தினமாகி இரத்தினங்களோடு விளையாடக் கூடிய ராயல் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** 1. எப்பொழுதும் தன்னை தந்தையின் கண்களில் நிரம்பியிருக்கும் ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? கண்களில் யார் நிரம்புவார்கள்? யார் மிகவும் லேசாக புள்ளியாக இருக்கிறார்களோ அவர்கள் தான். அந்த மாதிரி நீங்கள் எப்பொழுதுமே புள்ளியாகி தந்தையின் கண்களில் நிரம்புபவர்கள். அப்படி நீங்கள் பிந்துவாகி தந்தையின் கண்களில் நிரம்புபவர்கள். பாப்தாதா உங்களுடைய கண்களில் நிரம்பியிருக்கிறார். மேலும் நீங்கள் அனைவரும் பாப்தாதாவின் கண்களில் நிரம்பியிருக்கிறீர்கள். எப்பொழுது கண்களில் பாப்தாதாதான் இருக்கிறார் என்றால், வேறு எதுவுமே தென்படாது. எனவே, எப்போதும் இந்த நினைவின் மூலம் நானும் பிந்துவாகத்தான் இருக்கிறேன் என்று டபுள் லைட்டாக இருங்கள். பிந்துவில் எந்த சுமையும் இருக்காது. இந்த நினைவு சொரூபம் எப்போதுமே முன்னேற வைத்துக் கொண்டே இருக்கும். கண்களின் நடுவில் பார்த்தீர்கள் என்றால், பிந்துதான் தென்படும். பிந்து தான் பார்க்கிறது. பிந்து இல்லையென்றால் கண்கள் இருந்தபொழுதிலும் பார்க்க முடியாது. எனவே எப்பொழுதும் இதே சொரூபத்தில் இருங்கள். பறக்கும் கலையை அனுபவம் செய்யுங்கள். பாப்தாதா குழந்தைகளின் தற்சமயம் எதிரிகாலத்தின் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். தற்சமயம் எதிர்காலத்தின் அதிர்ஷ்டத்தை உருவாக்குவதற்கான எழுதுகோல் தற்சமயத்தை சிரேஷ்டமாக ஆக்குவதற்கான சாதனம் பெரியவர்களின் சமிக்ஞைகளை எப்பொழுதும் ஏற்றுக் கொண்டு தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். இதே விசேஷ குணம் மூலம் தற்சமயம் மற்றும் எதிர்காலத்தின் அதிர்ஷ்டம் சிரேஷ்டமாக ஆகி விடும்.

2. அனைவரின் நெற்றியில் பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறது தான் இல்லையா? எப்பொழுதுமே மின்னிக் கொண்டிருக்கிறதா? சில நேரம் அணைந்து அணைந்து மின்னவில்லையே? அகண்ட ஜோதி தந்தையுடன் சேர்ந்து நீங்களும் அகண்ட ஜோதி எப்போதுமே பிரகாசித்துக் கொண்டிருக்கும்

நட்சத்திரங்கள் ஆகி விட்டீர்கள். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? எப்போதாவது காற்று தீபத்தை மற்றும் நட்சத்திரத்தை அசைப்பதோ இல்லையே? எங்கு தந்தையின் நினைவு இருக்கிறதோ அங்கு அழியாது பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரமாக இருக்கும். அணைந்து அணைந்து மின்னுவது இருக்காது. மின் விளக்கு கூட அணைந்து அணைந்து எரிகிறது என்றால் அது யாருக்குமே பிடிக்காது எனவே அதனை அணைத்து விடுவார்கள். எப்பொழுதும் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம். எப்பொழுதும் ஞான சூரியன் தந்தையிடமிருந்து ஒளியைப் பெற்று மற்றவர்களுக்கும் நீங்கள் ஒளியைக் கொடுப்பவர்கள். உங்களிடம் சேவைக்கான ஊக்கம் உற்சாகம் எப்போதுமே இருக்க்கிறது. நீங்கள் அனைவருமே சிரேஷ்ட ஆத்மாக்கள். சிரேஷ்ட தந்தையின் சிரேஷ்ட ஆத்மாக்கள்.

நினைவின் சக்தி மூலம் வெற்றி சுலபமாக பிராப்தி ஆகிறது. எந்தளவு நினைவு மற்றும் சேவை சேர்ந்தே இருக்கிறது என்றால், நினைவு மற்றும் சேவைக்கான சமநிலை சதா காலத்திற்கான வெற்றியின் ஆசீர்வாதத்தை இயல்பாகவே பிராப்தி செய்விக்கிறது. எனவே, எப்பொழுதும் சக்திசா-யான நினைவு சொரூபத்தின் சூழ்நிலை உருவாவதினால் சக்திசா-யான ஆத்மாக்களின் ஆவாகணம் ஆகிறது. மேலும் வெற்றி கிடைக்கிறது. குடும்ப காரியங்கள் நிமித்தமாக செய்ய வேண்டியவையே! ஆனால் ஈடுபாடு மற்றும் ஆர்வம் தந்தை மற்றும் சேவையிலே இருக்கிறது. குடும்பம் கூட சேவைக்காகத்தான் இருக்கிறது. நீங்கள் உங்களுடைய பற்றுத-ன் காரணமாக செய்வ தில்லை, டைரக்ஷன் பிரமாணம் செய்கிறீர்கள் எனவே, தந்தையின் அன்புக்கரங்கள் அந்த மாதிரியான குழந்தைகள் கூடவே இருக்கிறது. எப்பொழுதும் குஷியில் ஆடுங்கள் பாடுங்கள், இதுதான் சேவைக்கான சாதனம். உங்களுடைய குஷியப் பார்த்து மற்றவர்களும் குஷியை அடைந்து விட்டார்கள் என்றால், இதுவும் சேவையாகி விடும். நீங்கள் எந்தளவு பெரும் வள்ளல் ஆக ஆவீர்களோ அந்தளவு உங்களிடம் பொக்கிஷங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கும் என்று பாப்தாதா குழந்தைகளுக்கு எப்பொழுதுமே கூறுகிறார். பெரும் வள்ளல் ஆக ஆகுங்கள் மேலும் பொக்கிஷங்களை அதிகப்படுத்துங்கள். பெரிய வள்ளல் ஆகி, அளவற்று தானம் செய்யுங்கள். இந்த கொடுப்பது தான் பெறுவது. நல்ல பொருள் ஒன்று

கிடைக்கிறது என்றால் அதை மற்றவர்களுக்குக் கொடுக்காமல் இருக்க முடியாது.

எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சியோடு இருங்கள். எவ்வளவு பெரிய பாக்கியம் கிடைத்திருக்கிறது. வீட்டில் அமர்ந்துக் கொண்டே பகவான் கிடைத்து விடுவது என்பதை விட பெரிய பாக்கியம் வேறு என்ன தான் இருக்க முடியும். இந்த பாக்கியத்தை நினைவில் வைத்து மகிழ்ச்சியோடு இருங்கள். பிறகு துக்கம் மற்றும் அமைதியின்மை நிரந்தரமாக முடிவடைந்து விடும். எப்போதும் சுகம் சொருபம், அமைதி சொருபம் ஆகி விடுவீர்கள். யாருடைய பாக்கியத்தை சுயம் பகவானே உருவாக்குகிறார் என்றால், அது எவ்வளவு சிரேஷ்டமாக ஆனது. எனவே தன்னுள் புதிய ஊக்கம் புதிய உற்சாகம் அனுபவம் செய்துக் கொண்டே முன்னேறிச் சென்றுக் கொண்டே இருங்கள். ஏனென்றால் சங்கம யுகத்தில் ஒவ்வொரு நாளுக்கும் புதிய ஊக்கம் புதிய உற்சாகம் இருக்கிறது.

ஏதோ போய்க் கொண்டிருக்கிறோம் என்று அப்படி இருக்க வேண்டாம். எப்பொழுதும் புதிய ஊக்கம் புதிய உற்சாகம் எப்பொழுதும் முன்னேற வைத்துக் கொண்டே இருக்கும். ஒவ்வொரு நாளுமே புதியது. எப்பொழுதும் தன்னில் சேவையில் ஏதாவது ஒரு புதுமை அவசியம் வேண்டும். எந்தளவு தன்னை ஊக்கம் உற்சாகத்தில் வைப்பீர்களோ அந்தளவு புதுப்புது உணர்த்துதல் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். நீங்களே வேறு ஏதாவது விசயத்தில் பிசியாக இருந்தீர்கள் என்றால், புதிய உணர்த்துதல் ஏற்படாது. சிந்தனை செய்தீர்கள் என்றால் புதிய ஊக்கம் இருக்கும்.

**பந்தனத்தில் இருக்கும் பெண்களுக்கு:** அன்பு நினைவு கொடுத்துக் கொண்டே பந்தனத்தில் இருக்கும் மாதர்களின் நினைவு எப்பொழுதும் தந்தையிடம் வந்து சேர்கிறது. மேலும் பாப்தாதாவும் அனைத்து பந்தனத்தி-ருக்கும் மாதர்களுக்கு யோகா அதாவது நினைவின் ஈடுபாட்டை அக்னி ரூபமாக ஆக்குங்கள் என்று இதைத் தான் கூறுகிறார். எப்போது ஈடுபாடு அக்னி ரூபம் ஆகி விடு கிறது என்றால், அக்னியில் அனைத்தும் பஸ்மம் ஆகி விடும். அப்படி இந்த பந்தனமும் ஈடுபாட்டின் அக்னியில் அகன்று விடும். மேலும் சுதந்திர ஆத்மாவாகி எந்த

எண்ணத்தை வைப்பீர்களோ அதன் வெற்றிக் கிடைத்து விடும். அன்பானவர்களாக இருக்கிறீர்கள். அன்பின் நினைவு வந்து சேர்கிறது. உங்களுடைய அன்பிற்குப் பதிலாக அன்பும் கிடைக்கிறது ஆனால் இப்பொழுது நினைவை சக்திசா-யான அக்னி ரூபமாக ஆக்குங்கள். பிறகு நேர் எதிரில் வந்து சேரும் அந்த நாளும் வந்து விடும்.

**வரதானம்: எப்பொழுதும் ஆன்மீக ஸ்திதியில் இருந்து மற்றவர்களையும் ஆத்மாவாகப் பார்க்கக் கூடிய ஆன்மீக ரோஜா மலர் ஆகுக !**

ஆன்மீக ரோஜா மலர் என்றால் யாரிடம் எப்பொழுதும் ஆன்மீக நறுமணம் இருக்கிறதோ அவர் தான். ஆன்மீக நறுமணம் உள்ளவர் எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் அவர் ஆத்மாவைப் பார்ப்பார். உடலைப் பார்க்க மாட்டார். எனவே, நீங்களும் எப்பொழுதும் ஆன்மீக ஸ்திதியிலிருங்கள். மேலும் மற்றவர்களையும் ஆத்மாவாகப் பாருங்கள். எப்படி தந்தை உயர்ந்ததிலும் உயர்ந்தவராக இருக்கிறார், அதே போல் அவருடைய பூந்தோட்டமும் உயர்ந்ததிலும் உயர்ந்தது. நீங்கள் அந்த பூந்தோட்டத்தின் விசேஷ அலங்காரமான ஆன்மீக ரோஜா குழந்தைகள். உங்களுடைய ஆன்மீக நறுமணம் அநேக ஆத்மாக்களுக்கு நன்மை செய்வது.

**சுலோகன்: மரியாதை (ஈஸ்வர்ய) மீறி யாருக்காவது சுகம் கொடுத்தீர்கள் என்றாலும் அதுவும் துக்கத்தின் கணக்கில் சேமிப்பாகி விடும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 06.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகம் உற்சவத்திற்கான யுகம், பிராமண வாழ்க்கை உற்சாகத்தின் வாழ்க்கை!

இன்று மிகத் தூய்மையான மிக உயர்ந்த தந்தை தன்னுடைய ஹோலி அதாவது துய்மையான மற்றும் மகிழ்ச்சி நிறைந்த அன்னப் பறவைகளுடன் ஹோலியைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறார். திரி மூர்த்தி தந்தை மூன்று விதமான ஹோலியின் தெய்வீக இரகசியத்தைக் கூறுவதற்காக வந்திருக்கிறார். சங்கமயுகமே ஹோலி யுகம் தான். சங்கம யுகம் உற்சவத்தின் யுகம். சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுடைய ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேரமும் உற்சாகம் நிரம்பிய உற்சவம். அஞ்ஞான ஆத்மாக்கள் தன்னை உற்சாகத்தில் கொண்டு வருவதற்காக உற்சவங்களைக் கொண்டாடுகிறார்கள் ஆனால் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களைப் பொறுத்தவரையில் இந்த பிராமண வாழ்க்கை உற்சாகத்தின் வாழ்க்கை. ஊக்கம் குஷியால் நிரம்பிய வாழ்க்கை, எனவே, சங்கம யுகமே உற்சவத்தின் யுகம். ஈஸ்வரிய வாழ்க்கை எப்பொழுதும் ஊக்கம் உற்சாகம் நிறைந்த வாழ்க்கை. எப்பொழுதுமே குஷியில் ஆடிக் கொண்டு ஞானத்தின் சக்திசாலியான அமிர்தத்தை குடித்துக் கொண்டு, சுகம் நிறைந்த பாடலைப் பாடிக் கொண்டு, உள்ளத்தின் அன்பின் பாடலைப் பாடிக் கொண்டு உங்களுடைய இந்த சிரேஷ்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். அஞ்ஞான ஆத்மாக்கள் ஒரு நாள் கொண்டாடுவார்கள். அற்ப காலத்தின் உற்சாகத்தில் வருகிறார்கள். பிறகு எப்படி இருந்தார்களோ மீண்டும் அப்படியே ஆகி விடுகிறார்கள். நீங்கள் உற்சவத்தைக் கொண்டாடிக் கொண்டே ஹோலி ஆகிறீர்கள் மற்றவர்களையும் ஹோலி ஆக்குகிறீர்கள். அவர்கள் கொண்டாட மட்டும் செய்வார்கள், ஆனால் நீங்கள் கொண்டாடி விட்டு அந்த மாதிரி ஆகி விடுகிறீர்கள். மனிதர்கள் மூன்று விதமான ஹோலியைக் கொண்டாடுவார்கள். 1. எரிப்பதற்கான

# 1985 அவ்யக்த முரளி

ஹோலி இன்னொன்று வண்ணம் பூசுவதற்கான ஹோலி மூன்றாவது மங்களமான சந்திப்பை செய்வதற்கான ஹோலி! இந்த மூன்று விதமான ஹோலியில் ஆன்மீக இரகசியம் இருக்கிறது ஆனால் அவர்கள் ஸ்தூல ரூபத்தில் கொண்டாடிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த சங்கம யுகத்தில் மகான் ஆத்மாக்கள் நீங்கள் எப்பொழுது தந்தையின் குழந்தையாக ஆகிறீர்களோ அதாவது ஹோலி அதாவது தூய்மையாக ஆகிறீர்கள் என்றால், முதலில் என்ன செய்கிறீர்கள்? முதலில் அனைத்து பழைய சுபாவம் சம்ஸ்காரத்தில் யோக அக்னியில் பஸ்பம் செய்கிறீர்கள் அதாவது எரிக்கிறீர்கள். அதன் பிறகு தான் நினைவு மூலமாக தந்தையின் தொடர்பின் வர்ணம் பூசப்படுகிறது. நீங்களும் முகலில் எரிக்கும் ஹோலியைக் கொண்டாடுகிறீர்கள். பிறகு பிரபுவின் தொடர்பில் வண்ணத்தில் வண்ணமயமாக்கப்பட்டு விடுகிறீர்கள். அதாவது தந்தைக்குச் சமமாக ஆகி விடுகிறீர்கள். தந்தை ஞானக்கடல் என்றால், குழந்தைகளும் தொடர்பின் பிரபாவத்தில் ஞான சொரூபம் ஆகி விடுகிறீர்கள். எது தந்தையின் குணமோ அது உங்களுடைய குணமாக ஆகி விடுகிறது, எது தந்தையின் சக்திகளோ அவை உங்களுடைய பொக்கிஷா மாக ஆகி விடுகிறது. உங்களுடைய சொத்தாக ஆகி விடுகிறது. அந்த மாதிரி தொடர்பின் வண்ணம் அழியாததாக பூசப்பட்டுள்ளது. அதன் காரணமாக பல ஜென்மங்களுக்காக அந்த வண்ணம் அழியாததாக ஆகி விடுகிறது. மேலும் எப்பொழுது தொடர்பின் வண்ணம் பூசப்பட்டு விடுகிறது என்றால், இந்த ஆன்மீக வர்ணத்தின் ஹோலியைக் கொண்டாடி விடுகிறீர்கள். பிறகு ஆத்மா மற்றும் பரமாத்மாவின், தந்தை மற்றும் குழந்தைகளின் சிரேஷ்ட சந்திப்பின் மேளா எப்பொழுதுமே நடந்து கொண்டே இருக்கிறது.

அஞ்ஞான ஆத்மாக்கள் உங்களுடைய இந்த ஆன்மீக ஹோலியை நினைவு ரூபத்தில் கொண்டாடத் தொடங்கி விட்டார்கள். உங்களுடைய நடைமுறை உற்சாகம் நிரம்பிய வாழ்க்கையின் பல விதமான ரூபத்தில் நினைவுச்சின்னமாக கொண்டாடி அற்ப காலத்திற்காக குஷி அடைந்து விடுகிறார்கள். ஒவ்வொரு அடியிலும் உங்களுடைய சிரேஷ்ட வாழ்க்கையில் என்னென்ன விசேஷங்கள் பிராப்தியானதோ அவற்றை நினைவு செய்து சிறிது நேரத்திற்காக அவர்களோ மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த நினைவுச்சின்னத்தைப் பார்த்து மற்றும் கேட்டு இது நம்முடைய விசேஷங்களின்

நினைவுச்சின்னம் என்று மகிழ்ச்சி அடைகிறீர்கள் தான் இல்லையா! நீங்கள் மாயாவை எரித்தீர்கள் மேலும் அவர்கள் ஹோலிகாவை உருவாக்கி எரித்து விடுகிறார்கள். அந்தளவு ரமணிகரமான கதைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அதை கேட்டு உங்களுக்கும் நம்முடைய விசயத்தை எப்படி ஆக்கி விட்டார்கள் என்று சிரிப்பு வரும். ஹோலியின் உற்சவத்தை உங்களுடைய பல விதமான பிராப்தியின் நினைவின் ரூபத்தில் கொண்டாடுகிறார்கள். இப்பொழுது நீங்கள் எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்கள். குஷியின் பிராப்தியின் நினைவுச்சின்னமாக மிகவும் குஷியை அடைந்து ஹோலியைக் கொண்டாடுகிறார்கள். அந்த நேரம் அனைத்து துக்கத்தையும் மறந்து விடுவார்கள். மேலும் சதா காலத்திற்காக துக்கத்தை மறந்து விட்டீர்கள். உங்களுடைய குஷியின் பிராப்தியைக் கொண்டாடுகிறார்கள்.

இன்னொரு விசயம் கொண்டாடும் நேரத்தில் சிறியவர்கள் பெரியவர்கள் மிகவும் லேசானவர்கள் ஆகி, லேசான ரூபத்தில் கொண்டாடுவார்கள். அன்றைய நாளில் அனைவரின் மன நிலை அதாவது மூடும் லேசாக இருக்கும். அப்படி இது நீங்கள் டபுள் லைட் ஆவதற்கான நினைவு ஆகும். எப்பொழுது நீங்கள் பிரபுவின் தொடர்பு என்ற வண்ணத்தில் வண்ணமாக்கப்பட்டு விடுகிறீர்கள் என்றால் டபுள் லைட் ஆகி விடுகிறீர்கள் தான் இல்லையா?

அப்படி இது உங்களடைய விசேஷத்தின் நினைவுச்சின்னம் ஆகும். இன்னொரு விசயம் இந்த நாளில் சிறியவர்கள் பெரியவர்கள் எந்த சம்மந்தத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் சமமான சுபாவத்தில் இருப்பார்கள். சின்னஞ்சிறிய பேரனாக இருந்தாலும் கூட அவரும் தாத்தாவிற்கு வண்ணம் பூசுவார். அனைத்து சம்மந்தங்களின் ஆயுள் உணர்வு மறந்து விடுகிறது. சமமான பாவனையில் வந்து விடுவார்கள். இதுவும் உங்களுடைய விசேஷமான சமமான பாவனை அதாவது சகோதரன் சகோதரன் என்ற நிலை, மேலும் எந்த ஒரு தேகத்தின் சம்மந்தத்தின் பார்வை இல்லை, இது சகோதரன் சகோதரன் என்ற சமமான நிலைக்காக நினைவு சின்னம் ஆகும். இன்னொரு விசயம் இந்த நாளில் பலவிதமான வண்ணங்களினால் பீச்சாங்குழலை நிரப்பி ஒருவர் இன்னொருவம் மேல் வர்ணம் தெளிப்பார்கள். இதுவும் இந்த நேரத்தின் சேவையின் நினைவு சின்னம் ஆகும். எந்த ஒரு ஆத்மாவுக்கும் திருஷ்டி

அன்பு சொரூபம் ஆவதற்கான வண்ணத்தை, வண்ணத்தை சுகத்தின், அமைதியின், சக்திகளின் அப்படி எத்தனை வண்ணங்களை வீசுகிறீர்கள். வண்ணம் நிரந்தர மாகவே இருக்கும் அளவிற்கு வண்ணத்தை பூசிவிடுகிறீர்கள், அழிக்க வேண்டியதாக இருக்காது, அதற்காக முயற்சி செய்ய வேண்டியதாக இருக்காது. மேலும் ஒவ்வொரு ஆத்மாவும் நான் எப்பொழுதுமே இந்த வர்ணங்களிலேயே வர்ணம் பூசப்பட்டு இருக்க வேண்டும் என்று தான் விரும்புகிறார்கள். எனவே, உங்கள் அனைவரிடமும் ஆன்மீக வண்ணங்களின் ஆன்மீக திருஷ்டியின் பீச்சாங்குழல் இருக்கிறது தான் இல்லையா? ஹோலி விளையாடுவீர்கள் தான் இல்லையா? இந்த ஆன்மீக ஹோலி உங்கள் அனைவரின் வாழ்க்கையின் நினைவுச்சின்னம் ஆகும். பாப்தாதாவுடன் அந்த மாதிரியான பங்களகரமான சந்திப்பை செய்தீட்கள். அந்த சந்திப்பை செய்துக் கொண்டே தந்தைக்குச் சமமாக ஆகி விட்டீர்கள். அந்த மாதிரியான மங்களகரமான சந்திப்பு செய்தீர்கள். அதன் காரணமாக இணைந்தவர்கள் ஆகி விட்டீர்கள். யாரும் உங்களைப் பிரிக்க முடியாது.

இன்னொரு விசயம் இந்த நாள் அனைத்து கடந்த கால விசயங்களை மறுப்பதற்கான நாள். 63-ஜென்மங்களின் கடந்த காலத்து விசயங்களை மறந்து விடுகிறீர்கள் இல்லையா? கடந்தவைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுகிறீர்கள். எனவே, ஹோலி என்பதற்கு கடந்தது கடந்ததாக ஆனது என்ற அர்த்தத்தையும் கூறுகிறார்கள். எப்படிப்பட்ட கடுமையான பகைமையையும் மறந்து சந்திப்பை செய்வதற்கான பண்டிகையாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. நீங்களும் ஆத்மாலின் எதிரியாகிய அசுர சம்ஸ்காரம், அசுர சுபாவத்தை மறந்து பிரபுவை சந்திப்பதில் செய்வீர்கள் இல்லையா? எண்ண அளவில் கூட பழைய சம்ஸ்காரம் நினைவில் வர வேண்டாம். அப்படி இதையும் நீங்கள் மறப்பதின் விசேஷத்தின் நினைவுச்சின்னமாக கொண்டாடுகிறார்கள். அப்படி உங்களுடைய விசேஷங்கள் எத்தனை இருக்கின்றன என்று கேட்டீர்களா? உங்களுடைய ஒவ்வொரு குணத்தின் ஒவ்வொரு விசேஷத்தின் கர்மத்தின் வேறு வேறு நினைவுச்சின்னங்களாக ஆக்கி விட்டார்கள். யாருடைய ஒவ்வொரு காரியத்தின் நினைவு சின்னத்தை நினைவு செய்து மற்றவர்கள் குஷியில் வந்து விடுகிறார்களோ சுயம் அவர் எவ்வளவு மகானாக இருப்பார்?

புரிந்ததா! நான் யார் என்று நீங்களே தெரிந்து கொண்டீர்களா? ஹோலியாக இருக்கிறீர்கள் தான், இருந்தாலும் எத்தனை விசேஷங்கள் இருக்கின்றன?

இரட்டை வெளிநாட்டினர் தன்னுடைய இந்த சிரேஷ் தன்மையின் நினைவுச்சின்னத்தைத் தெரியாமல் இருந்த போதிலும், உங்களுடைய நினைவின் மகத்துவத்தை உலகத்தினர் நினைவு செய்து நினைவுச்சின்னத்தை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஹோலி என்றால் என்ன என்று புரிந்ததா? நீங்கள் அனைவருமோ வண்ணங்களினால் வண்ணமயமாக்கப்பட்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி அன்பின் வண்ணத்தில் வண்ணமயமாக்கப்பட்டிருக்கிறீர்கள் அதன் காரணமாக தந்தையைத் தவிர வேறு எதுவுமே தென்படுவதில்லை. அன்பிலேயே சாப்பிட்டுக் கொண்டும், சென்றுக் கொண்டும் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் இருக்கிறீர்கள். உறுதியாக வண்ணம் பூசப்பட்டு விட்டதுதான் இல்லையா? அல்லது உறுதியற்ற நிலையா? எந்த வண்ணம் பூசப்பட்டு உள்ளது உறுதியானதா? அல்லது அழியக் கூடியதா? கடந்ததை கடந்ததாக ஆக்கி விட்டீர்களா? தவறாகக் கூட பழைய விசயம் நினைவில் வர வேண்டாம். வந்து விட்டது என்ன செய்வது என்று கூறுகிறீரர்கள் தான் இல்லையா? இது தவறுதலாக வந்து விட்டது. புதிய ஜென்மம், புதிய விசயங்கள், புதிய சம்ஸ்காரம், புதிய உலகம், இந்த பிராமணர்களின் உலகம் தான் புதிய உலகம். பிராமணர்களின் மொழியும் புதியது. ஆத்மாவின் மொழியும் புதியதுதான் இல்லையா? அவர்கள் என்ன கூறுகிறார்கள் மேலும் நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? பரமாத்மாவைப் பற்றியும் அனைத்துமே புதிய விசயங்கள். அப்படி மொழியும் புதியது, பழக்கம் நெறிமுறைகளும் புதியது, சம்மந்தம் தொடர்பும் புதியது, அனைத்தும் புதியதாக ஆகி விட்டது. பழையது முடிவடைந்து விட்டது. புதியது தொடங்கி விட்டது, புதிய பாடல் பாடுகிறீர்கள் ஏன் என்ற பழைய பாடலைப் பாடுவதில்லை. ஆஹா ! சபாஷ் ஆஹா ! என்பது புதிய பாடல். அப்படி நீங்கள் எந்த பாடல் பாடுகிறீர்கள்? ஐயோ ஐயோ என்ற பாடலை பாடுவதில்லை தான் இல்லையா? உலகத்தில் ஐயோ! ஐயோ! என்று கூறுபவர்கள் அதிகம் இருக்கிறார்கள், அது நீங்கள் இல்லை. அப்படி அழியாக ஹோலியைக் கொண்டாடி விட்டீர்கள் என்றால், கடந்ததை கடந்ததாக ஆக்கி சம்பூர்ண தூய்மை ஆகி விட்டீர்கள். தந்தையின் தொடர்பின் வண்ணத்தில்

வண்ணமயமாக்கி விட்டீர்கள். அப்படி ஹோலி கொண்டாடி விட்டீர்கள் இல்லையா?

எப்பொழுதும் தந்தை மற்றும் நான் சேர்ந்தே இருக்கிறோம். மேலும் முழு சங்கமயுகத்திலும் எப்பொழுதும் சேர்ந்தே இருப்போம். பிரியவே முடியாது. அந்த மாதிரியான ஊக்கம் உற்சாகம் நான் மற்றும் என்னுடைய பாபா என்பது உள்ளத்தில் இருக்கிறது தான் இல்லையா? அல்லது திரைக்குப் பின்னால் மூன்றாவது யாராவது இருக்கிறாரா? எப்பொழுதாவது எலி எப்பொழுதாவது பூனை வெளிப்பட்டு வருகிறதா? அந்த மாதிரி இல்லையே?. அனைத்தும் முடிவடைந்து விட்டது தான் இல்லையா? எப்போது தந்தை கிடைத்து விட்டார் என்றால், அனைத்தும் கிடைத்து விட்டது. மேலும் இன்னும் கிடைப்பதற்கு ஒன்றுமே இல்லை, உறவினய்களும் இல்லை, பொக்கிஷங்களும் இல்லை சக்திகளும் இல்லை, குணங்களும் இல்லை, ஞானமும் இல்லை வேறு அடைய வேண்டும் என்ற பிராப்தியும் இல்லை. எனவே இன்னும் வேறு என்ன வேண்டும். இதைத் தான் ஹோலி கொண்டாடுவது என்று கூறுவது. புரிந்ததா?

நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியில் இருக்கிறீர்கள். கவலையற்ற இராஜாக்கள். ஒரு பைசா இல்லாத இராஜாக்கள் துக்கம் இல்லாத உலகத்தின் இராஜாக்கள். அந்த மாதிரி மகிழ்ச்சியில் வேறு யாரும் இருக்க முடியாது. இந்த உலகத்தில் மிகப் பெரிய செல்வந்தனாக இருந்தாலும் மற்றும் உலகத்தில் மிகவும் பெயர் பெற்ற நடராக இருந்தாலும், மிகுந்த சாஸ்திரம் தெரிந்த சாஸ்திரவாதியாக இருந்தாலும், வேத பாடங்களைப் படித்தவராக இருந்தாலும். நௌதா (தீவிர) பக்தனாக இருந்தாலும், நம்பர் ஒன் அறிவியல் விஞ்ஞானியாக இருந்தாலும், எந்த பதவியில் இருப்பவராக இருந்தாலும், அந்த மாதிரியான மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை இந்த வாழ்க்கையில் கடின உழைப்பு இல்லை. அன்பே அன்பு தான் இருக்கிறது என்ற வாழ்க்கை இருக்க முடியாது. கவலையில்லை ஆனால் நற்சிந்தனை யாளர்களாக, நற்சிந்தனை உள்ளவர்களாக இருக்கிறீர்கள் அந்த மாதிரி மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை முழு உலகத்தையும் சுற்றி வாருங்கள் ஒருவேளை யாராவது கிடைத்தார்கள் என்றால், அவரை அழைத்து வாருங்கள். எனவேதான் இந்த பாடலைப் பாடுகிறீர்கள்

இல்லையா! மதுபன்னில், தந்தையின் உலகத்தில் மகிழ்ச்சியே மகிழ்ச்சிதான் என்று. சாப்பிடுகிறீர்கள் என்றாலும் மகிழ்ச்சியில் சாப்பிடுகிறீர்கள். தூங்குகிறீர்கள் என்றாலும் மகிழ்ச்சியோடு தூங்குகிறீர்கள். மருந்து மாத்திரை எடுத்து துங்குவதற்கான அவசியமே இல்லை. தந்தையுடன் தூங்கி விட்டீர்கள் என்றால், மாத்திரைகள் எடுக்கவேண்டி இருக்காது. தனியாக தூங்குகிறீர்கள் என்றால் தான் இரத்த அழுத்தம் அதிகமாகி விட்டது. இங்கு வலிக்கிறது என்று கூறுகிறீர்கள். அதனால் மாத்திரை எடுக்க வேண்டி இருக்கிறது. தந்தை உடன் இருக்கிறார் பாபா நான் உங்களுடன் தூங்குகிறேன் அவ்வளவு தான். இது தான் மாத்திரை. அந்த மாதிரி நேரமும் வரும் எப்படி தொடக்க காலத்தில் மருந்துகள் இருந்ததில்லை நினைவிருக்கிறது தான் இல்லையா? தொடக்க காலத்தில் எவ்வளவு காலம் மருந்தே இருக்கவில்லை. ஆம் கொஞ்சம். பாலாடை வெண்ணைய் சாப்பிட்டீர்கள் ஆனால் மருந்து சாப்பிடவில்லை. அப்படி தொடக்கத்தில் எப்படி பயிற்சி செய்விக்கப்பட்டது இல்லையா? இதுவோ பழைய உடல் இறுதியில் அந்த தொடக்க காலத்து நாட்கள் மீண்டும் அதே போல் நடக்கும். காட்சிகளையும் நீங்கள் அனைவரும் மிகவும் விசித்திரமானவர்களைப் பார்த்துக் கொண்டே இருப்பீர்கள். அநேகர்களுக்கு ஒரு தடவை காட்சி பார்த்து விட வேண்டும் என்ற இச்சை இருக்கிறது இல்லையா? இறுதி வரையிலும் உங்களில் யார் உறுதியாக இருப்பீர்களோ அவர்களுக்கு காட்சிகள் கிடைக்கும். பிறகு அதே கூட்டத்தில் பக்தியும் நடக்கும், சேவை முடிவடைந்து விடும் இப்பொழுது சேவையின் காரணமாக அங்கு இங்கு கலைந்து சென்றுவிட்டீர்கள். பிறகு அனைத்து நதிகளும் கடலில் வந்து கலந்து விடும் ஆனால் அந்த நேரம் மிக மென்மையானதாக இருக்கும். சாதனங்கள் இருந்தபோதிலும் வேலை செய்யாது. எனவே, புத்தியின் தொடர்பு மிகத் தெளிவாக இருக்க வேண்டும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பது புத்தியில் டச் ஆகி விட வேண்டும், அதாவது உணர்ந்து விட வேண்டும் ஒரு வினாடி கூட தாமதம் செய்தால் கூட கை விட்டு சென்றுவிடும். எப்படி அவர்களும் எப்படி பொத்தானை அழுக்குவதில் ஒரு வினாடி காலதாமதம் செய்தாலும் கூட ரிசல்ட் என்னவாக இருக்கும். இதுவும் ஒருவேளை புத்தியின் உணர்த்துதல் ஏற்படுத்துவதற்கு ஒரு வினாடி காலதாமதம் ஆனாலும் கூட வந்து சேர்வது கடினம் ஆகி விடும். அந்த மனிதர்களும் எவ்வளவு கவனத்துடன் அமர்ந்திருக்கிறார்கள்.

அப்படி இது புத்தியின் உணர்தல், எப்படி தொடக்க காலத்தில் வீட்டில் அமர்ந்திருக்கும் போதே வாருங்கள் என்று சப்தம் கேட்டீர்கள். அழைப்பு வந்தது வந்து சேர்ந்து விட்டீர்கள். நீங்களும் உடனே வீட்டை விட்டு வெளியேறினீர்கள். அதே போலவே இறுதியிலும் தந்தையின் செய்தி ஓசை உங்களை வந்து சேரும். எப்படி சாகாரத்தில் அனைத்து குழந்தைகளையும் அழைத்தோம் அதே போல் ஆகார ஒளி வடிவ ரூபத்திலும் அனைத்து குழந்தைகளையும் வாருங்கள்! வாருங்கள்! என்று வரவழைப்போம். வர வேண்டும் மற்றும் உடன் செல்ல வேண்டும். அந்த மாதிரி எப்பொழுதும் தன்னுடைய புத்தி தெளிவாக இருக்க வேண்டும்.

மேலும் எங்காவது கவனம் சென்றது என்றால், தந்தையின் அழைப்பு மற்றும் தந்தை சொல்லும் விசயங்கள் தவறி விடும். இவை அனைத்துமே கண்டிப்பாக நடக்கப் போகிறது. நாங்களோ வந்து சேர்ந்து விடுவோம் என்று டீச்சர்கள் யோசிக்கிறார்கள். இந்த மாதிரியும் நடக்கலாம் உங்களுக்கு நீங்கள் இருக்கும் இடத்திலேயே பாபா டைரக்ஷன் கொடுக்கலாம். அங்கு ஏதாவது விசேஷ காரியம் செய்ய வேண்டியதாக இருந்தால். அங்கு ஏதாவது மற்றவர்களுக்கு சக்தி கொடுக்க வேண்டியதாக இருந்தால், யாரையாவது உடன் அழைத்துச் செல்ல வேண்டியதாக இருந்தால் இதுவும் நடக்கும் ஆனால் தந்தையின் டைரக்ஷன் பிராமணம் நீங்கள் இருக்க வேண்டும். மன்மத்படி அதாவது மனம் சொல்லும் வழிப்படி பற்றுதலின் காரணமாக எந்த காரியமும் செய்யாதீர்கள். ஐயோ என்னுடைய சென்டர் என்ற நினைவே வர வேண்டாம். இந்த மாணவனை என்னோடு அழைத்துச் செல்ல வேண்டும், அவர் நெருக்கமானவர் உதவி செய்பவர் என்று அப்படியும் வேண்டாம். யாருக்காகவாவது தாமதித்து நின்றீர்கள் என்றமல், தங்கிப் போய் விடுவீர்கள், அந்த மாதிரி தயாராக இருக்கிறீர்கள் இல்லையா? இதைத்தான் எவரெடியாக இருப்பது என்று கூறுவது. எப்பொழுதுமே அனைத்தையும் கட்டிவைத்த நிலையில் இருக்க வேண்டும். அந்த நேரம் இதை செய்து விடட்டுமா, அதைச் செய்து விடட்டுமா, சுருக்கத்தில் கொண்டு வருவதற்கான எண்ணமே வர வேண்டாம். சாகார பாபா காலத்தில் நினைவிருக்கிறது தானே, யாரெல்லாம் சேவை செய்யக் கூடிய குழந்தைகளெல்லாம் இருந்தார்களோ அவர்களது ஸ்தூல பெட்டி எப்பொழுதுமே தயாராக இருக்கும். டிரெயின் வருவதற்கு 5-நிமிடம் இருக்கும் மேலும் நீ சேவைக்குச் செல் என்று டைரக்ஷன் கிடைத்தது.

அப்படி பெட்டி படுக்கை எப்போதும் தயாராக இருந்தது. ஒரு ஸ்டேஷனுக்கு முன்பு டிரெயின் வந்து சேர்ந்து விட்டது. அப்போது தான் இவர் வீட்டிலிருந்து புறப்பட்டு சென்று கொண்டிருக்கிறார், அந்த மாதிரி கூட அனுபவம் செய்தீர்கள் இல்லையா? இதுவும் மனதின் நிலையில் பெட்டி படுக்கைகள் தயாராக இருக்க வேண்டும். தந்தை அழைத்தவுடன் குழந்தைகள் ஆஜர் என்று இருக்க வேண்டும். இதைத் தான் எவரெடி என்று கூறுவது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் தொடர்பின் வண்ணத்தில் வண்ணம் பூசப்பட்ட எப்பொழுதும் கடந்ததை கடந்ததாக ஆக்கி நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை சிரேஷ்டமாக ஆக்கக் கூடிய, எப்பொழுதும் பரமாத்மா சந்திப்பை செய்யக் கூடிய, எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் பாபாவின் நினைவிலிருந்து செய்யக் கூடிய, அதாவது ஒவ்வொரு காரியத்தின் நினைவுச்சின்னத்தை உருவாக்கக் கூடிய, எப்பொழுதும் குஷியில் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் சங்கம யுகத்தின் மகிழ்ச்சியைக் கொண்டாடக் கூடிய, அந்த மாதிரி தந்தைக்குச் சமமான தந்தையின் ஒவ்வொரு எண்ணத்தை புத்தியால் பிடித்துக் கொள்ளக் கூடிய, எப்பொழுதும் புத்தியை சிரேஷ்டமாக, தெளிவாக வைக்கக் கூடிய, அந்த மாதிரியான ஹோலி ஹேப்பி அதாவது புனித, சந்தோஷமான அன்னப் பறவைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் கடிதங்களுக்கு பதில் கூறிக் கொண்டே ஹோலிக்கான வாழ்த்துக்கள் கூறினார்: நாலாபுறங்களிலும் உள்ள பாரதம் மற்றும் வெளிநாட்டின் அனைத்து குழந்தைகளின் அன்பு நிரம்பிய, ஊக்கம் உற்சாகம் நிரம்பிய மேலும் சில இடங்களிலிருந்து தன்னுடைய முயற்சி செய்வதின் உறுதிமொழிகள் நிரம்பிய அனைவரின் கடிதம் மற்றும் செய்தி பாப்தாதாவிற்குக் கிடைத்தது. பாப்தாதா அனைத்து புனித அன்னப் பறவைகளுக்கு எப்பொழுதம் எப்படி தந்தையோ அப்படி நான்! இந்த நினைவின் விசேஷ சுலோகளை வரதானத்தின் ரூபத்தில் நினைவூட்டுகிறார். எந்த ஒரு காரியம் செய்தாலும் எண்ணத்தை வைத்தாலும் முதலில் எது தந்தையின் எண்ணமோ அதுவே இந்த எண்ணமா எது தந்தையின் காரியமோ அதுவே என்னுடைய காரியம் என்று சோதனை செய்யுங்கள். ஒரு

நொடியில் சோதனை செய்யுங்கள் பிறகு நடைமுறையில் கொண்டு வாருங்கள். அதனால் எப்பொழுதுமே தந்தைக்குச் சமமான சக்திசாலி ஆத்மாவாகி வெற்றியின் அனுபவம் செய்வீர்கள். வெற்றி எனது பிறப்புரிமை என்று அப்படி சுலபமாக பிராப்தியின் அனுபவம் செய்வீர்கள். நானே வெற்றியின் நட்சத்திரம் என்றால், வெற்றி என்னிடமிருந்து பிரிந்து செல்ல முடியாது. வெற்றியின் மாலை எப்பொழுதும் கழுத்தில் இருக்கிறது என்றால் ஒவ்வொரு காரியத்திலும் அனுபவம் செய்து கொண்டே இருப்பர்கள். பாப்தாதா இன்றைய இந்த ஹோலியின் கூட்டத்தில் நீங்கள் அனைத்து புனித அன்னப் பறவைகளை நேரில் பார்த்துக் கொண்டிருக்கிறோம் மற்றும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அன்போடு அனைவரையும் பார்க்கிறோம் அனைவரின் விசேஷம் என்ற பல வகையான நறுமணங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவரின் விசேஷத்தின் எவ்வளவு இனிமையான நறுமணம். தந்தை ஒவ்வொரு விசேஷ ஆத்மாவை விசேஷங்களுடன் பார்த்துக் கொண்டே ஆஹா! என்னுடைய சகஜ யோகி குழந்தையே ஆஹா! என்னுடைய பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்த குழந்தையே என்ற இந்த பாடலைத்தான் பாடுகிறார். நீங்கள் அனைவருமே அவரவர்களின் விசேஷத்துடன் மேலும் பெயரையும் சேர்த்து தன்னை நேர் எதிரில் அனுபவம் செய்துக் கொண்டே அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள், மேலும் எப்பொழுதும் தந்தையின் பாதுகாப்பு நினைவின் குடை நிழலில் உடன் இருந்து மாயாவுடன் பயப்படாதீர்கள். சிறிய விசயம், விசயம் இல்லை. சிறியதைப் பெரியதாக ஆக்காதீர்கள், பெரியதை சிறியதாக ஆக்குங்கள். உயர்ந்த நிலையில் இருந்தீர்களென்றால் பெரியது சிறியதாக ஆகி விடும். கீழே இருந்தீர்கள் என்றால், சிறியதும் பெரியதாக ஆகி விடும். எனவே பாப்தாதாவின் துணை இருக்கிறது கை இருக்கிறதென்றால் பயப்படாதீர்கள், அதிகமாக பறந்து கொண்டே இருங்கள், பறக்கும் கலையின் மூலம் ஒரு நொடியில் அனைத்தையும் கடந்து சென்று விடுங்கள். தந்தையின் துணை எப்பொழுதுமே பாதுகாப்பாக வைத்திருக்கும் மேலும் வைக்கும்.

அனைத்து கண்டெடுக்கப்பட்ட செல்லமானவர்களே என்று கூறி பாப்தாதா ஹோலிக்கான வாழ்த்துக்களைக் கூறுகிறார். (பிறகு அனைத்து குழந்தைகளும் பாப்தாதாவுடன் ஹோலி கொண்டாடினார்கள் மேலும் பிக்னிக் செய்தார்கள்).

**வரதானம்: உயர்ந்த தந்தை, உயர்ந்த நான் மற்றும் உயர்ந்த காரியம் இந்த நினைவின் மூலம் சக்திசாலியாக ஆகக் கூடிய தந்தைக்குச் சமமானவர் ஆகுக!**

எப்படி இன்றைய உலகத்தில் ஏதாவது வி.ஐ.பியின் குழந்தையாக இருக்கிறார் என்றால் அவர் தன்னையும் வி.ஐ.பி என்று நினைப்பார், ஆனால் தந்தையை விட உயர்ந்தவரோ யாருமே இல்லை. நான் அந்த மாதிரி உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தை உயர்ந்த ஆத்மா! என்ற இந்த நினைவு சக்திசாலியாக ஆக்கி விடும். உயர்ந்த தந்தை, உயர்ந்த நான் மற்றும் உயர்ந்த காரியம் அந்த மாதிரி நினைவில் இருப்பதனால் எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக ஆகி விடுவீர்கள். முழு உலகத்திலும் சிரேஷ் மற்றும் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களைத் தவிர வேறு யாருமே இல்லை எனவே, உங்களுக்குத் தான் மகிமையும் மற்றும் பூஜையும் நடக்கிறது.

**சுலோகன்: சம்பூரண நிலை என்ற கண்ணாடியில் தன்னுடைய சூட்சும பற்றுதல்களை சோதனை செய்யுங்கள் மற்றும் அதிலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 09.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தை மற்றும் சேவை மீது அன்பு -இது தான் பிராமண வாழ்க்கையின் உயிர் தானமாகும்!

இன்று பாப்தாதா குழந்தைகள் அனைவரின் புருஷார்த்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தையும் அவரவரின் தைரியம்-உற்சாகத்தினால் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கிறார்கள். தைரியமும் அனைவரிடமும் உள்ளது. ஊக்கம்-உற்சாகமும் அனைவரிடமும் உள்ளது. ஒவ்வொருவருக்கும் உள்ளுக்குள் ஒரே ஒரு சிரேஷ்ட சங்கல்பமும் உள்ளது -- நாம் பாப்தாதா வின் சமீப ரத்தினம், கண்ணின் மணியாக, மன சிம்மாசனதாரியாக, திலாராம் பாபாவின் அன்புக்குரியவர்களாக ஆக வேண்டும். அனைவருடைய லட்சியமும் சம்பன்னமாக வேண்டும் என்பதாகத் தான் உள்ளது. குழந்தைகள் அனைவரின் மனதின் குரல் ஒன்று தான் – அன்பிற்குப் பிரதிபலனாக நாம் சமமாகவும் சம்பன்னமாகவும் ஆக வேண்டும். மேலும் இதே லட்சியத்தின் பிரமாணம் முன்னேறிச் செல்வதில் வெற்றி பெறவும் செய்கின்றனர். என்ன விரும்புகிறீர்கள் என்று யாரிடமாவது கேளுங்கள். அப்போது அனைவர்க்கும் ஒரே மாதிரி ஊக்கத்துடனான குரல் – சம்பூர்ணம் மற்றும் சம்பன்னம் ஆகியே தீர வேண்டும் என்பதாகத் தான் ஒலிக்கும். பாப்தாதா அனைவரின் இந்த ஊக்கம்-உற்சாகத்தைப் பார்த்து, சிரேஷ்ட லட்சியத்தைப் பார்த்து மகிழ்ச்சியடை கிறார். மேலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் அந்த மாதிரி ஓர் ஊக்கம்-உற்சாகத்தை, ஒரு வழியைப் பின்பற்றுவதற்காக நன்றி சொல்கிறார் -- இது போல் ஒரு தந்தை, ஒரு வழி, ஒரே லட்சியம் மற்றும் ஒரே வீட்டில், ஒரே ராஜ்யத்தில் சென்று கொண்டுள்ளனர் அல்லது பறந்து கொண்டுள்ளனர். ஒரு தந்தை மற்றும் இவ்வளவு தகுதியுள்ள, யோகி குழந்தைகள், ஒவ்வொருவரும் ஒருவர் மற்றவரை விட விசேஷத்தில் விசேஷமாக முன்னேறிச் சென்று கொண்டுள்ளனர். முழுக்

கல்பத்திலும் இப்படி ஒரு தந்தையும் இருக்க மாட்டார், எந்த ஒரு குழந்தையும் ஊக்கம்-உற்சாகத்தில் குறைந்தவர் இல்லை என்று அந்த மாதிரி குழந்தைகளும் இருக்க மாட்டார்கள். விசேஷம் நிறைந்தவராக, ஒரே ஈடுபாட்டில் மூழ்கியவராக, அந்த மாதிரி ஒரு போதும் இருந்திருக்க முடியாது. அதனால் பாப்தாதாவுக்கு அத்தகைய குழந்தைகளைப் பார்த்துப் பெருமிதமாக உள்ளது மற்றும் குழந்தைகளுக்கு பாபாவைப் பார்த்துப் பெருமிதமாக உள்ளது. எங்கே பார்த்தாலும் ஒரே ஒரு விசேஷ சப்தம் அனைவரின் மனதிற் குள்ளும் உள்ளது -- பாபா மற்றும் சேவை. எவ்வளவு பாபா மீது அன்பு உள்ளதோ, அவ்வளவு சேவை மீதும் அன்பு உள்ளது. இரு வகை அன்பும் ஒவ்வொருவரின் பிராமண வாழ்க்கையின் உயிர்தான மாகும். இதிலேயே சதா பிஸியாக இருப்பதற்கான ஆதாரம் உங்களை மாயாஜீத் ஆக்கிக் கொண்டிருக்கிறது.

பாப்தாதாவிடம் குழந்தைகள் அனைவரின் சேவையின் ஊக்கம்-உற்சாகத்திற்கான திட்டங்கள் வந்து சேர்ந்து கொண்டே இருக்கின்றன. திட்டங்கள் அனைத்தும் மிக நல்லதாக உள்ளன. டிராமா வின் படி எந்த விதியின் மூலம் விருத்தியை அடைந்து வந்திருக்கிறீர்களோ, அது ஆரம்பத்திலிருந்து இது வரை நல்லதிலும் நல்லதென்றே சொல்வார்கள். இப்போது சேவையினுடைய அல்லது பிராமணர்கள் வெற்றிரத்தினம் ஆவதற்கான அல்லது வெற்றியின் அநேக வருடங்கள் கழிந்து விட்டன. இப்போது பொன்விழா வரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள். பொன்விழாவை ஏன் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள்? உலகத்தின் கணக்குப்படி கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்களா அல்லது சமயத்தின் பிரமாணம் உலகத்திற்குத் தீவிர வேகத்தில் செய்தி கொடுப்பதற் கான ஊக்கத்தோடு நாலாபுறமும் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்களா?

உரத்த குரல் மூலமாக தூங்கி விட்ட ஆத்மாக்களை எழுப்புவதற்கான சாதனங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். எங்கே கேட்டாலும், எங்கே பார்த்தாலும் அங்கே நாலாபுறமும் இந்தக் குரல் தான் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் -- சமயத்தின் பிரமாணம் இப்போது கோல்டன் ஏஜ், பொற்காலம், பொன்னான யுகம் வருவதற்கான பொன்னான செய்தி மூலமாக மகிழ்ச்சி நிறந்த செய்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பொன்விழா மூலம் பொற்காலம் வருவதற்கான விசேஷ செய்தியைக்

கொடுப்பதற்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள். நாலாபுறமும் அத்தகைய அலை பரவ வேண்டும், இப்போது பொன்னான யுகம் வந்தே விட்டது. நாலாபுறமும் அந்த மாதிரிக் காட்சி காணப்பட வேண்டும், எப்படி காலை வேளையில் இருளுக்குப் பின் சூரிய உதயம் வருகிறது என்றால் சூரியன் உதிப்பதும் ஒளியின் மகிழ்ச்சி தரும் செய்தி நாலாபுறமும் பரவ வேண்டும். இருளை மறந்து ஒளியில் வந்து விட வேண்டும். அது போல் உலகத்தின் ஆத்மாக்கள் துக்கம் அசாந்தியின் செய்தி கேட்டுக் கேட்டு விநாசத்தின் பயத்தில் பயபீதி அடைந்து, மனச்சோர்வு அடைந்து விட்டுள்ளனர். நம்பிக்கை இழந்து விட்டுள்ளனர். அத்தகைய உலக ஆத்மாக்களுக்கு இந்தப் பொன்விழா மூலம் சுப நம்பிக்கைகளின் சூரியன் உதயமாகிற அனுபவத்தை ஏற்படுத்துங்கள். எப்படி விநாசத்தின் அலை உள்ளது, அது போல் சத்யுக உலக ஸ்தாபனையின் மகிழ்ச்சி தரும் செய்தியின் அலையை நாலாபுறமும் பரவச் செய்யுங்கள். அனைவரின் மனதிலும் இந்த நம்பிக்கை நட்சத்திரம் ஜொலிக்கச் செய்யுங்கள். என்னவாகும், ஏதுவாகும் என்பதற்குப் பதில் இப்போது இது நடக்கும் என்று புரிந்து கொள்ளட்டும். அத்தகைய அலையைப் பரவச் செய்யுங்கள். பொன்விழா என்பது பொற்காலம் வரப் போகிறது என்ற மகிழ்ச்சி தரும் செய்திக்கான சாதனமாகும். எப்படி நீங்கள் துக்க உலகைப் பார்த்த போதிலும் சுகதாமம் சதா தானாகவே ஸ்மிருதியில் உள்ளது மற்றும் சுகதாமத்தின் ஸ்மிருதியானது துக்கதாமத்தை மறக்கச் செய்து விடுகிறது. மேலும் சுகதாமம் மற்றும் சாந்திதாமம் செல்வதற்கான ஏற்பாடுகளில் மூழ்கி இருக்கிறீர்கள். செல்ல வேண்டும் மற்றும் சுகதாமத்தில் வர வேண்டும். போக வேண்டும் மற்றும் வர வேண்டும் -இந்த ஸ்மிருதி சக்தி சாலியாகவும் ஆக்கிக் கொண்டிருக்கிறது மற்றும் குஷி-குஷியோடு சேவைக்கான நிமித்தமாகவும் ஆக்கிக் கொண்டிருக்கிறது. இப்போது மக்கள் அந்த மாதிரி துக்கத்தின் செய்திகளை அதிகம் கேட்டு விட்டார்கள். இப்போது இந்த மகிழ்ச்சி தரும் செய்தி மூலம் துக்க தாமத்திலிருந்து சுகதாமம் செல்வதற்காகக் குஷி-குஷியாக ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அவர்களிடமும் இந்த அலைகள் பரவட்டும் -- அதாவது நாமும் செல்ல வேண்டும். நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கை கொடுங்கள். மனச்சோர்வடைந்த ஆத்மாக்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி சொல்லுங்கள். அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குங்கள், விசேஷ செய்தித்தாள்கள் மூலமாக அல்லது சப்தத்தைப் பரப்புவதற்கான சாதனங்கள் என்னவெல்லாம் உள்ளனவோ,

ஒரே சமயத்தில், மகிழ்ச்சி தரும் ஒரே செய்தி நாலாபுறமும் அனைவருக்கும் சென்று சேர வேண்டும். எங்கிருந்து யார் வந்தாலும் அனைவருக்குமே இந்த ஒரே விஷயம் தெரிய வரட்டும். இது போன்ற வழிமுறைகள் மூலம் நாலாபுறமும் ஒரே சப்தம் ஒலிக்கட்டும். புதுமையும் செய்ய வேண்டும். தன்னுடைய ஞானம் நிறைந்த சொரூபத்தைப் பிரத்தியட்சம் செய்ய வேண்டும். இப்போது சாந்த சொரூப ஆத்மாக்கள், சாந்திக்கான சகஜ வழியைச் சொல்பவர்கள் எனப் புரிந்து கொண்டுள்ளனர். இந்த சொரூபம் பிரத்தியட்சம் ஆகியும் இருக்கிறது, ஆகிக் கொண்டும் இருக்கிறது ஆனால் ஞானம் நிறைந்த பாபா சொல்வது தான் ஞானம் -- இப்போது இந்த சப்தம் ஒலிக்க வேண்டும். எப்படி இப்போது சொல்கின்றனர், சாந்திக்கான இருப்பிடமோ இது தான் என்று! அது போல் அனைவரின் வாயிலிருந்தும் இந்த வார்த்தை வெளிப்பட வேண்டும், அதாவது சத்திய ஞானம் இது தான்! என்று. எப்படி சாந்தி மற்றும் அன்பின் சக்தியை அனுபவம் செய்கின்றனர், அது போல் சத்தியதா உறுதியாக வேண்டும். ஆக, மற்றதெல்லாம் என்னவென்பது தெளிவாகி விடும். சொல்வதற்கான தேவை இருக்காது. இப்போது இந்த சத்தியதாவின் சக்தியை எப்படிப் பிரத்தியட்சம் செய்வது என்ற விதியைத் தனதாக்கிக் கொண்டால் அதை நீங்கள் சொல்வதற்கான தேவை இருக்காது ஆனால் அவர்கள் தாங்களாகவே சொல்ல வேண்டும், அதாவது சத்திய ஞானம், பரமாத்ம ஞானம், சக்திசாலி ஞானம் என்றால் இது தான் என்று. அதற்கான விதியைப் பின்னால் சொல்வோம். நீங்களும் கூட இது பற்றிச் சிந்திக்க வேண்டும். பிறகு அடுத்த தடவை சொல்வோம். அன்பு மற்றும் சாந்தியின் பூமியோ தயாராகி விட்டது இல்லையா? இப்போது ஞானத்தின் விதை போடப்பட வேண்டும். அப்போது தான் ஞானத்தின் விதையின் பலனாக சொர்க்கத்தின் ஆஸ்திக்கு அதிகாரி ஆவீர்கள்.

பாப்தாதா அனைத்தையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கிறார். என்னென்ன ஆன்மிக உரையாடல் செய்கின்றனர் என்று. நல்ல அன்போடு அமர்கின்றனர், யோசிக்கின்றனர். கடைந்தெடுப்பதை நன்றாக நடத்திக் கொண்டுள்ளனர். வெண்ணெயை உண்பதற்காகக் கடைந்து கொண்டு தான் இருக்கின்றனர். சக்திசாலி வெண்ணெய் தான் வெளிப்படும். அனைவரின் மனதிலும் அலை நன்றாக உள்ளது. இந்த மனதின் ஊக்கத்தின் அலை தான் வாயுமண்டலத்தை உருவாக்குகிறது.

வாயுமண்டலம் உருவாகி-உருவாகி ஆத்மாக்களிடம் சமீபத்தில் வருவதற்கான கவர்ச்சி அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இப்போது போக வேண்டும், பார்க்க வேண்டும். பிறகு கடைசியில், இதே தான் எனச் சொல்வார்கள். இப்போது உங்கள் மனதின் ஊக்கம்-உற்சாகம் அவர்களிடமும் கூட ஊக்கத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. இப்போது உங்கள் மனம் நடனமாடு கிறது. அவர்களின் கால்கள் அசையத் தொடங்குகின்றன. எப்படி இங்கே யாராவது மிக நன்றாக நடனமாடுகின்றார் என்றால் தூரத்தில் அமர்ந்திருப்பவருக்கும் கால்கள் நடனத்தில் அசையத் தொடங்கும். அத்தகைய ஊக்கம்-உற்சாகத்தின் சூழ்நிலை அநேகருடைய கால்களை நடனமாட வைக்கத் தொடங்கி விடும். நல்லது.

சதா தன்னைப் பொன்னுலகின் அதிகாரி என அனுபவம் செய்யக்கூடிய, சதா தனது பொன்யுக ஸ்திதியை அமைப்பதற்கான ஊக்கம்-உற்சாகத்தில் இருக்கக் கூடிய, சதா இரக்க மனம் உள்ளவராகி, அனைத்து ஆத்மாக்களுக்கும் பொற்கால யுகத்திற்கான வழி சொல்வதற்கான ஈடுபாட்டில் இருக்கக் கூடிய, சதா பாபாவின் ஒவ்வொரு பொன்னான மகாவாக்கியத்தையும் வாழ்க்கையில் தாரணை செய்யக் கூடிய, அத்தகைய சதா பாப்தாதாவின் மன சிம்மாசனதாரி, சதா அன்பில் மூழ்கி இருக்கக் கூடிய வெற்றி ரத்தினங்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

**பிரிஜ் இந்திரா தாதியுடன் அவ்யக்த பாப்தாதாவின் உரையாடல்:** நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கிறார் இல்லையா? ஒவ்வொரு நொடியும் செய்விப்பவர் நிமித்த மாக ஆக்கிச் செய்வித்துக் கொண்டிருக்கிறார். செய்விப்பவரின் கையில் சாவி உள்ளது. அந்தச் சாவியினால் தான் சென்று கொண்டிருக்கிறீர்கள். தானாகவே சாவி கிடைத்து விடுகிறது மற்றும் போகும் போதும் வரும் போதும் எவ்வளவு விலகிய மற்றும் அன்பான தன்மையின் அனுபவம் ஏற்படுகிறது! கர்மத்தின் கணக்கை முடித்துக் கொண்டிருந்தாலும் சரி, ஆனால் கர்மத்தின் கணக்கையும் கூட சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டே, அனைவரோடும் மகிழ்ச்சியில் இருக்கிறீர்கள். அப்படித் தான் இல்லையா? கூட இருப்பவர்களுடன் மகிழ்ச்சியில் இருக்கிறீர்கள். மற்றப்படி இந்தக் கணக்கு-வழக்கை சாட்சியாக இருந்து எப்படி முடிந்து கொண்டிருக்கிறது

என்று பார்த்துக் கொண்டு கூட மகிழ்ச்சியில் இருக்கும் காரணத்தால் எதுவும் தோன்றுவதில்லை. ஏனென்றால் ஆரம்பத்திலிருந்து ஸ்தாபனைக்கு நிமித்தமாகி இருக்கின்றனர் என்றால் எது வரை இருக்கின்றனரோ, அது வரை அமர்ந்துள்ளனர் அல்லது சென்று கொண்டுள்ளனர், ஸ்டேஜ் மீது இருந்தாலும் சரி, வீட்டில் இருந்தாலும் சரி, ஆனால் மகாவீர் குழந்தைகள் சதா தங்களின் சிரேஷ்ட ஸ்டேஜ் மீது இருக்கும் காரணத்தால் சேவையின் ஸ்டேஜ் மீது உள்ளனர். டபுள் ஸ்டேஜ் மீது உள்ளனர். ஒன்று தன்னுடைய சிரேஷ்ட ஸ்டேஜ் மீது உள்ளனர். இரண்டாவது, சேவையின் ஸ்டேஜ் மீது உள்ளனர். ஆக, நாள் முழுவதும் எங்கே இருக்கிறீர்கள்? வீட்டில் இருக்கிறீர்களா, ஸ்டேஜ் மீதா? படுக்கை மீது அமர்கிறீர்களா, கோச்சில் (குதிரை வண்டியில்) அமர்கிறீர்களா அல்லது ஸ்டேஜில் இருக்கிறீர்களா? எங்கே இருந்தாலும் சரி, சேவையின் ஸ்டேஜில் இருக்கிறீர்கள். டபுள் ஸ்டேஜ். அப்படித் தான் அனுபவம் ஆகிறது இல்லையா? தன்னுடைய கணக்கையும் கூட நீங்கள் சாட்சியாகிப் பாருங்கள். இந்த சரீரத்தினால் கடந்த காலத்தில் என்னவெல்லாம் செய்யப் பட்டுள்ளதோ, அந்தக் கணக்கு எப்படி முடிந்து கொண்டிருக்கிறது என்பதை சாட்சியாகிப் பாருங்கள். இதைக் கர்ம போகம் எனச் சொல்ல மாட்டார்கள். கர்ம போகத்தை அனுபவிப்பதால் துக்கம் ஏற்படும். ஆக, கர்ம வினையை அனுபவித்தல் என்ற வார்த்தையைச் சொல்ல மாட்டார்கள். உங்களுக்கெல்லாம் இது கர்மபோகம் இல்லை. இது கர்மயோகத்தின் சக்தியினால் சேவையின் சாதனமாக ஆகி விட்டுள்ளது. இது கர்மவினையை அனுபவித்தல் அல்ல, சேவையின் திட்டமாகும். வினைப்பயனை அனுபவிப்பதும் கூட சேவைக்கான திட்டமாக மாறி விட்டுள்ளது. அப்படித் தான் இல்லையா? அதனால் சதா துணையின் மகிழ்ச்சியில் இருப்பவர். பிறவி எடுத்ததில் இருந்து இந்த ஆசை தான் இருந்தது -- கூடவே இருக்க வேண்டும் என்ற ஆசை. இந்த ஆசை பக்தி ரூபத்திலும் நிறைவேறியது, ஞானத்திலும் நிறைவேறியது, சாகார ரூபத்திலும் கூட நிறைவேறியது. இப்போது அவ்யக்த ரூபத்திலும் கூட நிறைவேறிக் கொண்டிருக்கிறது. ஆக, இந்த ஜென்மத்தின் ஆசை, வரதான ரூபமாக ஆகி விட்டது. நல்லது. எவ்வளவு சாகார பாபாவுடன் இருப்பதற்கான அனுபவம் இவருக்கு இருந்ததோ, அவ்வளவு வேறு யாருக்கும் இல்லை. உடன் இருப்பதற்கான விசேஷ பார்ட் கிடைத்தது என்பது சாதாரண விஷயமல்ல. ஒவ்வொருவரின் பாக்கியமும் அவரவருடையது. நீங்களும் சொல்லுங்கள் -- ஆஹா நான்!

ஆதி ரத்தினங்கள் சதா மகன் தந்தையை எடுத்துக் காட்டுவான் என்பதற்கு நிமித்தமாக உள்ளனர். ஒவ்வொரு கர்மத்தாலும் பாபாவின் சரித்திரத்தைப் பிரத்தியட்சம் செய்யக்கூடிய தெய்விகக் கண்ணாடி ஆவார்கள். கண்ணாடி எவ்வளவு அவசியமாக உள்ளது! தன்னுடைய தரிசனம் மற்றும் மற்றவர்களின் தரிசனம் செய்விப்பதற்கு, ஆக, நீங்கள் அனைவரும் பாபாவை சாட்சாத்காரம் செய்விக்கும் கண்ணாடி. நிமித்தமாக உள்ள விசேஷ ஆத்மாக்களைப் பார்த்து அனைவருக்கும் என்ன நினைவு வருகிறது? பாப்தாதாவின் நினைவு வருகிறது. பாபா எப்படி செய்திருந்தார், எப்படி நடந்து கொண்டிருந்தார் என்பது நினைவு வருகிறது இல்லையா? ஆக, பாபாவைப் பிரத்தியட்சம் செய்வதற்கான கண்ணாடி நீங்கள். பாப்தாதா அத்தகைய விசேஷ குழந்தைகளை சதா தம்மை விட முன்னேறிச் செல்ல வைக்கிறார். தலைக் கிரீடமாக ஆக்கி விடுகிறார். தலைக் கிரீடத்தின் ஜொலிக்கின்ற மணி நீங்கள். நல்லது.

**ஜெகதீஷ் சகோதரருடன்:** பாபாவிடமிருந்து வரதானமாக என்ன விசேஷங்கள் கிடைத்துள் ளனவோ, அந்த விசேஷங்களைக் காரியத்தில் கொண்டு வந்து சதா விருத்தி அடைந்து கொண்டே இருக்கிறீர்கள். நல்லது. சஞ்ஜய் என்ன செய்தார்? அனைவருக்கும் திருஷ்டி கொடுத்தார் இல்லையா? ஆக, இந்த ஞானத்தின் திருஷ்டி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுவே திவ்ய திருஷ்டி. ஞானம் தான் திவ்யமானது இல்லையா? ஞானத்தின் திருஷ்டி அனைத்தையும் விட சக்திசாலி ஆகும். இதுவும் வரதானமாகும். இல்லையென்றால் இவ்வளவு பெரிய விஷ்வ வித்யாலயத் தின் ஞானம் என்னவாக உள்ளது என்பது பற்றி எப்படித் தெரியும்? கேட்பவர்களோ மிகக் குறைவு இல்லையா? புத்தகங்கள் மூலமாகத் தெளிவாகி விடுகிறது. இதுவும் வரதானமாகக் கிடைத்துள்ளது. இதுவும் ஒரு விசேஷ ஆத்மாவின் விசேஷமாகும். ஒவ்வொரு நிறுவனத்திலும் அனைத்து சாதனங்கள் மூலமாக விசேஷமானது பிரசித்தமாகிறது. எப்படி சொற்பொழிவுகள் மூலம், மாநாடுகள் மூலம், இத்தகைய புத்தகங்கள், சித்திரங்கள், என்னென்ன சாதனங்கள் உள்ளனவோ, இதுவும் நிறுவனம் அல்லது விஷ்வ வித்யாலயாவின் ஒரு விசேஷம்!, பிரசித்தமாவதற்கான சாதனம் ஆகும். இதுவும் அம்பு தான். எப்படி அம்பு பறவையைக் கொண்டு வருகிறது இல்லையா? அது போல் இதுவும் ஓர் அம்பு, ஆத்மாக்களை அருகில்

கொண்டு வருகிறது. இதுவும் டிராமாவில் பார்ட் கிடைத்துள்ளது. மக்களின் கேள்விகளோ அநேகம் எழுகின்றன. என்ன கேள்விகள் எழுகின்றனவோ, அவற்றைத் தெளிவு படுத்துவதற்கான சாதனங்கள் அவசியம். எப்படி முன்னிலையிலும் சொல்கிறார்கள். இந்தப் புத்தகங்களும் கூட நல்ல சாதனங்களாகும். இவை கூட அவசியம். ஆரம்பத்திலிருந்து பாருங்கள், பாப்தாதா எவ்வளவு ஆர்வத்தோடு இந்த சாதனங்களை உருவாக்கினார்! இரவும் பகலும் தாமே அமர்ந்து எழுதினார். யாராவது ஏற்கனவே உருவாக்கப்பட்டதை உங்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள் இல்லையா? நீங்கள் அதை இரத்தினங்கள் பதிக்கப் பட்டதாக ஆக்கிக் கொண்டே இருந்தீர்கள். ஆக, இதையும் செய்து காட்டினீர்கள் இல்லையா? ஆக, இவை கூட நல்ல சாதனங்கள். மாநாட்டிற்குப் பிறகு பின்தொடர்ச்சியாகச் செய்வதற்கு (சார்ட்டர் முதலியன) வெளிக் கொண்டு வர வேண்டியதும் அவசியமாகும். பின்தொடர்வதற்காக ஏதேனும் சாதனம் அவசியம் வேண்டும். முதலில் இது, இரண்டாவது இது, மூன்றாவது இது என்பதாக. இதனால் அவர்களும் புரிந்து கொள்வார்கள், மிகவும் விதிப் பிரமாணம் இந்த விஷ்வ வித்யாலயம் அல்லது பல்கலைக்கழகம் செயல்படுகிறது என்று. ஆக, இவை நல்ல சாதனங்கள். முயற்சி செய்கிறீர்கள் என்றால் அதில் பலம் நிரப்பப் படுகின்றது. இப்போது பொன்விழாவிற்கான திட்டத்தை உருவாக்கு வீர்கள், பிறகு கொண்டாடுவீர்கள். எவ்வளவு திட்டங்கள் உருவாக்கு கிறீர்களோ, அந்த அளவு பலம் நிரம்பிக் கொண்டே போகும். அனைவரின் சகயோகத்தின் மூலம், அனைவரின் ஊக்கம்-உற்சாகத்தின் சங்கல்பங்கள் மூலம் வெற்றியோ நிச்சயிக்கப் பட்டுள்ளது. ரிப்பீட் (மீண்டும்) செய்ய வேண்டும், அவ்வளவு தான். இப்போதோ பொன்விழா பற்றி அதிகம் யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? முதலில் பெரிதாகத் தோன்றும், பிறகு சகஜமாகிக் கொண்டே போகும். ஆக, சுலப வெற்றி இருக்கவே செய்கிறது. வெற்றி ஒவ்வொருவரின் நெற்றியிலும் எழுதப் பட்டுள்ளது.

**பார்ட்டிகளிடம்:** சதா டபுள் லைட்டாக இருக்கிறீர்களா? எந்த ஒரு விஷயத்திலும் தன்னை பாரமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். சதா டபுள் லைட்டாக இருப்பதன் மூலம் சங்கமயுகத்தின் சுகத்தின் நாட்கள் ஆன்மிக மகிழ்ச்சியின் நாட்கள் வெற்றி பெறும். கொஞ்சமாவது சுமை தாரணை செய்தால் என்னவாகும்? குழப்பமடைவீர்களா, மகிழ்ச்சி அடைவீர்களா?

பாரமாக உள்ளதென்றால் குழப்பம். லேசாக இருந்தால் மகிழ்ச்சி. சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் எவ்வளவு மதிப்பு வாய்ந்தது! எவ்வளவு உயர்ந்தது! எவ்வளவு வருமானம் சம்பாதிப்பதற்கான சமயம்! அந்த மாதிரி வருமானம் சம்பாதிப்பதற்கான நேரத்தைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். இராஜ்யுக்த் (ஞான ரகசியங்களைக் காப்பவர் மற்றும் யோகயுக்த் (யோகத்துடன் கூடிய) ஆத்மாக்கள் சதா பறக்கும் கலையின் அனுபவம் செய்வார்கள். ஆகவே நன்றாக பாபாவின் நினைவில் இருங்கள். படிப்பில், சேவையில் முன்னேறிச் செல்லுங்கள். நின்றுவிட வேண்டாம். படிப்பு மற்றும் படிப்பைக் கற்றுத் தருபவர் சதா கூடவே இருக்கட்டும். இராஜ்யுக்த் மற்றும் யோகயுக்த் ஆத்மாக்கள் சதா முன்னால் இருப்பார்கள். பாபாவிடமிருந்து கிடைக்கும் சமிக்ஞைகளில் குழு ரூபத்தில் முன்னால் சென்று கொண்டே இருங்கள். நிமித்தமாகியுள்ள ஆத்மாக்களின் விசேஷங்களை, தாரணைகளைப் பற்றிக் கொண்டு, அவர்களைப் பின்பற்றிக் கொண்டே முன்னேறிச் செல்லுங்கள். எவ்வளவு பாபாவுக்கு சமீபமோ, அவ்வளவு பரிவாரத்திற்கு சமீபம். பரிவாரத்திற்கு சமீபமாக இல்லை என்றால் மாலையில் வர மாட்டீர்கள். நல்லது.

**வரதானம்: இந்தக் கடைசிப் பிறவியில் கிடைத்துள்ள அனைத்து சக்திகளையும் பயன்படுத்தக் கூடிய வில்பவர் (மனோபலம்) நிறைந்தவர் ஆகுக!**

இந்த இனிய டிராமா மிக நன்றாகவே உருவாக்கப் பட்டுள்ளது. இதை யாராலும் மாற்ற இயலாது ஆனால் டிராமாவில் இந்த சிரேஷ்ட பிராமண ஜென்மத்திற்கு மிக அதிக சக்திகள் கிடைத்துள்ளன. பாபா வில் (உயில்) செய்துள்ளார். அதனால் வில்பவர் (திட சங்கல்பத்தின் சக்தி) உள்ளது. இந்தப் பவரைப் பயன்படுத்துங்கள். எப்போது விரும்புகிறீர்களோ, இந்த சரீர பந்தனத்தில் இருந்து விலகி, கர்மாதீத் ஸ்திதியில் நிலைத்து விடுங்கள். விலகி இருக்கிறேன், நான் மாலிக், பாபா மூலமாக நான் நிமித்த ஆத்மா -- இந்த ஸ்மிருதியுடன் மனம்-புத்தியை ஒருமுகப்படுத்துங்கள். அப்போது வில்பவர் நிறைந்தவர் எனச் சொல்வார்கள்.

**சுலோகன்: உள்ளத்தால் சேவை செய்வீர்களானால் ஆசீர்வாதங்களின் வாசல் திறக்கப்பட்டு விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 12.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்தியத்தின் சக்தி!

இன்று சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்குரு தங்களது சத்தியத்தின் சக்தி சொரூப குழந்தைகளைப் பாத்துக் கொண்டு இருக்கின்றார்கள். நீங்கள் சத்திய ஞானம் மற்றும் சத்தியத்தின் சக்தி எவ்வளவு மகானானது என்பதன் அனுபவி ஆத்மாக்கள் ஆவீர்கள். அனைத்து தூரதேசத்துக் குழந்தைகளும் வெவ்வேறு தர்மம், வெவ்வேறு நம்பிக்கைகள், வெவ்வேறு பழக்க வழக்கங்களில் இருக்கின்றபோதும் இந்த ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயத்தின் பக்கம் அல்லது இராஜயோகத்தின் பக்கம் ஏன் கவர்ச்சிக்கப்பட்டுள்ளனர்? சத்தியமான தந்தையின் சத்தியமான அறிமுகம் கிடைத்து விட்டது அதாவது சத்திய ஞானம் கிடைத்து விட்டது, உண்மையான பரிவாரம் (குடும்பம்) கிடைத்து விட்டது, உண்மையான அன்பு கிடைத்து விட்டது, உண்மையான பிராப்தியின் அனுபவம் கிடைத்து விட்டது. ஆகையினால், சத்தியத்தின் சக்திக்குப் பின்னால் கவர்ச்சிக்கப் பட்டுள்ளனர். வாழ்க்கை இருந்தது, பிராப்தியும் இருந்தது, அவரவர் சக்திக்கேற்ப ஞானமும் இருந்தது, ஆனால், சத்திய ஞானம் இல்லாமல் இருந்தது. ஆகையினால், சத்தியத்தின் சக்தி சத்திய மான தந்தையினுடையவர்களாக ஆக்கி விட்டது.

சத்தியம் என்ற வார்த்தைக்கு இரு அர்த்தங்கள் உள்ளன -சத்தியமானது உண்மை யானதாகவும் உள்ளது மற்றும் சத்தியமானது அழிவற்றதாகவும் உள்ளது. எனவே, சத்தியத்தின் சக்தி அழிவற்றதாகவும் உள்ளது. ஆகையினால், அழிவற்ற பிராப்தி, அழிவற்ற சம்பந்தம், அழிவற்ற அன்பு, அழிவற்ற பரிவாரம் உள்ளது. இதே பரிவாரம் (குடும்பம்) 21 பிறவிகள் வெவ்வேறு பெயர், உருவில் சந்தித்துக் கொண்டே இருக்கும். அறிந்திருக்கமாட்டீர்கள். நாம் தான் வெவ்வேறு சம்பந்தத்துடன் பரிவாரத்தில் வந்துகொண்டே இருப்போம். இந்த அழிவற்ற பிராப்தி, அறிமுகம் தூரதேசத்தில் இருந்தபோதிலும் தங்களது சத்தியமான

பரிவாரம், சத்தியமான தந்தை, சத்தியமான ஞானத்தின் பக்கம் ஈர்த்து விட்டது. எங்கு சத்தியமும், அழிவற்ற நிலையும் உள்ளதோ, அதுவே பரமாத்ம அறிமுகம் ஆகும். எவ்வாறு நீங்கள் அனைவரும் இந்த விசேஷத்தன்மையின் ஆதாரத்தில் கவர்ச்சிக்கப்பட்டு இருக்கிறீர்களோ, அவ்வாறே சத்தியத்தின் சக்தியை, சத்திய ஞானத்தை உலகத்தில் பிரத்யட்சம் செய்ய வேண்டும். 50 ஆண்டுகளாக நிலம் உருவாக்கப்பட்டது, அன்பில் கொண்டு வரப்பட்டது, தொடர்பில் கொண்டு வரப்பட்டது, இராஜயோகத்தின் கவர்ச்சியில் கொண்டு வரப்பட்டது, சாந்தியின் அனுபவத்தின் மூலம் கவர்ச்சியில் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது மீதம் என்ன உள்ளது? எவ்வாறு பரமாத்மா ஒருவரே என்ற நம்பிக்கை அனைத்து வெவ்வேறு தர்மத்தினருக்கும் உள்ளதோ, அவ்வாறே யதார்த்தமான சத்திய ஞானம் ஒரே ஒரு தந்தை யினுடையது அதாவது ஒரே ஒரு வழியே உள்ளது என்ற இந்த சப்தம் (வார்த்தை) எதுவரை உரக்க ஒலிக்கவில்லையோ, அதுவரை அனேக துரும்புகளின் ஆதாரத்தின் பக்கம் ஆத்மாக்கள் அலைவது நிற்காது. இப்பொழுது, இதுவும் ஒரு வழி, நல்ல வழி என்றே புரிந்துள்ளனர் ஆனால், ஒரே ஒரு தந்தையினுடைய ஒரே அறிமுகம், ஒரே வழியே இறுதியானது ஆகும். அனேக வழிகள் உள்ளன என்ற பிரமை முடிவடைவதே விஷ்வ சாந்திக்கான ஆதாரம் ஆகும். இந்த சத்திய அறிமுகத்தினை அல்லது சத்திய ஞானத்தின் சக்தியினுடைய அலை எதுவரை நாலாபுறங்களிலும் பரவாதோ, அதுவரை பிரத்யட்சத்தின் கொடியின் கீழே அனைத்து ஆத்மாக்களும் ஆதரவைப் பெற முடியாது. எனவே, பொன்விழா ஆண்டில் தந்தையின் வீட்டிற்கு விசேஷ அழைப்பு கொடுத்து வரவழைக்கிறீர்கள், தங்களுடைய மேடை, சிரேஷ்டமான சூழ்நிலை, சுத்தமான புத்தியின் தாக்கம், அன்பின் நிலம், தூய பாலனை உள்ளது. இத்தகைய வாயுமண்டலத்தில் தங்களது சத்திய ஞானத்தை பிரசித்தி பெறச் செய்வதே பிரத்யட்சத்தின் ஆரம்பம் ஆகும். எப்பொழுது படவிளக்கக் கண்காட்சி மூலம் பல்வேறு துறையின் சேவை ஆரம்பமானதோ, அப்பொழுது என்ன செய்தீர்கள் என்பது நினைவு உள்ளதா? முக்கியமாக ஞானத்தின் கேள்விகள் கொண்ட படிவத்தைப் (ஃபார்ம்) பூர்த்தி செய்ய வைத்தீர்கள் அல்லவா. பரமாத்மா சர்வவியாபியா அல்லது சர்வ வியாபி இல்லையா? கீதையின் பகவான் யார்? இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வைத்தீர்கள் அல்லவா? கருத்துக்களை எழுத வைத்தீர்கள் அல்லவா? புதிர் போட்டீர்கள். முதலில் இவற்றை ஆரம்பித்தீர்கள் ஆனால், போகப்போக இந்த விசயங்களை

மறைமுகமான முறையில் செய்துகொண்டே, தொடர்பு, அன்பை முன்னால் வைத்து நெருக்கத்தில் கொண்டு வந்தீர்கள். இம்முறை எப்பொழுது இந்த பூமிக்கு வருகின்றார்களோ, அப்பொழுது சத்தியமான அறிமுகத்தைத், தெளிவான அறிமுகத்தைக் கொடுங்கள். இதுவும் நன்றாக உள்ளது என்பது வெறும் உடன்படுகிற விசயம் ஆகும் ஆனால், ஒரே ஒரு தந்தையின் ஒரு யதார்த்தமான அறிமுகமானது தெளிவாக புத்தியில் வந்து விட வேண்டும். இந்த சமயத்தை இப்பொழுது கொண்டு வரவேண்டும். தந்தை இந்த ஞானத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார், தந்தை வந்திருக்கின்றார் என்று நேரடியாகக் கூறிக் கொண்டு மட்டும் இருக்கிறீர்கள் ஆனால், இதுவே பரமாத்ம ஞானம், பரமாத்மாவின் காரியம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டு செல்கின்றனரா? ஞானம் புதுமையாக உள்ளது என்பதை அனுபவம் செய்கின்றனரா? பரமாத்மா சர்வ வியாபியா அல்லது இல்லையா, ஒரே சமயம் தான் வருகின்றாரா? அல்லது அடிக்கடி வருகின்றாரா? என்பதைப் பற்றிய கருத்துப் பட்டறை (ஒர்க்ஷாப்) எப்பொழுதாவது வைத்திருக்கிறீர்களா? உலகத்தில் இதுவரை கேட்டிறாததை இங்கு கேட்டோம் என்று அவர்கள் புரிந்து கொள்ளும் விதமாகத் தெளிவான அறிமுகம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். யார் விசேஷமான பேச்சாளராக வருகின்றாரோ, அவருடன் இந்த ஞானத்தின் இரகசியங்களைப் பற்றிய ஆன்மிக உரையாடல் செய்வதன் மூலம் அவர்களுடைய புத்தியில் வந்து விடும். கூடவே, என்ன சொற்பொழிவு ஆற்றுகிறீர்களோ, அதிலும் கூட தங்களது மாற்றத்தின் அனுபவத்தைக் கூறி, ஒவ்வொரு பேச்சாளாரும், ஒவ்வொரு புது ஞான விசயத்தைத் தெளிவுபடுத்த முடியும். பரமாத்மா சர்வவியாபி அல்ல என்பது போன்ற நேரடியான தலைப்பு வைக்கக்கூடாது ஆனால், ஒரு தந்தையை ஒரு ரூபத்தில் அறிந்து கொள்வதன் மூலம் என்னென்ன விசேஷமான பிராப்திகள் கிடைத்திருக்கின்றனவோ, அந்தப் பிராப்திகளைக் கூறி சர்வவியாபி பற்றிய விசயங்களைத் தெளிவுபடுத்த முடியும். ஒரு பரந்தாம நிவாசி என்று புரிந்துகொண்டு நினைவு செய்வதன் மூலம் புத்தி எவ்வாறு ஒருமுகப்படுகிறது மற்றும் தந்தையின் சம்பந்தத்தின் மூலம் என்ன பிராப்திகளின் அனுபவம் ஏற்படுகிறது? இம்மாதிரியாக சத்தியம் மற்றும் பணிவு ஆகிய இரண்டு ரூபங்களின் மூலம் நிரூபிக்க முடியும். இதன் மூலம், இவர்கள் தங்களுடைய மகிமை பாடுகிறார்கள் என்ற அபிமானமும் தோன்றாது. பணிவு மற்றும் இரக்க

உணர்வு அபிமானத்தின் உணர்வை ஏற்படுத்தாது. முரளி கேட்கும்பொழுது அபிமானத்துடன் கூறுகிறார்கள் என்று சொல்லமாட்டார்கள். அதிகாரத்துடன் (அத்தாரிட்டி) சொல்கிறார்கள் என்று கூறுவார்கள். வார்த்தை எவ்வளவு தான் கடுமையானதாக இருந்தாலும் அபிமானம் என்று கூறமாட்டார்கள். அதிகாரத்தின் அனுபவத்தைச் செய்கின்றார்கள். ஏன் அவ்வாறு ஏற்படுகிறது? எந்தளவு அதிகாரம் உள்ளதோ, அந்தளவே பணிவு மற்றும் இரக்க உணர்வு இருக்கும். தந்தையோ குழந்தைகளுக்கு முன்னால் கூறுகின்றார், ஆனால், நீங்கள் அனைவரும் இந்த சிறப்புத்தன்மையுடன், இந்த விதிப்படி மேடையில் தெளிவுபடுத்த முடியும்.. ஏற்கனவே சொல்லப்பட்டது அல்லவா, அதுபோல் ஒன்று சர்வவியாபி என்ற விசயத்தை வைக்க வேண்டும், இரண்டாவது பெயர் ரூபத்திற்கு அப்பாற்பட்டவர் என்ற விசயத்தை வைக்க வேண்டும், மூன்றாவது நாடகத்தின் கருத்தை புத்தியில் வைக்க வேண்டும். ஆத்மாவின் புதிய விசேஷத்தன்மைகளைப் புத்தியில் வைக்க வேண்டும். விசேஷமான தலைப்புகள் என்னென்ன உள்ளனவோ, அவற்றை இலட்சியத்தில் வைத்து அனுபவம் மற்றும் பிராப்தியின் ஆதாரத்ததுடன் தெளிவுபடுத்த வேண்டும். இதன் மூலம் இந்த சத்தியமான ஞானத்தின் மூலமே சத்யுகம் ஸ்தாபனை ஆகிக் கொண்டு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பகவானின் மகாவாக்கியம் என்ன விசேஷத்தன்மை கொண்டுள்ளது என்றால் அதை பகவானைத் தவிர வேறு எவரும் கூறமுடியாது. மனிதர், மனிதருடைய சத்குருவாக, சத்தியத் தந்தையாக ஒருபொழுதும் ஆகமுடியாது. மனிதர் பரமாத்மா ஆகமுடியாது போன்ற விசேஷமான சுலோகன் களை நீங்கள் நேரடியான வார்த்தைகளில் கூறுகிறீர்கள். இத்தகைய விசேஷமான கருத்துக்களை அவ்வப்போது கேட்டு வந்திருக்கிறீர்கள். அதனைக் கொண்டு வடிவமைத்திடுங்கள். இதன் மூலம் சத்திய ஞானத்தின் தெளிவு ஏற்படும். புதிய உலகிற்கான புதிய ஞானம் இதுவாகும். புதுமை மற்றும் சத்தியம் இரண்டும் அனுபவம் ஆக வேண்டும். மாநாடு நடத்துகிறீர்கள், அதில் சேவை நன்றாக நடக்கிறது. மாநாட்டிற்காக என்னென்ன சாதனங்களை உருவாக்குகிறீர்கள், சில சமயம் பட்டயம் (அதிகாரப்பத்திரம்), சில சமயம் அதைப்போன்ற வேறு ஒன்றை ஏற்பாடு செய்கிறீர்கள். இதன் மூலம் கூட தொடர்பை அதிகப்படுத்துவதற்கான சாதனத்தை உருவாக்குகிறீர்கள். இது கூட நல்ல சாதனமாகும். ஏனெனில், மாநாட்டிற்குப் பின்னும் தொடர்ந்து சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைக்கிறது ஆனால், இப்பொழுது

யார் வந்தாலும், ஆம், இது நல்ல விசயம், திட்டம் நன்றாக உள்ளது, பட்டயம் நன்றாக உள்ளது, சேவையின் சாதனமும் நன்றாக உள்ளது என்று கூறுகின்றனர். புதுமையான ஞானம் இன்று தெளிவானது என்று கூறிவிட்டுச் செல்ல வேண்டும். இவ்வாறு விசேஷமாக 5, 6 பேர்களை தயார் செய்ய வேண்டும். ஏனெனில், அனைவரின் மத்தியில் இந்த உரையாடல் செய்ய முடியாது ஆனால், விசேஷமாக யார் வருகிறார்களோ, டிக்கட் போட்டு அழைத்து வருகிறீர்களோ, விசேஷ பாலனையும் கிடைக்கிறதோ, அவர்களிலும் கூட யார் புகழ்வாய்ந்தவர்களோ, அவர்களுடன் இந்த உரையாடல் செய்து அவர்களுடைய புத்தியில் தெளிவாகப் பதிய வைக்க வேண்டும். இவர்களுக்குத் தங்களுடைய போதை அதிகமாக உள்ளது என்றில்லாமல், இது சத்தியமானது என்று தோன்றும்படியான அத்தகைய திட்டத்தை உருவாக்குங்கள். இதைத் தான் அம்பும் தைக்க வேண்டும், ஆனால், வலியும் ஏற்படக்கூடாது என்று கூறப்படு கிறது. கூச்சலிடக் கூடாது, ஆனால், குஷியில் நடனமாட வேண்டும். சொற்பொழிவின் வடிவமைப் பேயே புதியதாக மாற்றுங்கள். விஷ்வ சாந்தியைப் பற்றி நிறைய சொற்பொழிவு ஆற்றிவிட்டீர்கள். ஆன்மிகத்தன்மையின் அவசியம் உள்ளது, ஆன்மிக சக்தி இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. இதுவோ, செய்தித்தாளில் வருகிறது, ஆனால், ஆன்மிக சக்தி என்றால் என்ன? ஆன்மிக ஞானம் என்றால் என்ன? இதற்கு மூலமானவர் யார்? இப்பொழுது இதை உணர்பவர்களாக இன்னும் ஆக வில்லை. பகவானின் காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். தாய்மார்கள் மிகவும் நல்ல காரியம் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று இப்பொழுது கூறுகின்றனர். நேரத்தின் அனுசாரமாக இந்த நிலத்தையும் (சூழ்நிலையையும்) உருவாக்க வேண்டும். மகன் தந்தையை வெளிப்படுத்துவது போல் தந்தையும் மகனை வெளிப் படுத்து கின்றார். இப்பொழுது தந்தை மகனை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார். இந்த உரத்த ஒலி பிரத்யட்சத்தின் கொடியைப் பறக்கவிடும். புரிந்ததா?

பொன்விழா ஆண்டில் என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்தது அல்லவா? மற்ற இடங்களில் சூழ் நிலையைப் பார்க்க வேண்டியதாக உள்ளது, ஆனால், தந்தையின் வீடு, தங்களுடைய வீடு தங்களுடைய மேடை உள்ளது, எனவே, அத்தகைய இடத்தில் இந்த பிரத்யட்சத்தின் ஒலியை உரக்க ஒலிக்க முடியும். இவ்வாறு குறைந்த நபர்கள் கூட இந்த

விசயத்தில் நிச்சயபுத்தி உடையவர்களாக ஆகி விட்டார்கள் என்றால் அவர்களே சப்தத்தை உரக்க ஒலிப்பார்கள். இப்பொழுது ரிசல்ட் என்ன? தொடர்பு மற்றும் அன்பில் சுயம் வந்தவர்களே இந்த சேவையை செய்து கொண்டிருக்கிறார்கள், பிறரையும் கூட அன்பு மற்றும் தொடர்பில் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். எந்தளவு சுயம் தான் ஆகிறார்களோ, அந்தளவு சேவை செய்து கொண்டு இருக்கிறார்கள். இதைக் கூட வெற்றி என்று கூறலாம் அல்லவா! ஆனால், இப்பொழுது இன்னும் முன்னேற வேண்டும். பெயர் அவப்பெயராக இருந்தது. முதலில் பயந்தார்கள், இப்பொழுது வர விரும்புகின்றார்கள். இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது அல்லவா? முன்னர் பெயரைக் கேட்பதற்கு விரும்பாதவர்களாக இருந்தனர், இப்பொழுது பெயரைச் சொல்வதற்கு விருப்பம் கொண்டிருக்கின்றனர். 50 வருடத்தில் இந்த வெற்றியை அடைந்திருக்கிறீர்கள். நிலத்தை உருவாக்குவற்கே சமயம் ஆகிறது. 50 வருடங்கள் இதில் ஈடுபட்டாயிற்று,, பிறகு, இன்னும் என்னவாகும் என்று நினைக்காதீர்கள். முதலில் நிலத்தை உழுவதற்குத் தகுதியானதாக ஆக்குவதற்கு சமயம் ஆகிறது. விதை விதைப்பதற்கு சமயம் ஆகுவதில்லை. சக்திசாலியான விதையின் பலன் சக்திசாலியானதாக வெளிப்படுகிறது. இதுவரை என்ன நடந்திருக்கிறதோ, அதுவே நடந்திருக்க வேண்டும், அதுவே சரியானதும் ஆகும். நல்லது.

(அயல்நாட்டுக் குழந்தைகளைப் பார்த்து) இந்த சாதகப் பறவைகள் நன்றாக உள்ளனர். பிரம்மா தந்தை நீண்ட கால அழைப்பிற்குப் பின்னர் உங்களுக்கு பிறவி கொடுத்திருக்கின்றார். விசேஷமான அழைப்பின் மூலம் பிறந்திருக்கிறீர்கள். தாமதாகி விட்டது உண்மை தான், ஆனால், ஆரோக்கியமாக மற்றும் நன்றாகப் பிறந்திருக்கிறீர்கள். தந்தையின் குரல் வந்து சேர்ந்தது, ஆனால், சமயம் வந்தவுடன் அருகாமையில் வந்து விட்டீர்கள். விசேஷமாக பிரம்மா தந்தை மகிழ்ச்சி அடைகின்றார். தந்தை மகிழ்ச்சி அடைவார் என்றால் குழந்தைகளும் மகிழ்ச்சி அடைவார்கள் ஆனால், விசேஷமாக பிரம்மா தந்தையின் அன்பு உள்ளது, ஆகையினால், பெரும்பான்மையினர் பிரம்மா தந்தையை பார்க்காத போதிலும் பார்த்தது போன்ற அனுபவம் செய்கின்றீர்கள். சித்திரத்தில் கூட சைத்தன்யத்தின் அனுபவம் செய்கின்றீர்கள். இந்த விசேஷத்தன்மை உள்ளது. பிரம்மா தந்தையினுடைய அன்பின் விசேஷமான சகயோகம் ஆத்மாக்களாகிய உங்களுக்கு உள்ளது. பாரதத்தினர், பிரம்மா ஏன், இது ஏன்? என்று கேள்வி

கேட்பார்கள் ஆனால், அயல்நாட்டுக் குழந்தைகள் வந்தவுடனேயே பிரம்மா தந்தையின் கவர்ச்சியினால் அன்பில் கட்டுண்டுவிட்டனர். எனவே, இந்த விசேஷமான சகயோகத்தின் வரதானம் உள்ளது. ஆகையினால், பார்த்திராத போதிலும், அதிகப் பாலனையின் அனுபவத்தை செய்து கொண்டு இருக்கிறீர்கள். உள்ளத்தில் இருந்து பாப்தாதா என்று கூறுகின்றீர்கள். இது விசே‘மான சூட்சும அன்பினுடைய சம்பந்தம் ஆகும். இவர்கள் என் பின்னால் எவ்வாறு வருவார்கள் என்று தந்தை யோசிக்கவில்லை. நீங்களும் யோசிக்கவில்லை, பிரம்மாவும் யோசிக்கவில்லை. எதிரிலேயே இருக்கின்றீர்கள். ஆகார ரூபத்தில் கூட சாகார ரூபத்திற்குச் சமமாக பாலனை கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். இவ்வாறு அனுபவம் செய்கின்றீர்கள் அல்லவா? குறைவான சமயத்தில் எத்தனை நல்ல ஆசிரியர்கள் தயாராகி விட்டனர்! அயல்நாட்டு சேவை துவங்கி எவ்வளவு சமயம் ஆகியுள்ளது? எத்தனை ஆசிரியர்கள் தயாராகி உள்ளனர்? நன்றாக உள்ளது, பாப்தாதா குழந்தைகளுடைய சேவையின் ஈடுபாட்டைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஏனெனில், விசேஷமான சூட்சும பாலனை கிடைக்கின்றது அல்லவா. பிரம்மா தந்தையின் விசேஷ சமஸ்காரமாக என்ன பார்த்தீர்கள்? சேவை இல்லாமல் தந்தையால் இருக்க முடிந்ததா? எனவே, அயல்நாட்டில் தொலைவில் இருக்கக்கூடியவர் களுக்கு இந்த விசேஷபாலனையின் சகயோகம் கிடைத்திருக்கும் காரணத்தினால் சேவையின் ஊக்கம் அதிகமாக உள்ளது.

பொன்விழா ஆண்டில் வேறு என்ன செய்திருக்கிறீர்கள்? தானும் பொன்னானவர்கள் மற்றும் விழாவும் பொன்விழா. நல்லது. அவசியம் சமநிலையின் கவனம் வைக்க வேண்டும். சுயம் மற்றும் சேவை. சுய முன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றம். சமநிலை வைப்பதன் மூலம் தன்னுடன் சேர்த்து அனேக ஆத்மாக்களுக்கு ஆசீர்வாதங்கள் கிடைக்கச் செய்வதற்கு நிமித்தம் ஆனவர்கள் ஆகி விடுவீர்கள். புரிந்ததா! சேவையினுடைய திட்டத்தை உருவாக்கும் பொழுது முதலில் சுய ஸ்திதியின் மீது கவனம் இருக்க வேண்டும், அப்பொழுதே திட்டத்தில் சக்தி நிரம்பும். திட்டம் என்பது விதையாகும். விதையில் ஒருவேளை சக்தி இல்லை, சக்திசாலியான விதையாக இல்லை எனில், எவ்வளவு தான் உழைத்தாலும் அது சிரேஷ்ட பலனைத் தராது. ஆகையினால், திட்டத்தின்

கூடவே சுய ஸ்திதியின் சக்தியை அவசியம் நிறைத்துக் கொண்டே இருக்க வேண்டும். புரிந்ததா. நல்லது.

அத்தகைய சத்தியத்தை பிரத்யட்சம் செய்யக்கூடிய, சதா சத்தியம் மற்றும் பணிவினுடைய சமநிலை கொண்டிருக்கக்கூடிய, ஒவ்வொரு வார்த்தையின் மூலம் ஒரு தந்தையின் ஒரு அறிமுகத்தை நிரூபிக்கக்கூடிய, சதா சுய முன்னேற்றத்தின் மூலம் வெற்றியை அடையக்கூடிய, சேவையில் தந்தையினுடைய பிரத்யட்சத்தின் கொடியைப் பறக்கவிடக்கூடிய, அத்தகைய சத்குருவினுடைய, சத்தியத் தந்தையினுடைய சத்தியமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம் உரித்தாகுக.

**விடைபெறும் சமயம் தாதிஜி போபால் செல்வதற்கு விடைபெறுகிறார்கள்:** சென்றாலும் சேவை, இருந்தாலும் சேவை. சேவைக்கு நிமித்தம் ஆகியிருக்கும் குழந்தை களுடைய ஒவ்வொரு எண்ணத்தில், ஒவ்வொரு விநாடியில் சேவை அடங்கியுள்ளது. உங்களைப் பார்த்து எந்தளவு ஊக்கம், உற்சாகம் அதிகரிக்குமோ, அந்தளவே தந்தையை நினைவு செய்வார்கள். சேவையில் முன்னேறு வதனாலேயே வெற்றி சதா கூடவே இருக்கிறது. தந்தையையும் உடன் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறீர்கள், வெற்றியையும் உடன் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறீர்கள். எந்த இடத்திற்குச் செல்வீர்களோ, அங்கு வெற்றி இருக்கும். (மோகினி சகோதரியிடம்) சுற்றுவதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். சுற்றுவது என்றால் அனேக ஆத்மாக்களுக்கு சுய முன்னேற்றத்திற்கான சகயோகம் கொடுப்பதாகும். கூடவே எப்பொழுது மேடையில் வாய்ப்பு கிடைக்கிறதோ, அப்பொழுது புதுமையாக சொற்பொழிவாற்றிவிட்டு வரவேண்டும். முதலில் நீங்கள் ஆரம்பிக்க வேண்டும், அப்பொழுது முதல் எண்ணில் வந்து விடுவீர்கள். எங்கு சென்றாலும் அனைவரும் என்ன கேட்பார்கள்? பாப்தாதாவின் அன்பு நினைவுகளைக் கொண்டு வந்திருக்கிறீர்களா? எவ்வாறு பாப்தாதா அன்பினுடைய, சகயோகத்தினுடைய சக்தியைக் கொடுக்கின்றார் களோ, அவ்வாறே நீங்களும் கூட தந்தையிட மிருந்து அடைந்த அன்பு, சகயோகத்தின் சக்தியைக் கொடுத்துக் கொண்டே செல்ல வேண்டும். அனைவரையும் ஊக்கம் உற்சாகத்தில் பறக்க வைப்பதற்காக ஏதாவதொரு அத்தகைய மந்திரம் போட்டுக் கொண்டே

இருக்க வேண்டும். அனைவரும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பார்கள். ஆன்மிகத்தன்மையின் குஷியில் அனைவரையும் நடனமாடச் செய்ய வேண்டும் மற்றும் இரமணீகரத்தின் மூலம் அனைவரையும் குஷி குஷியாக முயற்சியில் முன்னேறுவதற்குக் கற்பிக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: சுயத்தின் சக்கரத்தை அறிந்து ஞான சொரூப ஆத்மா ஆகக்கூடிய பிரபுவிற்குப் பிரியமானவர் ஆகுக!**

ஆத்மாவிற்கு இந்த சிருஷ்டிச் சக்கரத்தில் என்னென்ன நடிப்பு உள்ளது, அதை அறிந்து கொள்வது என்றால் சுயதரிசன சக்கரதாரி ஆகுவதாகும். முழு சக்கரத்தைப் பற்றிய ஞானத்தை புத்தியில் சரியான முறையில் தாரணை செய்வது தான் சுயதரிசன சக்கரத்தை சுழற்றுவதாகும். சுயத்தின் சக்கரத்தை அறிந்துகொள்வது என்றால் ஞான சொரூப ஆத்மா ஆகுவதாகும். அத்தகைய ஞான சொரூப ஆத்மாவே பிரபுவிற்குப் பிரியமானவர். அவருக்கு முன்னால் மாயை நிற்க முடியாது. இந்த சுயதரிசன சக்கரமே எதிர்காலத்தில் சக்கரவர்த்தி இராஜாவாக ஆக்கி விடுகிறது.

**சுலோகன்: ஒவ்வொரு குழந்தையும் தந்தைக்குச் சமமாக வெளிப்படையான சான்றாக (பிரத்யட்ச பிரமாணம்) ஆனீர்கள் என்றால், பிரஜைகள் விரைவாகத் தயாராகி விடுவார்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 15.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கடின உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான சுலபமான வழி -நிராகார சொரூபத்தில் நிலைத்திருப்பது!

பாப்தாதா குழந்தைகளின் அன்பின் காரணமாக சப்தத்திலிருந்து விலகி நிர்வாண நிலையிலிருந்து சப்தத்தில் வருகிறார். எதற்காக? குழந்தைகளுக்கு தனக்குச் சமமாக நிர்வாண நிலையின் அனுபவத்தை செய்விப்பதற்காக! நிர்வாண இனிமையான இல்லத்திற்கு அழைத்துச் செல்வதற் காக! நிர்வாண நிலை எந்த தீய எண்ணமும் இல்லாத நிலை. நிர்வாண நிலை விகாரங்கள் அற்ற நிலை. நிர்வாண நிலையிலிருந்து நிராகார நிலையிலிருந்து சாகாகர அதாவது உடல் சொரூப மானவர் ஆகி, சப்தத்தில் வருகிறார். உடலில் வந்த பொழுது உடலற்ற நிலையில் நினைவு எப்பொழுதும் நினைவில் இருக்கிறது. நான் உடல் அற்றவன் உடலின் ஆதாரத்தை எடுத்து பேசிக் கொண்டிருக் கிறேன். உடலில் இருந்தபொழுதும் உடலற்ற நிலையில் நினைவில் இருப்பது என்பது தான் உடலற்றவராக இருப்பவர் உடல் மூலமாக பேச்சிலும், காரியத்திலும் வருவது. உண்மையான சொரூபம் உடலற்ற சொரூபம், உடல் ஆதாரமாக, இந்த இரட்டை நிலையில் உடலற்றவர் உடலில் இருக்கிறேன் என்பது சக்திசாலியான நிலை உடலின் ஆதாரத்தை எடுத்த போதிலும் உடலற்ற சொரூபத்தை மறக்காதீர்கள். நீங்கள் மறக்கிறீர்கள், எனவே நினைவு செய்வதற்குக் கடினமாக இருக்கிறது. எப்படி உலக வாழ்க்கையில் தன்னுடைய உடல் சொரூபம் இயல்பாகவே நான் இன்னார் மற்றும் நான் இன்னார், இந்த நேரம் இந்த காரியம் செய்துக் கொண்டிருக்கிறேன் என்பது நினைவில் இருக்கும். செய்யும் காரியம் மாறும், ஆனால் நான் இன்னார் என்பது மாறுவதில்லை, மறப்பதும் இல்லை. அதே போல் நான் உடலற்ற ஆத்மா என்ற இந்த உண்மையான சொரூபத்தை எந்த காரியம்

செய்துக் கொண்டிருந்தபோதிலும் இயல்பாக மற்றும் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுது ஒரு தடவை நினைவில் வந்து விட்டது. நான் உடலற்ற ஆத்மா என்று அறிமுகமும் கிடைத்து விட்டது, அறிமுகம் என்றால் ஞானம் அப்படி ஞானத்தின் சக்தி மூலமாக சொரூபத்தைத் தெரிந்து கொண்டீர்கள், தெரிந்து கொண்ட பிறகு எப்படி மறக்க முடியும். எப்படி ஞானத்தின் சக்தி மூலம் உடல் உணர்வை மறக்க வைத்தாலும் மறக்க முடிவதில்லை. அப்படி யானால் இந்த ஆத்மீக சொரூபத்தை எப்படி மறக்க முடியும்? எனவே, தன்னைத்தானே கேளுங்கள் மற்றும் பயிற்சி செய்யுங்கள். நடைமுறையில் காரியங்கள் செய்துக் கொண்டே உடலின் ஆதாரத்தை எடுத்து இந்த காரியத்தை செய்துக் கொண்டிருக்கிறேன் என்ற நினைவு இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். இவர் இயல்பாகவே தீய எண்ணம் அற்ற நிலை உடலற்ற நிலை, தடையற்ற நிலை சுலபமாகவே இருக்கும். கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். எப்பொழுது நீங்கள் அடிக்கடி மறக்கிறீர்களோ அப்பொழுதுதான் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. பிறகு நினைவு செய்வதற்கும் கடும் உழைப்பு செய்கிறீர்கள். எனவே, ஏன் மறக்கவே செய்கிறீர்கள்? நீங்கள் யார்? உடலா அல்லது உடலற்ற ஆத்மாவா என்று பாப்தாதா கேட்கிறார். நீங்கள் உடலற்ற ஆத்மாக்கள் தான் இல்லையா? அப்படியானால் உடலற்றவராக இருந்தபோதிலும் ஏன் மறந்து விடுகிறீர்கள். உண்மையான சொரூபம் மறந்து விடுகிறது, போலியானவர் எனவே வந்து விடுகிறதா சில நேரம் பாப்தாதா குழந்தைகள் மீது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. தன்னைத் தான் மறந்து விடுகிறார்கள். மேலும் மறந்து பிறகு என்ன செய்கிறார்கள்? தன்னைத் தானே மறந்து மிகவும் நொந்து போகிறார்கள். எப்படி தந்தையையும் அன்போடு உடலற்ற நிலையிலிருந்து உடலில் வரவேற்று அழைத்து வர முடியும் என்றால், யார் மீது அன்பு இருக்கிறதோ அவர் மாதிரி உடலற்ற நிலையில் நிலைத்திருக்க முடியாதா? பாப்தாதாவிற்கு குழந்தைகள் கடுமையாக உழைப்பதைப் பார்க்க முடியாது. மாஸ்டர் சர்வ சக்திவான் மேலும் கடும் உழைப்பா ? நீங்கள் மாஸ்டர் சர்வசக்திவான் அனைத்து சக்திகளின் எஜமானன். எந்த சக்தியை எந்த நேரத்திலும் நல்ல எண்ணத்தோடு வரவழைத்தீர்கள் என்றால், அந்த சக்தி எஜமானர்கள் உங்கள் எதிரில் ஆஜர் ஆகி விடும். அந்தமாதிரியான எஜமானன் யாருக்கு அனைத்து சக்திகளும் சேவாதாரியாக இருக்கிறார்களோ அவர் கடுமையாக

உழைப்பாரா அல்லது நல்ல எண்ணத்தோடு ஆணையிடுவாரா? என்ன செய்வீர்கள் நீங்கள் ராஜாதான் இல்லையா அல்லது பிரஜையா? பொதுவாகவே நல்ல தகுதியான குழந்தை இருக்கிறார் என்றால் அவரை என்னவென்று கூறுவார்கள்? இராஜா குழந்தை என்று கூறுவார்கள் இல்லையா? அப்படியானால் நீங்கள் யார் ? நீங்கள் இராஜா குழந்தைகளா அல்லது அடிமை குழந்தைகளா? நீங்கள் அதிகாரி ஆத்மாக்கள் தான் இல்லையா? இந்த சக்திகள், இந்த குணங்கள் இவை அனைத்தும் உங்களுடைய சேவாதாரிகள். வரவழையுங்கள் உடனே ஆஜர் ஆகி விடும். யார் பலவீனமாக இருப்பாரோ அவருக்கு சக்தி சாலியான ஆயுதங்கள் இருந்தபோதிலும் பலவீனத்தின் காரணமாக அவர் தோல்வியடைந்து விடுவார். நீங்கள் பலவீனமானவரா என்ன? நீங்கள் பலம் நிறைந்த குழந்தைகள் தான் இல்லையா? சர்வசக்திவானின் குழந்தைகள் பலவீனமாக இருக்கின்றார் என்றால், அனைவரும் என்ன கூறுவார்கள்? நன்றாக இருக்குமா? எனவே வரவழைக்க, ஆணையிட கற்றுக் கொள்ளுங்கள் ஆனால் சேவாதாரிகள் யாருடைய ஆணையை ஏற்று நடப்பார்கள்? யார் எஜமானனாக இருப்பாரோ அவருடைய ஆணையைத் தான் ஏற்று நடப்பார்கள். எஜமானன் அவரே சேவாதாரி ஆகி விட்டார், கடும் உழைப்பு செய்பவராக இருக்கின்றார் என்றால் சேவாதாரி ஆகி விட்டார் இல்லையா? மனதின் கடும் உழைப்பிலிருந்து இப்பொழுது விடுபட்டு விட்டீர்கள். உடலால் உழைக்கும் யக்ஞ சேவை வேறு விசயம் ஆகும். அதுவும் யக்ஞ சேவையின் மகத்துவத்தைத் தெரிந்து கொண்டதினால் கடும் உழைப்பாக அனுபவம் ஆகாது. மதுபன்னில் எப்பொழுது தொடர்பில் இருக்கும் ஆத்மாக்கள் வருகிறார்கள் மற்றும் பார்க்கிறார்கள், இத்தனை அதிக எண்ணிக்கையில் ஆத்மாக்களுக்கு உணவு தயாரிக்கப்படுகிறது மேலும் அனைத்து காரியங்களும் நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்து பார்த்து இவர்கள் எந்தளவு கடுமையான வேலையை எப்படி செய்கிறார்கள்? என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வளவு பெரிய காரியம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது ஆனால் செய்பவர்கள் அந்த மாதிரி பெரிய காரியத்தையும் என்னவென்று நினைக்கிறார்கள் ? சேவையின் மகத்துவத்தின் காரணமாக இதுவோ அவர்களுக்கு விளையாட்டாக ஆகிறது, கடும் உழைப்பாக ஆவதில்லை. அந்தமாதிரி மகத்துவத்தின் காரணமாக தந்தை மீது இருக்கும் அன்பின் காரணமாக கடும் உழைப்பின் நிலை மாறிவிடுகிறது. அதே போல்

மனதின் உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான நேரம் இப்பொழுது வந்து விட்டது. துவாபரயுகத் திலிருந்து தேடுவதில், துடிப்பதில், அழைப்பதில் மனதால் உழைத்து வந்திருக்கிறீர்கள். மனதின் உழைப்பின் காரணமாக பணம் சம்பாதிப்பின் வேகம் கடுமையாக அதிகரித்துக் கொண்டே ஆகி விட்டது. இன்று யாரிடம் கேட்டாலும் என்ன கூறுகிறார்கள்? பணம் சம்பாதிப்பது என்பது, நினைத்தால் சித்தி வீட்டிற்குச் செல்வது போல் சாதாரண விசயம் இல்லை. மனதின் உழைப்பின் காரணமாக பணம் சம்பாதிப்பதிலும் உழைப்பை அதிகரித்து விட்டீர்கள். மேலும் உடலோ நோயற்றதாக ஆகி விட்டது, எனவே உடலால் செய்யும் காரியத்திலும் கடும் உழைப்பு இருக்கிறது, மனதிற்கும் உழைப்பு பணத்திற்கும் உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. இந்த அளவு மட்டும் இல்லை, ஆனால் இன்று குடும்பத்திலும் அன்பு வைத்து நடந்து கொள்வதிலும் கடினமாக இருக்கிறது. ஒரு நேரம் ஒருவர் கோபப்படுகிறார், மறு நேரம் இன்னொருவர் கோபப்படுகிறார்...... பிறகு இவர்களை சமாதானம் செய்வதற்கும் கடினமாக இருக்கிறது. இன்று உன்னுடையவர், நாளை உன்னுடையவர் இல்லை பிரிந்து சென்று விடுகிறார். அந்த மாதிரி அனைத்து விதமான கடின உழைப்பு செய்து களைப்படைந்து விட்டிருந்தீர்கள் இல்லையா? உடலால், மனதால், பணத்தினால், சம்மந்தத்தினால் அப்படி அனைத்திலும் களைப்பு அடைந்து விட்டீர்கள்.

முதலில் பாப்தாதா மனதின் கடின உழைப்பை அகற்றிவிடுகிறார், ஏனென்றால் மனம் தான் விதை. மனதின் கடின உழைப்பு உடலின், பணத்தின் கடின உழைப்பை அனுபவம் செய்விக்கிறது. எப்பொழுது மனம் சரியாக இருக்கவில்லையென்றால் ஏதாவது காரியம் செய்ய வேண்டியதாக இருந்தது என்றால், இன்று இது நடக்காது என்று கூறுவார்கள். நோயற்றவராக இருக்க மாட்டார், ஆனால் தனக்கு 103 டிகிரி காய்ச்சல் இருப்பதாக நினைப்பார். அந்த மாதிரி மனதின் கடின உழைப்பு உடலின் கடின உழைப்பை அனுபவம் செய்விக்கிறது. பணத்திலும் அதே மாதிரிதான் மனம் கொஞ்சம் சரியாக இருக்காது அதனால் மிகவும் அதிக வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று கூறுவார்கள். சூழ்நிலை மிக மோசமானது, சம்பாதிப்பது மிகவும் கடினம் என்று கூறுவார்கள். மேலும் எப்பொழுது மனம் குஷியாக இருக்கிறது என்றால் இது ஒன்றும் பெரிய விசயம் இல்லை என்று கூறுவார். வேலை அதே தான் இருக்கும் ஆனால் மனதின் உழைப்பு பணத்தின் உழைப்பையும்

அனுபவம் செய்விக்கிறது. மனதின் பலவீனம் வாயுமண்டலத்திலும் பலவீனத்தை கொண்டு வருகிறது. பாப்தாதாவிற்கு குழந்தைகளின் மனக் கஷ்டத்தைப் பார்க்க முடியாது. 63 ஜென்மங்களில் கடுமையாக உழைத்திருப்பீர்கள். இப்பொழுது ஒரு ஜென்மம் மகிழ்ச்சியாக இருப்பதற்கான ஜென்மம் அன்பின் ஜென்மம், பிராப்திகளின் ஜென்மம் வரதானங்களின் ஜென்மம். உதவி பெறுவதற்கும் உதவி கிடைப்பதற்குமான ஜென்மம். இருந்தும் இந்த ஜென்மத்தில் கூட ஏன் கடின உழைப்பு இருக்கிறது? எனவே இப்பொழுது கடின உழைப்பை அன்பாக மாற்றம் செய்யுங்கள், மகத்துவத்தை தெரிந்து அழித்து விடுங்கள்.

இன்று பாப்தாதா அவர்களுக்குள் மிகவும் உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள் குழந்தைகள் கஷ்டப் படுவதைப் பார்த்து. என்ன செய்கிறார், பாப்தாதா புன்சிரிப்பு செய்துக் கொண்டிருந்தார், மனதின் கடினம் காரணமாக என்ன ஆகிறது, என்ன செய்கிறார்கள் என்று நினைத்து புன்முறுவல் இட்டுக் கொண்டிருந்தார் உடல் ஊனமுற்ற குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள், சிலநேரம் குழந்தைகளுக்கு வாய் இருக்காது, சில நேரம் காது இருக்காது, சில நேரம் கை இருக்காது. அந்த மாதிரி வீணானதின் வம்சா வழிகளை மிக அதிகம் பெற்றுக் கொள்கிறார்கள், மேலும் பிறகு எவற்றை பெற்றுக் கொண்டார்களோ அவற்றை என்ன செய்வது? அவற்றை வளர்க்கும் காரணத்தினால் கடினமாக உழைக்க வேண்டியதாக இருக்கிறது. அந்தமாதிரியான படைப்பை படைத்த காரணத்தினால் அதிகமாக உழைத்து களைப்படைந்து விடுகிறார்கள். மனம் உடைந்தும் போய்விடு கிறார்கள். மிகவும் கடினமாக அனுபவம் ஆகிறது. நல்லது தான்! ஆனால் மிகக் கடினமானது. விடவும் விரும்புவதில்லை, பறக்கவும் விரும்புவதில்லை. எனவே என்ன செய்ய வேண்டியதாக இருக்கிறது. நடக்க வேண்டும். நடப்பதிலோ அவசியம் கடினம் இருக்கும் இல்லையா? எனவே, இப்பொழுது பலவீனமான படைப்புகளைப் படைப்பதை முடிவு கட்டுனீர்கள் என்றால், மனதின் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். சிரிப்பூட்டும் விசயமாக என்ன கூறுகிறார்கள்? இந்த படைப்பை ஏன் படைத்தீர்கள் என்று தந்தை கேட்கின்றார் : அதற்கு எப்படி இன்றைய நாட்களின் மனிதர்கள் என்ன செய்வது ஈஸ்வரன் கொடுத்து விடுகிறார் என்று கூறுகிறார்கள் இல்லையா! பழியை ஈஸ்வரன் மீது

போட்டு விடுகிறார்கள் இல்லையா? அதே போல் இந்த வீணான படைப்பின் மீது என்ன கூறுகிறார்கள்? நாங்கள் விரும்புவதில்லை, ஆனால் மாயா வந்து விடுகிறது. எங்களுடைய விருப்பம் இல்லை, ஆனால் நடந்து விடுகிறது எனவே, சர்வ சக்திவான் தந்தையின் குழந்தைகள் எஜமானன் ஆகுங்கள், இராஜா ஆகுங்கள் பலவீனம் என்றால், அடிமையான பிரஜை, எஜமானன் என்றால், சக்திசாலியான இராஜா. எனவே, எஜமானன் ஆகி வரவழையுங்கள் சுய நிலையின் சிரேஷ்ட சிம்மாசனத்தில் அமருங்கள். சிம்மாசனத்தில் அமர்ந்துக் கொண்டு சக்தி என்ற சேவாதாரிகளை வரவழையுங்கள், ஆணையிடுங்கள், உங்களுடைய சேவாதாரி உங்களுடைய ஆணைப்படி நடக்கவில்லை என்று இருக்கவே முடியாது. பிறகு என்ன செய்வது சகித்துக் கொள்ளும் சக்தி இல்லாத காரணத்தினால் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று கூறமாட்டீர்கள், உள் அடக்கும் சக்தி குறைவாக இருக்கிறது எனவே, அந்த மாதிரி ஆனது என்று கூற மாட்டீர்கள். உங்களுடைய சேவாதாரி நேரத்தில் காரியத்தில் வரவில்லை என்று சேவாதாரிக்கு என்ன ஆனது? காரியம் முடிந்து விட்டது, பிறகு சேவாதாரி வருகிறார் என்றால் என்ன ஆகும். யாருக்கு நேரத்தின் மகத்துவம் இருக்கிறதோ அவருடைய சேவாதாரியும் நேரத்தின் மகத்துவத்தைத் தெரிந்து ஆஜர் ஆகி விடுவார். எனவே, என்ன செய்ய வேண்டும்? சிம்மாசனத்தில் அமருவது நல்லதா அல்லது கடின உழைப்பு செய்வது நல்லதா? இப்போது இதில் நேரம் கொடுப்பதற்கான அவசியம் இல்லை. கடின உழைப்பு செய்வது சரியாக இருக்கிறதா அல்லது எஜமானன் ஆவது சரியாக படுகிறதா? எது நன்றாக இருக்கிறது? இதற்காக இந்த பயிற்சியை மட்டும் எப்பொழுதும் செய்துக் கொண்டே இருங்கள் என்று ஏற்கனவே கூறினோம்? இல்லையா உடலற்றவனாக இருக்கும் நான் உடலின் ஆதாரத்தினால் இந்த காரியத்தை செய்துக் கொண்டிருக்கிறேன் செய்விப்பவனாகி கர்ம இந்திரியங்கள் மூலம் செய்வியுங்கள். தன்னுடைய உடலற்ற உண்மையான சொரூபத்தை நினைவில் வைத்தீர்கள் என்றால், உண்மை யான சொரூபத்தின் குணங்கள் சக்திகள் இயல்பாகவே வெளிப்படும். எப்படி சொரூபம் இருக்குமோ அதேபோல் குணம் மற்றும் சக்திகள் இயல்பாகவே காரியத்தில் வருகின்றன. எப்படி கன்னியா எப்பொழுது தாய் ஆகி விடுகிறாள் என்றால் தாயின் சொரூபத்தில் சேவை பாவனை, தியாகம், அன்பு, களைப்பற்ற சேவை ஆகிய குணங்கள் மற்றும் சக்திகள்

இயல்பாகவே வெளிப்படுகிறது தான் இல்லையா? எனவே, அனாதி அழியாத சொரூபத்தின் நினைவு இருப்பதினால் இயல்பாகவே இந்த குணங்கள் மற்றும் சக்திகள் இயல்பாகவே வெளிப்படும். எப்படி சொரூபத்தின் நினைவு, உன்னத நிலையை தானாகவே உருவாக்கும். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? கடின உழைப்பு என்ற வார்த்தையை வாழ்க்கையிலிருந்து அகற்றி விடுங்கள். உழைப்பு செய்யும் காரணத்தினால் கடினமாக அனுபவம் ஆகிறது. கடின உழைப்பு முடிந்து விட்டது என்றால், கடினம் என்ற வார்த்தையும் தானாகவே அகன்று விடும். நல்லது.

எப்பொழுதும் கடினத்தை சுலபமாக ஆக்கக்கூடிய, கடின உழைப்பை அன்பில் மாற்றம் செய்யக் கூடிய, எப்பொழுதும் சுய சொரூபத்தின் நினைவு மூலமாக சிரேஷ்ட சக்திகள் மற்றும் குணங்களை அனுபவம் செய்யக் கூடிய, எப்பொழுதும் தந்தைக்கு அன்பின் பிரதிபலனைக் கொடுக்கக் கூடிய தந்தைக்குச் சமமாக ஆகக் கூடிய, எப்பொழுதும் சிரேஷ்ட நிலை என்ற சிரேஷ்ட ஆசனத்தில் அமர்ந்திருந்து எஜமானன் ஆகி, சேவாதாரிகள் மூலமாக செயல்களைச் செய்விக்கக் கூடிய இராஜா குழந்தைகளுக்கு, எஜமான குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தனிப்பட்ட சந்திப்பு: (வெளிநாட்டு சகோதர சகோதரிகளுடன்)**
சேவை தந்தையின் துணையை அனுபவம் செய்விக்கிறது. சேவையில் செல்வது என்றால், எப்பொழுதும் தந்தை கூடவே இருப்பது! ஆகார ரூபத்தில் இருந்தாலும் சேவாதாரி குழந்தைகள் கூடவே தந்தை எப்பொழுதும் துணையாக கண்டிப்பாக இருக்கிறார். செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார், நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கிறார், மேலும் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? கருவியாகி விளையாட்டை விளையாடிக் கொண்டே இருக்கிறீர்கள். அந்த மாதிரியே தான் அனுபவம் ஆகிறது இல்லையா ? அந்த மாதிரியான சேவாதாரிகள் வெற்றிக்கு அதிகாரியாக ஆகி விடுகிறார்கள். வெற்றி பிறப்பின் உரிமையாகும். வெற்றி எப்பொழுதுமே மகான் புண்ணிய ஆத்மா ஆவதற்கான அனுபவம் செய்விக்கும் மகான் புண்ணிய ஆத்மா ஆகுபவர்களுக்கு அனேக ஆத்மாக்களின் ஆசீர்வாதங்களின் லிஸ்ட் கிடைக்கிறது. நல்லது.

இப்பொழுதோ அனைவரின் வாயிலிருந்து ஒருவர் ! தான் ஒருவரே தான்! என்ற பாடல் ஒலிக்கும் நாளும் கண்டிப்பாக வரும். நாடகத்தில் இந்த காட்சிதான் இன்னும் நடக்க வேண்டியதாக இருக்கிறது. இது நடந்து விட்டது என்றால், முடிவடைந்து விடும். இப்பொழுது இந்த காட்சியை அருகில் கொண்டு வர வேண்டும். இதற்காக அனுபவம் செய்விப்பது தான் விசேஷமாக கவர்ந்திழுப் பதற்கான சாதனம். ஞானத்தைக் கூறிக் கொண்டே இருங்கள். மேலும் அனுபவம் செய்வித்துக் கொண்டே இருங்கள். ஞானத்தைக் கேட்பதினால் மட்டும் திருப்தி அடைவதில்லை ஆனால் ஞானத்தைக் கூறிக் கொண்டே அனுபவமும் செய்வித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் ஞானத்திற்கும் மகத்துவம் இருக்கும் மேலும் பிராப்தியின் காரணமாக வரும் நாட்களில் உற்சாகமும் வந்து விடும். அவர்கள் அனைவரின் சொற்பொழிவோ ஞானம் நிறைந்ததாக மட்டும் இருக்கும். உங்களுடைய சொற்பொழிவு ஞானம் நிறைந்ததாக மட்டும் இல்லாமல், ஆனால் அனுபவத்தின் அதிகாரம் நிறைந்ததாகவும் இருக்கட்டும். மேலும் அனுபவங்களின் அதிகாரத்தோடு பேசிக் கொண்டே, அனுபவம் செய்வித்துக் கொண்டே இருங்கள். எப்படி சில நல்ல பேச்சாளர்கள் இருப்பார்கள், அவர்கள் பேசிக் கொண்டே அழவும் வைத்து விடுவார்கள், சிரிக்கவும் வைத்து விடுவார்கள். அமைதி நிசப்தத்தில் கொண்டு செல்வார்கள். எப்படி பேசுவார்களோ அந்த மாதிரி வாயுமண்டலமும் உருவாகி விடும். அதுவோ தற்காலிகமானதோ ஆனது. எப்பொழுது அவர்கள் செய்ய முடியும் என்றால், மாஸ்டர் சர்வ சக்திவான் நீங்கள் என்ன செய்ய முடியாது. யாராவது அமைதி என்று கூறினார் என்றால், அமைதியின் சூழ்நிலை இருக்க வேண்டும். ஆனந்தம் என்று கூறினார் என்றால், ஆனந்தத்தின் சூழ்நிலை உருவாகி விட வேண்டும் அந்த மாதிரி அனுபவம் செய்விக்கும் சொற்பொழிவு பிரத்யட்சத்தின் கொடியை பறக்க வைக்கும். ஏதாவது விசேஷத்தைப் பார்ப்பார்கள் இல்லையா? நல்லது! நேரம் இயல்பாகவே சக்திகளை நிரப்பிக் கொண்டிருக்கிறது. கண்டிப்பாக நடக்கும், மீண்டும் அதே போல் செய்ய வேண்டும் அவ்வளவு தான். நல்லது.

**விடைபெறும் நேரத்தில் தாதி ஜானகி அவர்களுடன் பாப்தாதாவின் சந்திப்பு:** பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டே இருக்கிறீர்கள். நெருக்கமான குழந்தைகளுக்கு மிக அதிகமான குஷி இருக்கிறது.

அவர்கள் எப்பொழுதுமே குஷியின் கடலில் நீந்திக் கொண்டே இருக்கிறார்கள். சுகக் கடலில் அனைத்து பிராப்திகளின் கடலில் நீந்திக் கொண்டே இருக்கிறார்கள். மேலும் அவர்கள் மற்றவர்களையும் அதே கடலில் நீந்த வைக்கிறார்கள். முழு நாளும் நீங்கள் என்ன காரியம் செய்கிறீர்கள்? எப்படி யாருக்காவது கடலில் நீந்தத் தெரியவில்லை என்றால் என்ன செய்கிறார்கள்? கையைப் பிடித்து நீந்த வைப்பார்கள் இல்லையா? இதே வேலையைத் தான் நீங்கள் செய்கிறீர்கள். சுகத்தில் நீந்த வையுங்கள், குஷியில் நீந்த வையுங்கள்..... அதே போல் நீங்கள் செய்துக் கொண்டு இருக்கிறீர்கள் இல்லையா? பிசியாக இருப்பதற்கு நல்ல காரியம் கிடைத்து விட்டது. எந்தளவு பிசியாக இருக்கிறீர்கள்? ஓய்வு இருக்கிறதா? இதிலேயே எப்பொழுதும் பிசியாக இருக்கிறீர்கள், மற்றவர்களும் உங்களைப் பார்த்து பின்பற்றச் செய்கிறார்கள். நினைவு மற்றும் சேவையைத் தவிர எதுவும் தென்படுவதில்லை. இயல்பாகவே புத்தி நினைவு மற்றும் சேவையில் தான் செல்கிறது. மேலும் வேறு எங்கும் செல்ல முடியாது. செய்விக்க வேண்டியதாக இருக்காது தானாகவே நடந்துக் கொண்டிருக்கிறது. இதைத்தான் கற்றுக் கொண்டவர் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று கூறுவது. நல்ல வேலை கொடுத்து விட்டார் இல்லையா? தந்தை திறமைசாலி ஆக்கிச் சென்றிருக்கிறார் இல்லையா ! மந்தமான தொய்வானவராகவோ விட்டு விட்டுச் செல்லவில்லை. திறமைசாலியாக்கி இடம் கொடுத்துச் சென்றிருக்கிறார் இல்லையா ! அவரோ கூடவே இருக்கவே இருக்கிறார் ஆனால் உங்களை கருவியாகவும் ஆக்கி இருக்கிறார் இல்லையா? திறமைசாலி ஆக்கி, இருக்கை கொடுத்திருக்கிறார். இங்கிருந்து தான் இருக்கைக் கொடுக்கும் பழக்கம் தொடங்கியது. தந்தை சேவைக்கான ஆசனம் மற்றும் சேவைக்கான இருக்கை கொடுத்துச் சென்று விட்டார், இப்பொழுது சாட்சியாகி பார்த்துக் கொண்டிருக்கிறார் எப்படி குழந்தைகள் முன்னேறிச் சென்றுக் கொண்டிருக்கிறார், துணைக்குத் துணையாகவும் இருக்கிறார் சாட்சிக்கு சாட்சியாகவும் இருக்கிறார். இரண்டு பங்கையும் செய்துக் கொண்டிருக்கிறார். சாகார ரூபத்தில் சாட்சி என்று கூறுவோம். அவ்யக்த்த ரூபத்தில் துணைவன் என்று கூறுவோம். இரண்டு பங்கையும் செய்துக் கொண்டிருக்கிறார் நல்லது.

**வரதானம்: மூச்சுக்கு நினைவு மற்றும் சேவையின் சம நிலை மூலமாக ஆசீர்வாதத்தைப் பிராப்தி செய்யக் கூடிய எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர் ஆகுக !**

எப்படி நினைவின் இணைப்பு எப்பொழுதும் இணைந்திருக்க வேண்டும் என்ற கவனம் வைக்கிறீர்கள் அதே போல் சேவையிலும் எப்பொழுதும் இணைப்பு இணைந்திருக்க வேண்டும். மூச்சுக்கு மூச்சு நினைவு மற்றும் மூச்சுக்கு மூச்சு சேவை இருக்கட்டும். இதைத்தான் சமநிலை என்று கூறுவது. இந்த சமநிலை மூலமாக எப்பொழுதும் ஆசீர்வாதத்தின் அனுபவம் செய்துக் கொண்டே இருப்பீர்கள். மேலும் ஆசீர்வாதத்தினால் வளர்ந்து கொண்டு இருக்கிறேன் என்ற வார்த்தைகள் தான் இதயத்திலிருந்து வெளியாகும். கடின உழைப்பிலிருந்து, யுத்தம் செய்வதிலிருந்து விடுபட்டுவிடுவீர்கள். என்ன, ஏன், எப்படி என்ற இந்த கேள்விகளிலிருந்து விடுபட்டு எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். பிறகு வெற்றி பிறப்புரிமையின் ரூபத்தில் அனுபவம் ஆகும்.

**சுலோகன்: தந்தையிடமிருந்து பரிசைப் பெற வேண்டுமென்றால், தன்னோடு மற்றும் உடன் இருப்பவர்களோடு தடையற்று இருப்பதற்கான சான்றிதழ் உடனிருக்க வேண்டும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## திருப்தி!

இன்று உள்ளத்தை கவர்ந்த பாபா தனது அன்பான இதய சிம்மானசதாரி குழந்தைகளிடம் உள்ளத்தின் ஆன்மீக உரையாடல் செய்ய வந்துள்ளார். உள்ளத்தைக் கவர்ந்தவர் தனது உண்மையான உள்ளங்களிடம் உள்ளத்தின் கொடுக்கல் வாங்கல் செய்வதற்காகவும், உள்ளத்தின் நிலைமையை கேட்டறிவதற்காகவும் வந்துள்ளார். ஆன்மீகத் தந்தை ஆத்மாக்களிடம் ஆன்மீக உரையாடல் செய்கின்றார். இந்த ஆன்மீக உரையாடலை இந்த நேரத்தில் மட்டும் தான் நீங்கள் அனுபவம் செய்ய முடியும். ஆத்மாக்களாகிய உங்களிடம் அவ்வளவு அன்பின் சக்தி உள்ளது, நீங்கள் ஆத்மாக்களின் படைப்பவராகிய தந்தையை ஆன்மீக உரையாடலுக்காக நிர்வாணத்திலிருந்து (நிசப்தத்திலிருந்து) சப்தத்தில் அழைத்து வருகிறீர்கள். அப்பேற்பட்ட சிரேஷ்டமான ஆத்மாகளாகிய நீங்கள் பந்தனமற்ற பாபாவையும் கூட அன்பான பந்தனத்தில் பிணைத்து விடுகிறீர்கள். உலகில் உள்ளவர்கள் பந்தனத்தில் இருந்து விடுவிப்பவரே! என்று கூறி அழைத்துக் கொண்டிருக்கின்றனர், மேலும் அப்பேற்பட்ட பந்தனமற்ற பாபா, குழந்தைகளின் அன்பான பந்தனத்தில் எப்பொழுதும் பிணைக்கப் பட்டுள்ளார். பிணைப்பதில் நீங்களோ புத்திசாலிகள்.! எப்பொழுதெல்லாம நினைவு செய்கின்றீர்களோ, அப்பொழுதெல்லாம் பாபா வந்து விடுகிறார் அல்லவா! ஹஜூர் (பாபா) வந்து (ஆஜர்) விடுகிறார். எனவே இன்று விசேஷமாக இரட்டை அயல் நாட்டு குழந்தைகளிடம், ஆன்மீக உரையாடல் செய்ய வந்துள்ளார். இந்த சீசனில் இரட்டை அயல்நாட்டவரின் விசேஷ முறை ([redacted]) ஆகும். அதிகபட்சமாக இரட்டை அயல்நாட்டினர் தான் வந்திருக்கின்றனர். மதுபன் நிவாசிகள் மதுபன் என்ற சிரேஷ்டமான இடத்தில் வசிப்பவர்களோ இருக்கவே இருக்கின்றனர். ஒரே இடத்திலேயே அமர்ந்துக் கொண்டு உலகின் வித விதமான ஆத்மாக்களின் சந்திப்பு விழாவைப் பார்ப்பவர்களாக இருக்கின்றனர். யார் வருகின்றார்களோ, அவர்கள் சென்று

விடுகின்றனர், ஆனால் மதுபன் நிவாசிகளோ எப்பொழுதுமே இருக்கின்றனர்!

இன்று விசேஷமாக இரட்டை அயல்நாட்டவரிடம் பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கின்றார் -அனைவரும் திருப்தி மணிகளாகி கிரீடத்தில் மின்னிக் கொண்டு இருக்கிறீர்களா? அனைவரும் திருப்தி மணிகள் தானே? எப்பொழுதும் திருப்தியாக இருக்கின்றீர்களா? சில நேரம் தன்னிடம் அதிருப்தியாகவோ, அல்லது சில நேரம் பிராமண ஆத்மாக்களிடம் அதிருப்தியாகவோ, சில நேரம் தனது சம்ஸ்காரங்களிடம் அதிருப்தியாகவோ, சில நேரம் வாயுமண்டலத்தின் தாக்கத்தினால் அதிருப்தியாகவோ ஆகவில்லை தானே! எப்பொழுதும் அனைத்து விஷயங்களிலும் திருப்தியாக இருக்கின்றீர்களா? சில நேரம் திருப்தி, சில நேரம் அதிருப்தியாகவும் இருந்தால், திருப்தி மணி என்று சொல்லாமா? நாங்கள் திருப்தி மணிகள் என்று நீங்கள் அனைவரும் சொன்னீர்கள் தானே! பிறகு நாங்கள் திருப்தி மணிகள் தான், ஆனால் எங்களை பிறர் அதிருப்தியாக்குகின்றார்கள் என்று கூறமாட்டீர்கள் தானே? என்ன வேண்டுமென்றாலும் ஆகலாம், ஆனால் யார் திருப்தியான ஆத்மாக் களாக இருக்கிறார்களோ, அவர்கள் ஒருபொழுதும் தனது திருப்தி என்ற விசேஷத்தை விட முடியாது. திருப்தியை பிராமண வாழ்க்கையின் விசேஷ குணம் என்று சொல்லலாம் அல்லது விசேஷ வாழ்க்கையின் அலங்காரம் என்று சொல்லலாம். எவ்வாறு ஏதேனும் பிரியமான பொருள் இருக்கிறது என்றால், பிரியமான பொருளை ஒருபொழுதும் விடுவதில்லை. திருப்தி என்பது விசேஷத் தன்மையாகும். திருப்தி என்பது பிராமண வாழ்க்கையின் விசேஷ மாற்றத்திற்கான கண்ணாடி ஆகும். சாதாரண வாழ்க்கை மற்றும் பிராமண வாழ்க்கை. சாதாரண வாழ்க்கை என்றாலே, சில நேரம் திருப்தி, சில நேரம் அதிருப்தி. பிராமண வாழ்க்கையில் திருப்தி என்ற விசேஷத்தைப் பார்த்து, அஞ்ஞானிகள் கூட ஈர்க்கப் படுகிறார்கள். இந்த மாற்றம் அநேக ஆத்மாக்களை மாற்றம் செய்வதற்கு நிமித்தமாகி விடுகிறது. அனைவரின் வாயிலிருந்து, இவர்கள் எப்பொழுதும் திருப்தியாக அதாவது குஷியாக இருக்கின்றனர் என்ற வார்த்தையே வெளிவருகிறது. எங்கு திருப்தி இருக்கிறதோ, அங்கு அவசியம் குஷி இருக்கிறது. அதிருப்தி குஷியை மறைத்து விடுகிறது. இதுவே பிராமண வாழ்வின் மகிமையாகும். எப்பொழுதும் திருப்தி இல்லையெனில், அது சாதரண

வாழ்க்கை, திருப்தி வெற்றிக்கு எளிய ஆதாரமாகும். திருப்தி அனைத்து பிராமண குடும்பத்தினரை அன்பானவர் ஆக்குவதில் சிரேஷ்டமான சாதனமாக இருக்கின்றது. யார் திருப்தியாக இருப்பாரோ, அவருக்கு தானாகவே அனைவரிடமிருந்தும் அன்பு கிடைக்கும். திருப்தியான ஆத்மாக்களை எப்பொழுதும் அனைவரும் தானாகவே நெருங்கி வருவார்கள், மற்றும் ஒவ்வொரு சிரேஷ்டமான காரியத்தில் உதவியாளர் ஆக்குவதற்காக பிரயத்தனம் (உழைப்பு) செய்வார்கள். என்னை அருகாமையில் கொண்டு வாருங்கள் என்று சொல்லி, அவர்களுக்கு உழைக்க வேண்டிய அவசியமிருக்காது. என்னை உதவியாளர் ஆக்குங்கள், அல்லது என்னை விசேஷ ஆத்மாக்களின் பட்டியலில் இடம் பெறச் செய்யுங்கள் என்பது யோசிக்கவும் வேண்டியிருக்காது. சொல்லவும் வேண்டியிருக்காது. திருப்தியின் விசேஷத் தன்மை தானாகவே ஒவ்வொரு காரியத்திலும் பொன்னான வாய்ப்பிற்குரியவர் ஆக்கி விடுகிறது. தானாகவே காரியத்திற்கு நிமித்தமாகியுள்ள ஆத்மாக்களுக்கு திருப்தியான ஆத்மாவிற்காக எண்ணங்கள் வந்து கொண்டே தான் இருக்கும். மேலும் வாய்ப்பு கிடைத்துக் கொண்டே தான் இருக்கும். திருப்தி என்பது எப்பொழுதும் அனைவரது சுபாவ -சம்ஸ்காரத்தை ஒத்துப்போகச் செய்வதாகும். திருப்தி யான ஆத்மா ஒருபொழுதும் யாருடைய சுபாவ -சம்ஸ்காரத்தைக் கண்டு பயப்படுவர்களாக இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட திருப்தியான ஆத்மாக்களாக ஆகியுள்ளீர்கள் தானே! எவ்வாறு பகவான் உங்களிடம் வந்துள்ளார், நீங்கள் வரவில்லை. பாக்கியம் தானாகவே உங்களிடம் வந்துள்ளது, வீட்டில் அமர்ந்தவாறே பகவானும் கிடைத்தார், பாக்கியமும் கிடைத்தது! வீட்டில் அமர்ந்தவாறே அனைத்து பொக்கிஷங்களின் சாவி கிடைத்து விட்டது! எப்பொழுது விரும்பு கிறீர்களோ, என்ன விரும்புகிறீர்களோ, பொக்கிஷம் உங்களிடம் உள்ளன, ஏனெனில் உரிமையாளர் ஆகி விட்டீர்கள் அல்லவா! எனவே அப்படிப்பட்ட அனைவரின் நெருக்கத்தில் வருவதற்கான, சேவையில் நெருக்கத்தில் வருவதற்கான வாய்ப்பும் தானாகவே கிடைக்கின்றது. விசேஷத் தன்மை தானாகவே முன்னேற்றுகிறது, யார் எப்பொழுதும் திருப்தியாக இருக்கின்றாரோ, அவரிடம் அனைவரின் உள்ளத்தின் அன்பு தானாகவே தோன்றுகிறது. வெளிப்படையான அன்பு அல்ல. ஒன்று யாரேனும் திருப்திபடுத்துவதற்காக மேலோட்டமாக அன்பு காட்டுவது. இன்னொன்று உள்ளப் பூர்வமாக அன்பு செலுத்துவது. வெறுப்படையக் கூடாது

எனபதற்காகவும் அன்பு செலுத்த வேண்டியுள்ளது, ஆனால் அவர்கள் அன்பை எப்பொழுதும் பெறுவதற்கு உரியவர் ஆவதில்லை. திருப்தியான ஆத்மாவிற்கு எப்பொழுதும் அனைவரின் உள்ளப் பூர்வமான அன்பு கிடைக்கின்றது. யாரேனும் புதியவர்களாக இருக்கலாம், அல்லது பழையவர்களாக இருக்கலாம், யாரேனும் சிலரை அறிமுகமான ரூபத்தில் தெரிந்திருக்கலாம், அல்லது தெரியாமல் இருக்கலாம், ஆனால் திருப்தி என்பது அந்த ஆத்மாக்களின் அறிமுகத்தைக் கொடுக்கிறது. ஒவ்வொருவருடைய உள்ளமும், இவர்களிடம் பேச வேண்டும், இவர்களுடன் அமர வேண்டும் என்று நினைக்கும். எனவே அப்படிப்பட்ட திருப்தியானவரா? உறுதியாகத் தானே! ஆகிக் கொண்டேயிருக்கிறோம் என்று சொல்வதில்லை அல்லவா! ஆகி விட்டோம்.

திருப்தியான ஆத்மாக்கள் எப்பொழுதும் மாயாவை வென்றவர்களாகவே இருக்கின்றனர். இது மாயாயை வென்றவர்களின் சபை தானே! மாயையைக் கண்டு பயப்படுபவர்கள் இல்லை தானே? மாயா யாரிடம் வருகிறது? அனைவரிடமும் வருகின்றது தானே! மாயாவே வருவதில்லை என்று கூறுபவர்கள் யாரேனும் இருக்கிறீர்களா? அனைவரிடமும் வருகிறது, ஆனால் சிலர் பயப்படு கின்றனர், சிலர் தெரிந்து கொள்வதினால் தன்னை பாதுகாத்துக் கொள்கின்றனர். மரியாதை (ஸ்ரீமத்) என்ற கோட்டுக்குள்ளே இருக்கக் கூடிய, பாபாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த குழந்தைகள் மாயையை தொலைவில் இருந்தே தெரிந்து கொள்கின்றனர். (மாயாவை) தெரிந்து கொள்வதில் தாமதம் செய்பவர்களும், தவறு செய்பவர்களும் மாயாவைக் கண்டு பயப்படுகின்றனர். எவ்வாறு உங்கள் ஞாபகார்த்த கதை கேட்கின்றீர்கள் -சீதை ஏன் ஏமாற்றம் அடைந்தார்? ஏனெனில் தெரிந்து கொள்ளவில்லை. மாயாயின் சொரூபத்தை தெரிந்து கொள்ளதாத காரணத்தினால் ஏமாற்றம் அடைந்தார்கள். ஒருவேளை இவர் பிராமணன் அல்ல, பிச்சைக்காரன் அல்ல, இராவணன் என்று தெரிந்திருந்தால் சோகவனத்தின் அவ்வளவு அனுபவம் செய்ய வேண்டியிருந்திருக்காது ஆனால் தாமதமாகத் தெரிந்து கொண்டதினால் ஏமாற்றம் அடைந்தார், மற்றும் ஏமாற்றத்தின் காரணத்தினால் துக்கப் படவேண்டியிருந்தது. யோகியிலிருந்து வியோகி (மறந்தவர்) ஆகி விட்டார். (இராமருடன்) எப்பொழுதும் கூடவே இருப்பதிலிருந்து தூரமாகி விட்டார். பிராப்தி சொரூப ஆத்மா விலிருந்து கூக்குரலிடும் ஆத்மா ஆகி விட்டார். காரணம்?

(மாயையை) தெரிந்து கொள்வதில் குறை. மாயையின் ரூபத்தைத் தெரிந்து கொள்ளும் சக்தி குறைவாக இருக்கும் காரணத்தினால் மாயையை விரட்டுவதற்குப் பதிலாக, தானே பயந்து விடுகிறார்கள். தெரிந்து கொள்வதில் ஏன் குறை ஏற்படுகிறது? நேரத்திற்கு தெரிந்து கொள்ள முடிவதில்லை. பின்னால் ஏன் தெரிந்து கொள்ள முடிகிறது. இதற்கு காரணம்? ஏனெனில் எப்பொழுதும் பாபாவின் சிரேஷ்ட வழிப்படி நடப்பதில்லை. சில நேரம் நினைவு செய்கின்றனர், சில நேரம் செய்வதில்லை. சில நேரம் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கின்றனர், சில நேரம் இருப்பதில்லை. யார் எப்பொழுதும் என்ற கட்டளையை மீறுகின்றனரோ, அதாவது கட்டளை ஸ்ரீமத் என்ற கோட்டிற்குள் இல்லாத காரணத்தினால் மாயை நேரத்திற்கு ஏற்றவாறு ஏமாற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது. மாயாவிற்கு கண்டறியும் சக்தி அதிகம் இருக்கிறது. ,இந்த சமயம் இவர் பலஹீனமாக இருக்கிறார் என்பதை மாயை பார்க்கிறது, ஆகவே இவ்விதமான பலஹீனம் மூலமாக இவர்களை தன்னுடையவர் ஆக்க முடிகின்றது, மாயா வருவதற்கான வழியே பலஹீனம் தான், சிறிதளவேனும் வழி கிடைத்து விட்டாலும், உடனே வந்து விடுகின்றது. எவ்வாறு தற்காலத்து திருடர்கள் என்ன செய்கின்றார்கள்! கதவு மூடியிருக்கலாம், ஆனாலும் வெண்டிலேட்டர் வழியாக வந்து விடுகிறது. சிறிதளவு எண்ணத்திலேனும் பலஹீனம் ஆவது என்றாலே, மாயைக்கு வழிக் கொடுப்பதாகும். எனவே மாயாஜீத் ஆவதற்கான மிக எளிய சாதனம் -எப்பொழுதும் பாபாவுடன் இருங்கள். உடன் இருப்பது என்றால், தானாகவே மரியாதைகள் (ஸ்ரீமத்) என்ற கோட்டிற் குள் இருப்பது. ஒவ்வொரு விகாரத்தின் மீதும் வெற்றியாளர் ஆவதற்கான உழைப்பிலிருந்து விடுப்பட்டு விடுவீர்கள். உடன் இருங்கள், அப்பொழுது தானாகவே எவ்வாறு தந்தையோ, அவ்வாறே நீங்களும் ஆகி விடுவீர்கள். தொடர்பின் நிறம் தானாகவே படிந்து விடும். விதையை விட்டு விட்டு, கிளைகளை மட்டும் வெட்டக்கூடிய உழைப்பை (முயற்சி) செய்யாதீர்கள். இன்று காமத்தை வென்றவர் ஆனோம், நேற்று கோபத்தை வென்றவர் ஆனோம் என்றல்ல,, எப்பொழுதுமே அனைத்திலும் வெற்றியாளர்களாகவே இருக்கின்றோம். எப்பொழுது விதை ரூபம் மூலமாக விதையை (விகாரத்தை) அழித்து விடுவோம் என்றால், அடிக்கடி கஷ்டப்பட்டு உழைப்பதிலிருது தானாகவே விடுப்பட்டு விடுவீர்கள். விதை ரூபத்தை மட்டும் உடன் வைத்திருங்கள். பிறகு இந்த மாயை என்ற விதை சாம்பாலாகி விடும், அதாவது ஒருபொழுதும், அந்த விதையிலிருந்து

அம்சம் கூட விகாரம் முளைக்க முடியாது. அதே போல் தான் நெருப்பில் எரிந்து விட்ட விதையிலிருந்து, ஒருபொழுதும் பழம் உற்பத்தி ஆக முடியாது.

ஆகவே உடன் இருங்கள், திருப்தியாக இருங்கள், அப்பொழுது மாயை என்ன செய்யும்! சரண்டர் ஆகி விடும். மாயையை சரண்டர் செய்ய முடியவில்லையா? ஒருவேளை, தான் (பாபா விற்கு) சரண்டராக இருந்தால், மாயையை அவர்கள் முன்பு சரண்டராகவே இருக்கும், எனவே மாயையை சரண்டராக்கி விட்டீர்களா அல்லது இப்பொழுது தான் ஏற்பாடு செய்து கொண்டீர்களா? நிலைமை என்ன? எவ்வாறு தன்னுடைய சரண்டர் ஆனதிற்கான செரிமனி (விழா) கொண்டாடு கிறீர்களோ அவ்வாறே மாயையை சரண்டர் ஆக்குவதற்கான செர்மனியை கொண்டாடி விட்டீர்களா? அல்லது கொண்டாட வேண்டுமா? ஹோலி ஆகிவீட்டீர்கள் என்றால், செர்மனி ஆகி விட்டது, எரிந்து விட்டது. பிறகு அங்கு சென்று என்ன செய்வது, மாயை வந்து விட்டது என்று கடிதம் எழுத மாட்டீர்களே! மகிழ்ச்சியான மடல் மட்டும் தானே எழுதுவீர்கள் அல்லவா! எவ்வளவு சரண்டர் செர்மனி கொண்டாடினீர்களோ, நம்முடையதோ ஆகி விட்டது, ஆனால் மற்ற ஆத்மாக்கள் மூலமாகவும் மாயையை சரண்டர் ஆக்கினோம் என்ற செய்தியை எழுதுவீர்கள் தானே! நல்லது.

எவ்வளவு ஊக்கம் உற்சாகத்துடன் வந்திருக்கின்றீர்களோ, அவ்வளவே பாப்தாதாவும் எப்பொழுதும் குழந்தைகளை அதே போன்ற ஊக்க உற்சாகத்துடன் திருப்தியான ஆத்மா என்ற ரூபத்தில் பார்க்க விரும்புகின்றார். ஈடுபாடோ இருக்கவே செய்கிறது. ஈடுபாட்டின் அடையாளம் -அவ்வளவு தூரத்திலிருந்து வந்து சேர்ந்து விட்டீர்கள். இரவும் -பகலும் ஈடுபாட்டுடன் நாட்களை எண்ணி -எண்ணி இங்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். ஈடுபாடு இல்லையெனில் வந்தடைவது கடினமாக இருக்கிறது. ஈடுபாடு இருக்கிறது தேர்ச்சி அடைந்து விட்டீர்கள். பாஸாகி விட்டோம் என்ற சர்ட்டிபிகேட் கிடைத்து விட்டது தானே! ஒவ்வொரு பாடத்திலும் பாஸ். இருந்தாலும் பாப்தாதா குழந்தைகளுக்கு உதவி செய்ய முன்வருகிறார், ஏனெனில் தெரிந்து கொள்ளும் பார்வை கூர்மையாக இருக்கிறது. தொலைவிலிருந்தே பாபாவை தெரிந்து கொண்டீர்கள். கூடவே அதாவது உள் நாட்டில் இருக்கக் கூடியவர்கள் தெரிந்து கொள்ள முடியவில்லை ஆனால் நீங்கள் தொலைவில்

அமர்ந்தவாறே தெரிந்து கொண்டீர்கள். தெரிந்து கொண்டு பாபாவை தன்னுடையவர் ஆக்கினீர்கள் அல்லது பாபாவினுடைவர் ஆனீர்கள்? இதற்காக விசேஷமான ஆஃப்ரின் (உதவி செய்ய முன் வருதல்) கொடுக்கிறார். எனவே எவ்வாறு தெரிந்து கொள்வதில் முன்னால் போய்விட்டீர்களோ, அவ்வாறே மாயாஜீத் ஆவதிலும் நம்பர் ஓன் ஆகி, எப்பொழுதும் பாபாவின் உதவியை பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆவீர்கள். பாப்தாதா மாயாவைக் கண்டு பயப்படக் கூடிய எந்தவொரு ஆத்மாவையும் உங்களிடம் அனுப்புவார், அதாவது இந்த குழந்தைகளிடம் சென்று மாயாஜீத் ஆவதற்கான அனுபவத்தை கேளுங்கள் என்று. அவ்வாறு எடுத்துக்காட்டு ஆகிக் காட்டுங்கள். இவ்வாறு மாயாஜீத் குடும்பம் பிரபலமாக ஆக இருக்கிறதோ, அவ்வாறே மாயாஜீத் செண்டரும் பிரபலமாக இருக்கட்டும்! இங்கு மாயை ஒருபொழுதும் போரிடடுவதில்லை என்பது போல செண்டராக இருக்க வேண்டும். வருவது வேறு விஷயம், போரிடுவது வேறு விஷயம். ஆகவே இதிலும் நம்பர் பெறக்கூடியவர்கள் அல்லவா! இதில் நம்பர் ஓன் யார் ஆவார்கள்? லண்டன், ஆஸ்திரேலியா ஆகுமா, அல்லது அமெரிக்கா ஆகுமா? பாரிஸ் ஆகுமா, ஜெர்மன் ஆகுமா, பிரேஸில் ஆகுமா, யார் ஆவீர்கள்? யார் வேண்டுமானாலும் ஆகலாம். பாப்தாதா அந்தமாதிரியான சைத்தன்ய மியூசியம் என்று அறிவிப்பார். எவ்வாறு அபுவின் மியூசியத்தை நம்பர் ஒன் என்று சொல்கின்றனர், சேவையிலும், அலங்காரத்திலும் அதேபோன்று மாயாஜீத் குழந்தைகளின் சைதன்ய மியூசியம் இருக்க வேண்டும். துணிவு இருக்கின்றது அல்லவா? அதற்காக இப்பொழுது எவ்வளவு நேரம் வேண்டும்? யார் முதலிலேயே ஏதேனும் செய்து காட்டினீர்கள் என்றால், கோல்டன் ஜுப்லியிலலும் கூட அவர்களுக்கு பரிசு அளிப்போம்.. கடைசியிலிருந்து முதலில் வந்து காட்டுங்கள். பாரத நாட்டினரும் போட்டியிடலாம் ஆனால் நீங்கள் அவர்களைக் காட்டிலும் முன்னால் செல்லுங்கள். பாப்தாதா அனைவருக்கும் முன்னால் செல்ல வாய்ப்பளித்துக் கொண்டிருக்கிறார். 8-மணி மாலையில் வந்து விடுங்கள். 8-மணி மாலைக்கு தான் பரிசு கிடைக்கும். ஒருவருக்கு மட்டும் தான் கிடைக்கும் என்று அல்ல. லண்டன் மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களோ பழையவர்கள், நாங்களோ இப்பொழுது தான் வந்துள்ள புத்தம் புதியவர்களாக இருக்கிறோம் என்று யோசிக்க வேண்டாம். அனைத்தையும் விட சிறிய மற்றும் புதிய சென்டர் எதுவாக இருக்கிறது? அனைத்தை யும் விட யார் சிறியவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள்

அனைவருக்கும் பிடித்தமானவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறும் கூட சிறியவர்களை சொல்கிறார்கள் -பெரியவர்கள் பெரியவர்கள் தான், ஆனால் சிறியவர்கள் தான் பாபாவிற்கு சமமானவர்கள். அனைவராலும் செய்ய முடியும் தானே! எதுவும் பெரிய விஷயமில்லை. கிரிஸ், டெம்பா, ரோம் போன்றவை சிறிய நாடுகள், இவர்களோ மிகவும் உற்சாகத்தில் இருக்கக் கூடியவர்கள். டெம்பா (ஒரு சிறிய நாடு) என்ன செய்வீர்கள்? டெம்பில் (கோவில்) ஆக்குவீர்களா? அங்கிருந்து ஒரு அழகான (இனிமையான) குழந்தை வந்தது அல்லவா -டெம்பாவை டெம்பிள் (கோவில்) ஆக்குங்கள் என்று அவருக்கு சொல்ல பட்டது. யாரெல்லாம் டெம்பாவிலிருந்து வருகிறார்களோ, ஒவ்வொரு சைதன்ய மூர்த்தியைப் பார்த்து புன்முறுவல் செய்கிறார். சக்திசாலியாக நீங்கள் தயார் ஆகி விடுங்கள். இராஜாக்களாகிய நீங்கள் தயார் ஆகி விடுங்கள், பிரஜைகள் உடனடியாக ஆகி விடுவார்கள். இராயல் குடும்பம் உருவாவதில் நேரம் ஆகிறது, இது இராயலான குடும்பம், இராஜ்யம் உருவாகிக் கொண்டிருக்கிறது, பிறகு பிரஜைகள் அநேகர் வந்து விடுவார்கள். -நீங்கள் பார்த்து பார்த்து களைப்படையுமளவிற்கு வந்து விடுவார்கள் சொல்வார்கள் பாபா! போதும், இப்பொழுது நிறுத்துங்கள், ஆனால் முன்னதாகவே இராஜ்ய அதிகாரி சிம்மானசதாரி விட வேண்டுமல்லவா! சிம்மானதாரி, திலகம் அணிந்தவர் ஆகி விடும் பொழுது பிரஜைகள் கூட, உள்ளேன் ஐயா! என்று சொல்வார்கள். சிம்மாசனதாரி ஆகவில்லையென்றால் இவர் இராஜா என்று பிரஜைகள் எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள். இராயல் குடும்பம் உருவாக்குவதில் நேரம் தேவைப்படுகிறது. நீங்கள் சரியான நேரத்தில் வந்து விட்டீர்கள், ஆகையால் இராயல் குடும்பத்தில் வருவதற்கான அதிகாரி ஆகி விடுவீர்கள். இப்பொழுதிலிருந்தே இராஜ்ய அதிகாரி ஆகக் கூடியவர்களின் அருகாமையில் மற்றும் உதவியாளர் ஆகக் கூடியவர்கள், அங்கு கூட அருகாமையில் மற்றும் இராஜ்யம் செய்யக் கூடியவர்களின் உதவியாளராக இருப்பார்கள். இப்பொழுது சேவையில் உதவியாளர் பிறகு இராஜ்யம் செய்வதில் உதவியாளர். ஆகையால் இப்பொழுதிலிருந்தே சோதனை செய்யுங்கள். இராஜாவாக இருக்கிறீர்களா அல்லது அவ்வப்பொழுது இராஜா, அவ்வப்பொழுது பிரஜை ஆகி விடு கிறீர்களா? சிலசமயம் அதிகாரி, சிலசமயம் அடிமை. சதா காலத்திற்கு இராஜாவாக இருக்கிறீர் களா? அதனால் எந்தளவு அதிர்ஷ்டசாலியாக இருக்கிறீர்கள்? நாங்கள் பின்னால் தான் வந்தோம்

என்று யோசிக்காதீர்கள். கடைசியில் வருபவர்கள் தான் அவ்வாறு யோசிக்க வேண்டி வரும், நீங்கள் தக்க நேரத்தில் வந்தடைந்து விட்டீர்கள், ஆகையால் அதிர்ஷ்ட சாலிகள். நாங்களோ பின்னால் தான் வந்தோம், இராஜா ஆக முடியுமா அல்லது முடியாதா? இராயல் குடும்பத்தில் வர முடியுமா அல்லது முடியாதா? என்று யோசனை செய்யாதீர்கள்.. நாங்கள் வரவில்லையென்றால் யார் வருவார்கள் என்று சதா சிந்தனை செய்யுங்கள். வந்தே தீர வேண்டும், இதை செய்ய முடியுமா அல்லது முடியாதா என்று தெரியவில்லை, இது நடைபெறுமா அல்லது. என்ன ஆகும் என்பது அல்ல. நாம் ஒவ்வொரு கல்பமும் செய்தோம், செய்துக் கொண்டிருக்கிறோம் சதா காலத்திற்கும் செய்வோம் என்பது தெரியும். புரிந்ததா?.

நாங்கள் அயல் நாட்டவரைச் சேர்ந்தவர்கள், இவர்களோ பாரத தேசத்தைச் சேர்ந்தவர்கள், இவர்கள் இந்தியர், நாமோ வெளிநாட்டவர். நமது கலாச்சாரம் வேறு, இவர்களுடைய கலாச்சாரம் வேறு என்று ஒருபொழுது யோசிக்காதீர்கள் இவர்களையோ அறிமுகத்திற்காக இரட்டை வெளி நாட்டினர் என்று கூறுகிறோம். இங்கு கூட சொல்கிறார்கள் -இவர்கள் கர்னாடகாவைச் சேர்ந்தவர்கள், இவர்கள் உ.பியை சேர்ந்தவர்கள். மற்றப்படி பிராமணர்கள் தானே! இந்தியனாக இருந்தாலும், அயல்நாட்டினராக இருந்தாலும் அனைவரும் பிராமணர்கள் தான். நாங்கள் அயல் நாட்டைச் சேர்ந்தவர் என்று நினைப்பது கூட தவறு. புது பிறவி எடுக்கவில்லையா என்ன? கடைசி பிறவி தான் அயல் நாடு இல்லையா? புது பிறவியோ பிரம்மாவின் மடியில் அல்லவா? இவை அனைத்தும் அறிமுகத்திற்காகச் சொல்வது தான் ஆனால் சம்ஸ்காரத்தில் மற்றும் புரிந்து கொள்வதில் வேறுபட்டு புரிந்து கொள்ளாதீர்கள். பிரம்மாவின் வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள் அல்லவா? அமெரிக்கா, ஆப்பிரிக்காவின் வம்சத்தைச் சேர்ந்தவர் இல்லை தானே? அனைவருடைய அறிமுகம் என்ன சொல்கிறீர்கள்? சிவ வம்சத்தைச் சேர்ந்த பிரம்மா குமார் மற்றும் குமாரிகள். ஒரே வம்சத்தைச் சேர்ந்தவர் ஆகி விட்டோம் அல்லவா? ஒரு பொழுதும் பேசுவதில் வித்தியாசப் படுத்தாதீர்கள். இந்தியர்கள் அவ்வாறு செய்கிறார்கள், அயல் நாட்டினர் அவ்வாறு செய்கிறார்கள் என்று அல்ல. நாம் அனைவரும் ஒன்றே! பாபாவும் ஒருவரே! பாதையும் ஒன்றே! பழக்க வழக்கமும் ஒன்றே! சுபாவ-சம்ஸ்காரம் ஒன்றே! பிறகு இந்தியர் என்று அயல் நாட்டினர் என்று

வித்தியாசம் எங்கிருந்து வந்தது? தன்னை வெளிநாட்டினர் என்று கூறுவதினால் தூர விலகிச் சென்று விடுவீர்கள். நாம் பிரம்மாவின் வம்சத்தைச் சேர்ந்த பிராமணர்கள். நாங்கள் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள், நாங்கள் குஜராத்தைச் சேர்ந்தவர்கள்... இதனால் தான் வித்தியாசம் ஏற்படுகிறது. இல்லை. அனைவரும் ஒரு பாபாவினுடைவர். பல வித விதமான சம்ஸ்காரங்கள் சந்தித்து ஒன்றாகி விட்டது என்பது விசேஷத் தன்மை! வெவ்வேறு தர்மம், வெவ்வேறு ஜாதி, வழி அனைத்தும் முடிவடைந்து விட்டது. ஒருவருடையவர் ஆகி விட்டோம், அதாவது ஒன்றாகி விட்டோம். நல்லது.

சதா திருப்தி என்ற விசேஷத் தன்மையுடைய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா திருப்தியின் மூலம் சேவையில் வெற்றியடையக் கூடிய ஆத்மாக்களுக்கு, சதா இராஜ்ய அதிகாரியிலிருந்து உலக இராஜ்ய அதிகாரியான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா நம்பிக்கையின் மூலம் ஒவ்வொரு காரியத்திலும் முதல் நம்பரில் வரக்கூடிய குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நம்ஸ்தே.

**வரதானம்: சாதனங்களை விடுப்பட்ட மற்றும் பற்றற்றரவராகி காரியத்தில் பயன்படுத்தக் கூடிய எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக ஆகுக!**

எல்லைக்கு அப்பாற்பட்டவராகி என்றாலே எதன் மீதும் பற்றற்றவர், சதா பாபாவிற்கு அன்பானவர். இந்த அன்பான தன்மை தான் விடுபட்டவராக ஆக்குகிறது. பாபாவிற்கு அன்பானவராக இல்லையென்றால், விடுபட்டவராகக் கூட ஆக முடியாது, பந்தனத்தில் வந்து விடுவீர்கள். யார் பாபாவிற்கு அன்பானவராக இருக்கிறார்களோ, அவர்கள் அனைத்து கவர்ச்சியிலிருந்தும் விடுபட்ட அதாவது பற்றவராக இருப்பார்கள். இதற்கு தான் சொல்லப் படுகிறது பற்றற்றத் தன்மை (எதுவும் ஒட்டாத நிலை). எந்தவொரு எல்லைக்குட்ட கவர்ச்சியில் மாட்டிக்கொள்ளக் கூடியவர் அல்ல. படைப்பு மற்றும் சாதனங்களை விடுபட்ட நிலையில் இருந்து காரியத்தில் பயன்படுத்துங்கள். அப்படிப்பட்ட எல்லைக்கு அப்பாற்பட்டவர்தான் இராஜரிஷி.

**சுலோகன்: மனதில் உண்மை மற்றும் தூய்மை இருந்தால் பாபாவை திருப்திப்படுத்தியவர் ஆகி விடுவீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயதரிசன சக்கரத்தின் மூலம் வெற்றிச் சக்கரத்தின் பிராப்தி!

இன்று பாப்தாதா ஆன்மிக சேனாதிபதியின் ரூபத்தில் தனது ஆன்மிக சேனையைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இந்த ஆன்மிக சேனையில் எத்தகைய மகாவீரர்கள் உள்ளனர், என்ன சக்திசாலியான ஆயுதத்தைத் தரித்துள்ளனர். எவ்வாறு உலகீயப் படையினர் நாளுக்கு நாள் மிகவும் சூட்சுமமான மற்றும் தீவிர வேகத்தின் சக்தி நிறைந்த சாதனங்களை உருவாக்கிக் கொண்டே செல்கின்றனரோ, அவ்வாறே ஆன்மிக சேனை மிகவும் சூட்சுமமான சக்திசாலியான படைவீரர் ஆகி விட்டீர்களா? எவ்வாறு விநாசம் செய்யும் ஆத்மாக்கள் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு எத்தனை மைல் தூரம் வரை விநாசம் ஏற்படுத்தும் கிரணங்கள் மூலம் விநாசம் செய்விப்பதற்காக சாதனங்களை உருவாக்கி உள்ளனர். அங்கு செல்ல வேண்டிய அவசியம் கூட கிடையாது. தொலை வில் அமர்ந்து கொண்டே இலக்கைத் தாக்க முடியும். அதுபோன்று ஆன்மிக சேனையானது ஸ்தாபனை செய்யும் சேனை ஆகும். அவர்கள் விநாசம் செய்யக்கூடியவர்கள், நீங்கள் ஸ்தாபனை செய்யக்கூடியவர்கள். அவர்கள் விநாசத்திற்கான திட்டம் தீட்டுகின்றனர், நீங்கள் புதிய படைப் பிற்கான, உலக மாற்றத்திற்கான திட்டம் தீட்டுகிறீர்கள். ஸ்தாபனை செய்யும் சேனை, அத்தகைய தீவிர வேகம் கொண்ட ஆன்மிக சாதனத்தை தாரணை செய்து விட்டீர்களா? ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு, எங்கு விரும்புகிறீர்களோ, அங்கு ஆன்மிக நினைவின் கிரணங்கள் மூலம் எந்தவொரு ஆத்மாவிற்கும் தூண்டுதலை ஏற்படுத்த முடியும். அந்தளவு தீவிர வேத்தில் சேவை செய்வதற்காக பரிவர்த்தனை சக்தி தயாராக உள்ளதா? ஞானம் அதாவது சக்தி அனைவருக்கும் கிடைத்துக் கொண்டு இருக்கிறது அல்லவா? ஞானத்தின் சக்தி மூலம் அத்தகைய சக்திசாலியான படைவீரர் ஆகி விட்டீர்களா? மகாவீரர் ஆகியிருக்கிறீர்களா அல்லது வீரர் ஆகியிருக்கிறீர்களா? வெற்றியின் சக்கரத்தை (பதக்கம்) அடைந்து விட்டீர்களா? உலகீய சேவைக்கு அனேக

விதமான சக்கரங்கள் (கேடய விருது) பரிசாகக் கிடைக்கின்றன. உங்கள் அனைவருக்கும் வெற்றிக்கான பரிசாக வெற்றிச் சக்கரம் கிடைத்துள்ளதா? வெற்றி தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நிச்சயபுத்தி உடைய மகாவீர ஆத்மாக்கள் வெற்றிச் சக்கரத்தின் அதிகாரி ஆவார்கள்.

யாருக்கு வெற்றிச் சக்கரம் பிராப்தமாகி உள்ளது என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டு இருந்தார்கள். சுயதரிசன சக்கரத்தின் மூலம் வெற்றிச் சக்கரத்தைப் பிராப்தம் செய்வீர்கள். எனவே, அனைவரும் படைவீரர்கள் ஆகியிருக்கிறீர்கள் அல்லவா! இந்த ஆன்மிக ஆயுதங்களின் நினைவுச் சின்னமானது, ஸ்தூல ரூபத்தில் உங்களுடைய நினைவுச் சின்ன சித்திரங்களில் காண்பிக்கப்பட்டு உள்ளது. தேவிகளுடைய சித்திரங்களில் ஆயுதம் தரித்திருப்பவர்களாக காண்பிக்கின்றனர் அல்லவா? பாண்டவர்களையும் கூட ஆயுதம் தரித்தவர்களாகக் காண்பிக்கின்றனர் அல்லவா? இந்த ஆன்மிக ஆயுதத்தை அதாவது ஆன்மிக சக்திகளை ஸ்தூல ஆயுதமாகக் காண்பித்து விட்டனர். உண்மையில் அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதா மூலமாக ஒரே சமயம் ஒரே மாதிரியான ஞானத்தின் சக்தி பிராப்தமாகக் கிடைக்கின்றது. விதவிதமான ஞானத்தைக் கொடுப்பதில்லை, ஆனாலும், ஏன் வரிசைக்கிரமமானவர்களாக ஆகின்றனர்? பாப்தாதா எப்பொழுதாவது யாருக் காவது தனிப்பட்ட முறையில் கற்பித்திருக்கின்றாரா என்ன? அனைவரையும் சேர்த்து ஒன்றாகத் தான் பாடம் கற்பிக்கின்றார் அல்லவா? அனைவருக்கும் ஒரே பாடத்தைத் தான் கற்பிக்கின்றார் அல்லவா? அல்லது ஒரு குழுவிற்கு ஒரு பாடத்தையும் மற்றொரு குழுவிற்கு வேறொரு பாடத்தையும் கற்பிக்கின்றாரா என்ன?

இங்கு 6-மாத இறை மாணவராக இருந்தாலும் அல்லது 50-வருடமானவர்களாக இருந்தாலும், ஒரே வகுப்பில் அமர்கிறீர்கள். தனித்தனியாக அமர்கிறீர்களா என்ன? பாப்தாதா ஒரே சமயத்தில் ஒரு படிப்பை அனைவருக்கும் சேர்த்து கற்பிக்கின்றார். ஒருவேளை, யாராவது பின்னால் வந்திருந் தாலும், முன்னர் என்ன பாடம் கற்பிக்கப்பட்டுள்ளதோ, அதே பாடத்தை நீங்கள் அனைவரும் இப்பொழுது கற்பித்துக் கொண்டு இருக்கின்றீர்கள். என்ன ரிவைஸ் கோர்ஸ் நடந்து

கொண்டு இருக்கிறதோ, அதையே நீங்களும் படித்துக் கொண்டு இருக்கிறீர்களா அல்லது பழையவர்களுடைய பாடம் வேறு, உங்களுடையது வேறாக உள்ளதா? ஒரே பாடம் தான் அல்லவா? 40-வருடமானவர்களுக்காக தனி முரளி மற்றும் 6-மாதத்தினருக்காக தனி முரளி என்பது இல்லை அல்லவா! ஒரே முரளி தான் அல்லவா! படிப்பு ஒன்று, கற்பிப்பவர் ஒருவர் பிறகு, வரிசைக்கிரமமாக ஏன் ஆகிறீர்கள்? அல்லது அனைவரும் முதல் எண்ணில் இருப்பவர்களா? எண் (நம்பர்) ஏன் உருவாகிறது? ஏனெனில், படிப்பை அனைவரும் படிக்கிறீர்கள், ஆனால், படிப்பினுடைய அதாவது ஞானத்தினுடைய ஒவ்வொரு விசயத்தையும் ஆயுதம் மற்றும் சக்தி ரூபத்தில் தாரணை செய்வது, மேலும் ஞானத்தின் விசயத்தை பாயிண்ட் ரூபத்தில் தாரணை செய்வது -இதில் வேறுபாடு ஏற்படுகிறது. சிலர் கேட்ட பிறகு பாயிண்ட்டாக (கருத்தாக) புத்தியில் தாரணை செய்கின்றனர். மேலும், அந்த தாரணை செய்யப்பட்ட கருத்தை மிகவும் நன்றாக வர்ணனையும் செய்கின்றனர். சொற்பொழிவு ஆற்றுவதில், பாடம் கற்பிப்பதில் பெரும்பான்மையினர் புத்திசாலிகளாக உள்ளனர். பாப்தாதா கூட குழந்தைகள் சொற்பொழிவு ஆற்றுவது மற்றும் பாடம் கற்பிப்பதைப் பார்த்து குஷி அடைகின்றார்கள். சில குழந்தைகளோ பாப்தாதாவை விட நன்றாக சொற்பொழிவு ஆற்றுகின்றனர். கருத்துக்களை மிக நன்றாக வர்ணனையும் செய்கின்றனர், ஆனால், ஞானத்தைக் கருத்தாக தாரணை செய்வது மற்றும் ஞானத்தின் ஒவ்வொரு விசயத்தையும் சக்தியாக தாரணை செய்வது -இதில் வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறது. உதாரணத்திற்கு நாடகத்தின் கருத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இது மிகப் பெரிய, வெற்றியை அடையச் செய்யக்கூடிய சக்திசாலியான ஆயுதமாகும். யாருக்கு நாடகத்தின் ஞானத்தினுடைய சக்தி நடைமுறை வாழ்வில் தாரணையாகி உள்ளதோ, அவர்கள் ஒருபொழுதும் குழப்பத்தில் வரமுடியாது. சதா ஏக்ரஸ் (ஒரே ரசனை) நிலை உடையவராக, ஆடாத, அசையாதவர் ஆகுவதற்கான மற்றும் ஆக்குவதற்கான விசேஷ சக்தி இந்த நாடகத்தின் பாயிண்ட் ஆகும். சக்தியாக தாரணை செய்யக்கூடியவர்கள் ஒருபொழுதும் தோல்வி அடைய முடியாது ஆனால், யார் பாயிண்ட்டாக மட்டும் தாரணை செய்கின்றார்களோ, அவர்கள் என்ன செய்கின்றார்கள்? நாடகத்தின் பாயிண்ட்டை வர்ணனையும் செய்வார்கள். குழப்பத்திலும் வந்து கொண்டு இருப்பார்கள் மற்றும் நாடகத்தின் பாயிண்ட்டைப் பற்றியும் பேசிக் கொண்டும் இருக்கின்றார்கள். அவ்வப்போது கண்களில்

கண்ணீரும் வடிக்கின்றார்கள். என்னாகி விட்டது தெரியவில்லை, என்னவென்று தெரியவில்லை என்று கூறுகின்றனர். மேலும், நாடகத்தின் பாயிண்டடைப் பற்றியும் பேசுகின்றனர். ஆம், வெற்றியாளராக ஆகியே தீர வேண்டும். நானே வெற்றியாளர். நாடகம் என்பது நினைவு உள்ளது, ஆனால், என்னாகி விட்டது என்று தெரியவில்லை என்று கூறுகின்றனர். எனில், இதை என்னவென்று சொல்வது? சக்தியாக, ஆயுதமாக தாரணை செய்திருக்கிறார்களா அல்லது ஒரு பாயிண்ட்டாக மட்டும் தாரணை செய்திருக்கிறார்களா? இவ்வாறே, ஆத்மாவைப் பற்றியும் கூறுவார்கள் -நானோ சக்திசாலி ஆத்மா தான், சர்வசக்திவானின் குழந்தை தான், ஆனால், இந்த விசயம் மிகவும் பெரியது. இத்தகைய விசயத்தை ஒருபொழுதும் நான் யோசித்ததே இல்லை. மாஸ்டர் சர்வசக்திவான் ஆத்மா எங்கே? மற்றும் இந்த வார்த்தை எங்கே? நன்றாக உள்ளதா? இதை என்னவென்று கூறுவது? ஆத்மா என்ற பாடம், பரமாத்மா என்ற பாடம், நாடகத்தின் பாடம், 84 பிறவிகளின் பாடம், எத்தனை பாடங்கள் உள்ளன? அனைத்தையும் சக்தியாக அதாவது ஆயுதமாக தாரணை செய்வது என்றால் வெற்றியாளராகுவது என்று அர்த்தம். பாயிண்ட்டாக மட்டும் தாரணை செய்தால் சில நேரம் பாயிண்ட் வேலை செய்யும், சில நேரம் செய்யாது. பிறகும் கூட பாயிண்ட்டாக தாரணை செய்யக்கூடியவர்கள் சேவையில் பிஸியாக இருக்கும் காரணத்தினால் மற்றும் கருத்துக்களை அடிக்கடி வர்ணனை செய்யும் காரணத்தினால் மாயையிடம் இருந்து பாதுகாப்பாக இருக்கின்றனர் ஆனால், எப்பொழுது ஏதாவது பிரச்சனை அல்லது மாயையின் ராயல் ரூபம் முன்னால் வருகிறதோ, அப்பொழுது வெற்றியாளராக ஆகமுடியாது. அதே கருத்துக்களை வர்ணனை செய்துகொண்டே இருப்பார்கள், ஆனால், சக்தி இல்லாத காரணத்தினால் மாயையை வென்றவர்களாக ஆக முடியாது.

வரிசைக்கிரமமாக ஏன் ஆகின்றீர்கள் என்பது புரிந்ததா? ஒவ்வொரு ஞானக் கருத்தையும் சக்தியாக, ஆயுதமாக தாரணை செய்திருக்கிறேனா? என்பதை இப்பொழுது சோதனை செய்யுங்கள். ஞான வானாக மட்டும் ஆகியிருக்கிறீர்களா அல்லது சக்திசாலியாகவும் ஆகியிருக்கிறீர்களா? ஞான வானின் கூடவே சக்திசாலியாகவும் ஆகியிருக்கிறீர்களா அல்லது ஞானவானாக மட்டும் தான் ஆகியிருக்கிறீர்களா? யதார்த்தமான ஞானமானது ஒளி மற்றும் சக்தி

சொரூபம் ஆகும். அந்த ரூபத்தில் தாரணை செய்திருக்கிறீர்களா? ஒருவேளை, தக்க சமயத்தில் ஞானமானது வெற்றியாளர் ஆக்கவில்லை என்றால், ஞானத்தை சக்தியாக தாரணை செய்யவில்லை. ஒருவேளை, ஒரு போர்வீரர் தக்க சமயத்தில் ஆயுதத்தை காரியத்தில் பயன்படுத்த முடியவில்லை எனில், அவரை என்னவென்று கூறுவது? மகாவீரர் என்று கூற முடியுமா? இந்த ஞானத்தின் சக்தி எதற்காகக் கிடைத்துள்ளது? மாயையை வென்றவர் ஆவதற்காகக் கிடைத்துள்ளது அல்லவா! அல்லது சமயம் கடந்து விட்ட பிறகு, இதை செய்திருக்க வேண்டும், இதை யோசித்திருந்தேன் என்று பாயிண்ட்டை நினைவு செய்வீர்களா? இதை சோதனை செய்யுங்கள். இப்பொழுது எந்தளவு சக்தியின் பாடத்தைப் பயின்றிருக்கிறீர்கள்? பாடம் கற்பிப் பதற்கு அனைவரும் தயாராக உள்ளீர்கள் அல்லவா? பாடம் கற்பிக்க முடியாதவர் எவராவது இருக்கிறீர்களா? அனைவரும் கற்பிக்க முடியும் மற்றும் மிகவும் அன்போடு நல்ல முறையில் பாடம் கற்பிக்கிறீர்கள். மிகவும் அன்போடு, களைப்படையாதவராகி, ஈடுபாட்டுடன் செய்கிறீர்கள் மற்றும் செய்விக்கிறீர்கள் என்பதை பாப்தாதா பார்க்கின்றார்கள். மிக நல்ல நிகழ்ச்சிகளை செய்கிறீர்கள். உடல், மனம், பொருளை ஈடுபடுத்துகிறீர்கள். ஆகை யினாலேயே, இந்தளவு வளர்ச்சி அடைந்துள்ளது. மிகவும் நன்றாகவும் செய்கிறீர்கள் ஆனால், இப்பொழுது சமயத்தின் அனுசாரமாக இதைக் கடந்து விட்டீர்கள். குழந்தைப் பருவம் முடிவடைந்து விட்டதல்லவா? இப்பொழுது இளமைப் பருவத்தில் உள்ளீர்களா அல்லது வானப்பிரஸ்த நிலையில் உள்ளீர்களா? எந்த நிலை அடைந்திருக்கிறீர்கள்? இந்தக் குழுவில் பெரும்பான்மையினர் புதியவர்கள் ஆனால், அயல்நாட்டு சேவையில் இத்தனை வருடங்கள் முடிவடைந்து விட்டன எனில், இப்பொழுது குழந்தைப் பருவம் அல்ல, இப்பொழுது இளமைப் பருவம் வரை வந்தடைந்து விட்டீர்கள். இப்பொழுது சக்திசாலியான பாடம் படியுங்கள் மற்றும் கற்றுக் கொடுங்கள்.

இவ்வாறு இளைஞர்களிடத்திலும் சக்தி அதிகமாக உள்ளது. இளமைப் பருவம் மிகவும் சக்தி வாய்ந்தது. என்ன விரும்புகிறார்களோ, அதை செய்ய முடியும். ஆகையினாலேயே பாருங்கள், தற்காலத்தின் அரசாங்கம் கூட இளைஞர்களைக் கண்டு பயப்படுகிறது, ஏனெனில், இளைஞர் குழுவிடத்தில் லௌகீக ரூபத்தில் புத்தியின் சக்தி உள்ளது மற்றும்

சரீரத்தின் சக்தியும் உள்ளது. இங்கு அழித்தல் காரியம் செய்பவர்கள் கிடையாது. உருவாக்கக்கூடியவர்கள் ஆவீர்கள். அவர்கள் ஆவேசம் கொண்டவர்கள் மற்றும் இங்கு சாந்த சொரூப ஆத்மாக்கள் ஆவீர்கள். கெட்டுப் போனதை சீர்திருத்தக் கூடியவர்கள் ஆவீர்கள். அனைவருடைய துக்கத்தையும் போக்கக் கூடியவர்கள் ஆவீர்கள். அவர்கள் துக்கத்தைக் கொடுக்கக் கூடியவர்கள் மற்றும் நீங்கள் துக்கத்தைப் போக்கக் கூடியவர்கள். துக்கத்தை நீக்கி சுகம் கொடுப்பவர்கள். தந்தை எப்படியோ அப்படியே குழந்தைகள். சதா ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் மற்றும் தனக்காகவும் சுகம் தரக்கூடிய எண்ணமாக உள்ளது. ஏனெனில், துக்கத்தின் உலகத்தில் இருந்து வெளியேறிவிட்டீர்கள். இப்பொழுது துக்கத்தின் உலகத்தில் இல்லை. துக்கதாமத்தில் இருந்து சங்கமயுகத்திற்கு வந்து விட்டீர்கள். புருஷோத்தம யுகத்தில் இருக்கிறீர்கள். அவர்கள் கலியுக இளைஞர்கள்! நீங்கள் சங்கமயுக இளைஞர்கள் ஆவீர்கள். ஆகையினால், இப்பொழுது சதா தனக்குள் ஞானத்தை சக்தியாக தாரணையும் செய்யுங்கள் மற்றும் செய்யவும் வைத்திடுங்கள். எந்தளவு சுயம் சக்திசாலியான பாடம் பயின்றிருப்பீர்களோ, அந்தளவு பிறருக்கும் கற்பிப்பீர்கள். இல்லையெனில், பாயிண்ட்டினுடைய பாடத்தை மட்டும் கற்பிப்பீர்கள். இப்பொழுது பாடத்தை மீண்டும் திரும்பப் படிக்க வேண்டும். ஒவ்வொரு பாயிண்ட்டிலும் என்னென்ன சக்தி உள்ளது, எவ்வளவு சக்தி உள்ளது, எந்த சமயம் எந்த சக்தியை எந்த ரூபத்தில் பயன்படுத்த முடியும், இந்தப் பயிற்சியை தனக்குத் தானே கொடுத்துக் கொள்ள முடியும். ஆத்மா என்ற பாயிண்ட்டை சக்திசாலியான ஆயுதமாக நாள் முழுவதும் நடைமுறை காரியத்தில் பயன்படுத்தினேனா? தனக்குத் தானே பயிற்சி கொடுத்துக் கொள்ள முடியும். ஏனெனில், நீங்கள் ஞானவான்கள் தானே! ஆத்மாக்களுக்கு சொல்வதற்காகக் கருத்துக்களை எடுக்கச் சொன்னால் எத்தனை கருத்துக்களை எடுப்பீர்கள்! நிறைய உள்ளன அல்லவா? சொற்பொழிவாற்றுவதில் புத்திசாலிகள் ஆனால், பிரச்சனையான சமயத்தில் ஒவ்வொரு கருத்தையும் எந்தளவு காரியத்தில் கொண்டு வருகிறேன் என்பதைப் பாருங்கள். நான் நன்றாகவே உள்ளேன், ஆனால், இப்படிப்பட்ட விசயம் ஏற்பட்டுவிட்டது, பிரச்சனை வந்து விட்டது, அதனால் இவ்வாறு ஆகி விட்டது என்று நினைக்காதீர்கள். ஆயுதம் எதற்காக உள்ளது? எப்பொழுது எதிரி வருகிறாரோ, அதற்காகத்தான் உள்ளதா? அல்லது எதிரி வந்து விட்டார், ஆகையினால், நான் தோல்வி அடைந்து

விட்டேன். மாயை வந்து விட்டதால் தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று கூறுகிறீர்கள் ஆனால், மாயைக்காக (எதிரி) தானே ஆயுதங்கள் உள்ளன! சக்திகளை எதற்காக தாரணை செய்திருக்கிறீர்கள்? தக்க சமயத்தில் வெற்றியை அடைவதற்காக சக்திசாலி ஆகி உள்ளீர்கள் அல்லவா? எனவே, என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா? தங்களுக்குள் நன்றாக ஆன்மிக உரையாடல் செய்கின்றீர்கள். பாப்தாதாவிற்கு அனைத்து செய்திகளும் வருகின்றன. பாப்தாதா குழந்தைகளுடைய இந்த ஊக்கத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார்கள். படிப்பின் மீது அன்பு உள்ளது, தந்தை மீது அன்பு உள்ளது, சேவை மீது அன்பு உள்ளது, ஆனால், அவ்வப்போது மென்மையானவர் ஆகி விடுகின்றனர், அப்பொழுது ஆயுதம் நழுவி விடுகிறது. அந்த சமயம் அவர்களுடைய புகைப்படம் எடுத்து பிறகு, அவர்களுக்கே அதைக் காண்பிக்க வேண்டும். கொஞ்ச நேரத்திற்காகத் தான் அவ்வாறு ஆகிறது, அதிகமாக இல்லை, ஆனாலும் கூட நிரந்தரமாக அதாவது சதா தடையற்றவராக இருப்பது மற்றும் சில நேரம் தடைக்கு வசமாகுவது, சில நேரம் தடையற்றவராகுவது ஆகிய இந்த இரண்டு நிலைக்கும் வேறுபாடு உள்ளது அல்லவா! நூலில் எவ்வளவு முடிச்சு விழுகிறதோ, அவ்வளவு பலவீனமாகிறது. இணைந்து விடுகிறது ஆனால், இணைக்கப்பட்ட பொருள் மற்றும் முழுமையான பொருள் ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது அல்லவா? இணைக்கப்பட்ட பொருள் நன்றாக இருக்குமா? தடை வருகிறது, பிறகு, தடையற்றவர் ஆகிறீர்கள், பிறகு, தடை வருகிறது, உடைந்த பிறகு இணைத்தாலும், இணைக்கப்பட்டது தானே!. அதனால் கூட இதன் பிரபாவம் மனோ நிலையில் ஏற்படுகிறது.

சிலர் மிகவும் நல்ல, தீவிர முயற்சியாளர்களாகவும் உள்ளனர். ஞானவான்களாக, சேவாதாரிகளாகவும் உள்ளனர். பாப்தாதா, பரிவாரத்தின் கண்களிலும் உள்ளனர், ஆனால், உடைந்த பிறகு சேரக்கூடிய ஆத்மாக்கள் சதா சக்திசாலியாக இருக்கமாட்டார்கள். சின்னச் சின்ன விசயத்தில் அவர்கள் உழைக்க வேண்டியதிருக்கும். அவ்வப்போது சதா இலகுவானவர்களாக, மகிழ்ச்சியாக, குஷியில் நடனமாடக் கூடியவர்களாக இருப்பார்கள் ஆனால், சதா அவ்வாறு காட்சி அளிக்கமாட்டார்கள். மகாரதியின் பட்டியலில் இருப்பார்கள் ஆனால், அத்தகைய சமஸ்காரம் உடையவர்கள் நிச்சயம் பலவீனமாக இருப்பார்கள். இதற்கான காரணம் என்ன? இந்த உடைந்து, இணையக்

கூடிய சமஸ்காரமானது அவர்களை உள்ளுக்குள் பவீனமாக ஆக்கி விடுகிறது. வெளி முகமாக எந்த விசயமும் இருக்காது. மிகவும் நன்றாகத் தென்படுவார்கள், ஆகையினால், இதை சமஸ்காரமாக ஒருபோதும் ஆக்கக்கூடாது. மாயை வரத்தான் செய்கிறது, நடந்து கொண்டிருக் கிறோம் என்று நினைக்கக்கூடாது ஆனால், சிலர் நேரம் உடைந்து போவது, சில நேரம் இணைவது, இவ்வாறு இருப்பது எப்படி உள்ளது? சதா இணைந்திருப்பது, சதா தடையற்றவராக இருப்பது, சதா மகிழ்ச்சியாக, சதா குடை நிழலுக்குள் இருப்பது ஆகிய அந்த வாழ்க்கைக்கும் மற்றும் இந்த வாழ்க்கைக்கும் வித்தியாசம் உள்ளது அல்லவா? ஆகையினால், பாப்தாதா கூறுகின்றார்கள் -சிலரது ஜாதகத்தின் தாள் முற்றிலும் சுத்தமாக உள்ளது. சிலருடைய ஜாதகத்தில் இடை இடையே கறை படிந்துள்ளது. அந்தக் கறையை அழிக்கிறார்கள், ஆனால், அதுவும் தென்படுகிறது அல்லவா? கறையே இருக்கக்கூடாது. சுத்தமான தாள் மற்றும் கறை நீக்கப்பட்ட தாள் -எது நன்றாக இருக்கும்? சுத்தமாகத் தாளை வைப்பதற்கான ஆதாரம் மிகவும் சுலபமானது. இது மிகவும் கடினமாகும் என்று பயந்து விடக்கூடாது. மிகவும் சுலபமானது, ஏனெனில், சமயம் அருகாமையில் வந்து கொண்டிருக் கிறது. சமயத்திற்கும் கூட விசேஷமாக வரதானம் கிடைத்துள்ளது. யார் எந்தளவிற்கு பின்னால் வருகின்றார்களோ, அவர்களுக்கு சமயத்தின் அனுசாரம் அதிகப்படியான லிஃப்ட்டினுடைய கிஃப்ட்டும் (பரிசு) கிடைக்கிறது. மேலும், இப்போதைய அவ்யக்த ரூபத்தின் நடிப்பு கூட வரதானி நடிப்பு ஆகும். எனவே, சமயத்தின் உதவியும் உங்களுக்கு உள்ளது. அவ்யக்த நடிப்பினுடைய அவ்யக்த சகயோகத்தினுடைய உதவியும் உள்ளது. வேகமாகச் செல்லும் சமயம் ஆகும், இதனுடைய உதவியும் உள்ளது. முதலில் புதியதை உருவாக்குவதற்கு சமயம் ஆனது. இப்பொழுது உருவான உருவாக்கப்பட்டதாக உள்ளது. நீங்கள் உருவான உருவாக்கப்பட்டதற்கு வந்து விட்டீர்கள். இந்த வரதானமும் குறைந்ததல்ல. யார் முதலில் வந்தார்களோ, அவர்கள் வெண்ணெய் எடுத்தார்கள், நீங்கள் வெண்ணெய் சாப்பிடுவதற்கு வந்து விட்டீர்கள், எனில், வரதானி ஆவீர்கள் அல்லவா? சிறிது மட்டும் கவனம் கொடுங்கள். மற்றபடி ஒன்றும் பெரிய விசயம் அல்ல. அனைத்து விதமான உதவியும் உங்களுக்காக உள்ளது. இப்பொழுது உங்களுக்கு மகாரதி நிமித்த ஆத்மாக்களின் பாலனை எவ்வளவு கிடைக்கிறதோ, அவ்வளவு முன்னர் வந்தவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஒவ்வொருவருக் காகவும் எவ்வளவு

உழைப்பு கொடுத்து நேரம் கொடுக் கின்றார்கள். முதலில் பொதுவான பாலனை கிடைத்தது ஆனால், நீங்கள் செல்லக் குழந்தைகளாகி பாலனை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். பாலனைக்கான கைம்மாறும் (ரிட்டன்) கொடுக்கக்கூடியவர்கள் ஆவீர்கள் அல்லவா! கடினம் அல்ல. ஒவ்வொரு விசயத்தையும் சக்தி ரூபத்தில் பயன்படுத்துவதில் மட்டும் கவனம் கொடுங்கள். புரிந்ததா? நல்லது!

சதா மகாவீரர் ஆகி வெற்றிக் குடையின் கீழ் வீற்றிருக்கும் ஆத்மாக்கள், சதா ஞானத்தின் சக்தியை நேரத்தின் அனுசாரம் காரியத்தில் ஈடுபடுத்தக் கூடிய, சதா உறுதியான, அசையாத, துண்டிக்கப்படாத ஸ்திதியை தாரணை செய்யக்கூடிய, சதா தன்னை மாஸ்டர் சர்வசக்திவான் என்று அனுபவம் செய்யக்கூடிய, அத்தகைய சிரேஷ்டமான, சதா மாயையை வென்ற வெற்றியாளர் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிகளுடன்:** ஒப்பற்ற இரத்தினங்களுடைய ஒவ்வொரு அடியிலும் சுயத்திற்கு பல கோடி மடங்கு வருமானம் உள்ளது, ஆனால், கூடவே பிறருக்கும் பல கோடி மடங்கு வருமானம் கிடைக்கிறது. ஒப்பற்ற இரத்தினங்கள் சதா ஒவ்வொரு அடியிலும் முன்னேறிக் கொண்டே இருப்பார்கள். அனாதி சாவி கிடைத்துள்ளது. இது ஆட்டோமேடிக் (தானியங்கி) சாவியாகும். நிமித்தமானவர் ஆகுவது என்றால், ஆட்டோமேடிக் சாவியைப் போடுவது என்று அர்த்தம். ஒப்பற்ற இரத்தினங்கள் அனாதி சாவியின் மூலம் முன்னேறித் தான் ஆக வேண்டும். உங்கள் அனைவருடைய ஒவ்வொரு எண்ணத்திலும் சேவை நிறைந்துள்ளது. அனேக ஆத்மாக்களுக்குள் ஊக்கம், உற்சாகத்தைக் கொண்டு வருவதற்கு ஒருவர் நிமித்தம் ஆகின்றார். உழைக்க வேண்டியது இருக்காது, ஆனால், நிமித்தமானவரைப் பார்த்தவுடனேயே அந்த அலை பரவி விடுகிறது. எவ்வாறு ஒருவரை ஒருவர் பார்த்தவுடன் வண்ணம் ஒட்டிக் கொள்கிறது அல்லவா? இந்த ஆட்டோமேடிக் ஊக்க உற்சாகத்தின் அலையானது பிறருடைய ஊக்க உற்சாகத்தையும் அதிகரிக்கிறது. எவ்வாறு ஒருவர் நன்றாக நடனமாடுகிறார் எனில், அதைப் பார்ப்பவர்களுடைய கால்களும் நடனமாடத் துவங்கி விடுகின்றன, அலை பரவி விடுகிறது. விரும்பாமலேயே கூட கை, கால் இயங்க ஆரம்பித்து விடுகிறது. நல்லது.

மதுவனத்தின் அனைத்து காரியங்களும் சரியாக நடைபெறுகின்றன. மதுபன் நிவாசிகளால் மதுவனம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. பாப்தாதா நிமித்தமான குழந்தைகளைப் பார்த்து சதா கவலையற்றவர்களாக இருக்கின்றார்கள். ஏனெனில், குழந்தைகள் எவ்வளவு புத்திசாலிகளாக உள்ளனர். குழந்தைகளும் குறைந்தவர்கள் அல்ல. தந்தைக்குக் குழந்தைகள் மீது முழுமையான நம்பிக்கை உள்ளது. குழந்தைகள் தந்தையை விட முன்னால் உள்ளனர். நிமித்தமாகி இருப்பவர்கள் சதா தந்தையைக் கூட கவலையற்றவராக இருக்க வைப்பவர்கள். உண்மையில் கவலை என்பது கிடையாது, ஆனாலும், தந்தைக்கு நற்செய்தியை சொல்லக் கூடியவர்கள். ஒவ்வொரு குழந்தையும் ஒருவரை விட ஒருவர் மேலானவர்கள், ஒவ்வொரு குழந்தையும் விசேஷமானவர், இத்தகைய குழந்தைகள் வேறு எங்கும் இருக்கமாட்டார்கள். ஒருவருக்கு இத்தனை குழந்தைகள் இருக்கவே முடியாது. ஒருவர் சண்டை போடக்கூடியவராக இருப்பார், மற்றொருவர் படிக்கக்கூடியவராக இருப்பார். இங்கேயோ ஒவ்வொருவரும் விசேஷமான மணிகள் ஆவீர்கள், ஒவ்வொருவரிடமும் விசேஷதன்மை உள்ளது.

**வரதானம்: தூய்மையின் சக்திசாலியான திருஷ்டி, விருத்தி மூலம் சர்வ பிராப்திகளை செய்விக்கக்கூடிய துக்கத்தைப் போக்கி சுகம் கொடுப்பவர் ஆகுக!**

விஞ்ஞானத்தின் மருந்தில் அல்ப காலத்தின் சக்தி உள்ளது, அது துக்கம், வலியை நீக்கி விடுகிறது ஆனால், தூய்மையின் சக்தி அதாவது அமைதி சக்தியிலோ ஆசீர்வாதத்தின் சக்தி உள்ளது. இந்தத் தூய்மையின் சக்திசாலியான திருஷ்டி மற்றும் விருத்தி சதா காலத்திற்கான பிராப்தியை செய்விக்கக்கூடியது. ஆகையினால், உங்களுடைய ஜடச்சித்திரங்களுக்கு முன்னால் ஓ! கருணை காட்டுபவரே! கருணை காட்டுங்கள் என்று கூறி கருணை மற்றும் ஆசீர்வாதத்தைக் கேட்கின்றார்கள். சைத்தன்யத்தில் மாஸ்டர் துக்கத்தைப் போக்கி சுகத்தைக் கொடுப்பவராகி, கருணை காட்டிய தனாலேயே பக்தியில் பூஜிக்கப்படுகிறீர்கள்.

**சுலோகன்: சமயத்தின் அருகாமையின் அனுசாரம் எல்லையற்ற வைராக்கியமே உண்மையான தவம் அல்லது சாதனா ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இப்பொழுது இல்லை என்றால் ஒரு போதும் இல்லை!

இன்று அன்பு நிறைந்த மற்றும் முழுமையாக சட்டப்படி நடக்கும் பாப்தாதா அனைத்து குழந்தை களின் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தையின் சேமிப்புக் கணக்கு எந்த அளவு இருக்கின்றது என்பதைப் பார்த்தார். பிராமணன் ஆவது என்றால் கணக்கை சேமிப்பது, ஏனென்றால் இந்த ஒரு பிறவியில் சேமிப்பு செய்த கணக்கின் பிரகாரம் 21-பிறவிகள் பிராப்தியை அடைந்துக் கொண்டேயிருப்பார்கள். 21-பிறவிகள் பிராப்தியை மட்டும் அடைவதில்லை, ஆனால் எந்த அளவு பூஜைக்குரியவர்களாக ஆகிறீர்களோ அதாவது இராஜ பதவிக்கு அதிகாரியாக ஆகிறீர்களோ அந்த கணக்கின் அனுசாரம் அரைக் கல்பத்தில் பக்தி மார்க்கத்தில் பூஜையும் இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரத்தின் கணக்கின்படி நடக்கும். இராஜ பதவி சிரேஷ்மடமாக இருக்கிறது என்றால் பூஜைக்குரிய சொரூபமும் அந்தளவு சிரேஷ்டமாக இருக்கும். அத்தனை எண்ணிக்கையில் பிரஜையும் உருவாகும். பிரஜைகள் தங்களுடைய இராஜ்ய அதிகாரி, விஷ்வ மகாராஜா மற்றும் ராஜாவை தாய் தநதையின் ரூபத்தில் அன்பு செய்வார்கள். அந்த அளவே பக்த ஆத்மாக்கள் கூட அந்த சிரேஷ்ட ஆத்மாவை மற்றும் இராஜ்ய அதிகாரி மகான் ஆத்மாவை அதேபோலவே தன்னுடைய அன்பிற்குரிய இஷ்ட தேவி அல்லது தேவதை என்று புரிந்து பூஜை செய்கின்றார்கள். யார் 8-நம்பரில் (அஷ்ட ரத்தினம்) வருகிறார்களோ அவர்கள் அந்த அளவு இஷ்ட மகான் தேவி தேவதை ஆகிறார்கள். இந்தக் கணக்கின் பிரகாரம் இதே பிராமண வாழ்க்கையில் இராஜ பதவியையும், பூஜைக்குரிய பதவியையும் அடைகிறீர்கள். அரைக் கல்பம் இராஜ பதவி உடையவர்களாக ஆகிறீர்கள், மேலும் அரைக் கல்பம் பூஜைக்குரிய பதவியை அடைகிறீர்கள். அந்த மாதிரி இந்த பிறவி, வாழ்க்கை மற்றும் யுகம் முழு கல்பத்தின் கணக்கில் சேமிப்பு செய்வதற்கான யுகம் மற்றும் வாழ்க்கை. எனவே உங்கள் அனைவருக்கும் ஒரு சுலோகன்

உருவாகியிருக்கிறது., அது நினைவிருக்கிறதா? இப்பொழுது இல்லை என்றால் ஒருபொழுதம் இல்லை. இதை இந்த நேரத்தின் இந்த வாழ்க்கைக்காக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இந்த சுலோகன் பிராணர்களுக்காகவும் இருக்கிறது என்றால், அஞ்ஞானி ஆத்மாக் களை எழுப்புவதற்கான சுலோகனும் இது தான். ஒருவேளை பிராமண ஆத்மாக்கள் ஒவ்வொரு சிரேஷ்ட காரியம் செய்வதற்கு முன்பு சிரேஷ்ட எண்ணத்தை வைத்துக் கொண்டே எப்பொழுதும் இந்த சுலோகனை அதாவது இப்போது இல்லை என்றால் ஒருபொழுதும் இல்லை என்பதை நினைவு வைக்கிறார்கள் என்றால் என்னவாகும்? எப்பொழுதும் ஒவ்வொரு சிரேஷ்ட காரியத்தில் தீவிரமான வராகி முன்னேறிச் சென்று கொண்டேயிருப்பார். கூடவே இந்த சுலோகன் எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியது. ஆன்மீக விழிப்புணர்வு இயல்பாகவே வந்து விடுகிறது. பின்பு செய்து விடலாம், பின்பு பார்த்துக் கொள்ளலாம், செய்யவும் வேண்டும், இந்த வாழ்க்கையில் இருக்கவும் வேண்டும், நாம் அந்த மாதிரி ஆகவும் வேண்டும் என்ற இந்தத சாதாரண முயற்சி செய்வதின் எண்ணங்கள் தானாகவே முடிவடைந்து விடும். எனென்றால் இப்போது இல்லை என்றால் ஒருபோதும் இல்லை என்பது நினைவில் வந்து விட்டது. என்ன செய்ய வேண்டுமோ அதை இப்பொழுது செய்து விடுங்கள்.. இதைத்தான் தீவிர முயற்சி செய்து என்று கூறுவது.

நேரம் மாறுவதினால் சில நேரம் நல்ல எண்ணமும் மாறி விடுகிறது. நல்ல காரியத்தை எந்த ஊக்கத்துடன் செய்ய வேண்டும் என்று யோசித்திருந்தாரோ அதுவும் மாறிவிடுகிறது. எனவே பிரம்மாபாபா நம்பர் 1-ல் செல்வதற்கான விசேஷமாக அவரிடம் என்ன பார்த்தீர்கள்? எப்பொழுது என்பதில்லை, ஆனால் இப்பொழுது செய்ய வேண்டும். உடனடி தானம் மகா புண்ணியம் என்று கூறுவது. ஒருவேளை உடனடியாக தானம் செய்ய வில்லை என்றால், யோசித்தார், நேரம் எடுத்துக் கொண்டார், திட்டத்தை உருவாக்கினார், பிறகு நடைமுறையில் கொண்டு வந்தார் என்றால் இதை உடனடி தானம் என்று கூறமாட்டோம், தானம் என்று கூறுவோம். உடனடி தானம் மற்றும் தானத்தில் வித்தியாசம் இருக்கிறது. உடனடி தானம் மகா தானம். மகா தானத்தின் பலன் மகானாக இருக்கும். ஏனென்றால் எதுவரை எண்ணத்தை நடைமுறையில் செய்வது நான் செய்வேன், இப்பொழுது இல்லை கொஞ்ச காலத்திற்கு பிறகு செய்வேன் என்று யோசிக்கிறார், இப்பொழுது இந்த அளவு செய்து

விடுகின்றேன் என்று யோசிப்பது மற்றும் செய்து இதனிடையே என்ன நேரம் இருக்கிறதோ அந்த நேரத்தில் மாயாவிற்கு வாய்ப்பு கிடைத்து விடுகிறது. பாப்தாதா குழந்தைகளின் கணக்கைப் பல முறை பார்த்திருக்கிறார். யோசிப்பது மற்றும் செய்வதற்கிடைய என்ன நேரம் இருக்கிறதோ அந்த நேரத்தில் மாயா வந்து விடுகிறது என்றால் விஷயமும் மாறிவிடுகிறது. உதாரணமாக எப்போதாவது உடலால், மனதால் நான் இதை செய்வேன் என்று யோசிக்கிறார், ஆனால் கொஞ்ச காலம் கடந்த பிறகு என்ன 100 சதவிகிதமாக யோசித்தாரோ அது செய்யும் நேரத்தில் மாறிவிடு கிறது. நேரம் கிடைப்பதினால் மாயாவின் பிரபாவம் ஆன காரணத்தினால் உதாணரமாக 8 மணி நேரம் ஈடுபடுத்துபவர் 6 மணி நேரம் ஈடுபடுத்துவார். 2 மணி நேரம் குறைந்து விடும். சூழ்நிலை களும் அந்த மாதிரி ஆகி விடும். இந்த விதமாக பணம் செல்வத்தைப்பற்றி நான் 100 செய்ய வேண்டும் என்று யோசிக்கிறார் ஆனால் 50 செய்தார். இந்த அளவு வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறது. ஏனென்றால் இடையில் மாயாவிற்கு வாய்ப்பு கிடைத்து விடுகிறது. பிறகு அனேக எண்ணங்கள் வருகிறது. நல்லது. இப்பொழுது 50 செய்து விடுவோம்,. 50 பின்னால் செய்து விடலாம். எல்லாமே தந்தையுடையது தானே! ஆனால் உடல் மனம், செல்வத்தால் அனைத்திலும் உடனடியாக செய்யப்படும் தானம் மாகா புண்ணியம் ஆகிறது. பலி கொடுக்கிறார்கள் என்றால் உடனடியாக (ஒரே வெட்டில்) வெட்டப்படுவது தான் மகா பிரசாதமாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை பார்த்திருக் கின்றீர்கள் இல்லையா? ஒரே வெட்டில் இரண்டு துண்டாக ஆவதை மகா பிராதாசம் என்று சொல்வர்கள். யார் ப-யில் கதறி கதறி இருந்து விடுவார்களோ அதை மகா பிரசாதம் என்று கூற மாட்டோம். எப்படி அந்த ஆட்டை பலி கொடுக்கிறார்கள், அது அதிகமாகக் கதறும், இங்கு என்ன செய்கிறார்கள்? அந்த மாதிரி செய்யலாமா? அல்லது வேண்டாமா என்று யோசிக்கிறார்கள். இது தான் யோசிப்பது என்பது!. கதறும் மிருகத்தை ஒருபோதும் மகா பிரசாதமாக ஏற்றுக் கொள்ளப் படாது. அதே போல் இங்கேயும் உடனடி தானம் மகா புண்ணியம்... என்று இந்த வர்ணனை இருக்கிறது தானே! அது இந்த நேரத்தினுடையது. அதாவது யோசிப்பது மற்றும் உடனடியாக செய்து முடிப்பது.. யோசித்து யோசித்தே இருந்து விடக்கூடாது. அநேக முறை அந்த மாதிரி அனுபவமும் கூறுவார்கள். நான் இதைத்தான் யோசித்தேன், ஆனால் இவர் செய்து விட்டார், நான் செய்ய வில்லை, யார் செய்து விடுகிறாரோ அவர் அடைந்து விடுகிறார். யார் யோசித்து யோசித்து இருந்து விடுகிறாரோ அவர்

யோசித்து யோசித்து திரேதாயுகம் வரை சென்றடைவார். யோசித்து யோசித்தே இருந்து விடுவார். இதே வீணான எண்ணம் தான் அது உடனடியாக செய்யவில்லை. நல்லக் காரியம், நல்ல எண்ணத்திற்காக உடனடி தானம் மகா புண்ணியம் என்று மகிமை இருக்கிறது. சில நேரம் சில குழந்தைகள் பெரிய விளையாட்டைக் காண்பிக்கிறார்கள், வீணான எண்ணம் அந்தளவு வேகமாக வருகிறது. அதை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. பிறகு என்ன செய்வது! நடந்து விட்டது என்று கூறுவார்கள். நிறுத்த முடிவதில்லை, என்ன வந்ததோ அதை செய்து விட்டார், ஆனால் வீணானவற்றிற்காக கட்டுப்படுத்தும் சக்தி வேண்டியது இருக்கிறது. ஒரு சக்திசாலியான எண்ணத்தின் பலன் பல மடங்கு கிடைக்கிறது. அதேபோலவே ஒரு வீணான எண்ணத்தின் அதாவது சோர்வு அடைவது, மனம் உடைந்து போவது மற்றும் குஷி காணாமல் போவது, அல்லது நான் என்னவாக இருக்கிறேன் என்று தன்னையே புரிந்து கொள்ள முடியாத நிலை ஆகிய இவைகளின் கணக்கும் ஒன்றிற்கு பல மடங்கு கணக்காக அனுபவம் ஆகும். பின்பு விஷயமோ ஒன்றுமே யில்லை, ஆனால் குஷியில்லாமல் ஆகி விட்டது என்று யோசிக்கிறார்கள். பெரிய விஷயமாக இருக்கவே இல்லை, ஆனால் நீண்ட நாட்களாக குஷி குறைந்து விட்டது.. தனிமையாக இருக்க ஏன் மனம் விரும்புகிறது என்று தெரிய வில்லை. எங்காவது சென்றுவிடலாமா, ஆனால் எங்கே செல்வது? தனிமை என்றால் தந்தையின் துணை என்று தனியாகவோ செல்லக்கூடாது இல்லையா? ஸ்தூல மாக தனிமையானவர்களாக ஆகிக் கொள்ளுங்கள், ஒன்றும் தவறு இல்லை, ஆனால் தந்தையின் தனிமையானவராக ஒருபோதும் ஆகாதீர்கள். ஒருவேளை தந்தையின் துணையிலிருந்து தனிமையானவர் ஆனீர்கள், வைராக்கியம் உடையவர், சோர்வுடையவர் ஆனீர்கள் என்றால், இதுவும் மற்ற மடங்கள் மாதிரி ஆகி விடும். பிராமண வாழ்க்கை இல்லை. இணைந்து இருக்கிறீர்கள் இல்லையா? சங்கமயுகம் இணைந்து இருப்பதற்கான யுகம். அந்த மாதரி அதிசயமான ஜோடி (யுகல்) முழு கல்பத்திலும் கிடைக்காது. லட்சுமி நாராயணராக ஆகி விட்டால் கூட ஆனால் இந்த மாதிரியான ஜோடியாக இருக்காது இல்லையா? எனவே சங்கம யுகத்தின் இணைந்த ரூபம் அதிலிருந்து ஒரு வினாடி கூட தனியாகப் பிரிய முடியாது. ஒருவேளை பிரிந்தீர்கள் என்றால் எல்லாம் முடிந்தது. அந்த மாதிரி அனுபவம் இருக்கிறது இல்லையா? பிறகு என்ன செய்கிறார்கள்? சில நேரம் கடற்கரைக்குச் சென்று விடுவார்கள், சில

நேரம் மொட்டை மாடிக்கும், சில நேரம் மலை உச்சிக்கும் சென்று விடுவார்கள். ஞானத்தை சிந்திப்பதற்காக மிக நன்றாக செல்லுங்கள், அது வேறு விஷயம் ஆனால் தந்தையில்லாமல் தனியாக செல்லாதீர்கள். எங்கு சென்றாலும் தந்தையுடன் செல்லுங்கள். இது பிராமண வாழ்க்கைக்கான உறுதி மொழி. பிறந்த உடனேயே இந்த உறுதி மொழியை கொடுத்திருக்கிறீர்கள் இல்லையா? உடன் இருப்போம், உடன் செல்வோம். காட்டிற்கும், கடற்கரைக் கும் செல்ல வேண்டும் என்று அப்படி யில்லை, உடன் இருக்க வேண்டும், உடன் செல்ல வேண்டும். இந்த உறுதிமொழி அனைவரிடமும் மிகவும் உறுதியாக இருக்கிறது தான் இல்லையா? திட எண்ணம் உள்ளவர்கள் எப்போதும் வெற்றியை அடைகிறார்கள். திடத்தன்மைத்தான் வெற்றிக்கான சாவி. எனவே இந்த உறுதிமொழியையும் திடமாக உறுதியானதாக செய்திருக்கிறீர்கள் இல்லையா? எங்கு எப்பொழுதும் திடத்தன்மை இருக்குமோ அங்கு எப்போதும் வெற்றி இருக்கும். திடத்தன்மை குறைகிறது என்றால் வெற்றியும் குறைகிறது.

பிரம்மாபாபாவிடம் விசேஷமாக என்ன பார்த்திருக்கிறீர்கள்? உடனடி தானம் மகாப்புண்ணியம் என்று இதைத்தான் பார்த்தீர்கள், பிறகு என்னவாகும் என்று அவர் எப்பொழுதாவது யோசித்தது உண்டா? முத-ல் யோசிக்க வேண்டும், பிறகு செய்ய வேண்டும் என்று அப்படி இல்லை. உடனடி தானம் மகா புண்ணியத்தின் காரணமாக பிரம்மாபாபா நம்பர் ஒன் மகான் ஆத்மாவாக ஆனார். எனவே நம்பர் ஒன் மாகன் ஆத்மாவாக ஆனதின் காரணத்தினால் கிருஷ்ணரின் ரூபத்தில் நம்பர் ஒன் பூஜை நடந்து கொண்டிருக்கிறது. இவர் ஒருவர் தான் அந்த மாதிரி மகான் ஆத்மா. யாருக்கு குழந்தை பருவ ரூபத்திலும் பூஜை, சிறு வயது ரூபத்திலும் பூஜை, இளமைப் பருவத்திலும் கிருஷ்ணா ராதா ரூபத்திலும் பூஜை, மேலும் மூன்றாவது கோப கோபியரின் மகிமையும் மற்றும் பூஜையும் நடக்கிறது. நான்காவது லட்சுமி நாராயணர் ரூபத்திலும் பூஜை நடக்கிறது. இந்த ஒரே ஒரு மகான் ஆத்மாவிற்குத்தான் பல ஆயுளின் ரூபத்தில் பலவிதமான சரித்திரத்தின் ரூபத்தில் மகிமை மற்றும் பூஜை நடக்கிறது. இராதாவிற்கும் மகிமை இருக்கிறது, ஆனால் இராதாவின் குழந்தை ரூபத்தில் ஒருபோதும் வைத்து ஆட்ட மாட்டார்கள். கிருஷ்ணரை ஊஞ்சலில் வைத்து ஆட்டுவார்கள். கிருஷ்ணரிடம் அதிக அன்பு வைப்பார்கள். கிருஷ்ணர் உடன் இருக்கும் காரணத்தினால் இராதா

விற்கும் பெயர் அவசியம் இருக்கிறது. இருந்தாலும் நம்பர் ஒன்று மற்றும் இரண்டில் வித்தியாசம் இருக்கும் இல்லையா? அப்படி நம்பர் ஒன் ஆனதின் காரணமாக என்ன ஆனார்? மகா புண்ணிய ஆத்மா ஆனார். மகா புண்ணிய ஆத்மாவிலிருந்து மகான் பூஜைக்குரிய ஆத்மவாக ஆகி விட்டார். உங்களின் பூஜைகளிலும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம் இல்லையா? சில தேவி தேவதைகளுக்கு விதிப்பூர்வமாக நடக்கிறது. மேலும் சிலருக்கு அப்படியே செய்ய வேண்டுமே என்று நடக்கிறது. இதனுடையதோ மிகுந்த விஸ்தாரம் இருக்கிறது. பூஜைக்கும் மிகுந்த விஸ்தாரம் இருக்கிறது ஆனால் இன்றோ அனைவரின் சேமிப்புக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஞானத்தின் பொக்கிஷத்தை, சக்திகளின் பொக்கிஷத்தை, சிரேஷ்ட எண்ணங் களின் பொக்கிஷத்தை எந்தளவு சேமித்திருக்கிறார்கள். மேலும் நேரத்தின் பொக்கிஷத்தை எந்தளவு சேமித்திருக்கிறார்கள், இந்த நான்கு பொக்கிஷங்களையும் எந்தளவு சேமித்திருக்கிறார்கள் என்ற கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம். எனவே இப்பொழுது இந்த நான்கு விசயங்களின் கணக்கை நீங்கள் சோதனை செய்யுங்கள். பிறகு பாப்தாதாவும் முடிவையும் (ரிசல்ட்) என்ன பார்த்தோம் என்று கூறுவார். மேலும் ஒவ்வொரு பொக்கிஷத்தையும் சேமிப்பு செய்வதற்கான மற்றும் அதனுடைய பிராப்திக்கும் என்ன சம்மந்தம்? மேலும் எப்படி சேமிப்பு செய்ய வேண்டும்? என்ற இந்த அனைத்து விஷயங்கள் பற்றி பின்பு கூறுவோம் புரிந்ததா?

நேரமோ எல்லைக்குட்பட்டது தான் இல்லையா? தந்தை வருவதும் எல்லைக்குட்பட்டதில் தான். தன்னுடைய உடலும் இல்லை. கடனாக எடுக்கப்பட்ட உடல், தற்காலிகமாக பங்கை (பார்ட்) செய்வதற்கான உடல், எனவே நேரத்தையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. பாப்தாதாவிற்கும் ஒவ்வொரு குழந்தையையும் சந்திப்பதில், ஒவ்வொரு குழந்தையும் மிக இனிமையான ஆன்மீக நறுமணத்தை எடுப்பதிலும் மகிழ்ச்சி வருகிறது. பாப்தாதாவோ ஒவ்வொரு குழந்தையின் மூன்று காலங்களையும் தெரிந்திருக்கிறார் இல்லையா? மேலும் குழந்தைகள் தன்னுடைய தற்காலத்தை மட்டும் அதிகமாகத் தெரிந்திருக்கிறீர்கள், எனவே சில நேரம் அப்படியும், சில நேரம் வேறு மாதிரியும் ஆகி விடு கிறீர்கள் ஆனால் பாப்தாதா மூன்று காலங்களையும் தெரிந்திருக்கும் காரணத்தினால் இவர் சென்ற கல்பத்தின் உரிமை பெற்றவர் என்று அதே

பார்வையோடு பார்க்கின்றார். இவர் அதிகாரி ஆவார், இப்போது கொஞ்சம் குழப்பத் தில் இருக்கிறார், ஆனால் கண்டிப்பாக உறுதியாக ஆகியே விடுவார். சிரேஷ்ட எதிர்காலத்தைப் பார்க்கிறார், எனவே தற்சமயத்தை பார்த்தும் பார்ப்பதில்லை, அந்த மாதிரி ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தைப் பார்க்கின்றார். எந்த விசேஷமும் இல்லை என்று அந்தமாதிரி யாராவது இருக்கிறார்களா என்ன? முதல் விசேஷமோ இங்கு வந்து சேர்ந்து விட்டீர்கள் அது தான். வேறு எதுவும் இல்லாமல் இருந்தாலும் நேர் எதிரில் சந்திப்பதற்கான இந்த பாக்கியம் ஒன்றும் குறைந்தது அல்ல. இதுவும் விசேஷம் தான் இல்லையா? இது விசேஷ ஆத்மாக்களின் சபை எனவே விசேஷ ஆத்மாக்களின் விசேஷத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். நல்லது.

எப்பொழுதும் உடனடி தானம் மகாப் புண்ணியம் என்ற சிரேஷ்டமான எண்ணத்தை வைக்கக்கூடிய, எப்பொழுதும் எப்போது என்பதை இப்போது என்று மாற்றக்கூடிய, எப்பொழுதும் நேரத்தின் வரதானத்தை தெரிந்து வரதானங்களினால் பையை நிரப்பக்கூடிய எப்பொழுதும் பிரம்மாபாபாவைப் பின்பற்றி பிரம்மாபாபாவுடன் சிரேஷ்ட இராஜ்ய அதிகாரி, சிரேஷ்ட வாழ்க்கை பதவி அதிகாரியாக ஆகக்கூடிய, எப்பொழுதும் தந்தையுடிடன் இணைந்திருக் கக்கூடிய அந்த மாதிரியான எப்போதும் துணைவர்களாக இருக்கும் குழந்தைகளுக்கு,. எப்போதும் தந்தையை துணையாக வைத்து நடந்துக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**விடைபெறும் நேரத்தில் அனைத்துக் குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகளைக் கூறிக் கொண்டே பாப்தாதா கூறினார்:** பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகளை அனுப்புகிறார். ஒவ்வொரு ஸ்தானத்தின் அன்பான குழந்தைகள் அன்புடன் சேவையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். மேலும் அன்பு எப்பொழுதுமே முன்னேற்றிக் கொண்டேயிருக்கும். நீங்கள் அன்புடன் சேவை செய்கின்றீர்கள் எனவே யாருக்கு சேவை செய்கின்றீர்களோ அவர்களும் தந்தையின் அன்பிற்குரியவராக ஆகி விடுகிறார்கள். அனைத்துக் குழந்தைகளுக்கும் சேவை செய்வதற்கான வாழ்த்துக்கள் உரித்தாகுக. மேலும் கடினமாக உழைத்தற்காக அல்ல, ஆனால் அன்பு நிறைந்த வாழ்த்துக்கள்

உரித்தாகுக! ஏனென்றால் பெயர் கடும் உழைப்பு ஆனால் இருப்பதே அன்பு. எனவே யார் நினைவில் இருந்து சேவை செய்கிறார்களோ அவர் தன்னுடைய நிகழ்காலத் திற்கும் மேலும் எதிர்காலத்திற்கும் சேமிக்கிறார்கள். எனவே இப்பொழுதும் சேவைக்கான குஷி கிடைக்கிறது. மேலும் எதிர்காலத்திலும் சேமிப்பு ஆகிறது. சேவையில்லை, ஆனால் அழியாத வங்கியில் தன்னுடைய கணக்கில் சேமிப்பு செய்தீர்கள். சிறிதளவு சேவை செய்தீர்கள், ஆனால் அது சதா காலத்திற்காக சேமிப்பு ஆகி விட்டது. அப்படியானால் அந்த சேவை என்னவாக ஆனது? சேமிப்பாக ஆனது இல்லையா! எனவே அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதா அன்பு நினைவு களைத் தந்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும் தன்னைச் சக்திசா-யான ஆத்மா என்று புரிந்து கொண்டு முன்னேறிச் சென்றீர்கள் என்றால், சக்திசாலியான ஆத்மாக்களுக்கு வெற்றி எப்பொழுதுமே நிச்சயமாக இருக்கிறது. நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர்களின் பெயரோடு இந்த விசேஷ அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். (டெல்லி பாண்டவ பவனில் டெலக்ஸ் மிஷன் வைக்கப்பட்டுள்ளது) டில்லியில் இருக்கும் பாண்டபவன் அனைத்துக் குழந்தைகளுக்கும் சேவைக் கான விசேஷ வாழ்த்துக்கள்! ஏனென்றால் இந்த சாதனமும் சேவைக்காகவே உருவாக்கப் பட்டிருக் கிறது. சாதனத்திற்காக வாழ்த்துக்கள் இல்லை,. சேவைக்காக வாழ்த்துக்கள்! எப்பொழுதும் இந்த சாதனங்கள் மூலமாக எல்லைக்கப்பாற்பட்ட அழியாத சேவையை செய்துக் கொண்டே யிருப்பீர்கள். மிகவும் குஷியுடன் இந்த சாதனத்தின் மூலமாக உலகத்தில் தந்தையின் செய்தியை அனுப்பிக் கொண்டேயிருப்பீர்கள். எனவே குழந்தைகளுக்கு சேவையின் ஊக்கம் உற்சாகம் மற்றும் குஷி எவ்வளவு இருக்கிறது என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். இதே குஷியுடன் எப்பொழுதும் முன்னேறிச் சென்றுக் கொண்டேயிருங்கள். பாண்டவ பவனிற்காக அனைத்து வெளி நாட்டினரும் குஷியின் சான்றிதழைக் கொடுக்கின்றார்கள். இதைத்தான் தந்தைக்கு சமமாக விருந்தினரை உபசரிப்பதில் எப்பொழுதும் முன்னுக்கு இருங்கள். எப்படி பிரம்மாபாபா எந்தளவு விருந்தினரை உபசரித்துக் காண்பித்திருக்கிறார், அப்படி விருந்தினர்களைக் கவனிப்பதில் தந்தையைப் பின்பற்றுபவர்கள், தந்தையை வெளிப்படுத்துகிறார்கள். தந்தையின் பெயரை பிரத்யட்சம் செய்கிறார்கள், எனவே பாப்தாதா அனைத்துப் பக்கங்களிலிருந்தும் அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

**மறுநாள் அமிர்தவேளை 6-மணிக்கு பாப்தாதா மீண்டும் முரளி கூறினார். மேலும் அன்பு நினைவுகள் கொடுத்தார் (25.03.1985).** இன்றைய தினம் எப்பொழுதும் தன்னை டபுள் லைட் என்று புரிந்து கொண்டு பறக்கும் கலையின் அனுபவத்தை செய்துக் கொண்டேயிருங்கள். கர்ம யோகியின் பங்கை செய்துக் கொண்டோம், செயல், காரியம் மற்றும் யோகாவின் சமநிலை சக்திசாலியாக இருந்ததா என்று சோதனைச் செய்ய வேண்டும். ஒருவேளை செய்யும் காரியம் சக்திசா-யாக இருந்தது, ஆனால் நினைவு குறைவாக இருந்தது என்றால், சமநிலை இல்லை. மேலும் நினைவு இருந்தது, காரியம் சக்திசாலியாக இல்லை என்றாலும் சமநிலை இல்லை. எனவே காரியம் மற்றும் நினைவின் சமநிலையை வைத்துக் கொண்டேயிருங்கள். முழு நாளும் இதே உயர்ந்த நிலையில் இருப்பதினால் தன்னுடைய கர்மாதீத் நிலை அருகில் வருவதற்கான அனுபவம் செய்வீர்கள். முழு நாளும் கர்மாதீத் நிலை மற்றும் அவ்யக்த பரிஸ்தா சொரூப நிலையில் நடந்துக் கொண்டேயிருங்கள். மேலும் கீழே உள்ள நிலைக்கு வராதீர்கள். இன்று கீழேயே வராதீர்கள், மேலேயே இருங்கள். ஒருவேளை யாராவது பலஹீனத்தின் காரணமாக கீழே வந்து விட்டாலும் கூட ஒவ்வொருவருக்கும் நினைவூட்டி சக்திசாலியாக ஆக்கி, அனைவரும் உயர்ந்த நிலையை அனுபவம் செய்யுங்கள். இது தான் இன்றைய நாளுக்கான வீட்டுப்பாடம் (ஹோம் ஓர்க்) வீட்டுப்பாடம் அதிகமாக இருக்கிறது, படிப்பு குறைவாக இருக்கிறது.

அந்த மாதிரி எப்பொழு:தும் தந்தையை பின்பற்றி நடக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக ஆவதின் லட்சியத்தைக் கடைப்பிடித்து முன்னேறிச் செல்லக்கூடிய, பறக்கும் கலையின் அனுபவம் நிறைந்த குழந்தைகளுக்கு, தந்தையின் இதயப்பூர்வமான அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.

**வரதானம்: இனிமையான நிலை மூலமாக தந்தையின் அருகாமையை சாட்சாத்காரம் செய்விக்கக்கூடிய மகான் ஆத்மா ஆகுக!**

எந்தக் குழந்தைகளின் எண்ணத்திலும் இனிமை, பேசும் வார்த்தைகளிலும் இனிமை, மேலும் செய்யும் காரியங்களிலும் இனிமை இருக்கிறதோ அவர்கள் தான் தந்தையின் அருகில் இருக்கிறார்கள். எனவே தந்தையும் அவர்களை இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! என்று தினசரி கூறுகின்றார். மேலும் குழந்தைகளும் பதிலுக்கு இனிமையிலும் இனிமையான பாபா என்று கூறுகிறார்கள். அந்த மாதிரி இந்த தினசரி கூறப்படும் இனிமையான வார்த்தை இனிமையால் நிரம்பியவர் ஆக்கி விடுகிறது. அதேபோல் இனிமைத்தன்மையை பிரத்யட்சம் செய்யும் சிரேஷ்ட ஆத்மாக்கள் தான் மகான். இனிமைத்தன்மை தான் மகான் தன்மை. இனிமைத் தன்மை இல்லை என்றால் மகான் தன்மையின் அனுபவம் ஆகாது.

**சுலோகன்: எந்த ஒரு காரியத்தையும் டபுள் லைட் ஆகி செய்தீர்கள் என்றால் மன மகிழ்ச்சியுடன் பொழுது போக்காக அனுபவம் செய்வீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 27.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மாதீத் நிலை!

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்ப்பதற்காக விசேஷமாக சுற்றி வலம் வரச் சென்றார். எப்படி பக்தி மார்க்கத்தில் நீங்கள் அனைவருமே அநேக முறை பரிக்கிரமம் அதாவது சுற்றி வந்திருக்கிறீர்கள். இன்று பாப்தாதாவும் நாலாபுறங்களிலுமுள்ள உண்மையான பிராமணர்களின் ஸ்தானங்களை சுற்றி வந்தார். அனைத்துக் குழந்தைகளின் ஸ்தானங்களையும் பார்த்தோம். ஸ்திதி அதாவது நிலையையும் பார்த்தோம். ஸ்தானங்கள் விதிப்பூர்வமாக பல வகையில் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சில ஸ்தூல சாதனங்களினால் கவர்ந்து இழுப்பவையாக இருந்தன. சில தபஸ்யாவின் வைப்ரேஷன் மூலம் கவர்ந்து இழுப்பவையாக இருந்தன. சில இடங்கள் தியாகம் மற்றும் சிரேஷ்ட பாக்கியம் அதாவது எளிமையாக மற்றும் சிரேஷ்ட நிலை என்ற இந்த வாயுமண்டலம் மூலம் கவர்ந்து இழுப்பவையாக இருந்தன. சில சில ஸ்தானங்கள் (இடங்கள்) சாதாரண ரூபத்திலும் தென்பட்டன. அனைத்து ஈஸ்வரனின் நினைவிற்கான ஸ்தானத்தை பலவித ரூபத்தில் பார்த்தோம். நிலையாக என்ன பார்த்தோம்? இதிலேயும் கூட பலவிதமான பிராமண குழந்தைகளின் நிலையைப் பார்த்தோம். நேரத்திற்கு ஏற்றாற்போல் குழந்தைகள் எந்தளவு தயார் ஆகியிருக்கிறார்கள், அவைகளைப் பார்ப்பதற்காக பிரம்மாபாபாவும் சென்றார்.பிரம்மாபாபா கூறினார்: குழந்தைகள் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுப்பட்டு பந்தனம் அற்றவராக, யோக சொரூபமானவராக, ஜீவன் முக்த் எவரெடியாக இருக்கிறார்கள். நேரத்திற்காக மட்டும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி தயார் ஆகியிருக்கிறீர்களா? ஏற்பாடுகள் ஆகி விட்டனவா? நேரத்திற்காக மட்டும் காத்துக் கொண்டிருக்கிறீர்களா? இந்த மாதிரி பாப்தாதா அவர்களிடையே இந்த ஆன்மீக உரையாடல் இருந்தது. சிவபாபா கூறினார், பந்தனத்திலிருந்து எந்தளவு விடுபட்டு இருக்கிறார்கள், யோக சொரூபமாக எந்தளவு ஆகியிருக்கிறார்கள் என்று சுற்றி வலம் வந்து பார்த்தார். ஏனென்றால்,

பந்தனமற்ற ஆத்மா தான் ஜீவன் முக்த் வாழ்க்கையின் அனுபவம் செய்ய முடியும். எந்த ஒரு எல்லைக்குட்பட்ட அதாரம் இல்லை, அதாவது பந்தனங்களிலிருந்து விலகி இருப்பவர். ஒருவேளை ஏதேனும் சிறிய மற்றும் பெரிய, ஸ்தூலமாக மற்றும் சூட்சுமமாக, மனதால் மற்றும் காரியத்தினால் எல்லைக்குட்பட்ட ஏதாவது ஆதரவு இருக்கிறது என்றால், பந்தனங் களிலிருந்து விடுபட முடியாது. எனவே இதைப் பார்ப்பதற்காக விசேஷமாக பிரம்மாபாபாவைச் சுற்றி வரக் கூறினோம். என்னப் பார்த்தார்.

பெரும்பான்மையோர் பெரிய பெரிய பந்தனங்களிலிருந்து விடுபட்டு விட்டார்கள். தெளிவாக தென்படும் பந்தனங்கள் மற்றும் கயிறுகள் அவற்றிலிருந்தும் விலகி விட்டார்கள் ஆனால் இப்பொழுது சில ஏதாவது சூட்சுமமான பந்தனம் மற்றும் கயிறுகள் இன்னும் இருக்கின்றன. அவற்றை மென்மையான (நுண்ணியமான) புத்தியைத் தவிர வேறு யாரும் தெரிந்து கொள்ளவும் முடியாது. பார்க்கவும் முடியாது. எப்படி இன்றைய நாட்களில் அறிவியலைச் சேர்ந்தவர்களால் சூட்சமமானப் பொருடகளையும், சக்தி சாலியான கண்ணாடி மூலம் பார்க்க முடிகிறது, அவற்றை சாதாரண முறையில் பார்க்க முடியாது. அந்த மாதிரி சூட்சும பகுத்தறியும் சக்தி மூலமாக அந்த சூட்சுமன பந்தனங்களைப் பார்க்க முடியும் மற்றும் நுண்ணிய புத்தி மூலமாக தெரிந்து கொள்ள முடியும். ஒருவேளை மேலோட்டமாகப் பார்த்தீர்கள் என்றால், பார்க்காத மற்றும் தெரியாத காரணத்தினால் அவர்கள் தங்களை பந்தனமற்றவர்கள் என்று தான் நினைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். பிரம்மாபாபா அந்த மாதிரி (அவர்கள் பெறும்) சூட்சும ஆதரவை சோதனை செய்தார். மிக அதிகமான ஆதரவை இரண்டு விதமாகப் பார்த்தார்.

ஒரு மிக சூட்சுமமான சொரூபமாக ஏதாவது சேவையின் துணைவனின் சூட்சும ஆதரவைப் பார்த்தோம். இதிலேயும் அநேக விதங்களைப் பார்த்தோம். சேவையின் சகயோகியாக இருக்கும் காரணத்தினால்,, சேவை வளர்ச்சி அடைவதற்கு பொறுப்பாளராகி இருக்கும் காரணத்தினால் அல்லது ஏதாவது விசேஷம், விசேஷ குணம் இருக்கும் காரணத்தினால், விசேஷமாக ஏதாவது சம்ஸ்காரம் ஒத்துப்போகும் காரணத்தினால் அல்லது அவ்வப்போது ஏதாவது அதிகப்படியான உதவி கொடுக்கும் காரணத்தினால், இம் மாதிரிக் காரணங்களினால் ரூபம்

சேவையின் துணைவனாக, சகயோகியாக இருக்கும் ஆனால் விசேஷ ஈர்ப்பு இருககும் காரணத்தினால் சூட்சும பற்றுதலில் விருப்பம் இருந்து கொண்டே யிருக்கும். இதன் விளைவாக என்ன நடக்கும்? தந்தையின் கொடுப்பினை என்பதை மறந்து விடுகிறார்கள். இவர் மிக நல்ல சகயோகி, நல்ல விசேஷ சொரூபம் மானவர், குணம் நிறைந்தவர் என்று பிறர் நினைக்கிறார்கள் ஆனால் அவ்வப்போது அந்த மாதிரி நல்லவராக யார் ஆக்கினார் என்பதை மறந்து விடுகிறார்கள். எண்ண அளவில் கூட ஏதாவது ஆத்மாவின் பக்கம் புத்தியின் ஈர்ப்பு இருக்கிறது என்றால், அந்த ஈர்ப்பு ஆதரவாக ஆகி விடுகிறது. ஸ்தூல ரூபத்தில் சகயோகியாக இருக்கும் காரணத்தினால் தேவையான நேரத்தில் தந்தைக்குப் பதிலாக முதலில் அவர் நினைவில் வருவார். ஒருவேளை இரண்டு நான்கு நிமிடங்கள் கூட ஸ்தூல ஆதரவு நினைவில் வருகிறது என்றால், அந்த நேரம் தந்தையின் ஆதரவு நினைவில் இருக்குமா? இன்னொரு விஷயம் ஒருவேளை இரண்டு நான்கு நிமிடங்கள் கூட நினைவு யாத்திரையின் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது என்றால், துண்டித்தப்பிறகு இணைப்பதற்கு கடும் முயற்சி செய்யவேண்டியதாக இருக்கும். ஏனென்றால் நிரந்தரம் என்பதில் வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது இல்லையா! இதயத்தில் திலாரமிற்குப் பதிலாக வேறு யார் பக்கமாவது ஏதாவது காரணத்தினால் இதயத்தின் ஈர்ப்பு ஏற்படுகிறது. இவருடன் பேசுவது நன்றாக இருக்கிறது, இவருடன் அமர்ந்து இருப்பது நன்றாக இருக்கிறது. இவருடன் தான் எந்த வார்த்தை சென்றால் ஏதோ கரும்புள்ளி (தவறு) இருக்கிறது. இவருடன் தான் என்ற எண்ணம் வருவது என்றாலே பலகீனம் வந்தது. பொதுவாக அனைவருமே பிடித்தமானவர்கள் தான் ஆனால் இவர் கொஞ்சம் அதிகம் பிடித்தமானவராக அனுபவம் ஆகிறது. அனைவர் மீதும் ஆன்மீக அன்பு வைப்பது, பேசுவது அல்லது சேவையில் சகயோகத்தைப் பெறுவது மற்றும் கொடுப்பது வேறு விஷயமாகும். விசேஷத்தைப் பாருங்கள், குணத்தைப் பாருங்கள், ஆனால் இவருடைய குணம் தான் மிக நன்றாக இருக்கிறது, இவருடையது தான் என்பதை இடையில் கொண்டுவராதீர்கள். இவர் தான் என்ற வார்த்தை பிரச்சனையை உருவாக்குகிறது. இதைத்தான் பற்றுதல் என்று கூறுவது. வெளிப்படையான ரூபம் சேவைக்கான தாக இருக்கும். ஞானம் யோகம் நிறைந்ததாக இருக்கும் ஆனால் இவருடன் தான் யோகா செய்ய வேண்டும், இவருடைய யோகாதான் நன்றாக இருக்கிறது என்று இவருடையது தான் என்ற வார்த்தை வரக்கூடாது. இவர் தான் சேவையில்

சகயோகியாக ஆக முடியும், இந்த சேவை துணைவன் தான் வேண்டும் என்பது இழுக்கிறது என்றால், இது பற்றுதலில் அடையாளம். எனவே இவர் தான் என்ற வார்த்தையை அகற்றிவிடுங்கள். அனைவரும் நல்லவர்கள், விசேஷத்தைப் பாருங்கள், சகயோகி யாக ஆகுங்கள், மேலும் ஆக்குங்கள் ஆனால் முதலில் சிறிதளவு இழுக்கும், பிறகு அதிகரித்து அதிகரித்து பயங்கரமான ரூபமாக ஆகி விடும். பிறகு அவரே விரும்பினால் கூட அதிலிருந்து விடுபட முடியாது. ஏனென்றால் உறுதியான கயிறாக ஆகி விடும். முதலில் மிக சூட்சுமனதாக இருக்கும். பிறகு மிக உறுதியானதாக ஆகி விடும். அதனால் அறுப்படுவது கடினமாகி விடும். ஆதரவு ஒரு தந்தை தான். எந்த ஒரு மனித ஆத்மாவும் ஆதரவாக இல்லை. தந்தை யாரையாவது சகயோகியாக, பொறுப்பாளராக ஆக்குகிறார். ஆகையால் ஆக்குபவரை மறந்து விடாதீர்கள். தந்தை ஆக்கினார். தந்தை இடையில் வருவதினால் அதாவது, எங்கு தந்தை இருப்பாரோ அங்கு பாவம் நடக்காது. தந்தையிடையிலிருந்து சென்றுவிட்டார் என்றால் பாவம் நடக்கும். அப்படி ஒரு விஷயம் இந்த ஆதாரமாக ஆக்கி விடுவதாக இருந்தது.

இன்னொரு விஷயம் ஏதாவது பௌதீக சாதனங்களை ஆதாரமாக ஆக்கியிருக்கிறார்கள். சாதனம் இருக்கிறது என்றால் சேவையிருக்கும். சாதனம் கிடைப்பதில் கொஞ்சம் மேலே கீழே செல்கிறது என்றால் சேவை செய்வதிலும் மேலே கீழே போவார்கள். சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்துவது என்பது வேறு விஷயம் ஆனால் சாதனங்களின் வசமாகி சேவை செய்வது என்பது சாதனங்களை ஆதாரமாக ஆக்குவது. சாதனங்கள் சேவையின் வளர்ச்சிக்காக இருக்கின்றன. எனவே அந்த சாதனங்களை அதன் பிரகாரம் காரியத்தில் கொண்டு வாருங்கள், சாதனங்களை ஆதாரமாக ஆக்காதீர்கள். ஆதாரம் ஒரு தந்தை தான். சாதனமோ அழியக்கூடியது. அழியும் சாதனங்களை ஆதாரமாக ஆக்குவது என்றால், எப்படி சாதனம் அழியக்கூடியதோ அதேபோல் மன நிலையும் சில நேரம் மிக உயர்ந்ததாக, சில நேரம் இடைப்பட்டதாக, சிலநேரம் தாழ்ந்ததாக மாறிக் கொண்டே யிருக்கும். அழியாத ஒரே சீரான நிலை இருக்காது. அப்படி இரண்டாவது விஷயமாக அழியும் சாதனங்களை ஆதாரமாக நினைக்காதீர்கள். இவைகள் சேவைக்காக ஒரு கருவியாக மட்டும் இருக்கின்றன. சேவைக்காக காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள், மற்றும் விலகி விட்டீர்கள். சாதனங் களின் ஈர்ப்பில்

மனம் ஈர்க்கப்படக் கூடாது. அப்படி இந்த இரண்டு விதமான ஆதாரங்களை சூட்சும ரூபத்தில் ஆதாரமாக ஆகியிருப்பதைப் பார்த்தோம். எப்பொழுது கர்மாதீத் நிலை ஏற்பட வேண்டியதாக இருக்குமோ அப்பொழுது ஒவ்வொரு நபர், பொருள், காரியத்தின் பந்தனத்திலிருந்து விடுபட்டவராக ஆவது, விலகியிருப்பவராக ஆவது இதைத்தான் கர்மாதீத் நிலை என்று கூறுவது., கர்மாதீத் என்றால் காரியம் செய்வதிலிருந்து விலகியவராக ஆகி விடுவது இல்லை. செய்யும் காரியத்தின் பந்தனங்களிலிருந்து விலகியவராக இருப்பது, விலகியராகி காரியம் செய்வது என்றால், காரியத்திலிருந்து விலகியிருப்பது. கர்மாதீத் நிலை என்றால், பந்தனத்திலிருந்து விடுப்பட்ட, யோக சொரூப, ஜீவன் முக்த் நிலை.

இன்னொரு முக்கிய விசயமாக இதைப்பார்த்தோம். அவ்வப்போது பகுத்தறியும் சக்தியில் அநேக குழந்தைகள் பலகீனமானவராக ஆகீவிடுகிறார்கள். பகுத்தறிய முடியாது, எனவே ஏமாற்றம் அடைந்து விடுகிறார்கள். பகுத்தறியும் சக்தி பலகீனமாக இருக்கும் காரணத்தினால் புத்தியின் ஈடுபாடு ஒருமித்து இருக்காது. எங்கு ஒருமித்த நிலை இருக்குமோ அங்கு பகுத்தறியும் சக்தி இயல்பாக அதிகரிக்கும். ஒருமித்த நிலை என்றால் ஒரு தந்தையுடன் எப்பொழுதும் முழு ஈடுபாட்டில் மூழ்கியிருப்பது. ஒருமித்த நிலையின் அடையாளம் எப்பொழுதும் பறக்கும் கலையின் அனுபவம் நிறைந்த ஒரே சீரான நிலையிருக்கும். ஒரே சீரான நிலை என்பதின் பொருள் அதே வேகம் இருக்கிறது என்றால், ஒரே சீரான நிலை இருக்கிறது என்பதல்ல, ஒரே சீரான நிலை என்றால் எப்பொழுதும் பறக்கும் கலையின் அனுபவம் இருக்க வேண்டும், இதில் ஒரே சீரான நிலை நேற்று என்னவாக இருந்ததோ அதில் இன்று சதவிகிதம் வளர்ச்சியடைந்ததாக அனுபவம் செய்ய வேண்டும். இதைத்தான் பறக்கும் கலை என்று சொல்வது. அந்த மாதிரி சுயமுன்னேற்றத்திற்காக, சேவையின் முன்னேற்றத்திற்காக, பகுத்தறியும் சக்தி மிக அவசியம். பகுத்தறியும் சக்தி பலகீனமாக இருக்கும் காரணத்தினால் தன்னுடைய பலகீனத்தை பலகீனம் என்று புரிந்து கொள்வதில்லை. இன்னும் அதிகமாக தன்னுடைய பலகீனத்தை மறைப்பதற்காக அல்லது நிரூபிப்பதற்காக அல்லது பிடிவாதம் செய்வார்கள். இந்த இரண்டு விஷயங்களை மறைப்பதற்கான விசேஷ சாதனங்கள். மனதில் சில நேரம் உணருதலும் இருக்கும், ஆனால்

இருந்தும் முழுமையான பகுத்தறியும் சக்தியில்லாத காரணத்தினால் தன்னை எப்பொழுதும் சரி மற்றும் புத்திசாலி என்று நிரூபிப்பார்கள். புரிந்ததா! கர்மாதீத் ஆகவும் ஆகவேண்டும் இல்லையா? வரிசை எண்ணோ ஒன்றில் வரவேண்டும் இல்லையா? சோதனை செய்யுங்கள். நல்ல முறையில் யோக சொரூபமானவர் ஆகி பகுத்தறியும் சக்தியை தாரணை செய்யுங்கள். ஒருமித்த புத்தியுடையவராகி பிறகு சோதனை செய்யுங்கள். அதனால் என்னென்ன சூட்சும குறையிருக்குமோ அது தெளிவான ரூபத்தில் தென்படும். நீங்கள உங்களையே சரியாகத்தான் இருக்கிறேன், மிக நன்றாக போய்க் கொண்டிருக்கிறேன், கர்மாதீத் ஆக நான் தான் ஆவேன் என்று உங்களை நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் நேரம் வரும்பொழுது இந்த சூட்சும பந்தனம் மேலே செல்லவிடாமல் ஆக்கி விட்டது என்று அப்படி நடந்து விடக்கூடாது. பிறகு அந்த நேரத்தில் என்ன செய்வீர்கள்? காலில் கட்டப்பட்டிருக்கும் நபர் ஒருவேளை பறக்க விரும்புகிறார் என்றால், பறப்பாரா அல்லது கீழே இருந்து விடுவாரா? எனவே இந்த சூட்சும பந்தனம் தேவையான நேரத்தில் வரிசை எண்ணைப் பெறுவதில் மற்றும் உடன் செல்வதில் அல்லது எவரெடியாக ஆவதில் பந்தனமாக ஆகி விடக்கூடாது. எனவே பிரம்மாபாபா சோதனைச் செய்து கொண்டிருந்தார். யாரை உங்களுரைடய ஆதாரமாக நினைத்தீர்களோ அது ஆதாரம் இல்லை, ஆனால் அது ராயல் கயிறு. எப்படி பொன் மானின் உதாரணம் உள்ளது இல்லையா? இது சீதையை எங்கு கொண்டு சென்றது. அப்படி இந்த பந்தனம் தான் பொன் மானாகும், இதை பொன் என்ற நினைப்பது என்றால், தன்னுடைய சிரேஷ்டப் பாக்கியத்தை இழப்பது. தங்கம் இல்லை ஆனால் இழப்பது. இராமை இழந்தார். அசோகவனத்தில் துன்புற்று அமர்ந்திருந்ô்ர்.

பிரம்மாபாபாவிற்கு குழந்தைகள் மீது விசேஷ அன்பு இருக்கிறது. எனவே பிரம்மாபாபா எப்பொழுதும் குழந்தைகளைத் தனக்குச் சமமாக எவரெடியாக, பந்தனமற்றவராக பார்க்க விரும்பு கிறார். பந்தனமற்றவர்களின் காட்சியைத்தான் பார்த்தார் இல்லையா? எவ்வளவு நேரத்தில் எவரெடி யானார் யாருடைய பந்தனத்திலாவது கட்டப்பட்டாரா? இன்னார் எங்குயிருக்கிறார் என்று யாருடைய நினைவாவது வந்ததா? இன்னார் சேவையில் துணையாக இருப்பவர் என்ற நினைவு வந்ததா? அப்படி எவர் ரெடியின் பங்கை (பார்ட்) கர்மாத் நிலையின் பங்கைப்

பார்த்தீர்கள் இல்லையா? எவ்வளவு தான் குழந்தைகள் மீது அதிக அன்பு இருந்ததோ அந்தளவு அன்பானவராக, விலகியிருப்பவராக பார்த்தீர்கள் இல்லையா! அழைப்பு வந்தது, உடனே சென்று விட்டார். இல்லை என்றால் மிக அதிகமான அன்பு குழந்தைகள் மீது பிரம்மாபாபாவிற்கு தான் இருந்தது எவ்வளவு அன்பானவராக இருந்தரோ அந்தளவு விலகியவராகவும் இருந்தார். விலகியிருப்பதையும் நீங்கள் அனைவரும் பார்த்தீர்கள் இல்லையா? ஏதாவது ஒரு பொருள் அல்லது உணவு பதார்த்தம் தயாராகி விட்டது என்றால், அது பாத்திரத்தில் ஒட்டாது விலகி விடும் இல்லையா? அப்படி சம்பூரணம் ஆவது என்றால், அது விலகி விட்டுவிடுவது என்றால், விலகியவர் ஆகி விடுவது. ஆதாரம் ஒரே ஒரு அழியாத ஆதாரம் மட்டும் தான். எந்த நபரையும், வைபவத்தையும், பொருளையும் ஆதாரகமாக ஆக்காதீர்கள். இதைத்தான் கர்மாதீத் நிலை என்று கூறுவது. ஒருபொழுதும் மறைக்காதீர்கள். மறைப்பதால் அது இன்னும் அதிகரித்துக் கொண்டே யிருக்கும். விசயம் பெரியதாக இருக்காது ஆனால் எந்தளவு மறைப்பார்களோ அந்த அளவு அந்த விஷயத்தை பெரியதாக ஆக்கி விடுகிறார்கள். எந்தளவு தன்னை சரி என்று நிருபிக்க முயற்சி செய்கின்றார்களோ, அந்தளவு விஷயத்தை பெரியதாக்கி விடுகிறார்கள். எந்தளவு பிடிவாதம் செய்வார்களோ அந்தளவு விஷயத்தை பெரிதாக்குகிறார்கள். எனவே விஷயத்தை பெரியதாக ஆக்காமல் ஆரம்ப அளவிலேயே அதை அழித்து விடுங்கள் அது சுலபமாகவும் இருக்கும், மேலும் குஷியும் ஏற்படும். இந்த விஷயம் கடந்தது, அதையும் கடந்து வந்து விட்டேன், இதிலேயும் வெற்றி அடைந்து விட்டேன் என்றால் அந்த குஷி இருக்கும். புரிந்ததா? வெளிநாட்டினர் கர்மாதீத் நிலையை அடையக்கூடிய ஊக்கம் உற்சாகம் நிறைந்தவர்கள் தான் இல்லையா? இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு பிரம்மாபாபா விசேஷமாக சூட்சும பாலனையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இது அன்பு நிறைந்த பாலனை, அறிவுரை கூறி எச்சரிக்கை செய்வதில்லை. புரிந்ததா? ஏனென்றால், பிரம்மாபாபா குழந்தைகளாகிய உங்களை விசேஷமாக ஆவாஹனம் (அழைத்து) செய்து பிறவி கொடுத்திருக்கின்றார். பிரம்மாவின் எண்ணத்தின் மூலம் நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். பிரம்மா எண்ணத்தின் மூலம் உலகத்தைப் படைத்தார் என்று கூறுகிறார்கள் இல்லையா! பிரம்மாவின் எண்ணத்தின் மூலம் இந்த பிராமணர் களின் இந்தளவு படைப்பு படைக்கப்பட்டிருக்கிறது இல்லையா? பிரம்மாவின் எண்ணத்தினால், ஆவாஹனத்தின்ல்

படைக்கப்பட்ட விசேஷ ஆத்மாக்கள். செல்லமானவர்கள் ஆகி வி:ட்டீர்கள் இல்லையா? இவர்கள் வேகமாக முயற்சி செய்து முதலில் வருவதற்கான ஊக்கம் உற்சாகம் நிறைந்தவர்கள் என்று தந்தை பிரம்மா நினைக்கின்றார். வெளிநாட்டுக் குழந்தைகளின் விசேஷங் களினால் விசேஷ அலங்காரம் செய்ததற்கான விஷயம் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. கேள்வியும் கேட்பார்கள், பிறகு விரைவிலேயே புரிந்தும் கொள்வார்கள், விசேஷமாக புத்திசாலிகள் நீங்கள். எனவே தந்தை தனக்குச் சமமாக அனைத்து பந்தனங்களிலிருந்து விடுப்பட்டு மற்றும் அன்பானவர் ஆவதற்காக சமிக்ஞை கொடுக்கின்றார். யார் எதிரில் இருக்கிறார்களோ அவர்களிடம் மட்டும் கூறிக் கொண்டிருக்கின்றார் என்பதல்ல, அனைத்துக் குழந்தைகளுக்கும் கூறுகின்றார். தந்தையின எதிரில் எப்பொழுதும் அனைத்து பிராமண குழந்தைகளும் பாரதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அல்லது வெளிநாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் தந்தையின் எதிரில் இருக்கிறார்கள். மிக நல்ல நல்ல ஆன்மீக உரையாடல் செய்கிறார்கள். சென்ற வருடத்தை விட இந்த வருடத்தின் முடிவு (ரிசல்ட்) மிக நன்றாக இருக்கிறது என்று ஏற்கனவே கூறினோம் இல்லையா? இதிலிருந்து முன்னேற்றத்தை அடைபவர்கள் என்று நிரூபணம் ஆகிறது. நீங்கள் பறக்கும் கலையில் செல்லக் கூடிய ஆத்மாக்கள். யாரை தகுதியானவர் என்று பார்க்கின்றமோ அவர்களுக்கு சம்பூரண யோகி ஆவதற்கான சமிக்ஞை கொடுக்கப்படுகிறது. நல்லது.

எப்பொழுதும் கர்ம பந்தனத்திலிருந்து விடுப்பட்ட, யோக சொரூப ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒரு தந்தையைத் ஆதாரமாக ஆக்கக்கூடிய குழந்தைகளுக்கு, எப்பொழுதும் சூட்சும பலகீனங் களிலிருந்தும், விலகியிருக்கக்கூடிய குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஒருமித்த நிலை மூலமாக மிக நல்ல பகுத்தறியும் சக்தியுள்ள குழந்தைகளுக்கு, எப்பொழுதும் நபர் மற்றும் பொருளின் அழியும் ஆதாரத்தைவிட்டு விலகியிருக்கும் குழந்தைகளுக்கு, அந்த மாதிரி தந்தைக்கு சமமான ஜீவன் முக்த் கர்மாதீத் நிலையில் நிலைத்திருக்கக்கூடிய விசேஷ குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**நிர்மல் சாந்தா தாதி அவர்களை பாப்தாதா சந்திக்கின்றார்:**
எப்பொழுதும் தந்தையின் கூடவே இருப்பவராக இருக்கிறீர்கள் யார்

# 1985 அவ்யக்த முரளி

தொடக்கத்திலிருந்து தந்தையின் தொடர்பிலேயே இருந்து வருகிறார்களோ அவர்களுக்கு தந்தையின் துணையின் அனுபவம் ஒருபொழுதும் குறைவாக ஆக முடியாது. குழந்தைப் பருவத்தின் உறுதிமொழி ஒன்று இருக்கிறது. எப்பொழுதும் கூடவே இருப்போம், எப்பொழுதும் கூடவே செல்வோம். அப்படி எப்பொழுதும் துணையின் உறுதிமொழி என்று கூறினாலும், அல்லது வரதானம் என்று கூறினாலும் அது கிடைத்திருக்கிறது. இருந்தாலும் எப்படி தந்தை அன்பு நிறைந்த உறவு முறையை வைத்து நடந்து கொள்வதற்காக அவ்யக்த் ரூபத்திலிருந்து வியக்த ரூபத்தில் வருகிறார். அதேபோன்று குழந்தைகளும் அன்பின் உறவு முறையை வைத்து நடந்துக் கொள்வதற்காக வந்து சேர்ந்து விடுகிறார்கள். அந்த மாதிரி தான் இல்லையா? எண்ணத் தில் என்ன? ஆனால் கனவில் கூட, அதைத்தான் ஆழ்மனது என்று கூறுகிறீர்கள்... அந்த நிலையில் கூட தந்தையின் துணை ஒருபொழுதும் விடுபட முடியாது. அந்தளவு உறுதியான சம்மந்தம் இணைந்திருக்கிறது. எத்தனை பிறவிகளின் சம்மந்தம். முழு கல்பத்திற்கான சம்மந்தம். இந்த பிறவியின் கணக்குப்படி சம்மந்தம் முழு கல்பமும் இருக்கும். இதுவோ கடைசி பிறவியில் சில குழந்தைகள் சேவைக்காக அங்காங்கு பிரிந்து சென்றுவிட்டார்கள். எப்படி இவர்கள் வெளி நாட்டிற்குச் சென்று விட்டார்கள், நீங்கள் சிந்து வில் வந்து சேர்ந்து விட்டீர்கள். அப்படி ஒவ்வொரு வரும் வேறு வேறுயிடங்களில் சென்றுள்ளீர்கள். ஒருவேளை இவர்கள் வெளிநாட்டிற்குச் செல்ல வில்லை என்றால் இத்தனை சென்டர்கள் எப்படி திறந்திருக்கும்.

நல்லது. எப்பொழுதும் உடன் இருக்கக்கூடிய, துணையாக இருப்பேன் என்ற உறுதிமொழிப்படி நடக்கக்கூடிய பரதாதி நீங்கள்! பாப்தாதா குழந்தைகளின் சேவையின் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து குஷியடைகிறார். நீங்கள் வரதானி ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்கள். பாருங்கள், இப்பொழுதிலிருந்தே கூட்டம் கூட தொடங்கி விட்டது. எப்பொழுது இன்னும் வளர்ச்சி அடைந்து விடுமோ அப்பொழுது எவ்வளவு கூட்டம் இருக்கும். இது வரதானி ரூபத்தின் விசேஷத்தின் வேர் உருவாகிக் கொண்டிருக்கிறது. எப்பொழுது அதிக கூட்டம் ஆகி விட்டது என்றால், பின்பு என்ன செய்வீர்கள். வரதானம் கொடுப்பீர்கள், திருஷ்டி கொடுப்பீர்கள். இங்கிருந்து தான் சைத்தன்ய மூர்த்திகள் பிரசித்தி ஆவார்கள். எப்படி தொடக்க காலத்தில் அனைவரும் உங்களை தேவிகள்

என்று கூறினார்கள் அதேபோன்று இறுதியிலும் உங்களைத் தெரிந்து கொண்டு தேவிகள் தேவிகள் என்று கூறுவார்கள். ஜெய் தேவி ஜெய் தேவி என்பது இங்கிருந்து தான் தொடங்கியது. நல்லது.

**வரதானம்: ஈஸ்வரிய சட்டத்தைப் புரிந்து விதி மூலம் சித்தியை பிராப்பிதி செய்யக்கூடிய முதல் டிவிஷனின் அதிகாரி ஆகுக!**

தைரியம் என்ற ஒரு அடி இருக்கிறது என்றால் உதவி என்ற பல அடி இருக்கிறது நாடகத்தில் இந்த சட்டத்தின் விதி நிரம்பியிருக்கிறது. ஒருவேளை இந்த விதி சட்டத்தில் இருக்கவில்லையென்றால் அனைவரும் உலகின் முதல் இராஜாவாகி விடுவார்கள். வரிசைக்கிரமாக ஆவதற்காக சட்டம் இந்த விதியின் காரணமாகத்தான் உருவாகிறது. எனவே எந்தளவு விரும்புகிறீர்களோ அந்தளவு தைரியம் வையுங்கள் மற்றும் உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் சமர்பபணமானவராக இருந்தாலும் அல்லது குடும்பத்தில் இருப்பவராக இருந்தாலும், அனைவருக்கும் அதிகாரம் (உரிமை) சமமானது ஆனால் விதி மூலம் சித்தி (பலன் கிடைக்கும்) இந்த ஈஸ்வரிய சட்டத்தைப் புரிந்து அலட்சியத்தின் லீலையை முடிவு கட்டினீர்கள் என்றால், முதல் டிவிஷனில் வருவதற்கான அதிகாரம் கிடைத்து விடும்.

**சுலோகன்: எண்ணத்தின் பொக்கிஷத்திற்காக சிக்கனத்தின் அவதாரமாக ஆகுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 30.03.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மூன்று மூன்று விஷயங்களின் பாடம்!

இன்று பாப்தாதா தன்னுடைய சதா காலமும் துணைவர்களாக இருக்கும் குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். குழந்தைகள் தான் சதா தந்தையின் துணைவர்களாக சகயோகிகளாக இருக்கிறார்கள். ஏனென்றால் மிகவும் அன்பு வைத்திருக்கும் குழந்தைகள். யார் மீது அன்பு இருக்குமோ அவருக்குத் தான் சதா காலத்தின் துணைவர்களாக சகயோகிகளாக ஆவார்கள். எனவே அன்பான குழந்தைகளாக இருக்கும் காரணத்தினால் தந்தை குழந்தைகளின்றி ஒரு காரியமும் செய்ய முடியாது. மேலும் குழந்தைகள் தந்தையின்றி எந்தவொரு காரியமும் செய்ய முடியாது. எனவே ஸ்தாபனையின் தொடக்கத்தில் தந்தை பிரம்மாவுடன் சேர்த்து குழந்தைகளையும் படைத்தார். தனியாக பிரம்மா மட்டும் படைக்கப்படவில்லை. பிரம்மாவுடன் சேர்த்து பிராமண குழந்தைகளும் ஜென்மம் எடுத்தார்கள். ஏன்? குழந்தைகள் சகயோகிகளாக, துணைவர்களாக இருக்கிறார்கள். எனவே எப்பொழுது தந்தையின் ஜெயந்தியை கொண்டாடுகிறீர்கள் என்றால், அதனுடன் சேர்த்து என்ன கூறுகிறீர்கள்? சிவஜெயந்தி ஆனதினால் பிரம்மாவின் ஜெயந்தி, பிராமணர்களின் ஜெயந்தியும் ஆனது. அம்மாதிரி பாப்தாதா மற்றும் குழந்தைகள் அனைவருக்கும் சேர்த்தே முதல் படைப்பாக ஆனது. மேலும் தொடக்கத்திலிருந்தே தந்தையின் சகயோகிகளாக, துணைவர்களாக ஆனீர்கள். அம்மாதிரி தந்தை தன்னுடைய சகயோகி, துணைவர்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார். துணைவர்கள் என்றால் ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு எண்ணத்திலும், வார்த்தையிலும் துணையாக இருந்து நடந்து கொள்பவர். பின்பற்றி நடப்பது என்றால் துணையாக இருந்து நடந்து கொள்வது. அந்த மாதிரி நீங்கள் ஒவ்வொரு அடியிலும் துணைவர்களாக அதாவது தந்தையை பின்பற்றி நடக்கக்கூடிய உண்மையான துணைவர்கள். அழியாத துணைவர்கள். யார் உண்மையான துணைவர்களாக இருக்கிறார்களோ அவர்களுடைய ஒவ்வொரு அடியிலும் இயல்பாக தந்தைக்குச் சமமானது இருந்து

கொண்டே இருக்கும். கொஞ்சம் கூட வேறு பக்கம் இருப்பதாக இருக்காது. உண்மையான துணைவர்களுக்கு கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்காது. இந்த அடியை இப்படி எடுத்து வைத்தாலும் அல்லது அப்படி எடுத்து வைத்தாலும் இயல்பாகவே தந்தையின் அடி மேல் அடி வைப்பதை தவிர கொஞ்சம் கூட வேறு பக்கம் இருக்க முடியாது. அந்த மாதிரி உண்மையான துணைவர்களாக இருக்கும் குழந்தைகளின் மனதில், புத்தியில், இதயத்தில் என்ன நிரம்பியிருக்கிறது? நான் தந்தையினுடையவன், தந்தை என்னுடையவர். தந்தையின் எல்லைக்கப்பாற்பட்ட கஜானாக்களின் ஆஸ்தி என்னுடையது என்பது புத்தியில் இருக்கிறது. இதயத்தில், இதயம் மற்றும் இதயத்தில் நிரம்பியிருக்கும் பாபாவைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. எனவே எப்பொழுது தந்தையே நினைவு ரூபத்தில் நிரம்பியிருக்கிறார் என்றால் எப்படி நினைவோ அப்படியே நிலையும் மற்றும் காரியமும் இயல்பாகவே இருந்து கொண்டே இருக்கும். எப்படி பக்தி மார்க்கத்தில் கூட தன்னுடைய நிச்சயத்தைக் காண்பிப்பதற்காக, பாருங்கள் என்னுடைய இதயத்தில் யார் இருக்கிறார் என்று இதைத் தான் கூறுகிறார்கள். உண்மையான துணைவர்கள் ஒவ்வொரு அடியிலும் தந்தைக்குச் சமமாக மாஸ்டர் சர்வ சக்திவான்.

இன்று குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் கூறுவதற்காக பாப்தாதா வந்திருக்கிறார். அனைத்து சகயோகி துணைவர்களாக இருக்கும் குழந்தைகள் அவரவர்களின் ஊக்கம் உற்சாகத்தினால் நினைவில் இருப்பதில், சேவையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரின் மனதில் வெற்றிக் கொடியை கண்டிப்பாக பறக்க விட வேண்டும் என்ற ஒரே ஒரு திட எண்ணம் தான் இருக்கிறது. நீங்கள் முழு உலகத்தில் ஒரு ஆன்மீகத் தந்தையை வெளிப்படுத்தும் (பிரத்யக்ஷத்தின்), கொடியை பறக்க விடுபவர்கள் தான். அந்த உயர்ந்த கொடியின் கீழே உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்களும் ஒரு தந்தை வந்து விட்டார் என்ற பாடலை பாடுவார்கள். எப்படி நீங்கள் அனைவரும் கொடி ஏற்றுகிறீர்கள் என்றால், அனைவரும் கொடியின் கீழே நின்று பாடல் பாடுகிறீர்கள், மேலும் வேறு என்ன நடக்கிறது. கொடியைப் பறக்க விடுவதினால் உங்கள் அனைவரின் மீது மலர்கள் மழையாகப் பொழிகிறது. அதே போல் அனைவரது இதயத்திலிருந்தும் இயல்பாகவே அனை வருக்கும் ஒரு தந்தை, கதி சத்கதி வழங்குபவர் ஒரு தந்தை என்ற

இந்தப் பாடல் இயல்பாகவே வெளிப்படும். அந்த மாதிரி பாடலைப் பாடிய உடனே அழியாத சுகம், சாந்தியின் ஆஸ்தியை மலர்களின் மழைக்குச் சமமாக அனுபவம் செய்வார்கள். தந்தை என்று கூறினார்கள், மேலும் ஆஸ்தியின் அனுபவம் செய்தார்கள். அம்மாதிரி அனைவரின் மனதில் இந்த ஒரே ஒரு ஊக்கம், உற்சாகம் தான் இருக்கிறது, எனவே பாப்தாதா குழந்தைகளின் ஊக்கம் உற்சாகத்திற்காக குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் கூறுகிறார். விடைபெறுதல் இல்லை, ஆனால் வாழ்த்துக்கள். சங்கமயுகத்தின் ஒவ்வொரு நேரமும் வாழ்த்துக்களுக்கான நேரம். அம்மாதிரி மனதின் ஈடுபாட்டின் மேல், சேவையின் ஈடுபாட்டின் மேல் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்த்துக்களைச் கூறுகிறார். சேவையில் எப்பொழுதும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று அனைவருக்கும் ஊக்கம் இருக்கிறது. சேவையில் முன்னேறிச் செல்ல வேண்டும் என்ற ஊக்கம் இல்லாதவர் யாருமே இருக்க மாட்டார். ஒருவேளை ஊக்கம் இல்லை என்றால் இங்கே எப்படி வந்திருப்பார்? இதுவும் ஊக்கத்தின் அடையாளம் தான் இல்லையா? ஊக்கம் உற்சாகம் இருக்கிறது, மேலும் எப்பொழுதும் இருக்கும். கூடவே ஊக்கம் உற்சாகத்துடன் முன்னேறிச் சென்று கொண்டே சேவையில் எப்பொழுதும் தடையற்ற நிலை இருக்கிறதா? ஊக்கம் உற்சாகம் இருக்கிறது, அதுவோ மிக நல்ல விஷயம் தான், ஆனால் தடையற்ற சேவை மற்றும் தடையைக் கடந்து வந்து சேவை செய்வது என்பதில் வித்தியாசம் இருக்கிறது. தடையற்ற நிலை என்றால் யாருக்காகவும் தடை ரூபமாக ஆவதில்லை. மேலும் எந்த தடை சொரூபத்தைக் கண்டும் பயப்படுவதில்லை. ஊக்கம் உற்சாகத்துடன் சேர்த்து இந்த விசேஷத்தை அனுபவம் செய்கிறீர்களா? அல்லது தடை வருகிறதா? ஒன்று தடை, பாடம் கற்பிப்ப தற்காக வருகிறது, இன்னொன்று, தடை நிலைகுலைய வைப்பதற்காக வருகிறது. ஒருவேளை பாடத்தைக் கற்றுக் கொண்டு உறுதியானவர்கள் ஆகி விட்டீர்கள் என்றால், அந்த தடை ஈடுபாட்டில் மாறி விடும். ஒருவேளை தடையைக் கண்டு பயந்து விடுகிறீர்கள் என்றால், உங்களுடைய பதிவேட்டில் கரை படிந்து விடும். வித்தியாசம் இருக்கிறது தான் இல்லையா?

பிராமணன் ஆவது என்றால் வா, வா நான் வெற்றி அடைபவன், நீ ஒன்றுமே செய்ய முடியாது என்று மாயாவிற்கு சவால் விடுவது! முன்பு

மாயாவின் நண்பர்களாக இருந்தீர்கள். இப்பொழுது மாயாவை வெற்றி அடைவோம் என்று சவால் விடுகிறீர்கள். சவால் விடுகிறீர்கள் தான் இல்லையா? இல்லை என்றால் எதன் மீது வெற்றி அடைபவர்களாக ஆகிறீர்கள்? தன் மேலேயா? வெற்றி இரத்தினம் ஆகிறீர்கள் என்றால் மாயா மீது தான் வெற்றியை அடைகிறீர்கள் இல்லையா? வெற்றி மாலையில் மணியாக வருகிறீர்கள், பூஜை செய்யப் படுகிறீர்கள். அம்மாதிரி மாயாவை வென்றவர் ஆவது என்றால், வெற்றி அடைபவர் ஆவது. பிராமணன் ஆவது என்றால், மாயாவிற்கு சவால் விடுவது. சவால் விடுபவர்கள் விளையாடுவார்கள். வந்தது மற்றும் சென்று விட்டது. தூரத்திலிருந்தே தெரிந்து கொள்கிறார்கள், தூரத்திலிருந்தே விரட்டி விடுகிறார்கள், நேரத்தை வீணாக்குவதில்லை. சேவையிலோ நீங்கள் அனைவரும் மிக நன்றாக சேவை செய்பவர்களாக இருக்கிறீர்கள். சேவையின் கூடவே தடையற்ற சேவை செய்தேன் என்ற பதிவும் இருக்க வேண்டும். எப்படி தூய்மை விஷயத்தில் தொடக்கத்தில் இருந்தே கடைபிடித்தேன் என்ற பதிவை வைக்கிறீர்கள் இல்லையா? தொடக்கத் திலிருந்து இதுவரையிலும் எண்ணத்தில் கூட தூய்மையற்றவன் ஆகவில்லை என்று உங்களில் யாராவது இருக்கிறீர்களா?அந்த மாதிரி இந்த விசேஷத்தை பார்க்கிறீர்களா இல்லையா? இந்த ஒரு தூய்மையின் விஷயத் தினால் மட்டும் மதிப்புடன் தேர்ச்சி அடைபவராக ஆக முடியாது ஆனால் சேவையில், சுயநிலையில், தொடர்பில், சம்மந்தத்தில், நினைவு செய்வதில் அப்படி அனைத்திலும் யார் தொடக்கத்திலிருந்து இதுவரையிலும் உறுதியாக எந்தக் குழப்பத்திலும் வராத, எந்த ஒரு தடையின் வசமாகாதவராக இருக்க வேண்டும். தடைகளை வசப்படுத்த வேண்டுமேயன்றி தானே யாருடைய எதிரிலும் தடையாக ஆகக் கூடாது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். இதற்கும் மதிப்பெண்கள் சேமிப்பாகிறது. ஒன்று தூய்மை, இன்னொன்று ஒரு தந்தையின் தூய்மையான நினைவு. நினைவின் இடையில் சிறிதளவு கூட எந்தத் தடையும் இருக்க வேண்டாம். இதே முறையில் சேவையிலும் எப்பொழுதும் தடையற்ற நிலை இருக்கட்டும். மேலும் குணங்களில் எப்பொழுதும் திருப்தியாக இருப்பவராகவும் மற்றும் மற்றவர்களை திருப்திப்படுத்துபவராகவும் இருக்க வேண்டும். திருப்தி என்ற குணம் அனைத்து குணங்களின் தாரணையின் கண்ணாடி. எனவே குணங்களில் தனக்காகவும் மேலும் மற்றவர்களிடமிருந்தும் திருப்தி என்ற சான்றிதழைப் பெற வேண்டும். இது மதிப்புடன் தேர்ச்சி அடைவதின்

அடையாளம், அஷ்ட இரத்தினங்களின் அடையாளம். அனைத்திலும் வரிசை எண்ணை பெறுபவர்கள் தான் இல்லையா? அல்லது ஒன்றில் மட்டுமே திருப்தியாக இருக்கிறீர்களா. சேவையில் நன்றாக இருக்கிறீர்கள். வாழ்த்துக்களோ தந்தை கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறார். அஷ்டமாக வேண்டும், இஷ்டமாக வேண்டும். அஷ்டம் ஆனீர்கள் என்றால் அந்த அளவு மகானாகவும் ஆவீர்கள். அதற்காக முழு வருடமும் மூன்று விஷயங்களை நினைவில் வைக்க வேண்டும் மற்றும் சோதனை செய்ய வேண்டும். மேலும் இந்த மூன்று விஷயங்களும் ஒருவேளை சிறிதளவாவது எண்ணத்தில் கூட இருக்கிறது என்றால் அதற்கு விடை கொடுத்து விடுங்கள். இன்று வாழ்த்துக்கள் பெறுவதற்கான நாள் இல்லையா? எப்பொழுது விடை கொடுக்கிறீர்கள் என்றால் விடை கொடுப்பதில் என்ன செய்கிறீர்கள்? (திராட்சை, பாதாம், ஏலக்காய்) அதில் மூன்று பொருட்கள் இருக்கும். பாப்தாதாவும் மூன்று பொருட்கள் கொடுப்பார் இல்லையா? விடை கொடுப்பது இல்லை, ஆனால் வாழ்த்துக்கள் எனவே தான் வாயை இனிப்பாக ஆக்குகிறீர்கள் இல்லையா? எப்படி இங்கு மூன்று பொருட்களையும் எதற்காக கொடுக்கிறீர்கள்? பிறகு விரைவில் வர வேண்டும் என்ற நினைவிருக்கும். பாப்தாதாவும் இன்று மூன்று விஷயங்களை கூறுகிறார், அவை சில நேரம் சேவையில் தடையாகவும் ஆகி விடுகிறது. எனவே மூன்று விஷயங்களின் மேல் விசேஷமாக பாப்தாதா மீண்டும் கவனத்தை ஈர்க்கிறார், அந்த கவனத்தின் மூலம் இயல்பாகவே மதிப்புடன் தேர்ச்சி அடைபவராகி விடுவீர்கள்.

ஒரு விஷயம்: எந்தவிதமான எல்லைக்குட்பட்ட பற்றுலும் இருக்க வேண்டாம். தந்தை மீதான பற்றுதல் வேறு விஷயம் ஆனால் எல்லைக்குட்பட்ட பற்றுதல் இருக்க வேண்டாம். இரண்டாவது விஷயம் -எந்த விதமான தனக்கு தன் காரணமாகவோ, வேறு யாருடைய காரணமாகவோ அழுத்தம் அதாவது இழுபறி இருக்க வேண்டாம். பற்றுதல் இருக்க வேண்டாம், மாயாவுடன் யுத்தம் செய்வ தற்குப் பதிலாக உங்களுக்குள் இழுபறி இருக்க வேண்டாம். மூன்றாவது விஷயம் -எந்தவிதமான பலஹீனமான சுபாவமும் இருக்க வேண்டாம். பற்றுதல், அழுத்தம் மற்றும் பலஹீனமான சுபாவம். உண்மையில் சுபாவம் என்ற வார்த்தை மிக நல்ல வார்த்தை. சுபாவம் என்றால் சுயத்தின் பாவனை. சுயம் என்று சிரேஷ்டமானதைக் கூறுவோம். சிரேஷ்ட பாவனை

இருக்கிறது, சுயத்தின் பாவனை இருக்கிறது, ஆத்ம அபிமானம் இருக்கிறது ஆனால் பாவ -சுபாவம், பாவ -சுபாவம் என்ற வார்த்தையை அதிகம் கூறுகிறீர்கள் இல்லையா? இது பலஹீனமான சுபாவம். இது அவ்வப்பொழுது பறக்கும் கலையில் தடை ரூபம் ஆகி விடுகிறது. அதைத் தான் நீங்கள் இராயல் ரூபத்தில் என்னுடைய நேச்சர் அந்த மாதிரி என்று கூறுகிறீர்கள். நேச்சர் சிரேஷ்டமாக இருக்கிறது என்றால் தந்தைக்குச் சமமான நிலை. தடை ரூபம் ஆகிறது என்றால், பலஹீனமான சுபாவம். மூன்று வார்த்தைகளின் அர்த்தத்தை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா. அனேக விதமான அழுத்தம் இருக்கிறது, அழுத்தத்திற்கான காரணம் 'நான், எனது'. நான் இதைச் செய்தேன்? நான் இதைச் செய்ய முடியும். நான் தான் செய்வேன். அப்படி இந்த நான், எனது என்பது மனஅழுத்தத்தை உருவாக்குகிறது. 'நான்' என்ற இது தேக அபிமானத் தினுடையது. ஒன்று நான் சிரேஷ்ட ஆத்மா. இன்னொன்று நான் இன்னார், நான் புத்திசாலி, நான் யோகி, நான் ஞானி. நான் சேவையில் வரிசை எண்ணில் முன்னுக்கு இருக்கிறேன். இந்த மாதிரியான நான் என்பது மன அழுத்தத்தை உருவாக்குகிறது. இந்தக் காரணத்தினால் சேவையில் அங்கங்கே என்ன தீவிர வேகம் இருக்க வேண்டுமோ அதற்குப் பதிலாக வேகம் குறைந்து விடுகிறது. சென்று கொண்டிருக்கிறார்கள் ஆனால் வேகம் இருக்க முடியாது. வேகத்தை அதிகப்படுத்துவதற்கான ஆதாரம் -மற்றவர்கள் முன்னேறிச் செல்வதைப் பார்த்து எப்பொழுதும் மற்றவர்களை முன்னேற்றுவது தான் தன்னுடைய முன்னேற்றம். சேவையில் எந்த விதமாக நான், எனது என்பது வருகிறது என்று புரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா. இந்த நான் என்பது தான், அதிவேகத்தை அழித்து விடுகிறது. புரிந்ததா.

இந்த மூன்று விஷயங்களையோ கொடுப்போம் இல்லையா. பிறகு நீங்கள் உங்களுடன் இதை எடுத்துச் செல்வீர்கள். இதைத் தான் தியாகத்தினால் கிடைத்த பாக்கியம் என்று கூறுவது. எப்பொழுதும் அனைவருக்கும் வழங்கி அருந்துங்கள் மற்றும் அதிகப்படுத்துங்கள். இது தியாகத் தின் பாக்கியம் கிடைத்திருக்கிறது. இந்த தியாகத்தின் பாக்கியம் தான் சேவைக்கான சாதனம் ஆனால் இந்த பாக்கியத்தை நான், எனது என்ற எல்லைக்குள் வைத்துக் கொண்டீர்கள் என்றால் அதிகரிக்காது. எப்பொழுதும் தியாகத்தின் பாக்கியத்தின் பழத்தை மற்றவர்களையும் சகயோகி ஆக்கி அவர்களுக்கும் வழங்கி முன்னேறிச்

செல்லுங்கள். நான், நான் மட்டும் என்று கூறாதீர்கள், நீங்களும் அருந்துங்கள். அனைவருக்கும் வழங்கி ஒருவர், இன்னொருவருடன் கைகோர்த்து முன்னேறிச் செல்லுங்கள். இப்பொழுது சேவையின் இடையில் இந்த அதிர்வலைகள் தென்படுகிறது. இந்த விஷயத்தில் பரந்த மனமுடையவராக ஆகி விடுங்கள். இதைத் தான் யார் முதலில் செய்கிறாரோ அவர் தான் அர்ஜுனன் என்று கூறுவது. மற்றவர்களைப் பார்க்காதீர்கள். இவரும் அப்படி செய்கிறார் இல்லையா? இதுவோ நடக்கத்தான் செய்யும் என்று பார்க்காதீர்கள் ஆனால் நான் விசேஷத்தைக் காண்பிப்பதற்காக பொறுப்பாளர் என்று ஆகி விடுங்கள். பிரம்மா தந்தையின் விசேஷமாக என்ன இருந்தது? எப்பொழுதும் குழந்தைகளை முன்னுக்கு வைத்தார். என்னை விட குழந்தைகள் புத்திசாலிகள், குழந்தைகள் செய்வார்கள். இந்த அளவு தியாகத்தின் பாக்கியத்தை தியாகம் செய்தார். ஒருவேளை யாராவது அன்பின் காரணமாக, பிராப்தியின் காரணமாக பிரம்மாவின் மகிமை செய்தாலும் அவருக்கும் தந்தையின் நினைவை ஊட்டுவார். பிரம்மாவிட மிருந்து ஆஸ்தி கிடைக்காது, பிரம்மா வின் புகைப்படத்தை வைத்துக் கொள்ளாதீர்கள், பிரம்மா தான் அனைத்தும் என்று நினைக்காதீர்கள் என்று கூறினார். இதைத் தான் தியாகத்தின் பாக்கியத்தையும் தியாகம் செய்து சேவையில் ஈடுபட்டு விடுவது என்று கூறுவது. இந்த விஷயத்தில் இருமடங்கு பெறும் வள்ளல் ஆகி விடுங்கள். மற்றவர்கள் வாய்ப்பளிக்க வேண்டாம், அவர்கள் தன் பக்கம் ஈர்க்க வேண்டாம். ஒருவேளை அவரே தன்னுடைய மகிமை செய்கிறார், தன் பக்கம் ஈர்க்கிறார் என்றால் அதற்கு என்ன வார்த்தை கூறுவீர்கள். முரளிகளில் கேட்டிருக்கிறீர்கள் இல்லையா. அந்த மாதிரி ஆகாதீர்கள். எந்தவொரு விஷயத்தையும் நீங்களே தன் பக்கம் இழுப்பதற் கான இழுபறியை ஒருபொழுதும் செய்யாதீர்கள். சுலபமாக கிடைத்தது என்றால் சிரேஷ்ட பாக்கியம். இழுத்து பெறுவதை சிரேஷ்ட பாக்கியம் என்று கூற மாட்டோம். அதில் வெற்றி கிடைக்காது. உழைப்பு அதிகம் வெற்றி குறைவாக இருக்கும், ஏனென்றால் அனைவரின் ஆசீர்வாதம் கிடைப்பதில்லை. எது சுலபமாக கிடைக்கிறதோ அதில் அனைவரின் ஆசீர்வாதம் நிரம்பியிருக்கும். புரிந்ததா?

மன அழுத்தம் என்றால் என்ன? பற்றுதலைப் பற்றி அன்றைய நாளில் தெளிவு படுத்தினோம். எந்தவொரு பலஹீனமான சுபாவமும் இருக்க வேண்டாம். நானோ இந்த தேசத்தில் வசிப்பவன் எனவே என்னுடைய

சுபாவம், நான் நடந்து கொள்வது, நான் வசிப்பது அந்த மாதிரி இருக்கிறது என்று அப்படியும் நினைக்காதீர்கள். தேசத்தின் காரணமாக, தர்மத்தின் (மதத்தின்) காரணமாக, உடன் இருப்பவர்களின் (சங்) காரணமாக என்னுடைய சுபாவம் அந்த மாதிரி இருக்கிறது என்று அப்படியும் இல்லை. நீங்கள் எந்த தேசத்தைச் சேர்ந்தவர்கள். இதுவோ சேவைக்காக ஒரு ஸ்தானம் கிடைக்கிறது. யாருமே வெளிநாட்டினரும் இல்லை மேலும் நான் பாரதவாசி என்ற போதையும் இருக்க வேண்டாம். அனைவரும் ஒரு தந்தையின் குழந்தைகள். பாரதவாசிகளும் பிராமண ஆத்மாக்கள். வெளிநாட்டில் வசிப்பவர்களும் பிராமண ஆத்மாக்கள். இதில் வேற்றுமை இல்லை., பாரதவாசிகள் அந்த மாதிரி இருக்கிறார்கள், மேலும் வெளிநாட்டினர் இந்த மாதிரி இருக்கிறார்கள் என்று அப்படியும் இல்லை. இந்த வார்த்தையையும் ஒருபொழுதும் கூறாதீர்கள். அனைவரும் பிராமண ஆத்மாக்கள். இதுவோ சேவைக்காக கிடைத்த ஸ்தானம். நீங்கள் வெளிநாட்டிற்கு ஏன் சென்றடைந் தீர்கள்? அங்கே ஏன் ஜென்மம் எடுத்தீர்கள்? பாரதத்தில் ஏன் ஜென்மம் எடுக்கவில்லை? அங்கு சேவா ஸ்தானத்தை திறப்பதற்காக சென்றிருக்கிறீர்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். இல்லை யென்றால் பாரதவாசிகளுக்கு விசா கிடைப்பதில் எவ்வளவு பிரச்சனைகள் இருக்கிறது. நீங்களோ அங்கு சுலபமாக இருந்து கொண்டிருக்கிறீர்கள். எத்தனை தேசங்களில் சேவை நடந்து கொண்டிருக்கிறது. எனவே சேவைக்காக வெளிநாட்டிற்குச் சென்றிருக்கிறீர்கள். மற்றபடி அனைவருமே பிராமண ஆத்மாக்கள், எனவே யாருமே எந்த ஆதாரத்தினால் சுபாவத்தை உருவாக்காதீர்கள். எது தந்தையின் சுபாவமோ அது குழந்தைகளின் சுபாவம். தந்தையின் சுபாவம் என்னவாக இருக்கிறது? எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவிற்காக நன்மை பயக்கும் மற்றும் இரக்கத்தின் பாவனையின் சுபாவம். ஒவ்வொருவரையும் உயர்வாக தூக்கி விடுவதற்கான சுபாவம், இனிமையான சுபாவம், பணிவான சுபாவம். என்னுடைய சுபாவம் அந்த மாதிரி இருக்கிறது என்று ஒருபொழுதும் கூறாதீர்கள். என்னுடையது என்பது எங்கிருந்து வந்தது. எனக்கு வேகமாக பேசும் சுபாவம் இருக்கிறது, என்னுடைய சுபாவம் ஆவேசத்தில் வருவதற்கானது. சுபாவத்தின் காரணமாக அந்த மாதிரி ஆகி விடுகிறது. இவை அனைத்தும் மாயா! அனேகர் களுக்கு அபிமானத்தின் சுபாவம், பொறாமைப் படுவதற்கான, ஆவேசத்தில் வருவதற்கான சுபாவம் இருக்கிறது. மனமுடைந்து போவதற்கான சுபாவம் இருக்கிறது. நன்றாக

இருந்தாலும் கூட தன்னை நன்றாக இருக்கிறேன் என்று நினைக்க மாட்டார்கள். எப்பொழுதும் தன்னை பலஹீனமானவராகவே நினைப்பார். நான் முன்னுக்குச் செல்ல முடியாது, என்னால் செய்ய முடியாது. இம்மாதிரியான மனமுடைந்து போகும் சுபாவமும் தவறானது. அபிமானத்தில் வராதீர்கள் ஆனால் சுவமானத்தில் (சுயமரியாதையில்) இருந்தீர்கள் என்றால், இதே விதமான சுபாவத்தை பலஹீனமான சுபாவம் என்று கூறுவது. அம்மாதிரி முழு வருடமும் இந்த மூன்று விஷயங்களின் மேல் கவனம் வையுங்கள். இந்த மூன்று விஷயங்களிலிருந்து பாதுகாப்பாக இருங்கள். கடினமோ இல்லை தான் இல்லையா? துணைவர்கள் தொடக்கத்திலிருந்து இறுதி வரை சகயோகி துணைவர்கள். துணைவர்கள் என்றால் சமமானவர்கள் வேண்டும் இல்லையா? ஒருவேளை துணைவர்களில் சமநிலை இல்லை என்றால், துணையாக இருப்பவர்கள் அன்பு முறையோடு நடந்து கொள்ள முடியாது. நல்லது. இந்த மூன்று விஷயங்களின் மீதும் கவனம் வைப்பீர்கள் ஆனால் இந்த மூன்று விஷயங்களிலிருந்தும் நிரந்தரமாக விலகி விடு வதற்காக இன்னும் மூன்று மூன்று விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இன்று மூன்றின் பாடத்தை படிப்பித்துக் கொண்டிருக்கிறோம். எப்பொழுதும் தன்னுடைய வாழ்க்கையில் ஒரு சமநிலை வைக்க வேண்டும். அனைத்து விஷயங்களிலும் சமநிலை இருக்க வேண்டும். நினைவு மற்றும் சேவையில் சமநிலை இருக்க வேண்டும். சுவமானம், அபிமானத்தை அழித்து விடுகிறது. சுவமானத்தில் நிலைத்திருக்க வேண்டும். இந்த அனைத்து விஷயங்களும் நினைவில் இருக்கட்டும். அதிகமாக இரமணீகரமானவராகவும் இருக்க வேண்டாம். அதிகமாக கம்பீரமானவராகவும் இருக்க வேண்டாம், சமநிலை இருக்கட்டும். தேவையான நேரத்தில் இரமணீகரம் மேலும் தேவையான நேரத்தில் கம்பீரம். அப்படி ஒன்று -சமநிலை. இரண்டாவது -எப்பொழுதும் அமிர்த வேளையில் தந்தையிடமிருந்து விசேஷமாக ஆசீர்வாதங்களை பெற வேண்டும். தினசரி அமிர்தவேளையில் பாப்தாதா குழந்தைகளுக்காக ஆசீர்வாதங்களின் பையை திறக்கிறார். அதிலிருந்து எந்தளவு எடுக்க விரும்பு கிறீர்களோ அந்தளவு எடுத்துக் கொள்ள முடியும். அம்மாதிரி சமநிலை,ஆசீர்வாதம் மற்றும் மூன்றாவது ஆனந்தம் நிறைந்த வாழ்க்கை. மூன்று விஷயங்கள் நினைவில் இருப்பதினால் கவனம் கொடுக்க வேண்டிய அந்த மூன்று விஷயங்கள் தானாகவே அகன்று விடும். புரிந்ததா? நல்லது. இன்னும் மூன்று விஷயங்களை கேளுங்கள்.

இலட்சிய ரூபத்தில் அல்லது தாரணையின் ரூபத்தில் விசேஷமாக மூன்று விஷயங்களைக் கவனத்தில் வைக்க வேண்டும். அவற்றை (மேலே கூறியவற்றை) விட வேண்டும். மேலும் இதை தாரணை செய்ய வேண்டும். விட வேண்டியதையோ சதா காலத்திற்காக விட்டு விட்டீர்கள் இல்லையா, அதை நினைவு செய்வதின் அவசியம் இல்லை ஆனால் இந்த மூன்று விஷயங்கள் என்ன கூறுகிறோமோ அதை நினைவில் வைக்க வேண்டும். மேலும் தாரணை சொரூபத்தில் விசேஷமாக நினைவு வைக்க வேண்டும். ஒன்று -அனைத்து விஷயங்களிலும் உண்மை இருக்க வேண்டும், கலப்படம் கூடாது. எண்ணத்தில், வார்த்தையில், அனைத்து விஷயங்களிலும் உண்மை இருக்க வேண்டும். இதைத் தான் உண்மையாக இருப்பது என்று கூறுவது. உண்மையான உள்ளத்தின் மீது தந்தை திருப்தியாக இருக்கிறார். உண்மையின் அடையாளமாக என்ன இருக்கும்? உண்மை இருக்கிறது என்றால் மனம் நடனமாடும். யார் உண்மையாக இருப்பாரோ அவர் எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பார். அம்மாதிரி ஒன்று உண்மையாக இருப்பது. இரண்டாவது -இராயலாக (இராஜரீகமாக) இருப்பது. சிறு சிறு விஷயங்களில் ஒருபொழுதும் புத்தி ஈர்க்கப்படுவதில் வர வேண்டாம். எப்படி இராயல் குழந்தைகளாக யார் இருப்பார்களோ அவர்களுக்கு சிறிய பொருட்கள் மேல் பார்வை செல்லாது. ஒருவேளை பார்வை சென்றது என்றால் அவரை இராயல் என்று கூறமாட்டோம். எந்தவொரு சிறு சிறு விஷயங்களில் புத்தி ஈர்க்கப்பட்டு விடுகிறது என்றால் அவரை இராயலாக இருப்பவர் என்று கூற மாட்டோம். யார் இராயலாக இருப்பாரோ அவர் எப்பொழுதும் பிராப்தி சொரூபமாக இருப்பார். எங்கும் பார்வையும் மற்றும் புத்தியும் செல்லாது. அப்படி இது ஆன்மீக இராயல் தன்மை. துணிகளின் இராயல் தன்மை இல்லை. அம்மாதிரி உண்மையாக இருப்பது, இராயலாக இருப்பது மற்றும் மூன்றாவது ஒற்றுமையாக இருப்பது. ஒற்றுமையாக இருப்போம் என்று நான் விரும்புகிறேன் ஆனால் இவர் அப்படி இருப்பதில்லை என்று மற்றவர் களைப் பார்க்காதீர்கள். ஒருவேளை நீங்கள் இருந்து கொண்டே இருந்தீர்கள் என்றால் அவருக்கு ஒற்றுமையின்றி இருப்பதற்கான வாய்ப்பே கிடைக்காது. ஒருவேளை யாராவது கையை தட்டுவது போல் செய்கிறார் மற்றும் இன்னொருவர் செய்யவில்லை என்றால் சப்தமே எழாது. ஒருவேளை யாராவது ஒற்றுமையைக் கெடுக்கும் காரியம்

செய்கிறார், ஆனால் நீங்கள் ஒற்றுமையாக இருந்தீர்கள் என்றால் அவரால் ஒற்றுமையைக் கெடுக்கும் காரியம் செய்யவே முடியாது. ஒற்றுமையில் அவர் வந்து தான் ஆக வேண்டும். எனவே இந்த மூன்று விஷயங்கள் அதாவது உண்மையாக, இராயலாக மற்றும் ஒற்றுமையாக இருப்பது எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக ஆவதில் சகயோகியாக இருக்கும். புரிந்ததா? இன்று மூன்று விஷயங்களின் பாடத்தை படித்து விட்டீர்கள் இல்லையா? தந்தைக்கோ குழந்தைகள் மீது பெருமிதம் இருக்கிறது. இந்த அளவு யோக்கியமான (தகுதியான) குழந்தைகள் மற்றும் யோகி குழந்தைகள் எந்த தந்தைக்குமே இருக்க முடியாது. யோக்கியமும் இருக்க வேண்டும், யோகியாகவும் இருக்க வேண்டும். மேலும் நீங்கள் ஒவ்வொருவரும் பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர்கள். முழு கல்பத்திலும் இந்த அளவு மற்றும் இம்மாதிரியான குழந்தைகள் இருக்கவே முடியாது. எனவே விசேஷமாக அமிர்தவேளையின் நேரத்தை பாப்தாதா பிராமண குழந்தைகளுக்காக ஏன் வைத்திருக்கிறார்? ஏனென்றால் பாப்தாதா விசேஷமாக ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தை, சேவையை, குணங்களை எப்பொழுதும் தன் எதிரில் கொண்டு வருகிறார். மேலும் என்ன செய்கிறார்? ஒவ்வொரு குழந்தையின் விசேஷம், குணம் மற்றும் சேவையாக என்ன இருக்கிறதோ அவற்றை விசேஷ வரதானத்தினால் அழியாததாக ஆக்குகிறார். எனவே இந்த நேரத்தை பிரத்யேகமாக குழந்தைகளுக்காக வைத்திருக்கிறார். அமிர்தவேளையில் விசேஷ பாலனை கொடுக்கிறார். ஒவ்வொரு குழந்தைக்கும் பாப்தாதா அன்பின், சகயோகத்தின், வரதானத்தின் பாலனை கொடுக்கிறார். தந்தை என்ன செய்கிறார் என்று புரிந்ததா? மேலும் நீங்கள் குழந்தைகள் என்ன செய்கிறீர்கள்? சிவபாபா சுகம் அளிப்பவர், சாந்தி அளிப்பவர்... அந்த மாதிரி கூறுகிறீர்கள் தான் இல்லையா? மேலும் தந்தை பாலனை கொடுக்கிறார். எப்படி தாய் தந்தையர் காலையில் குழந்தைகளை தயார் செய்கிறார்கள், சுத்தம் செய்து பிறகு முழு நாளும் சாப்பிடுங்கள், குடியுங்கள் மற்றும் படியுங்கள் என்று கூறுகிறார்கள். பாப்தாதாவும் அமிர்தவேளையில் அந்த பாலனை கொடுக்கிறார் அதாவது முழு நாளுக்காக சக்தி நிரப்பி விடுகிறார். இது விசேஷ பாலனைக்கான நேரம். இது அதிகப்படியான வரதானத்தின், பாலனையின் நேரம். அமிர்தவேளையில் வரதானங் களின் பை திறக்கப்படுகிறது. எவ்வளவு யார் வரதானத்தை எடுக்க விரும்புகிறாரோ ஆனால் உண்மையான உள்ளத்தோடு ஏதாவது ஒரு சுயநலமாக இல்லை.

ஒருவேளை சுயநலம் இருக்கிறது என்றால், அப்பொழுது தான் எனக்கு இதை கொடுங்கள் என்று கூறுவார். யார் சுயநலமாக கேட்கிறாரோ அதற்கு பாப்தாதா என்ன செய்கிறார். அவருடைய சுயநலம் நிறைவேறுவதற்காக அந்த அளவு சக்தி கொடுக்கிறார், சுயநலம் நிறைவேறி விட்டது மற்றும் சக்தியும் முடிந்து விட்டது. இருந்தாலும் குழந்தைகள் தான், இல்லை என்றால் செய்ய மாட்டார் ஆனால் எப்பொழுதுமே வரதானங்களினால் வளர்ந்து கொண்டே இருங்கள், நடந்து கொண்டே இருங்கள், பறந்து கொண்டே இருங்கள். அதற்காக எந்த அளவு அமிர்தவேளையில் தன்னை சக்திசாலியாக ஆக்குவீர்களோ அந்த அளவு முழு நாளும் சகஜமாக இருக்கும். புரிந்ததா?

எப்பொழுதும் தன்னை மதிப்புடன் தேர்ச்சி அடைபவருக்கான இலட்சியம் மற்றும் இலட்சணத்தை வைத்து நடந்து கொள்ளக்கூடிய, எப்பொழுதும் தன்னை பிரம்மா தந்தைக்குச் சமமாக தியாகத்தின் பாக்கியத்தை மற்றவர்களுக்கு வழங்கக்கூடிய நம்பர் ஒன் தியாகி சிரேஷ்ட பாக்கியத்தை உருவாக்கக்கூடிய, எப்பொழுதும் சகஜ பிராப்தியின் அதிகாரி ஆகி, சுயமுன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றம் செய்யக்கூடிய, எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் சகயோகி, துணைவனாகி முன்னேறிச் செல்லக்கூடிய, நினைவு மற்றும் மனநிலையை சக்திசாலியாக ஆக்கியதினால் எப்பொழுதும் தந்தையைப் பின்பற்றி நடக்கக்கூடிய, அம்மாதிரியான சதா காலத்தின் சகயோகி துணைவர்கள், கட்டளைப்படி நடக்கும், திருப்தியாக இருக்கும், திருப்தி படுத்துவதற்கான இரகசியத்தைத் தெரிந்திருக்கும் அந்த மாதிரியான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, மகான் புண்ணிய ஆத்மாக்களுக்கு, இரு மடங்கு பெரும் வள்ளல் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: மனதின் எண்ணங்களின் பந்தனங்களிலிருந்து விடுபட்டு, அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்யக்கூடிய முக்தி வள்ளல் ஆகுக!**

அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுவது என்பது சங்கமயுக பிராமணர்களின் விசேஷம் ஆனால் மனதில் எழும் எண்ணங்களின் பந்தனம், மனதின் குஷி மற்றும் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்ய

விடுவதில்லை. வீணான எண்ணங்கள், பொறாமை, அலட்சியம் மற்றும் சோம்பலின் எண்ணங்களின் பந்தனத்தில் கட்டப்படுவது தான் மனதின் பந்தனம். அந்த மாதிரி யான ஆத்மா அபிமானத்தின் வசமாகி மற்றவர்களின் குறையைத் தான் யோசித்துக் கொண்டே இருப்பார். அவருக்கு உணரும் சக்தி முடிவடைந்து விடுகிறது. எனவே இந்த சூட்சும பந்தனத் திலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள். அப்பொழுது தான் முக்தி வள்ளல் ஆக முடியும்.

**சுலோகன்: உங்களிடம் துக்கத்தின் எண்ண அலைகள் வராத அளவிற்கு குஷிகளின் சுரங்கத்தினால் நிரம்பியவராக இருங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 09.04.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## உண்மையான சேவாதாரியின் அடையாளம்!

இன்று ஞான சூரியன் ஞான சந்திரன் தனது பூமியின் நட்சத்திர மண்டலத்தில் அனைத்து நட்சத்திரங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து நட்சத்திரங்களும் ஜொலித்துக் கொண்டே தன்னுடைய ஜொலிப்பு மற்றும் பிரகாசத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறது. வித விதமான நட்சத்திரங்கள் இருக்கிறது. சிலர் விசேமான ஞான நட்சத்திரங்கள், சிலர் சகஜயோகியின் நட்சத்திரம், சிலர் குணத்தை தானம் செய்யும் மூர்த்தியின் நட்சத்திரம். சிலர் நிரந்தர சேவாதாரி என்ற நட்சத்திரம், சிலர் எப்பொழுதுமே சம்பன்ன (முழுமையான) நட்சத்திரமாக இருக்கிறார்கள். அனைத்தையும் விட உயர்ந்தது -ஒவ்வொரு நொடியும் வெற்றியின் நட்சத்திரமாக இருப்பது. கூட கூடவே சிலர் எதிர்பார்ப்பின் (விருப்பத்தின்) நட்சத்திரங்களாக இருக்கிறார்கள். எதிர்ப்பார்ப்பின் நட்சத்திரத்தையும் பாருங்கள், வெற்றியின் நட்சத்திரங்களையும் பாருங்கள். இரண்டிலும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது ஆனால் இரண்டு விதமான நட்சத்திரங்கள் இருக்கிறது. மேலும் ஒவ்வொரு விதவிதமான நட்சத்திரங்களும் உலகத்தின் ஆத்மாக்கள் மீது, இயற்கையின் மீது, அதனதன் தாக்கத்தை ஏற்படுகிறது. வெற்றியின் நட்சத்திரம் நாலாபக்கமும் தனது ஊக்க உற்சாகத்தின் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எதிர்ப்பார்ப்பின் நட்சத்திரங்கள் தானும் கூட அவ்வப்பொழுது அன்பாகவும், அவ்வப்பொழுது கடினத்தன்மை என்ற முயற்சி இரண்டின் தாக்கம் ஏற்படுவதற்கான காரணத்தினால் மற்றவர்களிடத்திலும் கூட அவ்வப்பொழுது அன்பாகவும், அவ்வப்பொழுது கடினத் தன்மையின் தாக்கம் ஏற்படுகிறது, முன்னேறுவதற்கான விருப்பம் வைத்து முன்னேறிக் கொண்டே செல்கிறார்கள். எனவே ஒவ்வொருவரும் தன்னைத் தானே கேளுங்கள் -நான் எப்படிப்பட்ட நட்சத்திரம்? அனைவரிடத்திலும் ஞானம், யோகம், குணங்களின் தாரணை மற்றும்

சேவையின் உணர்வு இருந்தாலும் கூட, சிலரிடத்தில் ஞானத்தின் தீப்பொறி இருக்கிறது, சிலரிடத்தில் விசேஷ நினைவின் யோகத்தினுடையதாக இருக்கிறது. மேலும் ஒரு சிலர் தனது குணமூர்த்தியின் ஜொலிப்பின் மூலம் விசேஷமாக ஈர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான்கு விதமான தாரணை இருந்தாலும் கூட சதவிகிதத்தில் வேறுபாடு இருக்கிறது. ஆகையால் விதவிதமான நட்சத்திரங்கள் ஜொலித்துக் கொண்டே தென்படுகிறது. இது ஆன்மீக விசித்திர நட்சத்திரக் கூட்டங்கள். ஆன்மீக நட்சத்திரங்களாகிய உங்களின் தாக்கம் உலகத்தின் மீது ஏற்படுகிறது. எனவே உலகத்தினுடைய ஸ்தூல நட்சத்திரங்களின் தாக்கம் கூட உலகத்தின் மீது ஏற்படுகிறது. எந்தளவு நீங்கள் சக்திசாலியான நட்சத்திரங்களாக ஆகின்றீர்களோ. அந்தளவு உலகத்தின் ஆத்மாக்கள் மீது தாக்கம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். மேலும் முன்னேறிக்  கொண்டேயிருப்பீர்கள். எப்படி காரிருள் (கும் இருட்டு) இருக்கிறதென்றால், நட்சத்திரங்களின் பிரகாசம் மிகுதியாக தெளிவாகத் தென்படும். அப்படி அபிராப்தியின் (கிடைக்காத நிலை) இருள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது, மேலும் எந்தளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறதோ, அதிகரித்துக் கொண்டேயிருக்குமளவிற்கு தான் ஆன்மீக நட்சத்திரங்களாகிய உங்களின் விசேமான தாக்கம் (பிரபாவம்) அனுபவம் செய்து கொண்டேயிருப்பீர்கள். அனைவருக்கும் பூமியில் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களின் ஜோதி பிந்துவின் (ஒளி புள்ளி) வடிவத்தில் பிரகாசமான உடல் ஃபரிஸ்தாவின் ரூபத்தில் தென்படும். எப்படி ஆகாய நட்சத்திரங்களுக்கு பின்னால் தனது சமயம், ஆற்றல் மற்றும் செல்வத்தை பயன்படுத்துகிறார்களோ, அப்படி ஆன்மீக நட்சத்திரங்களை பார்த்து அதிசயம் அடைவார்கள். எப்படி இப்பொழுது ஆகாயத்தில் நட்சத்திரங்களை பார்க்கிறார்களோ, அப்படி இந்த பூமியின் மேடையில் நாலாபக்கத்திலும் ஃபரிஸ்தாக்களின் ஜொலிப்பு மற்றும் ஒளி ரூபமான நட்சத்திரங்களின் ஜொலிப்பை பார்ப்பார்கள், அனுபவம் செய்வார்கள் -இவர் யார்? எங்கிருந்து இந்த பூமியின் மீது தனது அதிசயத்தைக் காட்ட வந்திருக்கிறார்கள்! எப்படி ஸ்தாபனையின் ஆரம்ப காலகட்டத்தில் நாலாபக்கத்திலும் பிரம்மா மற்றும் கிருஷ்ணரின் சாட்சாத்காரம் (காட்சியின்) அலை பரவியது. இவர்கள் யார்? இங்கு என்ன செய்து காட்டுகிறார்கள்? இதை புரிந்து கொள்வதற்காக பலரின் கவனம் (பார்வை) சென்றதோ, அதே போன்று இப்பொழுது கடைசியில்

நாலாபக்கத்திலும் இந்த இரண்டு விதமான ஒளி புள்ளி மற்றும் ஃபரிஸ்தா அதில் பாப்தாதா மற்றும் குழந்தைகளாகிய உங்கள் அனைவரின் ஜொலிப்பு தென்படும். மேலும் அனைவருக்கும் ஒருவரிடமிருந்து அநேகரின் இந்த பக்கம் தானாகவே கவனம் ஈர்க்கப்படும். இப்பொழுது நீங்கள் அனைவரும் முழுமை (சம்பன்னம்) ஆகும் வரை இந்த தெய்வீக காட்சி தொடர்ந்துக் கொண்டேயிருக்கும். ஃபரிஸ்தாவின் நிலையை சகஜமாகவும் இயல்பாகவும் அனுபவம் செய்யும் பொழுது தான் அவர்களுக்கு சாட்சாத் ஃபரிஸ்தாவின் சாட்சாத்காரம் தென்படும். இந்த ஆண்டு ஃபரிஸ்தா தன்மையின் மனநிலைக்காக விசேஷமாக கொடுக்கப்படுகிறது. நினைவு மட்டும் தான் செய்ய வேண்டுமா அல்லது சேவை கூட செய்ய வேண்டுமா அல்லது சேவையிலிருந்து விடுபட்டு தபஸ்யாவில் மட்டுமே இருக்க வேண்டுமா என்று பல குழந்தைகள் நினைக்கிறார்கள். பாப்தாதா சேவையின் உண்மையாண அர்த்தத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

சேவை உணர்வு என்றாலே சதா ஒவ்வொரு ஆத்மாவிற்காக சுப பாவனை (நல்ல உணர்வு). உயர்ந்த விருப்பத்தின் உணர்வு. சேவை உணர்வு என்றாலே ஒவ்வொரு ஆத்மாவின் உணர்விற்கு தகுந்த மாதிரி பலனை தருவது. உணர்வு எல்லைக்குட்பட்டதாக இருப்பது அல்ல, சிரேஷ்ட உணர்வாகும். ஒருவேளை சேவாதாரிகளாகிய நீங்கள் யார் மீதாவது அன்பின் உணர்வு வைத்தல், சக்திகளினுடைய உதவியின் உணர்வு வைத்தல், குஷியின் உணர்வு வைத்தல், சக்திகளை அடைவதற்கான உணர்வு வைத்தல், ஊக்க-உற்சாகத்தின் உணர்வு வைத்தல், அப்படி விதவிதமான உணர்வுகளின் பலன் அதாவது சகயோகத்தின் மூலம் அனுபவம் செய்யவைப்பது, எனவே இதற்குத்தான் சேவையின் உணர்வு என சொல்லப்படுகிறது. சொற்பொழிவு செய்து விட்டு வந்து விட்டேன், ஒரு குரூப்பிற்கு (கூட்டத்திற்கு) புரிய வைத்து விட்டு வந்து விட்டேன். கோர்ஸ் (7-நாள் பாடமுறை) முடித்து விட்டு வந்து விட்டேன், அல்லது சென்டர் திறந்து வைத்து விட்டு வந்து விட்டேன், இதற்கு சேவை உணர்வு என்று சொல்லப்படாது. சேவை என்றாலே எந்தவிதமான ஆத்மாவிற்காகவும் பிராப்தியின் (அனைத்து அடைந்த நிலை) அற்புதத்தை அனுபவம் செய்ய வைப்பது, அவ்வாறு சேவையுடன் தபஸ்யா (நினைவு) எப்பொழுதுமே இணைந்து இருப்பது,

தபஸ்யாவின் அர்த்தை விளக்குகிறார் -திட எண்ணத்துடன் எந்தவொரு காரியத்தையும் செய்வது. உண்மையான சேவையின் உணர்வு இருக்குமிடத்தில் தபஸ்யா தனித்து இருக்காது. தியாகம், தபஸ்யா, சேவை -இந்த மூன்றின் இணைந்த வடிவம் தான் உண்ணமயான சேவை, மேலும் பெயருக்காக செய்யும் சேவையின் பலன் குறுகிய காலத்திற்கு கிடைக்கிறது. எங்கு சேவை செய்தீர்களே, அங்கேயே குறுகிய காலத்தின் விளைவின் பலனை அடைந்து, மேலும் முடிந்தும் போய்விடும். குறுகிய காலத்தின் விளைவின் பலன் குறுகிய காலத்தின் மகிமையாகும். மிக நன்றாக சொற்பொழிவு செய்தீர்கள், மிக நன்றாக கோர்ஸ் (7-நாள் பாடம்) எடுத்தீர்கள், மிக நன்றாக சேவை செய்தீர்கள். எனவே நன்றாக செய்தீர்கள், நன்றாக செய்தீர்கள் என்று சொல்வதின் அற்ப காலத்தின் பலன் கிடைக்கிறது, மேலும் அவர்களும் மகிமை கேட்பதின் குறுகிய காலத்தின் பலன் தான் கிடைக்கிறது ஆனால் அனுபவம் செய்ய வைப்பது என்றாலே பாபாவுடன் தொடர்பை இணைப்பது, சக்திசாலியாக ஆக்குவது -இது தான் உண்மையான சேவையாகும். உண்மையான சேவையில் தியாகம் -சேவை இல்லையென்றால், இந்த 50-50% சேவை இல்லை, ஆனால் 25% தான் சேவை இருக்கிறது.

**உண்மையான சேவாதாரியின் அடையாளம்:** தியாகம் என்றாலே பணிவு, மேலும் தபஸ்யா என்றாலே ஒரு பாபாவிடம் நம்பிக்கை, நிலையான குஷி. இதைத் தான் உண்மையான சேவை என்று சொல்லப்படுகிறது. பாப்தாதா நிரந்தரமாக உண்மையான சேவாதாரி ஆவதற்காக சொல்கிறார். பெயருக்காக சேவை செய்வது, மேலும் தன்னை தொந்தரவுக்கு உள்ளாக்குவது, மற்றவர்களையும் கூட தொந்தரவு செய்வது, இந்த சேவையிலிருந்து விடுபடுவதற்காக பாப்தாதா சொல்லிக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட சேவை செய்யாமல் இருப்பது நல்லது. ஏனெனில் சேவையின் விசேஷ குணம் திருப்தியின் தன்மையாகும். எங்கு திருப்தி இல்லாமல் தனக்காகவோ, மற்றவர்களுக்காகவோ சேவை செய்தால், அந்த சேவை தனக்கும் பிராப்தியை அனுபவம் செய்ய வைக்காது, மற்றவர்களுக்கும் செய்ய வைக்காது. ஆகையால் முதலில் தன்னை திருப்தியுடைவராக மாற்றிக் கொண்ட பிறகு சேவையில் வருவது நல்லது. இல்லையென்றால் சூட்சமமான சுமை அவசியம் இருக்கும். அந்த பலவிதமான சுமைகள் பறக்கும் கலையில் தடை ரூபமாகி விடுகிறது. சுமையை சுமக்க

வேண்டாம், சுமையை இறக்க வேண்டும். எப்பொழுது அவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள் என்றால், இதைவிட ஏகாந்தவாசி ஆவது நல்லது. ஏனெனில் ஏகாந்தவாசி ஆவதின் மூலம் சுய மாற்றத்தின் மீது கவனம் வரும். எனவே பாப்தாதா தபஸ்யாவை பற்றி என்ன சொல்கிறார் என்றால் -அது பகலும் இரவும் அமர்ந்து கொண்டு தபஸ்யா செய்வது என்று சொல்லவில்லை. தபஸ்யாவில் அமர்வது கூட சேவை தான். லயிட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகி அமைதியின், சக்திகளின் கதிர்கள் மூலம் வாயுமண்டலத்தை (சூழ்நிலையை) உருவாக்குவது. தபஸ்யாவுடன் மனதின் சேவை இணைக்கப்பட்டிருக்கிறது. தனித்து இருக்காது. இல்லையென்றால் தபஸ்யா என்ன செய்கிறது! சிரேஷ் ஆத்மா பிராமண ஆத்மா ஆகி விட்டீர்கள். இப்பொழுது தபஸ்யா என்றால் தன்மீது அனைத்து சக்திகளினால் முழுமையாக ஆவது, உறுதியான மனநிலை. உறுதியான எண்ணத்தின் மூலம் உலகத்திற்கு சேவை செய்வது. வார்த்தையின் சேவை மட்டுமே சேவை அல்ல. எப்படி சுகம் -சாந்தி -தூய்மை மூன்றுமே தங்களுக்குள் இணைக்கப்பட்டிருக்கிறது, அப்படி தியாகம், தபஸ்யா, சேவையும் இணைக்கப்பட்டிருக்கிறது. தபஸ்யா ரூபம் என்றாவே சக்திசாலியான சேவாதாரியாக உருவாக்குவது என்று பாப்தாதா சொல்கிறார். தபஸ்யா ரூபத்தின் பார்வை கூட சேவை செய்கிறது. அவர்களுடைய அமைதி சொரூபமான முகம் கூட சேவை செய்கிறது. தபஸ்வி மூர்த்தியின் வெறும் பார்வை கூட பிராப்தியின் அனுபவத்தை செய்கிறது. ஆகையால் இன்றைய காலத்தில் பாருங்கள் ஹடயோகத்தின் (விடா பிடியாக) தபஸ்யா செய்கிறார்கள், அவர்களின் தரிசனத்திற்காக எவ்வளவு கூட்டம் கூடுகிறது. உங்களின் இந்த தபஸ்யா சொரூபத்தின் தாக்கம் நினைவு சின்னத்தின் ரூபம் கடைசிவரை வந்து கொண்டேயிருக்கும். எனவே புரிந்ததம் -சேவையின் உணர்வு எதை சொல்லப்படுகிறது. சேவை உணர்வு என்றாலே அனைத்து பலவீனங்களையும் எதிர்நோக்கக்கூடிய உணர்வு. பலவீனமானவர்களை எதிர்நோக்கும் உணர்வு அல்ல, பலவீனங்களை எதிர்க்கும் உணர்வு. தனக்குள் சகித்துக் கொண்டு மற்றவர்களுக்கு சக்தியை கொடுக்கும் உணர்வு. ஆகையால் சகித்துக்கொள்ளும் சக்தி என்று சொல்லப்படுகிறது. சகித்துக்கொள்ளது என்றாவே சக்திகளை நிரப்புவது மற்றும் சக்தியை கொடுப்பது, சகித்துக்கொள்ள வேண்டுமே தவிர இறந்துபோகக் கூடாது, நாம் பொறுத்துக் கொண்டால் இறந்து விடுவோம் என்று பலர் நினைக்கிறார்கள். நாம் இறந்து விடுவோமா என்ன? ஆனால்

இது மரணம் அல்ல. இது அனைவருடைய மனதிலும் அன்பாக வாழ்வது. எப்படிபட்ட விரோதியாக இருந்தாலும், இராவணனை விடவும் மோசமாக இருந்தாலும் கூட, ஒருமுறை அல்ல, 10-முறை சகித்துக் கொள்ள வேண்டியிருந்தாலும் கூட சகித்துக்கொள்ளும் தன்மையின் பலன் அழிவற்றதாகவும் இனிமையாகவும் இருக்கும். அவர்கள் கூட அவசியம் மாறிவிடுவார்கள். நான் இவ்வளவு சகித்துக் கொண்டேன். இவர்களும் கூட சகித்துக்கொள்ளட்டுமே என்ற உணர்வு இருக்கக் கூடாது. குறுகிய காலத்தின் பலனை அடைவதற்கான உணர்வு வைக்காதீர்கள். கருணை உணர்வு வையுங்கள் -இதற்கு தான் சேவை உணர்வு என்று சொல் படுகிறது. எனவே இந்த ஆண்டு, இதுபோன்ற உண்மையான சேவையின் ஆதயும், நிரூபணத்தின் பட்டியலில் வருவதற்கான பொன்னான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த வருடம் சேவை நிகழ்ச்சிகள் மற்றும் பெரும் விழாக்கள் மிக நன்றாக நடந்ததா என்று பார்க்க மாட்டார் ஆனால் திருப்தியுடையவர் ஆகி திருப்தியான சேவையில் நம்பர் முன்னால் வரவேண்டும். விக்ன வினாசக் (தடைகளை வென்றவர்) என்ற பட்டமளிப்பு விழாவில் பரிசு பெற வேண்டும். புரிந்ததா! இதற்கு தான் சொல்லப்படுகிறது -நஷ்ட மோஹா ஸ்மிருதி லப்தா (பற்றற்ற நிலையில் இருந்து நினைவு செய்பவர்). எனவே 18-வருட முடிவின் இந்த விசேஷ முழுமை ஆவதற்கான அத்தியாத்தின் சொரூபத்தை வெளிப்படுத்துங்கள். இதற்கு தான் சொல்லப்படுகிறது -பாப்சமான் ஆவது, நல்லது.

சதா ஜொலித்துக் கொண்டிருக்கக்கூடிய ஆன்மீக நட்சத்திரங்களுக்கு, சதா திருப்தியின் அலைகளை பரப்பக்கூடிய திருப்திமணிகளுக்கு, எப்பொழுதும் ஒரே நேரத்தில் தியாகம், தபஸ்யா, சேவையின் தாக்கத்தை ஏற்படுத்தி, கவர்ந்திழுக்கும் ஆத்மாக்களுக்கு, சதா அனைத்து ஆத்மாக்களுக்கும் ஆன்மீக உணர்வின் ஆன்மீக பலனை தரக்கூடிய விதை சொரூபமான பாபாவிற்கு சமமாக இருக்கும் ஆன்மீக குழந்தைகளுக்கு பாப்தாதாவின் முழுமை ஆவதற்கான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பஞ்சாப் மற்று ஹரியானா மண்டலத்தை சேர்ந்த சகோதர-சகோதரிகளுக்கு அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** சதா தன்னை ஆடாத-அசையாக ஆத்மா என அனுபவம் செய்கிரம் களா? ஸ்டிப்

சூழ்நிலையிலும் (பிரச்சனையில்) உறுதியாக இருப்பது, இது தான் பிராமண ஆத்மாக்களின் அடையாளமாகும். உலகம் குழப்பத்தில் இருக்கிறது ஆனால் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் குழப்பத்தில் வர முடியாது. ஏன்? நாடகத்தின் ஒவ்வொரு காட்சியையும் தெரிந்திருக்கிறீர்கள். ஞானம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். யார் ஞானம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்களோ, அவர்கள் சக்திசாலிகளாகவும் இருப்பார்கள். எனவே ஞானம் நிறைந்த ஆத்மாக்கள், சக்திசாலியான ஆத்மாக்கள் சதா இயல்பாகவே உறுதியாக இருப்பார்கள். அதனால் சூழ்நிலையை கண்டு ஒருபொழுதும் பயப்படுவதில்லை அல்லவா! பயமற்றவர்களாக இருக்கிறீர்களா? சக்திகளே (மாதர்களே) பயமற்றவர்களாக இருக்கிறீர்களா? அல்லது சிறிது சிறிதாக பயம் வருகிறதா? ஏனெனில் உள்நாட்டு போர் ஏற்பட வேண்டுமென்று ஆரம்பத்திலிருந்தே ஸ்தாபனையின் சமயத்திலிருந்தே இருக்கிறது. இது உங்களுக்கு ஆரம்ப கால வரைபடங்களில் காட்டப்பட்டிருக்கிறது. எனவே எது காட்டப்பட்டிருக்கிறதோ, அது நடைபெற வேண்டுமல்லவா. பாரதத்தின் நடிப்பே உள்நாட்டு போரினால் தான், ஆகையால் எதுவும் புதிதல்ல. அதனால் எதுவும் புதிதல்ல என்பதா அல்லது என்ன ஆகுமோ, எப்படி ஆகுமோ, இது நடந்தது என்று பயந்து விடுகிறீர்களா? செய்திகளைக் கேட்டாலும், பார்த்தாலும் கூட ஏற்கனவே உருவாக்கப்பட்ட நாடகத்தை புரிந்து கொண்டு, சக்திசாலி ஆகி பார்க்கவும், மற்றவர்களுக்கு கூட சக்தி கொடுக்க வேண்டும் -இது தான் உங்கள் அனைவரின் வேலை. உலகத்தினர் பயந்துக் கொண்டேயிருப்பார்கள். மேலும் நீங்கள் அந்த ஆத்மாக்களிடத்தில் சக்தியை நிரப்ப வேண்டும். யாரெல்லாம் தொடர்பில் வருகிறார்களோ, அவர்களுக்கு சக்திகளின் தானம் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். அமைதியின் தானம் அளியுங்கள். அமைதியில்லாத இந்த நேரத்தில் தான் அமைதியைத் தர வேண்டும். எனவே அமைதியில் தூதுவராக இருக்கிறீர்கள். அமைதியின் தூதுவர் என்று பாடப்படுகிறது அல்லவா. அமைதியின் தூதுவர் நீங்களா அல்லது மற்றவர்களா? எனவே ஒருபொழுதும் எங்கிருந்தாலும், நடந்தாலும், சதா தன்னை அமைதியின் தூதுவர் என்று புரிந்து கொண்டு இருங்கள். அமைதியின் தூதுவராக இருக்கிறீர்கள், அமைதியின் செய்தியை தருபவர்களாக, இருக்கிறீர்கள் என்றால், தானும் கூட அமைதி சொரூபமாகி சக்திசாலியாக இருக்கிறீர்கள் மற்றும் மற்றவர்களுக்கு கூட தருகிறீர்கள், அவர்கள்

(உலகத்தினர்) அசாந்தியை பரப்புபவர்கள், நீங்கள் சாந்தியை பரப்புபவர்கள். அவர்கள் நெருப்பு மூட்டுவார்கள், நீங்கள் தண்ணீரை ஊற்றுங்கள். இது தான் உங்களின் கடமையல்லவா. இதற்கு தான் உண்மையான சேவாதாரி என்று சொல்லபடுகிறது. எனவே அப்படிப்பட்ட நேரத்தில் இந்த சேவைக்கான அவசியம் இருக்கிறது. சரீரம் அழியக்கூடியதாக இருக்கிறது ஆனால் ஆத்மா சக்திசாலியாக இருக்கிறதென்றால் ஒரு சரீரத்திலிருந்து விடுபட்டு போனாலும் கூட மற்றொரு சரீரத்தில் நினைவின் பலனை அடைந்து கொண்டேயிருக்கும். ஆகையால் அழிவற்ற பிராப்தியை சேமித்துக் கொண்டே இருங்கள். எனவே நீங்கள் யார்? அமைதியின் தூதுவர்கள். அமைதியின் செய்தியை பரப்புபவர். மாஸ்டர் அமைதியின் வள்ளல். மாஸ்டர் சக்தியின் வள்ளல். இந்த நினைவு சதா இருக்கிறதல்லவா. சதா தன்னை இந்த நினைவின் மூலம் முன்னேற்றிக் கொண்டே செல்லுங்கள். மற்றவர்களையும் கூட முன்னேற்றுங்கள். இது தான் சேவை. அரசாங்கத்தின் ஏதேனும் நியமங்கள் இருந்தால், அதை பின்பற்றத்தான் வேண்டும் ஆனால் எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ, மனதின் சேவை மூலம், வார்த்தையின் மூலம் அவசியம் சேவை செய்துக் கொண்டே இருங்கள். இப்பொழுது மனதின் மிகவும் அவசியமாக இருக்கிறது ஆனால் எப்பொழுது தன்னிடத்தில் சக்தி நிரம்பியிருக்குபோ, அப்பொழுது தான் மற்றவர்களுக்கு கொடுக்க முடியும். அதனால் சதா அமைதியின் வள்ளலின் குழந்தைகளாகிய நீங்களும் அமைதியின் வள்ளல் ஆவீர்கள். வள்ளலாகவும் இருக்கிறீர்கள் என்றால் உருவாக்குபவர்களாகவும் இருக்கிறீர்கள். நான் மாஸ்டர் அமைதியின் வள்ளல், மாஸ்டர் சக்தியின் வள்ளல் என்ற நினைவு சதா எந்த காரியம் செய்து கொண்டிருந்தாலும் இருக்க வேண்டும். இந்த நினைவின் மூலம் அநேக ஆத்மாக்களுக்கு வைப்ரேஷன் கொடுத்துக் கொண்டேயிருங்கள். அப்பொழுது தான் இவர்களின் தொடர்பில் வருவதின் மூலம் அமைதியின் அனுபவம் கிடைப்பதை உணர்வார்கள். எனவே இந்த வரதானத்தை நினைவில் வைக்க வேண்டும் -பாபாவிற்கு சமமாக மாஸ்டர் அமைதியின் வள்ளல், சக்தியின் வள்ளல் ஆக வேண்டும். அனைவரும் தைரியசாலிகளாக இருக்கிறீர்கள் அல்லவா. குழப்பத்திலும் கூட வீணான எண்ணங்கள் வருவதில்லை. ஏனெனில் வீணான எண்ணங்கள் இருந்தால் சக்திசாலியாக ஆக விடாது. என்ன ஆகுமோ, இது நடந்து விடக்கூடாது. இது வீணானதாகும். என்ன நடக்கிறதோ, அதை சக்திசாலியாக இருந்து

பாருங்கள் மேலும் மற்றவர்களுக்கும் சக்தியை கொடுங்கள். இது கூட ஒரு சாலையோர காட்சியாகும் இது ஒரு காட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஒரு படம் எனப் புரிந்து கொண்டு பார்த்தால் பயப்படமாட்டீர்கள். நல்லது.

**பிரியா விடைதரும் நேரத்தில் -(அமிர்தவேளை):** இந்த சங்கமயுகம் அமிர்தவேளையாக இருக்கிறது. முழு சங்கமயுகமே அமிர்தவேளையாக இருக்கும் காரணத்தினால் இந்த சமயத்திற்கு சதா காலத்திற்கு மகான் தன்மை நிறைந்ததாக படப்படுகிறது. எனவே முழு சங்கமயுகமே அதாவது அமிர்தவேளை அதாவது டைமண்ட் மார்னிங் (வைரமான காலை) சதா பாபா குழந்தைகளுடன் இருக்கிறார். மேலும் குழந்தைகள் கூட பாபாவுடன் இருக்கிறார்கள். ஆகையால் எல்லைக்கு அப்பாற்பட்ட டைமண்ட் மார்னிங். பாப்தாதா சதா கூடவே இருக்கிறார், ஆனாலும் கூட வியக்த ரூபத்தில் (சாகார சொருபத்தில்) வியக்த தேசத்தில் (ஸ்தூல உலகத்தில்) கால அளவு படி இன்று கூட அனைத்து குழந்தை களுக்கும் சதா கூடவே இருப்பதற்கான குட்மார்னிங் என்று சொல்லுங்கள், கோல்டன் மார்னிங் என்று சொல்லுங்கள், டைமண்ட் மார்னிங் என்று சொல்லுங்கள், எப்படிவேண்டு மென்றாலும் சொல்லுங்கள் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் கொடுத்துக் கொண்டியிருக்கிறார். சுயம் கூட டைமண்டாக இருக்கிறோம், காலைப்பொழுது (சங்கமயுகம்) கூட டைமண்டாக இருக்கிறது, மேலும் கூட டைமண்ட் ஆக்குவதற்காக இருக்கிறது, ஆகையால் சதா துணையாக இருப்பதற்கான குட்மார்னிங். நல்லது.

**வரதானம்: ஐந்து தத்துவங்கள் மற்றும் ஐந்து விகாரங்களை தன்னுடைய சேவாதாரியாக மாற்றக்கூடிய மாயாவை வென்ற சுயராஜ்ய அதிகாரி ஆகுக!**

சத்யுகத்தில் விஷ்வ மகாராஜா மற்றும் விரிவ பலபணியின் இராஜ்ய ஆடைகளை பின் பக்கம் இருந்து தாசதாசிகள் (பணிபுரிபவர்கள்) தூக்கிக் கொண்டு செல்வதை போன்று, சங்கமயுகத்தில் குழந்தைகளாகிய நீங்கள் மாயாஜீத் சுயராஜ்ய அதிகாரி ஆகி பட்டபெயர் என்ற ஆடையின் மூலம் அலங்காரம் செய்து கொள்ளும் பொழுது 5-தத்துவங்கள் மற்றும் 5-விகாரங்கள் உங்களுடைய ஆணடயை ரின்னால் இருந்து சுமக்கும், அதாவது அடிபணிந்து நடக்கும், இதற்காக திட எண்ணம் என்ற

கயிற்றினால் பட்டபெயர் என்ற ஆடையை இறுக்கமாக கட்டிக்கொள்ளுங்கள். விதவிதமான ஆடைகள் மற்றும் அலங்காரத்தின் மூலம் அலங்கரித்துக் கொண்டு பாபாவுடன் இருந்தால், இந்த விகாரம் மற்றும் தத்துவம் மாறி, சகயோகி சேவாதாரியாக மாறிவிடும்.

**சுலோகன்: எந்த குணங்களை மற்றும் சக்திகளை வர்ணனை செய்கிறீர்களோ, அதனுடைய அனுபவக்கில் மூழ்கி விடுங்கள். அனுபவம் தான் மிகப் பெரிய அதிகாரம்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.04.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நன்மை செய்வது தான் ஆதார சொரூப சபையின் விசேஷம்!

இன்று விசேஷமாக உலக மாற்றத்தின் ஆதார சொரூப, உலகின் எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் ஆதார சொரூப, சிரேஷ்ட நினைவு, எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு, இனிமையான, விலைமதிக்கமுடியாத வார்த்தைகளைக் கூறுவதின் ஆதாரம் மூலமாக மற்றவர்களுக்கும் அம்மாதிரி ஊக்கம் உற்சாகத்தைக் கொடுக்கக் கூடிய ஆதார சொரூப பொறுப்பு மற்றும் பணிவு சொரூப விசேஷ ஆத்மாக்களைச் சந்திப்பதற்காக வந்திருக் கிறோம். நீங்கள் ஒவ்வொருவரும் தன்னை அந்த மாதிரி ஆதார சொரூபமாக அனுபவம் செய்கிறீர்களா? ஆதார ரூப ஆத்மாக்களின் இந்த சபை மீது அந்த அளவு அளவற்ற பொறுப்பு இருக்கிறது. ஆதார ரூபம் என்றால், எப்பொழுதும் தன்னை ஒவ்வொரு நேரம், ஒவ்வொரு எண்ணத்தில், ஒவ்வொரு காரியத்தில் பொறுப்பானவர் என்று புரிந்து நடந்து கொள்பவர். இந்த சபையில் வருவது என்றால், எல்லைக்கப்பாற்பட்ட பொறுப்பு என்ற கிரீடத்தை அணிந்திருப்பவர் ஆவது. இந்த சபை எதை நீங்கள் மீட்டிங் (கூட்டம்) என்று கூறுகிறீர்கள், மீட்டிங்கில் வருவது என்றால் நீங்கள் எப்பொழுதும் தந்தையுடன் சேவையுடன், ஈஸ்வரிய குடும்பத்துடன் அன்பின் சிரேஷ்ட எண்ணம் என்ற கயிற்றில் கட்டப்படுவது மற்றும் கட்டுவது என்ற இந்த ஆதார ரூபம் ஆகும். இந்த ஏற்பாடு செய்யப்பட்ட சபையில் வருவது என்றால், தன்னை அனைவருக்காகவும் ஒரு உதாரண மாக ஆக்குவது. இது மீட்டிங் இல்லை, ஆனால் எப்பொழுதும் மரியாதா புருஷோத்தமன் ஆவதற்கான நல்ல எண்ணத்தின் பந்தனத்தில் கட்டப்படுவது. இந்த அனைத்து விஷயங்களின் ஆதார சொரூபம் ஆவது என்பதைத் தான் ஆதார சொரூப சபை என்று கூறுவது. நாலாபுறங்களிலிருந்தும் விசேஷமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரத்தினங்கள் ஒன்றாகக் கூடியிருக்கிறீர்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்றால் தந்தைக்குச் சமமாக ஆகியிருப்பவர்கள். சேவைக்கான ஆதார சொரூபம் என்றால் சுயத்திற்கு நன்மை மற்றும்

அனைவருக்கும் நன்மை செய்யும் சொரூபம். எந்த அளவு தனக்கு நன்மை செய்யும் சொரூபமாக இருப்பாரோ அந்த அளவே அனைவருக்கும் நன்மை செய்யும் சொரூபம் உள்ள பொறுப்பாளர் ஆவார். பாப்தாதா இந்த சபையின் ஆதார ரூபம் மற்றும் நன்மை செய்யும் ரூப குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். மேலும் விசேஷமாக ஆதார ரூபமாகவும் ஆகி விட்டார்கள், நன்மை செய்யும் ரூபமாகவும் ஆகி விட்டார்கள் என்ற விசேஷத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். இந்த இரண்டு விஷயங்களில் வெற்றி அடைவதற்காக மூன்றாவதாக என்ன விஷயம் வேண்டும்? ஆதார ரூபமாக இருக்கிறீர்கள். அதனால் தான் அழைப்பின் பேரில் வந்திருக்கிறீர்கள் இல்லையா? மேலும் நன்மை செய்யும் ரூபமாக இருக்கிறீர்கள், அதனால் தான் திட்டங்களை உருவாக்கியிருக்கிறீர்கள். நன்மை செய்வது என்றால் சேவை செய்வது. மூன்றாவது விஷயமாக என்ன பார்த்தோம்? எந்தளவு விசேஷ சபையில் இருப்ப வராக இருக்கிறீர்களோ அந்த அளவு நன்மை செய்யும் எண்ணம் உள்ளவர். நன்மை செய்யும் இதயம் மற்றும் நன்மை பயக்கும் வார்த்தைகள் மற்றும் பாவனை எந்த அளவு இருக்கிறது. ஏனென்றால் நன்மை செய்யும் எண்ணம் உள்ளவர் என்றால் எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்தில் பரந்த மனம் மற்றும் பெரிய மனம் உள்ளவர். எந்த விஷயத்தில் பரந்த மனம் மற்றும் பெரிய மனம் உள்ளவராக இருக்கிறீர்கள்? அனைவர் மீதும் சுபபாவனை மூலமாக முன்னேற்றம் செய்விக்கும் பரந்த மனம். உன்னுடையது என்பது என்னுடையது, என்னுடையது என்பது உன்னுடையதாக ஆனது. ஏனென்றால், நான் ஒரே ஒரு தந்தையினுடையவன். இந்த எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு பரந்த மனம், பெரிய மனம் இருக்கட்டும். நன்மை செய்யும் உள்ளம் இருக்கட்டும் அதாவது கொடுக்கும் பாவனை நிறைந்த இதயம் இருக்கட்டும். தான் பிராப்தி செய்திருக்கும் குணங்கள், சக்திகள், விசேஷங்கள் அனைத்திலும் பெரிய வள்ளல் ஆகும் பரந்த மனம் இருக்கட்டும். வார்த்தைகள் மூலம் ஞானச் செல்வத்தை தானம் செய்வது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் குண தானம் மற்றும் குணம் கொடுப்பதின் சகயோகி ஆக வேண்டும். இந்த தானம் என்ற வார்த்தை பிராமணர்களைப் பொருத்தளவில் தகுதியான வார்த்தை இல்லை. தன்னுடைய குணம் மூலம் மற்றவர்களை குணம் நிறைந்தவராக ஆக்குவதில், விசேஷத்தை நிரப்புவதில் சகயோகி ஆவது என்பதைத் தான் பெரும் வள்ளல் மற்றும் பரந்த மனம் என்று கூறுவது. அந்த மாதிரி

நன்மை பயக்கும் எண்ணம் உள்ளவராக, நன்மை பயக்கும் உள்ளம் உள்ளவராக ஆக வேண்டும். இது தான் பிரம்மா தந்தையை பின்பற்றி நடப்பது. அந்த மாதிரி நன்மை செய்பவரின் அடையாளம் என்னவாக இருக்கும்.

விசேஷமாக மூன்று அடையாளங்கள் இருக்கும். அம்மாதிரியான ஆத்மா பொறாமை, வெறுப்பு மற்றும் விமர்சனம் செய்வதிலிருந்து எப்பொழுதும் விடுபட்டு இருப்பார். இவரைத் தான் நன்மை செய்பவர் என்று கூறுவது. பொறாமை தன்னையும் தொந்தரவு செய்யும் மேலும் மற்றவர் களையும் தொந்தரவு செய்யும். எப்படி கோபத்தை அக்னி என்று கூறுகிறார்கள், அதே போல் பொறாமையும் அக்னி மாதிரியே காரியம் செய்கிறது. கோபம் பெரிய அக்னி, பொறாமை சிறிய அக்னி. வெறுப்பு ஒருபொழுதும் நற்சிந்தனையாளர் மற்றும் நற்சிந்தனை நிறைந்த நிலையை அனுபவம் செய்விக்காது. வெறுப்பு என்றால் தானும் விழுவது மற்றும் மற்றவர்களையும் விழ வைப்பது. அந்த மாதிரி விமர்சனம் செய்ய விரும்பினீர்கள் என்றால், நகைச்சுவையோடு செய்யுங்கள் அல்லது சீரியசாகி செய்யுங்கள் ஆனால் இது அந்த மாதிரி துக்கம் கொடுக்கிறது எப்படி யாராவது சென்று கொண்டிருக்கிறார் அவரைத் தள்ளிவிட்டு விழ வைப்பது. எப்படி யாரையாவது விழ வைக்கிறோம் என்றால் சின்ன காயமோ அல்லது பெரிய காயமோ ஏற்படுவதினால் அவர் தைரியமற்றவர் ஆகி விடுகிறார். அந்த காயத்தையே தான் யோசித்துக் கொண்டிருப்பார். எதுவரை காயம் இருக்குமோ அதுவரை காயப்படுத்தியவரை ஏதாவது ரூபத்தில் நினைவு செய்து கொண்டே இருப்பார். இது சாதாரண விஷயம் இல்லை. யாரைப் பற்றியாவது ஏதாவது கூறிவிடுவது மிக சுலபம் ஆனால் நகைச்சுவையோடு கூறிய வார்த்தைகளால் ஏற்படும் காயம் கூட துக்கம் தருவதாக ஆகி விடுகிறது. இதுவும் துக்கம் கொடுக்கும் பட்டியலில் வந்து விடுகிறது. புரிந்து கொண்டீர்களா? எந்த அளவு ஆதார சொரூபமாக இருக்கிறீர்களோ அந்த அளவு நன்மை செய்யும் சொரூபம், நன்மை செய்யும் உள்ளம், நன்மை செய்பவராக ஆவதற்காக பொறுப்பு சொரூபம். அடையாளங்களைப் புரிந்து கொண்டீர்கள் இல்லையா. நன்மை செய்பவர் பரந்த மனமுடையவராக இருப்பார்.

சபையோ மிக நன்றாக இருக்கிறது. அனைத்து பெயர் பெற்றவர் வந்திருக்கிறார்கள். திட்டங்களை யும் நல்ல நல்லதாக உருவாக்கியிருக்கிறீர்கள். திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கான தைரியம் இருக்கட்டும். எவ்வளவு நல்ல திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களோ அந்த அளவு நீங்களும் நல்லவர்களாக இருக்கிறீர்கள். தந்தைக்கு விருப்பமான நல்லவர்களாக இருக்கிறீர்கள். சேவையின் ஈடுபாடு மிக நன்றாக இருக்கிறது. சேவையில் சதா காலத்திற்கும் வெற்றிக்கான ஆதாரம் நன்மை செய்வது. அனைவரின் லட்சியம், நல் எண்ணங்கள் மிக நன்றாக இருக்கிறது. மேலும் ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு தந்தையின் பிரத்யக்ஷம் (வெளிப்படுத்துவது) செய்ய வேண்டும். ஒருவருடையவர் ஆகி ஒருவரை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். இதை மட்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு தந்தையின் அறிமுகம் கொடுப்பதற்காக அஞ்ஞானி மனிதர்களும் ஒரு விரலால் சமிக்ஞை கொடுப்பார்கள். இரண்டு விரல்களைக் காண்பிக்க மாட்டார்கள். சகயோகி ஆவதின் அடையாள மாக கூட ஒரு விரலை காண்பித் திருக்கிறார்கள். விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய இந்த விசேஷத்தின் அடையாளம் நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த பொன்விழாவை கொண்டாடு வதற்காக மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்காக எப்பொழுதும் 'ஒற்றுமை மற்றும் ஒருமித்த நிலை' என்ற இந்த இரண்டு விஷயங்கள் நினைவில் இருக்கட்டும். செய்யும் காரியத்தின் வெற்றிக்காக இந்த இரண்டும் சிரேஷ்ட புஜங்கள். ஒருமித்த நிலை என்றால் எப்பொழுதும் வீணான மற்றும் தீய எண்ணம் இல்லாத நிலை. எங்கு ஒற்றுமை மற்றும் ஒருமித்த நிலை இருக்கிறதோ அங்கு வெற்றி கழுத்தின் மாலையாக இருக்கிறது. பொன்விழா ஆண்டின் காரியத்தை இந்த விசேஷ இரண்டு புஜங்களால் செய்யுங்கள். அனைவருக்கும் இரண்டு புஜங்களோ இருக்கின்றன. இந்த இரண்டையும் ஈடுபடுத்தினீர்கள் என்றால், நான்கு புஜங்கள் உள்ளவராக ஆகி விடுவீர்கள். சத்திய நாராயணன் மற்றும் மகாலட்சுமிக்கு நான்கு புஜங்கள் காண்பித்திருக்கிறார்கள். நீங்கள் அனைவரும் சத்திய நாராயணன் மற்றும் மகாலட்சுமிகள். நான்கு புஜங்கள் உள்ளவராகி ஒவ்வொரு காரியம் செய்வது என்றால் சாட்சாத்கார சொரூபம் ஆவது. இரண்டு புஜங்களால் மட்டும் காரியம் செய்யாதீர்கள். நான்கு புஜங்களால் செய்யுங்கள். இப்பொழுது பொன்விழா ஆண்டிற்கான ஸ்ரீகணேஷ்

# 1985 அவ்யக்த முரளி

(பிள்ளையார் சுழி) போட்டிருக்கிறீர்கள் இல்லையா? (துவக்கம் செய்திருக்கிறீர்கள் இல்லையா). கணேஷிற்கும் நான்கு புஜங்கள் காண்பிக்கிறார்கள். பாப்தாதா தினசரி மீட்டிங்கில் வருகிறார். ஒரு தடவை சுற்றி வந்தாலே அனைத்து செய்திகளும் தெரிந்து விடுகிறது. பாப்தாதா அனைவரின் சித்திரத்தை வரைந்து எடுத்துச் செல்கிறார். எப்படி எப்படி அமர்ந்திருக்கிறார்கள். உடல் ரூபத்தில் அல்ல, மனதின் நிலையின் ஆசனத்தின் புகைப்படம் எடுக்கிறார். வாய் மூலம் யாராவது என்ன தான் பேசிக் கொண்டிருந்தாலும், மனதால் என்ன பேசுகிறார் என்று மனதின் பேச்சை ஒலியையும் நாடாவில் பதிவு செய்கிறார். பாப்தாதாவிடமும் அனைவரையும் பதிவு செய்த ஒலி நாடா இருக்கிறது. சித்திரமும் இருக்கிறது, இரண்டும் இருக்கிறது. வீடியோ, டி.வி ஆகியவை என்ன விரும்புகிறீர்களோ அவை அனைத்தும் இருக்கின்றன. உங்கள் அனைவரிடமும் உங்களுடைய கேசட் இருக்கிறது தான் இல்லைய? ஆனால் சிலருக்கு தன்னுடைய மனதின் பேச்சு, எண்ணம் தெரிய வருவதில்லை. நல்லது.

இளைஞர்கள் தயாரித்த திட்டங்கள் அனைத்தும் நன்றாக இருக்கின்றன. இதுவும் ஊக்கம் உற்சாகத்தின் விஷயம். கட்டாயத்தின் விஷயம் இல்லை. உள்ளப்பூர்வமான ஊக்கம் என்னவாக இருக்கிறதோ அது இயல்பாகவே மற்றவர்களிலும் ஊக்கம் நிறைந்த சூழ்நிலையை உருவாக்கும். அப்படி இது பாதயாத்திரை இல்லை ஆனால் ஊக்கத்தின் யாத்திரை. இதுவோ ஒரு காரணத்திற்காக செய்வது. எந்தவொரு காரியம் செய்தாலும் அதில் ஊக்கம் உற்சாகத்தின் விசேஷம் இருக்கட்டும். அனைவருடைய திட்டம் பிடித்திருக்கிறது. இன்னும் வரும் நாட்களிலும் நான்கு புஜங்கள் உள்ளவராகி திட்டங்களை நடைமுறையில் கொண்டு வந்து கொண்டே இருந்தீர்கள் என்றால் இன்னும் அதில் சேர்ந்து கொண்டே இருக்கும். அனைவருக்கும் பொன்விழா ஆண்டை கோலா கலமாக கொண்டாடுவதற்கான ஒரே ஒரு ஊக்கம் உற்சாகம் நிறைந்த எண்ணம் இருக்கிறது என்பது பாப்தாதாவிற்கு மிக நல்ல விஷயமாகத் தென்பட்டது. இந்த அஸ்திவாரம் அனைவரின் ஊக்கம் உற்சாகம் நிறைந்த எண்ணம் ஒன்றாகவே இருக்கிறது. இந்த ஒரு வார்த்தையை எப்பொழுதும் அடிக் கோடிட்டு முன்னேறிச் செல்லுங்கள். ஒருவர் இருக்கிறார், அந்த ஒருவருடைய காரியம். உலகத்தில் எந்தவொரு மூலையில் நடந்து கொண்டிருந்தாலும் பாரதத்திலோ அல்லது

வெளிநாட்டிலோ நடந்தாலும் எந்த மண்டலத்தில் கிழக்கு மற்றும் மேற்கு அப்படி எந்த மண்டலத்தில் நடந்தாலும் ஆனால் ஒருவர், அந்த ஒருவரின் காரியம். அனைவரின் எண்ணமும் அந்த மாதிரியே தான் இருக்கிறது இல்லையா? முதலில் இந்த உறுதிமொழி செய்தீர்கள் தான் இல்லையா? வாயினால் செய்யும் உறுதிமொழி இல்லை, மனதில் இந்த உறுதிமொழி என்றால் உறுதியான எண்ணம். என்ன நடந்தாலும் சரி, ஆனால் இதைத் தவிர்க்க முடியாது, அப்படி உறுதியான நிலை. இந்த மாதிரி உறுதிமொழியை அனைவரும் செய்தீர்களா? எப்படி ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்கிறீர்கள் என்றால், உறுதிமொழி செய்வதற்காக முதலில் அனைவரும் மனதில் எண்ணம் வைக்கும் அடையாளமாக கங்கணம் கட்டுகிறீர்கள். காரியம் செய்பவர்களுக்கு நூலில் செய்யப்பட்ட அல்லது ஏதாவது ஒரு கங்கணத்தை கட்டுகிறீர்கள். அப்படி இது சிரேஷ்ட எண்ணத்தின் கங்கணம் இல்லையா? எப்படி இன்று அனைவருமே பண்டாரியில் (உண்டியலில்) மிக ஊக்க உற்சாகத்தோடு ஸ்ரீகணேஷ் செய்தீர்கள். அதே போல் இப்பொழுது இந்த பெட்டியையும் வையுங்கள். அதில் அனைவரும் உறுதியான உறுதிமொழி என்று புரிந்து துண்டுச் சீட்டையும் போடட்டும். இரண்டு உண்டியலும் சேர்ந்தே இருந்தால் தான் வெற்றி கிடைக்கும். மனப்பூர்வமாக இருக்க வேண்டும், மற்றவர்களுக்கு காண்பிப்பதற்காக மட்டும் என்று இருக்கக்கூடாது. இது தான் அஸ்திவாரம். பொன்னானவராகி பொன்விழாவைக் கொண்டாடுவதற்கான ஆதாரம் இது. இதில் ஒரே ஒரு 'பிரச்சனையாக ஆக மாட்டோம், பிரச்சனையை கண்டு குழப்பம் அடைய மாட்டோம்' என்ற சுலோகனின் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். சுயம் தானும் சமாதான சொரூபமாக இருப்போம் மேலும் மற்றவர்களுக்கும் சமாதானம் கொடுப்பவர்களாக ஆவோம்.. இந்த நினைவு இயல்பாகவே பொன் விழாவை வெற்றி சொரூபமாக ஆக்கிக் கொண்டே இருக்கும். எப்பொழுது இறுதி பொன்விழா நடக்குமோ அப்பொழுது அனைவருக்கும் உங்களுடைய பொற்கால சொரூபம் அனுபவம் உண்டாகும். உங்களில் பொன் உலகத்தை பார்ப்பார்கள். பொன்னுலகம் வருகிறது என்று கூற மட்டும் மாட்டார்கள் ஆனால் நடைமுறையில் காண்பிப்பார்கள். எப்படி மந்திரவாதிகள் இதைப் பாருங்கள், இதைப் பாருங்கள் என்று காண்பித்துக் கொண்டே செல்கிறார்கள், கூறிக் கொண்டே செல்கிறார்கள். அதே போல் உங்களுடைய பொன்னான முகம், பிரகாசமான நெற்றி, பிரகாசமான கண்கள், பிரகாசமான உதடுகள் இவை

அனைத்தும் பொற்காலத்தின் காட்சிகளைக் கொடுக் கட்டும். எப்படி சித்திரங்களை உருவாக்குகிறீர்கள் இல்லையா? ஒரே படத்தில் இப்பொழுது பிரம்மாவைப் பாருங்கள், இப்பொழுது கிருஷ்ணரைப் பாருங்கள், இப்பொழுது விஷ்ணுவைப் பாருங்கள் என்று காண்பிக்கிறீர்கள் இல்லையா? அதே போல் உங்களுடைய சாட்சாத்காரம் கிடைக் கட்டும். இந்த நேரம் ஃபரிஷ்தா அடுத்த நேரம் விஷ்வ மகாராஜன், விஷ்வ மகாராணி ரூபம், அடுத்த நேரம் சாதாரண வெந்நிற ஆடை தரித்தவர். இந்த விதவிதமான சொரூபம் உங்களுடைய இந்த பொன்னான உருவத்திலிருந்து தென்படட்டும். புரிந்ததா?

எப்பொழுது இந்தளவு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆன்மீக ரோஜா மலர்களின் பூச்செண்டு ஒன்றாகக் கூடி யிருக்கிறது. ஒரு ஆன்மீக ரோஜா மலரின் நறுமணம் எவ்வளவு இருக்கிறது என்றால் இவ்வளவு பெரிய இந்த பூச்செண்டு எவ்வளவு அதிசயம் செய்யும். மேலும் ஒவ்வொரு நட்சத்திரத்தில் உலகமும் இருக்கிறது. நீங்கள் தனியாக இருக்கவில்லை. அந்த நட்சத்திரங்களில் உலகம் இல்லை ஆனால் நட்சத்திரங்கள் உங்களில் உலகம் இருக்கிறது இல்லையா?. அதிசயமோ நடக்கத்தான் வேண்டும். அது நிச்சயிக்கப்பட்டது. நான் தான் முதலில் செய்பவன் அர்ஜுனன் என்று மட்டும் ஆக வேண்டும். மற்றபடி வெற்றியோ கண்டிப்பாக கிடைக்கும். அது உறுதியானது ஆனால் அர்ஜுனன் ஆக வேண்டும். அர்ஜுனன் என்றால் நம்பர் ஒன். இப்பொழுது இதன் மேல் பரிசு கொடுங்கள். முழு பொன்விழா ஆண்டில் பிரச்சனையாகவும் ஆகவில்லை, பிரச்சையையும் பார்க்க வில்லை. தடையற்ற, தீய எண்ணமற்ற, விகாரமற்ற என்ற இந்த மூன்று விசேஷங்களும் இருக்கட்டும். அம்மாதிரி பொன்னான நிலையில் இருக்கக்கூடியவர்களுக்கு பரிசு கொடுங்கள். பாப்தாதாவிற்கும் குஷி இருக்கிறது. விசால புத்தி உடைய குழந்தைகளைப் பார்த்து குஷியோ ஏற்படும் இல்லையா? எப்படி விசால புத்தியோ அப்படி விசால மனம். நீங்கள் அனைவரும் விசால புத்தியுடையவர்கள் அதனால் தான் திட்டம் போடுவதற்காக வந்திருக்கிறீர்கள். நல்லது.

எப்பொழுதும் தன்னை ஆதார சொரூபம், நன்மை செய்பவர் சொரூபம், எப்பொழுதும் நன்மை செய்யும் நன்மை நிறைந்த உள்ளம், நன்மை நிறைந்த எண்ணம் உள்ள, எப்பொழுதும் ஒருவர் தான் அந்த ஒருவரின்

காரியம் தான் என்று அம்மாதிரி ஒரே சீரான நிலையில் நிலைத்திருக்கக்கூடிய, எப்பொழுதும் ஒற்றுமை மற்றும் ஒருமித்த நிலையில் நிலைத்திருக்கக்கூடிய, அந்த மாதிரி விசால புத்தி, விசால மனம் மற்றும் விசால சிந்தனை நிறைந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

முக்கிய சகோதர சகோதரிகளுடன் சந்திப்பு: அனைவரும் மீட்டிங் செய்தீர்கள். சிரேஷ்ட எண்ணங்களின் சித்தி (வெற்றி) கண்டிப்பாக இருக்கும். எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்துடன் முன்னேறிச் செல்வது என்பது தான் விசேஷம். விசேஷமாக மனசேவை செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். மனசேவை ஒரு காந்தம் மாதிரி. எப்படி காந்தம் எவ்வளவு தான் தூரத்தில் இருக்கும் ஊசியை ஈர்க்க முடிகிறது, அதே போல் மனசேவை மூலமாக வீட்டில் அமர்ந்து கொண்டே அருகில் சென்றடைந்து விடுவீர்கள். இப்பொழுது நீங்கள் வெளியில் அதிகமாக பிஸியாக இருக்கிறீர்கள், மனசேவையை உபயோகப்படுத்துங்கள். ஸ்தாபனை காரியத்தில் என்னென்ன பெரிய காரியம் நடந்திருக்கிறதோ அவைகளின் வெற்றி மனசேவை மூலம் தான் கிடைத்தது. எப்படி அந்த மனிதர்கள் இராம் லீலா அல்லது என்ன காரியம் செய்தாலும் அந்தக் காரியம் செய்வதற்கு முன்பு தன்னுடைய மனநிலையை அந்த காரியத்தின் அனுசாரம் விரதத்தில் வைக்கிறார்கள். நீங்கள் அனைவரும் மனசேவையின் விரதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். விரதம் எடுக்காததினால் குழப்பத்தில் அதிகம் இருக்கிறீர்கள். எனவே முடிவு ஒரு நேரம் ஒரு மாதிரியும் இன்னொரு நேரம் வேறு மாதிரியும் இருக்கிறது. மனசேவையின் பயிற்சி அதிகம் வேண்டும். மனசேவை செய்வதற்காக லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸின் நிலை வேண்டும். லைட் மற்றும் மைட் இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். மைக்கின் எதிரில் மைட் ஆகி பேச வேண்டும். மைக்கும் இருக்க வேண்டும், மைட்டும் இருக்க வேண்டும். வாயும் மைக் தான்.

அப்படி மைட் ஆகி மைக் மூலம் பேசுங்கள். எப்படி சக்திசாலியான நிலையில் மேலே இருந்து இறங்கியிருக்கிறார், அவதாரம் ஆகி அனைவருக்காகவும் செய்தியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவதாரம் பேசிக் கொண்டிருக்கிறது. அவதரித்திருக்கிறார். அவதாரத்தின் நிலை சக்திசாலியாக இருக்கும் இல்லையா? எனவே எந்த

நேரம் உங்களை நீங்கள் அவதாரம் என்று நினைப்பீர்களோ அது தான் சக்திசாலியான நிலை. நல்லது.

**வரதானம்: சாட்சியாகி உயர்ந்த நிலை மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கு சக்தி கொடுக்கக்கூடிய தந்தைக்குச் சமமான அவ்யக்த ஃபரிஷ்தா ஆகுக!**

சென்றாலும் வந்தாலும், காரியங்கள் செய்து கொண்டே எப்பொழுதும் தன்னை நிராகார ஆத்மா மேலும் காரியம் செய்யும் போது அவ்யக்த ஃபரிஷ்தா என்று புரிந்து கொண்டீர்கள் என்றால், எப்பொழுதும் குஷியில் மேலே பறந்து கொண்டே இருப்பீர்கள். ஃபரிஷ்தா என்றால், உயர்ந்த நிலையில் இருப்பவர். இந்த தேகத்தின் உலகத்தில் என்ன நடந்து கொண்டிருந்தாலும், சாட்சியாகி அனைத்துக் காட்சிகளையும் பார்த்துக் கொண்டே இருங்கள். மேலும் சக்தி கொடுத்துக் கொண்டே இருங்கள்.இருக்கையில் இருந்து கீழே இறங்கி சக்தி கொடுக்கப்பட மாட்டாது. உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து உள்உணர்வு, திருஷ்டி மூலம் சகயோகத்தின், நன்மை பயக்கும் சக்தி கொடுங்கள், கலப்படம் ஆனவராக இல்லாமல் அப்பொழுது தான் எந்தவிதமான சூழ்நிலைகளிலும் பாதுகாப்பாக இருந்து தந்தைக்குச் சமமாக அவ்யக்த ஃபரிஷ்தா ஆகுக என்ற வரம் பெறுபவராக ஆவீர்கள்.

**சுலோகன்: நினைவு பலம் மூலம் துக்கத்தை சுகத்தில், மேலும் அசாந்தியை சாந்தியில் பரிவர்த்தனை செய்யுங்கள்!**

✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹

## 02.09.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஒவ்வொரு காரியத்திலும் வெற்றிக்கான சுலபமான வழி -அன்பு!

இன்று தனது ஆதரவில், பரிபாலனையில் இருக்கும் குழந்தைகளுக்கு அன்பிற்கான பிரதி பலனைக் கொடுப்பதற்காக தந்தை வந்திருக்கிறார். மதுபன்னில் இருப்பவர்களுக்கு களைப்பற்ற சேவைக்கான விசேஷ பலன் கொடுப்பதற்காக சந்திப்பதற்காக மட்டும் வந்திருக்கிறோம். இது தான் அன்பிற்கான பிரத்யக்ஷ எடுத்துக்காட்டான சொரூபம். பிராமண குடும்பத்தின் விசேஷமான அஸ்திவாரமே இந்த விசேஷ அன்பு தான்! தற்சமயம் ஒவ்வொரு சேவைக் காரியத்திலும் அன்பு வெற்றி அடைவதற்கான சகஜ சாதனம். யோகி வாழ்க்கைக்கான அஸ்திவாரம் நிச்சயம் ஆனால் குடும்பத்தின் அஸ்திவாரம் அன்பு. இந்த அன்பு தான் யாரையும் இதயத்தின் அருகில் கொண்டு வருகிறது. தற்சமயம் நினைவு மற்றும் சேவையின் சமநிலையின் கூடவே அன்பு மற்றும் சேவைக் கான சமநிலை இருப்பது வெற்றி அடைவதற்கான சாதனம். பாரதத்தின் சேவையாக இருந்தாலும் அல்லது வெளிநாட்டின் சேவையாக இருந்தாலும், இரண்டிலும் வெற்றி அடைவதற்கான சாதனம் ஆன்மீக அன்பு. ஞானம் மற்றும் யோகா என்ற வார்த்தையையோ அனேகர்களிடமிருந்து கேட்டிருக்கிறீர்கள் ஆனால் திருஷ்டியினால் மற்றும் சிரேஷ்ட எண்ணத்தினால் ஆத்மாக்களுக்கு அன்பின் அனுபவம் ஆவது என்பது விசேஷம் மற்றும் புதுமை. மேலும் இன்றைய உலகிற்கு அன்பு மிக அவசியமாக உள்ளது. எவ்வளவு தான் அபிமானம் உள்ள ஆத்மாவையும் அன்பு அருகில் கொண்டு வர முடியும். அனைவரும் அன்பின் யாசகர்களாக, அமைதியின் யாசகர்களாக இருக்கிறார்கள் ஆனால் அமைதியின் அனுபவத்தையும் அன்பு நிறைந்த திருஷ்டி மூலம் தான் செய்விக்க முடியும். அம்மாதிரி அன்பு அமைதியின் அனுபவத்தை இயல்பாகவே செய்விக்கிறது. ஏனென்றால், அன்பில் தன்னையே மறந்து விடுகிறார்கள். எனவே சிறிது நேரத்திற்காக அசரீரியாக இயல்பாகவே ஆகி விடு கிறார்கள். அப்படி அசரீரி ஆவதின் காரணமாக அமைதியின்

அனுபவம் சுலபமாக ஆகிறது. தந்தையும் அன்பிற்கான பிரதிபலன் தான் கொடுக்கிறார். தான் வரும் ரதம் இயங்கினாலும் அல்லது இயங்காவிட்டாலும், தந்தை அன்பிற்கான நிரூபணத்தை (குழந்தைகளுக்கு) கொடுக்கத்தான் வேண்டியதாக இருக்கிறது. குழந்தைகளிலும் இதே அன்பின் பிரத்யக்ஷ பலனை பாப்தாதா பார்க்க விரும்புகிறார். சிலர் (குல்சார் சகோதரி, ஜகதீஷ் சகோதரர், நிர்வேர் சகோதரர்) வெளிநாட்டில் சேவை செய்து திரும்பி வந்திருக்கிறார்கள். மேலும் சிலர் (தாதி அவர்கள் மற்றும் மோகினி சகோதரி) சென்று கொண்டிருக்கிறார்கள். இதுவும் அந்த ஆத்மாக்களுக்கு அன்பின் பலன் அவர்களுக்கு கிடைக்கிறது. நாடகத்தின் அனுசாரம் நினைப்பது ஒன்று, ஆனால் நடப்பது வேறொன்று. இருந்தாலும் பலன் கிடைத்தே விடுகிறது. எனவே நிகழ்ச்சி நிரலும் உருவாகியே விடுகிறது. அனைவரும் அவரவர்களுடைய நல்ல பாகத்தைத் தான் செய்து விட்டு வந்திருக்கிறார்கள். ஏற்கனவே உருவாக்கப்பட்டு, அதே போல் நடந்து கொண்டிருக்கும் நாடகத்தில் இவை அடங்கியிருக் கிறது. எனவே சுலபமாகவே பலன் கிடைத்து விடுகிறது. வெளிநாடும் மிகுந்த ஈடுபாடுடன் சேவையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். நாலாபுறங்களிலும் அவர்களுடைய தைரியம் மற்றும் ஊக்கம் நன்றாக இருக்கிறது. அனைவரின் உள்ளப்பூர்வமான நன்றி உணர்வு நிறைந்த எண்ணம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து கொண்டே இருக்கிறது. ஏனென்றால், பாரதத்திலும் எவ்வளவு அவசியமாக இருக்கிறது. இருந்தும் பாரதத்தின் அன்பு தான் தங்களுக்கு சகயோகம் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்று அவர்களும் புரிந்து கொள்கிறார்கள். இதே பாரதத்தில் சேவை செய்யும் சகயோகி பரிவாரத்திற்கு உள்ளப்பூர்வமாக நன்றி கூறுகிறார்கள். எவ்வளவு தான் தேசம் தூரமாக இருந்தாலும் அந்த அளவே உள்ளப்பூர்வமான பாலனைக்கு பாத்திரம் ஆவதில் அருகில் இருக்கிறார்கள். எனவே நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு அவர்களுடைய நன்றிக்கு பிரதிபலன் கொடுப்பதற்காக பாப்தாதா அன்பு நினைவுகளையும் மற்றும் நன்றியையும் கூறுகிறார். தந்தையும் பாடல் பாடுகிறார் இல்லையா?

பாரதத்திலும் நல்ல ஊக்கம் உற்சாகத்துடன் பாதயாத்திரையின் சேவையை மிக நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள். நாலாபுறங்களிலும் சேவையின் மிகச் சிறப்பான சேவை நடவடிக்கைகள்

நன்றாக இருக்கிறது. ஊக்கம் உற்சாகம் களைப்பை மறக்க வைத்து வெற்றியை பிராப்தி செய்வித்துக் கொண்டிருக்கிறது. நாலாபுறங்களின் சேவையின் வெற்றி நன்றாக இருக்கிறது. பாப்தாதாவும் அனைத்து குழந்தைகளின் சேவையின் ஊக்கம் உற்சாகத்தின் சொரூபத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்.

(**நைரோபியில் ஜகதீஷ் சகோதரர் போப் ஆண்டவரை சந்தித்து விட்டு வந்திருக்கிறார்**). போப்பிற்கும் திருஷ்டி கொடுத்தீர்கள் இல்லையா? இதுவும் உங்களுக்காக விசேஷமாக வி.ஐ.பி-யின் சேவையில் வெற்றி சுலபமாக கிடைப்பதற்கான சாதனம். எப்படி பாரதத்தில் விசேஷமாக ஜனாதிபதி வந்தார். எனவே பாரதத்திலும் முக்கியமானவர்கள் வந்திருக்கிறார்கள் என்று இப்பொழுது கூற முடியும். அதே போலவே விசேஷமாக வெளிநாட்டின் முக்கிய தர்மத்தின் பிரபாவத்தின் காரணமாக நெருக்கமான தொடர்பில் வந்தார் என்றால் மற்றவர்களுக்கும் நாமும் தொடர்பில் வர வேண்டும் என்று சுலபமாக தைரியம் வர முடியும். அம்மாதிரி பாரதத்திற்கும் நல்ல சேவைக் கான சாதனமாக ஆனது மற்றும் வெளிநாட்டு சேவைக்கும் விசேஷ சாதனமாக ஆனது. எனவே நேரத்திற்கு ஏற்றபடி சேவையில் அருகில் வருவதில் எந்தவொரு தடை வந்தாலும் அவையும் சுலபமாக முடிவடைந்து விடும். பிரதம மந்திரியை சந்திப்பதும் ஆனது இல்லையா? எனவே உலகத்தினருக்கு இந்த உதாரணமும் உதவி செய்கிறது. வேறு யார் வந்திருக்கிறார்கள் என்பது தான் அனைவரின் கேள்வியாக இருக்கிறது. இப்பொழுது இந்தக் கேள்வி முடிவடைந்து விடும். இதுவும் நாடகத்தின் அனுசாரம் இதே வருடத்தில் சேவையில் சகஜ பிரத்யக்ஷத்தின் சாதனமாக ஆனது. இப்பொழுது அருகில் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கோ அவர்களுடைய பெயரே காரியம் செய்யும். அப்படி பெயர் மூலம் என்ன காரியம் நடக்க வேண்டுமோ அதற்கான நிலம் தயாராகி விட்டது. இவர்கள் செய்தியைப் பரப்ப மாட்டார்கள். செய்தியை பரப்பும் மைக் வேறு நபர்கள். இவர்கள் மைக்கிற்கு லைட் (கரண்ட்) கொடுப்பவர்கள் ஆனால் இருந்தும் நிலம் நன்றாக தயாராகி விட்டது. வெளிநாட்டில் இதற்கு முன்பு வி.ஐ.பி-களுக்கு சேவை செய்வது கடினம் என்று அனுபவம் செய்தார்கள். இப்பொழுது நாலாபுறங்களிலும் சுலபம் என்று அனுபவம் செய்கிறார்கள். இப்பொழுது இந்த ரிசல்ட் நன்றாக இருக்கிறது. இவர்களுக்கு பெயரால் காரியம் செய்பவர்கள் தயாராகி

விடுவார்கள். யார் பொறுப்பாளர் ஆகிறார் என்று இப்பொழுது பாருங்கள். நிலத்தை தயார் செய்வதற்காக நாலாபுறங்களிலும் அனைவரும் சென்றார்கள். பற் பல வழிகளில் நிலத்தில் கால் பதித்து தயார் செய்து விட்டீர்கள். இப்பொழுது பலன் என்ற பழம் பிரத்யக்ஷ ரூபத்தில் யார் மூலமாக கிடைக்கும் என்பதின் ஏற்பாடுகள் இப்பொழுது ஆகிக் கொண்டிருக்கிறது. அனைவரின் ரிசல்ட் நன்றாக இருக்கிறது. பாத யாத்திரை செய்பவர்களும் ஒரு பலம், ஒருவர் மேல் நம்பிக்கை வைத்து முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். முன்பு கடினமாக இருந்தது ஆனால் இப்பொழுது நடைமுறையில் வருகிறார்கள் என்றால் சுலபமாகி விடுகிறது. அனைத்து பாரதம் மற்றும் வெளிநாட்டில் யாரெல்லாம் சேவைக்கு பொறுப்பாளர் ஆகி சேவை செய்து அனேகர்களை பாப்தாதாவின் அன்பானவர்களாக சகயோகிகளாக ஆக்கி வந்திருக்கிறார்களோ, அவர்கள் அனைவருக்கும் விசேஷமாக அன்பு நினைவுகள் கொடுக்கிறோம். ஒவ்வொரு குழந்தையின் வரதானம் அவரவர்களுடையது. விசேஷமாக பாரதத்தைச் சேர்ந்த அனைத்து பாதயாத்திரையில் செல்லும் குழந்தை களுக்கு மேலும் வெளிநாட்டில் சேவைக்காக நாலாபுறங்களிலும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தைகளுக்கு மேலும் மதுபன்னைச் சேர்ந்த சிரேஷ்ட சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தைகளுக்கு, கூடவே அனைத்து பாரதவாசி குழந்தைகள் யார் யாத்திரையில் செல்பவர்களுக்கு ஊக்கம், உற்சாகம் கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்களோ அந்த அனைத்து நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு, விசேஷமாக அன்பு நினைவுகள் மற்றும் சேவையின் வெற்றிக்கான வாழ்த்துக்களைக் கூறுகிறோம். ஒவ்வொரு ஸ்தானத்திலும் நல்ல உழைப்போ செய்திருக்கிறீர்கள், ஆனால் இவர்கள் விசேஷ காரியத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள். எனவே விசேஷமாக சேமிப்பாகி விட்டது. ஒவ்வொரு தேசமும் மொரிஷீயஸ், நைரொபி, அமெரிக்கா இவர்கள் அனைவரும் உதாரணமாக தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த உதாரண மானவர்கள் வரும் நாட்களில் பிரத்யக்ஷத்தில் சகயோகி ஆவார்கள். அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் கூட ஒன்றும் குறைந்ததாக செய்யவில்லை. ஒவ்வொரு சிறிய ஸ்தானங்கள் கூட எந்த அளவு ஊக்கம் உற்சாகத்துடன் தங்களுடைய சக்தியின் கணக்கை விட அதிகம் செய்திருக்கிறார்கள். வெளிநாட்டிலோ, பெரும்பான்மை கிறிஸ்தவர்களின் இராஜ்யமே இருக்கிறது தான் இல்லையா?

இப்பொழுது அவர்களுடைய சக்தி குறைந்து விட்டிருந்தாலும் தர்மத்தையோ விடவில்லை. சர்ச்சையை விட்டு விட்டார்கள் ஆனால் தர்மத்தை விடவில்லை. எனவே அங்கு போப்பும் இராஜாவுக்கு சமமானவர். நீங்கள் இராஜா வரை சென்றடைந்திருக்கிறீர்கள் என்றால், பிரஜை களிடம் இயல்பாகவே மரியாதை உருவாகும். யார் தீவிரமான கிறிஸ்தவரோ அவர்களுக்காகவும் இது ஒரு நல்ல உதாரணம். இந்த உதாரணம் கிறிஸ்தவர்களுக்காக ஒரு காரணமாக அமையும். கிருஷ்ணன் மற்றும் கிறிஸ்து இடையே தொடர்பு இருக்கிறது இல்லையா? பாரதத்தின் சூழ் நிலையோ இருந்தும் வேறானதாக இருக்கும். பாதுகாப்பு விஷயங்கள் ஆகியவை அதிகமாக இருக்கும் ஆனால் இவர் அன்புடன் சந்தித்திருக்கிறார் என்றால், அது மிகவும் நல்லது. இராயல் தன்மையுடன் நேரம் கொடுப்பது, விதிப்பூர்வமாக சந்திப்பது என்பதின் பிரபாவம் ஏற்படும். இது இப்பொழுது நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்பதை காண்பிக்கிறது.

லண்டனிலும் கூட வெளிநாட்டின் கணக்குப்படி மாணவர்களின் எண்ணிக்கை மிக நன்றாக இருக்கிறது. மேலும் இவர்களுக்கு விசேஷமாக முரளி மீது அன்பு, படிப்பின் மீது அன்பு இருக்கிறது, இது அஸ்திவாரம். இந்த விஷயத்தில் லண்டன் நம்பர் ஒன் ஆக இருக்கிறது. என்ன ஆனாலும் சரி, ஒருபொழுதும் வகுப்பை தவற விடுவதில்லை. நான்கு மணியின் யோகா மற்றும் வகுப்பிற்கான மகத்துவம் லண்டனில் அனைவரையும் விட அதிகமாக இருக்கிறது. இதற்கான காரணமும் அன்பு தான். அன்பின் காரணமாக இழுக்கப்பட்டு வருகிறார்கள். சூழ்நிலையை சக்திசாலியாக ஆக்குவதில் நல்ல கவனம் இருக்கிறது. பொதுவாக தூர தேசத்தில் இருப்பவர்கள் வாயுமண்டலத் தைத் தான் ஆதாரம் என்று நினைக்கிறார்கள். அது சேவா நிலையமாக இருந்தாலும் அல்லது தன்னுடைய இடமாக இருந்தாலும் சிறிதளவு ஒருவேளை ஏதாவது விஷயம் வருகிறது என்றால், உடனே தன்னை சோதனை செய்து சூழ்நிலையை சக்திசாலியாக ஆக்குவதற்கான முயற்சியை நன்றாகச் செய்கிறார்கள். அங்கு சூழ்நிலையை சக்திசாலியாக ஆக்குவதற்கான லட்சியம் நன்றாக இருக்கிறது. சிறு சிறு விஷயங்களில் சூழ்நிலையைக் கெடுப்பதில்லை. சூழ்நிலை சக்திசாலியாக இருக்கவில்லை என்றால், சேவையில் வெற்றி கிடைக்காது என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே தன்னுடைய முயற்சி செய்வதிலும் மேலும் நிலையத்தின்

சூழ்நிலை மீதும் நல்ல கவனம் வைக்கிறார்கள். தைரியம் மற்றும் ஊக்கத்தில் ஒன்றும் குறைவு இல்லை.

எங்கெல்லாம் காலடி எடுத்து வைப்பீர்களோ அங்கு அவசியம் விசேஷமாக பிராப்தி பிராமணர்களுக்கும் ஏற்படுகிறது மற்றும் தேசத்திற்கும் ஏற்படுகிறது. செய்தியும் கிடைக்கிறது மேலும் பிராமணர்களிலும் விசேஷமாக சக்தி அதிகரிக்கிறது, பாலனையும் கிடைக்கிறது. சாகார (நேரெதிரில் இருக்கும்) ரூபத்தில் விசேஷ பாலனை பெற்று அனைவரும் குஷி அடைகிறார்கள். மேலும் அதே குஷியில் சேவையில் முன்னேறிச் சென்று வெற்றியை அடைகிறார்கள். தூர தேசத்தில் இருப்பவர்களுக்கோ பாலனையோ அவசியமானது. பாலனையைப் பெற்று மேலே பறக்கத் தொடங்குகிறார்கள். யார் மதுபன்னிற்கு வர முடிவதில்லையோ அவர்கள் அங்கு அமர்ந்து கொண்டே மதுபன்னின் அனுபவம் செய்கிறார்கள். எப்படி இங்கு (மதுபன்னில்) சொர்க்கத்தின் மற்றும் சங்கமயுகத்தின் ஆனந்தம் இரண்டையும் அனுபவம் செய்கிறார்கள். எனவே நாடகத்தின் அனுசாரம் வெளிநாடு செல்வதற்கான பாகமும் என்ன உருவாகியிருக்கிறதோ அதுவும் அவசியம் தான். மேலும் வெற்றியும் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு வெளிநாட்டின் குழந்தையும் அவரவர் களின் பெயரைச் சேர்த்து விசேஷமாக சேவைக்கான வாழ்த்துக்கள் மற்றும் விசேஷமாக சேவையின் வெற்றிக்கான பலனாக அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்வீர்களாக!. தந்தையின் எதிரில் ஒவ்வொரு குழந்தையும் இருக்கிறார். ஒவ்வொரு தேசத்தின் ஒவ்வொரு குழந்தையும் கண்களின் எதிரில் வந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொருவருக்கும் பாப்தாதா அன்பு நினைவுகளை கொடுக்கிறார். யார் துடித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளோ அவர்களின் அதிசயத்தைப் பார்த்து பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் மீது அன்பின் மலர்களின் மழையைப் பொழிகிறார். அவர்களுடைய புத்தி பலம் எவ்வளவு தீவிரமாக இருக்கிறது. மற்ற விமானம் இல்லை, ஆனால் புத்தி என்ற விமானம் தீவிரமானது. அவர்களுடைய புத்தி பலத்தைக் கண்டு பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் அதனதனுடைய மகத்துவம் இருக்கிறது. சிந்தி மக்களும் இப்பொழுது நெருக்கத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள். எது தொடக்கத்தில் நடந்ததோ அது இறுதியிலும் கண்டிப்பாக நடக்கும். இவர்கள் சமூக சேவை

செய்வதில்லை என்ற தவறான அபிப்ராயம் என்ன இருந்ததோ அதுவும் இந்த பாதயாத்திரையைப் பார்த்து அகன்று விட்டது. இப்பொழுது புரட்சிக்கான ஏற்பாடுகள் அதிவேகமாக நடந்து கொண்டிருக்கிறது.

டில்லியில் இருப்பவர்களும் பாதயாத்திரிகர்களை வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனை பிராமணர்கள் வீட்டிற்கு வருவார்கள். அந்த மாதிரியான பிராமண விருந்தினரோ பாக்கியம் நிறைந்தவரிடம் தான் வருகிறார்கள். டில்லி மீது அனைவருக்கும் அதிகார உரிமை உள்ளது. அதிகாரத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் இல்லையா. டில்லியிலிருந்து தான் உலகிற்கு பெயர் பரவும். அவரவர்களின் பகுதிகளிலோ செய்து கொண்டு தான் இருக்கிறார்கள் ஆனால் பாரதம் மற்றும் வெளிநாட்டிலோ டில்லியின் தொலைக்காட்சி மற்றும் வானொலி தான் கருவி ஆகும்.

**தாதி நிர்மல் சாந்தா அவர்களுடன் சந்திப்பு:** இவர் ஆதி இரத்தினங்களின் அடையாளம். சரிங்க! என்ற பாடத்தை எப்பொழுதும் நினைவில் வைத்து உடலுக்கும் சக்தி கொடுத்து வந்து சேர்ந்து விட்டார்கள். ஆதி இரத்தினங்களில் இது இயற்கையான சம்ஸ்காரமாக இருக்கிறது. ஒருபொழுதும் இல்லை, முடியாது என்று கூற மாட்டார்கள். எப்பொழுதுமே சரிங்க, செய்கிறேன் என்று தான் கூறுவார்கள். மேலும் அந்த சரிங்க! என்பது தான் பெரிய தலைவனாக ஆக்கியது. எனவே பாப்தாதாவும் குஷி அடைகிறார். தைரியம் உள்ள குழந்தைகளுக்கு உதவி கொடுத்து தந்தையும் அன்பான சந்திப்பின் பலனைக் கொடுத்தார்.

(**தாதி அவர்களிடம்**): அனைவருக்கும் சேவையின் ஊக்கம் உற்சாகத்திற்காக வாழ்த்துக்கள் கூறுங்கள். மேலும் எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே, குஷியோடு சேவையில் பிரத்யக்ஷத்தின் ஈடுபாட்டுடன் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கிறார்கள். எனவே சுத்தமான சிரேஷ்ட எண்ணத்திற்காக அனைவருக்கும் வாழ்த்துக்கள்.! சார்லி, கேன் ஆகியோர் முதல் பழமாக வெளிப்பட்டிருக்கிறார்கள், இந்த குரூப் நல்ல பலன் கொடுத்துக் கொண்டிருக்கிறது. பணிவுடன் படைப்புக் காரியத்தை சுலபமாகச் செய்கிறார்கள். எதுவரை பணிவானவராக ஆகவில்லையோ அதுவரை படைப்புக் காரியம் செய்ய முடியாது. இது மிக நல்ல பரிவர்த்தனை

(மாற்றம்). அனைவர் கூறுவதையும் கேட்பது மேலும் உள்ளடக்கிக் கொள்வது. மேலும் அனைவருக்கும் அன்பு கொடுப்பது வெற்றிக்கான ஆதாரம். நல்ல முன்னேற்றம் இருக்கிறது. புதுப்புது பாண்டவர்களும் நல்ல உழைப்பு செய்திருக்கிறார்கள். தனக்குள் நல்ல மாற்றத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அனைத்து பக்கங்களிலும் நல்ல வளர்ச்சி ஆகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது இன்னும் புதுமை செய்வதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். இந்த அளவிலோ அனைவரின் உழைப்பிற்கான பலனாக, முன்பு கூறுவதைக் கேட்கவே மாட்டார்கள். அவர்கள் இப்பொழுது அருகில் வந்து பிராமண ஆத்மாக்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது பிரத்யக்ஷம் செய்வதற்காக இன்னும் வேறு ஏதாவது சேவைக்கான புது சாதனம் உருவாகும்.பிராமணர்களின் குழுவும் நன்றாக இருக்கிறது. இப்பொழுது சேவை வளர்ச்சியின் பக்கம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஒரு தடவை வளர்ச்சி தொடங்கி விட்டது என்றால், அந்த அலை தொடர்ந்து இருக்கும். நல்லது.

**வரதானம்: குழு என்ற கோட்டையை உறுதியாக ஆக்கக்கூடி அனைவரின் அன்பான, திருப்தியான ஆத்மா ஆகுக!**

குழுவின் சக்தி விசேஷமான சக்தியாகும். ஒரு வழியில் நடக்கும் குழுவை யாரும் அசைக்க முடியாது ஆனால் இதற்கான ஆதாரம் ஒவ்வொருவரின் அன்பிற்குரியவராகி அனைவருக்கும் மரியாதை கொடுப்பது மற்றும் அவரே திருப்தியாக இருந்து அனைவரையும் திருப்திப் படுத்துவது. யாரும் தொந்தரவு அடையாதீர்கள் மற்றவரையும் தொந்தரவு செய்யாதீர்கள். அனைவரும் ஒவ்வொருவருக்கும் சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்களின் சகயோகம் கொடுத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால், குழுவின் கோட்டை உறுதியாகி விடும். குழுவின் சக்தி தான் வெற்றிக்கான விசேஷ ஆதார சொரூபம்.

**சுலோகன்: எப்பொழுது ஒவ்வொரு காரியமும் யதார்த்தமாக மற்றும் யுக்தி நிறைந்ததாக நடக்கிறதோ அப்பொழுது தான் தூய்மையான ஆத்மா என்று கூறுவோம்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.11.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தீபாவளியின் மகத்துவம்!

இன்று உலகிற்கு ஒளி ஊட்டுகின்ற, ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற தீபங்களுக்கு அதிபதி, தமது தீபமாலையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். உண்மையில் தீபமாலை உங்கள் அனைவரின் நினைவுச்சின்னமேயாகும். எனவே தீபங்களுக்கு அதிபதி, தமது உண்மையான தீபமாலையைப் பார்க்கின்றார். இந்த தீபமாலை விசித்திரமான மாலையாகும். இதன் அதிபதியும். விசித்திரமானவர், மாலையும் விசித்திரமானது. உலகில் உள்ளவர்கள் அதிபதியையும் அறியவில்லை, மாலையையும் அறியவில்லை. அதிபதியை சந்தித்தால்தான், மாலையையும் அறிய முடியும். உங்கள் அனைவரின் மூன்று சிறப்புகளின் நினைவுச்சின்னமாகவே தீப மாலை விளங்குகிறது.

முதலாவது: அருகாமையில் இருப்பது (சமீப்த்தா) (நெருக்கம்):
அருகாமையில், அன்பு நிறைந்துள்ளது. மாலையில் அன்பும், அருகாமையும் இல்லையெனில், மாலையை உருவாக்க முடியாது. மணிகள் மணியுடனும், அல்லது தீபங்கள் தீபங்களுடனும் ஒன்றுக்கொன்று அன்பு கொண்டு அருகாமையில் வந்தால்தான், மாலையென்று கூறமுடியும். அன்பு என்றால் அருகாமை என்று பொருள். அன்பின் அடையாளம் அருகாமை ஆகும். அன்பின் அடையாளம் நெருக்கம் ஆகும்.

இரண்டாவது: சமமாக நிறைந்திருப்பது (சம்பன்னதா):
தீபமாலை சம்பன்ன நிலையின் அடையாளம் ஆகும். ஒரே ஒரு லட்சுமி மட்டும் செல்வத்தை வழங்குபவர் அல்ல. நீங்கள் அனைவருமே செல்வத்தால் நிறைந்துள்ள தேவிகள் ஆவீர்கள். தனம் நிறைந்துள்ள தேவிகள் நீங்கள். ஆகவே நீங்கள் அனைவரும் தன்ய தேவிகள் (வழங்குபவர்) என்று புகழப்படுகிறீர்கள். ஆகவே தனம் நிறைந்த தேவி, தன்ய தேவி, நிறைந்திருப்பதன் அடையாளம் ஆகிறது.

மூன்றாவது: சம்பூர்ணம். சம்பூர்ணம் என்றால் சதா ஒளியுடன் திகழ்கின்ற தீபம் என்று பொருள். அணைந்து விட்ட தீபங்களை, தீபமாலை என்று கூறுவதில்லை. பிரகாசிக்கின்ற தீபங்களையே தீபமாலையென்று கூறப்படுகிறது. எனவே எப்பொழுதும் ஒரே நிலையில் ஒளி வீசுகின்ற, தீபங்களின் அடையாளம், சம்பூர்ணமாக விளங்குவதாகும். ஆகவே தீபமாலை அருகாமை, சம்பன்னம், சம்பூர்ணம், ஆகிய மூன்று சிறப்புகளின் நினைவுச்சின்னமாகிறது. இதனால்தான் தீபமாலை (தீபாவளி) ஒரு பெரிய திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

உற்சவங்கள், (பண்டிகைகள்) கொண்டாடப்படும் தினம் திருநாளாகக் கருதப்படுகிறது. ஏனெனில் உலகில் அது மிக உயர்ந்த நாளாகும். உலகிலேயே எல்லோரையும் விட மிக உயர்ந்தவர்கள் யார்? பூர்வீகமானவர்களாகவும், பூஜைக்கு உரியவர்களாகவும் யார் இருக்கிறார்கள்? நீங்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? மேற்கூறிய மூன்று சிறப்புகளையும் உங்களிடம் அனுபவம் செய்து வருகிறீர்களா? உங்கள் அனைவரின் நினைவுச்சின்னங்களை மனிதர்கள் உருவாக்கி வருகின்றனர் நினைவு சொரூபமாக மாறுபவர்களுக்கு, நினைவுச்சின்னங்கள் உருவாக்கப்படுகின்றன. அவ்வாறு நினைவு சொரூபமாக மாறிவிட்டீர்களா? அல்லது அவ்வாறு மாறி வருகிறோம் என்று இப்பொழுதும் கூறுகிறீர்களா? என்ன பதிலளிக்கிறீர்கள்? பிரகாசம் தோன்றியவுடன் இருள் அகன்றுவிடுகிறது அல்லவா? பிரகாசிப்பது என்றால் இருள் இல்லை என்று பொருள். சதா ஒளியுடன் விளங்குகிறீர்களா அல்லது விட்டு, விட்டு (முனுக் முனுக்கென்று) பிரகாசிக்கின்றீர்களா? அணைந்து அணைந்து எரியும் விளக்கை யாரும் விரும்புவதில்லை. சில சமயம் அணைந்திருக்கும் வேறு சமயம் பிரகாசிக்கும். மின்விளக்கு ஒரேமாதிரி பிரகாசிக்காவிட்டால் அதை மனிதர்கள் விரும்புவதில்லை. அதை உடன் அணைத்து விடுகின்றனர். ஒரே மாதிரி பிரகாசமாக ஒளி அளிக்கும் தீபம், அணைந்து அணைந்து எரியும் தீபம் ஆக இந்த இரண்டு தீபங்களில் எதை நீங்கள் விரும்புகிறீர்கள்?

பண்டிகை நாளன்று ஏன் விடுமுறை அளிக்கப்படுகிறது? பெரிய பண்டிகை நாளன்று அதைக் கொண்டாடுவதற்காக விடுமுறை

அளிக்கப்படுகிறது. அந்த விடுமுறையினால் ஆனந்தம் அடைகின்றனர். ஒவ்வொரு மாதமும் நாட்காட்டியில் (கேலண்டர்) எதை முதலில் பார்க்கின்றனர்? பண்டிகை நாட்கள் எத்தனை, விடுமுறை நாட்கள் எத்தனை என்பதைப் பார்க்கின்றனர். ஆகவே பண்டிகை நாள் என்றால் விடுமுறை நாள் என்று பொருள். அதாவது விடுமுறையில், வேலை பற்றிய சிந்தனையின்றி சந்தோஷத்துடன் இருக்கும் நாளாகும் அது. பலவீனங்களுக்கு, அதாவது. மாயைக்கு விடுமுறை (விடை கொடுப்பது) அளித்து விட்டால், தீவிர பிரயத்தனம் மறைந்து, சந்தோஷத்துடன் விளங்கும் தினத்தைக் கொண்டாடுவது ஆரம்பம் ஆகி விடுகிறது. பண்டிகை தினம் என்றால் விடுமுறை தினம் என்று பொருள். இதனால்தான் பண்டிகை நாளன்று நினைவுச்சின்னமாக விடுமுறை அளிக்கப்படுகிறது. விடுமுறையன்று என்ன செய்கின்றனர்? அன்று சந்தோஷத்துடன் உள்ளனர் அல்லவா ? விடுமுறை நாள் ஓய்வெடுக்கும் நாளாகி விடுகிறது. நீங்கள் எவ்வாறு ஓய்வெடுக்கின்றீர்கள்? நீங்கள் ஒய்வெடுக்கிறீர்களா அல்லது ராமா வா, வா என்று (நினைவு யாத்திரை) கூறுகிறீர்களா? ஓய்வெடுக்காமல் ராமா வா, ராமா வா என்று (நினைவு யாத்திரையில் மூழ்கியிருப்பது) கூறுகிறீர்கள் அல்லவா. இதைத்தான் (நினைவு யாத்திரை) உண்மையில் ஓய்வெடுப்பது என்று கூறுகிறோம்.

தீபாவளியன்று வேறு என்ன செய்கிறார்கள்? வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர், பண்டிகை தினத்தன்று ஒருவரை ஒருவர் சந்தித்து வாழ்த்துக்களை அளிக்கின்றனர். ஏன் இந்தப் பழக்கம் ஏற்பட்டது? வாழ்த்துக்களை எவ்வாறு அளிக்கின்றனர்? ஆலிங்கனம் செய்கின்றனர். கை குலுக்குகின்றனர், இனிப்புகளை வழங்குகின்றனர். சந்தோஷத்துடன் அந்நாளைக் கொண்டாடுகின்றனர். ஒருவருக்கொருவர் அன்பு நினைவுகளை அளித்தும், அடைந்தும், வாழ்த்தி, கொண்டாடுகின்றனர். ஆகவே சங்கமயுகத்தில், அதாவது இந்தத் திருவிழாவின்போது, நீங்கள் அனைவரும் நிரந்தரமாக மாயைக்கு விடை கொடுத்து வாழ்த்துகின்றீர்கள். நீங்கள் வெற்றி பெறுகிறீர்கள். ஆகவே வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பாப்தாதா தொடர்ந்து வாழ்த்துக்களை அளிக்கின்றார். அன்பு நினைவுகளை அளிப்பதென்றால் வாழ்த்துவதற்கு ஒப்பாகும். தினசரி பாப்தாதா வாழ்த்துக்களை அளிக்கின்றார். இதனால் தான் நினைவுச்சின்னத்திலும் (பண்டிகைகள்) வாழ்த்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

# 1985 அவ்யக்த முரளி

அன்பு நினைவுகளை தினசரி அளித்து வருகின்ற பாப்தாதா குழந்தைகளுடன் பேசும்போது எந்த சொல்லை தொடர்ந்து உபயோகித்து வருகிறார்? இனிய குழந்தைகளே என்று கூறி வாயை இனிமையாக்கி வருகின்றார். தினசரி பாப்தாதா இனிய குழந்தைகளே என்றே கூறி வருகின்றார். அந்த இனிமைக்கும் நினைவுச்சின்னம் உள்ளது. அனைவருக்கும் நீங்கள் இனிப்புகளை வழங்கிக் கொண்டே இருக்கின்றீர்கள். நீங்கள் உங்களுடைய தந்தையுடன் சேர்ந்து கொண்டாடுவதால், அகில உலகே உங்களுடைய நினைவுச்சின்னத்தைக் கொண்டாடுகிறது. தீபாவளியின் உண்மைப் பொருள் புரிந்ததா? (சதா பிரதானமாக) மாறுவதென்பதே கொண்டாடுவது என்று பொருள்.

தீபாவளியைக் கொண்டாட வந்திருக்கிறீர்கள். பாப்தாதாவும், தமது தீப மாலையைக் கண்டு, சந்தோஷம் அடைகிறார். சந்திப்பே ஒரு திருவிழா அல்லவா? அனைவரும் சந்தோஷம் நிறைந்த வீட்டிற்கு (மதுவனம்) வந்து சேர்ந்து விட்டீர்கள் அல்லவா. மதுவனம் என்றால் சந்தோஷம் நிறைந்த வீடு என்று பொருள். மனதில் சொல்லிலும் எதிலும் குழப்பமே இல்லை. சந்தோஷம் இருப்பதால், ஒவ்வொரு சந்தோஷம் காணப்படுகிறது. ஏன், எதற்காக என்பது குழப்பத்தின் அடையாளம். ஆஹா, ஆஹா என்பது ஆனந்தத்தின் அடையாளம். ஏன், எதற்காக என்று நீங்கள் இப்பொழுது கேட்பதில்லை அல்லவா? தசராவைக் கொண்டாடிவிட்டு இங்கு வந்திருக்கிறீர்கள் அல்லவா? இப்பொழுது தீபாவளியைக் கொண்டாட வந்திருக்கிறீர்கள். தசராவுக்கு பத்து விகாரங்களை வதம் செய்யுமுன் தீபாவளி வருவதில்லை. தசராவை முடித்து விட்டு தீபாவளியைக் கொண்டாட வந்திருக்கிறீர்கள். வெற்றி பெற்றுவிட்டீர்கள் அல்லவா ? அச்சா.

குழந்தைகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது மேலும் பெருகி வரும். எண்ணிக்கை அதிகமாவதற்கு ஏற்ப சில புதிய விதிமுறைகளையும் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அவ்யக்த நிலை அடைந்து 17-வருடங்கள் அதாவது 17-வது அத்தியாயம் முடிந்து விட்டது. எஞ்சியிருப்பது என்ன? அவ்யக்தமான பின்பும், குழந்தைகளின் மீதுள்ள அன்பின் காரணமாக, பாப்தாதா வியக்த உருவில், ஒரு தாற்காலிக ரதத்தில் 17-வருடங்களாக சவாரி செய்து வந்தார். 17-வருடங்கள் என்பது குறைந்த காலம் அல்ல.

காலத்திற்கும், உடலுக்கும் ஒரு வரம்பு உள்ளது. பெயர் என்னவோ அவ்யக்த்த ஸ்திதி. இருப்பினும், சந்திப்பதற்காக வியக்த உருவம் தேவைப்படுகிறது. பாப்தாதா ஏன் இவ்வாறு இன்னும் வந்து கொண்டிருக்கிறார்? புதிய குழந்தைகளின் குறைகளை அகற்றுவதற்காக பாப்தாதா இன்னும் வந்து கொண்டிருக்கிறார்.

18-ந்தேதிக்குப்பிறகு, 18-வது வருடம் துவங்கும். 18-வது அத்தியாயம் என்ன? நீங்கள் அனைவரும் தயாராக இருக்கிறீர்கள் அல்லவா, சேவையை முடித்து விட்டீர்களா? இப்பொழுது பாபாவுக்கு சமமான அவ்யக்த சொரூபமாகி விடுங்கள். அவ்யக்த்த சொரூபம் சேவைக்காகவே உள்ளது. பாப்தாதா இப்பொழுதும் அவ்யக்த உருவில் இருந்தாலும். வியக்த உருவில் வந்து கொண்டிருக்கின்றார். நீங்கள் இப்பொழுது அவ்யக்த சொருபதாரியாகி, நஷ்டோமோகா ஸ்மிருதி ஸ்வரூபத்தில் இருங்கள். அதாவது நினைவு சொரூபம். இப்பொழுது இத்தகைய சேவை பாக்கியுள்ளது. பாதயாத்திரை என்கிற சேவையையும் செய்து விட்டீர்கள் ஆனால் இப்பொழுது ஆன்மீக யாத்திரையின் அனுபவத்தை அடையச் செய்யவேண்டும். இப்பொழுது இந்த யாத்திரையே தேவைப்படுகிறது. இதனால் இப்பொழுது பாப்தாதாவும் அவ்யக்த்த ஸ்திதிக்கு ஏற்ப குழந்தைகளை சந்திக்கும் விழாவைக் கொண்டாடி வருகின்றார். குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதால், சில விதிமுறைகளை மாற்ற வேண்டியுள்ளது. குழந்தைகளின் உரிமை முரளி. முரளியைக் கேட்பதன் வாயிலாக சந்திக்கவும், அவ்யக்த திருஷ்டியின் மூலம் சந்திக்கவும், குழந்தைகளுக்கு உரிமையுள்ளது. வாணியின் மூலமாகவும், திருஷ்டியின் மூலமாகவும், இரட்டை சந்திப்பின் வரதானத்தை அனுபவம் செய்ய முடியும். எனவே, அவ்யக்த ஸ்திதியிலிருந்து திருஷ்டியின் மூலம் வரதானங்கள் அனுபவம் செய்யுங்கள். இல்லையெனில் கேட்பதில் மட்டும் அதிக கவனம் செலுத்தும்போது, திருஷ்டியின் மகத்துவத்தை குறைந்த அளவிலேயே அனுபவம் செய்ய இயலும்.

திருஷ்டியின் மகத்துவம், முரளியின் மாயம் என்கிற இரு பாடல்கள் உள்ளன. ஆகவே இப்பொழுது திருஷ்டியின் மூலம், வரதானங்களை அடைவதற்கான அதிகாரிகளாக மாறுங்கள். எந்த அளவு நீங்கள் அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருக்க இயலுகிறதோ, அந்த அளவே

அவ்யக்த திருஷ்டியின் மொழியை உணர முடியும். இந்த திருஷ்டி என்கிற வரதானம், சதா காலத்திற்கான, பரிவர்த்தனை செய்வதற்கான வரதானம் ஆகும். வாணி என்கிற வரதானம், சிலநேரங்களில் நினைவில் இருக்கும், சில நேரங்களில் இருக்காது; ஆனால் அவ்யக்த சொரூபம் ஆகி, அவ்யக்த திருஷ்டியின் மூலம் பிராப்தி ஆகும் வரதானம், உங்களை சதா ஸ்மிருதி சொரூபமாகவும், வெற்றி சொரூபமாகவும் மாற்றுகிறது. இப்பொழுது திருஷ்டியின் மூலமாக திருஷ்டியின் மொழியை அறிந்து கொள்ளுங்கள், யக்ஞத்தின் துவக்கத்தில் என்ன நடந்தது? திருஷ்டி என்கிற மொழியின் மூலம், திருஷ்டி என்கிற அற்புத சக்தியின் மூலம், ஸ்தாபனை என்கிற காரியம் துவங்கியது. 18-வது அத்தியாயத்தில் எத்தகைய சேவை ஏற்படும் என்பதை நான் பிறகு கூறுகின்றேன்.

குழந்தைகள் தான் வீட்டிற்கு அலங்காரம் ஆகின்றனர். மதுவனத்தின் அலங்காரம் மதுவனத்தை வந்து அடைந்து விட்டன. நீங்கள் கொண்டாடுங்கள், பாடுங்கள், ஆடுங்கள் ஆனால் நீங்கள் எதைச் செய்தாலும், அவை யாவும் அவ்யக்த சொரூபத்தில்தான் நடைபெற வேண்டும். மேலும் அன்புடனும், பற்றற்றும் உள்ள உருவில் நடைபெற வேண்டும். பற்றற்ற தன்மையில் உலகில் எதுவும் நடைபெறுவதில்லை. விளையாடுங்கள். உண்ணுங்கள், சிரியுங்கள், நடனமாடுங்கள் ஆனால் அன்புடனும், பற்றற்றும் இருங்கள். உள்நாடு மற்றும் வெளிநாடு ஆக அனைத்து சேவைக் கேந்திரங்களைச் சார்ந்த தமது அனைத்து குழந்தைகளையும், தமது கழுத்திலுள்ள வெற்றி மாலை, தீப மாலையையும் கண்டு, பாப்தாதா மிகவும் சந்தோஷம் அடைகிறார். மேலும் வெற்றியுடன் பிரகாசிக்கின்ற ஒவ்வொரு தீபத்திற்கும், சங்கமயுக, புதிய உலக (சத்யுக) பிறவிகளுக்குமான வாழ்த்துக்களை பாப்தாதா தெரிவிக்கின்றார். சதா அருகாமையில் இருப்பவர்களுக்கு, சதா சம்பன்னமாக இருப்பவர்களுக்கு சதா சம்பூர்ணமாக உள்ளவர்களுக்கு, இந்த மூன்று சிறப்புகளிலும் நிறைந்துள்ள குழந்தைகளுக்கு, திரிமூர்த்தி சம்பந்தம் மூலம், சதா காலத்திற்கான வாழ்த்துக்கள் நிரந்தரமாக இருக்கும்.

பாப்தாதா, செல்வம் நிறைந்துள்ள குழந்தைகளை மேலும் சீரும் சிறப்போடும் இருங்கள் என வாழ்த்துகின்றார். குழந்தைகள் இனிமையாக இருக்கின்றார்கள். மற்றவரையும் இனியவர்களாக

மாற்றக்கூடியவர்கள். இவர்களுடைய இனிய பேச்சு, இனிய பாவனையின் மூலம் எல்லோருடைய மனதையும், வாயையும் இனிக்கச் செய்கின்ற குழந்தைகள் இவர்கள் என்கிற பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றார்.

அவ்வாறு சதா இனிமையாக இருங்கள். பாப்தாதா, குழந்தைகளின் பிரகாசிக்கின்ற ஜோதியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். வெகு தூரத்தில் இருந்தாலும், பல குழந்தைகளின் பிரகாசிக்கின்ற ஜோதி, இணைந்த உருவில், பாப்தாதாவின் முன்னிலையில் இப்பொழுதும் காணப்படுகின்றது. அனைத்து குழந்தைகளின் வாழ்த்துக்கள் என்கிற சங்கல்பம், பேச்சு. கடிதம், செயல் ஆகிய யாவும் பாப்தாதாவின் முன்னிலையில் உள்ளன. உள்நாட்டு, அயல்நாட்டு குழந்தைகள் ஆகிய அனைவருக்கும், அவர்களுடைய தீபாவளி வாழ்த்துக்களுக்குப் பதிலாக பல கோடி மடங்கு வாழ்த்துக்களை பாப்தாதா அளிக்கின்றார், ஒவ்வொருவருக்கும் பதிலளிக்காவிட்டாலும், எல்லோருடைய பெயர்களும் பாபாவின் முன்னிலையில் உள்ளன. ஒவ்வொரு குழந்தையின் பெயரை குறிப்பிடாவிட்டாலும் பாப்தாதா கழுத்தில் மாலையாக விழுந்த வண்ணம் உள்ளது. பல வகைப்பட்ட வாழ்த்து மடல்களும், சூட்சும வதனத்தில் உள்ள சுவற்றில் பொருத்தப்பட்டுள்ளன; ஆனால் குழந்தைகளின் இதய ஒலி, இதயத்தைக் கவரும் பாபாவை எட்டி விட்டது. தூர தேசத்தில் இருந்தாலும், பாபாவுக்கு சங்கல்பத்தின் மூலம் மிக அருகாமையில் உள்ள குழந்தைகளுக்கும், ஸ்தூலத்திலும் முன்னிலையில் உள்ள குழந்தைகளுக்கும், அன்பு நிறைந்த சம்பூர்ணம் நிறைந்த, அன்பு, நினைவுகள், வணக்கம் உரித்தாகுக!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.11.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கல்பம், சம்ஸ்காரம், சம்பந்தம், பேச்சு மற்றும் கர்மத்தில் புதுமையைக் கொண்டு வாருங்கள்!

இன்று புது உலகத்தின் புதிய படைப்பின் படைப்பாளர் தந்தை தன்னுடைய புதிய உலகத்தின் அதிகாரி குழந்தைகளை அதாவது புதிய படைப்பைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். புதிய படைப்பு சதா அன்பிற்குரியதாக இருக்கும். உலகத்தின் கணக்குப்படி பழைய உலகத்தில் புதிய வருடத்தைக் கொண்டாடுகின்றனர் ஆனால், நீங்கள் புதிய படைப்பினுடைய, புதிய யுகத்தினுடைய, புதிய வாழ்க்கையினுடைய அனுபவத்தை செய்து கொண்டிருக்கிறீர்கள். அனைத்தும் புதியதாகி விட்டது. பழையது முடிந்து புதிய பிறப்பு, புதிய வாழ்க்கை ஆரம்பமாகி விட்டது. பிறப்பு புதியதாக உள்ளது எனில், பிறப்பின் மூலம் வாழ்க்கை தானாகவே மாறிவிடுகிறது. வாழ்க்கை மாறுவது என்றால் சங்கல்பம், சம்ஸ்காரம், சம்பந்தம் ஆகிய அனைத்தும் மாறிவிட்டது அதாவது புதியதாக ஆகி விட்டது. தர்மமும் புதியது, கர்மமும் புதியது. அவர்கள் வருடத்தை மட்டும் புதியது என்று கூறுகின்றனர் ஆனால், உங்கள் அனைவருக்கும் அனைத்துமே புதியதாகி விட்டது. இன்றைய தினம் அமிர்தவேளையில் இருந்து புதிய வருடத்திற்கான வாழ்த்துக்கள் கொடுத்தீர்கள், ஆனால், வாயிலிருந்து மட்டும் வாழ்த்துக்கள் கூறினீர்களா அல்லது மனதிலிருந்து கூறினீர்களா? புதுமை யான எண்ணம் கொண்டு வந்தீர்களா? இந்த மூன்று விசேஷமான விசயங்களினுடைய புதுமைக் கான சங்கல்பம் செய்தீர்களா? சங்கல்பம், சம்ஸ்காரம், சம்பந்தம். சம்ஸ்காரம் மற்றும் சங்கல்பம் புதியதாக அதாவது சிரேஷ்டமானதாக ஆகி விட்டது. புதிய பிறப்பு, புதிய வாழ்க்கை கிடைத்து விட்ட போதிலும் இப்பொழுதும் கூட பழைய பிறவி மற்றும் வாழ்க்கையின் சங்கல்பம், சம்ஸ்காரம், சம்பந்தம் இல்லை தானே? ஒருவேளை, இந்த மூன்று விசயங்களில் ஏதாவது ஒரு விசயத்தில் அம்ச மாத்திரத்தில்

பழையது தங்கி இருக்கிறது எனில், இந்த அம்சம் புது வாழ்க்கையினுடைய, புதிய யுகத்தினுடைய, புதிய சம்பந்தத்தினுடைய, புதிய சம்ஸ்காரத்தினுடைய சுகம் மற்றும் சர்வ பிராப்திகளிலிருந்து வஞ்சிக்கச் செய்து விடும். சில குழந்தைகள் பாப்தாதாவிற்கு முன்னால் தன்னுடைய மனதின் விசயங்களை உரையாடலாகக் கூறுகின்றனர். வெளியில் சொல்வதில்லை. எவ்வாறு இருக்கிறீர்கள்? என்று வெளியில் எவராவது கேட்டால், அனைவரும், மிகவும் நன்றாக இருக்கிறோம் என்றே கூறுகிறார்கள். ஏனெனில், வெளியில் உள்ள மனிதர்கள் உள்ளத்தில் உள்ளதை என்ன அறிவார்கள் என்று நினைக்கின்றனர் ஆனால், தந்தையிடம் செய்யும் உரையாடலில் மறைக்க முடியாது. பிராமணர் ஆகி விட்டோம், சூத்திரத் தன்மையிலிருந்து ஒதுங்கி விட்டோம், ஆனால், பிராமண வாழ்க்கையின் மகான் தன்மையான, விசேஷத் தன்மையான சர்வ சிரேஷ்ட பிராப்திகளுடைய மற்றும் அதீந்திரிய சுகத்தினுடைய, ஃபரிஷ்தா நிலையின் டபுள் லைட் வாழ்க்கை யினுடைய, விசேஷ அனுபவம் எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு இருப்பதில்லை என்பதை தன்னுடைய மனதின் விசயங்களில் அவசியம் கூறுகின்றனர். எந்த வர்ணனை இந்த சிரேஷ்ட யுகத்தின் சிரேஷ்ட வாழ்க்கையினுடையதோ, அத்தகைய அனுபவம், அத்தகைய ஸ்திதி மிகவும் குறைவான சமயமே உள்ளது. இதற்கான காரணம் என்ன? பிராமணர் ஆன பிறகும் கூட பிராமண வாழ்வின் அதிகாரத்தினுடைய அனுபவம் ஏற்படுவதில்லை, ஏன்? இருப்பதோ இராஜாவின் குழந்தையாக, ஆனால், யாசிக்கும் சம்ஸ்காரம் இன்னும் இருக்கிறது என்றால் அவர்களை என்னவென்று கூறுவது? இராஜகுமாரர் என்று கூற முடியுமா? இங்கும் கூட புதிய பிறவி, புதிய பிராமண வாழ்க்கை, ஆனாலும் கூட பழைய சங்கல்பம் அல்லது சம்ஸ்காரம் வெளிப்படுகிறது அல்லது கர்மத்தில் வெளிப்படுகிறது எனில், அவர்களை பிரம்மாகுமாரர் என்று கூற முடியுமா? அல்லது அரை சூத்திரக் குமாரர் மற்றும் அரை பிரம்மா குமாரரா? பாதி வெள்ளை பாதி கருப்பு என்று நாடகத்தில் ஒரு விளையாட்டைக் காண்பிக்கிறீர்கள் அல்லவா? சங்கமயுகம் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. சங்கமயுகம் என்றால் புதிய யுகம். புதிய யுகம் எனில் அனைத்தும் புதியது ஆகும்.

புதிய வருடத்திற்கான வாழ்த்துக்கள் என்ற அனைவரின் வார்த்தைகளையும் பாப்தாதா இன்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

வாழ்த்து அட்டைகளையும் அனுப்புகின்றனர், கடிதமும் எழுதுகின்றனர் ஆனால், சொல்லும் செயலும் ஒன்றாக உள்ளதா? வாழ்த்துக்கள் கொடுத்தீர்கள், மிகவும் நல்லது. பாப்தாதாவும் வாழ்த்துக்கள் கொடுக்கின்றார்கள். வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளில், அழிவற்ற வார்த்தைகளில் அவினாசி பவ (அழிவற்றதாக ஆகட்டும்) என்ற வரதானம் உள்ளது என்று பாப்தாதா கூறுகின்றார்கள். உங்கள் வாயில் குலாப் (சர்க்கரை) போட வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள் அல்லவா? வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளில் அழிவற்ற வரதானம் இருக்க வேண்டும் என்று பாப்தாதா கூறுகின்றார்கள். இன்றிலிருந்து புதியது என்ற இந்த ஒரு வார்த்தையை மட்டும் நினைவு வைக்க வேண்டும். என்னவெல்லாம் சங்கல்பம் செய்கிறீர்களோ, வார்த்தை பேசுகிறீர்களோ, கர்மம் செய்கிறீர்களோ, அப்பொழுது அது புதியதாக உள்ளதா என்பதை சோதனை செய்யுங்கள். நினைவில் வைத்திடுங்கள். இந்தக் கணக்கு நோட்டு, பதிவேட்டை இன்றிலிருந்து ஆரம்பம் செய்யுங்கள். தீபாவளியன்று கணக்கு நோட்டில் என்ன செய்கின்றனர்? சுவஸ்திக் வரைகின்றனர் அல்லவா? கணேசர், பிள்ளையார் சுழி போடுவார்கள். மேலும், நான்கு யுகங்களிலும் அவசியம் புள்ளி வைக்கின்றனர். ஏன் வைக்கின்றனர்? எந்தவொரு காரியத்தைத் துவங்கும்பொழுதும் சுவஸ்திக் அல்லது கணேசாய நமஹ என்று அவசியம் கூறுகின்றனர். இது யாருடைய ஞாபகார்த்தம்? சுவஸ்திக்கையும் கணேசர் என்று ஏன் கூறு கின்றனர்? சுவஸ்திக் என்பது சுய ஸ்திதியில் நிலைத்திருப்பது மற்றும் முழு படைப்பினுடைய ஞானத்தைப் பற்றி அறிவிப்பது ஆகும். கணேசர் என்றால் ஞானம் நிறைந்தவர் என்று அர்த்தம். சுவஸ்திக்கின் ஒரு படத்தில் முழுமையான ஞானம் அடங்கியுள்ளது. ஞானம் நிறைந்த நினைவின் ஞாபகார்த்தமாக கணேசர் மற்றும் சுவஸ்திக் சின்னத்தைக் காண்பிக்கின்றனர். இதன் அர்த்தம் என்ன? எந்தவொரு காரியத்தின் வெற்றிக்கான ஆதாரம் ஞானம் நிறைந்த நிலை அதாவது புத்திசாலியாக, ஞான சொரூபமாக ஆவதாகும். ஞான சொரூபமானவராக புத்திசாலியாக ஆகி விட்டீர்கள் எனில், ஒவ்வொரு கர்மமும் சிரேஷ்டமானதாக மற்றும் வெற்றிகரமானதாக இருக்கும் அல்லவா? அவர்கள் நோட்டுத் தாளில் மட்டும் ஞாபகார்த்தத்தின் அடையாளம் போடுகின்றார்கள் ஆனால், பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் சுயம் ஞானம் நிறைந்தவர் ஆகி, ஒவ்வொரு சங்கல்பத்தையும் செய்தீர்கள் என்றால், சங்கல்பம் மற்றும் வெற்றி ஆகிய

இரண்டையும் இணைந்தே அனுபவம் செய்வீர்கள். எனவே, இன்றிலிருந்து இந்த திட சங்கல்பத்தின் வண்ணம் மூலம் தனது வாழ்க்கையின் நோட்டில் ஒவ்வொரு சங்கல்பம், சம்ஸ்காரத்தைப் புதியதாக எழுத வேண்டும். புதியதாக இருக்கும், என்பது கூட கூடாது. இருந்துதான் ஆக வேண்டும். சுய ஸ்திதியில் நிலைத்திருந்து இந்த பிள்ளையார் சுழி போடுங்கள் அதாவது ஆரம்பம் செய்யுங்கள். சுயம் ஸ்ரீ கணேசர் ஆகி, ஆரம்பம் செய்யுங்கள். இது நடந்து கொண்டுதான் இருக்கிறது என்று நினைக் காதீர்கள். அனேக முறை சங்கல்பம் செய்கிறீர்கள், ஆனால், சங்கல்பம் உறுதி யானதாக இருக்க வேண்டும். எவ்வாறு அஸ்திவாரத்தில் உறுதியான சிமெண்ட் போன்றவற்றைப் போட்டு உறுதியாக்கப்படுகிறது அல்லவா? ஒருவேளை, மணலால் அஸ்திவாரம் போட்டால் எவ்வளவு சமயம் தாங்கும்? எந்த சமயம் சங்கல்பம் செய்கிறீர்களோ, அந்த சமயம், செய்து பார்க்கலாம், எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்யலாம், பிறகும் இவ்வாறே செய்கின்றனர் என்று கூறுகிறீர்கள். இந்த மணலைக் கலந்து விடுகிறீர்கள், ஆகையினால், அஸ்திவாரம் உறுதியாக ஆவதில்லை. பிறரைப் பார்ப்பது சுலபமாக உள்ளது. தன்னை பார்ப்பதற்கு உழைக்க வேண்டியுள்ளது. ஒருவேளை, பிறரைப் பார்க்க விரும்புகிறீர்கள், பழக்கத்தினால் நிர்பந்திக்கப்படுகிறீர்கள், எனில் பாப்தாதாவைப் பாருங்கள். அவரும் கூட அடுத்தவர் தானே!. ஆகையினால், பாப்தாதா தீபாவளியின் கணக்கைப் பார்த்தார்கள். கணக்கில் பிராமணர் ஆனபிறகும் பிராமண வாழ்க்கையின் அனுபவம் ஏற்படாமல் இருப்பது, எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு இல்லாமல் இருப்பது என்பதற்கான விசேஷ காரணத்தைப் பார்த்தார்கள். இதன் விசேஷ காரணம் என்னவென்றால் பரதிருஷ்டி, பரசிந்தனை, பிறவழி (தீயவற்றில் செல்வது) ஆகும். பரஸ்திதிகளைப் (சூழ்நிலைகளை) பற்றிய வர்ணனை மற்றும் சிந்தனையில் அதிகமாக இருக்கிறீர்கள். ஆகவே, சுயதரிசன சக்கரதாரி ஆகுங்கள். சுயத்தின் மூலம் பிற எல்லாம் அழிந்து போய்விடும். எவ்வாறு இன்று புது வருடத்தின் வாழ்த்துக் களை அனைவரும் ஒன்றிணைந்து கொடுத்தீர்கள், அவ்வாறே ஒவ்வொரு தினமும் புதிய தினம், புதிய வாழ்க்கை, புதிய சங்கல்பம், புதிய சம்ஸ்காரம், இவற்றை தானாகவே அனுபவம் செய்வீர்கள். மேலும், மனதிலிருந்து ஒவ்வொரு நொடியும் தந்தைக்கும், பிராமண குடும்பத்திற்கும் வாழ்த்துக் களின் சுபமான ஊக்கம் தாமாகவே உருவாகிக் கொண்டே இருக்கும். அனைவரது

பார்வையில் வாழ்த்துக்கள், பாராட்டுக்களின் அலை வெளிப்படும். எனவே, இவ்வாறு இன்றைய வாழ்த்துக்கள் என்ற வார்த்தையை அழிவற்றதாக ஆக்குங்கள். புரிந்ததா? உலகத்தினர் வரவு செலவு கணக்கு எழுதுகின்றனர். தந்தை கணக்கு பார்த்தார். அனைத்தும் கிடைத்த பிறகும் ஏன் அரை குறையாகத் பெறுகிறார்கள் என்று பாப்தாதாவிற்குக் குழந்தைகள் மீது கருணை வருகிறது. பெயர் புதிய பிரம்மாகுமார் அல்லது குமாரி மற்றும் காரியத்தில் ஏன் கலப்படம் உள்ளது? வள்ளலின் குழந்தைகள், விதாதாவின் (விதியை உருவாக்குபவர்) குழந்தைகள், வரதாதாவின் குழந்தைகள் ஆவீர்கள். எனவே, புது வருடத்தில் எதை நினைவில் வைப்பீர்கள்? அனைத்தும் புதியதாகச் செய்ய வேண்டும் அதாவது பிராமண வாழ்க்கையினுடைய நியமங்கள் அனைத்தையும் புதியதாகச் செய்ய வேண்டும். புதியது என்றால் கலப்படம் செய்யாதது என்று அர்த்தம். மிகவும் சாமர்த்தியம் ஆனவர் களாகவும் ஆகி விட்டீர்கள் அல்லவா? தந்தைக்கும் படிப்பிக் கின்றனர். பாபா புதியதைச் செய்ய வேண்டும் என்று கூறினார் அல்லவா, எனவே, நாங்கள் இந்தப் புதியதைச் செய்து கொண்டு இருக்கிறோம் என்று சில குழந்தைகள் கூறுகின்றனர் ஆனால், பிராமண வாழ்க்கையின் நியமத்தின் அனுசாரமாக அந்தப் புதியது இருக்க வேண்டும். நியமம் என்ற கோட்டினை பிராமண வாழ்வு, பிராமண பிறப்பிலிருந்தே பாப்தாதா கொடுத்திருக்கின்றார்கள். புதிய வருடத்தை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்பது புரிந்ததா. 18 அத்தியாயம் ஆரம்பம் ஆகிக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது அல்லவா.

பொன்விழாவிற்கு முன்பே விஷ்வ வித்யாலயத்தின் பொன்விழா கொண்டாடுகிறீர்கள். 50-வருடங்கள் ஆனவர்களுக்கு மட்டுமான பொன்விழா என்று நினைக்க வேண்டாம் ஆனால், இது ஈஸ்வரிய காரியத்தின் பொன்விழா ஆகும். ஸ்தாபனை காரியத்தில் யாரெல்லாம் சகயோகிகளாக இருக்கிறீர்களோ, அது இரண்டு வருடமானாலும் சரி, 50-வருடமானாலும் சரி, ஆனால், இரண்டு வருடமானவர்கள் கூட தன்னை பிரம்மா குமாரர் என்று கூறுகின்றனர் அல்லவா. இல்லை வேறு ஏதாவது பெயர் கூறுகின்றனரா? இது பிரம்மா மூலம் பிராமணர்களின் படைப்பினுடைய பொன் விழா ஆகும். இதில் அனைத்து பிரம்மாகுமாரர்களும் குமாரிகளும் உள்ளனர். பொன்விழா வரை தனக்குள் பொன்னுலகம் அதாவது சதோபிரதான சங்கல்பம்,

சம்ஸ்காரத்தை வெளிப்படுத்த வேண்டும். அத்தகைய பொன்விழாவைக் கொண்டாட வேண்டும். இதுவோ நிமித்தமாத்திரமாக பழக்க வழக்கம் என்ற முறையில் கொண்டாடுகிறீர்கள் ஆனால், உண்மையில் பொன்விழாவானது பொன்னுலகத்தினர் ஆவதற்கான விழாவாகும். காரியம் வெற்றி அடைந்தது எனில், காரியத்திற் காக நிமித்தமான ஆத்மாக்கள் வெற்றி சொரூபம் ஆகியுள்ளனர் என்று அர்த்தம். இப்பொழுதும் சமயம் உள்ளது. இந்த 3 மாதங்களுக்குள் உலகத்தின் மேடைக்கு முன்னர் தனிப்பட்ட பொன்விழா வைக் கொண்டாடிக் காண்பியுங்கள். உலகத்தினர் மரியாதை கொடுப்பார்கள். மேலும், இங்கு சமான் நிலையின் பிரத்யட்சம் செய்ய வேண்டும். மரியாதை கொடுப்பதற்காக என்ன வேண்டு மானாலும் செய்கிறீர்கள், இதுவோ நிமித்தமாத்திரம் ஆகும். உண்மையை உலகத்தினருக்கு முன்பு காண்பிக்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்றே, ஒருவருடையவர்களே, ஏக்ரஸ் ஸ்திதி உடையவர்களே. ஒருவருடைய அன்பில் மூழ்கியிருந்து ஒருவருடைய பெயரை பிரத்யட்சம் செய்பவர்கள். இந்த தனிப்பட்ட மற்றும் அன்பான பொன்னான ஸ்திதியின் கொடியைப் பறக்க விடுங்கள். பொன்னுலகத்தின் காட்சி உங்களுடைய கண்கள் மூலம், பேச்சு மற்றும் கர்மத்தின் மூலம் தெளிவாகத் தெரிய வேண்டும் அத்தகைய பொன்விழாவைக் கொண்டாட வேண்டும். நல்லது.

அத்தகைய சதா அழிவற்ற வாழ்த்துக்களுக்குப் பாத்திரமான சிரேஷ்டமான குழந்தை களுக்குத் தன்னுடைய ஒவ்வொரு எண்ணம் மற்றும் கர்மத்தின் மூலம் புதிய உலகத்தினுடைய காட்சியைக் காண்பிக்கக்கூடிய குழந்தைகளுக்கு, தன்னுடைய பொன்னுலக ஸ்திதி மூலம் பொன்னுலகம் வந்தே வந்து விட்டது என்ற சுபமான ஆசை தீபத்தை விஷ்வத்தின் ஆத்மாக்களுக்குள் ஏற்றக்கூடிய, சதா ஒளிவீசும் நட்சத்திரங்களுக்கு, வெற்றியின் தீபங்களுக்கு, திடசங்கல்பத்தின் மூலம் புதிய வாழ்க்கையின் காட்சியைக் காண்பிக்கக்கூடிய, தரிசன மூர்த்தி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள்! அழிவற்ற வாழ்த்துக்கள்! அழிவற்ற வரதானங்களுடன் கூடிய நமஸ்காரம்.

**பாத யாத்திரீகர்கள் மற்றும் சைக்கிள் யாத்திரீகர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** யாத்திரை மூலம் அனைவரும் சேவை செய்து விட்டீர்கள். என்ன சேவை செய்தீர்களோ, அந்த சேவையின் பிரத்யட்ச

பலனையும் அனுபவம் செய்து விட்டீர்கள். சேவையினுடைய விசேஷமான குஷியை அனுபவம் செய்தீர்கள் அல்லவா? பாதயாத்திரை செய்தீர்கள், அனைவரும் உங்களை பாத யாத்திரீகர்களாகப் பார்த்தார்கள். இப்பொழுது ஆன்மிக யாத்திரீகராகப் பார்க்க வேண்டும். சேவையின் ரூபத்தில் பார்த்தார்கள், ஆனால், இப்பொழுது தனிப்பட்ட யாத்திரை செய்விக்கக்கூடிய அலௌகீக யாத்திரீகர்கள், இந்த அனுபவம் ஏற்பட வேண்டும். எவ்வாறு இந்த சேவையில் ஈடுபாட்டினால் வெற்றியை அடைந்தீர்கள் அல்லவா. அவ்வாறே இப்பொழுது ஆன்மிக யாத்திரை யில் வெற்றி அடைய வேண்டும். உழைக்கின்றீர்கள், மிகவும் நன்றாக சேவை செய்கிறீர்கள், இவர்களது வாழ்க்கை நன்றாக உள்ளது என்று மிகவும் நன்றாகக் கூறுகின்றனர். இது நடந்து விட்டது ஆனால், இப்பொழுது வாழ்க்கையை உருவாக்க வேண்டும். இந்த வாழ்க்கையைத் தவிர வேறு வாழ்க்கையே இல்லை என்ற அனுபவம் செய்ய வேண்டும். எனவே, ஆன்மிக யாத்திரையின் இலட்சியம் வைத்து ஆன்மிக யாத்திரையின் அனுபவம் செய்ய வைத்திடுங்கள். என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா? நீங்கள் நடக்கும்பொழுதும், போகும் பொழுதும், வரும்பொழுதும் இவர்கள் சாதாரண மானவர்கள் அல்ல, இவர்கள் ஆன்மிக யாத்திரீகர்கள் என்று அனைவரும் உங்களைப் பார்க்க வேண்டும் எனில் என்ன செய்ய வேண்டும்? தானும் யாத்திரையில் இருங்கள் மற்றும் பிறருக்கும் யாத்திரையின் அனுபவத்தை செய்வியுங்கள். பாதயாத்திரையின் அனுபவத்தை செய்வித்து விட்டீர்கள், இப்பொழுது ஃபரிஷ்தா நிலையின் அனுபவத்தை செய்வியுங்கள். இவர்கள் இப்பூமியைச் சேர்ந்தவர்கள் அல்ல, இவர்கள் ஃபரிஷ்தாக்கள், இவர்களுடைய கால்கள் இந்த பூமியில் இருப்பதில்லை என்ற அனுபவம் செய்ய வேண்டும். பறக்கும் கலை மூலமாக பிறரையும் பறக்க வைக்க வேண்டும். இப்பொழுது பறக்க வைப்பதற்கான சமயம் ஆகும். நடக்க வைப்பதற் கான சமயம் அல்ல. நடப்பதற்கு சமயம் ஆகிறது மற்றும் பறப்பதற்கு சமயம் ஆவதில்லை. தனது பறக்கும் கலை மூலம் பிறரையும் பறக்க வைத்திடுங்கள். புரிந்ததா? இவ்வாறு திருஷ்டி மூலம் நினைவின் மூலம் அனைவரையும் சம்பன்னம் ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். எங்களுக்குக் கொஞ்சம் கிடைத்துள்ளது, நிறைந்து விட்டோம், காலியாக இருந்தோம் ஆனால், நிறைந்து விட்டோம் என்று அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். எங்கு பிராப்தி உள்ளதோ, அங்கு ஒரு விநாடியில் பலியாகி விடுகின்றனர். உங்களுக்கு பிராப்தி கிடைத்ததனாலேயே

அனைத்தையும் விட்டுவிட்டீர்கள் இல்லையா? நன்றாக இருந்தது, அனுபவம் செய்தீர்கள், ஆகையினால், விட்டுவிட்டீர்கள் அல்லவா. காரணம் இல்லாமல் விடவில்லை. இவ்வாறு பிறருக்கும் பிராப்தியின் அனுபவத்தை செய்வித்திடுங்கள். புரிந்ததா? மற்றபடி நன்றாக உள்ளது. எந்த சேவையில் நாட்களைக் கழித்தீர் களோ, அதை தனக்காகவும், பிறருக்காகவும் சிரேஷ்டமானதாக ஆக்கி விட்டீர்கள். ஊக்கம் உற்சாகம் நன்றாக இருந்தது. ரிசல்ட் சரியாக இருந்தது அல்லவா. ஆன்மிக யாத்திரை சதா இருந்தது என்றால், வெற்றியும் சதா இருக்கும். பாதயாத்திரை முடிந்து விட்டது, சேவையும் முடிந்து விட்டது என்பது கிடையாது. பிறகு, எப்படி இருந்தீர்களோ, அப்படியே ஆகி விடுகிறீர்கள் என்பது கூடாது. சதா சேவையின் ஷேத்திரத்தில் சேவை இல்லாமல் பிராமணரால் இருக்க முடியாது. சேவையினுடைய பாகம் மட்டும் மாறியுள்ளது. சேவையோ இறுதி வரை செய்ய வேண்டும். அத்தகைய சேவாதாரி ஆவீர்கள் அல்லவா? இல்லை, மூன்று மாதங்கள், இரண்டு மாதங்கள் சேவை செய்யக்கூடிய சேவாதாரிகளா? சதா கால சேவாதாரியாக இருக்க வேண்டும், சதா ஊக்கம் உற்சாகம் இருக்க வேண்டும். நல்லது. நாடகத்தில் சேவையின் நடிப்பு என்ன கிடைத்துள்ளதோ, அதில் விசேஷத்தன்மை நிறைந்துள்ளது. தைரியத்தினால் உதவியின் அனுபவம் செய்தீர்கள். நல்லது. தன் மூலம் தந்தையைப் பிரத்யட்சம் செய்வதற்கான சிரேஷ்ட சங்கல்பம் இருந்தது. ஏனெனில், எப்பொழுது தந்தையைப் பிரத்யட்சம் செய்வீர்களோ, அப்பொழுது இந்தப் பழைய உலகத்தின் சமாப்தி ஏற்படும், தனது இராஜ்யம் வரும். தந்தையைப் பிரத்யட்சம் செய்வது என்றால் தனது இராஜ்யத்தைக் கொண்டு வருவது என்று அர்த்தம். தனது இராஜ்யத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற ஊக்க உற்சாகம் சதா உள்ளது அல்லவா? எவ்வாறு விசேஷமான நிகழ்ச்சிகளில் ஊக்க உற்சாகம் இருந்ததோ, அவ்வாறே சதா இந்த சங்கல்பத்தினுடைய ஊக்க உற்சாகம் இருக்க வேண்டும். புரிந்ததா?

**பார்ட்டிகளுடன்**: நிறைய கேட்டுவிட்டீர்கள். இப்பொழுது கேட்ட அந்த விசயங்களை தனக்குள் நிறைக்க வேண்டும். ஏனெனில், எவ்வளவு நிறைப்பீர்களோ, அவ்வளவு தந்தைக்குச் சமமாக சக்திசாலி ஆவீர்கள். மாஸ்டர் ஆவீர்கள் அல்லவா. எவ்வாறு தந்தை சர்வசக்திவானாக இருக்கின்றாரோ, அவ்வாறே நீங்கள் அனைவரும் கூட மாஸ்டர்

சர்வசக்திவான் அதாவது அனைத்து சக்திகளை நிறைத்திருப்பவர்கள், தந்தைக்குச் சமமாக ஆகக்கூடியவர்கள் அல்லவா. தந்தை மற்றும் குழந்தைகளுக்கு இடையே வாழ்க்கையின் ஆதாரத்தில் வித்தியாசம் தென்படக்கூடாது. எவ்வாறு பாப்தாதாவின் வாழ்க்கையைப் பார்த்தீர்கள் அல்லவா. பாப்தாதா மற்றும் குழந்தைகள் சமமாகத் தென்பட வேண்டும். சாகாரத்தில் பாப்தாதா கர்மம் செய்து காண்பிப்பதற்கு நிமித்தமானார் அல்லவா. அவ்வாறே சமம் ஆக வேண்டும் அதாவது மாஸ்டர் சர்வசக்திவான் ஆக வேண்டும். சர்வசக்திகள் உள்ளனவா? தாரணை செய்திருக்கிறீர்கள், ஆனால், சதவிகிதம் உள்ளது. எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு இல்லை. சம்பன்னமாக இல்லை. ஆக வேண்டியதோ சம்பன்னம் அல்லவா! எனவே, சதவிகிதத்தை அதிகரியுங்கள். சக்திகளை தக்க சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். இதில் தான் நம்பர் கிடைக்கிறது. ஒருவேளை, தக்க சமயத்தில் காரியத்திற்குப் பயன்படவில்லை எனில், என்ன சொல்வது? இருந்தும் இல்லாதது போல் உள்ளது என்று தான் கூறலாம். ஏனெனில், தக்க சமயத்தில் காரியத்திற்கு வரவில்லை. எனவே, சமயத்தின் அனுசாரம் எந்த சக்தியின் அவசியம் உள்ளதோ, அதை காரியத்தில் ஈடுபடுத்த முடிகிறதா என்று சோதனை செய்யுங்கள். எனவே, தந்தைக்கு சமமான மாஸ்டர் சர்வசக்திவான் என்பதை பிரத்யட்ச ரூபத்தில் உலகத்திற்குக் காண்பிக்க வேண்டும். அப்பொழுதே, ஆம், சர்வசக்திவான் பிரத்யட்சம் ஆகி விட்டார் என்று உலகம் ஏற்றுக்கொள்ளும். இலட்சியம் உள்ளது அல்லவா. பொன்விழா வரை யார் நம்பர் வாங்குகிறார்கள் என்று இப்பொழுது பார்க்கலாம். நல்லது.

**வரதானம்: உலக நன்மைக்கான பாவனை மூலம் ஒவ்வொரு ஆத்மாவின் பாதுகாப்பிற்கான திட்டம் போடக்கூடிய உண்மையான கருணை உள்ளம் உடையவர் ஆகுக!**

நிகழ்கால சமயம் சில ஆத்மாக்கள் தனக்குத்தானே தீமை ஏற்படுவதற்கு நிமித்தம் ஆகிக் கொண்டு இருக்கின்றனர். அவர்களுக்காக கருணை உள்ளம் உடையவராகி ஏதாவது திட்டம் தீட்டுங்கள். எந்தவொரு ஆத்மாவின் பாகத்தையும் பார்த்து சுயம் அலைக்கழிச்சலில் வராதீர்கள் ஆனால், அவர்களுடைய பாதுகாப்பிற்கான சாதனத்தை சிந்தியுங்கள். இது நடந்துகொண்டு தான் இருக்கிறது, மரம் இற்றுப்போய் தான் ஆக

வேண்டும் என்பதல்ல. வந்திருக்கும் தடைகளை அழித்து விடுங்கள். விஷ்வ கல்யாணகாரி மற்றும் விக்ன விநாஷக் (தடைகளை அழிப்பவர்) என்ற பட்டம் என்ன கிடைத்துள்ளதோ, அதன் அனுசாரம் எண்ணம், பேச்சு மற்றும் செயலில் கருணை உள்ளம் உடையவராகி வாயுமண்டலத்தை மாற்றம் செய்வதில் சகயோகி ஆகுங்கள்.

**சுலோகன்: யார் புத்தி மீது கவனம் என்ற காவல் போடுகிறார்களோ, அவர்களே கர்மயோகி ஆக முடியும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 18.11.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பகவானின் பாக்கியம் நிறைந்த குழந்தைகளின் இலட்சணம்!

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் நெற்றியில் பாக்கியத்தின் ரேகைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் பாக்கியத்தின் ரேகைகள் போடப்பட்டிருக்கின்றன ஆனால் சில குழந்தைகளினுடையது தெளிவான ரேகைகளாக இருக்கின்றன. மேலும் சில குழந்தைகளினுடைய ரேகைகள் தெளிவாக இல்லை. எப்பொழுதிலிருந்து பகவான் தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறீர்களோ, பகவான் என்றால் பாக்கியத்தை வழங்குபவர், வள்ளல், கொடுப்பவர். எனவே குழந்தை ஆவதினால் பாக்கியத்தின் அதிகாரம் (உரிமை) அதாவது ஆஸ்தி அனைத்துக் குழந்தைகளுக்கும் அவசியம் பிராப்தி ஆகிறது ஆனால் கிடைத்திருக்கும் அந்த ஆஸ்தியை வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டு வருவது, சேவையில் ஈடுபடுத்தி சிரேஷ்டமாக ஆக்குவது, தெளிவானதாக ஆக்குவது என்பதில் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். ஏனென்றால் இந்த பாக்கியத்தை எந்த அளவு தனக்காகவும் மற்றும் சேவைக்காகவும் காரியத்தில் ஈடுபடுத்து கிறார்களோ அந்த அளவு அதிகரிக்கிறது, அதாவது ரேகை தெளி வானதாக ஆகிறது. தந்தை ஒருவர், அனைவருக்கும் ஒரே மாதிரி தான் கொடுக்கிறார். தந்தை வரிசைக்கிரமமாக பாக்கியத்தை வழங்குவதில்லை, ஆனால் பாக்கியத்தை உருவாக்குபவர்கள் அதாவது பாக்கியம் நிறைந்தவர் களாக ஆகுபவர்கள் இவ்வளவு பெரிய பாக்கியத்தை பிராப்தி அடைவதில் சக்திக்கு ஏற்றபடியாக இருக்கும் காரணத்தினால் வரிசைக்கிரமமாகி விடுகிறார்கள். எனவே சிலருடைய ரேகைகள் தெளிவாக இருக்கின்றன. மேலும் சிலருடைய ரேகைகள் தெளிவாக இல்லை. தெளிவான ரேகை உள்ள குழந்தைகள் ஒவ்வொரு காரியத்திலும் அவர்களும் தன்னை பாக்கியம் நிறைந்தவர் என்று அனுபவம் செய்கிறார்கள். கூடவே அவர்களுடைய முகம் மற்றும் நடத்தை மூலம் மற்றவர்களுக்கும் பாக்கியத்தின் அனுபவம் ஆகும். மற்றவர்களும்

அந்த மாதிரி பாக்கியம் நிறைந்த குழந்தைகளைப் பார்த்து இந்த ஆத்மாக்கள் மிக பாக்கியம் நிறைந்தவர்கள், இவர்களுடைய பாக்கியம் எப்பொழுதும் சிரேஷ்டமானது என்று நினைக்கிறார்கள் மற்றும் கூறுகிறார்கள். நான் ஒவ்வொரு காரியத்திலும் தன்னை பகவானின் குழந்தை பாக்கியம் நிறைந்தவன் என்று அனுபவம் செய்கிறேனா என்று உங்களை நீங்களே கேளுங்கள். பாக்கியம் உங்களுடைய ஆஸ்தி. ஆஸ்தி கிடைக்காது என்பது ஒருபொழுதும் இருக்க முடியாது. பாக்கியத்தை ஆஸ்தியின் ரூபத்தில் அனுபவம் செய்கிறீர்களா? அல்லது கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறதா? ஆஸ்தி சுலபமாக பிராப்தி ஆகும். கடின முயற்சி செய்வதற்கு அவசியம் இல்லை. உலகத்திலும் கூட தந்தையின் பொக்கிஷங்களின் மேல், ஆஸ்தியின் மேல் குழந்தைகளின் அதிகாரம் இயல்பாகவே இருக்கும். தந்தையின் ஆஸ்தி கிடைத்திருக்கிறது என்ற போதையும் இருக்கும். அந்த மாதிரி பாக்கியத்தின் போதை இருக்கிறதா அல்லது ஏறுகிறது மற்றும் இறங்கிக் கொண்டே இருக்கிறதா? அழியாத ஆஸ்தி என்றால் எந்த அளவு போதை இருக்க வேண்டும். இந்த ஒரு ஜென்மம் என்ன, அனேக பிறவிகளுக்கு பாக்கியம் பிறப்புரி மையாக இருக்கிறது என்று உறுதியாக வர்ணனை செய்கிறீர்கள். எப்பொழுதும் பாக்கியத்தின் பொலிவு பிரத்யக்ஷ ரூபத்தில் தென்பட வேண்டும். பொலிவு மற்றும் ஜொலிப்பு இரண்டுமே இருக்கிறதா? உள்ளடங்கிய ரூபத்தில் இருக்கிறதா அல்லது வெளிப்படையான ரூபத்தில் இருக்கிறதா? பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களின் அடையாளம் -பாக்கியம் நிறைந்த ஆத்மா எப்பொழுதும் மடியில் வளர்ந்து கொண்டிருந்தாலும், இரத்தின கம்பளத்தில் நடந்து கொண்டி ருந்தாலும், ஊஞ்சலில் ஆடினாலும் மண்ணில் கால் வைக்க மாட்டார்கள். ஒருபொழுதும் கால் அழுக்காக ஆகாது. அவர்கள் இரத்தின கம்பளத்தில் நடப்பார்கள். மேலும் நீங்கள் புத்தி என்ற கால்கள் மூலம் தரையில் இருப்பதற்கு பதிலாக எப்பொழுதும் ஃபரிஷ்தாக்களின் உலகத்தில் இருக்கிறீர்கள். இந்த பழைய மண்ணின் உலகத்தில் புத்தி என்ற கால்களை வைப்பதில்லை அதாவது புத்தியை அழுக்காக்குவதில்லை. பாக்கியம் நிறைந்தவர்கள் மண்ணால் ஆன பொம்மை களுடன் விளையாடுவதில்லை. எப்பொழுதும் இரத்தினங்களுடன் விளையாடுவார்கள். பாக்கியம் நிறைந்தவர்கள் எப்பொழுதும் சம்பன்னமாக (நிறைந்து) இருக்கிறார்கள். எனவே ஆசையென்றால் என்னவென்றே தெரியாத நிலையில் இருக்கிறார்கள்.

பாக்கியம் நிறைந்த ஆத்மா எப்பொழுதும் பெரும் வள்ளல், புண்ணிய ஆத்மாவாகி மற்றவர்களின் பாக்கியத்தையும் உருவாக்கிக் கொண்டே இருப்பார்கள். பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள் எப்பொழுதும் கிரீடம், ஆசனம் மேலும் திலகம் இட்டவராக இருப்பர். பாக்கியம் நிறைந்த ஆத்மா எந்த அளவு பாக்கியத்தின் அதிகாரியாக இருக்கிறாரோ அந்த அளவே தியாகம் செய்த ஆத்மாவாகவும் இருப்பார். பாக்கியத்தின் அடையாளம் தியாகம். தியாகம் பாக்கியத்தை தெளிவாக ஆக்குகிறது. பாக்கியம் நிறைந்த ஆத்மா எப்பொழுதும் பகவானுக்கு சமமாக நிராகாரி, நிர்அகங்காரி மற்றும் நிர்விகாரி என்ற மூன்று விசேஷங்களினால் நிரம்பியவராக இருப்பார். இந்த அனைத்து அடையாளங்களையும் தன்னில் அனுபவம் செய்கிறீர்களா? பாக்கியம் நிறைந்தவர் பட்டியலில் இருக்கிறீர்கள் இல்லையா? ஆனால் சக்திக்கு ஏற்றபடி இருக்கிறீர்களா அல்லது சர்வ சக்திவானா? மாஸ்டராகவோ (குழந்தையாகவோ) இருக்கிறீர்கள் இல்லையா? தந்தையின் மகிமையில் ஒருபொழுதும் சக்திக்கு ஏற்றபடி இருப்பவர் மற்றும் வரிசைக் கிரமமாக என்று கூறப்பட மாட்டாது. எப்பொழுதும் சர்வ சக்திவான் என்று கூறுகிறோம். அப்படியானால் மாஸ்டர் சர்வ சக்திவான் அவருடைய சக்திக்கு ஏற்றபடி ஏன் இருக்கிறார்? எப்பொழுதும் சக்தி நிறைந்தவர். இருப்பதற்கு ஏற்றபடி என்ற வார்த்தையை மாற்றி எப்பொழுதும் சக்திவான் ஆகுங்கள் மற்றும் ஆக்குங்கள். புரிந்ததா?

எந்த மண்டலம் (ஜோன்) வந்திருக்கிறார்கள்? அனைவரும் வரதான பூமியில் வந்து சேர்ந்து வரதானங்களினால் பையை நிரப்பிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? வரதான பூமியின் ஒவ்வொரு சரித்திரத்தில், காரியத்தில் விசேஷ வரதானம் நிரம்பியிருக்கிறது. யக்ஞ பூமியில் வந்து காய்கறி வெட்டினாலும் சரி, தானியங்கள் சுத்தம் செய்தாலும் சரி, இதிலேயும் யக்ஞ சேவையின் வரதானம் நிரம்பியிருக்கிறது. எப்படி உலகில் யாத்திரையில் செல்கிறார்கள், கோயிலை சுத்தப் படுத்துவது கூட ஒரு பெரிய புண்ணியம் என்று நினைக்கிறார்கள். இந்த மகாதீர்த்த ஸ்தலத்தின் மற்றும் வரதான பூமியின் ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு அடியிலும் வரதானமே வரதானம் நிரம்பியிருக்கிறது. எந்த அளவு பை நிரம்பியிருக்கிறது? பையை முழுமையாக நிரப்பிச் செல்கிறீர் களா அல்லது சக்திக்கு ஏற்றபடியா? யாரெல்லாம் எங்கிருந்து வந்திருந்தாலும் மேளாவை

(சந்திப்பை) கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள். மதுபன்னில் ஒரு எண்ணம் கூட மற்றும் ஒரு விநாடி கூட வீணானதாக ஆகி விட வேண்டாம். சக்திசாலியாக ஆவதின் இந்தப் பயிற்சி உங்களுடைய இடங்களிலும் சகயோகம் கொடுக்கும். படிப்பு மற்றும் பரிவாரம் -படிப்பின் லாபமும் எடுக்க வேண்டும் மற்றும் பரிவாரத்தின் அனுபவமும் விசேஷமாக செய்ய வேண்டும். புரிந்ததா?

பாப்தாதா அனைத்து மண்டலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் எப்பொழுதும் வரதானி, மகாதானி ஆனதிற்காக வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். மனிதர்களின் உற்சவம் முடிவடைந்து விட்டது ஆனால் உங்களுடைய உற்சாகம் நிரம்பிய உற்சவம் எப்பொழுதுமே இருக்கிறது. எப்பொழுதுமே விழா நாள் தான். எனவே ஒவ்வொரு நாளும் வாழ்த்துக்களே வாழ்த்துக்கள் தான். மகாராஷ்ட்ரா எப்பொழுதும் மகான் ஆகி மகானாக ஆக்குவதின் வரதானங்களினால் பையை நிரப்புவார்கள். கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் தன்னுடைய மலர்ந்த முகம் மூலமாக தாங்களும் எப்பொழுதும் மகிழ்ச்சியாக மேலும் மற்றவர்களையும் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக ஆக்கி பையை நிரப்பி கொண்டே இருங்கள். உ.பி-யைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வீர்கள்? எப்பொழுதும் சீதள நதிகளுக்கு சமமாக சீதளத்தின் வரதானம் கொடுத்து சீதளாதேவிகள் ஆகி சீதளமான தேவிகளை உருவாக்குங்கள். சீதளத்தின் மூலம் எப்பொழுதும் அனைவரின் அனைத்து விதமான துக்கத்தையும் அகற்றுங்கள். அந்த மாதிரி வரதானங்களினால் பையை நிரப்புங்கள். நல்லது.

எப்பொழுதும் சிரேஷ்ட பாக்கியத்தின் தெளிவான சேவாதாரி, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக அனைத்து சக்திகள் நிரம்பி, சம்பூர்ண நிலையில் நிலைத்திருக்கும், எப்பொழுதும் ஈஸ்வரிய ஜொலிப்பு மற்றும் பாக்கியத்தின் பொலிவில் இருக்கும், ஒவ்வொரு செய-ன் மூலமாக பாக்கியம் நிறைந்தவர் ஆகி, பாக்கியத்தின் ஆஸ்தியை கொடுக்கும் மாஸ்டர் பகவான் சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பெரிய தாதிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** தொடக்கத்திலிருந்து இதுவரையிலும் ஒவ்வொரு காரியத்திலும் யார்

உடன் இருந்து வந்திருக்கிறார்களோ, அவர்களுக்கு இந்த விசேஷம் இருக்கிறது -எப்படி பிரம்மா தந்தை ஒவ்வொரு அடியிலும் அனுபவி ஆகி, அனுபவத்தின் அதிகாரத்தின் மூலம் முழு உலகின் இராஜ்யத்தின் அதிகாரத்தைப் பெறுகிறார், அதே போலவே உங்கள் அனைவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவத்தின் அதிகாரம் நீண்ட காலமாக இருக்கும் காரணத்தினால் நீண்ட காலத்து இராஜ்ய அதிகாரத்திலும் நீங்களும் உடன் இருப்பவர்களாக ஆகுபவர்கள். யாரெல்லாம் தொடக்கத் திலிருந்து -எங்கு அமர வைக்கிறீர்களோ, எப்படி நடத்து விப்பீர்களோ அந்த மாதிரி உடன் இருப்பேன் என்ற எண்ணத்தை வைத்தீர்களோ அவர்கள் உடன் செல்வதற்காக முதலில் பாப்தாதா உறுதிமொழியைக் கண்டிப்பாக நிறைவேற்றத்தான் வேண்டும். நீங்கள் பாப்தாதாவின் உடன் இருப்பவர்கள் தான் சொர்க்க இராஜ்யத்திலும் உடன் இருப்பீர்கள், பக்தியிலும் உடன் இருப்பீர்கள். இந்த உலகத்திலோ நீங்கள் அனைவரும் 14-வருடங்கள் உடன் இருந்தீர்கள், சங்கமயுகத்தில் 14-வருடங்கள் எத்தனை வருடங்களுக்கு சமமானதாக ஆகி விட்டது. சங்கமயுகத்தின் இவ்வளவு காலம் பௌதீக ரூபத்தில் உடன் இருந்தீர்கள் என்ற இதுவும் பெரிய பாக்கியம். பிறகு புத்தி மூலமாகவும் உடன் இருக்கிறீர்கள், வீட்டிலும் உடன் இருப்பீர்கள், இராஜ்யத்திலும் உடன் இருப்பீர்கள். சிம்மாசனத்தில் கொஞ்ச பேர்கள் தான் அமருவார்கள் என்றாலும் இராஜ குடும்பத்தின் நெருங்கிய சம்மந்தத்தில், முழு நாள் நடவடிக்கையிலும் உடன் இருப்பதற்கான பங்கை அவசியம் செய்கிறீர்கள். அந்த மாதிரி தொடக்கத் திலிருந்து உடன் இருப்பதற்கான இந்த உறுதிமொழி முழுக் கல்பமும் இருந்து கொண்டே இருக்கும். பக்தியிலும் அதிக காலம் உடன் இருப்பீர்கள். இந்தக் கடைசி ஜென்மத்தில் சிலர் கொஞ்சம் தூரமாகவும், சிலர் அருகிலும் இருக்கிறார்கள் ஆனால் இருந்தாலும் முழுக் கல்பத்திலும் ஏதாவது ஒரு ரூபத்தில் நெருக்கமாக இருக்கிறீர்கள். அம்மாதிரியான உறுதிமொழி தான் இல்லையா? எனவே அனைவரும் உங்களை எந்தப் பார்வையோடு பார்க்கிறார்கள். நீங்கள் தந்தையின் ரூபத்தில் இருக்கிறீர்கள். இதைத் தான் பக்தியில் அவர்கள், இவை அனைத்துமே பகவானின் ரூபம் என்று கூறிவிட்டார்கள். ஏனென்றால் நீங்கள் தந்தைக்குச் சமமாக ஆகிறீர்கள் இல்லையா? உங்களுடைய ரூபத்தில் தந்தை தென்படுகிறார். எனவே தந்தையின் ரூபம் என்று கூறிவிடு கிறார்கள். யார் தந்தையுடன் இருப்பவர்களோ அவர்களைப் பார்த்து தந்தை நினைவில் வருவார், அவர்களை நினைக்க மாட்டார்கள்

ஆனால் தந்தையை நினைவு செய்வார்கள் என்ற இந்த விசேஷம் அவர்களிடம் இருக்கும். அவர்களிடமிருந்து தந்தையின் சரித்திரம், தந்தையின் திருஷ்டி, தந்தையின் காரியம் அனைத்தும் அனுபவம் ஆகும். அவர்கள் அவர்களாகத் தென்பட மாட்டார்கள் ஆனால் அவர்கள் மூலமாக தந்தையின் காரியம் மற்றும் திருஷ்டி அனுபவம் ஆகும். இது தான் நெருக்கமான, சமமான குழந்தைகளின் விசேஷம். நீங்கள் அனைவரும் அப்படித் தான் இருக்கிறீர்கள் இல்லையா. உங்களுக்குள் யாரும் மாட்டிக் கொள்வது இல்லை தானே! இவர் மிக நல்லவர் என்றோ கூறுவதில்லையே? இவரை தந்தை அந்த மாதிரி நல்லவராக ஆக்கியிருக்கிறார். இவர்களிடமிருந்து தந்தையின் திருஷ்டி, தந்தையின் பாலனை கிடைக்கிறது. இவர்களிடமிருந்து தந்தையின் மகாவாக்கியத்தைக் கேட்கிறோம். இந்த விசேஷம் இருக்கிறது. இதைத் தான் அன்பானவராகவும் மற்றும் விலகியிருப்பவராகவும் இருக்கிறார் என்று கூறுவது. நீங்கள் அந்த மாதிரியான குரூப் தான் இல்லையா? யார் சாகார தந்தையிடமிருந்து பாலனை பெற்றிருக்கிறார் களோ அவர்களிடம் ஏதோ விசேஷமோ இருக்கும் இல்லையா? உங்களிடம் வந்து என்ன கேட்கிறார்கள் -தந்தை என்ன செய்தார், எப்படி நடந்து கொண்டார்.... இது தான் நினைவில் வரும் இல்லையா? நீங்கள் அந்த மாதிரியான விசேஷ ஆத்மாக்கள். இதைத் தான் தெய்வீக ஒற்றுமை என்று கூறுவது. தெய்வத்தின் நினைவூட்டி, தெய்வீகமானவர்களாக ஆக்குகிறீர்கள். எனவே தெய்வீக ஒற்றுமை இருக்கிறது. 50-வருடங்கள் அழியாதவர்களாக (உறுதியாக) இருக்கிறீர்கள் என்றால், அழியாதவர்களாக இருந்ததற்காக வாழ்த்துக்கள் (சிலர் வந்திருக்கிறார்கள். சிலர் சுற்றி வரச் சென்றிருக்கிறார்கள்). நீங்களோ அனாதி அழியாதவர்களாக ஆகி விட்டீர்கள். அனாதி காலத்திலும் உடன் இருந்தீர்கள், ஆதி காலத்திலும் உடன் இருந்தீர்கள். சூட்சும வதனத்தில் உடன் இருந்தீர்கள் என்றால் எப்படி சேவை செய்வீர்கள்? நீங்களோ சிறிது நேரம் ஓய்வும் எடுத்துக் கொள்கிறீர்கள், தந்தைக்கோ ஓய்வு எடுப்பதற்கான அவசியமே இல்லை. பாப்தாதா இதிலிருந்தும் விடுபட்டு விட்டார். அவ்யக்தமானவருக்கு ஓய்விற்கு அவசியம் இல்லை. உடலில் இருப்பவர் களுக்குத் தான் அவசியம். இந்த விஷயத்தில் தனக்குச் சமமாக ஆக்கினோம் என்றால் வேலை முடிந்து விடும். இருந்தும் பாருங்கள். எப்பொழுது ஏதாவது சேவைக்கான வாய்ப்பு கிடைக்கிறது என்றால் தந்தைக்குச் சமமாக

களைப்பற்றவர் ஆகி விடுகிறீர்கள். பிறகு களைப்படைவதில்லை. நல்லது.

**தாதி அவர்களுடன் சந்திப்பு:** குழந்தை பருவத்திலிருந்து தந்தை உங்களை கிரீடம் அணிந்தவராக ஆக்கியிருக்கிறார். வந்தவுடனேயே சேவையின் பொறுப்பு கிரீடத்தை அணிவித்தார். மேலும் அவ்வப்பொழுது என்னென்ன பாகம் நடந்ததோ -(பெக்கரி) வறுமையின்) காலமாக இருந்தாலும், மகிழ்ச்சி நிறைந்த காலமாக இருந்தாலும், அனைத்து பாகங்களிலும் நாடகத்தின் அனுசாரம் பொறுப்பு எனும் கிரீடத்தை அணிந்தே வந்திருக்கிறீர்கள். எனவே அவ்யக்த பாகத்திலும் கூட பொறுப்பிலிருக்கும் கிரீடம் அணிந்தவர் ஆகி விட்டீர்கள். இந்த விசேஷ பங்கு தொடக்கத்திலிருந்தே இருக்கிறது. நீங்கள் எப்பொழுதுமே பொறுப்பை ஏற்றுச் செய்பவர். எப்படி தந்தை பொறுப்பாளராக இருக்கிறார் என்றால் உங்களுக்கு பொறுப்பின் கிரீடம் அணிந்திருப்பவராக ஆவதின் விசேஷ பங்கு இருக்கிறது. எனவே இறுதியிலும் திருஷ்டி மூலமாக கிரீடம், திலகம் அனைத்தையும் பார்த்துச் சென்றிருக்கிறீர்கள். எனவே உங்களுடைய நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன அல்லவா! அவற்றில் அவசியம் கிரீடம் இருக்கும். எப்படி கிருஷ்ணரை குழந்தை பருவத்திலிருந்து கிரீடம் அணிந்திருப் பதாக காண்பித்திருக்கிறார்கள் என்றால், நினைவுச் சின்னத்திலும் குழந்தை பருவத்திலிருந்து கிரீடம் அணிந்த ரூபத்தில் பூஜை செய்கிறார்கள். மற்ற அனைவரும் உடன் இருப்பவர்கள், ஆனால் நீங்கள் கிரீடம் அணிந்திருப்பவர். அனைவருமே உடன் இருந்து நடந்து கொள்வார்கள் ஆனால் சமமான ரூபத்தில் உடன் துணையாக இருப்பதில் வித்தியாசம் இருக்கிறது.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: குமாரர்களுடன் சந்திப்பு:** குமார் என்றால் பந்தனம் அற்றவர். மிகப் பெரிய பந்தனம் மனதின் வீணான எண்ணங் களினுடையது. இதிலிருந்தும் பந்தனமற்றவர். எப்பொழுதாவது இந்த பந்தனம் உங்களை கட்டிப் போட்டு விடவில்லையே? ஏனென்றால் எண்ணத்தின் சக்தி ஒவ்வொரு அடியிலும் வருமானம் செய்வதற்கான ஆதாரம். நினைவின் யாத்திரையை எதன் ஆதாரத்தில் செய்கிறீர்கள்? எண்ணத்தின் சக்தியின் ஆதாரத்தினால் தந்தையிடம் சென்றடைகிறீர்கள் இல்லையா? அசரீரி ஆகி விடுகிறீர்கள்.

அந்த மாதிரி மனதின் சக்தி விசேஷமானது. வீணான எண்ணம் மனதின் சக்தியை பலஹீனம் ஆக்கி விடுகிறது. எனவே நீங்கள் இந்த பந்தனத்திலிருந்தும் விடுபட்டு இருக்கிறீர்கள். குமார் என்றால் எப்பொழுதும் தீவிரமாக முயற்சி செய்பவர். ஏனென்றால் யார் பந்தன மற்றவராக இருப்பாரோ அவருடைய வேகம் இயல்பாகவே தீவிரமானதாக இருக்கும். சுமையுள்ளவர் குறைவான வேகத்தில் செல்வார், சுமையற்றவர் எப்பொழுதும் அதிவேகத்தில் செல்வார். இப்பொழுது நேரத்திற்கு ஏற்றபடி முயற்சி செய்வதற்கான நேரம் கடந்து சென்று விட்டது. இப்பொழுது தீவிர முயற்சி செய்பவர் ஆகி, இலட்சியத்தை சென்றடைய வேண்டும்.

2) குமாரர்கள் பழைய வீணான கணக்கை முடித்து விட்டீர்களா? புதிய கணக்கு பயனுள்ள கணக்கு. பழைய கணக்கு வீணானது. எனவே பழைய கணக்கு முடிவடைந்தது. பொதுவாகவே வியாபாரத்தில் பார்த்தாலும் ஒருபொழுதும் பழைய கணக்கு வைக்கப்படமாட்டாது. பழையதை முடித்து விட்டு மேலே புதிய கணக்கு எழுதுவார்கள். அதே போல் இங்கேயும் பழைய கணக்கை முடித்து விட்டு எப்பொழுதும் புதியதிலும் புதியதாக ஒவ்வொரு அடியும் பயனுள்ளதாக சக்திசாலி யாக இருக்கட்டும். ஒவ்வொரு எண்ணமும் பயனுள்ளதாக சக்திசாலியாக இருக்கட்டும். எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகள்! தந்தை சக்திசாலியாக இருக்கிறார் என்றால், குழந்தைகளும் தந்தையைப் பின்பற்றி நடந்து சக்திசாலியாகி விடுகிறார்கள்.

**தாய்மார்களுடன் சந்திப்பு:** மாதர்கள் எந்தவொரு குணத்தில் விசேஷ அனுபவிகள்? அந்த விசேஷ குணம் எது? (தியாகம், சகித்துக் கொள்வது). இன்னும் வேறு ஏதாவது குணம் இருக்கிறதா? மாதர்களின் சொரூபம் விசேஷமாக இரக்கமனமுடையதாக இருக்கும். மாதர்கள் இரக்கமன முடையவர்களாக இருப்பார்கள். எல்லைக்கப் பாற்பட்ட மாதர்கள் உங்களுக்கு எல்லைக்கு அப்பாற்பட்ட ஆத்மாக்கள் மேல் இரக்கம் வருகிறதா? எப்பொழுது இரக்கம் வருகிறதோ அப்பொழுது என்ன செய்கிறீர்கள்? யார் இரக்க மனமுடையவராக இருப்பாரோ அவர் சேவையின்றி இருக்க முடியாது. எப்பொழுது இரக்க மனமுடையவராக ஆகிறீர்கள் என்றால், அனேக ஆத்மாக் களுக்கு நன்மை ஏற்பட்டே விடுகிறது. எனவே மாதர்களை கல்யாணி என்று கூறுகிறார்கள்.

கல்யாணி என்றால் கல்யாண் அதாவது நன்மை செய்பவர்கள். எப்படி தந்தையை விஷ்வ கல்யாண்காரி என்று கூறுகிறார்கள். அதே போல் மாதர்களுக்கு விசேஷமாக தந்தைக்குச் சமமாக கல்யாணி என்ற பட்டம் கிடைத்திருக்கிறது. என்னவாக இருந்த நான் என்ன ஆகி விட்டேன் என்று அந்த மாதிரி ஊக்கம் வருகிறதா? சுயமாற்றத்தினால் மற்றவர்களுக்காகவும் ஊக்கம் உற்சாகம் வருகிறது. எல்லைக்குட் பட்டதின் மற்றும் எல்லைக்கப்பாற்பட்டதின் சேவையின் சமநிலை இருக்கிறதா? அந்த சேவை மூலமோ கணக்கு முடிவடைகிறது, அது எல்லைக்குட்பட்ட சேவை. நீங்களோ எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரிகள். எந்தளவு தனக்குள் சேவையின் ஊக்கம் உற்சாகம் இருக்குமோ அந்தளவு வெற்றி கிடைக்கும்.

2) மாதர்கள் தன்னுடைய தியாகம் மற்றும் தபஸ்யா மூலமாக உலகிற்கு நன்மை செய்வதற்கான பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள். மாதர்களிடம் தியாகம் மற்றும் தபஸ்யாவின் விசேஷம் இருக்கிறது. இந்த இரண்டு விசேஷங் களினால் சேவைக்கு பொறுப்பாளர் ஆகி, மற்றவர்களையும் தந்தையின் குழந்தையாக ஆக்குவதிலேயே பிஸியாக இருக்கிறீர்களா? சங்கமயுகத்தின் பிராமணர் களின் வேலையே சேவை செய்வது. பிராமணர்கள் சேவையின்றி இருக்க முடியாது. எப்படி வெளியுலகத்தில் பெயரால் பிராமணனாக இருப்பவர் அவசியம் கதாகலாட்சேபம் செய்வார். அதே போல் இங்கேயும் கதாகலாட்சேபம் செய்வது என்றால் சேவை செய்வது. எனவே ஜகத்மாதா ஆகி ஜகத்திற்காக அதாவது உலகத்திற்காக யோசியுங்கள். எல்லைக்கப்பாற்பட்ட குழந்தை களுக்காக யோசியுங்கள். வீட்டில் அமர்ந்து கொண்டே மட்டும் இருக்காதீர்கள், எல்லைக்கப் பாற்பட்ட சேவாதாரி ஆகி, எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். எல்லைக்குட் பட்டதில் இருந்தது 63-ஜென்மங்கள் ஆகி விட்டது, இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் முன்னேறிச் செல்லுங்கள்.

**விடைபெறும் நேரத்தில் அனைத்து குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டே பாப்தாதா கூறினார்:** அனைத்து பக்கங்களிலுமுள்ள அன்பிற்குரிய சகயோகி குழந்தைகள் பாப்தாதாவின் விசேஷ அன்பு நிரம்பிய அன்பு நினைவுகளை சுவீகாரம் (ஏற்றுக் கொள்) செய்யுங்கள். இன்று பாப்தாதா அனைத்து

குழந்தைகளுக்கு எப்பொழுதும் தடையற்றவராகி, தடைகளை அழிப்பவர் ஆகி, உலகை தடையற்றதாக ஆக்கும் காரியத்திற்காக வாழ்த்துக்கள் கூறுகிறார். ஒவ்வொரு குழந்தையும் நான் சேவையில் எப்பொழுதும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்ற சிரேஷ்ட எண்ணத்தை வைக்கிறார். இந்த சிரேஷ்ட எண்ணம் சேவையில் எப்பொழுதும் முன்னேறச் செய்து கொண்டிருக்கிறது. மேலும் செய்து கொண்டே இருக்கும். சேவையின் கூடவே சுயமுன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற் றத்தின் சமநிலை வைத்து முன்னேறிச் சென்று கொண்டே இருந்தீர்கள் என்றால் பாப்தாதா மற்றும் அனைத்து ஆத்மாக்கள் மூலமாக யாருக்கு சேவைக்கு பொறுப்பாளர் ஆகிறீர்களோ அவர்களுடைய இதயத்தின் ஆசீர்வாதங்கள் பிராப்தி ஆகிக் கொண்டே இருக்கும். அப்படி எப்பொழுதும் சமநிலை மூலமாக ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டே முன்னேறிச் செல்லுங்கள். சுயமுன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றம் இரண்டும் சேர்ந்தே இருப்ப தினால் எப்பொழுதும் சகஜமாக வெற்றி சொரூபம் ஆகி விடுவீர்கள். அனைவரும் அவரவர்களின் பெயரால் விசேஷ அன்பு நினைவு களை ஏற்றுக் கொள்ளுங்கள். நல்லது. ஓம் சாந்தி.

**வரதானம்: அனைவருக்கும் குஷி நிறைந்த செய்தியை கூறக்கூடிய குஷியின் பொக்கிஷத்தால் நிரம்பிய களஞ்சியம் ஆகுக!**

எப்பொழுதும் தன்னுடைய 'நான் குஷியின் பொக்கிஷத்தால் நிரம்பிய களஞ்சியம்' என்ற இந்த சொரூபத்தை எதிரில் வையுங்கள். என்னென்ன எண்ணிலடங்கா மற்றும் அழியாத களஞ்சியங்கள் கிடைத்திருக்கின்றனவோ அந்தக் களஞ்சியங்களை நினைவில் கொண்டு வாருங்கள். களஞ்சியத்தை நினைவில் கொண்டு வருவதினால் குஷி ஏற்படும். மேலும் எங்கு குஷி இருக்குமோ அங்கு சதா காலத்திற்காக துக்கம் விலகி விடும். பொக்கிஷங்களின் நினைவினால் ஆத்மா சக்திசாலி ஆகி விடுகிறது, வீணானது முடிவடைந்து விடுகிறது. நிரம்பிய ஆத்மா ஒரு பொழுதும் குழப்பத்தில் வராது. அவர் தானும் குஷியாக இருந்து மற்றவர்களுக்கும் குஷியின் செய்தியை கூறுவார்.

**சுலோகன்: தகுதியானவர் ஆக வேண்டும் என்றால், செயல் மற்றும் யோகாவின் சமநிலை வையுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 20.11.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கம யுகத்து பிராமணர்களின் வேறுபட்ட, அன்பான சிரேஷ்ட உலகம்!

இன்று பிராமணர்களைப் படைக்கும் தந்தை தன்னுடைய மிகச் சிறிய ஆன்மீக, அழகான உலகத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த பிராமண உலகம் சத்யுகத்தின் உலகத்தையும் விட மிக வேறுபட்டது மற்றும் மிக அன்பானது. இந்த ஆன்மீக உலகத்தின் பிராமண ஆத்மாக்கள் எவ்வளவு சிரேஷ்டமானவர்கள், விசேஷமானவர்கள். தேவதை ரூபத்தையும் விட இந்த பிராமண சொரூபம் விசேஷமானது. இந்த உலகத்தின் மகிமை விலகியிருக்கும் தன்மை. இந்த உலகத்தின் ஒவ்வொரு ஆத்மாவும் விசேஷமானவர். ஒவ்வொரு ஆத்மாவுமே சுயராஜ்யம் உள்ள இராஜா. ஒவ்வொரு ஆத்மாவும் நினைவின் திலமிட்டவர், அழியாத திலகமிட்டவர், சுயராஜ திலகமிட்டவர், பரமாத்மாவின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர். அம்மாதிரி அனைத்து ஆத்மாக்களும் இந்த அழகான உலகத்தின் கிரீடம், ஆசனம் மற்றும் திலகம் இட்டிருப்பவர்கள். இந்த மாதிரியான உலகத்தை முழுக் கல்பத்திலும் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா மற்றும் பார்த்திருக்கிறீர்களா? இந்த உலகத்தின் ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் ஒரே தந்தை ஒரே குடும்பம், ஒரே மொழி, ஒரே ஞானம், வாழ்க்கையின் ஒரே சிரேஷ்ட லட்சியம், ஒரே உள் உணர்வு, ஒரே திருஷ்டி, ஒரே தர்மம் மற்றும் ஒரே ஈஸ்வரிய காரியம். அந்த மாதிரியான உலகம் எந்தளவு சிறியதோ அந்தளவு பிரியமானது. அந்த மாதிரி அனைத்து பிராமண ஆத்மாக்களும் எங்களுடைய சின்னஞ்சிறு இந்த உலகம் மிகவும் வேறுபட்டது மற்றும் மிகவும் அன்பானது என்ற பாடலை மனதால் பாடுகிறார்கள். இந்தப் பாடலை பாடுகிறீர்களா? இந்த சங்கமயுகத்தின் உலகத்தைப் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்களா? எவ்வளவு வேறுபட்ட உலகம். இந்த உலகத்தின் தினசரி காரிய நடவடிக்கைகளும் வேறுபட்டது. அவர்களுடைய இராஜ்யம், அவர்களுடைய நியமம், அவர்களுடைய முறைகள், பழக்கங்கள், ஆனால் முறைகளும் வேறுபட்டது

மற்றும் அன்பும் வேறுபட்டது நீங்கள் அந்த மாதிரி உலகத்தில் இருக்கும் பிராமண ஆத்மாக்கள் தான் இல்லையா? இதே உலகத்தில் இருக்கிறீர்கள் இல்லையா? எப்பொழுதாவது தன்னுடைய உலகத்தை விட்டு விட்டு பழைய உலகத்தில் சென்று விடுவதில்லையே? எனவே பழைய உலகத்தின் மனிதர்கள் கடைசியில் இந்த பிராமணர்கள் என்றால் என்ன என்று புரிந்து கொள்ள முடிவதில்லை. பிரம்மா குமாரிகளின் நடைமுறையே அவர் களுடையது, ஞானமும் அவர்களுக்கு என்றிருக்கிறது என்று கூறுகிறார்கள் இல்லையா? எப்பொழுது உலகமே வேறுபட்டது என்றால், அனைத்தும் புதியதாக மற்றும் வேறுபட்டதாகத் தான் இருக்கும் இல்லையா? அனைவரும் தன்னை புதிய உலகத்தின் புதிய எண்ணம், புதிய மொழி, புதிய காரியம் என்று அந்த மாதிரி வேறுபட்டவராக ஆகியிருக்கிறேனா என்று தன்னைத்தானே பார்க்க வேண்டும். ஏதாவது பழைய தன்மை இருந்து விடவில்லையே? சிறிதளவு பழைய தன்மை இருக்கிறது என்றால், அது பழைய உலகத்தின் பக்கம் ஈர்த்து விடும். மேலும் உயர்ந்த உலகத்திலிருந்து கீழான உலகத்தில் சென்று விடக்கூடும். உயர்ந்த அதாவது சிரேஷ்டமாக இருக்கும் காரணத்தினால் சொர்க்கத்தை உயரே காண்பிக்கிறார்கள். மேலும் நரகத்தை கீழே காண்பிக்கிறார்கள். சங்கமயுகத்தின் சொர்க்கம், சத்யுகத்தின் சொர்க்கத்தை விடவும் உயர்ந்தது. ஏனென்றால், இந்த நேரம் நீங்கள் இரண்டு உலகத்தின் ஞானம் நிறைந்தவர்களாக ஆகியிருக்கிறீர்கள். இங்கு இப்பொழுது பார்த்துக் கொண்டும், தெரிந்திருந்தும் விலகியிருந்து அன்பானவராக இருக்கிறீர்கள். எனவே மதுபனை சொர்க்கம் என்று அனுபவம் செய்கிறீர்கள். சொர்க்கத்தைப் பார்க்க வேண்டும் என்றால், இப்பொழுது பாருங்கள் என்று கூறுகிறீர்கள் இல்லையா? அங்கே சத்யுகத்தில் சொர்க்கத்தை வர்ணனை செய்ய மாட்டோம். இப்பொழுது நான் சொர்க்கத்தை பார்த்திருக்கிறேன் என்று நிச்சயத்துடன் தங்குதடையின்றி கூறுகிறீர்கள். சொர்க்கத்தை பார்க்க வேண்டும் என்றால் இங்கே வந்து பாருங்கள் என்று சவால் விடுகிறீர்கள் இல்லையா? அந்த மாதிரி வர்ணனை செய்கிறீர்கள் இல்லையா. முன்பு சொர்க்கத்தின் பரிகள் அதாவது தேவதைகள் மிகவும் அழகாக இருப்பார்கள் என்று நினைத்தீர்கள், கேட்டீர்கள் ஆனால் யாரும் பார்க்கவில்லை. சொர்க்கத்தில் இதுவெல்லாம் இருக்கும் என்று அதிகமாக கேட்டிருக்கிறீர்கள், ஆனால் இப்பொழுது நீங்களே சொர்க்கத்தின் உலகத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள். நீங்களே

சொர்க்கத்தின் பரிகளாக (தேவதைகளாக) ஆகி விட்டீர்கள். ஷியாமாக இருந்தவர் சுந்தர் ஆகி விட்டீர்கள் இல்லையா? இறக்கை கிடைத்து விட்டது இல்லையா? அந்த அளவு வேறுபட்ட ஞானம் மற்றும் யோகாவின் இறக்கைகள் கிடைத்திருக் கின்றன. அதன் மூலம் மூன்று உலகங்களையும் சுற்றி வர முடியும். அறிவியலைச் சேர்ந்தவர் களிடமும் கூட அந்த மாதிரி அதிவேகமாக செல்லும் சாதனம் இல்லை. உங்கள் அனைவருக்கும் இறக்கை கிடைத்திருக்கிறதா? யாராவது கிடைக்காமல் தங்கிப் போய் விடவில்லையே?. பிராப்தி இல்லாத (கிடைக்காத) பொருள் பிராமண உலகத்தில் இல்லை என்பது தான் இந்த உலகத்தின் மகிமையாக இருக்கிறது, எனவே ஒரு தந்தை கிடைத்தார் என்றால், அனைத்தும் கிடைத்து விட்டது என்ற மகிமை இருக்கிறது. ஒரு உலகம் இல்லை, ஆனால் மூன்று உலகங்களின் எஜமானனாக ஆகி விடுகிறார்கள். அனைவரும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருக்கிறார்கள் என்பது இந்த உலகத் தின் மகிமை. ஊஞ்சலில் ஆடுவது என்பது பாக்கியத்தின் அடையாளம் என்று கூறுவார்கள். இந்த உலகத்தின் விசேஷமாக என்ன இருக்கிறது? சில நேரம் அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுவது, சில நேரம் குஷியின் ஊஞ்சலில் ஆடுவது, சில நேரம் அமைதியின் ஊஞ்சலில், சில நேரம் ஞானத்தின் ஊஞ்சலில் ஆடுவது. பரமாத்மா மடியின் ஊஞ்சலில் ஆடுவது, பரமாத்மா மடி என்ற நினைவில் அன்பில் மூழ்கியிருந்த நிலையில் ஆடுவது. எப்படி மடியில் ஒன்றிப்போய் விடுகிறார்கள். அதே போல் பரமாத்மா நினைவில் ஒன்றிப் போய் விடுகிறார்கள், அன்பில் ஐக்கியமாகி விடுகிறார்கள். இந்த ஆன்மீக மடி ஒரு நொடியில் அனேக ஜென்மங்களின் துக்கம் வேதனையை மறக்க வைத்து விடுகிறது. அம்மாதிரி நீங்கள் அனைவரும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருக்கிறீர்கள்.

இந்த மாதிரி உலகத்தின் அதிகாரியாக ஆகி விடுவோம் என்று எப்பொழுதாவது கனவில் கூட நினைத்ததுண்டா? இன்று பாப்தாதா தன்னுடைய பிரியமான உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த உலகம் உங்களுக்கு பிடித்திருக்கிறதா? பிரியமானதாக இருக்கிறதா? சில நேரம் ஒரு கால் அந்த உலகத்திலும், மற்றொரு காலை இந்த உலகத்திலும் வைப்பதில்லையே? 63-ஜென்மங்கள் அந்த உலகத்தை பார்த்து விட்டீர்கள், அனுபவம் செய்து விட்டீர்கள். என்ன கிடைத்தது? ஏதாவது கிடைத்ததா அல்லது இழந்தீர்களா? உடலையும் இழந்தீர்கள்,

மனதின் சுகம், சாந்தியையும் இழந்தீர்கள், மேலும் செல்வத்தையும் இழந்தீர்கள். உறவையும் இழந்தீர்கள். தந்தை எந்த அழகான உடல் கொடுத்திருந்தாரோ அதை எங்கே இழந்தீர்கள். ஒருவேளை பணத்தையும் சேர்த்து வைக்கிறீர்கள் என்றால், கூட அது கறுப்பு பணம். தூய்மையான பணம் செல்வம் எங்கே சென்று விட்டது? ஒருவேளை இருக்கிறது என்றாலும் கூட உபயோகமற்றது. சொல்வதற்கு கோடீஸ்வரன் ஆனால் காண்பிக்க முடியுமா? எனவே அனைத்தையும் இழந்து விட்டீர்கள், இருந்தும் ஒருவேளை புத்தி அதன் மேல் செல்கிறது என்றால் என்னவென்று கூறுவோம்? புத்திசாலி என்று கூறுவோமா? எனவே தன்னுடைய இந்த சிரேஷ்ட உலகத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இந்த உலகத்தின் இந்த வாழ்க்கையின் விசேஷங்களை எப்பொழுதும் நினைவில் வைத்து சக்திசாலியாக ஆகுங்கள். நினைவு சொரூபமாக ஆனீர்கள் என்றால் பற்றுதலை வென்றவராக இயல்பாகவே ஆகி விடுவீர்கள். பழைய உலகத்தின் எந்தவொரு பொருளையும் புத்தியால் சுவீகாரம் செய்யாதீர்கள். அவ்வாறு ஏற்றுக் கொள்வீர்கள் என்றால், ஏமாற்றம் அடைவீர்கள்! ஏமாற்றம் அடைவது என்ற,துக்கம் அடைவது. அப்படியானால் எங்கு இருக்க வேண்டும்? சிரேஷ்ட உலகத்திலா அல்லது பழைய உலகத்திலா? இந்த உலகம் என்ன மற்றும் அந்த உலகம் என்ன என்பதை எப்பொழுதும் மனதில் தெளிவாக வெளிப்படும் ரூபத்தில் வையுங்கள். நல்லது.

அந்த மாதிரி சின்னஞ்சிறு மிகவும் பிரியமான உலகத்தில் இருக்கும் விசேஷ பிராமண ஆத்மாக் களுக்கு, எப்பொழுதும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கும், எப்பொழுதும் விலகியிருக்கும் மற்றும் பரமாத்மாவின் அன்பிற்குரிய குழந்தைகளுக்கு பரமாத்மாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**சேவாதாரி (டீச்சர்) சகோதரிகளுடன் சந்திப்பு:** சேவாதாரி என்றால் தியாகி, தபஸ்வி ஆத்மாக்கள்! சேவையின் பலன் என்பது எப்பொழுதும் கிடைக்கவே செய்யும் ஆனால் தியாகம் மற்றும் தபஸ்யா மூலம் எப்பொழுதும் முன்னேறி சென்று கொண்டே இருப்பீர்கள். எப்பொழுதும் தன்னை விசேஷ ஆத்மாக்கள் என்று புரிந்து கொண்டு, விசேஷ சேவை செய்வதை நிரூபித்துக் காண்பிக்க வேண்டும். இந்த லட்சியத்தை

வைத்துக் கொள்ளுங்கள். லட்சியம் எவ்வளவு உறுதியாக இருக்கிறதோ அந்த அளவு கட்டிடம் நன்றாக உருவாகும். எனவே எப்பொழுதும் சேவாதாரி என்று புரிந்து கொண்டு முன்னேறிச் செல்லுங்கள். எப்படி தந்தை உங்களை தேர்ந்தெடுத்திருக்கிறாரோ அதே போல் நீங்கள் பிரஜைகளைத் தேர்ந்தெடுங்கள். எப்பொழுதும் நீங்கள் தடையற்றவராகி சேவையையும் தடையற்றதாக ஆக்கிக் கொண்டே இருங்கள். சேவையோ அனைவரும் செய்கிறார்கள் ஆனால் தடையற்ற சேவையாக இருக்க வேண்டும். இதில் தான் வரிசை எண் கிடைக்கிறது. நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அங்கு ஒவ்வொரு மாணவனும் தடையற்றவராக இருக்கட்டும். தடையின் அலைகள் இருக்க வேண்டாம். சக்திசாலியான சூழல் இருக்கட்டும். இதைத் தான் தடையற்ற ஆத்மா என்று கூறுவோம். நினைவின் சூழ்நிலை அந்த மாதிரி தடையே வர முடியாத அளவிற்கு இருக்க வேண்டும் என்ற இந்த லட்சியத்தைத் தான் வைத்துக் கொள்ளுங்கள். கோட்டை இருக்கிறது என்றால், எதிரில் வர முடியாது. எனவே தடையற்றவராகி தடையற்ற சேவாதாரியாக ஆகுங்கள். நல்லது.

**தனித்தனியான குரூப்களுடன் சந்திப்பு:** சேவை செய்யுங்கள் மற்றும் திருப்தியை அடையுங்கள். சேவை மட்டும் செய்யக் கூடாது ஆனால் அந்த மாதிரி சேவை செய்யுங்கள். அதில் திருப்தி இருக்க வேண்டும். அனைவரின் ஆசீர்வாதங்கள் கிடைக்க வேண்டும். ஆசீர்வாதங்கள் கொடுக்கும் சேவை சுலபமாக வெற்றியை யும் கொடுக்கும். திட்டப்படி சேவையோ செய்யத் தான் வேண்டும், மேலும் அதிகமாக செய்யுங்கள். குஷியோடு, ஊக்கத்தோடு செய்யுங்கள் ஆனால் என்ன சேவை செய்தோமோ அதில் ஆசீர்வாதங்கள் கிடைத்தனவா என்ற கவனம் வையுங்கள். அல்லது உழைக்க மட்டும் செய்தீர்களா? எங்கு ஆசீர்வாதங்கள் இருக்குமோ அங்கு கடின உழைப்பு இருக்காது. எனவே யாருடைய தொடர்பில் வந்தாலும் அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற இந்த லட்சியத்தை வைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுது அனைவரின் ஆசீர்வாதங்களை பெறுவீர்களோ அப்பொழுது தான் அரைக் கல்பம் உங்களுடைய விக்ரகங்கள், படங்கள் ஆசீர்வாதங்கள் கொடுத்துக் கொண்டே இருக்கும். உங்களுடைய விக்ரகங்களிடமிருந்து ஆசீர்வாதங்கள் பெற வருகிறார்கள் இல்லையா? தேவி அல்லது தேவதையிடம் ஆசீர்வாதம் பெற செல்கிறார்கள் இல்லையா? அப்படி இப்பொழுது அனைவரின்

ஆசீர்வாதங்களைப் சேமிப்பு செய்கிறீர்கள் அதனால் விக்ரகங்கள் மூலமாகவும் கொடுத்துக் கொண்டே இருக்கிறீர்கள். நிகழ்ச்சி செய்யுங்கள், பேரணி வையுங்கள். வி.ஐ.பி-க்கள், ஐ.பி-க்களின் சேவை செய்யுங்கள், அனைத்தையும் செய்யுங்கள் ஆனால் ஆசீர்வாதங்கள் கொடுக்கும் சேவை செய்யுங்கள், (ஆசீர்வாதங்கள் பெறுவதற்கான வழி என்ன). சரி ங்க.. அப்படியே செய்கிறேன் என்ற பாடத்தை உறுதி படுத்துங்கள். ஒருபொழுதும் யாரிடமும் முடியாது என்று கூறி தைரியமற்றவராக ஆகாதீர்கள். உதாரணமாக ஒருவேளை யாராவது தவறு செய்தால் கூட அவரிடம் நேரடியாக தவறு என்று கூறாதீர்கள். முதலில் அவருக்கு ஆறுதல் கொடுங்கள், தைரியம் கொடுங்கள். அவரை சம்மதிக்க வைத்து பிறகு புரிய வைத்தீர்கள் என்றால் அவர் புரிந்து கொள்வார். முதலிலேயே தவறு தவறு என்று கூறினீர்கள் என்றால், அவரிடமிருந்த கொஞ்ச தைரியமும் அகன்று விடும். தவறும் நடக்கலாம் ஆனால் தவறை தவறு என்று கூறினீர்கள் என்றால் அவர் தன்னை தவறு என்று ஒருபொழுதும் புரிந்து கொள்ள மாட்டார். எனவே முதலில் அவரை சரி ஆமாம் என்று சம்மதிக்க வையுங்கள், தைரியத்தை அதிகப்படுத்துங்கள், பிறகு அவரே தீர்மானித்துக் கொள்வார். மரியாதை கொடுங்கள். இந்த விதியை மட்டும் கடைப்பிடியுங்கள். தவறு நடந்து விட்டாலும் கூட முதலில் நல்லது என்று கூறுங்கள், முதலில் அவருக்கு தைரியம் வரட்டும். யாராவது கீழே விழுந்து விட்டார் என்றால் அவரை தள்ளி விடுவீர்களா அல்லது தூக்கி விடுவீர்களா? அவருக்கு ஆதரவு கொடுத்து முதலில் நிற்க வையுங்கள். இதைத் தான் பரோபகாரம் செய்வது என்று கூறுவது. சகயோகியாக ஆகுபவர்களை சகயோகியாக ஆக்கிக் கொண்டே இருங்கள். நீங்களும் முன்னுக்கு நானும் முன்னுக்கு. என்று சேர்ந்தே சென்று கொண்டிருங்கள். கைகோர்த்து சென்றீர்கள் என்றால் வெற்றி கிடைக்கும். மேலும் திருப்தியின் ஆசீர்வாதங்கள் கிடைக்கும். அந்த மாதிரி ஆசீர்வாதங்கள் பெறுவதில் மகானாக ஆனீர்கள் என்றால் சேவையில் இயல்பாகவே மகான் ஆகி விடுவீர்கள்.

**சேவாதாரிகளுடன் சந்திப்பு:** சேவை செய்து கொண்டே எப்பொழுதும் தன்னை கர்மயோகி நிலையில் நிலைத்திருப்பதை அனுபவம் செய்கிறீர்களா அல்லது காரியம் செய்து கொண்டே நினைவு குறைந்து விடுகிறது, மேலும் காரியத்தில் புத்தி அதிகமாக இருக்கிறதா? ஏனென்றால் நினைவில் இருந்து காரியம் செய்வதனால் ஒருபொழுதும்

களைப்பு இருக்காது. நினைவில் இருந்து காரியம் செய்பவர்கள் காரியம் செய்து கொண்டே எப்பொழுதும் குஷியை அனுபவம் செய்வார்கள். கர்மயோகி ஆகி காரியம் அதாவது சேவை செய்கிறீர்கள் தான் இல்லையா? கர்மயோகியின் பயிற்சி உள்ளவர் எப்பொழுதுமே ஒவ்வொரு அடியிலும் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை சிரேஷ்டமாக ஆக்குகிறார். எதிர்கால கணக்கு எப்பொழுதும் நிரம்பியிருக்கிறது, மேலும் நிகழ்காலமும் எப்பொழுதும் சிரேஷ்டமாக இருக்கிறது. அந்த மாதிரி கர்மயோகி ஆகி, சேவையின் பங்கை செய்கிறீர்களா? மறந்தோ விடுவதில்லையே? மதுபன்னில் சேவாதாரிகளாக இருக்கிறீர்கள் என்றால் மதுபன் இயல்பாகவே தந்தையின் நினைவை ஊட்டுகிறது. அனைத்து சக்திகளின் பொக்கிஷங் களை சேமித்திருக்கிறீர்கள் இல்லையா? எப்பொழுதும் நிரம்பியிருக்கும் அளவிற்கு சேமிப்பு செய்திருக்கிறீர்களா? சங்கமயுகத்தில் பேட்டரி எப்பொழுதும் சார்ஜ் ஆகி இருக்கிறது. துவாபர் யுகத்தில் பேட்டரி மந்தமாகி விடுகிறது. சங்கமயுகத்தில் எப்பொழுதும் நிரம்பியிருக்கிறது, எப்பொழுதும் சார்ஜ் ஆகியிருக்கிறது. மதுபன்னிற்கு பேட்டரியை நிரப்புவதற்காக வருவதில்லை, கொண்டாடுவதற்காக வருகிறீர்கள். தந்தை மற்றும் குழந்தைகளுக்கு அன்பு இருக்கிறது. எனவே சந்திப்பது, கேட்பது இது தான் சங்கமயுகத்தின் கொண்டாட்டம். நல்லது.

**இளைஞர் பேரணியின் வெற்றிக்காக பாப்தாதாவின் வரதானங்கள் நிறைந்த மகாவாக்கியங்கள்:** இளைஞர் அணியை நன்றாக உருவாக்குங்கள். நீங்கள் என்ன செய்தாலும் அதில் திருப்தி இருக்கட்டும், வெற்றி இருக்கட்டும். மற்றபடி சேவை செய்வதற்காகத் தான் இந்த வாழ்க்கையே இருக்கிறது. தன்னுடைய ஊக்கத்தோடு ஒருவேளை யாராவது காரியம் செய்கிறார் என்றால் அதற்கு எந்த தடையும் இல்லை. நிகழ்ச்சி இருக்கிறது எனவே செய்ய வேண்டும் என்பது வேறு ரூபம் ஆகி விடுகிறது ஆனால் தன்னுடைய ஊக்கம் உற்சாகத்துடன் செய்ய விரும்புகிறார்கள் என்றால் அதற்கு எந்த தடையும் இல்லை. எங்கு சென்றாலும் அங்கு யாரைச் சந்தித்தாலும், யாரைப் பார்த்தாலும் சேவையே தான். பேசுவது மட்டும் தான் சேவை ஆகி விடாது ஆனால் தன்னுடைய முகம் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்க வேண்டும். ஆன்மீக முகமும் சேவை செய்கிறது. ஊக்கம் உற்சாகத்துடன் மிகவும் குஷியுடன் ஆன்மீக குஷியின் ஜொலிப்பை காண்பித்துக்

கொண்டே முன்னேற வேண்டும் என்ற இலட்சியத்தை வையுங்கள். வலுக்கட்டாயமாக மட்டும் யாரும் செய்யக் கூடாது. நிகழ்ச்சி உருவாக்கப்பட்டு இருக்கிறது எனவே செய்யத் தான் வேண்டும் என்று அப்படி ஒரு விஷயமும் இல்லை. ஊக்கம் உற்சாகத்துடன் செய்தார்கள் என்றால் நல்லது.

ஒருவேளை யாரிடமாவது ஊக்கம் இல்லை என்றால் அவர் கட்டுப்பட்டவர் அல்ல. ஒரு பாதகமும் இல்லை. எப்படி இந்த பொன்விழா வரை அனைத்து இடங்களிலும் சேவை செய்ய வேண்டும் என்ற இலட்சியம் இருந்தது அப்படி நடந்து வருபவர்கள் அவர்களுடைய குரூப்பில் வருவார்கள் அதே போல் பேருந்து மூலமாக வருபவர்களும் இருக்கட்டும். ஒவ்வொரு ஜோனிலிருந்து மற்றும் ஒவ்வொரு இடங்களிலிருந்தும் பேருந்து மூலமாக சேவை செய்து கொண்டே டில்லி வரை வந்து சேர முடியும். இரண்டு விதமான குரூப்பை உருவாக்குங்கள். ஒன்று பேருந்து மூலமாக வரட்டும், சேவை செய்து கொண்டே வரட்டும் மற்றும் இன்னொன்று கால்நடையாக வரட்டும். இரண்டு ஆகி விடும். செய்ய முடியும், இளைஞர்கள் தான் இல்லையா? அவர்களுக்கு எங்காவது சக்தியை ஈடுபடுத்தத் தான் வேண்டும். சேவையில் சக்தி ஈடுபடுகிறது என்றால் நல்லது தான். இதில் இரண்டு பாவனைகளும் நிரூபணம் ஆகி விடும். சேவையும் நிரூபணம் ஆகி விடும். மேலும் பெயரும் பாதயாத்திரை என்று வைத்திருக்கிறீர்கள், அதுவும் நிரூபணம் ஆகி விடும். ஒவ்வொரு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவேளை அவர்களுடைய (பாதயாத்திரி கர்களுடைய) நேர்காணல் (மீடியா மூலம்) எடுப்பதற்கு முன்பாகவே ஏற்பாடு செய்தீர்கள் என்றால், தானாகவே செய்தி பரவி விடும் ஆனால் ஆன்மீக யாத்திரை தென்பட வேண்டும், பாதயாத்திரை மட்டும் தென்பட வேண்டாம். ஆன்மீகத் தன்மை மற்றும் குஷியின் ஜொலிப்பு இருக்க வேண்டும். இது அவசியம் தோன்ற வேண்டும். அப்பொழுது தான் புதுமை தென்படும். சாதாரணமாக எப்படி மற்றவர்களின் யாத்திரை வருகிறது, அது போன்றே இதுவும் தென்பட வேண்டாம் ஆனால் இவர்கள் இரட்டை யாத்திரை செய்பவர்கள். நினைவு யாத்திரை செய்பவர் களாகவும் இருக்கிறார்கள், பாதயாத்திரை செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். இரட்டை யாத்திரையின் பிரபாவம் முகம் மூலம் தென்பட்டது என்றால் நல்லது.

**உலகின் அரசியல் தலைவர்களுக்காக அவ்யக்த பாப்தாதாவின் இனிமையான செய்தி:** உலகின் ஒவ்வொரு அரசியல் தலைவரும் தன்னுடைய தேசத்தை மற்றும் தேசவாசிகளை வளர்ச்சியின் பக்கம் எடுத்துச் செல்வதின் சுபபாவனை, சுபவிருப்பங்களோடு அவரவர்களின் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் ஆனால் பாவனை மிகவும் சிரேஷ்டமானது ஆனால் பிரத்யக்ஷ எடுத்துக்காட்டுகள் எவ்வளவு விரும்புகிறார்களோ அந்த அளவு இருப்பதில்லை -இது ஏன்? ஏனென்றால் இன்றைய மக்கள் மற்றும் அதிகமான தலைவர்களின் மனதின் பாவனைகள் சேவை பாவனை, அன்பு பாவனைக்குப் பதிலாக சுயநலமான பாவனை பொறாமையின் பாவனையில் மாறிவிட்டது. எனவே இந்த அஸ்திவாரத்தை அகற்றுவதற்காக இயற்கையின் சக்தி, அறிவியல் சக்தி உலக ஞானத்தின் சக்தி, இராஜ்ய அதிகாரத்தின் சக்தி முலமாகவோ அவர்கள் முயற்சி செய்தார்கள் ஆனால் உண்மையான சாதனம் ஆன்மீக சக்தி ஆகும். அதன் மூலம் தான் மனதின் பாவனை சுலபமாக மாற முடியும். அதன் பக்கம் கவனம் குறைவாக இருக்கிறது. எனவே மாறியிருக்கும் பாவனைகளின் விதை அழிவதில்லை. கொஞ்ச காலத்திற்காக உள்ளடங்கி விடுகிறது ஆனால் நேரத்திற்கு ஏற்றபடி இன்னும் உக்கிரமான ரூபத்தில் பிரத்யக்ஷம் ஆகி விடுகிறது. எனவே ஆன்மீக தந்தையின் ஆன்மீக குழந்தைகள் ஆத்மாக்களுக்காக இந்த செய்தி -எப்பொழுதும் தன்னை ஆத்மா என்று புரிந்து ஆத்மாவின் தந்தையுடன் சம்மந்தத்தை இணைத்து ஆத்மீக சக்தியை பெற்று தனது மனதின் தலைவராக ஆகுங்கள். அப்பொழுது தான் அரசியல் தலைவராகி மற்றவர்களின் மனதின் பாவனை களை மாற்ற முடியும். உங்களுடைய மனதின் எண்ணம் மற்றும் மக்களின் நடைமுறை காரியம் ஒன்றாக ஆகி விடும். இருவர்களின் சகயோகம் மூலம் வெற்றியின் பிரத்யக்ஷ எடுத்துக் காட்டு அனுபவம் ஆகும். தன்னை ஆளும் அதிகாரி தான் எப்பொழுதும் தகுதியான அரசியல் தலைவரை ஆளும் அதிகாரி ஆக முடியும். மேலும் சுயராஜ்யம் உங்களுடைய ஆன்மீக தந்தையின் பிறப்புரிமை. இந்த பிறப்புரிமையின் சக்தி மூலம் எப்பொழுதும் சரியாகச் செய்யும் சக்தியையும் அனுபவம் செய்வீர்கள் மேலும் வெற்றி அடைவீர்கள்.

# 1985 அவ்யக்த முரளி

**வரதானம்: குழுவில் இருந்து கொண்டே இலட்சியம் மற்றும் இலட்சணத்தை சமமாக ஆக்கக்கூடிய எப்பொழுதும் சக்திசாலி ஆத்மா ஆகுக!**

குழுவில் ஒவ்வொருவரையும் பார்த்து ஊக்கம் உற்சாகமும் வருகிறது என்றால் அலட்சியமும் வருகிறது. இவரும் செய்கிறார், நானும் செய்தேன் என்றால் என்ன ஆகி விட்டது என்று நினைக் கிறார். எனவே குழுவில் சிரேஷ்டமாக ஆவதற்காக சகயோகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு காரியம் செய்வதற்கு முன்பு நான் என்னை சம்பன்னம் ஆக்கி, ஒரு எடுத்துக்காட்டாக ஆக்க வேண்டும் என்ற விசேஷ கவனம் மற்றும் லட்சியம் இருக்கட்டும். நான் செய்து மற்றவர்களை செய்விக்க வேண்டும். பிறகு அடிக்கடி இந்த லட்சியத்தை வெளிக் கொணருங்கள். இலட்சியம் மற்றும் இலட்சணத்தை ஒன்றாக ஆக்கிக் கொண்டே இருந்தீர்கள் என்றால், சக்திசாலி ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: இறுதியில் வேகமாக செல்ல வேண்டும் என்றால், சாதாரண மற்றும் வீணான எண்ணங்களில் நேரத்தை இழக்காதீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 25.11.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிச்சயபுத்தி உடைய வெற்றி இரத்தினங்களின் அடையாளங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய நிச்சயபுத்தி உடைய வெற்றி இரத்தினங்களின் மாலையை பார்த்துக் கொண்டிருந்தார். அனைத்து குழந்தைகளும் நான் நிச்சயத்தில் உறுதியாக இருக்கிறேன் என்று தன்னை நினைக்கிறார்கள். தன்னை நிச்சயபுத்தி இல்லாதவர் என்று நினைப்பவர் யாருமே இருக்க மாட்டார். நிச்சயம் இருக்கிறதா என்று யாரிடமாவது கேளுங்கள். அனைவருமே நிச்சயம் இல்லாவிட்டால் பிரம்மா குமார், பிரம்மா குமாரியாக எப்படி ஆகியிருப்போம் என்ற இதைத் தான் பதிலாக கூறுவார்கள். நிச்சயத்தின் கேள்விக்கு அனைவருமே ஆம் நிச்சயம் இருக்கிறது என்று கூறுவார்கள். அனைவருமே நிச்சயபுத்தி உள்ளவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்று அப்படி கூறலாம் இல்லையா? இல்லை என்றால் உங்களில் யார் நிச்சயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். அனைவருமே நிச்சயபுத்தி உடையவர்கள். நல்லது. எப்பொழுது அனைவருக்குமே உறுதியான நிச்சயம் இருக்கிறது என்றால் பிறகு வெற்றி மாலையில் வரிசைக்கிரம எண் ஏன் உருவாகிறது? நிச்சயத்தில் அனைவருக்கும் ஒரே ஒரு பதில் தான் இல்லையா? பிறகு வரிசை எண் ஏன்? அஷ்ட இரத்தினங்கள் எங்கிருக்கிறார்கள், 100 இரத்தினங்கள் எங்கிருக்கிறார்கள் மற்றும் 16000 எங்கிருக்கிறார்கள். இதற்கான காரணம் என்ன? அஷ்ட தேவதைகளுக்கு நடக்கும் பூஜை மகிமைக்கும் மற்றும் 16000-ன் மாலையின் பூஜை மகிமைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. தந்தை ஒருவர் மற்றும் நான் அந்த ஒருவரு டையவன் தான் என்ற இந்த நிச்சயம் இருக்கிறது. இருந்தும் ஏன் வித்தியாசம்? நிச்சயபுத்தியில் சதவிகிதம் இருக்குமா என்ன? நிச்சயத்தில் ஒருவேளை சதவிகிதம் இருக்கிறது என்றால் அதை நிச்சயம் என்று கூறுவோமா? 8-இரத்தினங்களும் நிச்சயபுத்தி உடையவர்கள், 16000-த்தினரும் நிச்சயபுத்தி உடையவர்கள் என்று கூறுவோம் இல்லையா!

# 1985 அவ்யக்த முரளி

நிச்சயபுத்தி உடையவரின் அடையாளம் வெற்றி அடைபவர்! எனவே நிச்சயபுத்தி உடையவர் வெற்றி அடைவார் என்ற புகழ் இருக்கிறது. அப்படி நிச்சயம் என்றால் வெற்றி அடைபவரே தான். சில நேரம் வெற்றி, சில நேரம் வெற்றி இல்லை என்பது இருக்க முடியாது. சூழ்நிலை எப்படிப் பட்டதாக இருந்தாலும் கூட ஆனால் நிச்சயப்புத்தி உடைய குழந்தைகள் சூழ்நிலையில் தன்னுடைய சுயநிலையின் சக்தி மூலம் எப்பொழுதும் வெற்றியை அனுபவம் செய்வார்கள். யார் வெற்றி இரத்தினமோ அதாவது வெற்றி மாலையின் மணியாக ஆகி விட்டார், கழுத்தின் மாலையாக ஆகி விட்டாரோ அவருக்கு மாயாவிடம் தோல்வி ஒருபொழுதும் ஏற்பட முடியாது. உலகிலுள்ள மனிதர்கள் மற்றும் பிராமண பரிவாரத்தின் சம்மந்தம் தொடர்பில் அவரை வேறாகப் புரிந்து கொண்டாலும் மற்றும் இவர் தோல்வி அடைந்து விட்டார் என்று கூறினாலும், அது தோல்வி இல்லை, வெற்றி ஆகும். ஏனென்றால் சில நேரங்களில் பார்ப்பவர்களுக்கும் மற்றும் செய்பவர்களுக்கும் தவறான அபிப்ராயம் ஏற்பட்டு விடுகிறது. பணிவாக இருப்பவர் மற்றும் சரிங்க செய்கிறேன்! என்ற பாடத்தை படிக்கும் ஆத்மாக்கள் மேல் சில நேரம் தவறான அபிப்ராயத்தின் காரணமாக அவருக்கு தோல்வி ஏற்பட முடியும், மற்றவர்களுக்கு ரூபம் தோல்வியாக தென்படும் ஆனால் உண்மையில் வெற்றி அடைபவர். அந்த நேரம் மட்டும், மற்றவர்கள் கூறுவதினால் மற்றும் சூழ்நிலை காரணமாக தானே நிச்சயபுத்தி நிலையி-ருந்து மாறி சந்தேகம் உள்ள ரூபம் உருவாகி விடக்கூடாது. இது தோல்வியா? அல்லது வெற்றியா? என்று தெரியவில்லை என்ற இந்த சந்தேகத்தை வைக்காமல் தன்னுடைய நிச்சயத்தில் உறுதியாக இருக்க வேண்டும். யாரை இன்று மற்ற மனிதர்கள் தோல்வி அடைந்தவர் என்று கூறுகிறார்களோ அவர்களே நாளை ஆஹா! ஆஹா! என்ற மலர்களைத் தூவுவார்கள்.

வெற்றி அடையும் ஆத்மாவிற்கு தன்னுடைய மனதில், தன்னுடைய காரியத்தைப் பற்றி ஒருபொழுதும் நான் சரியா அல்லது தவறா என்று இருவேறுபட்ட கருத்து இருக்காது. மற்றவர்கள் கூறுவது வேறாகும். மற்றவர்களில் சிலர் சரி என்று கூறுவார்கள், சிலர் தவறு என்று கூறுவார்கள் ஆனால் தன்னுடைய மனதில் நான் வெற்றியடைந்தவன் என்ற நிச்சயபுத்தி இருக்க வேண்டும். தந்தை மேல் உள்ள நிச்சயத்தின் கூடவே தன் மேலும் நிச்சயம் வேண்டும். நிச்சயபுத்தி உடையவர் அதாவது

# 1985 அவ்யக்த முரளி

வெற்றி அடைபவரின் மனம் அதாவது எண்ணத்தின் சக்தி எப்பொழுதும் தூய்மையாக இருக்கும் காரணத்தினால் தனக்காகவும் மற்றும் மற்றவர்களுக்காகவும் ஆம் மற்றும் இல்லை என்று நிர்ணயம் செய்வது சகஜமாக, சத்தியமானதாக, தெளிவானதாக இருக்கும். எனவே தெரியவில்லை என்ற இருவேறுபட்ட எண்ணம் இருக்காது. நிச்சயபுத்தி உடைய வெற்றி இரத்தினங்களின் அடையாளம் -சத்தியமான முடிவு இருக்கும் காரணத்தினால் மனதில் சிறிதளவும் குழப்பம் இருக்காது, எப்பொழுதும் மகிழ்ச்சி இருக்கும். குஷியின் உணர்வலைகள் இருக்கும். சூழ்நிலை அக்னிக்கு சமமானதாக இருந்தாலும் கூட, அவரைப் பொருத்தளவில் அக்னி பரீட்சை வெற்றியின் குஷியை அனுபவம் செய்விக்கும். ஏனென்றால் பரீட்சையில் வெற்றி அடைபவராக ஆகியே விடுவார் இல்லையா? இப்பொழுது கூட உலகீய முறையில் ஏதாவது ஒரு விஷயத்தில் வெற்றி ஏற்படுகிறது என்றால், குஷியைக் கொண்டாடுவதற்காக சிரித்துக் கொண்டு, நடனமாடிக் கொண்டு கை தட்டுவார்கள். இது குஷியின் அடையாளம். நிச்சயபுத்தி உடையவர் ஒருபொழுதும் எந்தக் காரியத்திலும் தன்னை தனிமையாக அனுபவம் செய்ய மாட்டார். அனைவரும் ஒரு பக்கம், நான் தனியாக இன்னொரு பக்கம், பெரும்பான்மையோர் இன்னொரு பக்கம் இருந்தாலும் வெற்றி இரத்தினம் ஒரே ஒருவர் மட்டும் தான் இருந்தாலும் அவர் தன்னை ஒருவர் என்று இல்லாமல் தந்தை என்னுடன் இருக்கிறார் என்று நினைப்பார். எனவே தந்தையின் எதிரில் மிகப் பெரிய படை கூட ஒன்றும் இல்லை. எங்கு தந்தை இருக்கிறாரோ அங்கு முழு உலகமும் தந்தையில் இருக்கிறது. விதை இருக்கிறது என்றால், மரமோ அதில் இருக்கவே இருக்கிறது. வெற்றி அடையும் நிச்சயபுத்தி உடைய ஆத்மா எப்பொழுதும் தன்னை ஆதரவின் கீழே இருப்பவராக நினைப்பார். ஆதரவு கொடுக்கும் வள்ளல் என்னுடன் இருக்கிறார் என்பதை இயற்கையாக அனுபவம் செய்வார். எப்பொழுது பிரச்சனை வருகிறதோ அந்த நேரம் தந்தையின் எதிரில் பாபா நீங்களோ என்னுடன் தான் இருக்கிறீர்கள் இல்லையா, நீங்களே தான் உதவியாளர் இல்லையா, இப்பொழுது நீங்கள் மட்டும் தான் இருக்கிறீர்கள் என்று சுயநலமான ஆதரவை பெற மாட்டார்கள். நீங்கள் இருக்கிறீர்கள் இல்லையா, இது இருக்கிறது இல்லையா என்பதின் அர்த்தமாக என்ன ஆகிறது? நிச்சயம் இருந்ததா? நீங்கள் என்னுடைய ஆதரவு என்று தந்தைக்கும் நினைவூட்டுகிறார்கள். நிச்சயபுத்தி உடையவர் ஒருபொழுதும் அந்த மாதிரியான எண்ணத்தை

வைக்க முடியாது. அவருடைய மனதில் சிறிதளவும் ஆதரவற்ற நிலை மற்றும் தனிமை நிலை எண்ணத்தின் அளவில் கூட அனுபவம் ஆகாது. நிச்சயபுத்தி உடையவர் வெற்றி அடைபவராக இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பார். எப்பொழுதாவது சோர்வுடையவராகவும் ஆகமாட்டார் மற்றும் அற்ப காலத்தின் எல்லைக்குட்பட்ட வைராக்கிய உணர்வுகளிலும் ஒருபொழுதும் வர மாட்டார். சில நேரம் எப்பொழுது மாயாவின் தாக்குதல் மிகவும் வலுவானதாக இருக்கிறதோ அந்த நேரம் அற்ப காலத்தின் வைராக்கியமும் வருகிறது ஆனால் அது எல்லைக்குட்பட்ட அற்ப காலத்தின் வைராக்கி யமாக இருக்கும். எல்லைக்கப்பாற்பட்டதாக, சதா காலத்தினுடையதாக இருக்காது. கட்டாயத் தினால் வைராக்கிய உணர்வு உற்பத்தி ஆகிறது. எனவே அந்த நேரத்தில் இதிலிருந்து இவரை விடுவித்து விடுங்கள் எனக்கு வைராக்கியம் வந்து விட்டது என்று அந்த நேரம் கூறிவிடுகிறார்கள். சேவையையும் விட்டு விட வேண்டும், இதையும் விட்டுவிட வேண்டும் என்ற வைராக்கியம் வருகிறது ஆனால் அது எல்லைக்கப்பாற்பட்டதாக இருக்காது. வெற்றி இரத்தினங்கள் எப்பொழுதும் தோல்வியிலும் வெற்றியை, வெற்றியிலும் வெற்றியை அனுபவம் செய்வார்கள். எல்லைக்குட்பட்ட வைராக்கியத்தை ஒதுங்கி விடுவது என்று கூறுவது. பெயருக்கு வைராக்கியம் என்று கூறுவார்கள், ஆனால் உண்மையில் நடப்பது யாதெனில், ஒதுங்கி விடுவார்கள். வெற்றி இரத்தினங்கள் எந்தக் காரியத்தில் இருந்தும், பிரச்சனையில் இருந்தும், நபரிலிருந்தும் விலகி ஒதுங்க மாட்டார் ஆனால் அனைத்து காரியங்கள் செய்து கொண்டே எதிர்நோக்கிக் கொண்டே சகயோகியாக ஆகிக் கொண்டே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வில் இருப்பார், அது சதா காலத்திற்காக இருக்கும். நிச்சயபுத்தி உடைய வெற்றியாளர் ஒருபொழுதும் தன்னுடைய வெற்றியை வர்ணிக்க மாட்டார். பார்த்தீர்களா? நான் சரியாக இருந்தேன் இல்லையா என்று மற்றவர்களிடம் புகார் சொல்ல மாட்டார். இந்த புகார், முறையீடு செய்வது மற்றும் வர்ணிப்பது ஒன்றுமில்லாத காலியாக இருக்கும் நிலையின் அடையாளம். காலியாக இருக்கும் பாத்திரத்தில் அதிகம் தளும்பும். எந்தளவு நிரம்பியிருக்குமோ அந்த அளவு தளும்பாது. வெற்றியாளர் எப்பொழுதும் மற்றவர்களின் தைரியத் தையும் அதிகரிப்பார். அவரை கீழாகப் பார்ப்பதற்கு முயற்சி செய்யமாட்டார். ஏனென்றால் வெற்றி இரத்தினங்கள் தந்தைக்குச் சமமாக மாஸ்டர் ஆதரவு அளிக்கும்

வள்ளலாக இருப்பார்கள். கீழே இருந்து மேலே தூக்கி விடுபவர்கள். நிச்சயபுத்தி உடையவர்கள் எப்பொழுதும் வீணானவற்றிலிருந்து விலகியிருப்பார்கள். வீணான எண்ணமாக இருந்தாலும், வார்த்தையாக இருந்தாலும் அல்லது காரியமாக இருந்தாலும் அப்படி வீணானவற்றிலிருந்து விலகுவது என்றால் வெற்றியாளர் ஆவது. வீணானதின் காரணத்தினால் சில நேரம் தோல்வியும், சில நேரம் வெற்றியும் கிடைக்கிறது. வீணானது முடிந்து விட்டது என்றால் தோல்வியும் முடிவடைந்து விடும். வீணானவை முடிந்து விடுவது என்பது வெற்றி இரத்தினங்களின் அடையாளம். இப்பொழுது நிச்சயபுத்தி உடைய வெற்றி இரத்தினங்களின் அடையாளங்கள் எனக்கு அனுபவம் ஆகுகிறதா என்று சோதனை செய்யுங்கள். நிச்சயபுத்தி இருக்கிறது என்றால் உண்மை கூறுவார்கள் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம் இல்லையா ஆனால் நிச்சயபுத்தி உடைய ஒருவர், தெரிந்து கொள்ளும், ஏற்றுக் கொள்ளும் வரையிலுமானவராக இருப்பார். மேலும் இன்னொருவர் அதன்படி நடப்பது வரை நிச்சயபுத்தி உடையவராக இருப்பார். ஆம் பகவான் கிடைத்து விட்டார் என்று அனைவருமே நம்பத்தான் செய்கிறார்கள். நான் பகவானின் குழந்தையாக ஆகி விட்டேன். ஏற்றுக்கொள்வது மற்றும் தெரிந்து கொள்வது இரண்டுமே ஒன்று தான் ஆனால் நடப்பதில் வரிசைக்கிரமமாக ஆகி விடுகிறார்கள். அந்த மாதிரி தெரிந்தும் இருக்கிறார்கள், ஏற்றுக் கொண்டு நம்பவும் செய்கிறார்கள். இதில் சரி தான் ஆனால் மூன்றாவது நிலை ஏற்றுக் கொண்டு, தெரிந்து கொண்டு நடப்பது. ஒவ்வொரு அடியிலும் நிச்சயத்தின் மற்றும் வெற்றியின் பிரத்யக்ஷ அடையாளங்கள் தென்பட வேண்டும். இதில் வித்தியாசம் இருக்கிறது. எனவே வரிசைக்கிரமமாக ஆகி விட்டீர்கள். ஏன் வரிசை எண் உருவாகு கிறது என்று புரிந்து கொண்டீர்களா?

இதைத் தான் நஷ்டோமோகா அதாவது பற்றுதலை வென்ற நிலை என்று கூறுவது. நஷ்டோமோகாவின் விளக்கம் மிகவும் நுணுக்கமானது. அதை பின்பு எப்பொழுதாவது கூறுவோம். நிச்சயபுத்தி நஷ்டோமோகா என்பதின் ஏணிப்படி. நல்லது. இன்று இன்னொரு குரூப் வந்திருக்கிறார்கள். வீட்டின் குழந்தை தான் எஜமானன் என்றால் வீட்டின் எஜமானன் தன்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறார் என்று அப்படி கூறுவோம் இல்லையா? வீட்டிற்கு வந்திருக்கிறீர்களா அல்லது

வீட்டிலிருந்து வந்திருக்கிறீர்களா? ஒருவேளை அதை வீடு என்று நினைத்தீர்கள் என்றால், பற்றுதல் செல்லும் ஆனால் அது தற்காலிகமான சேவை ஸ்தானம். வீடோ அனைவருக்கும் மதுபன் தான் இல்லையா? ஆத்மா என்று பார்க்கும் போது பரம்தாமம். பிராமணன் என்பதினால் அவருடைய வீடு மதுபன். எப்பொழுது தலைமை அலுவலகம் மவுன்ட் அபு என்று கூறுகிறீர்கள் என்றால், நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அது எந்த இடமாக ஆனது? அலுவலகம் ஆனது தான் இல்லையா. அதனால் தான் தலைமை அலுவலகம் என்று கூறுகிறீர்கள். அம்மாதிரி வீட்டிலிருந்து வரவில்லை ஆனால் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள். அலுவலகத்திலிருந்து யாரையும் எப்பொழுதும் மாற்றம் செய்ய முடியும், வீட்டிலிருந்து வெளியேற்ற முடியாது. அலுவலகத்திலோ மாற்றம் செய்ய முடியும். வீடு என்று நினைத்தீர்கள் என்றால் என்னுடையது என்ற உணர்வு இருக்கும். சென்டரையும் வீடாக ஆக்கி விடுகிறார்கள் அப்பொழுது தான் என்னுடைய என்ற உணர்வு வருகிறது. சென்டர் என்று புரிந்து கொண்டால் என்னுடையது என்பது இருக்காது. வீடாக ஆகி விடுகிறது, ஓய்வுக்கான ஸ்தானமாக ஆகி விடுகிறது. அப்பொழுது தான் என்னுடையது என்ற உணர்வு இருக்கிறது. அப்படி தன்னுடைய வீட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள். தன்னுடைய வீடு வள்ளலின் வீடு என்ற பழமொழி இருக்கிறது இல்லையா, இது எந்த ஸ்தானத்திற்கான மகிமை? உண்மையிலேயே வள்ளலின் வாசல் தன்னுடைய வீடோ மதுபன் தான் இல்லையா? தன்னுடைய வீட்டிற்கு அதாவது வள்ளலின் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள். வீடு மற்றும் வாசல் என்று கூறினால் இரண்டுமே ஒரே விஷயம் தான். தன்னுடைய வீட்டில் வருவதினால் ஓய்வு கிடைக்கிறது. மனதின் ஓய்வும், உடலின் ஓய்வும் பணத்தின் ஓய்வும் கிடைக்கிறது. சம்பாத்தியம் செய்வதற்காக செல்ல வேண்டியது இருக்காது. உணவு சமைத்தீர்கள் என்றால் சாப்பிட முடியும் என்று இதிலிருந்தும் ஓய்வு கிடைத்து விடுகிறது, தட்டில் தயார் ஆன உணவு கிடைத்து விடுகிறது. இங்கோ டாகூர் (அதாவது எஜமானன்) ஆகி விடுகிறீர்கள். எப்படி டாகூர்களின் (கடவுள், பிரபு) கோவில்களில் மணி அடிப்பார்கள். டாகூரை எழுப்ப வேண்டியதாக இருக்கிறது, தூங்க வைக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே மணி அடிக்கிறார்கள். பிரசாதம் படைத்தாலும் மணி அடிப்பார்கள். உங்களுக்கும் மணி அடிக்கப்படுகிறது தான் இல்லையா? இன்றைய நாட்களிலோ நாகரீகம் வளர்ந்து விட்டது. எனவே பாட்டு ஒலிக்கிறது. பாட்டைக் கேட்டுக் கொண்டே தூங்குகிறீர்கள், பிறகு

பாட்டைக் கேட்டு எழுகிறீர்கள் என்றால் டாகூர் ஆகி விட்டீர்கள் இல்லையா? இங்கே உள்ளவையைத் தான் பக்தி மார்க்கத்தில் அப்படியே செய்கிறார்கள். இங்கேயும் மூன்று நான்கு தடவைகள் போக் (பிரசாதம்) சுவீகாரம் செய்விக்கிறீர்கள். சைத்தன்ய டாகூர்களுக்கு நான்கு மணியிலிருந்தே போக் சுவீகாரம் செய்விப்பது தொடங்கி விடுகிறது. அமிர்த வேளையிலிருந்து போக் தொடங்கி விடுகிறது. சைத்தன்ய சொரூபத்தில் பகவான் குழந்தைகளின் சேவை செய்து கொண்டிருக்கிறார். பகவானின் சேவையையோ அனைவரும் செய்கிறார்கள், ஆனால் இங்கு பகவான் சேவை செய்கிறார். யாருக்கு? சைத்தன்ய டாகூர்களுக்கு. இந்த நிச்சயம் எப்பொழுதுமே குஷியில் ஊஞ்சலாட வைத்துக் கொண்டே இருக்கும். புரிந்ததா? அனைத்து மண்டலங்களைச் சேர்ந்தவர்களும் செல்லமானவர்கள். எப்பொழுது எந்த மண்டலம் வருகிறதோ அவர்கள் செல்லமானவர்கள். செல்லமானவர்களாகவோ இருக்கிறீர்கள், ஆனால் தந்தையின் செல்லமானவர்களாக மட்டும் ஆகுங்கள். மாயாவின் செல்லமானவர்களாக ஆகி விடாதீர்கள். மாயாவின் செல்லமானவர்களாக ஆகிறார்கள் என்றால் பிறகு மிகுந்த அதிகார தோரணை செய்கிறார்கள். யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ அனைவரும் பாக்கியம் நிறைந்தவர்கள், பகவானிடம் வந்திருக்கிறீர்கள். நல்லது.

எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணத்தில் நிச்சயபுத்தி உடைய வெற்றி இரத்தினங்களுக்கு, எப்பொழுதும் பகவான் மற்றும் பாக்கியத்தின் நினைவு சொரூப ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் வெற்றி மற்றும் தோல்வி இரண்டிலும் வெற்றியை அனுபவம் செய்பவர்களுக்கு எப்பொழுதும் ஆதரவு அதாவது சகயோகம் கொடுக்கக்கூடிய மாஸ்டர் ஆதரவு அளிக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னை தந்தையுடன் இருக்கும் அனுபவம் செய்யக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** 1) நீங்கள் அனைவரும் ஒருவரின் அன்பில் மூழ்கியிருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களா? நீங்கள் சாதாரணமானவர்கள் இல்லை. சிரேஷ்ட ஆத்மாக்கள் எப்பொழுதும் என்ன காரியம் செய்தாலும் அது சிரேஷ்டமாக

இருக்கும். ஜென்மமே சிரேஷ்டமாக இருக்கிறது என்றால், காரியம் எப்படி சாதாரணமானதாக இருக்கும்? எப்பொழுது ஜென்மம் மாறி விடுகிறது என்றால், கர்மமும் அதாவது செய்யும் காரியமும் மாறிவிடுகிறது. பெயர், ரூபம், தேசம், கர்மம் அனைத்தும் மாறிவிடுகிறது. அந்த மாதிரி எப்பொழுதும் புதிய ஜென்மம், புதிய ஜென்மத்தின் புதுமையின் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கிறீர்கள். யார் உங்களில் சில நேரம் இருப்பவர்களோ அவர்களுக்கு இராஜ்யமும் சில நேரம் கிடைக்கும்.

யார் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களோ அவர்களுக்கு பொறுப்பாளர் ஆனதற்கான பலன் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. மேலும் பலன் என்ற பழத்தை அருந்தும் ஆத்மாக்கள் எப்பொழுதும் சக்திசாலியாக இருப்பார்கள். இது பிரத்யக்ஷ பலன், சிரேஷ்ட யுகத்தின் பலன், இந்தப் பலன் என்ற பழத்தை அருந்துபவர் சக்திசாலியாக இருப்பார். அந்த மாதிரி சக்திசாலியான ஆத்மா சூழ்நிலை மேல் சுலபமாகவே வெற்றி அடைந்து விடுவார். சூழ்நிலை கீழே, அவர் மேலே இருப்பார். எப்படி ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றி கூறும்பொழுது அவர் பாம்பின் மேல் வெற்றி அடைந்து அதன் தலை மேல் கால் வைத்து நடனம் ஆடினார் என்று காண்பிக்கிறார்கள். இது உங்களுடைய படம். எவ்வளவு தான் விஷம் நிறைந்த பாம்பாக இருந்தாலும் ஆனால் நீங்கள் அதன் மேலும் வெற்றியை அடைந்து நடனமாடுபவர்கள். இந்த சிரேஷ்ட சக்திசாலியான நினைவு தான் அனைவரையும் சக்திசாலியாக ஆக்கி விடும். மேலும் எங்கு சக்திசாலியான நிலை இருக்கிறதோ அங்கு வீணானவை அகன்று விடும். சக்திசாலியான தந்தையுடன் இதே நினைவின் வரதானம் மூலம் எப்பொழுதும் முன்னேறிக் கொண்டே இருங்கள்.

2) நீங்கள் அனைவரும் அமர தந்தையின் அமர ஆத்மாக்கள் தான் இல்லையா? அமரர் ஆகி விட்டீர்களா? உடலை விட்டாலும் கூட அமரர்கள், ஏன்? ஏனென்றால் பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டு செல்கிறீர்கள். கை காலியாகச் செல்வதில்லை, எனவே இறப்பதில்லை. நிரம்பிச் செல்ல வேண்டும். இறப்பது என்றால் கை காலியாகச் செல்வது. நிரம்பிச் செல்வது என்றால் ஆடையை மாற்றுவது. அந்த மாதிரி அமரர் ஆகி விட்டீர்கள் இல்லையா? அமரர் ஆகுக என்ற வரதானம் கிடைத்து விட்டது, இதில் மரணத்தின் வசமாவதில்லை. செல்லவும் வேண்டும். பிறகு வரவும் வேண்டும் என்று தெரிந்திருக்கிறீர்கள், எனவே அமரர்கள். அமரக் கதை

கேட்டு கேட்டு அமரர் ஆகி விட்டீர்கள். தினசரி மிகவும் அன்புடன் கதை கேட்கிறீர்கள் இல்லையா. காலியாக இருந்தீர்கள். இப்பொழுது நிரம்பி விட்டீர்கள். அந்த மாதிரி நிரம்பிவிட்டீர்கள். அதன் காரணமாக அனேக ஜென்மங்கள் காலியாக ஆக முடியாது.

3) அனைவரும் நினைவின் யாத்திரையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? இந்த ஆன்மீக யாத்திரை எப்பொழுதுமே சுகமான நிலையை அனுபவம் செய்விக்கும். இந்த யாத்திரையினால் சதா காலத்திற்காக அனைத்து யாத்திரைகளும் நிறைவேறி விடுகிறது. ஆன்மீக யாத்திரை செய்தீர்கள் என்றால் அனைத்து யாத்திரைகளும் செய்ததாக ஆகி விட்டது. மேலும் வேறு எந்த யாத்திரையும் செய்வதற்கு அவசியமே இருப்பது இல்லை. ஏனென்றால் மகான் யாத்திரை இல்லையா? மகான் யாத்திரையில் அனைத்து யாத்திரைகளும் அடங்கியிருக்கிறது. முன்பு யாத்திரைகளில் அங்கு இங்கு அலைந்தீர்கள். இப்பொழுது இந்த ஆன்மீக யாத்திரை மூலம் புகலிடத்திற்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். இப்பொழுது மனதிற்கும் உடலிற்கும் புகலிடம் கிடைத்து விட்டது. ஒரே ஒரு யாத்திரை மூலம் அனேக விதமான அலைந்து திரிவது முடிவடைந்து விட்டது. எனவே எப்பொழுதும் நான் ஆன்மீக யாத்திரிகன் என்ற இந்த நினைவில் இருங்கள். இதன் காரணமாக எப்பொழுதும் விடுபட்டு இருப்பவராக, விலகியிருப்பவராக, பற்றற்றவராக இருப்பீர்கள். யார் மேலேயும் பற்றுதல் செல்லாது. யாத்திரிகனுக்கு எதன் மேலும் பற்றுதல் செல்லாது. அம்மாதிரியான நிலை எப்பொழுதுமே இருக்கட்டும்.

**விடைபெறும் நேரம்:** பாப்தாதா அனைத்து பாரதம் மற்றும் வெளிநாட்டு குழந்தைகளை பார்த்து குஷி அடைகிறார். ஏனென்றால் அனைவரும் சகயோகி குழந்தைகள். சகயோகி குழந்தைகளை பாப்தாதா எப்பொழுதும் இதய சிம்மாசனதாரிகள் என்று புரிந்து நினைவு செய்கிறார். அனைத்து நிச்சயபுத்தி உடைய ஆத்மாக்கள் தந்தைக்குப் பிரியமானவர்கள். ஏனென்றால் அனைவரும் கழுத்தின் மாலையாக ஆகி விட்டார்கள். நல்லது. அனைத்து குழந்தைகளும் சேவையில் நல்ல வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். நல்லது.

**வரதானம்: உண்மையான சேவை மூலமாக அழியாத, ஆன்மீக குஷியின் கடலில் நீந்தக் கூடிய அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மா ஆகுக!**

எந்தக் குழந்தைகள் சேவைகளில் பாப்தாதா மற்றும் பொறுப்பில் இருக்கும் பெரியவர்களின் அன்பின் ஆசீர்வாதங்களை பிராப்தி செய்கிறாரோ அவர்களுக்கு மனதில் உலகீயமற்ற, ஆத்மீக குஷியின் அனுபவம் ஆகிறது. அவர்கள் சேவைகள் மூலமாக உள்மனதின் குஷி, ஆன்மீக மகிழ்ச்சி மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட பிராப்தியின் அனுபவம் செய்து கொண்டே எப்பொழுதும் குஷியின் கடலில் நீந்திக் கொண்டே இருப்பார்கள். உண்மையான சேவை அனைவரின் அன்பு, அனைவர் மூலமாக அழியாத மரியாதை மற்றும் குஷியின் ஆசீர்வாதங்கள் பிராப்தி செய்வதின் அதிர்ஷ்டத்தின் சிரேஷ்ட பாக்கியத்தை அனுபவம் செய்விக்கிறது. யார் எப்பொழுதும் குஷியாக இருக்கிறாரோ அவர் தான் அதிர்ஷ்டசாலி.

**சுலோகன்: எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த மற்றும் ஈர்க்ககூடியவராக ஆவதற்காக திருப்திமணி ஆகுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 27.11.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக போதை!

பாப்தாதா அனைத்து நிச்சய புத்தி குழந்தைகளின், நிச்சயத்தை பிரத்யட்சம் செய்யும் வாழ்க்கையின் சொரூபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். நிச்சய புத்தியின் சிறப்புகளைப் பற்றி நீங்கள் அனைவரும் கேட்டிருக்கிறீர்கள். அத்தகைய சிறப்புகளினால் நிறைந்துள்ள, நிச்சய புத்தியுடைய வெற்றி ரத்தினங்கள், இந்த பிராம்மண வாழ்வில் அதாவது புருஷோத்தம சங்கம யுக வாழ்க்கையில் எப்பொழுதும் உள்ள நிச்சய புத்திக்கு ஏற்ப ஆன்மீக போதையுடன் இருப்பார்கள். ஆன்மீக போதைதான் நிச்சய புத்தியின் தத் ரூபமாகும் (Mirror). நிச்சயம் என்பது ஸ்மிருதி அளவில் மட்டும் புத்தியில் இருப்பதில்லை ஆனால் ஒவ்வொரு அடியிலும், ஆன்மீக போதையின் சக்தியானது செயலின் மூலம் பிரத்யட்ச சொரூபமாக தனக்குள்ளும் அனுபவம் ஏற்படும். ஞானம் மற்றும் யோகம் அமைந்துள்ள வாழ்க்கை அமைந்துள்ளதால், மற்றவர்களும் இந்த ஆன்மீக போதையை அனுபவம் செய்விப்பார்கள். கேட்பது, சொல்வது மட்டும் அல்லாமல், நடைமுறை வாழ்க்கையிலும் இது தெரியும். வாழ்க்கையின் ஸ்மிருதியில் அதாவது, சங்கல்பம், சொல், செயல், சம்பந்தம் ஆகியவற்றிலும் இது தெரியும்.

நிச்சய புத்தி என்றால் ஆன்மீக நஷா உள்ள வாழ்க்கை என்று பொருள். இத்தகைய ஆன்மீக போதையுடைய ஆத்மாவின் ஒவ்வொரு சங்கல்பமும் போதை நிறைந்து காணப்படும். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் நிச்சயத்தின் போதையின் அனுபவம் இருக்கும். போதைக்கேற்ற குஷியின் ஒளி முகத்திலும், நடத்தையில் பிரத்யட்சமாகத் தென்படும். நிச்சயத்திற்கு ஏற்ப போதையும், போதைக்கு ஏற்ப குஷியும் இருக்கும். எவ்வளவு வகையான போதை இருக்கிறது என்பதை விவரிக்க ஆரம்பித்தால் அது மிகவும் விஸ்தாரமாக இருக்கும். அதன் சாரத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

முதலாவது வகை, அசரீரி ஆத்மீக சொரூப போதை. இதன் விவரத்தை அறிந்திருக்கிறீர்களா? அனைவரும் ஆத்மாக்கள் தான் ஆனால் 'நான் யாருடைய ஆத்மா' என்பதை நினைவில் வைக்கும்போதுதான், ஆன்மீக போதையை அனுபவம் செய்ய முடியும். இதைப் பற்றி உங்களுக்குள் விஸ்தாரமாக உரையாடுங்கள் அல்லது மனதுக்குள் விசார் சாகர் மன்தனம் செய்யுங்கள்.

இரண்டாவது வகையின் விசேஷ ரூபம், சங்கமயுகத்தின் அலௌகீக வாழ்வு. இந்த வாழ்க்கையிலும், இது எத்தகைய வாழ்க்கை என்பதை விரிவாக எண்ணிப் பாருங்கள். ஆகவே, முதலாவது ஆத்மீக சொரூபத்தின் போதை, இரண்டாவது அலௌகீக வாழ்க்கையின் போதை.

மூன்றாவது வகை, ஃபரிஷ்தா நிலையின் போதை. யாரை ஃபரிஷ்தா என்று கூறமுடியும் என்பது பற்றியும் விரிவாக சிந்தனை செய்யுங்கள்.

நான்காவது வகை வருங்கால தேவதா நிலையின் போதை. இந்த நான்கு வகைகளினால் ஏற்படும் அலௌகிக போதையில், எந்த ஒரு போதையாவது வாழ்க்கையில் இருந்தால், ஆத்மா இயற்கையாகவே குஷியுடன் நடனமாடிக் கொண்டேயிருக்கும். நிச்சயம் இருக்கிறது. இல்லாதிருப்பதன் காரணம் என்ன? போதை இல்லாதிருப்பது தான், நஷா இருந்தால் பழைய சமஸ்காரம், பழைய வாழ்க்கை ஆகிய இரண்டையும் எளிதாக மறக்கச் செய்து விடும். இந்த புருஷார்த்த வாழ்வில், இந்த பழைய சமஸ்காரம், பழைய உலகம் ஆகிய இரண்டுமே விசேஷ விக்ன உருவில் வருகின்றன. உலக வாழ்க்கை என்பதில், தேக சம்பந்தம், தேகம் ஆகிய இரண்டும் அடங்கியுள்ளன. அத்துடன் வாழ்க்கையைக்காட்டிலும், பழைய சமஸ்காரங்களே விக்ன உருவில் அதிகமாக வருகின்றன. உலகவாழ்வை மறக்க இயலுகிறது ஆனால் சமஸ்காரத்தை மறக்க இயலவில்லை. இந்த 4-போதைகளில் ஏதாவது ஒன்று சங்கல்ப சொரூபத்தில் மட்டும் இல்லாமல் தத்ரூப சொரூபத்தில் இருந்தால் அதுவே சமஸ்காரங்கள் பரிவர்த்தனை ஆக ஒரு சாதனம் ஆகி விடும். சாகார சொரூபத்தில் இருப்பதால், எதுவும் விக்னமாக வர முடியாது. இதுவரை சமஸ்கார பரிவர்த்தனை ஆகாமல் இருப்பதே காரணமாகும். இந்த போதையை சங்கல்பம் அளவிலேயே அதாவது ஞான உருவில் புத்தி வரை மட்டுமே கொண்டுவந்திருப்பதே காரணம். 'நான்

அனைத்தையும் அறிந்திருக்கிறேன், நான் திருந்தவேண்டும் என்பதை அறிவேன்' என்று ஏதாவது பழைய சமஸ்காரம் தலைதூக்கும் பொழுது கூறுகிறார்கள். செயலில் அதாவது வாழ்வில் நடைமுறையில் கொண்டு வந்தால்தான், பரிவர்த்தனையை அனுபவம் செய்ய இயலும். இதைத்தான் சாகார சொரூபத்தில் கொண்டு வருவது என்று கூறுகிறோம். இப்பொழுது புத்தியில் சிந்தனை செய்வது, வர்ணனை செய்வது என்கிற அளவில்தான் உள்ளது ஆனால் ஒவ்வொரு செயலிலும், தொடர்பிலும் பரிவர்த்தனை தெரியவேண்டும். சாகார சொரூபத்தில் அலௌகீக போதை என்பது இதுதான்.

இப்பொழுது ஒவ்வொரு போதையையும் வாழ்க்கையில் கொண்டு வாருங்கள். யாராவது உங்களுடைய நெற்றியைப் பார்த்தால், நெற்றியின் மூலமாக ஆன்மீக போதையின் விருத்தியை அனுபவம் செய்வார்கள். யார் வர்ணித்தாலும் வர்ணிக்காவிட்டாலும், உங்களுடைய விருத்தி, சுற்றுபுறத்தில் ஆன்மீக போதையின் அதிர்வுகளைப் பரப்பும். உங்களுடைய விருத்தி, மற்றவரின் சூழ்நிலையில், குஷியின் அதிர்வுகளை அனுபவம் செய்விக்கும். இதைத்தான் போதையில் நிலைத்திருப்பது என்று கூறுகிறோம்.

அவ்வாறு திருஷ்டியின் மூலம், உதடுகளின் புன்னகையின் மூலம், பேச்சின் மூலம், ஆன்மீக போதையை சாகார உருவில் அனுபவம் செய்ய முடிகிறதா? போதையில் இருப்பவர்களை அப்பொழுதுதான் நிச்சய புத்தியில் உள்ள வெற்றி ரத்தினம் என்று கூறுவார்கள். இதை ரகசியமாக வைக்கக்கூடாது. சிலர் சாதுர்யமாக, நாங்கள் குப்தமானவர்கள் என்று கூறுகின்றனர். சூரியனை ஒரு பொழுதும் மறைக்க முடியாது என்கிற பழமொழி உண்டு. எத்தகைய கருமேகங்கள் சூழ்ந்தாலும், சூரியனின் பிரகாசத்தை மறைக்க முடியாது. சூரியன் நகருகின்றதா அல்லது மேகங்கள் நகருகின்றனவா? காற்று வந்தாலும், உடன் அகன்று விடுகிறது ஆனால் சூரியன் எப்பொழுதும் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அவ்வாறே ஆன்மீக போதையில் உள்ளவர்கள் தமது பிரகாசத்தை மறைக்க முடியாது, அவருடைய ஆன்மீக போதையின் ஒளியை பிரத்யட்ச உருவில் அனுபவம் செய்ய இயலும். அவருடைய அதிர்வுகள் இயற்கையாகவே மற்றவர்களை வசீகரம் செய்யும். ஆன்மீக போதையில் இருப்பவர்களின் அதிர்வுகள், தனக்காகவும்,

மற்றவர்களுக்காகவும், குடைநிழலைப் (சத்ரசாயா) போல செயலாற்றும். ஆகவே இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? சாகார உருவில் உங்களுடைய ஆன்மீக போதையைக் கொண்டு வாருங்கள். நீங்கள் ஞானம் நிறைந்தவர்களாகி விட்டீர்கள்; ஆனால் ஞானத்தை சாகார வாழ்வில் கொண்டு வரும்போது, ஞானத்துடன் வெற்றியையும், ஆனந்தத்தையும் அனுபவம் செய்வார்கள். வெற்றி மற்றும் ஆனந்தம் என்கிற சொரூபம் எவ்வாறு அமையும் என்பது பற்றி பிறகு கூறுகின்றேன்.

இன்று ஆன்மீக போதையைப் பற்றிய விஷயத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அந்த போதை அனைவருக்கும் அனுபவம் ஆகட்டும். இந்த 4-போதைகளில் ஒவ்வொரு போதையையும், தனித்தனி உருவில் உபயோகப்படுத்துங்கள். அந்த போதையை உங்களுடைய வாழ்வில் உபயோகப்படுத்தும் அளவு நீங்கள் எப்பொழுதும் கவலையை நீக்கி விட்டு, கவலையற்ற பாதுஷாவாக மாறுவீர்கள். எல்லோரும் உங்களை கவலையற்ற பாதுஷாவின் உருவில் காண்பார்கள். இப்பொழுது விஸ்தாரத்தில் செல்லாமல், நடைமுறையில் கொண்டு வர வேண்டும். குஷி இருக்குமிடத்தில், மாயை வர முடியாது. கவலையற்ற பாதுஷாவிடம் மாயை வரவே முடியாது, வந்தாலும் உடன் அகன்று விடும். சில சமயம் தேக உருவில் வரும், சில சமயம் தேக சம்பந்தங்களின் உருவில் வரும். சில நேரம் மகா ரதி உருவில் யானையாக வரும். சில சமயம் பூனை போல் வரும். சில சமயம் எலிபோல் வரும். சிலர் எலியை அகற்றுகின்றனர். சிலர் பூனையை அகற்றுகின்றனர். இவ்வாறு அகற்றும் வேலையில் காலம் செலவழிந்து விடுகிறது. ஆகவே எப்பொழுதும் ஆன்மீக போதையில் இருங்கள். முதலில் நீங்கள் பிரத்யட்சம் ஆகுங்கள், பிறகு தந்தையை பிரத்யட்சம் செய்து காட்டலாம். ஏனெனில் உங்கள் மூலமாகவே தந்தையை பிரத்யட்சம் செய்ய வேண்டும். அச்சா!

சதா தன் மூலமாக சர்வ சக்திவானை பிரத்யட்சம் செய்யும் குழந்தைகளுக்கு; சதா தனது சாகார வாழ்வு என்கிற கண்ணாடி மூலம் ஆன்மீக போதையின் சிறப்புகளை பிரத்யட்ச செய்யும் குழந்தைகளுக்கு; சதா கவலையற்ற பாதுஷாவாகி மாயைக்கு விடை கொடுக்கும் குழந்தைகளுக்கு; சதா ஞான சொரூபத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு; அத்தகைய நிச்சய புத்தியின் போதையில் இருக்கின்ற குழந்தைகளுக்கு;

சதா குஷி என்கிற ஊஞ்சலில் ஆடுகின்ற குழந்தைகளுக்கு; அத்தகைய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு; விசேஷ ஆத்மாக்களுக்கு; பாப்தாதாவின் அன்பு, நினைவு, நமஸ்காரம் உரித்தாகுக!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 02.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பந்தனங்களிலிருந்து (தடைகளிலிருந்து) விடுபடுவதற்கான யுக்தி -ஆன்மீக சக்தி!

இன்று பாப்தாதா தன்னுடைய ஆன்மீகக் குழந்தைகளின் ஆன்மீகத்தன்மையின் சக்தியை பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு ஆன்மீகக் குழந்தையும் ஆன்மீகத் தந்தையிடமிருந்து ஆன்மீக சக்தியின் சம்பூர்ண அதிகாரத்தை, (உரிமை) குழந்தையாக இருக்கும் காரணத்தினால், பிராப்தி செய்தே இருக்கிறார்கள் ஆனால் பிராப்தி சொரூபமாக எந்த அளவு ஆகியிருக்கிறார்கள் என்பதை பார்த்துக் கொண்டிருந்தோம். அனைத்து குழந்தைகளும் ஒவ்வொரு நாளும் தன்னை ஆன்மீகக் குழந்தை என்று கூறி, ஆன்மீகத் தந்தைக்கு அன்பு நினைவுகளின் பிரதிபலனை வாய் மூலம் அல்லது மனம் மூலம் அன்பு நினைவு மற்றும் நமஸ்காரத்தின் ரூபத்தில் கொடுக்கிறார்கள். நீங்கள் பிரதிபலனை கொடுக்கிறீர்கள் தான் இல்லையா? இதன் இரகசியமாக தினசரி ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளே! என்று கூறி ஆன்மீக சக்தியின் வாஸ்தவமான சொரூபத்தை நினைவூட்டுகிறார். ஏனென்றால், இந்த பிராமண வாழ்க்கையின் விசேஷமே ஆன்மீகத்தன்மை தான். இந்த ஆன்மீகத் சக்தி மூலம் தன்னை மற்றும் மற்றவர்களை பரிவர்த்தனை (மாற்றம்) செய்கிறீர்கள். முக்கியமான அஸ்திவாரமே இந்த ஆன்மீக சக்தி தான்! இந்த சக்தி மூலமே தான் அனேக விதமான உலகியல் பந்தனங் களிலிருந்து முக்தி கிடைக்கிறது. இதுவரையிலும் கூட அனேக சூட்சும பந்தனங்கள், அதை அவர்களும் இந்த பந்தனத்திலிருந்து விடுபட வேண்டும் என்று அனுபவம் செய்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் ஆனால் முக்தி அடைவதற்கான யுக்தியை நடைமுறையில் கொண்டு வர முடியவில்லை. அதற்கு என்ன காரணம்? ஆன்மீக சக்தியை ஒவ்வொரு காரியத்திலும் உபயோகப்படுத்த தெரிவதில்லை. ஒரே நேரத்தில் எண்ணம், சொல் மற்றும் செயலை

மூன்றையுமே ஒன்றாகச் சேர்த்து சக்திசாலியானதாக ஆக்க வேண்டும் ஆனால் எதில் தொய்வு ஏற்பட்டு விடுகிறது? ஒரு பக்கம் எண்ணத்தை சக்திசாலியானதாக ஆக்கு கிறார்கள், என்றால், வார்த்தைகளில் கொஞ்சம் தொய்வாகி விடுகிறார்கள். எப்பொழுதாவது வார்த்தைகளை சக்திசாலியாக ஆக்குகிறார்கள் என்றால், காரியத்தில் தொய்வாகி விடுகிறார்கள் ஆனால் இந்த மூன்றையுமே ஒரே நேரத்தில் ஆன்மீக சக்திசாலியானதாக ஆக்கி விட்டீர்கள் என்றால், இது தான் முக்தி அடைவதற்கான யுக்தி. எப்படி உலகின் படைப்பில் மூன்று காரியங்கள் -ஸ்தாபனை, பாலனை மற்றும் விநாஷம் மூன்றுமே அவசியமாக இருக்கிறது. அதே போல் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபடுவதற்கான யுக்தி எண்ணம், சொல் மற்றும் செயல் மூன்றிலும் சேர்ந்தே ஆன்மீக சக்தி அவசியமானது. எப்பொழுதாவது மனதின் எண்ணங்களை பாதுகாக்கிறார்கள் என்றால், வார்த்தைகளில் குறை ஏற்பட்டு விடுகிறது. பிறகு அப்படியோ யோசிக்கவில்லை ஆனால் என்ன ஆகி விட்டது என்று தெரியவில்லை என்று கூறுகிறார்கள். மூன்றின் மீதும் முழுமை யான கவனம் வேண்டும். ஏன்? இந்த மூன்று சாதனங்கள் தான் சம்பன்ன நிலையை மற்றும் தந்தையை பிரத்யக்ஷம் (வெளிப்பாடு) செய்பவை. முக்தி அடைவதற்காக இந்த மூன்றிலும் ஆன்மீகத் தன்மை அனுபவம் ஆக வேண்டும். யார் மூன்றிலும் யுக்தி யுக்தாக இருக்கிறாரோ அவர் தான் ஜீவன்முக்த் நிலையில் இருக்கிறார். அந்த மாதிரி இன்று பாப்தாதா சூட்சும பந்தனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். சூட்சும பந்தனத்திலும் கூட விசேஷமாக இந்த மூன்றின் தொடர்பு இருக்கிறது. பந்தனத்தின் அடையாளம் -

பந்தனம் உள்ளவர் எப்பொழுதுமே மற்றவர்கள் மற்றும் மற்றவையின் வசத்தில் இருப்பார். பந்தனம் உள்ளவர்கள் தன்னை மனதால் குஷி மற்றும் சுகத்தை எப்பொழுதும் அனுபவம் செய்ய மாட்டார். எப்படி உலகத்திலும் அற்பகாலத்தின் சாதனம் அற்பகாலத்தின் குஷி மற்றும் சுகத்தின் அனுபவத்தை செய்விக்கிறது ஆனால் மனதின் மற்றும் அழியாத அனுபவத்தின் அனுபவம் இருக்காது. அந்த மாதிரி சூட்சும பந்தனத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆத்மாக்கள் இந்த பிராமண வாழ்க்கையிலும் சிறிது நேரத்திற்காக சேவையின் சாதனம், குழுவின் சக்தியின் சாதனம், ஏதாவது பிராப்தியின் சாதனம், சிரேஷ்ட தொடர்பின் சாதனம் என்று இந்த சாதனங்களின் ஆதாரத்தில் நடந்து

கொண்டிருக்கிறார்கள். எதுவரை சாதனம் இருக்குமோ அதுவரை குஷி மற்றும் சுகத்தின் அனுபவம் செய்கிறார்கள் ஆனால் சாதனம் முடிவடைந்தது என்றால், குஷியும் முடிவடைந்தது. எப்பொழுதும் ஒரே சீராக இருக்க மாட்டார்கள். சில நேரம் குஷியில் அந்த மாதிரி நடனமாடுவார், அந்த மாதிரி அவரை பார்த்தால் அவர் மாதிரி வேறு யாருமே இல்லை என்று அனுபவம் ஆகும் ஆனால் நிற்கிறார் என்றால் ஒரு சின்ன கல்லைக் கூட மலைக்குச் சமமாக அனுபவம் செய்வார். ஏனென்றால் உண்மையான சக்தி இல்லாத காரணத்தினால் சாதனங்களின் ஆதாரத்தில் குஷியில் நடனமாடுகிறார். சாதனம் அகன்றுவிட்டது என்றால், எங்கே நடனமாட முடியும்? எனவே உள்ளே ஆன்மீக சக்தி மூன்று ரூபங்களில் எப்பொழுதும் சேர்ந்தே அவசியம் இருக்க வேண்டும். முக்கியமான பந்தனம் -மனதின் எண்ணங்களை கட்டுப்படுத்தும் சக்தி இருப்பதில்லை. தன்னுடைய எண்ணங்களின் வசமாகும் காரணத்தினால் பிறவற்றின் வசமான அனுபவம் செய்கிறார்கள். யார் தன்னுடைய எண்ணங்களின் பந்தனத்தில் இருக்கிறாரோ அவர் அதிக நேரம் இதிலேயே பிஸியாக இருப்பார். எப்படி நீங்களும் காற்றின் மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார் என்று கூறுகிறீர்கள் இல்லையா? கோட்டையை உருவாக்குகிறார்கள், பிறகு கலைக்கிறார்கள். மிக நீளமான சுவரை எழுப்புகிறார்கள். எனவே காற்றுக் கோட்டை என்று கூறுவது. எப்படி பக்தியில் பூஜை செய்து, நன்றாக அலங்காரம் செய்து தண்ணீரில் மூழ்கடிக்கிறார்கள் இல்லையா? அதே போல் எண்ணத்தின் பந்தனத்தில் மாட்டிக் கொண்டிருக்கும் ஆத்மா மனதில் மிக அதிகமாக உருவாக்குவார்கள், மேலும் மிக அதிகமாக உருவாக்கியதை கலைப்பார்கள். அவர்களே இந்த வீணான காரியத்தினால் களைப்படைந்தும் விடுகிறார்கள், மனமுடைந்தும் போய் விடுகிறார்கள். மேலும் சில நேரம் அபிமானத்தில் வந்து தன்னுடைய தவறை மற்றவர்கள் மேல் சுமத்திக் கொண்டே இருப்பார்கள். இருந்தாலும் காலம் கழிந்த பிறகு மனதில் இதை நான் சரியாகச் செய்யவில்லை என்று உணருகிறார்கள், யோசிக்கிறார்கள் ஆனால் அபிமானத்தின் வசமான காரணத்தினால், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால், மற்றவர்களைத் தான் குறை கூறுவதற்கு யோசித்துக் கொண்டே இருப்பார்கள். அனைத்தையும் விட மிகப் பெரிய பந்தனம் இந்த மனதின் எண்ணங்களின் பந்தனங்களினால் உருவாகும் பந்தனம், அதனால் புத்தியில் பூட்டு போடப்பட்டு விடுகிறது.

எனவே எவ்வளவு தான் புரிந்து கொள்ள முயற்சி செய்தாலும், அவரால் புரிந்து கொள்ள முடியாது. மனதின் எண்ணங்களின் பந்தனத்தின் முக்கிய அடையாளம், உணரும் சக்தி முடிவடைந்து விடுகிறது, எனவே இந்த சூட்சும பந்தனத்தை அகற்றாமல் ஒருபொழுதும் மனதில் குஷி மற்றும் சதா காலத்திற்காக அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்ய முடியாது.

அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுவது மற்றும் எப்பொழுதும் குஷியில் நடனமாடுவது தான் சங்கமயுகத்தின் விசேஷம். எனவே சங்கமயுகத்தைச் சேர்ந்தவராக ஆகி ஒருவேளை இந்த விசேஷத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் அவரை என்னவென்று கூறுவது? எனவே, என்னிடம் எந்த விதமான எண்ணங்களின் பந்தனமோ இல்லையே என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். அது வீணான எண்ணங்களின் பந்தனமாக இருந்தாலும், பொறாமை, வெறுப்பு நிறைந்த எண்ணமாக இருந்தாலும், அலட்சியத்தின் எண்ணமாக இருந்தாலும் அல்லது சோம்பலின் எண்ணமாக இருந்தாலும் அப்படி எந்த விதமான எண்ணமும் அது மனதின் எண்ணத்தின் பந்தனத்தின் அடையாளம். அந்த மாதிரி இன்று பாப்தாதா பந்தனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். விடுபட்ட ஆத்மாக்கள் எத்தனை பேர்? என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

பெரிய பெரிய கயிறுகள் அறுந்து விட்டன. இப்பொழுது இந்த நுண்ணியமான கயிறுகள் இருக்கின்றன. மிக மெல்லிய கயிறு தான், ஆனால் பந்தனத்தில் கட்டிப் போடுவதில் மிகவும் வ-மை நிறைந்தது. நான் பந்தனத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறேன் என்பதே தெரியாது. ஏனென்றால் இந்த பந்தனம் அற்ப கால போதையையும் ஏற்றுகிறது. எப்படி அழியும் போதையுள்ள மனிதன் தன்னை ஒருபொழுதும் தாழ்ந்தவன் என்று நினைப்பதில்லை. சாக்கடையில் கிடைப்பார், ஆனால் தான் மாளிகையில் இருப்பதாக நினைப்பார். கை காலியாக இருக்கும், ஆனால் தன்னை இராஜா என்று நினைப்பார். அதே போல் இந்த போதை உள்ளவரும் ஒருபொழுதும் தன்னை தவறு என்று நினைக்க மாட்டார். எப்பொழுதும் தன்னை சரியானவர் என்று நிரூபிப்பார் அல்லது அலட்சியத்தைக் காண்பிப்பார். இதுவோ நடக்கத் தான் செய்யும், அந்த மாதிரி நடந்து கொண்டு தான் இருக்கிறது என்று கூறுவார். எனவே

இன்று மனதின் எண்ணங்களின் பந்தனத்தை மட்டும் கூறினோம். பிறகு வார்த்தைகள் மற்றும் காரியத்தின் பந்தனங்களைப் பற்றியும் கூறுவோம். புரிந்ததா?

ஆன்மீக சக்தி மூலமாக முக்தியை அடைந்து கொண்டே இருங்கள். சங்கமயுகத்தில் ஜீவன்முக்தியை அனுபவம் செய்வது தான் எதிர்காலத்து ஜீவன்முக்த் பிராப்தியை அடைவது. பொன்விழா ஆண்டிலோ ஜீவன்முக்த்தாக ஆக வேண்டும் இல்லையா அல்லது பொன்விழாவை கொண்டாட மட்டும் வேண்டுமா? ஆவது தான் கொண்டாடுவது. உலகத்தினரோ கொண்டாட மட்டும் செய்கிறார்கள், ஆனால் இங்கு அந்த மாதிரி ஆக்குகிறோம். இப்பொழுது விரைவில் தயாராகி விடுங்கள். அப்பொழுது தான் அனைவரும் உங்களுடைய முக்தி மூலம் முக்த் ஆகி விடுவார்கள். அறிவியலைச் சேர்ந்தவர்களும் அவர்களால் உருவாக்கப்பட்ட சாதனங்களின் பந்தனத்தில் கட்டப்பட்டு இருக்கிறார்கள். தலைவர்களையும் பாருங்கள், தப்பித்துக் கொள்ள விரும்புகிறார்கள் ஆனால் எவ்வளவு கட்டப்பட்டு இருக்கிறார்கள். நினைத்தாலும் செய்ய முடிவதில்லை என்றால், அது பந்தனம் ஆனது இல்லையா? அனைத்து ஆத்மாக்களையும் பல விதமான பந்தனங்களிலிருந்து விடுபடச் செய்யக் கூடிய நீங்கள் சுயம் விடுபட்டவராகி அனைவரையும் விடுபட்டவர்களாக ஆக்குங்கள். உலகிலுள்ள அனைவருமே முக்தி, முக்தி என்று கூறி கதறிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் ஏழ்மையிலிருந்து விடுபட விரும்புகிறார்கள். சிலர் குடும்பத்திலிருந்து விடுபட விரும்புகிறார்கள் ஆனால் அனைவரின் குரலோ முக்தி அடைவதற்கானது தான். எனவே இப்பொழுது முக்தி வழங்குபவர் ஆகி முக்தி அடைவதற்கான வழியைக் கூறுங்கள் மற்றும் முக்தியின் ஆஸ்தியைக் கொடுங்கள். இதுவோ தந்தையால் செய்ய முடியும் காரியம் தான் என்ற செய்தி அனைவரிடமோ சென்றடைகிறது என்றும் புரிந்து கொள்கிறீர்கள். நாம் செய்ய வேண்டியது என்ன. நீங்கள் பிராப்தியை அடைய வேண்டும், தந்தைக்கு அடைய வேண்டாம். உங்களுக்கு பிரஜைகளும் வேண்டும், பக்தர்களும் வேண்டும். தந்தைக்கு வேண்டாம். யார் உங்களுடைய பக்தர்களாக இருப்பார்களோ அவர்கள் தந்தையின் பக்தர்களாக இயல்பாகவே ஆகி விடுவார்கள். ஏனென்றால் துவாபர் யுகத்தில் நீங்கள் தான் முதல் பக்தனாக ஆவீர்கள். முதலில் தந்தையின் பூஜையைத் தொடங்குவீர்கள். அனைவரும் இப்பொழுது உங்களை பின்பற்றிச் செய்வார்கள். எனவே

இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? அவர்களுடைய கூக்குரலைக் கேளுங்கள். முக்தி அளிக்கும் வள்ளலாக ஆகுங்கள். நல்லது.

எப்பொழுதும் ஆன்மீக சக்தியின் யுக்தி மூலம் முக்தியை அடையக்கூடிய, எப்பொழுதும் தன்னை சூட்சும பந்தனத்திலிருந்து விடுபடச் செய்து முக்தி அளிக்கும் வள்ளலாக ஆகக்கூடிய, எப்பொழுதும் தன்னை மனதின் குஷி மற்றும் அதீந்திரிய சுகத்தின் அனுபவத்தில் மிகவும் முன்னுக்கு செல்ல வைக்கக் கூடிய, எப்பொழுதும் அனைவர் மீதும் முக்தி அடைந்த ஆத்மா ஆவதற்கான சுபபாவனை வைத்திருக்கும் ஆன்மீக சக்திசாலியான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** நீங்கள் கேட்பதின் கூடவே சொரூபம் ஆவதிலும் சக்திசாலியான ஆத்மாக்கள் தான் இல்லையா? எப்பொழுதும் தன்னுடைய எண்ணங்களில் ஒவ்வொரு நாளும் தனக்காக மற்றும் மற்றவர்களுக்காக ஏதாவது ஊக்கம், உற்சாகம் நிறைந்த எண்ணத்தை வையுங்கள். எப்படி இன்றைய நாட்களில் செய்தித் தாள்களில் அல்லது நிறைய இடங்களில் 'இன்றைய சிந்தனை' என்று விசேஷமாக எழுதுகிறார்கள் இல்லையா? அதே போல் தினசரி மனதின் எண்ணத்தில் ஏதாவது ஊக்கம் உற்சாகத்தை வெளிப்படும் ரூபத்தில் கொண்டு வாருங்கள். மேலும் அதே எண்ணத்தினால் தானும் சொரூபம் ஆகுங்கள், மேலும் மற்றவர்களின் சேவையிலும் ஈடுபடுத்தினீர்கள் என்றால் என்ன ஆகும்? எப்பொழுதுமே புதிய ஊக்கம் உற்சாகம் இருக்கும். இன்று இதைச் செய்வோம், இன்று இதைச் செய்வோம் என்று ஊக்கம் உற்சாகம் இருக்கும். எப்படி ஏதாவது விசேஷ நிகழ்ச்சி இருக்கிறது என்றால், ஏன் ஊக்கம் உற்சாகம் வருகிறது? இதைச் செய்வோம் பிறகு இதைச் செய்வோம் என்று திட்டத்தை உருவாக்குகிறீர்கள் இல்லையா? இதன் மூலம் விசேஷமாக ஊக்கம், உற்சாகம் வருகிறது. அதே மாதிரி தினசரி அமிர்தவேளையில் விசேஷமாக ஊக்கம் உற்சாகத்தின் எண்ணத்தை வையுங்கள். மேலும் பிறகு சோதனை செய்து பார்த்தீர்கள் என்றால், தன்னுடைய வாழ்க்கையும் சதா காலத்திற்கு உற்சாகம் நிரம்பியதாக இருக்கும், மேலும் உற்சாகம் கொடுப்ப தாகவும் ஆகி விடும். புரிந்ததா? எப்படி மனோரஞ்சன நிகழ்ச்சிகள் நடக்கின்றன அதே போல் தினசரி இந்த மனதிற்கான மனோரஞ்சன நிகழ்ச்சி இருக்கட்டும். நல்லது.

2) நீங்கள் எப்பொழுதும் சக்திசாலியான நினைவில் முன்னேறிச் செல்லும் ஆத்மாக்கள் தான் இல்லையா? சக்திசாலியான நினைவின்றி எந்த அனுபவமும் ஏற்பட முடியாது. எனவே எப்பொழுதும் சக்திசாலியாகி முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். எப்பொழுதும் தன்னுடைய சக்திக்கு ஏற்றபடி ஈஸ்வரிய சேவையில் ஈடுபட்டு விடுங்கள். மேலும் சேவையின் பலனை அடையுங்கள். எந்த அளவு சக்தி இருக்கின்றதோ அந்த அளவு சேவையில் ஈடுபடுத்திக் கொண்டே இருங்கள். அது உடல் மூலமாகவோ, மனம் மூலமாகவோ, பணம் மூலமாகவோ இருந்தாலும் ஒன்றிற்கு பல மடங்கு கண்டிப்பாக கிடைக்கும். தனக்காக சேமிக்கிறீர்கள். அனேக ஜென்மங்களுக்காக சேமிக்க வேண்டும். ஒரு ஜென்மத்தில் சேமிப்பதினால் 21 ஜென்மங்கள் கடும் உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். இந்த இரகசியத்தை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? எனவே எப்பொழுதும் தன்னுடைய எதிர்காலத்தை உயர்ந்ததாக ஆக்கிக் கொண்டே இருங்கள். மிகவும் குஷியோடு தன்னை சேவையில் முன்னேற்றிக் கொண்டே இருங்கள். எப்பொழுதும் நினைவு மூலமாக ஒரே சீரான நிலையோடு முன்னேறுங்கள்.

3) நீங்கள் நினைவின் குஷி மூலம் அனேக ஆத்மாக்களுக்கு குஷி கொடுக்கக்கூடிய சேவாதாரி தான் இல்லையா? உண்மையான சேவாதாரி என்றால் எப்பொழுதும் தானும் முழு ஈடுபாட்டில் மூழ்கியிருப்பது மற்றும் மற்றவர்களையும் முழு ஈடுபாட்டில் மூழ்கச் செய்வது!. ஒவ்வொரு இடத்தின் சேவை அதன் அதனுடையது. இருந்தும் ஒருவேளை அவரே இலட்சியம் வைத்து முன்னேறிச் செல்கிறார் என்றால், இந்த முன்னேறிச் செல்வது என்பது அனைத்தையும் விட குஷிக்கான விஷயம். உண்மையில் இந்த உலகியல் படிப்பு ஆகியவை அனைத்தும் அழியக்கூடியவை, அழியாத பிராப்திக்கான சாதனம் இந்த ஞானம் மட்டும் தான். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? பாருங்கள், சேவாதாரிகள் உங்களுக்கு நாடகத்தில் எவ்வளவு பொன்னான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த பொன்னான வாய்ப்பை எந்த அளவு முன்னேற்றுகிறீர்களோ அந்த அளவு உங்களுடைய கையில் இருக்கிறது. இந்த மாதிரியான பொன்னான வாய்ப்பு அனைவருக்கும் கிடைப்பதில்லை. கோடியில் சிலருக்குத் தான் கிடைக்கிறது. உங்களுக்கோ கிடைத்து விட்டது. அந்த அளவு குஷி இருக்கிறதா? உலகத்தில் எது யாரிடமும் இல்லையோ அது எங்களிடம் இருக்கிறது.

அந்த மாதிரி குஷியில் நீங்களும் எப்பொழுதும் இருங்கள், மேலும் மற்றவர்களையும் கொண்டு வாருங்கள். எந்த அளவு நீங்கள் முன்னேறுவீர்களோ அந்த அளவு மற்றவர்களையும் முன்னேற்று வீர்கள். நீங்கள் எப்பொழுதும் முன்னேறிச் செல்பவர்கள், அங்கு இங்கு பார்த்து நிற்பவர்கள் இல்லை. எப்பொழுதும் தந்தை மற்றும் சேவை மட்டும் எதிரில் இருக்கட்டும். பிறகு எப்பொழுதும் முன்னேற்றத்தை அடைந்து கொண்டே இருப்பீர்கள். தன்னை எப்பொழுதும் தந்தையின் கண்டெடுக்கப்பட்ட குழந்தை என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள்.

**வேலை செய்யும் குமாரிகளுடன் சந்திப்பு:** 1) அனைவரின் இலட்சியமோ சிரேஷ்டமாக இருக்கிறது இல்லையா? இரண்டு பக்கமும் (வாழ்க்கையிலும்) இருந்து கொண்டே இருப்போம் என்று அப்படி நினைக்கவில்லையே? எப்பொழுதாவது ஏதாவது பந்தனம் ஏற்படுகிறது என்றால் இரண்டு பக்கமும் செல்வது வேறு விஷயம் ஆனால் பந்தனமற்ற ஆத்மாக்கள் இரண்டு பக்கங்களிலும் இருப்பது என்றால் ஒட்டித் தொங்குவது. சிலருடைய சூழ்நிலைகள் அப்படி இருக்கிறது என்றால் பாப்தாதாவும் அனுமதி கொடுக்கிறார் ஆனால் மனதின் பந்தனம் இருக்கிறது என்றால், இந்த மாதிரி ஒட்டித் தொங்குவது ஆகிறது. ஒரு கால் இங்கே இருக்கிறது மற்றும் இன்னொரு கால் அங்கே இருக்கிறது என்றால் என்ன நடக்கும்? ஒருவேளை ஒரு படகில் ஒரு காலை வைக்கிறீர்கள், இன்னொரு படகில் இன்னொரு காலை வைக்கிறீர்கள் என்றால் என்ன நிலைமை ஆகும்? பிரச்சனை ஆகி விடும் இல்லையா? எனவே இரண்டு கால்களும் ஒரு படகில் இருக்க வேண்டும். எப்பொழுதும் தைரியத்தை வையுங்கள். தைரியம் வைப்பதினால் சுலபமாகவே கடந்து விடுவீர்கள். என்னுடன் பாபா இருக்கிறார் என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். நீங்கள் தனியாக இல்லை என்றால் நீங்கள் என்ன காரியம் செய்ய விரும்புகிறீர்களோ அதை உங்களால் செய்ய முடியும்.

2) குமாரிகளுக்கு சங்கமயுகத்தில் விசேஷ பாகம் இருக்கிறது. தன்னை அந்த மாதிரி விசேஷமான நடிகனாக ஆக்கி விட்டீர்களா? அல்லது இதுவரையிலும் சாதாரணமாக இருக்கிறீர் களா? உங்களுடைய விசேஷம் என்ன? சேவாதாரி ஆவது தான் உங்களுடைய விசேஷம். யார் சேவாதாரியோ அவர் விசேஷமானவர். சேவாதாரி இல்லை என்றால்,

சாதாரணமானவராக ஆகி விட்டீர்கள். என்ன இலட்சியம் வைத்திருக்கிறீர்கள்? சங்கமயுகத்தில் தான் இந்த வாய்ப்பு கிடைக்கிறது. ஒருவேளை இப்பொழுது இந்த வாய்ப்பை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் முழுக்கல்பத்திலும் கிடைக்காது. சங்கமயுகத்திற்குத் தான் விசேஷ வரதானம் இருக்கிறது. உலகியல் படிப்பை படித்துக் கொண்டிருந்தாலும் இந்தப் படிப்பில் முழு ஆர்வம் மற்றும் ஈடுபாடு இருக்கட்டும். இந்தப் படிப்பு தடை ரூபமாக ஆகாது. எனவே நீங்கள் அனைவரும் தங்களுடைய பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டே முன்னேறிச் செல்லுங்கள். எந்த அளவு தன்னுடைய பாக்கியத்தின் போதை இருக்குமோ அந்த அளவு சுலபமாகவே மாயாவை வென்றவர் ஆகி விடுவீர்கள். இது ஆன்மீக போதை. எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தின் பாடலைப் பாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால், பாடலைப் பாடிக் கொண்டே தன்னுடைய இராஜ்யம் வரை சென்றடைந்து விடுவீர்கள்.

**வரதானம்: தன்னுடைய அனைத்து பலஹீனங்களையும் தானத்தின் விதி மூலம் அழிக்கக்கூடிய வள்ளல், வழங்குபவர் ஆகுக!**

பக்தியில் எப்பொழுது ஏதாவது ஒரு பொருளின் குறை ஏற்படுகிறது என்றால், அதை தானம் செய்ய வேண்டும் என்ற நியமம் இருக்கிறது. தானம் செய்வதினால் கொடுக்கல், வாங்கல் ஆகி விடுகிறது. எனவே எந்தவொரு பலஹீனத்தையும் அகற்றுவதற்காக வள்ளல் மற்றும் வழங்குபவர் ஆகுங்கள். ஒருவேளை நீங்கள் தந்தையின் பொக்கிஷத்தை மற்றவர்களுக்கு கொடுப்பதற்காக பொறுப்பிலிருக்கும் ஆதாரமாக ஆனீர்கள் என்றால், பலஹீனங்கள் விலகுவது இயல்பாகவே நடந்து விடும். தன்னுடைய வள்ளல் -வழங்கும் தன்மையின் சக்திசாலியான சம்ஸ்காரத்தை வெளிப்படுத்தினீர்கள் என்றால், பலஹீனமான சம்ஸ்காரம் இயல்பாகவே முடிவடைந்து விடும்.

**சுலோகன்: தன்னுடைய சிரேஷ்ட பாக்கியத்தை மகிமை பாடிக் கொண்டே இருங்கள் -தன்னுடைய பலஹீனத்தை அல்ல!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 04.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கல்பத்தின் (எண்ணத்தின்) பாஷை -மிக உயர்ந்த பாஷை!

இன்று பாப்தாதாவின் எதிரில் இரண்டு ரூபத்தில் இரண்டு சபை கூடியிருக்கிறது. இரண்டுமே அன்பான குழந்தைகளின் சபை. ஒன்று சாகார ரூபம் உள்ள (உடலிலிருக்கும்) குழந்தைகளின் சபை. இன்னொன்று ஒளி வடிவ உடலில் அன்பு சொரூப குழந்தைகளின் சபை. அன்புக் கடல் தந்தையோடு சந்திப்பதற்காக நாலாபுறங்களில் உள்ள ஒளி வடிவ உடல் உள்ள குழந்தைகள் தங்களுடைய அன்பை பாப்தாதாவின் எதிரில் பிரத்யக்ஷம் செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளின் அன்பு நிறைந்த எண்ணம், உள்ளத்தின் விதவிதமான ஊக்கம் உற்சாகத்தின் எண்ணம், இதயத்தின் பலவிதமான பாவனைகளின் கூடவே அன்பின் சம்மந்தத்தின் அதிகாரத் தினுடன் அதிகார ரூபத்தின் இனிமையான விஷயங்களை கேட்டுக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய இதயத்தின் நிலைப்பாட்டை, தன்னுடைய பலவிதமான குடும்ப சூழ்நிலையின் நிலைப்பாட்டை, சேவையின் செய்திகளின் நிலையை, கண்களின் பாஷை மூலம், சிரேஷ்ட அன்பின் எண்ணங்களின் பாஷை மூலம் தந்தையின் எதிரில் தெளிவாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அனைத்துக் குழந்தைகளின் ஆன்மீக உரையாடலை பாப்தாதா மூன்று ரூபங்களில் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஒன்று கண்களின் பாஷை மூலம் கூறுகிறார்கள், 2) -பாவனையின் பாஷையில், 3) -எண்ணத்தின் பாஷையில் கூறுகிறார்கள். வாய்மூலம் பேசும் பாஷையோ பொதுவான பாஷை ஆனால் இந்த மூன்று விதமான பாஷை ஆன்மீக யோகி வாழ்க்கையின் பாஷை. அதை ஆன்மீகக் குழந்தைகள் மற்றும் ஆன்மீகத் தந்தை தெரிந்திருக்கிறார், மேலும் அனுபவம் செய்கிறார்கள். எந்த அளவு உள்நோக்குமுகமாகி இனிமையான அமைதி சொரூபத்தில் நிலைத்திருந்து கொண்டே இருப்பீர்களோ அந்தளவு இந்த மூன்று பாஷைகள் மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் அனுபவம்

செய்விப்பீர்கள். இந்த ஆன்மீக பாஷைகள் எவ்வளவு சக்திசாலியானவை. வாயின் பாஷையைக் கேட்டு மற்றும் கூறி அதிகமானவர்கள் களைப்படைந்து விட்டார்கள். வாயின் பாஷையில் ஏதாவது ஒரு விஷயத்தைத் தெளிவாக்குவதற்கு நேரமும் எடுக்கும் ஆனால் கண்களின் பாஷை சமிக்ஞை கொடுப்பதின் பாஷை. மனதின் பாவனையின் பாஷை முகம் மூலமாக பாவனையின் ரூபத்தில் பிரசித்தம் ஆகும். முகத்தின் பாவனை மனதின் பாவனையை நிரூபிக்கும். எப்படி யாராவது ஒருவரின் எதிரில் செல்கிறார், அன்போடு செல்கிறார் அல்லது பகைமையோடு செல்கிறார், அல்லது யாராவது சுயநலமாக செல்கிறார் என்றால் அவருடைய மனதின் பாவனை முகம் மூலம் தென்படும். எந்த பாவனையோடு இவர் வந்திருக்கிறார் என்பது கண்கள் மற்றும் அவருடைய நிலை கூறும். அந்த மாதிரி பாவனையின் பாஷையை முகத்தின் பாவனையின் மூலம் தெரிந்து கொள்ளவும் முடியும், கூறவும் முடியும். அதே போலவே எண்ணத்தின் பாஷையும் மிக உயர்ந்த பாஷை. ஏனென்றால் எண்ணத்தின் சக்தி அனைத்தையும் விட சிரேஷ்ட சக்தி, மூலமான சக்தி. மேலும் மற்ற அனைத்தையும் விட அதிவேகம் உள்ள பாஷை இந்த எண்ணத்தின் பாஷை. யார் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், அங்கே செல்வதற்கு எந்த சாதனமும் இல்லை என்றாலும், எண்ணத்தின் பாஷை மூலமாக யாருக்கும் செய்தியைக் கொடுக்க முடியும். இறுதி நேரத்தில் இதே எண்ணத்தின் பாஷை தான் உதவியாக இருக்கும். அறிவியலின் சாதனங்கள் எப்பொழுது செயலிழந்து விடுமோ அப்பொழுது இந்த அமைதியின் சாதனம் உபயோகத்தில் வரும் ஆனால் எந்தவொரு கனெக்ஷனையும் (தொடர்பையும்) இணைப்பதற்காக லைன் (பாதை) தெளிவாக இருக்க வேண்டும். எந்த அளவு ஒரு தந்தை மற்றும் அவர் மூலமாகவே கேட்ட ஞானத்தில் மேலும் அதே ஞானம் மூலமாக சேவையில் எப்பொழுதும் பிஸியாக இருப்பதற் கான பயிற்சி உள்ளவராக இருப்பீர்களோ அந்த அளவு சிரேஷ்ட எண்ணம் இருக்கும் காரணத்தினால் லைன் தெளிவாக இருக்கும். வீணான எண்ணங்கள் தான் இடையூறு செய்பவை. எந்தளவு வீணானவை முடிவடைந்து சக்திசாலியான எண்ணம் இருக்குமோ அந்த அளவே எண்ணத்தின் சிரேஷ்ட பாஷையை தெளிவாக அனுபவம் செய்வீர்கள். எப்படி வாயின் பாஷை மூலம் அனுபவம் செய்கிறீர்கள். எண்ணத்தின் பாஷை ஒரு நொடியில் வாயின் பாஷையை விட மிக அதிகமாக யாருக்கும் அனுபவம் செய்விக்க முடியும். மூன்று நிமிடத்தின் சொற்பொழிவின் சாரத்தை ஒரு நொடியில்

எண்ணத்தின் பாஷை மூலமாக அனுபவம் செய்விக்க முடியும். ஒரு நொடியில் ஜீவன் முக்தி என்ற வர்ணனை இருக்கிறது இல்லையா அதை அனுபவம் செய்விக்க முடியும்.

உள்நோக்குமுகமுடைய ஆத்மாக்களின் பாஷை இதே ஆன்மீக பாஷை. இப்பொழுது நேரத்திற்கு ஏற்றாற் போல் இந்த மூன்று பாஷைகள் மூலமாக சுலபமாக வெற்றியை பிராப்தி செய்வீர்கள். உழைப்பும் குறைவு, நேரமும் குறைவாக ஈடுபடுத்தப்படும் ஆனால் வெற்றி சுலபமானது. எனவே இப்பொழுது இந்த ஆன்மீக பாஷையின் பயிற்சி உடையவர் ஆகுங்கள். இன்று பாப்தாதாவும் குழந்தைகளின் இந்த மூன்று விதங்களின் பாஷையைக் கேட்டுக் கொண்டிருந்தார். மேலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் பதில் கூறிக் கொண்டிருக்கிறார். அனைவரின் மிக அன்பான சொரூபத்தை பாப்தாதா பார்த்து அன்பை, அன்புக் கடலில் மூழ்க வைத்துக் கொண்டிருக்கிறார். உங்கள் அனைவரின் நினைவுகள் சதா காலத்திற்காக நினைவுச் சின்ன ரூபம் ஆவதற்கான சிரேஷ்ட வரதானம் கொடுக்கிறார். அனைவரின் மனதின் பலவிதமான பாவனையைத் தெரிந்து அனைத்து குழந்தைகளுக்காக அனைத்து பாவனைகளுக்கும் பிரதிபலனாக எப்பொழுதும் தடையற்றவர் ஆகுக, சக்திசாலி யானவர் ஆகுக, அனைத்து சக்திகளும் நிரம்பியவர் ஆகுக! எண்ணும் சுபபாவனையை இந்த ரூபத்தில் கொடுக்கிறார். அனைத்து குழந்தைகளின் என்னென்ன சுப விருப்பங்கள் இருக்கின்றனவோ, சூழ்நிலைக்கு ஏற்றபடி சகயோகத்தின் பாவனை மற்றும் சுபவிருப்பங்கள் இருக்கின்றனவோ அந்த அனைத்து சுபவிருப்பங்களும் பாப்தாதாவின் சிரேஷ்ட பாவனை மூலமாக நிறைவேறிக் கொண்டே இருக்கும் என்பது தான் தந்தையின் சுபபாவனை. நடைமுறையில் சில நேரம் சில குழந்தைகளின் எதிரில் பழைய கணக்கு வழக்கு சோதனையின் ரூபத்தில் வருகின்றன. அது உடல் வியாதியின் ரூபத்தில் அல்லது மனதின் வீணான புயலின் ரூபத்தில், சம்மந்தம் தொடர்பின் ரூபத்தில் வருகின்றன. யார் மிக நெருக்கமான சகயோகியாக இருக்கிறாரோ அவருடன் கூட சகயோகத்திற்குப் பதிலாக மெல்லிய ரூபத்தில் மோதல் ஏற்பட்டு விடுகிறது ஆனால் இந்த அனைத்து பழைய கணக்கு, பழைய கடன் போன்றவை அடைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்தக் குழப்பத்தில் செல்லாமல் புத்தியை சக்திசாலியாக ஆக்கினீர்கள்

என்றால் புத்தி பலம் மூலமாக இந்த பழைய கடன், கடனுக்குப் பதிலாக எப்பொழுதும் தேர்ச்சி அடைவதற்கான நிலையை அனுபவம் செய்வீர்கள் ஆனால் என்ன நடக்கிறது -புத்தி பலம் இல்லாத காரணத்தினால் கடனை ஒரு சுமையின் ரூபத்தில் அனுபவம் செய்கிறார்கள். மேலும் சுமை இருக்கும் காரணத்தினால் புத்தி மூலமாக என்ன யதார்த்த நிர்ணயம் இருக்க வேண்டுமோ அது இருக்க முடியாது. மேலும் யதார்த்த நிர்ணயம் இல்லாத காரணத்தினால் சுமை இன்னும் அதி கீழான நிலைக்கு அழைத்துச் செல்கிறது. வெற்றியின் உயர்விற்குச் செல்ல முடியாது. எனவே அடைத்து முடிப்பதற்குப் பதிலாக சிலருக்கு இன்னும் அதிகரித்து விடுகிறது. எனவே பழைய கடனை அடைப்பதற்கான சாதனம் எப்பொழுதும் தன்னுடைய புத்தியை தெளிவாக வையுங்கள். புத்தியில் சுமையை வைக்காதீர்கள். எந்தளவு புத்தியை சுமையற்று லேசானதாக வைப்பீர்களோ அந்த அளவு புத்தியின் பலம் வெற்றியை சுலபமாக பிராப்தி செய்விக்கும். எனவே பயப்படாதீர்கள். வீணான எண்ணம் ஏன் வந்தது, என்ன ஆனது, ஒருவேளை இப்படி ஆகியிருக்குமோ என்று சுமை நிறைந்த எண்ணத்தை முடிவுகட்டி புத்தியின் தொடர்பை தெளிவாக வையுங்கள். லேசாக வைத்துக் கொள்ளுங்கள். தைரியம் உங்களுடையது உதவி தந்தையினுடையது, வெற்றி அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும். புரிந்ததா?

டபுள் லைட் (சுமையற்ற நிலை) ஆவதற்கு பதிலாக டபுள் சுமையை எடுத்துக் கொள்கிறார்கள். ஒன்று பழைய கணக்கு இன்னொன்று வீணான எண்ணத்தின் சுமை. அப்படி இரண்டு சுமைகள் மேலே கொண்டு செல்லுமா அல்லது கீழே கொண்டு வருமா? எனவே அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா விசேஷமாக கவனமூட்டுகிறார் எப்பொழுதும் புத்தியின் சுமையை அகற்றுங்கள். எந்தவிதமான சுமையும் புத்தியோகத்திற்குப் பதிலாக கணக்கு வழக்கை அனுபவிப்பதில் மாறி விடுகிறது. எனவே தன்னுடைய புத்தியை எப்பொழுதும் லேசாக வையுங்கள். யோக பலம், புத்தி பலம் விளைவுகளை அனுபவிப்பதை முடித்து விடும்.

அனைவரின் சேவைக்கான பலவிதமான ஊக்கங்களும் வந்து சேர்ந்தன. யார் எந்த அளவு உண்மையான உள்ளத்தோடு சுயநலமற்ற உணர்வோடு சேவை செய்து கொண்டிருக்கிறார்களோ, அந்த மாதிரி உண்மையான

உள்ளம் உள்ளவர்கள் மீது பாபா எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறார். மேலும் அதே திருப்தியாக இருப்பதின் அடையாளமாக உள்ளத்தில் திருப்தி மற்றும் சேவையில் வெற்றி இருக்கும். இதுவரையிலும் என்னென்ன செய்திருக்கிறீர்களோ மேலும் செய்து கொண்டிருக்கிறீர்களோ அவை அனைத்தும் மிக நன்றாக இருக்கிறது. இன்னும் வரும் நாட்களில் இன்னும் நல்லதாக கண்டிப்பாக ஆகும். எனவே நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா எப்பொழுதும் முன்னேற்றத்தை அடைந்து கொண்டே இருங்கள், விதிப்படி வளர்ச்சியை அடைந்து கொண்டே இருங்கள் என்ற இந்த வரதானத்தின் கூடவே பல மடங்கு அன்பு நினைவுகளையும் கொடுக்கிறார். கையால் எழுதப்பட்ட கடிதத்திற்கும் மற்றும் மனதால் எழுதப் பட்ட கடிதத்திற்கும் அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்த்துக்களைச் சேர்த்து பதில் தருகிறார். சிரேஷ்ட முயற்சி செய்வது, சிரேஷ்ட வாழ்க்கையில் எப்பொழுதும் நீடூழி வாழ்க என்ற அன்பின் சிரேஷ்ட பாவனையையும் சேர்த்து அனைவருக்கும் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 09.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# குழந்தையிலிருந்து எஜமானன் ஆகுபவர்!

இன்று பாப்தாதா தன்னுடைய இந்த ஆன்மீக சக்திசேனை, மனதை வென்று உலகை வென்றவராக இருக்கிறதா என்று சக்திசேனையைப் பார்த்துக் கொண்டிருந்தார். மனதை வென்றவர் என்றால் மனதின் வீணான எண்ணம் மற்றும் தீய எண்ணத்தின் மேல் வெற்றி அடைவது. அந்த மாதிரி வெற்றி அடைந்த குழந்தைகள் உலகின் இராஜ்ய அதிகாரியாக ஆகிறார்கள். எனவே தான் மனதை வென்றவர் உலகை வென்றவர் என்று வர்ணித்திருக்கிறார்கள். இந்த நேரம் எந்த அளவு எண்ணத்தின் சக்தியை அதாவது மனதை தன்னுடைய அதிகாரத்தில் வைக்கிறீர்களோ அந்த அளவே உலக இராஜ்ய அதிகாரியாக ஆகிறீர்கள். இப்பொழுது இந்த நேரம் ஈஸ்வரிய குழந்தை, மேலும் இப்பொழுதைய குழந்தை தான் உலகின் எஜமானன் ஆவார். குழந்தை ஆகாமல் எஜமானன் ஆக முடியாது. என்னென்ன எல்லைக்குட்பட்ட எஜமானத்தன்மையின் எல்லைக்குட்பட்ட போதை இருக்கிறதோ அதை அகற்றி எல்லைக்குட்பட்ட எஜமானத்தன்மையிலிருந்து குழந்தைத் தன்மையில் வர வேண்டும். அப்பொழுது தான் குழந்தையிலிருந்து எஜமானன் ஆவீர்கள். எனவே பக்தி மார்க்கத்தில் யாராவது எவ்வளவு பெரிய தேசத்தின் பெரிய எஜமானனாக இருந்தாலும், செல்வத் தின் அதிபதியாக இருந்தாலும், பரிவாரத்தின் தலைவனாக இருந்தாலும், தந்தையின் எதிரில் அனைவரும் 'உன்னுடைய குழந்தை' என்று கூறித் தான் பிரார்த்தனை செய்கிறார்கள். நான் இதன் அதிபதி, எஜமானன் என்று ஒருபொழுதும் கூற மாட்டார்கள். நீங்கள் பிராமண குழந்தைகளும் குழந்தையாக ஆகிறீர்கள். அப்பொழுது தான் இந்த நேரமும் கவலையில்லா இராஜா ஆகிறீர்கள். மேலும் எதிர்காலத்திலும் உலகத்தின் அதிபதி அல்லது மகாராஜா ஆகிறீர்கள். 'குழந்தையிலிருந்து எஜமானன் ஆகுபவன்' -இந்த நினைவு எப்பொழுதும் நிர்அகங்காரி (அகங்காரம் அற்ற), நிர்விகாரி (விகாரங்கள் அற்ற) நிலையை அனுபவம்

செய்விக்கிறது. குழந்தை ஆவது என்றால் எல்லைக்குட் பட்ட வாழ்க்கையில் பரிவர்த்தனை ஆவது. எப்பொழுதும் பிராமணன் ஆனீர்களோ அப்பொழுது பிராமணத்தன்மையின் வாழ்க்கையில் மிகவும் எளிதான முதல் பாடமாக என்ன பாடம் படித்தீர்கள்? குழந்தைகள் பாபா (தந்தை) என்று கூறினார்கள், தந்தை குழந்தைகளே! என்று கூறினார். இந்த ஒரு வார்த்தையின் பாடம் ஞானம் நிறைந்தவராக ஆக்கி விடுகிறது. குழந்தை என்ற ஒரு வார்த்தையைப் படித்து விட்டார் என்றால், இந்த உலகத்தினுடையது என்ன! மூன்று உலகத்தின் ஞானத்தை படித்து விட்டார். இன்றைய உலகத்தில் யார் எவ்வளவு தான் பெரிய ஞானம் உள்ளவராக இருந்தாலும் மூன்று உலகங்களின் ஞானத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. இந்த விஷயத்தில் ஒரு வார்த்தையைப் படித்திருக்கும் உங்கள் எதிரில் பெரிய ஞானம் நிறைந்தவரும் ஒன்றும் அறியாதவர் தான். அந்த மாதிரி எவ்வளவு சுலபமாக மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக ஆகியிருக்கிறீர்கள். பாபா மற்றும் குழந்தைகள் இந்த ஒரு வார்த்தையில் அனைத்தும் நிரம்பியிருக்கிறதோ. எப்படி விதையில் முழு மரம் நிரம்பியிருக்கிறது அதே போல் குழந்தை ஆவது என்றால், சதா காலத்திற்காக மாயாவிட மிருந்து தப்பித்து பாதுகாப்பாக இருப்பது. மாயாவிடமிருந்து பாதுகாப்பாக இருங்கள் அதாவது நான் குழந்தை என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். 'குழந்தை ஆனேன்' அதாவது தப்பித்துக் கொண்டேன் என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இந்தப் பாடம் கடினமா என்ன? சுலபம் தான் இல்லையா? பிறகு ஏன் மறக்கிறீர்கள். அனேக குழந்தைகள் மறக்க விரும்பவில்லை, ஆனால் மறந்து விடுகிறது என்று நினைக்கிறார்கள். ஏன் மறந்து விடுகிறது? அதற்கு நீண்ட காலத்து சம்ஸ்காரம் மற்றும் பழைய சம்ஸ்காரம் என்று கூறுகிறார்கள் ஆனால் எப்பொழுது இறந்து மறுபிறவியில் இருப்பவராக ஆகியிருக்கிறீர்கள் என்றால், இறந்த நேரத்தில் என்ன செய்கிறார்கள்? அக்னி சம்ஹாரம் செய்கிறார்கள் இல்லையா? அந்த மாதிரி பழையதை சம்ஹாரம் செய்தீர்கள் அப்பொழுது தான் புதிய ஜென்மம் எடுத்தீர்கள். எப்பொழுது சம்ஹாரம் செய்து விட்டீர்கள் என்றால் பழைய சம்ஸ்காரம் எங்கிருந்து வந்தது. எப்படி உடலை சம்ஹாரம் செய்து விட்டார்கள் என்றால் பெயர், ரூபம் எல்லாமே அழிந்து விடுகிறது. ஒருவேளை பெயரைக் கூறினோம் என்றாலும் கூட இன்னார் இருந்தார், இப்பொழுது இல்லை என்று தான் கூறுவோம். அப்படி உடலின் சம்ஹாரம் ஆன பிறகு உடல் அழிந்து விடுகிறது.

பிராமண வாழ்க்கையில் எதனை சம்ஹாரம் செய்கிறீர்கள்? உடலோ அதுவாகத் தான் இருக்கிறது ஆனால் பழைய சம்ஸ்காரங்கள், பழைய நினைவுகள் மற்றும் சுபாவத்தை சம்ஹாரம் செய்கிறீர்கள். அப்பொழுது தான் இறந்து மறுபிறவி எடுப்பவர் என்று கூறுகிறீர்கள். எப்பொழுது சம்ஹாரம் செய்து விட்டீர்கள் என்றால், பழைய சம்ஸ்காரம் எங்கிருந்து வர முடியும்? ஒருவேளை சம்ஹாரம் செய்யப்பட்ட மனிதன் மீண்டும் உங்கள் எதிரில் வந்து விட்டால் அதை என்னவென்று கூறுவீர்கள்? பூதம் என்று கூறுவீர்கள் இல்லையா? அந்த மாதிரி இந்தப் பழைய சம்ஹாரம் செய்யப்பட்ட சம்ஸ்காரங்களும் ஒருவேளை மீண்டும் எழுந்து விடுகின்றன என்றால், என்னவென்று கூறுவோம்? இதையும் மாயாவின் பூதம் என்று கூறுவோம் இல்லையா? பொதுவாக பூதங்களை விரட்டி அடிப்பார்கள் இல்லையா?. அதைப் பற்றி பேசவும் மாட்டார்கள். பழைய சம்ஸ்காரம் என்று கூறி தன்னை ஏமாற்றுகிறார்கள். ஒருவேளை உங்களுக்கு பழைய விஷயங்கள் மிகவும் பிடித்திருக்கிறது என்றால், வாஸ்தவமாக பழையதிலும் பழையதான ஆதி காலத்து சம்ஸ்காரங்களை நினைவு செய்யுங்கள். இதுவோ மத்திய காலத்து சம்ஸ்காரங் களாக இருந்தன. இது பழையதிலும் பழையது இல்லை. மத்தியத்தை இடைப்பட்டது என்று கூறுவோம் என்றால் மத்திய காலம் அதாவது இடைப்பட்டதை நினைவு செய்வது என்றால் இடையில் உள்ள சுழற்சியில் மாட்டிக் கொண்டு தொந்தரவு ஆவது. எனவே ஒருபொழுதும் அந்த மாதிரியான பலஹீனமான விஷயங்களை யோசிக்காதீர்கள். எப்பொழுதுமே 'குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகுபவன்' என்ற இந்த இரண்டு வார்த்தைகளை நினைவு வையுங்கள். குழந்தைப் பருவம் தான் எஜமானத் தன்மையை இயல்பாகவே நினைவில் கொண்டு வரும். குழந்தையாக ஆகத் தெரியாதா?

குழந்தை ஆவது என்றால், அனைத்து சுமைகளிலிருந்தும் லேசாக ஆவது. சில நேரம் உன்னுடையது, சில நேரம் என்னுடையது என்பது கடினமாக ஆக்கி விடுகிறது. எப்பொழுது ஏதாவது கடினத்தை அனுபவம் செய்கிறீர்கள் என்றால், இது உங்களுடைய வேலை உங்களுக்குத் தான் தெரியும் என்று கூறுகிறீர்கள். மேலும் எப்பொழுது சுலபமாக இருக்கிறது என்றால், என்னுடையது என்று கூறுகிறீர்கள். என்னுடையது என்பது முடிவடைவது என்றால் குழந்தையிலிருந்து எஜமானன் ஆவது. தந்தையோ பெக்கர் (ஒன்றுமில்லாதவர்) ஆகு என்று கூறுகிறார். இந்த

உடல் என்ற வீடும் உன்னுடையது அல்ல. இது கடனில் கிடைத்திருக்கிறது. ஈஸ்வரிய சேவை செய்வதற்காக மட்டும் பாபா உனக்குக் கடனாகக் கொடுத்து உன்னை டிரஸ்டியாக ஆக்கியிருக்கிறார். இது ஈஸ்வரனின் சொத்து. நீங்களோ அனைத்தும் உன்னுடையது என்று கூறி தந்தைக்குக் கொடுத்து விட்டீர்கள். இந்த உறுதிமொழி செய்தீர்கள் இல்லையா அல்லது மறந்து விட்டீர்களா? உறுதி கொடுத்திருக்கிறீர்களா அல்லது பாதி உன்னுடையது, பாதி என்னுடையது என்றிருக்கிறதா? ஒருவேளை உன்னுடையது என்று கூறியதை என்னுடையது என்று புரிந்து காரியத்தில் ஈடுபடுத்துகிறாய் என்றால் என்ன ஆகும்? அதன் மூலம் சுகம் கிடைக்குமா? வெற்றி கிடைக்குமா? எனவே கடனாகக் கொடுக்கப்பட்ட சொத்து என்று புரிந்து உன்னுடையது என்று புரிந்து நடந்து கொண்டாய் என்றால் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகும் தன்மையின் குஷியில் போதையில் இயல்பாகவே இருப்பீர்கள். புரிந்ததா? இந்தப் பாடத்தை எப்பொழுதும் உறுதியாக வையுங்கள். பாடத்தை உறுதி செய்தீர்கள் இல்லையா அல்லது உங்கள் உங்களுடைய உங்களுக்குச் சென்ற பிறகு மறந்து விடுவீர்களா? மறக்காதவர் ஆகுங்கள். நல்லது.

எப்பொழுதும் போதையில் இருக்கும் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் குழந்தைப் பருவம் அதாவது கவலையற்ற இராஜா தன்மையின் நிலையிலிருப்பவர்களுக்கு, எப்பொழுதும் கிடைத்திருக்கும் சொத்தை டிரஸ்டி ஆகி, சேவையில் ஈடுபடுத்தும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் புதிய ஊக்கம், புதிய உற்சாகத்திலிருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: 'விசேஷம்' என்ற வார்த்தையின் நினைவின் மூலம் சம்பூர்ணத்தின் இலட்சியத்தை அடையக்கூடிய சுயமாற்றம் செய்பவர் ஆகுக!**

எப்பொழுதுமே நான் விசேஷ ஆத்மா, விசேஷ காரியம் செய்வதற்குப் பொறுப்பாளன், மேலும் விசேஷத்தை காண்பிப்பவன் என்ற நினைவு இருக்கட்டும். இந்த விசேஷம் என்ற வார்த்தையை விசேஷமாக நினைவில் வையுங்கள் -பேசுவதும் விசேஷம், பார்ப்பதும் விசேஷம்,

செய்வதும் விசேஷம், யோசிப்பதும் விசேஷம்... ஒவ்வொரு விஷயத்திலும் இந்த விசேஷம் என்ற வார்த்தையைக் கொண்டு வருவதினால் சகஜமாக சுயமாற்றம் செய்பவரிலிருந்து உலக மாற்றம் செய்பவராக ஆகி விடுவீர்கள். மேலும் சம்பூர்ண நிலையை அடைவதற்கான இலட்சியம் என்ன இருக்கிறதோ அந்த இலட்சியத்தையும் சுலபமாகவே அடைந்து விடுவீர்கள்.

**சுலோகன்: தடைகளைக் கண்டு பயப்படுவதற்குப் பதிலாக பரீட்சை என்று புரிந்து அதில் தேர்ச்சி அடையுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான சேவாதாரியின் அடையாளம்!

இன்று ஞான சூரியன், ஞான சந்திரன் தனது பூமியின் நட்சத்திர மண்டலத்தில் அனைத்து நட்சத்திரங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து நட்சத்திரங்களும் ஜொலித்துக் கொண்டே தன்னுடைய ஜொலிப்பு மற்றும் பிரகாசத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறது. வித விதமான நட்சத்திரங்கள் இருக்கிறது. சிலர் விசேஷமான ஞான நட்சத்திரங்கள், சிலர் சகஜயோகியின் நட்சத்திரம், சிலர் குணத்தை தானம் செய்யும் மூர்த்தியின் நட்சத்திரம். சிலர் நிரந்தர சேவாதாரி என்ற நட்சத்திரம். சிலர் எப்பொழுதுமே சம்பன்ன (முழுமையான) நட்சத்திரமாக இருக்கிறார்கள். அனைத்தையும் விட உயர்ந்தது -ஒவ்வொரு நொடியும் வெற்றியின் நட்சத்திரமாக இருப்பது. கூட கூடவே சிலர் எதிர்பார்ப்பின் (விருப்பத்தின்) நட்சத்திரங்களாக இருக்கிறார்கள். எதிர்ப்பார்ப்பின் நட்சத்திரத்தையும் பாருங்கள், வெற்றியின் நட்சத்திரங்களையும் பாருங்கள். இரண்டிலும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது ஆனால் இரண்டு விதமான நட்சத்திரங்கள் இருக்கிறது, மேலும் ஒவ்வொரு விதவிதமான நட்சத்திரங் களும் உலகத்தின் ஆத்மாக்கள் மீது, இயற்கையின் மீது, அதனதன் தாக்கத்தை ஏற்படுகிறது. வெற்றியின் நட்சத்திரம் நாலாபக்கமும் தனது ஊக்க உற்சாகத்தின் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எதிர்ப்பார்ப்பின் நட்சத்திரங்கள் தானும் கூட அவ்வபொழுது அன்பாகவும், அவ்வப்பொழுது கடினத்தன்மை என்ற முயற்சி இரண்டின் தாக்கம் ஏற்படுவதற்கான காரணத்தினால் மற்றவர்களிடத்திலும் கூட அவ்வபொழுது அன்பாகவும், அவ்வப்பொழுது கடினத் தன்மையின் தாக்கம் ஏற்படுகிறது, முன்னேறுவதற்கான விருப்பம் வைத்து முன்னேறிக் கொண்டே செல்கிறார்கள். எனவே ஒவ்வொருவரும் தன்னை தானே கேளுங்கள் -நான் எப்படிப்பட்ட நட்சத்திரம்? அனைவரிடத்திலும் ஞானம், யோகம், குணங்களின் தாரணை மற்றும்

சேவையின் உணர்வு இருந்தாலும் கூட, சிலரிடத்தில் ஞானத்தின் தீப்பொறி இருக்கிறது, சிலரிடத்தில் விசேஷ நினைவின் -யோகத்தினுடையதாக இருக்கிறது. மேலும் ஒரு சிலர் தனது குணமூர்த்தியின் ஜொலிப்பின் மூலம் விசேஷமாக ஈர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான்கு விதமான தாரணை இருந்தாலும் கூட சதவிகிதத்தில் வேறுபாடு இருக்கிறது. ஆகையால் விதவிதமான நட்சத்திரங்கள் ஜொலித்துக் கொண்டே தென்படுகிறது. இது ஆன்மீக விசித்திர நட்சத்திர கூட்டங்கள். ஆன்மீக நட்சத்திரங்களாகிய உங்களின் தாக்கம் உலகத்தின் மீது ஏற்படுகிறது. எனவே உலகத்தினுடைய ஸ்தூல நட்சத்திரங்களின் தாக்கம் கூட உலகத்தின் மீது ஏற்படுகிறது. எந்தளவு நீங்கள் சக்திசாலியான நட்சத்திரங்களாக ஆகின்றீர்களோ, அந்தளவு உலகத்தின் ஆத்மாக்கள் மீது தாக்கம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும், மேலும் முன்னேறி கொண்டேயிருப்பீர்கள். எப்படி காரிருள் (கும் இருட்டு) இருக்கிறதென்றால், நட்சத்திரங்களின் பிரகாசம் மிகுதியாக தெளிவாக தென்படும். அப்படி அபிராப்தியின் (கிடைக்காத நிலை) இருள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது, மேலும் எந்தளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறதோ, அதிகரித்துக் கொண்டேயிருக்குமளவிற்கு தான் ஆன்மீக நட்சத்திரங்களாகிய உங்களின் விசே˜மான தாக்கம் (பிரபாவம்) அனுபவம் செய்துக் கொண்டேயிருப்பீர்கள். அனைவருக்கும் பூமியில் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களின் ஜோதி பிந்துவின் (ஒளி புள்ளி) வடிவத்தில் பிரகாசமான உடல் ஃபரிஸ்தாவின் ரூபத்தில் தென்படும். எப்படி ஆகாய நட்சத்திரங்களுக்கு பின்னால், தனது சமயம், ஆற்றல் மற்றும் செல்வத்தை பயன்படுத்துகிறார்களோ, அப்படி ஆன்மீக நட்சத்திரங்களை பார்த்து அதிசயம் அடைவார்கள். எப்படி இப்பொழுது ஆகாயத்தில் நட்சத்திரகளை பார்க்கிறார்களோ, அப்படி இந்த பூமியின் மேடையில் நாலாபக்கத்திலும் ஃபரிஸ்தாக்களின் ஜொலிப்பு மற்றும் ஒளி ரூபமான நட்சத்திரங்களின் ஜொலிப்பை பார்ப்பார்கள், அனுபவம் செய்வார்கள் -இவர் யார்? எங்கிருந்து இந்த பூமியின் மீது தனது அதிசயத்தை காட்ட வந்திருக்கிறார்கள்! எப்படி ஸ்தாபனையின் ஆரம்ப காலகட்டத்தில் நாலாபக்கத்திலும் பிரம்மா மற்றும் கிருஷ்ணரின் சாட்சாத்காரம் (காட்சியின்) அலை பரவியது, இவர்கள் யார்? இங்கு என்ன செய்து காட்டு கிறார்கள்? இதை புரிந்து கொள்வதற்காக பலரின் கவனம் (பார்வை) சென்றதோ, அதே போன்று இப்பொழுது கடைசியில் நாலாபக்கத்திலும் இந்த இரண்டு விதமான ஒளி புள்ளி மற்றும்

ஃபரிஸ்தா அதில் பாப்தாதா மற்றும் குழந்தைகளாகிய உங்கள் அனைவரின் ஜொலிப்பு தென்படும். மேலும் அனைவருக்கும் ஒருவரிட மிருந்து அநேகரின் இந்த பக்கம் தானாகவே கவனம் ஈர்க்கப்படும். இப்பொழுது நீங்கள் அனைவரும் முழுமை (சம்பன்னம்) ஆகும் வரை இந்த தெய்வீக காட்சி தொடர்ந்துக் கொண்டேயிருக்கும். ஃபரிஸ்தாவின் நிலையை சகஜமாகவும் இயல்பாகவும் அனுபவம் செய்யும் பொழுது தான் அவர்களுக்கு சாட்சாத் ஃபரிஸ்தாவின் சாட்சாத்காரம் தென்படும். இந்த ஆண்டு ஃபரிஸ்தா தன்மையின் மனநிலைக்காக விசே˜மாக கொடுக்கப்படுகிறது. நினைவு மட்டும் தான் செய்ய வேண்டுமா அல்லது சேவைக்கூட செய்ய வேண்டுமா அல்லது சேவையிலிருந்து விடுபட்டு தபஸ்யாவில் மட்டுமே இருக்க வேண்டுமா என்று பல குழந்தைகள் நினைக்கிறார்கள். பாப்தாதா சேவையின் உண்மையாண அர்த்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

சேவை உணர்வு என்றாலே சதா ஒவ்வொரு ஆத்மாவிற்காக சுப பாவணை (நல்ல உணர்வு). உயர்ந்த விருப்பத்தின் உணர்வு. சேவை உணர்வு என்றாலே ஒவ்வொரு ஆத்மாவின் உணர்விற்கு தகுந்த மாதிரி பலனை தருவது. உணர்வு எல்லைக்குட்பட்டதாக இருப்பது அல்ல, சிரேஷ்ட உணர்வாகும். ஒருவேளை சேவாதாரிகளாகிய நீங்கள் யார் மீதாவது அன்பின் உணர்வு வைத்தல், சக்திகளினுடைய உதவியின் உணர்வு வைத்தல், குஷியின் உணர்வு வைத்தல், சக்திகளை அடைவதற்கான உணர்வு வைத்தல், ஊக்க-உற்சாகத்தின் உணர்வு வைத்தல், அப்படி விதவிதமான உணர்வுகளின் பலன் அதாவது சகயோகத்தின் மூலம் அனுபவம் செய்ய வைப்பது, எனவே இதற்குத்தான் சேவையின் உணர்வு என சொல்லப் படுகிறது. சொற்பொழிவு செய்து விட்டு வந்து விட்டேன், ஒரு குரூப்பிற்கு (கூட்டத்திற்கு) புரிய வைத்து விட்டு வந்து விட்டேன், கோர்ஸ் (7 நாள் பாடமுறை) முடித்து விட்டு வந்து விட்டேன், அல்லது சென்டர் திறந்து வைத்து விட்டு வந்து விட்டேன், இதற்கு சேவை உணர்வு என்று சொல்லப்படாது. சேவை என்றாலே எந்தவிதமான ஆத்மாவிற்காகவும் பிராப்தியின் (அனைத்து அடைந்த நிலை) அற்புதத்தை அனுபவம் செய்ய வைப்பது. அவ்வாறு சேவையுடன் தபஸ்யா (நினைவு) எப்பொழுதுமே இணைந்து இருப்பது.

தபஸ்யாவின் அர்த்தை விளக்குகிறார் -திட எண்ணத்துடன் எந்தவொரு காரியத்தையும் செய்வது. உண்மையான சேவையின் உணர்வு இருக்குமிடத்தில் தபஸ்யா தனித்து இருக்காது. தியாகம் -தபஸ்யா -சேவை -இந்த மூன்றின் இணைந்த வடிவம் தான் உண்மையான சேவை, மேலும் பெயருக்காக செய்யும் சேவையின் பலன் குறுகிய காலத்திற்கு கிடைக்கிறது. எங்கு சேவை செய்தீர்களோ, அங்கேயே குறுகிய காலத்தின் விளைவின் பலனை அடைந்து, மேலும் முடிந்தும் போய்விடும். குறுகிய காலத்தின் விளைவின் பலன் -குறுகிய காலத்தின் மகிமையாகும். மிக நன்றாக சொற்பொழிவு செய்தீர்கள், மிக நன்றாக கோர்ஸ் (7 நாள் பாடம்) எடுத்தீர்கள், மிக நன்றாக சேவை செய்தீர்கள். எனவே நன்றாக செய்தீர்கள், நன்றாக செய்தீர்கள் என்று சொல்வதின் அல்பகாலத்தின் பலன் கிடைக்கிறது, மேலும் அவர்களும் மகிமை கேட்பதின் குறுகிய காலத்தின் பலன் தான் கிடைக்கிறது ஆனால் அனுபவம் செய்ய வைப்பது என்றாலே பாபாவுடன் தொடர்பை இணைப்பது, சக்திசாலியாக ஆக்குவது -இது தான் உண்மையான சேவையாகும். உண்மையான சேவையில் தியாகம் -சேவை இல்லையென்றால், இந்த 50-50% சேவை இல்லை, ஆனால் 25% தான் சேவை இருக்கிறது.

உண்மையான சேவாதாரியின் அடையாளம் -தியாகம் என்றாலே பணிவு, மேலும் தபஸ்யா என்றாலே ஒரு பாபாவிடம் நம்பிக்கை, நிலையான குஷி. இதைத் தான் உண்மையான சேவை என்று சொல்லப்படுகிறது. பாப்தாதா நிரந்தரமாக உண்மையான சேவாதாரி ஆவதற்காக சொல்கிறார். பெயருக்காக சேவை செய்வது, மேலும் தன்னை தொந்தரவுக்கு உள்ளாக்குவது, மற்றவர்களையும் கூட தொந்தரவு செய்வது, இந்த சேவையிலிருந்து விடுபடுவதற்காக பாப்தாதா சொல்லிக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட சேவை செய்யாமல் இருப்பது நல்லது. ஏனெனில் சேவையின் விசே' குணம் திருப்தியின் தன்மையாகும். எங்கு திருப்தி இல்லாமல் தனக்காகவோ, மற்றவர்களுக்காகவோ சேவை செய்தால், அந்த சேவை தனக்கும் பிராப்தியை அனுபவம் செய்ய வைக்காது, மற்றவர் களுக்கும் செய்ய வைக்காது. ஆகையால் முதலில் தன்னை திருப்தியுடைவராக மாற்றிக் கொண்ட பிறகு சேவையில் வருவது நல்லது. இல்லை யென்றால் சூட்சமமான சுமை அவசியம் இருக்கும். அந்த பலவிதமான சுமைகள் பறக்கும் கலையில் தடை

ரூபமாகி விடுகிறது. சுமையை சுமக்க வேண்டாம், சுமையை இறக்க வேண்டும். எப்பொழுது அவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள் என்றால், இதைவிட ஏகாந்தவாசி ஆவது நல்லது. ஏனெனில் ஏகாந்தவாசி ஆவதின் மூலம் சுய மாற்றத்தின் மீது கவனம் வரும். எனவே பாப்தாதா தபஸ்யாவை பற்றி என்ன சொல்கிறார் என்றால் அது பகலும் இரவும் அமர்ந்துக் கொண்டு தபஸ்யா செய்வது என்று சொல்ல வில்லை. தபஸ்யாவில் அமர்வது கூட சேவை தான். லயிட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகி அமைதியின், சக்திகளின் கதிர்கள் மூலம் வாயுமண்டலத்தை (சூழ்நிலையை) உருவாக்குவது. தபஸ்யாவுடன் மனதின் சேவை இணைக்கப் பட்டிருக்கிறது. தனித்து இருக்காது. இல்லையென்றால் தபஸ்யா என்ன செய்கிறது! சிரேஷ்ட ஆத்மா -பிராமண ஆத்மா ஆகி விட்டீர்கள். இப்பொழுது தபஸ்யா என்றால் தன்மீது அனைத்து சக்திகளினால் முழுமையாக ஆவது, உறுதியான மனநிலை, உறுதியான எண்ணத்தின் மூலம் உலகத்திற்கு சேவை செய்வது. வார்த்தையின் சேவை மட்டுமே சேவை அல்ல. எப்படி சுகம் -சாந்தி -தூய்மை மூன்றுமே தங்களுக்குள் இணைக்கப் பட்டிருக்கிறது, அப்படி தியாகம் -தபஸ்யா -சேவையும் இணைக்கப் பட்டிருக்கிறது. தபஸ்யா ரூபம் என்றாலே சக்திசாலியான சேவாதாரியாக உருவாக்குவது என்று பாப்தாதா சொல்கிறார். தபஸ்யா ரூபத்தின் பார்வை கூட சேவை செய்கிறது. அவர்களுடைய அமைதி சொரூபமான முகம் கூட சேவை செய்கிறது, தபஸ்வி மூர்த்தியின் வெறும் பார்வை கூட பிராப்தியின் அனுபவத்தை செய்கிறது. ஆகையால் இன்றைய காலத்தில் பாருங்கள் ஹடயோகத்தின் (விடா பிடியாக) தபஸ்யா செய்கிறார்கள், அவர்களின் தரிசனத்திற்காக எவ்வளவு கூட்டம் கூடுகிறது. உங்களின் இந்த தபஸ்யா சொரூபத்தின் தாக்கம் நினைவு சின்னத்தின் ரூபம் கடைசிவரை வந்து கொண்டேயிருக்கும். எனவே புரிந்ததா -சேவையின் உணர்வு எதை சொல்லப்படுகிறது. சேவை உணர்வு என்றாலே அனைத்து பலவீனங்களையும் எதிர்நோக்கக் கூடிய உணர்வு. பலவீனமானவர் களை எதிர்நோக்கும் உணர்வு அல்ல, பலவீனங்களை எதிர்க்கும் உணர்வு. தனக்குள் சகித்துக் கொண்டு மற்றவர்களுக்கு சக்தியை கொடுக்கும் உணர்வு. ஆகையால் சகித்துக்கொள்ளும் சக்தி என்று சொல்லப்படுகிறது. சகித்துக்கொள்வது என்றாலே சக்திகளை நிரப்புவது மற்றும் சக்தியை கொடுப்பது. சகித்துக்கொள்ளவேண்டுமே தவிர இறந்துபோகக் கூடாது. நாம் பொறுத்துக் கொண்டால் இறந்து விடுவோம்

என்று பலர் நினைக்கிறார்கள். நாம் இறந்து விடுவோமா என்ன? ஆனால் இது மரணம் அல்ல. இது அனைவருடைய மனதிலும் அன்பாசு வாழ்வது. எப்படிபட்ட விரோதியாக இருந்தாலும், இராவணணை விடவும் மோசமாக இருந்தாலும் கூட, ஒருமுறை அல்ல, 10-முறை சகித்துக் கொள்ள வேண்டியிருந்தாலும் கூட சகித்துக்கொள்ளும் தன்மையின் பலன் அழிவற்ற தாகவும் இனிமையாகவும் இருக்கும். அவர்கள் கூட அவசியம் மாறிவிடுவார்கள். நான் இவ்வளவு சகித்துக் கொண்டேன், இவர்களும் கூட சகித்துக்கொள்ளட்டுமே என்ற உணர்வு இருக்கக் கூடாது. குறுகிய காலத்தின் பலனை அடைவதற் கான உணர்வு வைக்காதீர்கள். கருணை உணர்வு வையுங்கள் -இதற்கு தான் சேவை உணர்வு என்று சொல்ல படுகிறது. எனவே இந்த ஆண்டு, இதுபோன்ற உண்மையான சேவையின் ஆதாரம், நிரூபணத்தின் பட்டியலில் வருவதற்கான பொன்னான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த வருடம் சேவை நிகழ்ச்சிகள் மற்றும் பெரும் விழாக்கள் மிக நன்றாக நடந்ததா என்று பார்க்க மாட்டார் ஆனால் திருப்தியுடையவர் ஆகி திருப்தியான சேவையில் நம்பர் முன்னால் வரவேண்டும். விக்ன வினாசக் (தடைகளை வென்றவர்) என்ற பட்டமளிப்பு விழாவில் பரிசு பெற வேண்டும். புரிந்ததா! இதற்கு தான் சொல்லப்படுகிறது -நஷ்ட மோஹா ஸ்மிருதி லப்தா (பற்ற்றற நிலையில் இருந்து நினைவு செய்பவர்). எனவே 18-வருட முடிவின் இந்த விசேஷ முழுமை ஆவதற்கான அத்தியாத்தின் சொரூபத்தை வெளிப்படுத்துங்கள். இதற்கு தான் சொல்லப்படுகிறது -பாப்சமான் ஆவது, நல்லது.

சதா ஜொலித்துக் கொண்டிருக்கக் கூடிய ஆன்மீக நட்சத்திரங்களுக்கு, சதா திருப்தியின் அலைகளை பரப்பக்கூடிய திருப்திமணிகளுக்கு, எப்பொழுதும் ஒரே நேரத்தில் தியாகம்-தபஸ்யா-சேவையின் தாக்கத்தை ஏற்படுத்தி, கவர்ந்திழுக்கும் ஆத்மாக்களுக்கு, சதா அனைத்து ஆத்மாக்களுக்கும் ஆன்மீக உணர்வின் ஆன்மீக பலனை தரக்கூடிய விதை சொரூபமான பாபாவிற்கு சமமாக இருக்கும் ஆன்மீக குழந்தைகளுக்கு பாப்தாதாவின் முழுமை ஆவதற்கான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பஞ்சாப் மற்று ஹரியானா மண்டலத்தை சேர்ந்த சகோதர-சகோதரிகளுக்கு அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** சதா

தன்னை ஆடாத-அசையாத ஆத்மா என அனுபவம் செய்கிறீர்களா? எப்படிபட்ட சூழ்நிலையிலும் (பிரச்சனையில்) உறுதியாக இருப்பது, இது தான் பிராமண ஆத்மாக்களின் அடையாளமாகும். உலகம் குழப்பத்தில் இருக்கிறது, ஆனால் சிரேஷ்ட ஆத்மாக் களாகிய நீங்கள் குழப்பத்தில் வரமுடியாது. ஏன்? நாடகத்தின் ஒவ்வொரு காட்சியையும் தெரிந்திருக்கிறீர்கள். ஞானம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். யார் ஞானம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்களோ, அவர்கள் சக்திசாலிகளாகவும் இருப்பார்கள். எனவே ஞானம் நிறைந்த ஆத்மாக்கள், சக்திசாலியான ஆத்மாக்கள் சதா இயல்பாகவே உறுதியாக இருப்பார்கள். அதனால் சூழ்நிலையை கண்டு ஒருபொழுதும் பயப்படுவதில்லை அல்லவா! பயமற்றவர்களாக இருக்கிறீர்களா? சக்திகளே (மாதர்களே) பயமற்றவர் களாக இருக்கிறீர்களா? அல்லது சிறிது சிறிதாக பயம் வருகிறதா? ஏனெனில் உள்நாட்டு போர் ஏற்பட வேண்டுமென்று ஆரம்பத்திலிருந்தே -ஸ்தாபனையின் சமயத்திலிருந்தே இருக்கிறது. இது உங்களுக்கு ஆரம்ப கால வரைபடங்களில் காட்டப்பட்டிருக்கிறது. எனவே எது காட்டப்பட்டிருக் கிறதோ, அது நடை பெற வேண்டுமல்லவா. பாரதத்தின் நடிப்பே உள்நாட்டு போரினால் தான், ஆகையால் எதுவும் புதிதல்ல. அதனால் எதுவும் புதிதல்ல என்பதா அல்லது என்ன ஆகுமோ, எப்படி ஆகுமோ, இது நடந்தது என்று பயந்து விடுகிறீர்களா? செய்திகளை கேட்டாலும், பார்த்தாலும் கூட ஏற்கனவே உருவாக்கப்பட்ட நாடகத்தை புரிந்துகொண்டு, சக்திசாலி ஆகி பார்க்கவும், மற்றவர் களுக்கு கூட சக்தி கொடுக்க வேண்டும் -இது தான் உங்கள் அனைவரின் வேலை. உலகத்தினர் பயந்துக் கொண்டேயிருப்பார்கள், மேலும் நீங்கள் அந்த ஆத்மாக்களிடத்தில் சக்தியை நிரப்ப வேண்டும். யாரெல்லாம் தொடர்பில் வருகிறார்களோ, அவர்களுக்கு சக்திகளின் தானம் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். அமைதியின் தானம் அளியுங்கள். அமைதியில்லாத இந்த நேரத்தில் தான் அமைதியை தரு வேண்டும். எனவே அமைதியின் தூதுவராக இருக்கிறீர்கள். அமைதியின் தூதுவர் என்று பாடப்படுகிறது அல்லவா. அமைதியின் தூதுவர் நீங்களா அல்லது மற்றவர்களா? எனவே ஒருபொழுதும் எங்கிருந்தாலும், நடந்தாலும், சதா தன்னை அமைதியின் தூதுவர் என்று புரிந்து கொண்டு இருங்கள். அமைதியின் தூதுவராக இருக்கிறீர்கள், அமைதியின் செய்தியை தருபவர்களாக இருக்கிறீர்கள் என்றால், தானும் கூட அமைதி சொரூபமாகி சக்திசாலியாக இருக்கிறீர்கள் மற்றும் மற்றவர்களுக்கு கூட

தருகிறீர்கள். அவர்கள் (உலகத்தினர்) அசாந்தியை பரப்புபவர்கள், நீங்கள் சாந்தியை பரப்பு பவர்கள். அவர்கள் நெருப்பு மூட்டுவார்கள், நீங்கள் தண்ணீரை ஊற்றுங்கள். இது தான் உங்களின் கடமையல்லவா. இதற்கு தான் உணமையான சேவாதாரி என்று சொல்லபடுகிறது. எனவே அப்படிப்பட்ட நேரத்தில் இந்த சேவைக்கான அவசியம் இருக்கிறது. சரீரம் அழியக் கூடியதாக இருக்கிறது, ஆனால் ஆத்மா சக்திசாலியாக இருக்கிறதென்றால் ஒரு சரீரத்திலிருந்து விடுபட்டு போனாலும் கூட மற்றொரு சரீரத்தில் நினைவின் பலனை அடைந்து கொண்டே யிருக்கும். ஆகையால் அழிவற்ற பிராப்தியை சேமித்து கொண்டே இருங்கள். எனவே நீங்கள் யார்? அமைதியின் தூதுவர்கள். அமைதியின் செய்தியை பரப்புபவர். மாஸ்டர் அமைதியின் வள்ளல். மாஸ்டர் சக்தியின் வள்ளல். இந்த நினைவு சதா இருக்கிறதல்லவா. சதா தன்னை இந்த நினைவின் மூலம் முன்னேற்றிக் கொண்டே செல்லுங்கள். மற்றவர்களையும் கூட முன்னேற்றுங்கள். இது தான் சேவை. அரசாங்கத்தின் ஏதேனும் நியமங்கள் இருந்தால், அதை பின்பற்றத் தான் வேண்டும் ஆனால் எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ, மனதின் சேவை மூலம், வார்த்தையின் மூலம் அவசியம் சேவை செய்துக் கொண்டே இருங்கள். இப்பொழுது மனதின் மிகவும் அவசியமாக இருக்கிறது ஆனால் எப்பொழுது தன்னிடத்தில் சக்தி நிரம்பியிருக்குமோ, அப்பொழுது தான் மற்றவர்களுக்கு கொடுக்க முடியும். அதனால் சதா அமைதியின் வள்ளலின் குழந்தைகளாகிய நீங்களும் அமைதியின் வள்ளல் ஆவீர்கள். வள்ளலாகவும் இருக்கிறீர்கள் என்றால் உருவாக்குபவர்களாகவும் இருக்கிறீர்கள். நான் மாஸ்டர் அமைதியின் வள்ளல், மாஸ்டர் சக்தியின் வள்ளல் என்ற நினைவு சதா எந்த காரியம் செய்துக் கொண்டிருந்தாலும் இருக்க வேண்டும். இந்த நினைவின் மூலம் அநேக ஆத்மாக்களுக்கு வைப்ரேஷன் கொடுத்துக் கொண்டேயிருங்கள். அப்பொழுது தான் இவர்களின் தொடர்பில் வருவதின் மூலம் அமைதியின் அனுபவம் கிடைப்பதை உணர்வார்கள்.. எனவே இந்த வரதானத்தை நினைவில் வைக்க வேண்டும் -பாபாவிற்கு சமமாக மாஸ்டர் அமைதியின் வள்ளல், சக்தியின் வள்ளல் ஆக வேண்டும். அனைவரும் தைரியசாலிகளாக இருக்கிறீர்கள் அல்லவா. குழப்பத்திலும் கூட வீணான எண்ணங்கள் வருவதில்லை. ஏனெனில் வீணான எண்ணங்கள் இருந்தால் சக்திசாலியாக ஆக விடாது. என்ன ஆகுமோ, இது நடந்து விடக் கூடாது,. இது வீணானதாகும். என்ன நடக்கிறதோ, அதை சக்திசாலியாக இருந்து

பாருங்கள், மேலும் மற்றவர்களுக்கும் சக்தியை கொடுங்கள். இது கூட ஒரு சாலை யோர காட்சியாகும் இது ஒரு காட்சி நடந்துக் கொண்டிருக்கிறது. ஒரு படம் எனப் புரிந்து கொண்டு பார்த்தால் பயப்படமாட்டீர்கள். நல்லது.

**பிரியா விடைதரும் நேரத்தில் -(அமிர்தவேளை):** இந்த சங்கமயுகம் அமிர்தவேளையாக இருக்கிறது. முழு சங்கமயுகமே அமிர்தவேளையாக இருக்கும் காரணத்தினால் இந்த சமயத்திற்கு சதா காலத்திற்கு மகான் தன்மை நிறைந்ததாக பாடப்படுகிறது. எனவே முழு சங்கமயுகமே அதாவது அமிர்தவேளை அதாவது டைமண்ட் மார்னிங் (வைரமான காலை) சதா பாபா குழந்தைகளுடன் இருக்கிறார், மேலும் குழந்தைகள் கூட பாபாவுடன் இருக்கிறார்கள். ஆகையால் எல்லைக்கு அப்பாற்பட்ட டைமண்ட் மார்னிங். பாப்தாதா சதா கூடவே இருக்கிறார், ஆனாலும் கூட வியக்த ரூபத்தில் (சாகார சொருபத்தில்) வியக்த தேசத்தில் (ஸ்தூல உலகத்தில்) கால அளவு படி இன்று கூட அனைத்து குழந்தை களுக்கும் சதா கூடவே இருப்பதற்கான குட்மார்னிங் என்று சொல்லுங்கள், கோல்டன் மார்னிங் என்று சொல்லுங்கள், டைமண்ட் மார்னிங் என்று சொல்லுங்கள், எப்படிவேண்டு மென்றாலும் சொல்லுங்கள் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் கொடுத்துக் கொண்டியிருக்கிறார். சுயம் கூட டைமண்டாக இருக்கிறோம், காலைபொழுது (சங்கமயுகம்) கூட டைமண்டாக இருக்கிறது, மேலும் கூட டைமண்ட் ஆக்குவதற்காக இருக்கிறது, ஆகையால் சதா துணையாக இருப்பதற்கான குட்மார்னிங். நல்லது.

**வரதானம்: ஐந்து தத்துவங்கள் மற்றும் ஐந்து விகாரங்களை தன்னுடைய சேவாதாரியாக மாற்றக்கூடிய மாயாவை வென்ற சுயராஜ்ய அதிகாரி ஆகுக!**

சத்யுகத்தில் விஷ்வ மகாராஜா மற்றும் வி ̂வ மகாராணியின் இராஜ்ய ஆடைகளை பின் பக்கம் இருந்து தாச -தாஷிகள் (பணிபுரிபவர்கள்) தூக்கிக் கொண்டு செல்வதை போன்று, சங்கமயுகத்தில் குழந்தை களாகிய நீங்கள் மாயாஜீத் சுயராஜ்ய அதிகாரி ஆகி பட்டபெயர் என்ற ஆடையின் மூலம் அலங்காரம் செய்து கொள்ளும்பொழுது 5-தத்துவங்கள் மற்றும் 5-விகாரங்கள் உங்களுடைய ஆடையை பின்னால் இருந்து

சுமக்கும், அதாவது அடிபணிந்து நடக்கும், இதற்காக திட எண்ணம் என்ற கயிற்றினால் பட்டபெயர் என்ற ஆடையை இறுக்கமாக கட்டிக்கொள்ளுங்கள். விதவிதமான ஆடைகள் மற்றும் அலங்காரத்தின் மூலம் அலங்கரித்துக் கொண்டு பாபாவுடன் இருந்தால், இந்த விகாரம் மற்றும் தத்துவம் மாறி, சகயோகி சேவாதாரியாக மாறிவிடும்.

**சுலோகன்: எந்த குணங்களை மற்றும் சக்திகளை வர்ணனை செய்கிறீர்களோ, அதனுடைய அனுபவத்தில் மூழ்கி விடுங்கள். அனுபவம் தான் மிகப் பெரிய அதிகாரம்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 14.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தற்சமயத்தின் இந்த வாழ்க்கை தான் எதிர்காலத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி (மதுபன் நிவாசிகளுடன் சந்திப்பு)!

இன்று உலகைப் படைப்பவர் தந்தை தன்னுடைய மாஸ்டர் படைப்பவர் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மாஸ்டர் படைப்பவர் தன்னுடைய படைப்புத் தன்மையின் நினைவில் எந்தளவு இருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். படைப்பவர் உங்கள் அனைவருடைய முதல் படைப்பு இந்த உடல். இந்த உடல் என்ற படைப்பின் படைப்பவராக எந்த அளவு ஆகியிருக்கிறார்கள்? உடல் என்ற படைப்பு எப்பொழுதாவது படைப்பவரை தன் பக்கம் ஈர்த்து படைப்புத்தன்மையை மறக்க வைத்து விடுவதில்லையே? எஜமானன் ஆகி இந்தப் படைப்பை சேவையில் ஈடுபடுத்துகிறீர்களா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது எஜமானன் ஆகி செய்ய முடியுமா? முதன் முதலில் இந்த உடலின் எஜமானத் தன்மையின் பயிற்சி தான் இயற்கையின் அதிபதியாக மற்றும் உலகின் அதிபதியாக ஆக்க முடியும். ஒருவேளை உடலின் எஜமானத்தன்மையில் சம்பூர்ண வெற்றி இல்லை என்றால், உலகின் எஜமானத்தன்மையிலும் சம்பன்னமாக ஆக முடியாது. தற்சமயத்தின் இந்த வாழ்க்கை எதிர்காலத்தைக் காண்பிக்கும் கண்ணாடி. இதே கண்ணாடி மூலம் தன்னுடைய எதிர்காலத்தைத் தெளிவாகப் பார்க்க முடியும். முதலில் இந்த உடலின் சம்மந்தம் மற்றும் சம்ஸ்காரத்தின் அதிகாரி ஆவதின் ஆதாரத்தில் தான் எஜமானத்தன்மையின் சம்ஸ்காரம் இருக்கும். சம்மந்தத்தில் விலகியிருந்து அன்பான நிலை வருவது தான் எஜமானத்தன்மையின் அடையாளம். சம்ஸ்காரங்களில் படைப்பது மற்றும் பணிவாக இருப்பது என்ற இந்த இரண்டு விசேஷங்களும் எஜமானத்தன்மையின்

அடையாளம். கூடவே அனைத்து ஆத்மாக்களின் தொடர்பில் வருவது, அன்பானவர் ஆவது, உள்ளத்தின் அன்பின் ஆசீர்வாதம் அதாவது சுபபாவனை அனைவரின் மனதிலிருந்தும் அந்த ஆத்மாவிற்காக வெளியாக வேண்டும். தெரிந்திருந்தாலும், தெரியாமல் இருந்தாலும், தூரத்து உறவு மற்றும் தொடர்பு இருந்தாலும், யார் பார்த்தாலும் அவர் அன்பின் காரணமாக இவர் நம்முடையவர் என்றே தான் அனுபவம் செய்ய வேண்டும், அன்பின் அறிமுகத்தினால் தன்னுடையவர் என்று அனுபவம் செய்வார். சம்மந்தம் தூரத்தினுடையதாக இருந்தாலும், அன்பு சம்பன்னத்தை அனுபவம் செய்விக்கும். உலகின் அதிபதி மற்றும் உடலின் அதிபதியின் பயிற்சி உள்ள ஆத்மாக்களுக்கு இந்த விசேஷமும் அனுபவத்தில் வரும். அவர் யாருடைய தொடர்பில் வந்தாலும் அவருக்கு அந்த விசேஷ ஆத்மாவிட மிருந்து வள்ளல் தன்மையின் மற்றும் சாந்தி, அன்பு, ஆனந்தம், குஷி, சகயோகம், தைரியம், உற்சாகம், ஊக்கம் ஏதாவது விசேஷத்தின் வள்ளல் தன்மையின் அனுபவம் ஆகும். எப்பொழுதும் விசால புத்தி, விசால உள்ளம், அதைத் தான் நீங்கள் பெரிய மனமுடையவர் என்று கூறுகிறீர்கள், என்று அனுபவம் ஆகும். இப்பொழுது இந்த அடையாளங்கள் மூலம் நான் என்ன ஆகுபவன் என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். கண்ணாடி அனைவரிடமும் இருக்கிறதா? எந்த அளவு தானே தன்னைத் தெரிந்து கொள்ள முடியுமோ அந்த அளவு மற்றவர்கள் தெரிந்து கொள்ள முடியாது. எனவே தன்னைத் தெரிந்து கொள்ளுங்கள். நல்லது.

இன்றோ சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். இருந்தும் அனைவரும் வந்திருக்கிறீர்கள் என்றால் பாப்தாதாவிற்கும் அனைத்து குழந்தைகள் மீதும் அன்பின் கூடவே மரியாதையையும் வைக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே தான் ஆன்மீக உரையாடல் செய்தோம். மதுபன்னைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய அதிகாரத்தை விடுவதில்லை, இருந்தும் அருகாமையில் அமர்ந்திருக்கிறீர்கள். அனேக விஷயங்களிலிருந்து கவலையற்றவர் ஆகி அமர்ந்திருக்கிறீர்கள். யார் வெளியில் இருக்கிறார்களோ அவர்களுக்கு இருந்தும் கடுமையாக உழைக்க வேண்டியதாக இருக்கிறது. சம்பாதிக்க வேண்டும் மற்றும் சாப்பிட வேண்டும் என்ற இது ஒன்றும் குறைந்த உழைப்பு இல்லை. மதுபன்னில் சம்பாதிக்க வேண்டும் என்ற கவலையோ இல்லை தான் இல்லையா? குடும்பத்தில் இருப்பவர்களுக்கு சகித்துக் கொள்ளவும் வேண்டியதாக

இருக்கிறது. எதிர்நோக்கவும் வேண்டியதாக இருக்கிறது, அன்னப்பறவை கொக்குகளின் மத்தியில் இருந்து கொண்டு தன்னுடைய முன்னேற்றத்தைச் செய்து முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள் ஆனால் நீங்களோ பல விஷயங்களிலிருந்து இயல்பாகவே விலகியிருப்பவராக ஆகியிருக்கிறீர்கள். சௌகரியமாக இருக்கிறீர்கள், சௌகரியமாக சாப்பிடுகிறீர்கள் மற்றும் ஓய்வும் எடுத்துக் கொள்கிறீர்கள். வெளி யுலகத்தில் அலுவலகங்களுக்கு செல்பவர்கள் பகலில் ஓய்வு எடுப்பார்களா என்ன? இங்கோ உடலுக்கும் ஓய்வு இருக்கிறது என்றால் புத்திக்கும் ஓய்வு இருக்கிறது. அம்மாதிரி மதுபன் நிவாசிகளின் நிலை அனைவரையும் விட நம்பர் ஒன் ஆக ஆகி விட்டது இல்லையா? ஏனென்றால் ஒரே ஒரு வேலை தான் இருக்கிறது. படிக்கிறீர்கள் என்றாலும் தந்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். சேவை செய்கிறீர்கள் என்றாலும் அது யக்ஞ சேவை. எல்லைக்கப்பாறப்பட்ட தந்தையின் இது எல்லைக்கப்பாறப்பட்ட வீடு. ஒரே விஷயம் ஒரே காரியம் வேறு எதுவும் இல்லை. என்னுடைய சென்டர் என்ற இதுவும் இல்லை. இது என்னுடைய பொறுப்பில் இருக்கிறது என்பதும் இருக்க வேண்டாம். மதுபன் நிவாசிகளுக்கு பல விஷயங்களில் சுலபமான முயற்சி மற்றும் சுலபமான பிராப்தி இருக்கிறது. நல்லது -அனைத்து மதுபன்னைச் சேர்ந்தவர்கள் பொன் விழாவிற்கான நிகழ்ச்சியை தயாரித்திருக்கிறீர்கள் இல்லையா? நிகழ்ச்சிக்கானது இல்லை, அதற்காகவோ ஃபோல்டர்கள் ஆகியவை அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. அது உலக சேவைக்காக இருக்கிறது. தனக்காக என்ன திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். தன்னுடைய மேடையில் எந்த பாகத்தை செய்வீர்கள்? அந்த மேடைக்கோ பேச்சாளர்களை, நிகழ்ச்சியையும் தயாரித்து விடுகிறீர்கள். தன்னுடைய நிலைக்கான நிகழ்ச்சி என்ன தயாரித்திருக்கிறீர்கள். நல்ல காரியம் வீட்டில் தொடங்குகிறது என்றால் அது மதுபன் நிவாசிகள் தான் இல்லையா? என்ன நிகழ்ச்சி நடந்தாலும் என்ன செய்கிறீர்கள்? (தீபத்தை ஏற்றுகிறோம்). பொன்விழாவின் தீபத்தை யார் ஏற்றுவார். ஒவ்வொரு விஷயத்தையும் யார் தொடங்கி வைப்பார்? மதுபன் வாசிகளிடம் தைரியம் இருக்கிறது, ஊக்கமும் இருக்கிறது, வாயுமண்டலமும் இருக்கிறது. அனைத்து உதவியும் இருக்கிறது. எங்கு அனைவரின் சகயோகம் இருக்கிறதோ அங்கு அனைத்தும் சுலபமாக இருக்கும். ஒரு விஷயம் மட்டும் செய்ய வேண்டும். அது எது? பாப்தாதா அனைத்து

குழந்தைகளில் ஒவ்வொருவரும் தந்தைக்குச் சமமாக வேண்டும் என்ற சிரேஷ்ட விருப்பம் வைக்கிறார். திருப்தியாக இருப்பது மேலும் திருப்திப் படுத்துவது. இது தான் விசேஷம் முதலில் முக்கியமான விஷயம் தன் மேல் அதாவது தன்னுடைய முயற்சியின் மேல், தன்னுடைய சுபாவம் சம்ஸ்காரத்தின் மேல், தந்தையை எதிரில் வைத்துக் கொண்டே திருப்தியாக இருக்கிறேனா என்று இதை சோதனை செய்ய வேண்டும். ஆம். சக்திக்கேற்றபடி நான் திருப்தியாக இருக்கிறேன் என்ற விஷயம் வேறு ஆனால் உண்மையான சொரூபத்தின் கணக்குப் படி தன் மேல் திருப்தியாக ஆவது மேலும் மற்றவர்களை திருப்தி படுத்துவது என்ற இந்த திருப்தி தான் மகான் தன்மை. மற்றவர்களும் இவர் யதார்த்த ரூபத்தில் திருப்தியாக இருக்கும் ஆத்மா என்று உணர வேண்டும். திருப்தியில் அனைத்தும் வந்து விடுகிறது. டிஸ்டர்ப் (தொந்தரவு) ஆகாதீர்கள் மற்றும் டிஸ்டர்ப் (தொந்தரவு) செய்யாதீர்கள், இதைத் தான் திருப்தி என்று கூறுவது. டிஸ்டர்ப் செய்பவர்கள் அதிகமாக இருப்பார்கள் ஆனால் நீங்கள் டிஸ்டர்ப் ஆகாதீர்கள். அக்னியின் வெப்பத்திலிருந்து நீங்களே உங்களை விலக்கிக் கொண்டு பாதுகாப்பாக இருங்கள். மற்றவர்களைப் பார்க்காதீர்கள். நான் என்ன செய்ய வேண்டும் என்று தன்னைப் பாருங்கள். நான் பொறுப்பாளர் ஆகி மற்றவர்களுக்கு சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்களின் சகயோகம் கொடுக்க வேண்டும். இது தான் விசேஷ தாரணை, இதில் அனைத்தும் வந்து விடும். இதற்கோ பொன்விழா கொண்டாட முடியும் இல்லையா? முக்கியமாக மதுபன்னைச் சேர்ந்தவர்களுக்காக கூறுகிறோம் ஆனால் இது அனைவருக்காகவும் தான். மோகத்தை வென்றவரின் கதை கேட்டிருக்கிறீர்கள் இல்லையா? அதே போல் திருப்தியைப் பற்றி ஒரு கதை உருவாக்குங்கள். நீங்கள் யாரிடம் சென்றாலும், யாராவது உங்களை எவ்வளவு தான் குறுக்கு விசாரணை செய்தாலும் ஆனால் அனைவரின் வாயிலிருந்து, அனைவரின் மனதிலிருந்து திருப்தியின் அனுபவம் ஆகட்டும். இவரோ அப்படிப்பட்டவர் தான் என்று அப்படி இருக்க வேண்டாம். நான் எப்படி ஆகி மற்றும் ஆக்குவேன் என்ற இந்த சின்னஞ்சிறு விஷயத்தை மட்டும் மேடையில் காண்பியுங்கள். நல்லது.

**தாதிகளுடன் சந்திப்பு:** உங்கள் அனைவரின் உள்ளத்தின் எண்ணம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்தே விடுகிறது. இத்தனை அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்களின் சிரேஷ்ட எண்ணம் இருக்கிறது என்றால் நடைமுறை

ரூபத்திலும் கண்டிப்பாக இருக்கும். மிக நல்ல திட்டங்களை உருவாக்கியிருக்கிறீர்கள். மேலும் இந்த திட்டம் தான் அனைவரையும் தெளிவானவர்களாக ஆக்கி விடும். முழு உலகத்தில் விசேஷ ஆத்மாக்களின் சக்தியோ ஒன்றே ஒன்று தான். வேறு எங்கேயும் இந்த மாதிரி விசேஷ ஆத்மாக் களின் சபை இல்லை. இங்கு கூட்டத்தின் / சபையின் சக்தி விசேஷமானது. எனவே இந்த சபையின் மீது அனைவரின் விசேஷ பார்வை இருக்கிறது. மேலும் அனைவருமே மேலே கீழே ஆடுகிறார்கள். ஆசனங்கள் ஆடுகிறது மேலும் இவர்கள் இராஜ சிம்மாசனத்தை உருவாக்குகிறார்கள். இங்கு குருவின் ஆசனம் இல்லை, எனவே ஆடுவது கிடையாது. சுயராஜ்யத்தின் அல்லது விஷ்வ இராஜ்யத்தின் ஆசனம் இருக்கிறது. அனைவரும் அசைப்பதற்கு முயற்சியும் செய்தாலும், குழுவின் சக்தி இதை விசேஷமாக பாதுகாக்கிறது. அங்கே ஒவ்வொருவரையும் தனியாக பிரித்து ஒற்றுமையை குலைத்து பிறகு ஆட்டுகிறார்கள். இங்கு குழுவின் சக்தியின் காரணமாக அசைக்க முடியாது. எனவே எப்பொழுதும் இந்த குழுவின் சக்தியின் விசேஷத்தை அதிகப்படுத்தி முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். இது குழுவின் கோட்டை எனவே, தாக்க முடியாது. வெற்றியோ ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது, மீண்டும் அதே போல் செய்ய வேண்டும். அவ்வளவு தான்! யார் அதே மாதிரி செய்வதில் திறமைசாலியாக ஆகுகிறாரோ அவர் தான் வெற்றியடைந்தவர் ஆகி மேடையில் பிரசித்தி ஆகி விடுகிறார். குழுவின் சக்தி தான் வெற்றிக்கான விசேஷ ஆதார சொரூபம். இந்த குழு தான் சேவையின் வளர்ச்சியில் வெற்றியை பிராப்தி செய்வித்தது. பாலனைக்கான பிரதிபலனை தாதிகள் மிக நன்றாகக் கொடுத்தார்கள். குழுவின் சக்திக்கான ஆதாரம் என்ன? மரியாதை கொடுப்பது தான் மரியாதை பெறுவது என்ற இந்தப் பாடம் மட்டும் உறுதியாக இருக்க வேண்டும். கொடுப்பது தான் பெறுவது, பெறுவது பெறுவதல்ல. பெறுவது என்றால் இழப்பது. கொடுப்பது என்றால் பெறுவது. யாராவது கொடுத்தார்கள் என்றால் கொடுப்பேன், இது வியாபாரம் இல்லை. இதுவோ வள்ளல் ஆவதற்கான விஷயம். வள்ளல் பெற்றுக் கொண்டு பிறகு கொடுப்பதில்லை. அவரோ கொடுத்துக் கொண்டே இருப்பார். எனவே தான் இந்தக் குழு வெற்றி அடைந்திருக்கிறது ஆனால் இப்பொழுது கங்கனம் தயாராகி இருக்கிறது, மாலை தயாராகவில்லை. வளர்ச்சி அடைய வில்லை என்றால் யார் மீது இராஜ்யம் செய்வீர்கள். இப்பொழுதோ வளர்ச்சியின் பட்டியலில் குறை

இருக்கிறது. 9-லட்சமோ இன்னும் தயாராகவில்லை. எந்த விதி மூலமாகவும் கிடைக்கத் தான் செய்யும் இல்லையா? விதி மாறிக் கொண்டே இருக்கும். முன்பு உடலில் இருப்பவரை வியக்தமாகச் சந்தித்தீர்கள், மேலும் இப்பொழுது அவ்யக்தமாக சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். விதி மாறி விட்டது இல்லையா? இன்னும் வரும் நாட்களில் விதி மாறிக் கொண்டே இருக்கும். வளர்ச்சிக்கு ஏற்றபடி சந்திப்பதற்கான விதியும் மாறிக் கொண்டே இருக்கும். நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** (1) எப்பொழுதும் தன்னுடைய குணசொரூபம் மூலமாக குணங்களை தானம் செய்து கொண்டே இருங்கள். பலமற்றவர்களுக்கு சக்திகளின், குணங்களின், ஞானத்தின் தானம் செய்தீர்கள் என்றால் சதா காலத்திற்கும் மகாதானி (பெரும் வள்ளல்) ஆத்மா ஆகி விடுவீர்கள். வள்ளலின் குழந்தைகள் நீங்கள் கொடுப்பவர்களேயன்றி பெறுபவர்கள் அல்ல. ஒருவேளை இவர் இப்படி செய்தார் என்றால் நான் செய்வேன் என்று நினைக்கிறீர்கள் என்றால் இது பெறுபவராக ஆகி விட்டது. நான் செய்ய வேண்டும், இது கொடுப்பவராக ஆகி விட்டது. எனவே தேவதா (கொடுப்பவராக) ஆகுங்கள், லேவதா (பெறுபவராக) ஆகாதீர்கள். என்னென்ன கிடைத்திருக்கிறதோ அதைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். எந்த அளவு கொடுத்துக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு அது வளர்ந்து கொண்டே இருக்கும். நீங்கள் எப்பொழுதும் தேவி அதாவது கொடுப்பவர்கள். நல்லது.

2) மிக அதிகமாக கேட்டிருக்கிறீர்கள். இறுதியில் கணக்கைப் பாருங்கள், எவ்வளவு கேட்டிருக் கிறோம். கேட்பது மற்றும் செய்வது இரண்டும் சேர்ந்தே இருக்கிறதா? அல்லது கேட்பதிலும் மற்றும் செய்வதிலும் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறதா? எதற்காக கேட்கிறீர்கள்? செய்வதற்காகத் தான் இல்லையா? கேட்பது மற்றும் செய்வது எப்பொழுது சமமாகி விடுமோ அப்பொழுது என்னவாகி விடும்? சம்பன்னம் ஆகி விடுவீர்கள் இல்லையா? முதன்முதலில் சம்பூர்ண நிலையின் உதாரண மாக யார் ஆவீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் நான் ஆவேன் என்று ஏன் கூறுவதில்லை. இதிலோ முதலில் செய்பவர் அர்ஜுன். எப்படி தந்தை (பாப்தாதா) தன்னை பொறுப்பாளர் ஆக்கினார். அதே போல் யார் பொறுப்பாளர் ஆகிறார்களோ அவர் அர்ஜுனன் ஆகி விடுகிறார். அதாவது முதல் எண்ணில் வந்து விடுகிறார். நல்லது. யார் ஆகிறார்கள்

என்று பார்க்கலாம். பாப்தாதாவோ குழந்தைகளை அம்மாதிரி பார்க்க விரும்புகிறார். வருடங்கள் கடந்து சென்று கொண்டே இருக்கின்றன. எப்படி வருடம் கடந்து செல்கிறதோ அதே போல் பழைய நடத்தையும் கடந்து சென்று விட வேண்டும். மேலும் புதிய ஊக்கம், புதிய எண்ணம் எப்பொழுதும் இருக்கட்டும். இது தான் சம்பூர்ணத்தின் அடையாளம். இப்பொழுது பழையது அனைத்தும் அழிந்து விட்டது, இப்பொழுது அனைத்தும் புதியதாக இருக்கட்டும்.

**கேள்வி: தந்தையின் அருகாமையில் வருவதற்கான ஆதாரம் என்ன?**

பதில்: விசேஷங்கள்! ஏதாவது ஒரு விசேஷம் தான் தந்தையின் அருகில் கொண்டு வந்தது. இந்த விசேஷங்கள் சேவை மூலமாகத் தான் வளர்ச்சி அடையும். என்னென்ன விசேஷங்களை தந்தை நிரப்பி இருக்கிறாரோ அவை அனைத்தையும் சேவையில் ஈடுபடுத்துங்கள். விசேஷத்தை நடைமுறையில் கொண்டு வருவதினால் சேவையின் பாடத்திலும் மதிப்பெண் கிடைத்து விடுகிறது. தன்னுடைய அனுபவங்களை மற்றவர்களுக்குக் கூறினீர்கள் என்றால், அவர்களுக்கும் ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும்.

**கேள்வி: ஆன்மீகத்தன்மையில் குறை வருவதற்கான காரணம் என்ன?**

பதில்: தன்னை மற்றும் யாருக்கு சேவை செய்கிறீர்களோ அவர்களை தந்தையின் சொத்து என்று புரிந்து கொள்வதில்லை. அவருடைய சொத்து என்று புரிந்து கொள்வதினால் பற்றற்ற நிலை இருக்கும். மேலும் பற்றற்றவர் ஆவதினால் தான் ஆன்மீகத்தன்மை வரும்.

**கேள்வி: தற்சமயம் உலகத்தில் பெரும்பான்மையான ஆத்மாக்களில் எந்த இரண்டு விஷயங்கள் பிரவேசம் ஆகியிருக்கின்றன?**

பதில்: 1) பயம் மற்றும் 2) கவலை. விசேஷமாக இந்த இரண்டுமே அனைவரிலும் பிரவேச மாகியிருக்கின்றன ஆனால் எந்த அளவு அவர்கள் கவலையில், வருத்தத்தில் இருக்கிறார்களோ அந்த அளவே நீங்கள் நற்சிந்தனையாளராக இருங்கள். கவலை மாறி நற்சிந்தனையின் பாவனை சொரூபமானவர் ஆகி விட்டீர்கள். பயபீதிக்குப் பதிலாக

சுகத்தின் பாடலை பாடிக் கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி கவலையில்லா இராஜாக்களை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார்.

**கேள்வி: தற்சமயம் எந்த சீசன் நடந்து கொண்டிருக்கிறது? அம்மாதிரியான நேரத்தில் குழந்தைகள் உங்களுடைய கடமை என்ன?**

பதில்: தற்சமயத்து சீசனே அகால மரணத்தினுடையது. எப்படி காற்றின், கடலின் புயல் திடீரென்று வருகிறது. அதே போல் இந்த அகால மரணத்தின் புயலும் திடீரென்று மேலும் அதிவேகத்தில் ஒரே நேரத்தில் அநேகர்களை எடுத்துச் சென்று விடுகிறது. அந்த மாதிரி நேரத்தில் அகால மரணம் அடையும் ஆத்மாக்களுக்கு, அகால்மூர்த்தியாகி அமைதி மற்றும் சக்தியின் சகயோகம் கொடுப்பது குழந்தைகள் உங்களுடைய கடமை. எனவே எப்பொழுதும் நற்சிந்தனையாளர் ஆகி சுபபாவனை, சுபவிருப்பங்களின் மனசேவை செய்து அனைவருக்கும் சுகம், சாந்தியை கொடுங்கள். நல்லது.

**வரதானம்: திடத்தன்மை மூலமாக கட்டாந்தரை நிலத்திலும் பழத்தை உருவாக்கக்கூடிய வெற்றி சொரூபமானவர் ஆகுக!**

எந்தவொரு விஷயத்திலும் வெற்றி சொரூபமாக ஆவதற்காக திடத்தன்மை மற்றும் அன்பு நிறைந்த கூட்டம் வேண்டும். இந்த திடத்தன்மை கட்டாந்தரை நிலத்திலும் கூட பழத்தை உருவாக்கி விடும். எப்படி இன்றைய நாட்களில் அறிவியலைச் சேர்ந்தவர்கள் பாலைவனத்திலும் பழங்களை உருவாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதே போல் நீங்கள் அமைதி சக்தி மூலம் அன்பு என்ற நீர் பாய்ச்சி பசுமையாக ஆக்குங்கள். திடத்தன்மை மூலமாக நம்பிக்கை அற்றவரிலும் நம்பிக்கை என்ற தீபத்தை ஏற்ற முடியும். ஏனென்றால் தைரியத்தின் மூலம் தந்தையின் உதவி கிடைத்து விடுகிறது.

**சுலோகன்: தன்னை எப்பொழுதும் பிரபுவின் சொத்து என்று புரிந்து நடந்து கொண்டீர்கள் என்றால், செய்யும் காரியத்தில் ஆன்மீகத் தன்மை வரும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வலது கரமாக எப்படி ஆவது?

இன்று பாப்தாதா தம்முடைய அநேக புஜங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். 1. புஜங்கள் எப்போதுமே பிரத்யட்ச (வெளிப்படையான) கர்மம் செய்வதற்கான ஆதாரமாகும். ஒவ்வொரு ஆத்மாவும் தன்னுடைய புஜங்களின் மூலமாகத் தான் கர்மம் செய்கிறது. 2. புஜங்கள் சகயோகத்தின் அடையாளம் என்றும் சொல்லப் படுகிறது. சகயோகி ஆத்மா வலது கரம் எனச் சொல்லப் படுகிறார். 3. புஜங்கள் சக்தி ரூபத்திலும் காண்பிக்கப் படுகிறது. எனவே புஜபலம் எனச் சொல்லப்படுகிறது. புஜங்களுக்கு இன்னும் விசேஷங்கள் உள்ளன. 4. புஜம் என்றால் கை -சிநேகத்தின் அடையாளம். அதனால் சிநேகத்தினால் சந்திக்கும் போதெல்லாம் கை கொடுத்துக் கொள்கின்றனர். புஜங்களின் விசேஷ சொரூபம் முதலாவது சொல்லப்பட்டது -சங்கல்பத்தைக் கர்மத்தில் பிரத்யட்சம் செய்வது. நீங்கள் அனைவரும் பாபாவின் புஜங்கள். ஆகவே இந்த நான்கு விசேஷங்களும் தங்களிடம் காணப் படுகின்றனவா? இந்த நான்கு விசேஷங்கள் மூலமாகவும் தன்னைத்தான் அறிந்து கொள்ள முடிகிறதா -நான் எத்தகைய புஜம் என்று? நீங்கள் அனைவருமே புஜங்கள் தாம், ஆனால் வலது புஜமா, இடது புஜமா என்பதை இந்த விசேஷங்கள் மூலம் சோதித்துப் பாருங்கள்.

முதல் விஷயம் பாபாவின் ஒவ்வொரு சிரேஷ்ட சங்கல்பத்தை, சொல்லை, கர்மத்தில், அதாவது நடை முறை வாழ்க்கையில் எது வரை கொண்டு வந்திருக்கிறீர்கள்? கர்மம் அனைவருக்குமே வெளிப் படையாகத் தெரியும் (பிரத்தியட்சமாக). சகஜமான விஷயமாகும். கர்மத்தை அனைவரும் பார்க்க முடியும் மற்றும் சகஜமாக அறிந்து கொள்ள முடியும் அல்லது கர்மத்தின் மூலமாக அனுபவம் செய்ய முடியும். எனவே அனைவருமே இதைத் தான் சொல்கின்றனர் -எல்லாருமே சொல்லத்தான் செய் கின்றனர், ஆனால் செய்து காட்டுங்கள். பிரத்யட்ச கர்மத்தில் பார்த்தால் தான் ஏற்றுக் கொள்வார்கள், இவர்கள் சொல்வது சத்தியம் என்று. ஆக,

கர்மம் என்பது, சங்கல்பத்துடன் கூடவே பேச்சையும் கூட பிரத்யட்ச பிரமாண ரூபத்தில் தெளிவு படுத்தக் கூடியதாகும். அத்தகைய வலது கரம் அல்லது வலது புஜம் ஒவ்வொரு கர்மத்தின் மூலமும் பாபாவைப் பிரத்யட்சம் செய்து கொண்டிருக்கிறதா? வலது கரத்தின் விசேஷம் -அதன் மூலம் சதா சுப மற்றும் சிரேஷ்ட கர்மங்கள் செய்யப் படுகின்றன. வலது கரம் செய்யும் கர்மத்தின் வேகம் இடது கரத்தை விடவும் தீவிரமாக இருக்கும். ஆக, அது போல் சோதித்துப் பாருங்கள். சதா சுப மற்றும் சிரேஷ்ட கர்மம் தீவிர கதியில் நடைபெறுகின்றனவா? சிரேஷ்ட கர்மதாரி வலது கரமாக இருக்கிறோமா? இந்த விசேஷங்கள் இல்லை என்றால், தானாகவே இடது கரமாகிறது. ஏனென்றால் உயர்ந்தவரிலும் உயர்ந்தவராகிய தந்தையைப் பிரத்தியட்சம் செய்வதற்கு நிமித்தமாக இருப்பது உயர்ந்ததிலும் உயர்ந்த கர்மம் ஆகும். ஆன்மிக திருஷ்டி மூலமாயினும் சரி, தன்னுடைய குஷியின் ஆன்மிக முகத்தின் மூலமாக என்றாலும் சரி, பாபாவைப் பிரத்யட்சம் செய்யுங்கள். இதுவும் கர்மம் தான். ஆக, அந்த மாதிரி சிரேஷ்ட கர்மதாரியாக ஆகி இருக்கிறீர்களா?

இதே விதமாக பூஜம் (கரம்) என்றால் சகயோகத்தின் (உதவி) அடையாளம். ஆக, சோதித்துப் பாருங்கள், ஒவ்வொரு சமயம் பாபாவின் காரியத்தில் சகயோகியாக இருக்கிறோமா? உடல்-மனம்-செல்வம் மூன்றின் மூலமாகவும் சதா சகயோகியா? அல்லது அவ்வப்போது மட்டும் சகயோகியா? எப்படி லௌகிக் காரியத்தில் சிலர் முழு நேரம் காரியம் செய்பவராக உள்ளனர். சிலர் கொஞ்ச நேரம் காரியம் செய்பவர்கள். அதில் வித்தியாசம் உள்ளது இல்லையா? அவ்வப்போது சகயோகியாக இருப்பவர்களின் பிராப்தி மற்றும் சதா சகயோகியாக இருப்பவர்களின் பிராப்திக்கிடையே வித்தியாசம் ஆகி விடுகிறது. எப்போது சமயம் கிடைத்ததோ, எப்போது ஊக்கம் வந்ததோ, அல்லது எப்போது மூடு (மனநிலை) வந்ததோ, அப்போது சகயோகி ஆவது. இல்லையென்றால் சகயோகிக்கு பதில் வியோகி (ஒத்துழைக்காதவர்) ஆகி விடுகின்றனர். ஆகவே சோதித்துப் பாருங்கள் -- மூன்று ரூபங்களிலும், அதாவது உடல்-மனம்-செல்வம் அனைத்து ரூபங்களிலும் பூர்ண சகயோகி ஆகியிருக்கிறீர்களா அல்லது பாதி தான் ஆகியிருக்கிறீர்களா? தேகம் மற்றும் தேகத்தின் சம்மந்தம் -அதில் அதிகமாக உடல்-மனம்- செல்வத்தை ஈடுபடுத்துகிறீர்களா அல்லது பாபாவின் சிரேஷ்ட காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்களா? தேகத்தின் சம்மந்தங்களின் ஈடுபாடு எவ்வளவு

உள்ளதோ, அந்த அளவு தன்னுடைய தேகத்தின் ஈடுபாடும் அதிகமாக இருக்கும். அநேகக் குழந்தைகள் சம்மந்தத்தின் ஈடுபாட்டிலிருந்து கடந்து சென்று விடுகின்றனர் ஆனால் தேகத்தின் ஈடுபாட்டில் சமயம், சங்கல்பம், செல்வத்தை ஈஸ்வரிய காரியத்தில் அதிகமாக ஈடுபடுத்துகின்றனர். தனது தேகத்தின் ஈடுபாட்டினுடைய இல்லறமும் கூட பெரிய வலையாகும். இந்த வலையிலிருந்து அப்பாற்பட்டு இருக்கும் போது தான் வலது கரம் எனச் சொல்வார்கள். பிராமணராக மட்டும் ஆகி விட்டோம், பிரம்மாகுமார், குமாரி எனச் சொல்லிக் கொள்வதற்கு அதிகாரி (உரிமை) ஆகி விட்டோம் என்பதாலேயே சதா காலத்தின் சகயோகி எனச் சொல்ல முடியாது ஆனால் இரண்டு ஸ்மிருதிகளில் இருந்தும் விலகியவராகவும், பாபாவின் காரியத்திற்கு அன்பானவராகவும் இருக்க வேண்டும். தேகத்தின் ஈடுபாட்டினுடைய விளக்கம் மிகவும் விஸ்தாரமானதாகும். இதைப்பற்றியும் பின்னால் தெளிவு படுத்துவோம் ஆனால் சகயோகியாக எது வரை ஆகியிருக்கிறோம்? இதை, தனக்குத் தானே சோதித்துப் பாருங்கள்.

மூன்றாவது விஷயம் -புஜம் என்பது சிநேகத்தின் அடையாளம். சிநேகம் என்றால் சந்திப்பு. எப்படி தேகதாரி ஆத்மாக்களின் தேகத்தின் சந்திப்பு கையோடு கை இணைக்க வேண்டி உள்ளது. அது போல் யார் வலது கரம் அல்லது வலது புஜமாக உள்ளனரோ, அவர்களின் அடையாளம் -- சங்கல்பத்தில் சந்திப்பு, பேச்சில் சந்திப்பு மற்றும் சம்ஸ்காரத்தில் சந்திப்பு. எது பாபாவின் சங்கல்பமோ, அது வலது கரமாக இருப்பவரின் சங்கல்பமாக இருக்கும். பாபாவுக்கு வீண் சங்கல்பங்கள் இருக்காது. சதா சக்திசாலி சங்கல்பம் தான் அடையாளமாகும். எப்படி பாபாவின் பேச்சு, சதா சுகம் தரும் பேச்சு, சதா இனிமையான பேச்சு உள்ளதோ, அது போல் சதா மகாவாக்கியமாக இருக்க வேண்டும், சாதாரணமானதாக இருக்கக் கூடாது. சதா அவ்யக்த பாவனை, ஆத்மிக பாவனை இருக்க வேண்டும். வியக்த பாவனையின் பேச்சு இருக்கக் கூடாது. இது தான் சிநேகம், அதாவது சந்திப்பு எனச் சொல்லப்படும். அதே போல் சம்ஸ்காரங்களின் சந்திப்பு (நல்லிணக்கம்). எது பாபாவின் சம்ஸ்காரமோ, அது வலது கரமாக இருப்பவரின் சம்ஸ்காரமாக இருக்கும். ஆகவே சோதித்துப் பாருங்கள் -- அந்த மாதிரி சமமாக ஆக வேண்டும், அதாவது சிநேகி ஆக வேண்டும். இது எது வரை உள்ளது?

நாலாவது விஷயம் -புஜம் என்றால் சக்தி. ஆக, இதையும் சோதித்துப் பாருங்கள், எது வரை சக்திசாலி ஆகியிருக்கிறோம்? சங்கல்பம் சக்திசாலி, திருஷ்டி, விருத்தி சக்திசாலியாக எது வரை ஆகியிருக்கிறது? சக்திசாலி சங்கல்பம், திருஷ்டி மற்றும் விருத்தியின் அடையாளம் -அவர்கள் சக்திசாலியாக இருக்கும் காரணத்தால் யாரையும் பரிவர்த்தன் (மாற்றம்) செய்து விடுவார்கள். சங்கல்பத்தால் சிரேஷ்ட சிருஷ்டியைப் படைப்பார்கள். விருத்தியின் மூலம் வாயுமண்டலத்தை மாற்றியமைப்பார்கள். திருஷ்டி மூலம் அசரீரி ஆத்மா சொரூபத்தின் அனுபவம் செய்விப்பார்கள். ஆக, அத்தகைய சக்திசாலி புஜங்களாக இருக்கிறீர்களா? அல்லது பலவீனமாக இருக்கிறீர்களா? பலவீனம் இருக்குமானால் இடது கரம் ஆகிறார்கள். வலது கரம் எனச் சொல்லப்படுபவர்கள் யார் என்பதை இப்போது புரிந்து கொண்டீர்களா? நீங்கள் அனைவருமே புஜங்கள் தான் ஆனால் எத்தகைய புஜங்கள்? அதை இந்த விசேஷங்கள் மூலம் தன்னை அறிந்து கொள்ளுங்கள். வேறு யாராவது நீங்கள் வலது கரம் இல்லை எனச் சொல்வார்களானால் உறுதிப் படுத்தவும் செய்வார்கள், பிடிவாதமாகச் சொல்லவும் செய்வார்கள் ஆனால் தன்னைத் தான் யாராக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் என்று புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் இப்போது கூட தன்னை மாற்றிக் கொள்வதற்காகக் கொஞ்சம் சமயம் உள்ளது. கவனக்குறைவில் வந்து நானும் சரி தான் என்று நடந்து விடாதீர்கள். மனம் அரிக்கவும் செய்கிறது ஆனால் அபிமானம் அல்லது கவனக்குறைவு பரிவர்த்தன் செய்வித்து முன்னேறச் செய்வதில்லை. எனவே இதிலிருந்து விடுபட்டு விடுங்கள். யதார்த்த ரீதியில் தன்னைச் சோதித்துப் பாருங்கள். இதில் தான் சுய நன்மை அடங்கியுள்ளது. புரிந்ததா? நல்லது.

சதா சுய மாற்றத்தில், சுய சிந்தனையில் இருக்கக் கூடிய, சதா தனக்குள் அனைத்து விசேஷங் களையும் சோதித்து, நிரம்பியவராக ஆகக்கூடிய, சதா இரண்டு செயல்பாடுகளிலும் இருந்து விலகியும், பாபா மற்றும் பாபாவின் காரியத்தில் அன்பானவராக இருக்கக் கூடிய, அபிமானம் மற்றும் கவனக்குறைவிலிருந்து சதா விடுபட்டு இருக்கக் கூடிய, அத்தகைய தீவிர புருஷார்த்தி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

**பார்ட்டிகளுடன்**: சதா தன்னை சுயதரிசனச் சக்கரதாரி என அனுபவம் செய்கிறீர்களா? சுயதரிசனச் சக்கரம் அநேக விதமான மாயாவின் சக்கரங்களை முடித்து விடக் கூடியதாகும். மாயாவின் அநேகச் சக்கரங்கள் உள்ளன மற்றும் பாபா அந்தச் சக்கரங்களில் இருந்து விடுவித்து வெற்றியாளர் ஆக்கி விடுகிறார். சுயதரிசனச் சக்கரத்தின் முன்னால் மாயா நிற்க முடியாது -அந்த மாதிரி அனுபவியாக இருக்கிறீர்களா? பாப்தாதா தினந்தோறும் இதே டைட்டில் வாயிலாக அன்பு நினைவும் தருகிறார். இதே ஸ்மிருதி மூலம் சதா சக்திசாலியாக இருங்கள். சதா சுயத்தின் தரிசனத் தில் இருப்பீர்களானால் சக்திசாலியாக ஆகி விடுவீர்கள். கல்ப-கல்பத்தின் சிரேஷ்ட ஆத்மாக்களாக இருந்தீர்கள், இருக்கிறீர்கள்-- இது நினைவிருக்குமானால் மாயாஜீத் ஆகி விடுவீர்கள். சதா ஞானத்தை நினைவில் வைத்து, இதன் குஷியில் இருங்கள். குஷி அநேக விதமான துக்கங்களை மறக்க வைக்கிறது. உலகம் துக்கதாமத்தில் உள்ளது ஆனால் நீங்கள் அனைவரும் சங்கமயுகத் தினராக ஆகி விட்டீர்கள். இதுவும் பாக்கியமாகும்.

2. நீங்கள் சதா பவித்திரதாவின் சக்தி மூலம் தன்னைப் பாவனமாக்கி மற்றவர்களையும் பாவனமா வதற்கான தூண்டுதல் கொடுப்பவர்கள் தாம் இல்லையா? வீடு-இல்லறத்தில் இருந்து கொண்டு பவித்திர ஆத்மா ஆவது என்றால் இந்த விசேஷத்தை உலகின் முன்னால் பிரத்யட்சம் செய்ய வேண்டும். அத்தகைய தைரியசாலி ஆகியிருக்கிறீர்களா? பாவன ஆத்மாக்கள் என்ற இதே ஸ்மிருதி மூலம் தானும் பரிபக்குவம் மற்றும் உலகத்திற்கும் இந்தப் பிரத்தியட்சப் பிரமாணத்தைக் காட்டுபவர்கள். எப்படிப்பட்ட ஆத்மாக்கள் நீங்கள்? அசம்பவத்தை சம்பவமாக்கிக் காட்டுவதற்கு நிமித்தம், பவித்திரதாவின் சக்தியைப் பரப்புகிற ஆத்மா நான். இதை சதா ஸ்மிருதியில் வையுங்கள்.

3. குமார்கள் தங்களை சதா மாயாஜீத் குமார் என உணர்ந்திருக்கிறீர்களா? மாயாவிடம் தோல்வியடைபவர்கள் அல்லர் ஆனால் சதா மாயாவைத் தோல்வியுறச் செய்பவர்கள். அத்தகைய சக்திசாலி தைரியசாலிகள் தாம் இல்லையா? யார் தைரியசாலியாக இருக்கிறார்களோ, அவர் களிடம் மாயாவே பயப்படும். தைரியசாலியின் முன்னால் மாயா ஒரு போதும் தைரியமாக நிற்க முடியாது. எப்போது எந்த விதமான ஒரு பலவீனத்தைப்

பார்க்கிறதோ, அப்போது மாயா வருகிறது. தைரியசாலி என்றால் சதா மாயாஜீத். மாயா வர முடியாது. அந்த மாதிரி சவால் விடுபவர்கள் தானே நீங்கள்? அனைவரும் முன்னேற்றத்தில் செல்பவர்கள் தான் இல்லையா? அனைவரும் தங்களை சேவைக்கு நிமித்தம், அதாவது சதா விஷ்வ கல்யாண்காரி எனப் புரிந்து முன்னேறிச் செல்பவர்கள். விஷ்வ கல்யாண்காரி எல்லையற்ற நிலையில் இருப்பவர்கள். எல்லைக்குட்பட்டு வர மாட்டார்கள். எல்லைக்குட் பட்டு வருவது என்றால் உண்மையான சேவாதாரி இல்லை. எல்லையற்ற நிலையில் இருப்பது என்றால் எப்படி தந்தையோ குழந்தைகளும் அப்படியே! தந்தையைப் பின்பற்றக்கூடிய சிரேஷ்ட குமார்கள் -- சதா இதே ஸ்மிருதியில் (நினைவில்) இருங்கள். எப்படி பாபா அனைத்தும் நிரம்பியவரோ, எல்லையற்ற நிலையில் இருக்கிறாரோ, அதே போல் பாப்-சமான் சம்பன்னமான, சர்வ கஜானாக்களால் நிரம்பிய ஆத்மா நான் -- இந்த ஸ்மிருதி மூலம் வீணானவை முடிந்து போகும். சக்திசாலி ஆகி விடுவீர்கள். நல்லது.

**அவ்யக்த முரளிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வி-பதில்கள் சில:**

**கேள்வி: எந்த ஒரு விசேஷ குணம் சம்பூர்ண ஸ்திதியைப் வெளிப்படுத்துகிறது? எப்போது ஆத்மாவின் சம்பூர்ண ஸ்டேஜ் உருவாகி விடுகிறதோ, அப்போது அதன் நடைமுறைக் கர்மத்தில் எந்த ஒரு மகிமை பாடப்படுகிறது?**

பதில் : சமான நிலை! புகழ்ச்சி-இகழ்ச்சி, வெற்றி-தோல்வி, சுகம்-துக்கம் அனைத்திலும் சமநிலை இருக்க வேண்டும். இது தான் சம்பூர்ண நிலையின் ஸ்டேஜ் எனச் சொல்லப்படும். துக்கத்தில் கூட முகத்தோற்றத்தில் அல்லது நெற்றியில் துக்கத்தின் அலைக்குப் பதிலாக சுகம் மற்றும் மகிழ்ச்சியின் அலை காணப்பட வேண்டும். நிந்தனை செய்பவர்கள் மீது கொஞ்சம் கூட திருஷ்டி-விருத்தியில் வித்தியாசம் வந்து விடக் கூடாது. சதா கல்யாண்காரி திருஷ்டி சுப சிந்தனையாளரின் விருத்தி இருக்க வேண்டும். இது தான் சமநிலை ஆகும்.

**கேள்வி: தனக்குத் தான் ஆசிர்வாதம் செய்து கொள்வது அல்லது பாப்தாதாவிடம் ஆசிர்வாதம் பெறுவதற்கான சாதனம் என்ன?**

பதில்: சதா சமநிலை சரியாக இருக்குமானால் பாபாவின் ஆசிர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும். தன்னைப் பற்றிய மகிமையைக்

கேட்டால் மகிமையின் நஷா ஏறக்கூடாது. மேலும் நிந்தனையைக் கேட்கும் போது வெறுப்பின் பாவனையும் உண்டாகக் கூடாது. எப்போது இரண்டிலும் சமநிலை சரியாக இருக்குமோ, அப்போது அற்புதம் மற்றும் தனக்குத் தானே திருப்தியின் அனுபவம் ஆகும்.

**கேள்வி: உங்களுடையது இல்லற மார்க்கம். அதனால் எந்த இரண்டு-இரண்டு விஷயங்களில் சமநிலை வைக்க வேண்டியது அவவசியம்?**

பதில்: எப்படி ஆத்மா, சரீரம் இரண்டாக உள்ளன, பாபா மற்றும் தாதாவும் கூட இருவராக உள்ளனர். இருவரின் காரியங்கள் மூலம் உலக மாற்றம் நிகழ்கிறது. அதே போல் இரண்டு-இரண்டு விஷயங்களின் சமநிலை வைப்பீர்களானால் சிரேஷ்ட பிராப்தி அடைவீர்கள். 1. விலகியும் அன்பாகவும் இருத்தல் 2. மகிமை மற்றும் நிந்தனை 3. அன்பு மற்றும் சக்தி 4. தர்மம் மற்றும் கர்மம் 5. ஏகாந்தவாசி மற்றும் ரமணீகரம் 6. கம்பீரம் மற்றும் அனுசரித்து நடந்து கொள்ளுதல் இது போல் அநேக விதமான சமநிலைகள் எப்போது சமமாகிறதோ, அப்போது சம்பூர்ண நிலையின் அருகில் வர முடியும். ஒன்று உள்ளடங்கி உள்ளது. இன்னொன்று வெளிப்படையாக உள்ளது என்பதாக இருக்கக் கூடாது. இதன் பிரபாவம் ஏற்படாது.

**கேள்வி: எந்த விஷயத்தில் சமநிலை கொண்டுவர வேண்டும், எதில் கூடாது?**

பதில்: சிரேஷ்டதாவில் சமநிலை கொண்டுவர வேண்டும், சாதாரணத் தன்மையில் கூடாது. எப்படி கர்மம் சிரேஷ்டமோ, அது போல் தாரணையும் சிரேஷ்டமாக இருக்க வேண்டும். தாரணை கர்மத்தை உள்ளடக்கி விடுவதாக இருக்கக் கூடாது. தர்மம் மற்றும் கர்மம் இரண்டுமே சிரேஷ்டதாவில் சமமாக இருக்க வேண்டும். அப்போது தான் தர்மாத்மா எனச் சொல்வார்கள். ஆக, தன்னைத் தானே கேளுங்கள்- அந்த மாதிரி தர்மாத்மாவாக ஆகியிருக்கிறேனா? அந்த மாதிரி ப்ளிஸ்ஃபுல் (ஆனந்தமான) ஆகியிருக்கிறேனா?

**கேள்வி: புத்தியில் எந்த விதமான குழப்பம் உள்ளது என்றால் அதற்கான காரணம் என்ன?**

பதில்: அதன் காரணம் சம்பன்னதாவில் குறைவு (நிறைவாக இல்லை). எந்த ஒரு பொருளும் நிறைவாக இருக்குமானால் அதனிடையில் ஒரு போதும் குழப்பம் இருக்காது. ஆகவே தன்னை எந்த ஒரு குழப்பத்தில் இருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கு நிரம்பியவராக ஆகிக் கொண்டு செல்லுங்கள். அப்போது சம்பூர்ணம் ஆகி விடுவீர்கள். எந்த ஒரு பொருளும் சம்பன்னமாக உள்ளதென்றால் தானாகவே கவர்ந்திழுக்கும். சம்பூர்ண நிலையில் பிரபாவத்தின் சக்தி உள்ளது. ஆக, எவ்வளவு தன்னிடம் சம்பூர்ண நிலை உள்ளதோ, அந்த அளவுக்கு அநேக ஆத்மாக்கள் தாமாகவே கவர்ந்திழுக்கப் படுவார்கள்.

**கேள்வி: தேகி (ஆத்ம) அபிமானியின் சூட்சும ஸ்டேஜ் எது?**
பதில்: யார் தேகி அபிமானியாக உள்ளனரோ, அவர்களுக்கு எந்த ஒரு விஷயத்தின் சமிக்ஞை கிடைத்தாலும் அந்த சமிக்ஞையை நிகழ்காலம் மற்றும் வருங்காலம் இரண்டிற்காகவும் முன்னேற்றத்தின் சாதனம் எனப் புரிந்து அந்த சமிக்ஞையை உள்ளடக்கிக் கொள்வார்கள் அல்லது பொறுத்துக் கொள்வார்கள். சூட்சுமத்திலும் கூட அவர்களின் திருஷ்டி விருத்தியில் என்ன, எப்படி என்ற குழப்பம் உற்பத்தியாகாது. எப்படி மகிமையைக் கேட்கும் போது அந்த ஆத்மாவுக்காக அன்பின் பாவனை உள்ளதோ, அது போல் யாராவது போதனை அல்லது சமிக்ஞை தருகிறார் என்றாலும் கூட அவருக்காக அன்பின் சுபசிந்தனையாளர் பாவனை இருக்க வேண்டும். நல்லது. ஓம் சாந்தி.

**வரதானம்: சதா குஷி மற்றும் மகிழ்ச்சி நிறைந்த நிலையில் இருக்கக் கூடிய இணைந்த சொரூபத்தின் அனுபவி ஆகுக!**

பாப்தாதா குழந்தைகளுக்கு எப்போதுமே சொல்கிறார் – குழந்தைகளே, பாபாவின் கையோடு கை இணைத்துச் செல்லுங்கள். தனியாகச் செல்ல வேண்டாம். தனியாகச் செல்வதால் சில நேரம் போராகி (சலிப்பு) விடுவீர்கள். சில நேரம் யாருடைய பார்வையும் கூடப் பட்டு விடும். பாபாவோடு இணைந்திருக்கிறேன் -- இந்த சொரூபத்தின் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்களானால் ஒரு போதும் மாயாவின் பார்வை படாது. மேலும் துணையின் அனுபவம் இருக்கிற காரணத்தால் குஷியில், மகிழ்ச்சியில் சாப்பிட்டுக் கொண்டு, நடந்து கொண்டு, மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டே இருப்பீர்கள். ஏமாற்றம் மற்றும் துக்கம்

கொடுக்கக் கூடிய உறவினர்களிடம் சிக்கிக் கொள்வதில் இருந்தும் பாதுகாக்கப்படுவீர்கள்.

**சுலோகன்: யோகம் என்ற கவசத்தை அணிந்து கொண்டிருப்பீர்களானால் மாயா என்ற விரோதியின் போராட்டம் இருக்காது!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 19.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தையைப் பின்பற்றி நடப்பது!

இன்று அனைத்து அன்பான குழந்தைகளின் அன்பிற்கான பிரதிபலன் கொடுப்பதற்காக தந்தை அவர்களை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். உடலற்ற பாப்தாதாவிற்கு உடலின் ஆதாரத்தை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. எதற்காக? குழந்தைகளையும் உடலற்றவர்களாக ஆக்குவதற்காக. எப்படி தந்தை உடலற்றவர், உடலில் வந்த போதிலும் உடலற்ற சொரூபத்தில், உடலற்ற தன்மையின் அனுபவத்தை செய்விக்கிறார். அதே போல் நீங்கள் அனைவரும் வாழ்க்கையில் இருந்து கொண்டே, உடலில் இருந்து கொண்டே உடலற்ற ஆத்ம நிலையில் நிலைத்திருந்து செய்விப்பவர் ஆகி, இந்த உடல் மூலமாக காரியங்களை செய்வியுங்கள். இந்த உடல் செய்வது. உடலற்ற நீங்கள் செய்விப்பவர். இந்த நிலையைத் தான் 'தேகமற்ற நிலை' என்று கூறுவது. இதையே தான் தந்தையைப் பின்பற்றி நடப்பது என்று கூறுவது. எப்பொழுதும் தந்தையைப் பின்பற்றி நடப்பதற் காக தன்னுடைய புத்தியை இரண்டு நிலைகளில் நிலைத்து வையுங்கள். தந்தையைப் பின்பற்றி நடப்பதற்கான நிலை எப்பொழுதும் அசரீரி ஆகுக, தேகமற்றவர் ஆகுக, நிராகாரி ஆகுக. தாதா அதாவது பிரம்மா தந்தையைப் பின்பற்றி நடப்பதற்காக எப்பொழுதும் அவ்யக்த நிலை உள்ளவர் ஆகுக, பரிஷ்தா சொரூபமாக ஆகுக, ஒளி வடிவ உடல் உள்ளவர் ஆகுக. இந்த மூன்று நிலைகளில் நிலைத்திருப்பது என்பது தந்தையைப் பின்பற்றி நடப்பது. இதில் கீழே பௌதீக உணர்வு, தேக உணர்வு, நபர்களின் பாவனை என்பதில் கீழே வராதீர்கள். பௌதீக உணர்வு மற்றும் மனித உணர்வு கீழே கொண்டு வருவதற்கான ஆதாரம். எனவே அனைத்தையும் விட்டு விலகி இந்த இரண்டு நிலைகளில் எப்பொழுதும் நிலைத்திருங்கள். மூன்றாவதாக பிராமண ஜென்மம் கிடைத்த வுடனேயே பாப்தாதாவிடமிருந்து கீழே இறங்கும் நிலையில் எண்ணத்தினாலும் அல்லது கனவில் கூட வராதீர்கள், இது மாற்றான் நிலை என்ற அறிவுரை கிடைத்திருக்கிறது. ஒருவேளை அறிவுரையை மீறி நடக்கிறார்கள்

என்றால் தொந்தரவும் அடைகிறார்கள். வேதனையும் அடை கிறார்கள். எனவே எப்பொழுதும் மதிப்புடன் இருப்பதற்காக, எப்பொழுதும் பிராப்தி சொரூப நிலையில் நிலைத்திருப்பதற்கான சகஜ சாதனம் 'தந்தையைப் பின்பற்றி நடப்பது'. பின்பற்றுவதோ சுலபமாக இருக்கும் இல்லையா? வாழ்க்கையில் குழந்தைப் பருவத்திலிருந்து பின்பற்றுவதில் நீங்கள் அனுபவிகள். குழந்தைப் பருவத்திலும் நடப்பதற்கும், எழுவதற்கும், அமர்வதற்கும் தந்தை குழந்தைகளின் விரல்களைப் பிடித்து பின்பற்றி செய்ய வைக்கிறார். பிறகு எப்பொழுது குடும்பஸ்தன் ஆவது என்றாலும் கணவன் மனைவிக்கு ஒருவர் இன்னொருவர் பின்னால் பின்பற்றி நடப்பதற்கு கற்றுக் கொடுக்கிறார்கள். பிறகு வயதான காலத்தில் குரு வைக்கிறார்கள் என்றாலும் குருவைப் பின்பற்றி நடப்பவர்களாக ஆகிறார்கள். உலகியல் வாழ்க்கையிலும் தொடக்கத்திலிருந்து இறுதி வரை பின்பற்றி நடப்பதாக இருக்க வேண்டியது இருக்கிறது. ஆன்மீக, பரலோகத்து தந்தையும் ஒரே ஒரு சுலபமான விஷயத்தின் வழியை கூறுகிறார் -என்ன செய்வது, எப்படி செய்வது, இப்படிச் செய்யலாமா அல்லது அப்படிச் செய்யலாமா என்ற விஸ்தாரத்திலிருந்து விடுவித்து விடுகிறார். அனைத்து கேள்விகளுக்கான ஒரே ஒரு பதில் தான் 'தந்தையை பின்பற்றி நடப்பது'.

நடைமுறை ரூபத்திலும் பொறுப்பாளர் ஆகி கர்மம் அதாவது காரியம் செய்வதைக் கற்றுக் கொடுப் பதற்காக முழுமையாக 84-ஜென்மங்கள் எடுக்கும் பிரம்மாவின் ஆத்மா அதற்கு பொறுப்பாக ஆனது. செய்யும் காரியத்தில், கர்ம பந்தனங்களிலிருந்து விடுபடுவதில், கர்ம சம்மந்தத்தை வைத்து நடந்து கொள்வதில், தேகத்தில் இருந்து கொண்டே தேகமற்ற நிலையில் நிலைத்திருப்பதில், உடலின் பந்தனங்களை விடுவிப்பதில், மனதின் முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கும் நிலையில், பணத்தின் ஒவ்வொரு பைசாவையும் பயனுள்ளதாக ஆக்குவதில் சாகார பிரம்மா சாகார வாழ்க்கையில் பொறுப்பாளர் ஆனார். கர்ம பந்தனத்தில் இருக்கும் ஆத்மா கர்மாதீத் ஆவதின் உதாரணமாக ஆனார். அப்படி நடைமுறை வாழ்க்கையைப் பின்பற்றி நடப்பது சுலபம் தான் இல்லையா? இது தான் தந்தையைப் பின்பற்றி நடப்பது என்ற பாடம். கேள்விகள் கூட உடல் சம்மந்தமான, உறவுகள் சம்மந்தமான, பணம் சம்மந்தமான கேள்விகளைத் தான் கேட்கிறார்கள். அனைத்து கேள்வி களுக்கான பதில் பிரம்மா தந்தையின் வாழ்க்கை. எப்படி இன்றைய நாட்களில்

அறிவியலைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு கேள்விக்கான பதிலை கம்ப்யூட்டரிடம் கேட்கிறார்கள். ஏனென்றால் மனிதனின் புத்தியை விட இந்த கம்ப்யூட்டர் மிகவும் சரியானது என்று நினைக்கிறார்கள். உருவாக்குபவரையும் விட உருவாக்கப்பட்ட பொருளை மிகச் சரியானது என்று நினைக்கிறார்கள் ஆனால் நீங்கள் அமைதியானவர்களை பொருத்தளவில் பிரம்மாவின் வாழ்க்கை தான் மிகச் சரியான கம்ப்யூட்டர். எனவே என்ன, எப்படி என்று கேட்பதற்குப் பதிலாக வாழ்க்கையின் கம்ப்யூட்டரைப் பாருங்கள். எப்படி மற்றும் என்ன என்ற கேள்வி இப்படி என்பதில் மாறிவிடும். கேள்விகள் நிறைந்தவருக்குப் பதிலாக மகிழ்ச்சி நிறைந்தவர் ஆகி விடுவீர்கள். கேள்விகள் நிறைந்தது குழப்பமான புத்தி. எனவே கேள்விக் குறியும் வளைந்து நெளிந்து இருக்கும். கேள்விக்குறி எழுதினீர்கள் என்றால் வளைந்த கோடாகத் தான் இருக்கும் இல்லையா? மேலும் மகிழ்ச்சி நிறைந்த நிலை புள்ளி. புள்ளியில் ஏதாவது வளைந்து நெளிந்திருக்குமா? நான்கு புறங்களிலிருந்தும் ஒரே மாதிரி தான் இருக்கும். புள்ளியை எந்தப் பக்கமாகப் பார்த்தாலும், நேராக பார்த்தாலும் சரி அல்லது தலைகீழாகப் பார்த்தாலும் சரி, நேராகத் தான் தென்படும். மேலும் ஒரே மாதிரி தான் தென்படும். மகிழ்ச்சி நிறைந்த நிலை என்றால் ஒரே சீரான நிலையில் தந்தையை பின்பற்றி நடப்பவர். இருந்தும் சாரமாக என்ன கிடைத்தது? ஸ்தூலமான ரூபத்தில் உடலிலிருக்கும் பிரம்மா தந்தையை மற்றும் ஒளிவடிவமான உடலில் இருக்கும் பிரம்மாவைப் பின்பற்றி நடங்கள். பிரம்மா தந்தையை பின்பற்றினாலும் சரி, சிவதந்தையைப் பின்பற்றினாலும் சரி, ஆனால் வார்த்தை அதே தான் 'ஃபாலோ பாதர்' எனவே பிரம்மாவின் மகிமையாக 'பிரம்மா வந்தே ஜகத்குரு' என்று கூறுகிறார்கள். ஏனென்றால் பின்பற்றி நடப்பதற்காக நடைமுறை ரூபத்தில் பிரம்மா தான் பௌதீக உலகத்தில் பொறுப்பாளர் ஆனார். நீங்கள் அனைவரும் கூட தன்னை சிவ குமார், சிவ குமாரி என்று கூறுவதில்லை. பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்று தான் கூறுகிறீர்கள். சாகார படைப்பின் சாகார சிரேஷ்ட வாழ்க்கையின் உதாரணமாக பிரம்மா தான் ஆகிறார். எனவே சத்குரு என்று சிவ தந்தையைக் கூறுகிறார்கள், கற்றுக் கொடுப்பவர்களையும் குரு என்று கூறுவார்கள். உலகின் எதிரில் கற்றுக் கொடுப்பதற்காக பிரம்மா தான் பொறுப்பாளர் ஆகிறார். எனவே ஒவ்வொரு காரியத்திலும் பின்பற்றி நடக்க வேண்டும். இந்தக் கணக்கு படி பிரம்மாவை ஜகத்குரு என்று கூறுகிறார்கள், எனவே உலகம் (ஜகம்) பிரம்மாவை வந்தனம் செய்கிறது.

ஜகத்பிதா என்ற பட்டமும் பிரம்மாவினுடையது. விஷ்ணுவை மற்றும் சங்கரை பிரஜாபிதா என்று கூறமாட்டோம். அவர்கள் எஜமானன் என்ற காரணத்தினால் பதி அதாவது அதிபர் என்று கூறுகிறார்கள் ஆனால் அவர் (பிரம்மா) பிதா. எந்த அளவு ஜகத்திற்கு பிரியமானவரோ அந்த அளவே ஜகத்திலிருந்து விலகிய வராகி இப்பொழுது அவ்யக்த ரூபத்தில் அவ்யக்த நிலையைப் பின்பற்றுபவர்கள் ஆகுக என்ற பாடத்தை கற்பித்துக் கொண்டிருக்கிறார். புரிந்ததா? எந்தவொரு ஆத்மாவிற்கும் இப்படி இந்த அளவு விலகியிருக்கும் தன்மை இருப்பதில்லை. இந்த பிரம்மாவின் விலகியிருக்கும் தன்மையின் கதையை பின்பு கூறுவோம்.

இன்றோ (வந்திருக்கும்) உடலையும் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. எப்பொழுது கடனாக எடுக்கிறோம் என்றாலும் எஜமானனாகவோ அவர் தான் இருக்கிறார், எனவே உடலை, ஸ்தானத்தை சக்திக்கு ஏற்றபடி காரியத்தில் ஈடுபடுத்த வேண்டியதாக இருக்கிறது. இருந்தும் பாப்தாதா இருவர்களின் சக்திசாலியான பாகம் ரதத்தை இயக்குவதற்குப் பொறுப்பாக ஆகியிருக் கிறது. இதுவும் நாடகத்தில் விசேஷ வரதானத்தில் ஆதாரமாக இருக்கிறது. சில குழந்தைகளுக்கு இதே உடல் ஏன் இரதமாக ஆவதற்கு பொறுப்பாக ஆனது என்ற கேள்வியும் எழுகிறது. மற்றவர் களுக்கு என்ன, இவருக்கும் (குல்சார் தாதிக்கும்) கேள்வி எழுகிறது ஆனால் எப்படி பிரம்மாவும் தன்னுடைய ஜென்மங்களைப் பற்றி தெரிந்திருக்கவில்லை தான் இல்லையா? இவரும் தன்னுடைய வரதானத்தை மறந்து விட்டார். விசேஷமாக சாகார பிரம்மாவின் தொடக்க காலத்தில் சாட்சாத் காரத்தின் பாகத்தின் காலத்தில் இந்தக் குழந்தைக்கு வரதானம் கிடைத்திருக்கிறது. பிரம்மா தந்தையுடன் சேர்ந்து தொடக்க காலத்தில் ஏகாந்தத்தின் தபஸ்வி ஸ்தானத்தில் இந்த ஆத்மாவின் விசேஷ சாட்சாத்காரத்தின் பாகத்தைப் பார்த்து பிரம்மா தந்தை இந்தக் குழந்தையின் சரள சுபாவம், வெகுளியான வாழ்க்கையின் விசேஷத்தைப் பார்த்து எப்படி இந்தப் பாகத்தில் தொடக்கத் தில் பிரம்மா தந்தையின் துணையாகவும் ஆனார். மேலும் கூடவே இருந்தார். அதே போல் இன்னும் வரும் நாட்களில் தந்தையின் துணைவியாக ஆகும், சமமாக ஆகும் காரியத்தையும் கவனித்துக் கொள்வார். பிரம்மா தந்தைக்குச் சமமாக சேவையில் தனது பங்கைச் செய்வார். அப்படி அதுவே வரதானத்தின் அதிர்ஷ்டத்தின் ரேகையாக ஆகி விட்டது. மேலும் பிரம்மா தந்தைக்குச் சமமாக ரதம் ஆகும்

பங்கை செய்வதும் நாடகத்தில் அடங்கியிருக்கிறது. இருந்தும் இந்தப் பங்கைச் செய்வதற் காக பாப்தாதா குழந்தைக்கு வாழ்த்துக்களை வழங்குகிறார். இவ்வளவு காலம் இந்த அளவு சக்தியை அனுசரித்து நடந்து கொள்வது, இந்த அனுசரித்து போகும் விசேஷத்தின் லிஃப்ட் காரணமாக அதிகப்படியான கிஃப்ட்டும் கிடைத்திருக்கிறது. இருந்தும் பாப்தாதாவிற்கு உடலின் அனைத்தையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. வாத்தியம் பழையது மற்றும் இயக்குபவர் சக்திசாலியானவர் இருந்தும். சரிங்க, சரிங்க ஐயா என்ற பாகத்தில் காரணமாக நன்றாக நடந்து கொண்டிருக்கிறது ஆனால் பாப்தாதாவும் விதி மற்றும் யுக்திபூர்வமாக காரியத்தை நடத்தி கொண்டிருக்கிறார். சந்திப்போம் என்ற உறுதிமொழியோ இருக்கிறது ஆனால் சந்திக்கும் விதி காலத்திற்கு ஏற்றபடி மாறிக் கொண்டே இருக்கும். இப்பொழுதோ 18வது வருடத்தில் அனைத்தை யும் கூறுவோம். 17வதை முடிக்கத் தான் வேண்டும். நல்லது.

அனைத்து தந்தையை பின்பற்றி நடக்கும் சகஜ முயற்சி செய்யும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்திருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் செய்விப்பவர் ஆகி உடல் மூலம் காரியத்தை செய்விக்கும் மாஸ்டர் படைப்பவர் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பிற்கு தன் வாழ்க்கை மூலமாக நன்றிக் கடன் செலுத்தும் குழந்தைகளுக்கு அன்பு நிரம்பிய அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர் சகோதரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:**

1) டீச்சர்கள் எப்பொழுதும் சுயநிலை மூலம் அவர்களும் முன்னேறிச் செல்பவர்கள் மேலும் மற்றவர்களையும் முன்னேறச் செய்விப்பவர்கள், முன்னேற வேண்டும் மேலும் முன்னேற்ற வேண்டும். இது தான் டீச்சர்களின் விசேஷ லட்சியம் மற்றும் லட்சணமும் தான். எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாவாகி முன்னேறிச் சென்று கொண்டே மேலும் முன்னேற வைத்துக் கொண்டே இருங்கள். நீங்கள் தியாகம் மூலம் பாக்கியத்தை பிராப்தி செய்யும் சிரேஷ்ட ஆத்மாக்கள். எப்பொழுதும் தியாகம் தான் பாக்கியம். சிரேஷ்ட பாக்கியம், சிரேஷ்ட காரியம் அதாவது கர்மம் மேலும் சிரேஷ்ட பலன். எப்பொழுதும் இந்த பிரத்யக்ஷ பலன் மூலம் தன்னையும் மேலும் மற்றவர்களையும்

பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். தன்னை ஒவ்வொரு காரியத்திலும் கருவி என்று புரிந்து கொள்வது தான் சிரேஷ்டமாக ஆவதற்கான சகஜ சாதனம். சேவாதாரி ஆவது என்ற இதுவும் சங்கமயுகத்தில் விசேஷமான பாக்கியத்தின் அடையாளம். சேவை செய்வது என்றால் பல ஜென்மங்களுக்காக சம்பன்னம் ஆவது. ஏனென்றால் சேவை மூலம் சேமிப்பாகிறது. மேலும் சேமிப்பானதை பல ஜென்மங்கள் அருந்திக் கொண்டே அதாவது அனுபவித்துக் கொண்டே இருப்பீர்கள். சேவையில் சேமிப்பாகிக் கொண்டிருக்கிறது என்ற நினைவு இருக்கிறது என்றாலும் எப்பொழுதும் குஷியில் இருப்பீர்கள். மேலும் குஷியின் காரணமாக ஒருபொழுதும் களைப்படைய மாட்டீர்கள். சேவை களைப்பற்றவர் ஆக்கக்கூடியது, குஷியின் அனுபவம் செய்விக்கக்கூடியது.

சேவாதாரி என்றால் தந்தைக்குச் சமமானவர். அம்மாதிரி சமநிலையை சோதித்துக் கொண்டே தந்தைக்குச் சமமானவர் ஆகி மற்றவர்களையும் தந்தைக்குச் சமமானவர்களாக ஆக்கிக் கொண்டே இருங்கள். சேவை நிலையத்தின் வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்குவதற்காக ஓரிரண்டு தடவை சுற்றி வருவதோடு சக்திசாலியான நினைவின் அனுபவங்களின் நிகழ்ச்சியைத் தயாரியுங்கள். சக்திசாலியான சூழ்நிலை இயல்பாகவே பல விஷயங்களிலிருந்து தூரமாக்கி விடுகிறது. இப்பொழுது நீங்களும் தரமுள்ளவர் ஆகி, தரமுள்ளவர்களை உருவாக்கிக் கொண்டே இருங்கள். நல்லது.

2) அனைவரும் தங்களை எந்தவிதமான மணி என்று நினைக்கிறீர்கள்? (திருப்திமணி) இன்றைய காலத்தில் விசேஷமாக திருப்தியின் தேவை இருக்கிறது. பூஜையும் அதிகமாக எந்த தேவிக்கு நடக்கிறது? சந்தோஷி தேவிக்கு. மேலும் சந்தோஷியை திருப்தி படுத்துவதும் சகஜமாக இருக்கும். சந்தோஷி விரைவில் திருப்தியாகி விடுவார். சந்தோஷிக்கு ஏன் பூஜை நடக்கிறது? ஏனென்றால் இன்றைய காலத்தில் டென்ஷன் (மன அழுத்தம்) அதிகமாக இருக்கிறது, பிரச்சனைகள் அதிகம். இந்தக் காரணத்தினால் திருப்தியின்மை அதிகரித்துக் கொண்டிருக்கிறது, எனவே திருப்தியாக இருப்பதற்கான சாதனத்தையும் அனைவரும் யோசிக்கிறார்கள் ஆனால் செய்ய முடியாது. அம்மாதிரியான நேரத்தில் நீங்கள் அனைவரும் திருப்திமணிகளாக ஆகி, திருப்தியின்

பிரகாசத்தைக் கொடுங்கள். தன்னுடைய திருப்தியின் பிரகாசம் மூலமாக மற்றவர்களையும் திருப்தியானவர்களாக ஆக்குங்கள். தன் மேல் தானே திருப்தியாக இருங்கள். பிறகு சேவையில் திருப்தியாக இருங்கள். பிறகு சம்மந்தத்தில் திருப்தியாக இருங்கள். அப்பொழுது தான் திருப்தி மணி என்று கூறுவோம். திருப்திக்கான மூன்று சான்றிதழ்கள் வேண்டும். தன் மீது, சேவையின் மீது பிறகு உடன் இருப்பவர்கள் மீது,. இந்த மூன்று சான்றிதழ்களையும் பெற்றிருக்கிறீர்கள் இல்லையா?. நல்லது, இருந்தும் உலகத்தின் குழப்பங்களிலிருந்து விடுபட்டு அச்சல்கர் வரை வந்து சேர்ந்து விட்டீர்கள். இது தந்தையின் இடம் தான் அச்சல்கர். அப்படி அச்சல்கர் வரை வந்து சேர்வது கூட பெரிய பாக்கியத்தின் அடையாளம். தியாகம் செய்திருக்கிறீர்கள், அதனால் அச்சல்கர் வரை வந்தடைந்து விட்டீர்கள். பாக்கியம் நிறைந்தவர்களாக ஆகி பாக்கியத்தின் ரேகையை இன்னும் எவ்வளவு நீளமாக போட விரும்புகிறீர்களோ அந்த அளவு போட முடியும். பாக்கியம் நிறைந்தவர் என்ற பட்டியலிலோ வந்து விட்டீர்கள். ஏனென்றால், பகவானின் குழந்தையாக ஆகி விட்டீர்கள் என்பதால் பாக்கியம் நிறைந்தவர் ஆகி விட்டீர்கள். மற்ற அனைவரிடமிருந்தும் விலகி ஒருவரை தன்னுடையவராக ஆக்கி விட்டீர்கள் என்பதால் பாக்கியம் நிறைந்தவர் ஆகி விட்டீர்கள். குழந்தை களின் இந்த தைரியத்தைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். என்னவாக இருந்தாலும் சரி, இருந்தும் தியாகம் மற்றும் சேவையின் துணிச்சலில் சிரேஷ்டமானவராக இருக்கிறீர்கள். சிறியவர் களாக இருந்தாலும் அல்லது புதியவர்களாக இருந்தாலும் பாப்தாதா தியாகம் மற்றும் தைரியத் திற்கான வாழ்த்துக்களைக் கூறுகிறார். பாப்தாதாவும் அந்த மரியாதையோடு பார்க்கிறார். பொறுப்பாளர் ஆவதற்கும் மகத்துவம் இருக்கிறது. இதே மகத்துவத்தின் காரணமாக எப்பொழுதும் முன்னேறிக் கொண்டே உலகில் மகான் ஆத்மா ஆகி பிரசித்தி ஆகி விடுவீர்கள். தன்னுடைய மகான் தன்மையையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? எவ்வளவு மகானோ அந்த அளவு பணிவானவர்கள். எப்படி பழுத்துக் குலுங்கும் மரத்தின் அடையாளம் வளைந்து கொடுப்பது. அதே போல் யார் பணிவாக இருக்கிறாரோ அவர் தான் பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துபவர். சங்கமயுகத்தின் விசேஷமே இது தான். நல்லது.

**குமாரர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** குமாரர் என்றால் பலஹீனத்தை நிரந்தரமாக தன்னிடமிருந்து துண்டித்துக் கொள்பவர்.

அரைக் கல்பத் திற்காக பலஹீனத்தை துண்டித்து விட்டீர்கள் இல்லையா? அல்லது இப்பொழுது இன்னும் துண்டிக்கவில்லையா? யார் எப்பொழுதும் சக்திசாலியான ஆத்மாக்களோ அவர்கள் எதிரில் பலஹீனம் வர முடியாது. எப்பொழுதும் சக்திசாலியாக இருப்பது என்றால் பலஹீனத்தை முடித்து விடுவது. அம்மாதிரியான சக்திசாலியான ஆத்மாக்கள் தந்தைக்கும் பிரியமானவர்கள். பரிவாரத்திற்கும் பிரியமானவர்கள். குமார் என்றால் தன்னுடைய ஒவ்வொரு காரியம் மூலமாக அனேகர்களின் சிரேஷ்ட காரியத்தின் ரேகையை போடுபவர்கள். தான் செய்யும் காரியம் மற்றவர் களின் காரியத்தின் ரேகையை உருவாக்குவதற்கு பொறுப்பாக ஆகி விடவேண்டும். நீங்கள் அம்மாதிரியான சேவாதாரிகள். எனவே தான் செய்யும் ஒவ்வொரு காரியமும் அந்த மாதிரி தெளிவாக இருக்கிறதா? அதன் மூலம் மற்றவர்களுக்கும் கர்மத்தின் ரேகை தெளிவாகத் தென்பட வேண்டும். அம்மாதிரியான சிரேஷ்ட காரியத்தின் சிரேஷ்ட கணக்கை எப்பொழுதும் சேமிக்கக் கூடிய விசேஷ ஆத்மாக்களைத் தான் உண்மையான சேவாதாரி என்று கூறுவது. நினைவு மற்றும் சேவை தான் எப்பொழுதும் முன்னேறிச் செல்வதற்கான சாதனம். நினைவு சக்திசாலியாக ஆக்குகிறது, மேலும் சேவை பொக்கிஷங்கள் மூலமாக சம்பன்னம் ஆக்குகிறது. நினைவு மற்றும் சேவை மூலம் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். மேலும் முன்னேற்றிக் கொண்டே இருங்கள். நல்லது.

**வரதானம்: பிரம்மா தந்தைக்குச் சமமாக சிரேஷ்டத்திலும் சிரேஷ்ட ஓவியத்தை உருவாக்கக்கூடிய பரோபகாரி ஆகுக!**

சிரேஷ்ட நினைவு மற்றும் சிரேஷ்ட காரியம் மூலமாக அதிர்ஷ்டத்தின் ஓவியத்தை அனைத்து குழந்தைகளும் உருவாக்கியிருக்கிறீர்கள். இப்பொழுது இறுதியில் சம்பூர்ண நிலையின் மற்றும் பிரம்மா தந்தைக்குச் சமமாக சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானவராக ஆவதற்காக இறுதி வரைதல் மட்டும் பாக்கி இருக்கிறது. இதற்காக பரோபகாரியாக ஆகுங்கள். அதாவது சுயநலத்திலிருந்து எப்பொழுதும் விடுபட்டிருங்கள். ஒவ்வொரு சூழ்நிலை யிலும், ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு சகயோகி குழுவில் எந்த அளவு சுயநலமற்ற நிலை இருக்குமோ அந்த அளவு தான் பரோபகாரியாக ஆக முடியும். பரோபகாரி எப்பொழுதும் தன்னை நிரம்பியவராக அனுபவம் செய்வார். எப்பொழுதும் பிராப்தி

சொரூபத்தின் நிலையில் நிலைத்திருப்பார். தனக்காக எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

**சுலோகன்: அனைத்தையும் தியாகம் செய்தவர் (சர்வம்ச தியாகி) ஆவதினால் தான் சரளத்தன்மை மற்றும் சகித்துக் கொள்ளும் தன்மையின் குணம் வரும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 23.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# காமஜீத் -அனைத்து எல்லைக்குட்பட்ட ஆசைகளிலிருந்தும் கடந்த நிலை!

பாப்தாதா தன்னுடைய சிறிய சிரேஷ்டமான சுகமான உலகத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஒருபுறம் மிகப் பெரிய சாரமற்ற உலகம் உள்ளது. மறுபுறம் சின்னஞ்சிறிய சுகமான உலகம் உள்ளது. இந்த சுகமான உலகத்தில் சதா சுகம், சாந்தி நிறைந்த பிராமண ஆத்மாக்கள் உள்ளனர். ஏனெனில், தூய்மை மற்றும் சுத்தத்தின் ஆதாரத்தில் இந்த சுகமயமான சாந்தி நிறைந்த வாழ்க்கை உள்ளது. எங்கு தூய்மை மற்றும் சுத்தம் உள்ளதோ, அங்கு எவ்வித துக்கம், அசாந்தியின் பெயர் அடையாளமே இருக்காது. தூய்மையான கோட்டைக்குள் இந்த சின்னஞ்சிறிய சுகமான உலகம் உள்ளது. ஒருவேளை, தூய்மையின் கோட்டையில் இருந்து எண்ணத்தின் மூலமாகக் கூட வெளியில் சென்றீர்கள் என்றால், துக்கம் மற்றும் அசாந்தியை அனுபவம் செய்வீர்கள். இந்த புத்தி என்ற கால் கோட்டைக்குள் இருந்தது என்றால், சங்கல்பம் என்ன, கனவில் கூட துக்கம், அசாந்தியின் அலை வர முடியாது. துக்கம் மற்றும் அசாந்தி சிறிதளவு அனுபவம் ஏற்பட்டால் கூட அவசியம் ஏதாவது அபவித்ரதாவின் (தூய்மையற்ற) பிரபாவம் உள்ளது என்று அர்த்தம். தூய்மை என்றால் காமத்தை வென்று உலகத்தை வென்றவர் ஆவது என்பது மட்டும் அல்ல ஆனால், அனைத்து எல்லைக்குட்பட்ட ஆசைகளும் (விருப்பங்கள்) காம விகாரத்தின் வம்சம் ஆகும். காமத்தை வென்றவர் என்றால் அனைத்து ஆசைகளையும் வென்றவர் என்பதாகும். ஏனெனில், ஆசைகள் அனேகம் மற்றும் விஸ்தாரமானவை. ஆசை என்பது ஒன்று பொருட்களின் மீது ஆசை, இரண்டாவது மனிதன் மூலம் எல்லைக்குட்பட்ட பிராப்திகளைப் பெறும் ஆசை, மூன்றாவது சம்பந்தத்தில் கூட எல்லைக்குட்பட்ட அனேக விதமான ஆசைகள் உற்பத்தி ஆகின்றன. நான்காவது சேவை பாவனை யில் கூட எல்லைக்குட்பட்ட விருப்பத்தின் உணர்வு உருவாகிறது. இந்த நான்கு விதமான ஆசைகளை இல்லாமல் செய்வதே சதா காலத்திற்கும் துக்கம், அசாந்தியை

வெல்வதாகும். இப்பொழுது இந்த நான்கு விதமான ஆசைகளையும் சமாப்தி செய்து விட்டேனா என்று தன்னைத் தானே கேளுங்கள். எந்தவொரு அழியக்கூடிய பொருள் ஒருவேளை, புத்தியை தன் பக்கம் கவர்ச்சிக்கிறது எனில், அவசியம் ஆசையின் மறு உருவான பற்று உள்ளது என்று அர்த்தம். ஆசை இல்லை, ஆனால் நன்றாக உள்ளது என்று இராயல் ரூபத்தில் வார்த்தையை மாற்றிக் கூறுகிறீர்கள். அது பொருளோ அல்லது மனிதனோ, ஆனால், எதன் மீதும் விசேஷ கவர்ச்சி உள்ளது, அதாவது அந்த பொருள் தான் நன்றாக உள்ளது அல்லது அந்த மனிதர் தான் நன்றாகத் தோன்றுகிறார் என்றால் ஆசை உள்ளது, விருப்பம் உள்ளது என்று அர்த்தம். அனைவரும் நன்றாகத் தோன்றுகின்றனர் என்பது யதார்த்தம் ஆகும் ஆனால், இது தான் நன்றாக இருக்கிறது என்பது யதார்த்தம் அற்றதாகும்.

இது ஆசையின் இராயல் ரூபம் ஆகும். இவருடைய சேவை நன்றாக உள்ளது, இவருடைய பாலனை நன்றாக உள்ளது, இவருடைய குணம் நன்றாக உள்ளது, இவருடைய முயற்சி நன்றாக உள்ளது, இவருடைய தியாகம் நன்றாக உள்ளது, இவருடைய சுபாவம் நன்றாக உள்ளது, ஆனால், நன்றாக இருப்பதின் நறுமணத்தைப் பெறுவது அல்லது நல்லதை தனக்குள் தாரணை செய்வது வேறு விசயம் ஆனால், இந்த நல்ல தன்மையின் காரணத்தினால் இது தான் நன்றாக உள்ளது, இவர் தான் நல்லவர் என்று கூறுவது விருப்பமாக மாறிவிடுகிறது. இது ஆசை ஆகும். இத்தகையவர்கள் துக்கம் மற்றும் அசாந்தியை எதிர்கொள்ள முடியாது. ஒன்று நல்ல தன்மைக்குப் பின்னாலேயே சென்று தன்னை நல்ல நிலை அடைவதிலிருந்து வஞ்சித்து விடுவது, இரண்டாவது பகைமையின் விருப்பம் கூட கீழே கொண்டு வந்து விடுகிறது. ஒன்று பிரபாவத்தில் வருவதற்கான விருப்பம், இரண்டாவது எவர் மீதாவது வெறுப்பு அல்லது பொறாமை கொள்வது. இதுவும் சுகம் மற்றும் சாந்தியை இழக்கச் செய்து விடுகிறது. சதா மனம் அலைகழிச்சலில் வந்து விடுகிறது. பிரபாவத்தில் வருவதன் இலட்சண மாவது பற்று மற்றும் அடிமைத்தனம் ஆகும். அவ்வாறே பொறாமை அல்லது பகைமை உணர்வின் அடையாளம்: பிடிவாதம் பிடிப்பது மற்றும் நிரூபிப்பது ஆகும். இரண்டு உணர்வுகளில் எவ்வளவு சக்தி, எவ்வளவு சமயம் அழிந்து விடுகிறது என்பது தெரிவதில்லை. இரண்டுமே மிகவும் நஷ்டத்தை விளைவிக்கக்கூடியது. தன்னையும் குழப்பக்கூடியது மற்றும் பிறரையும்

குழப்பக்கூடியது. அத்தகைய சூழ்நிலையில், அத்தகைய ஆத்மாக்களின் கோஷம் இதுவே ஆகும் -துக்கத்தைப் பெற வேண்டும் மற்றும் துக்கத்தைக் கொடுக்க வேண்டும். என்ன ஆனாலும் சரி ஆனால், செய்தே ஆக வேண்டும். அந்த சமயத்தில் இந்த விருப்பம் பேசுகிறது. பிராமண ஆத்மா பேசவில்லை, ஆகை யினால், என்ன ஆகிறது? சுகம் மற்றும் சாந்தியின் உலகத்திலிருந்து புத்தி என்ற கால் வெளியே போய்விடுகிறது. ஆகையினால், இந்த இராயல் ஆசைகளிலிருந்து கூட வெற்றியாளர் ஆகுங்கள். இந்த ஆசைகளில் இருந்தும் கூட ஆசை என்றாலே என்னவென்று அறியாத நிலைக்கு வாருங்கள்.

இந்த இரண்டு உணர்வுகளில் வந்து நான் இந்த விசயத்தை செய்து காண்பிப்பேன் என்று சங்கல்பம் செய்கிறீர்கள், யாருக்குக் காண்பிப்பீர்கள்? தந்தைக்கா அல்லது பிராமண குடும்பத் திற்கா? யாருக்குக் காண்பிப்பீர்கள்? இது, செய்து காண்பிப்பேன் என்பதல்ல, ஆனால், விழுந்து காண்பிப்பேன் என்பதாகும் என்று புரிந்து கொள்ளுங்கள். என்ன காண்பிப்பீர்களோ, அது அதிசயமா என்ன! கீழே விழுவது காண்பிப்பதற்கான விசயமா என்ன! நான் சேவை செய்து காண்பிப்பேன், நான் பெயரைப் புகழடையச் செய்து காண்பிப்பேன் என்ற இந்த எல்லைக்குட்பட்ட பிராப்தியின் போதை உள்ளது, இந்த வார்த்தையை சோதித்துப் பாருங்கள், இது இராயலாக உள்ளதா? சிங்கத்தின் மொழியை சொல்கிறீர்கள், ஆனால், ஆடாக ஆகிறீர்கள். எவ்வாறு தற்காலத்தில் சிலர் சிங்கத்தினுடைய, சிலர் யானையினுடைய, சிலர் இராவணனுடைய, சிலர் இராமருடைய முகத்தை அணிந்து கொள்கிறார்கள் அல்லவா! அதுபோன்று இந்த மாயை சிங்கத்தினுடைய முகத்தை அணிவித்து விடுகிறது. நான் இதை செய்து காண்பிப்பேன், இதைச் செய்வேன், ஆனால், மாயை தனக்கு வசமாக்கி ஆடாக ஆக்கி விடுகிறது. நான் என்பது வருகிறது என்றால் ஏதாவது எல்லைக்குட்பட்ட ஆசைக்கு வசமாவது என்பதாகும். இந்த வார்த்தையை யுக்தியுக்தாகக் கூறுங்கள் மற்றும் பாவனையும் கூட யுக்தியுக்தாக வைத்துக்கொள்ளுங்கள். இது புத்திசாலித்தனம் அல்ல ஆனால், ஒவ்வொரு கல்பத்திலும் சூரியவம்சத்திலிருந்து சந்திரவம்சி ஆவதற்கான தோல்வியை அடைவதாகும். கல்ப கல்பம் சந்திரவம்சி ஆக வேண்டியதாகி விடும். அவ்வாறெனில்,இது தோல்வியா அல்லது புத்திசாலித்தனமா? எனவே, அத்தகைய புத்திசாலித் தனத்தைக்

காண்பிக்காதீர்கள். அபிமானத் திலும் வராதீர்கள், அவமானமும் செய்யாதீர்கள். இரண்டு பாவனைகளும் சுபபாவனா, சுபஆசைகளில் இருந்து தூரம் ஆக்கி விடுகிறது. எனவே, கொஞ்சம் கூட சங்கல்பத்தளவில் கூட அபிமானம் அல்லது அவமானத்தின் உணர்வு இல்லாமல் இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். எங்கு அபிமானம் மற்றும் அவமானத்தின் உணர்வு உள்ளதோ, அங்கு ஒருபொழுதும் எந்த சுவமானத்தின் ஸ்திதியிலும் நிலைத்திருக்க முடியாது. சுவமானம் அனைத்து விருப்பங்களிலிருந்தும் விலக்கி விடும் மற்றும் சதா சுகமான உலகத்தில், சுகத்தினுடைய சாந்தியினுடைய ஊஞ்சலில் ஆடிக் கொண்டு இருப்பீர்கள். இதையே அனைத்து ஆசைகளையும் வென்ற நிலை, உலகை வென்ற நிலை என்று கூறப்படுகிறது. சிறிய சுகமான உலகத்தை பாப்தாதா பார்த்துக் கொண்டு இருந்தார்கள். சுகமான உலகத்தில் இருந்து, தன்னுடைய சுயதேசத்தில் இருந்து மாற்றான் தேசத்திற்கு புத்தி என்ற கால் மூலம் ஏன் சென்றுவிடுகிறீர்கள்? பரதர்மம், பரதேசம் துக்கம் கொடுக்கக்கூடியது. சுயதர்மம், சுயதேசம் சுகம் கொடுக்கக்கூடியது. எனவே, நீங்கள் சுகக் கடலான தந்தையின் குழந்தைகள், சுகமான உலகத்தின் அனுபவி ஆத்மாக்கள் ஆவீர்கள். அதிகாரி ஆத்மாக்கள் ஆவீர்கள். ஆகையால், சதா சுகமாக இருங்கள், சாந்தமாக இருங்கள். புரிந்ததா?

உள்நாடு, அயல்நாட்டைச் சேர்ந்த அன்பான குழந்தைகள் தன்னுடைய வீடு மற்றும் தந்தையினுடைய வீட்டிற்கு தனது அதிகாரத்தைப் பெறுவதற்காக வந்திருக்கிறீர்கள். அதிகாரி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகின்றார்கள். எவ்வாறு குஷியில் வருகிறீர்களோ, அவ்வாறே சதா குஷியாக இருப்பதற்கான விதி -இந்த இரண்டு விசயங்களையும் சங்கல்பத்தில் இருந்தும் கூட தியாகம் செய்து சதா காலத்திற்காக பாக்கியவான் ஆகிச் செல்ல வேண்டும். பாக்கியத்தை அடைவதற்காக வந்திருக்கிறீர்கள், ஆனால், பாக்கியத்தை அடைவதன் கூடவே மனதால் பறக்கும் கலையில் தடை ரூபம் ஆகக்கூடிய எந்தவொரு பலவீனத்தையும் விட்டுவிட்டுச் செல்ல வேண்டும். இவ்வாறு விட்டுவிடுவது தான் அடைவதாகும். நல்லது.

சதா சுகமான உலகத்தில் இருக்கக்கூடிய அனைத்து ஆசைகளையும் வென்ற, சதா அனைத்து ஆத்மாக்களுக்காகவும் சுபபாவனை மற்றும்

சுபவிருப்பம் கொண்டிருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக் களுக்கு, சதா சுவமானம் என்ற ஆசனத்தில் நிலைத்திருக்கக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 25.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இனிமைத்தன்மை மூலம் கசப்பான நிலத்தை இனிமையாக ஆக்குங்கள்!

இன்று பெரியதிலும் பெரிய தந்தை, கிராண்ட் ஃபாதர் (தாத்தா) தனது கிராண்ட் சில்ட்ரன் (பேரக் குழந்தைகள்), அன்பான குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். பிரம்மா கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் என்று மகிமை செய்யப்பட்டுள்ளார். நிராகார தந்தை சாகார சிருஷ்டியின் படைப்பிற்கு பிரம்மாவை நிமித்தம் ஆக்கினார். மனித சிருஷ்டியின் படைப்பாளராக இருக்கும் காரணத்தினால், மனித சிருஷ்டியின் நினைவுச்சின்னம் விருட்ச ரூபத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. விதை குப்தமாக உள்ளது, முதல் இரண்டு இலைகள், எதில் இருந்து தண்டு வெளிப்படுகிறதோ, அவர்களே விருட்சத்தின் ஆதிதேவன், ஆதிதேவி தாய் தந்தையின் சொரூபத்தில் இருக்கின்றார்கள், விருட்சத்தின் அஸ்திவாரமான பிரம்மா நிமித்தம் ஆகின்றார். அவர் மூலம் பிராமண தண்டு உருவாகிறது மற்றும் பிராமண தண்டில் இருந்து அனேக கிளைகள் உருவாகின்றன. ஆகையினால், கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் என்று பிரம்மா மகிமை பாடப்படுகின்றார். பிரம்மாவின் அவதாரம் ஏற்படுவது என்றால் தீமையான நாட்கள் முடிவடைந்து உயர்ந்த நாள் துவங்குவதாகும். இரவு முடிவடைந்து பிரம்மா முகூர்த்தம் ஆரம்பம் ஆகிறது, உண்மையில் பிரம்மா முகூர்த்தம் தான், சொல்லும்பொழுது பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லப்படுகிறது. ஆகையினால், பிரம்மாவிற்கு வயோதிக நிலை காண்பிக்கின்றனர். கிராண்ட் ஃபாதர் நிராகார தந்தை கிராண்ட் சில்ட்ரனுக்கு 21 பிறவிகளுக்கு சாப்பிட்டுக் கொண்டே இருக்கும் அளவிற்கு பரிசு கொடுக்கின்றார். வள்ளலாகவும் இருக்கின்றார், விதாதாவாகவும் இருக்கின்றார். ஞான இரத்தினங்களை தட்டுகளில் நிறைத்து நிறைத்து கொடுக்கின்றார். சக்திகளின் பொன்னான பரிசை அளவிட முடியாத அளவு கொடுக் கின்றார். குணங்கள் என்ற ஆபரணங்களின் பெட்டியை நிறைத்து நிறைத்து கொடுக்கின்றார். அலங்காரங்களின் பெட்டிகள்

உங்களிடம் எத்தனை உள்ளன! தினமும் புதிய அலங்காரம் செய்தீர்கள் என்றாலும் கூட எண்ணிலடங்காத அளவு பெட்டிகள் உள்ளன. இந்தப் பரிசு சதா கூடவே வரக்கூடியது. அந்த ஸ்தூல பரிசு இங்கேயே இருந்து விடும், ஆனால், இது உடன் வரும். வருமானத் திற்கான அவசியமே இல்லாத அளவு பொன்னான பரிசால் நிரம்பியவர் ஆகி விடுகிறீர்கள். பரிசில் இருந்து சாப்பிட்டுக் கொண்டே (அனுபவித்துக் கொண்டே) இருப்பீர்கள். உழைப்பில் இருந்து விடுபட்டுவிடுவீர்கள்.

அனைவரும் விசேஷமாக கிறிஸ்துமஸ் நாளைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் அல்லவா. பாப்தாதா கிஸ்மிஸ் நாள் என்று கூறுகின்றார்கள். கிஸ்மிஸ் நாள் என்றால் இனிமைத்தன்மையின் நாள் என்று அர்த்தம். சதா இனிமையானவர் ஆவதற்கான நாள். இனிப்பையே அதிகமாக சாப்பிடு கிறீர்கள் மற்றும் பிறருக்குக் கொடுக்கிறீர்கள். கொஞ்ச நேரத்திற்காக வாய் இனிப்பாகிறது, ஆனால், சுயம் தான் இனிமையானவர் ஆகி விட்டால் சதா வாயில் இருந்து இனிய வார்த்தைகள் வெளிப்படும். எவ்வாறு இனிப்பை சாப்பிடுவது மற்றும் கொடுப்பதனால் குஷி அடைகிறீர்கள் அல்லவா, அவ்வாறே இனிய வார்த்தை தன்னையும் மகிழ்விக்கிறது, பிறரையும் மகிழ்விக் கிறது. எனவே, இதன் மூலம் சதா அனைவரது வாயை இனிப்பாக ஆக்கிக் கொண்டே இருங்கள். சதா இனிமையான பார்வை, இனிமையான பேச்சு, இனிமையான கர்மா இருக்க வேண்டும். இதுவே கிஸ்மிஸ் நாளைக் கொண்டாடுவதாகும். கொண்டாடுவது என்றால் ஆக்குவது என்று அர்த்தம். யாருக்காவது இரண்டு நிமிடம் இனிமையான திருஷ்டி கொடுத்தீர்கள், இனிமையான வார்த்தை பேசினீர்கள் என்றால் அந்த ஆத்மாவை சதா காலத்திற்காக நிறைத்து விடுகிறீர்கள் என்று அர்த்தம். இந்த இரண்டு நிமிட இனிமையான திருஷ்டி, பேச்சு அந்த ஆத்மாவின் சிருஷ்டியை மாற்றிவிடும். இந்த இரண்டு இனிமையான வார்த்தைகள் சதா காலத்திற்கும் மாறுவதற்கு நிமித்தம் ஆகி விடும். கடுமையான (கசப்பான) நிலத்தைக் கூட இனிமையானதாக உருவாக்குமளவு இனிமைத்தன்மை என்பது விசேஷமான தாரணை ஆகும். தந்தையின் இரண்டு இனிமையான வார்த்தைகளே உங்கள் அனைவரையும் மாற்றுவதற்கான ஆதாரமாக இருந்தது அல்லவா? இனிமையான குழந்தை களாகிய நீங்கள் இனிமையான சுத்தமான ஆத்மாக்கள் ஆவீர்கள். இந்த இரு இனிமையான வார்த்தைகள் மாற்றிவிட்டன

அல்லவா! இனிமையான திருஷ்டி மாற்றிவிட்டது. அவ்வாறே இனிமைத்தன்மை மூலம் பிறரையும் இனிமை யானவர் ஆக்குங்கள். இந்த இனிப்பால் அனைவர் வாயையும் இனிப்பாக்குங்கள். புரிந்ததா? கிறிஸ்துமஸ் நாளைக் கொண்டாடிவிட்டீர்கள்! சதா இந்த பரிசுகளால் தனது பையை நிறைத்து விட்டீர்கள்! சதா இனிமைத் தன்மையின் பரிசை உடன் வைத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் சதா இனிமையானவராக இருக்க வேண்டும் மற்றும் இனிமையானவர் ஆக்க வேண்டும். நல்லது.

சதா ஞான இரத்தினங்களால் புத்தி என்ற பையை நிறைக்கக்கூடிய, சதா சர்வசக்திகளால் சக்திசாலி ஆத்மா ஆகி சக்திகளால் சதா நிரம்பி இருக்கக்கூடிய சர்வ குணங்கள் என்ற ஆபரண ங்களால் சதா அலங்கரிக் கப்பட்டு இருக்கக்கூடிய, சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு சதா இனிமைத் தன்மை மூலம் வாயை இனிப்பாக்கக்கூடிய இனிமையான குழந்தைகளுக்கு பாப்தாதா வின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**அவ்யக்த பாப்தாதாவின் குமாரர்களுடனான சந்திப்பு:** குமாரர் என்றால் தீவிர வேகத்தில் முன்னேறக் கூடியவர்கள். நின்று நின்று செல்பவர்கள் அல்ல. எத்தகைய சூழ்நிலை வந்தாலும் சரி, ஆனால், தன்னை சதா சக்திசாலியான ஆத்மா எனப் புரிந்து கொண்டு முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். சூழ்நிலை அல்லது வாயுமண்டலத்தின் பிரபாவத்தில் வருபவர்கள் அல்ல, ஆனால், தன்னுடைய சிரேஷ்ட பிரபாவத்தை பிறர் மீது ஏற்படுத்தக்கூடியவர்கள் ஆவீர்கள். சிரேஷ்ட பிரபாவம் என்றால் ஆன்மிக பிரபாவம் என்று அர்த்தம். வேறு அல்ல. அத்தகைய குமாரர்கள் தானே? கேள்வித் தாள் (பரிட்சை) வந்தால் அசைபவர்கள் இல்லையே? கேள்வித் தாளில் பாஸ் ஆகக் கூடியவர்கள் ஆவீர்கள் அல்லவா! சதா தைரியசாலி ஆவீர்கள் அல்லவா? எங்கு தைரியம் உள்ளதோ அங்கு தந்தையின் உதவி அவசியம் உள்ளது. தைரியமான குழந்தைகளுக்கு தந்தை உதவி செய்கின்றார். ஒவ்வொரு காரியத்திலும் தன்னை முன்னால் வைத்து பிறரையும் சக்திசாலி ஆக்கிக் கொண்டே செல்லுங்கள்.

குமாரர்களே பறக்கும் கலையில் பறப்பவர்கள். யார் சதா பந்தனம் அற்றவர்களோ, அவர்களே பறக்கும் கலையில் பறப்பவர்கள் ஆவார்கள்.

பந்தனமற்ற குமாரர்கள் ஆவீர்கள். மனதினுடைய பந்தனமும் கிடையாது. சதா பந்தனங்களை நீக்கி விட்டு பந்தனமற்றவராகி பறக்கும் கலையில் பறக்கக்கூடிய குமாரர்களா நீங்கள்? குமாரர்கள் தன்னுடைய சரீரத்தின் சக்தி மற்றும் புத்தியின் சக்தி ஆகிய இரண்டையும் வெற்றிகரமானதாக ஆக்கிக் கொண்டு இருக்கிறீர்களா? லௌகீக வாழ்வில் தன்னுடைய சரீரத்தின் சக்தியை மற்றும் புத்தியின் சக்தியை அழிவு காரியங்களில் ஈடுபடுத்திக் கொண்டு இருந்தீர்கள். இப்பொழுது சிரேஷ்ட காரியத்தில் ஈடுபடுத்தக் கூடியவர்களாக இருக்கின்றீர்கள். குழப்பத்தை ஏற்படுத்தக்கூடியவர்கள் அல்ல. சாந்தியை ஸ்தாபனை செய்பவர்கள். நீங்கள் இத்தகைய சிரேஷ்ட குமாரர்களா? எப்பொழுதாவது லௌகீக வாழ்க்கையின் சம்ஸ் காரம் வெளிப்படுவது இல்லை தானே? அலௌகீக வாழ்க்கை வாழ்பவர்கள் என்றால் புதிய பிறப்பு எடுத்தவர்கள் என்று அர்த்தம். புதிய பிறப்பில் பழைய விசயங்கள் இருக்காது. நீங்கள் அனைவரும் புதிய பிறப்பு எடுத்துள்ள சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவீர்கள். தன்னை சாதாரணமானவர் எனப் புரிந்து கொள்ளாமல் எப்பொழுதும் தன்னை சக்திசாலி யானவர் எனப் புரிந்துகொள்ளுங்கள். எண்ணத்தில் கூட குழப்பம் வரக்கூடாது. வீணான எண்ணங்கள் வருகின்றன, என்ன செய்வது? என்று கேள்வி கேட்பதில்லையே? பாக்கியவான் குமாரர்கள் ஆவீர்கள். 21-பிறவிகள் பாக்கியத்தை சாப்பிட்டுக் கொண்டே இருப்பீர்கள். ஸ்தூலம், சூட்சுமம் ஆகிய இரண்டு வருமானங்களில் இருந்தும் விடுபட்டு விடுவீர்கள். நல்லது.

**விடைபெறும் சமயத்தில் அன்பு நினைவுகள்:** அனைத்து உள்நாடு, வெளிநாட்டுக் குழந்தை களுடைய, இந்த விசேஷ தினத்திற்கான கார்டும் கிடைத்தது, கடிதமும் கிடைத்தது மற்றும் நினைவும் வந்து சேர்ந்தது. பாப்தாதா அனைத்து இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்கு இந்தப் பெரிய நாளில் சதா இனிமைத்தன்மை மூலம் சிரேஷ்டமாகுங்கள் மற்றும் சிரேஷ்டம் ஆக்குங்கள் என்ற இந்த வரதானத்துடன் தானும் வளர்ச்சி அடைந்து கொண்டே இருங்கள் மற்றும் சேவையையும் வளர்ச்சி அடையச் செய்து கொண்டே இருங்கள். அனைத்துக் குழந்தைகளுக்கும் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் உயர்ந்த அன்பு நினைவுகள் மற்றும அன்பு நிறைந்த வாழ்த்துக்கள். காலை வணக்கம். சதா இனிமையானவர் ஆகுவதற்கான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**வரதானம்: பொறுமை சக்தி மூலம் அழிவற்ற மற்றும் இனிமையான பலனை பிராப்தியாக அடையக்கூடிய அனைவருடைய சிநேகி ஆகுக!**

பொறுத்துக் கொள்வது என்பது மரணம் அல்ல, ஆனால், அனைவருடைய உள்ளங்களில் அன்பினால் வாழ்வதாகும். எத்தகைய விரோதியானாலும், இராவணனை விட தீவிரமானவராக இருந்தாலும், ஒருமுறை அல்ல பத்து முறை பொறுத்துக்கொள்ள வேண்டியதாக இருந்தாலும் சரி, பிறகும் கூட பொறுமையின் பலன் அழிவற்றது மற்றும் இனிமையானதாகும். நான் இவ்வளவு பொறுத்துக் கொண்டேன், இவர்களும் ஏதாவது செய்யட்டும் என்ற இந்த பாவனை கூடாது. அற்பகால பலன் அடையும் பாவனை வைக்காதீர்கள். கருணை உணர்வு கொண்டிருங்கள் -இதுவே சேவை உணர்வு ஆகும். சேவை உணர்வுடையவர்கள் அனைவருடைய பலவீனங்களையும் கரைத்து விடுவார்கள். அவர்களை எதிர்க்கமாட்டார்கள்.

**சுலோகன்: எது முடிந்து விட்டதோ அதை மறந்து விடுங்கள், முடிந்த விசயங்களில் இருந்து படிப்பினை பெற்று முன்னேறுவதற்காக சதா எச்சரிக்கையுடன் இருங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 30.12.1985 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விசால புத்தியின் அடையாளம்!

இன்று அனைத்து அன்பான, சகயோகி, சகஜயோகி குழந்தைகளுடன், அன்புக்கடல், அனைத்து பொக்கிஷங்களை வழங்குபவர், வரம் அளிக்கும் வள்ளல் தந்தை ஆன்மீக சந்திப்பை செய்வதற்காக வந்திருக்கிறார். இந்த ஆன்மீக அன்பின் சந்திப்பு அதாவது ஆத்மாக்களின் சந்திப்பு விசித்திரமான சந்திப்பு. முழு கல்பத்திலும் இம்மாதிரியான ஆன்மீக சந்திப்பு இருக்க முடியாது. இந்த சங்கமயுகத்திற்கு இந்த ஆன்மீக சந்திப்பின் வரதானம் கிடைத்திருக்கிறது. இந்த வரம் பெற்ற நேரத்தில் வரமளிக்கும் வள்ளல் தந்தை மூலமாக வரம் பெற்ற குழந்தைகள் இந்த அழியாத வரதானத்தை பிராப்தி செய்கிறார்கள். தந்தையினுடைய பாக்கியத்தை வழங்கும் மற்றும் வரமளிக்கும் வள்ளலின் அழியாத பாத்திரமும் இந்த நேரம் தான் இருக்கிறது. அம்மாதிரியான நேரத்தில் வரதானங்களுக்கு உரிய ஆத்மாக்கள் நீங்கள் தங்களுடைய சதா காலத்திற்கான அதிகாரத்தை (உரிமை) பிராப்தியாக அடைந்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரியான ஆன்மீக சந்திப்பைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். அம்மாதிரியான சிரேஷ்ட பிராப்தி செய்பவர்கள் உலகின் எதிரில் எப்படிகள்ளம் கபடமற்ற சாதாரண ஆத்மாக்களாக இருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். ஏனென்றால் அனைவரும் அரசியல் திறமை, அறிவியலின் திறமை, அற்பகாலத்து இராஜ அதிகாரம் மற்றும் மதத் தலைவர்களின் அதிகாரம் உள்ளவர்களைத் தான் இன்றைய உலகத்தில் விசேஷ ஆத்மாக்கள் என்று ஏற்றுக் கொள்கிறார்கள் ஆனால் பாப்தாதா எந்த விசேஷத்தைப் பார்க்கிறார்? அனைத்தையும் விட முதலில் தன்னைத் தானே மற்றும் தந்தையைத் தெரிந்து கொள்வதின் விசேஷம் பிராமணக் குழந்தைகள் உங்களிடம் இருக்கிறது. அது வேறு எந்த பெயர் பெற்ற ஆத்மாக்களில் இல்லை. எனவேகள்ளம் கபடமற்ற, சாதாரணமானவர் களாக இருந்த போதிலும் வரமளிக்கும் வள்ளலிடமிருந்து வரதானத்தைப் பெற்று பல பிறவிகளுக்காக விசேஷ

பூஜைக்குரிய ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள். அம்மாதிரியான ஆன்மீக போதையை அனுபவம் செய்கிறீர்களா? நம்பிக்கை இழந்த ஆத்மாக்களை நம்பிக்கை உள்ளவர் களாக ஆக்குவது தான் தந்தையின் விசேஷம். பாப்தாதா சூட்சும வதனத்திலும் குழந்தைகளைப் பார்த்து புன்முறுவல் செய்து கொண்டிருந்தார். ஒருவேளை இந்த முழு சபையும் உலக இராஜ ஆத்மாக்களின் சபை என்று கூறினால் ஒன்றும் அறியாத ஆத்மா நம்புவாரா? ஆச்சரியம் அடைந்து விடுவார்கள் ஆனால் தந்தைக்கு உள்ளப்பூர்வமான அன்பு உள்ள, உள்ளத்தின் சிரேஷ்ட பாவனை உள்ள ஆத்மாக்கள் பிரியமானவர்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். உள்ளத்தின் அன்பு தான் சிரேஷ்ட பிராப்தியைப் பெறுவதற்கான மூல ஆதாரம். உள்ளத்தின் அன்பு தொலைதூரத்தில் இருப்பவர்களையும் மதுபன் நிவாசியாக ஆக்கி விடுகிறது. உள்ளத்தின் அன்பு தான் திலாராம் தந்தைக்கு விருப்பமானது, எனவே நீ எப்படி இருந்தாலும். என்னவாக இருந்தாலும் பரமாத்மாவிற்குப் பிடித்தமானவர், எனவே தன்னுடைய குழந்தையாக ஆக்கி விட்டார். உலகத்தினரோ தந்தை வருவார், அந்த நேரம் அப்படி நடக்கும், இப்படி நடக்கும் என்று இப்பொழுது காத்திருப்பதிலேயே இருக்கிறார்கள் ஆனால் உங்கள் அனைவரின் வாயிலிருந்து, உள்ளத்திலிருந்து என்ன வார்த்தை வெளியாகிறது? 'அடைந்து விட்டோம்'. நீங்கள் சம்பன்னம் ஆகி விட்டீர்கள், மேலும் அந்த புத்திவான்கள் இதுவரை யிலும் பகுத்தறிவதில் நேரத்தை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே தான் தந்தையை போலாநாத் (கள்ளம் கபடமற்றவர்) என்று வர்ணித்திருக்கிறார்கள். தெரிந்து கொள்ளும் விசேஷம் உங்களை விசேஷ ஆத்மா ஆக்கி விட்டது. தெரிந்து கொண்டீர்கள், பிராப்தி செய்து விட்டீர்கள். இப்பொழுது மேலே என்ன செய்ய வேண்டும்? அனைத்து ஆத்மாக்களின் மீதும் இரக்கம் வருகிறதா? அனைவருமே ஒரே எல்லைக்கப்பாற்பட்ட பரிவாரத்தின் ஆத்மாக்கள் தன்னுடைய குடும்பத்தின் எந்தவொரு ஆத்மாவும் வரதானத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டவராக இருந்து விட வேண்டாம். அம்மாதிரியான ஊக்கம் மற்றும் உற்சாகம் உள்ளத்தில் இருக்கிறதா? அல்லது தன்னுடைய குடும்பத் திலேயே பிஸியானவராக ஆகி விட்டீர் களா? எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருந்து, எல்லைக்கப்பாற்பட்ட ஆத்மாக்களின் சேவையின் சிரேஷ்ட எண்ணம் தான் வெற்றி அடைவதற்கான சுலபமான வழி.

# 1985 அவ்யக்த முரளி

இப்பொழுது சேவையின் பொன்விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அதற்காக விசாலமான நிகழ்ச்சியைத் தயாரித்திருக்கிறீர்கள் இல்லையா. எந்தளவு விசாலமான நிகழ்ச்சியை உருவாக்கியிருக்கிறீர்களோ அந்தளவே விசால உள்ளம், விசால ஊக்கம் மற்றும் விசால ரூபத்தில் ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்களா? அல்லது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தால் பேசிவிடுவோம் என்று இதையே யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? அழைப்பிதழ் விநியோகம் செய்வதற்கு வாய்ப்பு கிடைத்தால் செய்து விடுவோம் என்ற இந்த ஏற்பாடுகள் தான் செய்திருக்கிறீர்களா? இதைத் தான் விசால ஏற்பாடுகள் என்று சொல்ல முடியுமா? என்ன சேவை கிடைக்கிறதோ அதை செய்து விடுவது தான் விசால ஊக்கம் என்று கூறப்படுவதில்லை. சொன்ன சேவையை செய்வது கட்டளைப்படி நடப்ப வரின் அடையாளம், ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட விசால புத்தி, விசால ஊக்க உற்சாகம் என்று இதை மட்டும் கூறுவதில்லை. விசாலத்தன்மையின் அடையாளம் -ஒவ்வொரு நேரமும் தனக்கு கிடைத்திருக்கும் வேலையில், சேவையில் புதுமையைக் கொண்டு வருவது என்பது தான். உணவு பரிமாறும் சேவையாக இருந்தாலும், சொற்பொழிவு நிகழ்த்தும் சேவையாக இருந்தாலும், ஒவ்வொரு சேவையிலும் ஒவ்வொரு நேரமும் புதுமையை நிரப்புவது என்பதைத் தான் விசாலத் தன்மை என்று கூறுவது. ஒரு வருடத்திற்கு முன்பு என்ன செய்திருந்தீர்களோ அதில் ஏதாவது ஆன்மீகத் தன்மையை சேர்ப்பது ஏதாவது புதியதாக அவசியம் இருக்கட்டும். அந்த மாதிரி உள்ளத்தில் ஊக்கம் உற்சாகம் வருகிறதா? அல்லது எப்படி நடக்கிறதோ அப்படித் தான் இருக்கும் என்று யோசிக்கிறீர்களா? ஒவ்வொரு நேரமும் விதி மற்றும் வளர்ச்சி மாறிக் கொண்டே இருக்கிறது. எப்படி நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது, அதே போல் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் தந்தையின், பரிவாரத்தின் நெருக்கத்தை விசேஷமாக அனுபவம் செய்வியுங்கள். என்ன புதுமை கொண்டு வருவது என்று சிந்தியுங்கள். இப்பொழுது மாநாட்டிற்கான விசால காரியம் செய்கிறீர்கள் இல்லையா? அனைவருமே செய்து கொண்டிருக்கிறீர்களா அல்லது பெரியவர்கள் யாரோ அவர்கள் தான் செய்கிறார்களா? இது அனைவரின் காரியம் தான் இல்லையா? ஒவ்வொருவரும் புதுமைக்காக நான் சேவையில் முன்னேற வேண்டும் என்று யோசிக்க வேண்டும். அனைவரின் எதிரில் பொறுப்பாளர்களாக குறைவானவர் களைத் தான் வைக்க வேண்டியதாக இருக்கிறது -எப்படி சொற்பொழிவு

நிகழ்த்துபவர்கள் கொஞ்ச பேர்கள் தான் இருப்பார்கள், இந்த முழு சபையும் செய்யுமா என்ன? ஒவ்வொருவருக்கும் அவரவர் களுக்கென்று வேலையை பகிர்ந்து கொடுத்துத் தான் காரியம் நிறைவேறும் ஆனால் அனைவரும் பொறுப்பாளர் ஆக வேண்டும். எந்த விஷயத்தில்? உலகில் நாலாபுறங்களிலும் எந்த இடத்தில் இருந்தாலும், எந்த வேலைக்குப் பொறுப்பாளராக இருந்தாலும், எந்த நேரம் ஏதாவது விசால காரியம் எங்கே நடந்தாலும் அந்த நேரம் தூரத்தில் அமர்ந்திருந்த போதிலும் அந்த நாட்கள் வரை எப்பொழுதும் ஒவ்வொருவரின் மனதில் உலக நன்மையின் சிரேஷ்ட பாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பங்கள் அவசியம் இருக்க வேண்டும். எப்படி இன்றைய நாட்களில் உள்ள வி.ஐ.பி (மிகவும் முக்கியமானவர்கள்), ஒருவேளை அவரே நிகழ்ச்சிக்கு வந்து சேர முடியவில்லை என்றால் நிகழ்ச்சிக்கான நல்வாழ்த்துக்களை அனுப்புகிறார்கள் இல்லையா? நீங்கள் அவர்களை விட குறைந்தவர்களா என்ன? அனைத்து விசேஷ ஆத்மாக்களாகிய உங்களின் சுபபாவனை, சுபவிருப் பங்கள் அந்தக் காரியத்தை அவசியம் வெற்றி அடைவதாக ஆக்கும்.

இந்த விசேஷ தினத்தில் எந்தவொரு எல்லைக்குட்பட்ட விஷயங்களில் எண்ணத்தின் சக்தி மற்றும் நேரத்தின் சக்தியை வீணாக இழக்காமல் ஒவ்வொரு எண்ணம் மூலம், ஒவ்வொரு நேரமும் விசால சேவைக்கு பொறுப்பாளர் ஆகி, மனசக்தி மூலமாகவும் சகயோகி ஆக வேண்டும் என்ற விசேஷ கங்கணத்தைக் கட்ட வேண்டும். அபு மலையில் மகாநாடு நடந்து கொண்டிருக்கிறது, நானோ இந்த தேசத்தில் இருக்கிறேன் என்று நினைக்கக்கூடாது. விசால காரியத்தில் நீங்கள் அனைவரும் சகயோகிகள். சூழ்நிலை மற்றும் வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். அறிவியல் சக்தி மூலம் ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்திற்கு ராக்கெட்டை அனுப்பு முடியும் என்றால், அமைதி யின் சக்தி மூலம் சுபபாவனை, நன்மை பயக்கும் பாவனை மூலமாக இங்கு அபு மலையில் நீங்கள் மனசக்தி மூலமாக சகயோகியாக ஆக முடியாதா? சிலர் நடைமுறையில் பேச்சு மூலம், காரியங்கள் மூலம் பொறுப்பாளர் ஆவார்கள். சிலர் மனசேவைக்கு பொறுப்பாளர் ஆவார்கள் ஆனால் எத்தனை நாட்கள் நிகழ்ச்சி இருக்குமோ, அது 5 நாட்கள் அல்லது 6 நாட்கள் இருக்கிறது என்றால் அந்த முழு நாட்களும் ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் நான் ஆத்மா பொறுப்பாளர் ஆகி வெற்றியைக் கொண்டு

வர வேண்டும் என்ற சேவையின் கங்கணம் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தன்னை பொறுப்பாளர் என்று புரிந்து கொள்ள வேண்டும். அதற்காக அனைவருமே பொறுப்பாளர் என்றால் எனக்கும் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும் அல்லது விசேஷ ஏதாவது சேவை கிடைக்க வேண்டும் அப்பொழுது தான் நான் பொறுப்பாளர் என்று அப்படி நினைக்கூடாது. இதை பொறுப்பாளர் என்று சொல்ல மாட்டோம். எங்கே இருந்தாலும் என்ன சேவை கிடைத்தாலும் தூரமான இடத்தில் அமர்ந்திருந்தாலும் அல்லது மேடையில் அமர்ந்திருந்தாலும் நான் சகயோகியாக கண்டிப்பாக ஆக வேண்டும். இதைத் தான் முழு உலகத்தில் சேவையின் ஆன்மீகத் தன்மையின் அலையை பரப்புவது என்று கூறுவோம். குஷியின், ஊக்கம் உற்சாகத்தின் அலை பரவிவிட வேண்டும். நீங்கள் அம்மாதிரியான சகயோகியா? இந்த மாநாட்டில் புதுமையை காண்பிப் பீர்கள் இல்லையா? பொன்விழா கொண்டாடுகிறீர்கள் என்றால் பொன்னுலகம் வரப்போகிறது என்ற குஷியின் அலைகள் நாலாபுறங்களிலும் பரவி விட வேண்டும். பய பீதியில் இருக்கும் ஆத்மாக்கள், நம்பிக்கை இழந்த ஆத்மாக்களில் உயர்ந்த எதிர்காலத்தின் நம்பிக்கையை உருவாக்குங்கள். பய பீதியில் இருக்கும் ஆத்மாக்களில் குஷியின் அலை உருவாகி விடட்டும். இது தான் பொன்விழாவின் பொன்னான சேவை. இதே லட்சியத்தை வையுங்கள். நீங்களும் ஒவ்வொரு காரியத்தில் வளைந்து கொடுக்கும் உண்மையான தங்கமாகி பொன்விழாவைக் கொண்டாட வேண்டும். புரிந்ததா? யார் இதுவரை செய்யவில்லையோ அவர்கள் செய்து காண்பிக்க வேண்டும். அம்மாதிரியான ஆத்மாக் களை பொறுப்பாளர் ஆக்குங்கள். அவர் ஒருவர் அனேக ஆத்மாக்களின் சேவைக்கு பொறுப்பாளர் ஆகி விடட்டும். யோசித்துக் கொண்டே இருக்கிறீர்கள் ஆனால் செய்வோம், செய்வோம் என்று கூறி நேரம் கடந்து சென்று விடுகிறது. மேலும் கடைசியில் என்ன கிடைக்கிறதோ அதை மட்டும் பெற்று வருகிறீர்கள். எண்ணிக்கை அதிகரித்து விடுகிறது ஆனால் விசால நிகழ்ச்சி வைப்பதற்கான காரணமே ஒருவர் அனேகர்களுக்கு பொறுப்பாளர் ஆகி விட வேண்டும். அம்மாதிரியான ஆத்மாக்கள் வர வேண்டும். நாலாபுறங்களிலும் சேவை நடந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா? அவரவர்கள் ஸ்தானத்தில் அம்மாதிரியான ஆத்மாக்களின் காரியத்தை செய்வித்துக் கொண்டே இருக்கிறீர்கள். எனவே இப்பொழுதிலிருந்தே பொன்விழாவின்,

சுயசேவையின் மற்றும் தன்னுடன் சேர்த்து மற்ற விசேஷ ஆத்மாக்களின் சேவையின் அலையைப் பரப்புங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

அன்போடு கடும் முயற்சி, உழைப்பு செய்யுங்கள். அன்பு அந்த மாதிரியானது அது இல்லை, முடியாது என்று கூறுபவர்களையும் அன்பின் வசமாக்கி ஆம், சரி என்று சொல்பவராக ஆக்கி விடுகிறது. நேரம் இல்லா விட்டால் கூட நேரத்தை அதற்காக எடுத்துக் கொள்வார்கள். இதுவோ ஆன்மீக அன்பு. அதற்காக நிலத்தை தயார் செய்யுங்கள். நிலமே அப்படித் தான், மனிதர்களே அப்படித் தான் என்று நினைக்காதீர்கள். நீங்கள் எப்படி இருந்தீர்கள்? மாறிவிட்டீர்கள் இல்லையா? சுபபாவனைக்கு எப்பொழுதும் சிரேஷ்ட பலன் இருக்கும். நல்லது.

உங்களுடைய வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள், இதுவோ தந்தைக்கும் குஷி தான், ஆனால் நேரமோ எல்லைக்குட்பட்டது இல்லையா? எத்தனை எண்ணிக்கையோ அந்த அளவே பிரிக்கப்படுகிறது இல்லையா.? ஒரு பொருள் நான்கு பேர்களுக்காக இருக்கிறது, பெறுபவர்கள் எட்டு பேர்கள் ஆகி விட்டார்கள் என்றால் என்ன செய்வீர்கள்? அதே விதியோடு செய்வீர்கள் இல்லையா? பாப்தாதா விற்கும் விதிப்பிரகாரம் செல்ல வேண்டியதாகத் தான் இருக்கிறது.. இவ்வளவு பேர் ஏன் வந்தீர்கள் என்று பாப்தாதாவோ கூறமுடியாது. நன்றாக வாருங்கள், வரவேற்கிறோம் ஆனால் நேரத்திற்குத் தகுந்தாற்போல் விதியை உருவாக்க வேண்டியதாக இருக்கிறது. ஆம், சூட்சும வதனத்தில் நேரத்தின் எல்லை கிடையாது.

மகாராஷ்டிராவும் அதிசயம் செய்து காண்பிக்கும். அந்த மாதிரி ஏதாவது மகான் ஆத்மாவை பொறுப்பாளர் ஆக்கி காண்பியுங்கள். அப்பொழுது தான் மகாராஷ்டிரா என்று கூறுவோம். டெல்லியோ ஏற்கனவே பொறுப்பில் இருக்கவே இருக்கிறது. மகாநாடுகளோ அதிகம் செய்து விட்டோம். இப்பொழுது என்ன முடியுமோ அந்த அளவு தான் செய்வோம் என்று அம்மாதிரி இருக்க வேண்டாம். ஒவ்வொரு வருடமும் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். இப்பொழுதோ அனேக ஆத்மாக்கள் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் பொறுப்பாளர்களாக ஆக்க முடியும். டெல்லியைச் சேர்ந்தவர்களுக்கும் விசேஷமாக பொறுப்பாளர் ஆக வேண்டும். இராஜஸ்தான் என்ன செய்யும்? இராஜஸ்தான் எப்பொழுதுமே

ஒவ்வொரு காரியத்திலும் நம்பர் ஒன் ஆக இருக்க வேண்டும். ஏனென்றால் இராஜஸ்தானில் நம்பர் ஒன் தலைமையகம் இருக்கிறது. தரத்திலோ, எண்ணிக்கையிலோ இரண்டிலுமே நம்பர் ஒன் ஆக இருக்க வேண்டும். இரட்டை வெளிநாட்டினரும் புதுமையை காண்பிப்பீர்கள் இல்லையா? ஒவ்வொரு தேசத்திலும் இந்த குஷியான செய்தி பரவி விட்டது என்றால் அனைவரும் உள்ளப்பூர்வமாக உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதங்கள் கொடுப்பார்கள். மனிதர்கள் மிகவும் பயபீதியில் இருக்கிறார்கள் இல்லையா? அம்மாதிரியான ஆத்மாக்களுக்கு ஆன்மீக குஷியின் அலை வந்து விடட்டும் அதனால் இவர் ஃபரிஷ்தாவாகி நற்செய்தியைக் கொடுப்பதற்கான பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மா என்று புரிந்து கொள்ள வேண்டும். புரிந்ததா. இப்பொழுது எந்த எந்த மண்டலம் புதுமை செய்கிறார்கள் என்று பார்ப்போம். எண்ணிக்கையை கொண்டு வருவார்களா அல்லது தரத்தை கொண்டு வருவார்களா? என்று பார்ப்போம். பிறகு பாப்தாதா ரிசல்ட்டை தெரிவிப்பார். புதுமையையும் கொண்டு வர வேண்டும். புதுமைக்கும் மதிப்பெண்கள் கிடைக்கும். நல்லது.

அனைத்து சுயராஜ்ய, உலக இராஜ்ய அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் எல்லைக்கப் பாற்பட்ட சேவையில் எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வில் இருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் விசால உள்ளம், விசால புத்தி விசால ஊக்கம் உற்சாகத்தில் இருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னை ஒவ்வொரு சேவைக்கும் பொறுப்பாளர் என்று தெரிந்து கொண்டு எப்பொழுதும் சிரேஷ்ட மற்றும் தந்தைக்குச் சமமாக சேவையில் வெற்றி அடையக்கூடிய ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆத்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**குமாரிகளுடன் சந்திப்பு:** குமாரிகளின் வாழ்க்கை எப்பொழுதும் குறையற்ற வாழ்க்கை என்று கூறப்படுகிறது. குமாரி வாழ்க்கை எப்பொழுதும் சிரேஷ்டமானது என்று வர்ணிக்கப்படுகிறது மற்றும் பூஜிக்கப்படுகிறது. நீங்கள் உங்களை அம்மாதிரியான சிரேஷ்ட மற்றும் பூஜைக்குரிய ஆத்மா என்று நினைக்கிறீர்களா? அனைத்து குமாரிகளும் விசேஷமாக ஏதாவது ஒரு அதிசயம் செய்து காண்பிப்பவர்கள் தான் இல்லையா அல்லது படிப்பை படிப்பவர்களாக மட்டும் இருக்கிறீர்களா?

விஷ்வ சேவாதாரி ஆவீர்களா அல்லது குஜராத்தின் சேவை செய்ய வேண்டும் அல்லது மத்திய பிரதேசத்தின் அல்லது இந்த மண்டலத்தின் சேவை செய்ய வேண்டும் என்று அப்படி இல்லையே.! எவரெடி ஆத்மாக்கள் மற்றவர் களையும் எவரெடியாக ஆக்கி விடுவார்கள். குமாரிகள் நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். இன்றைய அரசாங்கம் என்ன கூறுகிறதோ அதைச் செய்ய முடியாதா? அம்மாதிரி யான இராஜ்யத்தில் இருந்து கொண்டே சேவை செய்ய வேண்டும் என்றால் அந்த அளவு சக்திசாலியான சேவை நடந்தால் தான் வெற்றி கிடைக்கும். இந்த ஞானத்தின் படிப்பில் வரிசை எண் பெற்றிருக்கிறீர்களா? நம்பர் ஒன் பெற வேண்டும் என்ற இந்த லட்சியத்தைத் தான் வைக்க வேண்டும். குறைவாகப் பேசுங்கள், ஆனால் யார் எதிரில் சென்றாலும் அவர்கள் உங்களுடைய வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்ற இந்த விசேஷத்தைக் காண்பியுங்கள். வாயினால் சொல்லும் பாடத்தை சொல்பவர்களோ அனேகர்கள் இருக்கிறார்கள்.கேட்பவர்களும் இருக்கிறார்கள் ஆனால் வாழ்க்கை மூலம் பாடம் படித்துக் கொள்ள வேண்டும் என்ற இது விசேஷமாகும். உங்களுடைய வாழ்க்கையே ஆசிரியர் ஆகி விட வேண்டும். வாயினால் பேசும் ஆசிரியர் இல்லை, வாயினால் கூற வேண்டியதாக இருக்கிறது ஆனால் வாயினால் கூறிய பிறகும் ஒருவேளை வாழ்க்கையில் இல்லை என்றால், அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். சொல்பவர்களும் அதிகம் இருக்கிறார்கள் என்று கூறுவார்கள். எனவே தன்னுடைய வாழ்க்கை மூலம் யாரையாவது தந்தையின் குழந்தையாக ஆக்க வேண்டும். இன்றைய நாட்களில் கேட்பதற்கான ஆர்வமும் வைப்பதில்லை, பார்க்க விரும்புகிறார்கள். ரேடியோ (வானொலி பெட்டி) கேட்பதற்கான பொருள், டி.வி (தொலைக்காட்சி பெட்டி) பார்ப்பதற்கான பொருள் என்றால், நீங்கள் எதை விரும்புவீர்கள். கேட்பதை விட பார்க்கத்தான் விரும்புவார்கள் எனவே உங்களுடைய வாழ்க்கையிலும் இவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள், எப்படி எழுகிறார்கள், எப்படி அமர்கிறார்கள், எப்படி ஆன்மீக பார்வையை வைக்கிறார்கள் என்று பார்க்க விரும்புகிறார்கள். நீங்கள் அந்த மாதிரியான லட்சியத்தை வையுங்கள். புரிந்ததா? சங்கமயுகத்தில் குமாரிகளின் மகத்துவம் என்ன? என்பதையோ தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? சங்கமயுகத்தில் அனைவரையும் விட மகான் குமாரிகள். எனவே தன்னை மகான் என்று புரிந்து கொண்டு சேவையில் சகயோகியாக ஆகியிருக்கிறீர்களா அல்லது இனி தான் ஆக

வேண்டுமா? என்ன லட்சியம் இருக்கிறது? இரண்டு பாகத்தையும் செய்வதற்கான லட்சியம் இருக்கிறதா? என்ன கூடையைத் (லௌகீக வேலை) தூக்குவீர்களா? நல்லது.

**வரதானம்: குழந்தை மற்றும் எஜமானத் தன்மையின் சமநிலை மூலம் அனைத்து பொக்கிஷங்களாலும் நிரம்பியவர் ஆகுக!**

எப்படி அனைவரிலும் குழந்தைத்தன்மையின் போதை இருக்கிறது. அதே போல் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் அதாவது தந்தைக்குச் சமமான சம்பன்ன நிலையின் அனுபவம் செய்யுங்கள். எஜமானத் தன்மையின் விசேஷம் -எந்த அளவு எஜமானனோ அந்த அளவே விஷ்வ சேவாதாரியின் சம்ஸ்காரம் எப்பொழுதும் வெளிப்படும் ரூபத்தில் இருக்க வேண்டும். எஜமானத் தன்மையின் போதை மற்றும் விஷ்வ சேவாதாரியின் போதை சமமான ரூபத்தில் இருந்தால் தான் தந்தைக்குச் சமமானவர் என்று கூறுவோம். குழந்தை மற்றும் எஜமானன் என்ற இரண்டு சொரூபங்களும் எப்பொழுதுமே பிரத்யக்ஷமாக காரியத்தில் வந்து விட வேண்டும். அப்பொழுது தான் தந்தைக்குச் சமமாக அனைத்து பொக்கிஷங்களினாலும் நிரம்பிய நிலையின் அனுபவம் செய்ய முடியும்.

**சுலோகன்: ஞானத்தின் குறைவில்லா பொக்கிஷங்களின் அதிகாரி ஆனீர்கள் என்றால், அடிமைத் தனம் அகன்று விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்